"பொதுக்கூட்டங்களில் தமிழர்கள் தாய்மொழியிலேயே பேசுதல் வேண்டுமென்றும், அயல்மொழியில் பேசுதல் கூடாதென்றும், எவரேனும் அயல்மொழியில் பேசப் புகுந்தால் அவரைத் திருத்தும் பொறுப்பைப் பொதுமக்கள் ஏற்றல் வேண்டுமென்றும் வலியுறுத்தினேன். . என் பேச்சும் எழுத்தும் தக்க பயனை விளைத்தன. தமிழில் பேசலாகாது என்று ஆங்கிலத்தில் நாவன்மை காட்டி வந்த பெரும் பெருந்தலைவர்களெல்லாம் தமிழில் பேசப்புகுந்தனர். பொதுமக்கள் கிளர்ச்சியின் முன்னர் எந்தத் தலைவர் என்ன செய்தல் கூடும்? என் வாழ்வில் நிகழ்ந்த முதல் புரட்சி இஃது ஆகும். "

- திரு.வி.க.


தமிழ்மண் பதிப்பகம்

2, சிங்காரவேலர் தெரு
தியாகராயர் நகர்
சென்னை - 600 017
தொ.பேசி: 24339030


1

திரு.வி.க. தமிழ்க்கொடை

# திரு.வி.க.

## தமிழ்க்கொடை

1



தமிழ்மண்

- நா. கதிரைவேற் பிள்ளை சரித்திரம்
- நாயன்மார் வரலாறு

# திரு.வி.க. தமிழ்க்கொடை

## 1

*ஆசிரியர்*

**திருவாரூர்-வி. கலியாணசுந்தரனார்**

*தொகுப்பாசிரியர்*

**இரா. இளங்குமரனார்**

*பதிப்பாளர்*

**கோ. இளவழகன்**

தமிழ்மண் பதிப்பகம்

நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **திரு.வி.க. தமிழ்க்கொடை – 1** |
| ஆசிரியர் | : | **திருவாரூர்-வி. கலியாணசுந்தரனார்** |
| தொகுப்பாசிரியர் | : | **இரா. இளங்குமரனார்** |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 2006 |
| தாள் | : | 18.6 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 14+306=320 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. 300/- |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | இ. இனியன் |
| அச்சிட்டோர் | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>ஆயிரம் விளக்கு, சென்னை - 6. |
| வெளியீடு | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர்,<br>சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030 |

# நுழைவுரை

*தமிழக வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு பல்வேறு நிலைகளில் சிறப்பிடம் பெறத்தக்க குறிப்புகளை உடையது. பன்னூறு ஆண்டுகளுக்குப் பின் மொழியுணர்ச்சியும், கலை யுணர்ச்சியும் வீறுகொண்டெழுந்த நூற்றாண்டு. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டின் வரலாற்றை - பண்பாட்டை வளப்படுத்திய பெருமக்களுள்* ***தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனாரும்*** *ஒருவர். இவர் உரைநடையை வாளாக ஏந்தித் தமிழ்மண்ணில் இந்தியப் பெருநிலத்தின் விடுதலைக்கு உன்னதமான பங்களிப்பைச் செய்தவர்; வணங்கத் தக்கவர்.*

*நினைவு தெரிந்த நாள்முதல் பொதுவாழ்வில் ஈடுபாடுடையவன் நான். உலகை இனம் காணத் தொடங்கிய இளமை தொட்டு இன்றுவரை தொடரும் என் தமிழ் மீட்புப் பணியும், தமிழர் நலம் நாடும் பணியும் என் குருதியில் இரண்டறக் கலந்தவை. நாட்டின் மொழி, இன மேன்மைக்கு விதைவிதைத்த தமிழ்ச் சான்றோர்களின் அருந்தமிழ்ச் செல்வங்களைத் தமிழருக்குக் கொண்டுசேர்க்க வேண்டும் எனும் தளராத் தமிழ் உணர்வோடு* ***தமிழ்மண் பதிப்பகத்தைத்*** *தொடங்கினேன்.*

***தமிழ்த்தென்றல் திரு.வி.க.*** *தமிழ் வாழ்வு வாழ்ந்தவர்.* ***54 நூல்களைப்*** *பன்முகப்பார்வையுடன் எழுதித் தமிழர்களுக்கு அருந்தமிழ்க் கருவூலமாக வைத்துச்சென்றவர். இவற்றைக் காலவரிசைப்படுத்தி, பொருள்வழியாகப் பிரித்து வெளியிட்டுள்ளோம். தமிழறிஞர் ஒருவர், தம் அரும்பெரும் முயற்சியால் பல்வேறு துறைகளில் எப்படிக் கால்பதித்து அருஞ்செயல் ஆற்ற முடிந்தது என்பதை உலகெங்கும் வாழும் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டும் எனும் பெருவிருப்பத்தால் இத்தொகுப்புகளை வெளியிட்டுள்ளோம்.*

*திரு.வி.க. வின் வாழ்க்கைச் சுவடுகளும், அறவாழ்க்கை நெறியும், குமுகாய நெறியும், இலக்கிய நெறியும் , சமய நெறியும், அரசியல் நெறியும், இதழியல் நெறியும், தொழிலாளர் நலனும், மகளிர் மேன்மையும் பொன்மணிகளாக இத் தொகுப்பு*

களுக்குப் பெருமை சேர்க்கின்றன. இவர்தம் உணர்வின் வலிமை யும், பொருளாதார விடுதலையும், தமிழ் மொழியின் வளமையும் இந் நூல்களில் மேலோங்கி நிற்கின்றன. இந்நூல்களைத் தமிழ் கற்கப் புகுவார்க்கும், தமிழ் உரைநடையைப் பயில விரும்பு வார்க்கும் ஊட்டம் நிறைந்த தமிழ் உணவாகத் தந்துள்ளோம்.

திரு.வி.கலியாணசுந்தரனார் இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் மூலவர்; தமிழ் உரைநடையின் தந்தை; தமிழ் நிலத்தில் தொழிற்சங்க இயக்கத்துக்கு முதன்முதலில் வித்தூன்றிய வித்தகர்; தமிழர்கள் விரும்பியதைக் கூறாது, வேண்டியதைக் கூறிய பேராசான்; தந்தை பெரியார்க்கு **வைக்கம் வீரர்** என்று பெயர் சூட்டி மகிழ்ந்த பெருமையர்; தமிழ்ச் சிந்தனை மரபிற்கு அவர் விட்டுச்சென்ற சிந்தனைகள் எண்ணி எண்ணிப் போற்றத் தக்கவை. இன்றும், என்றும் உயிர்ப்பும் உணர்வும் தரத்தக்கவை.

சமயத்தமிழை வளர்த்தவர்; தூய்மைக்கும், எளிமைக்கும், பொதுமைக்கும் உயிர் ஓவியமாக வாழ்ந்தவர்; அன்பையும், பண்பையும், ஒழுங்கையும் அணிகலனாய்க் கொண்டவர்; தன்மதிப்பு இயக்கத்துக்குத் தாயாக விளங்கியவர்; பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக இருந்தவர்; எல்லாரையும் கவர்ந்து இழுத்த காந்தமலையாகவும்; படிப்பால் உயர்ந்த இமயமலை யாகவும்; பண்பால் குளிர் தென்றலாகவும், தமிழகம் கண்ணாரக் கண்ட காந்தியாகவும், அவர் காலத்தில் வாழ்ந்த சான்றோர் களால் மதிக்கப்பெற்றவர். .

சாதிப்பித்தும், கட்சிப்பித்தும், மதப்பித்தும், தலைக்கு ஏறி, தமிழர்கள் தட்டுத் தடுமாறி நிற்கும் இக்காலத்தில் வாழ்நாள் முழுதும் தமிழர் உய்ய உழைத்த ஒரு தமிழ்ப் பெருமகனின் அறிவுச் செல்வங்களை வெளியிடுகிறோம். தமிழர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக. தமிழரின் வாழ்வை மேம்படுத்தும் அனைத்துத் துறைகளிலும் தமிழ் இடம்பெற வேண்டும் எனும் தொலை நோக்குப் பார்வையோடு எம் பதிப்புச் சுவடுகளை ஆழமாகப் பதித்து வருகிறோம். தமிழர்கள் அறியாமையிலும், அடிமைத் தனத்திலும் கிடந்து உழல்வதிலிருந்து கிளர்ந்தெழுவதற்கும், தீயவற்றை வேரோடு சாய்ப்பதற்கும், நல்லவற்றைத் தூக்கி நிறுத்துவதற்கும் **திரு.வி.க.வின் தமிழ்க்கொடை** எனும் செந்தமிழ்க் களஞ்சியங்களைத் தமிழர்களின் கைகளில் தவழ விடுகிறோம். கூனிக்குறுகிக் கிடக்கும் தமிழர்களை நிமிர்த்த முனையும் நெம்புகோலாகவும், தமிழர்தம் வறண்ட நாவில் இனிமை தர வரும் செந்தமிழ்த்தேன் அருவியாகவும் இத்

தமிழ்க் கொடை திகழும் என்று நம்புகிறோம். இதோ! பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரும், தமிழ்ப் பதிப்புலக மேதையும் செந்தமிழைச் செழுமைப்படுத்திய செம்மலைப் பற்றிக் கூறிய வரிகளைப் பார்ப்போம்.

> *"தனக்கென வாழ்பவர்கள் ஒவ்வொருவரும் கலியாண சுந்தரனார் அவர்களைப் படிப்பினையாகக் கொள்வார்களாக"*
>
> **- தந்தை பெரியார்.**

> *"திரு.வி.க. தோன்றியதால் புலவர் நடை மறைந்தது; எளிய நடை பிறந்தது. தொய்வு நடை அகன்றது; துள்ளு தமிழ் நடை தோன்றியது. கதைகள் மறைந்தன; கருத்துக்கள் தோன்றின. சாதிகள் கருகின; சமரசம் தோன்றியது."* **- ச. மெய்யப்பன்.**

தமிழர் அனைவரும் உளம்கொள்ளத்தக்கவை இவை.

தாய்மொழியாம் தமிழ்மொழி மீது அளப்பரிய காதல் கொண்டவர் திரு.வி.க. இவர் பேச்சும் எழுத்தும் தமிழ் மூச்சாக இருந்தன. தமிழ்நாட்டு அரசியல் மேடைகளில் ஆங்கிலமே பேச்சுமொழியாக மதிக்கப்பட்ட காலத்தில் தமிழுக்குத் தென்றலாக வந்து மகுடம் சூட்டிய பெருமையாளர். தமிழின் - தமிழனின் எழுச்சியை அழகுதமிழில் எழுதி உரைநடைக்குப் புதுப்பொலிவும், மேடைத் தமிழுக்கு மேன்மையும் தந்த புரட்சியாளர்.

கலப்பு மணத்துக்கும், கைம்மை மணத்துக்கும் ஊக்கம் தந்தவர்; வழுக்கி விழுந்த மகளிர் நலனுக்காக உழைத்தவர்; பெண்களின் சொத்துரிமைக்காகப் பேசியவர்; ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமஉரிமை என்று வாதிட்டவர்; பெண்ணின எழுச்சிக்குத் திறவு கோலாய் இருந்தவர்; 'கற்பு' என்பது பெண்களுக்கு மட்டுமன்று ஆண்களுக்கும் உண்டு என்று வலியுறுத்தியவர்; மாந்த வாழ்வியலுக்கு ஓர் இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர்; இளமை மணத்தை எதிர்த்தவர்; அரசியல் வானில் துருவ மீனாகத் திகழ்ந்தவர்; தமிழர்களுக்கு அரசியலில் விழிப்புணர்வை ஊட்டியவர்; சமுதாயச் சிந்தனையை விதைத்தவர்; ஒழுக்க நெறிகளைக் காட்டியவர்.

சங்கநூல் புலமையும், தமிழ் இலக்கண இலக்கிய மரபும் நன்குணர்ந்த நல்லறிஞர், ஓய்வறியாப் படிப்பாளி, சோர்வறியா உழைப்பாளி, நம்மிடையே வாழ்ந்துவரும் செந்தமிழ் அந்தணர் இரா. இளங்குமரனார் அவர்கள், **'தீந்தமிழ் அந்தணர்'** திரு.வி.க.வின் நூல் தொகுப்புகளில் அடங்கியுள்ள பன்முக மாட்சிகளை - நுண்ணாய்வு நெறிகளை ஆய்வு செய்து, அவர்தம் பெருமையினை மதிப்பீடு செய்து நகருக்குத் தோரணவாயில்

*போன்று இத்தொகுப்புகளுக்கு ஒரு* ***கொடையுரையை*** *அளித்துள்ளார். அவர்க்கு எம் நெஞ்சார்ந்த நன்றி.*

*தமிழர் பின்பற்றத்தக்க உயரிய வாழ்க்கை நெறிகளைத் தாம் படைத்தளித்த நூல்களின்வழிக் கூறியது மட்டுமின்றி, அவ்வரிய நெறிகளைத் தம் சொந்த வாழ்வில் கடைப்பிடித்துத் தமிழர்க்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டினார் திரு.வி.க. என்பதை வாழும் தலைமுறையும், வருங்காலத் தலைமுறையும் அறிந்துகொள்ள வேண்டும் - பயன்கொள்ள வேண்டும் எனும் விருப்பத்தோடு இந்நூல்களை வெளியிட்டுள்ளோம்.*

***தமிழ்த்தென்றல் திரு.வி.க.*** *நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து , உவந்து உவந்து எழுதிய படைப்புகளைத் தொகுத்து ஒருசேர வெளியிட்டுத், தமிழ்நூல் பதிப்பில் மணிமகுடம் சூட்டி உள்ளோம். விரவியிருக்கும் தமிழ் நூல்களுக்கிடையில் இத் தொகுப்புகள் தமிழ் மணம் கமழும் ஒரு பூந்தோட்டம்; ஒரு பழத்தோட்டம். பூக்களை நுகர்வோம்; பழங்களின் பயனைத் துய்ப்போம். தமிழ்மண்ணில் புதிய வரலாறு படைப்போம். வாரீர்!*

***திரு.வி.க. வெனும் பெயரில் திருவிருக்கும்;***
***தமிழிருக்கும்! இனமிருக்கும்!***
***திரு.வி.க. வெனும் பெயரில் திருவாரூர்ப்***
***பெயரிருக்கும்! இந்தநாட்டில்!***
***திரு.வி.க. வெனும் பெயரால் தொழிலாளர்***
***இயக்கங்கள் செறிவுற்றோங்கும்!***
***திரு.வி.க. வெனும் பெயரால் பொதுச்சமயம்***
***சீர்திருத்தம் திகழுமிங்கே!***

- பாவலரேறு **பெருஞ்சித்திரனார்**

*இந்நூல் உருவாக்கத்திற்கு துணை நின்றோர் அனை வருக்கும் எம் நன்றியும் பாராட்டும்.*

**– கோ. இளவழகன்**
*பதிப்பாளர்*

# கொடையுரை

**சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் சரித்திரம்**

*இவ்வரலாற்றுநூல் 1908இல் வெளிவந்தது. திரு.வி. க. வரைந்த முதல் நூல் எனப்படுவது. அதன் அச்சீடு, 'அச்சுக்கூடம் அம்மை வார்த்தது' என்று திரு. வி. க. தம் வாழ்க்கைக் குறிப்பில் வருந்தி எழுத அமைந்தது. அதன் இரண்டாம் பதிப்பு 1968இல் வெளிவந்தது. இராயப்பேட்டை இளைஞர் கழகம், யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளை தொடர்பால் பால சுப்பிமரணிய பக்தசன சபையாக உருக்கொண்டது. திரு. வி. க. கதிரைவேலர் மாணவர்; அணுக்கர்; தொண்டர்; கதிரைவேலர் வரலாற்று நூல் ஆசிரியர். திரு.வி. க. வின் நூல்களைக் கற்றோர், இவ்வரலாற்று நூலை அவர்தாம் எழுதினார் என்பதை எளிதில் நம்பார்.*

*'பண்டித நடை' என்று திரு.வி. க. தள்ளிய நடையில் எழுதப் பட்ட நூல். மணிப்பவழ நடையது; எதுகை மோனை கருதிய அடுக்குமொழி கொண்டது. புராணப் போக்கினது. நூன்முகம் முதல் தொடரையும், நூல்முதல் தொடரையும் கண்ட அளவானே நூல் நடை - பொருட்போக்கு - புலனாகி விடும்.*

*ஈழ நாட்டு மேலைப்புலோலியூர் நாகப்ப பிள்ளை மகனாராகக் கதிரைவேலர் 1860 ஆம் ஆண்டு நவம்பர்மாதம் (பிரசோற்பதி மார்கழி 3 ஆம் தேதி குருவாரம்) தோன்றினார். சைவ வித்தியா சாலையில் பயின்று பதினெட்டாம் அகவையில் பண்டித ராயினார். வடிவாம்பிகை என்பாரை மணந்தார். சிவஞானம்பிகை என்னும் பெயருடைய மகவொன்று பெற்றார்.*

*சென்னைக்குக் கதிரைவேலர் வந்து சபாபதி நாவலர் அவர்களிடம் சிவஞானபாடியம் பாடம் கேட்டார். சோமசுந்தரநாயகர் நட்புற்றார். நூல்கள் சில இயற்றினார். அகராதி ஒன்று செய்தார். 'மாயாவாத தும்ச கோளரி' என்னும் விருது பெற்றார். ஆரணி அரசின் அவைக்களப் புலவராகச் சிறந்தார். பழனிப் புராணத்திற்கு உரைவரைந்து அச்சிட்டு ஆங்கேயே அரங்கேற்றினார். மதுரைத் தமிழ்ச் சங்கப் புலமைத் தேர்வாளராகத் திகழ்ந்தார். 'புத்தமதக் கண்டனம்' என்னும் நூல் இயற்றினார். 'வேளாளர் வைசியர் அல்லர்' என்பதையும்,*

நால்வர் பாடல்களே அருட்பா என்பதையும் விளக்கியுரைத்தார். வழக்குமன்றம் ஏறியும் நின்றார். கருவூரில் வாழ்ந்த கிளைடன்துரை என்பார்க்குத் தமிழ் கற்பிக்கும் கடனேற்றார். பல்வேறு இடங்களில் அவதானம் (கவனகம்) செய்தார். நூறு அவதானம் செய்யும் வல்லாராகத் திகழ்ந்தார். தில்லை, திருவையாறு முதலிய திருத்தலங்களுக்குச் சென்றார். அலுவல் பொருட்டாக நீலமலைக்குச் சென்ற கதிரைவேலர் அக்குளிர் ஏற்காமையால் பராபவ பங்குனி 13இல் (1907) இயற்கை எய்தினார்.

இது கதிரைவேலர் வரலாற்றுச் சுருக்கத்தில் சுருக்கம். 'அருட்பா - மருட்பா' போர், கிளர்ந்தவகை இச்சுவடியால் புலப்படுதல் ஒரு தெளிவை ஆக்குகின்றது. நால்வர் பாடல்களை அருட்பா எனக் கொள்ளார் சிலர் கிளர்த்திய முரண்பாடே, வள்ளலார் பாடலை மருட்பா என வாதிடத் தூண்டுவதாயிற்று என்பது அவ்வுண்மையாம். பேரறிவினரையும் பிளந்து எதிரிடச் செய்து விடும் சிறுமையை ஆக்கவல்ல குறும்பர் - உட்பகைஞர் - உண்டு என்பதைக் காலம் கடந்தேனும் எண்ணிப் பார்த்து விழிப்புற இவ்வரலாற்றுக் குறிப்பு உதவும்!

சன்மார்க்கமே என் மார்க்கம் என வாழ்ந்த வள்ளலார் மீள் பிறப்பாக வாழ்ந்த திரு.வி.க. பின்னே செய்த அருட்பாத் தொண்டுக்கு ஒப்பாக எவரைச் சுட்டிக் கூறக் கூடும்.

சமய ஆய்வர்க்கு வாய்த்த ஆவணம் திரு.வி.க. வரைந்த கதிரைவேலர் வரலாறு என்பது சாலும்!

**நாயன்மார் வரலாறு**

நாயன்மார் வரலாறு, முன்னுரை, சேக்கிழார், அறுபத்து மூவர், திரு நட்சத்திரம், உள்ளுறை என்பவற்றை முற்படக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

நாயன்மார் வரலாறு (பெரிய புராணத்தைத் தழுவியது) என்னும் பொறிப்புடையது. தோற்றுவாய், நூலின் முதலும் வழியும் கூறுகிறது. அடுத்தே நாட்டுப்படலம், நகரப் படலம் இரண்டையும் இணைத்து 'நாடு - நகரம்' எனத் தொடர்ந்து திருக்கூட்டம் என்பதனுடன் நிறைகிறது.

'சுந்தர மூர்த்த சுவாமிகள்' முதலாகக் கொண்டு அவர் வரலாற்றை முழுவதாகத் தருகிறார். அதன்பின்னர்த் தில்லைவாழந்தணர், திருநீலகண்டர், இயற்பகையார் என இசைஞானியாருடன் நூலை நிறைவிக்கிறார்.

திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணசாரம் என்பவற்றை முன்வைத்தே நாயன்மார் வரலாற்றை வரைகிறார்.

பாடலால் அமைந்த மூலநூலைத் தழுவி வரலாற்றுநூல் வரைய வேண்டும். எனின், அதன் நடையும் தொடரும் பொருளமைவும் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாம் நூல் ஒன்று வேண்டின், அதற்குச் சான்றாகத் திரு.வி. க. இயற்றிய நாயன்மார் வரலாற்றைக் கூறலாம். அத்தகு தெளிவும் திறமும் ஒட்டமும் சுவையும் ஒருங்கே கொண்டது அது. விடுபாடு இல்லாத கருத்து; இடரிலா நடை; சிறு சிறு தொடர்; சிக்கலற்ற சொல்லாட்சி; அவர்க்கே இயல்பாக அமைந்த மொழி ஆளுமை இன்னவை, உரைநடை எழுதப் புகுவார்க்குப் பார்வைநூலாக வைக்கத்தக்க பான்மையில் அமைந்தது.

குறுந்தலைப்புகளைத் தொடர்ந்து பார்த்தாலே வரலாற்றுத் தொடர்பு தானே அமையும் சீர்மையும் உடையது.

திரு.வி.க. நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் பயன்பாட்டால் அவர்தம் நூல்கள், கட்டுரை கள் ஆகிய அனைத்துப் படைப்புகளும் 'திரு.வி.க. தமிழ்க் கொடை' என்னும் வரிசையில் வெளிப்படுகின்றன.

திரு.வி.க. நூல்களையும் கட்டுரைகளையும் ஒருமொத்த மாகப் பெறும்பேறு இதுகாறும் தமிழ்மண்ணுக்கு வாய்க்க வில்லை. அவர்வாழ்ந்த நாளிலேயே சிலநூல்கள் கிட்டும்; சிலநூல்கள் கிட்டா! 'தேசபக்தன்' 'நவசக்தி' யில் வந்த கட்டுரை களுள் பொறுக்கி எடுக்கப்பட்ட சிலவற்றையன்றி முற்றாகப் பெறும் பேறோ அறவே வாய்த்திலது. திரு.வி.க. வழங்கிய வாழ்த்து, அணிந்துரை முதலியனவும் தொகுத்தளிக்கப் பெறவில்லை. இவற்றையெல்லாம் தனிப்பெருஞ் சீரிய பதிப்பில் ஒருமொத்தமாக வழங்கும் பெருமையைக் கொள்பவர் **தமிழ்மண் பதிப்பக நிறுவனர் கோ.இளவழகனார் ஆவர்.**

பாவாணர் நூல்கள், ந.சி.க.நூல்கள், அப்பாத்துரையார் நூல்கள், இராகவனார் நூல்கள், அகராதிப் பதிப்புகள் எனத் தொகுதி தொகுதிகளாக வெளியிட்டு, அவ்வெளியீட்டுத் துறையின் வழியே தமிழ்மொழி, தமிழின மீட்சிப் பணிக்குத் தம்மை முழுவதாக ஒப்படைத்துப் பணியாற்றும் இளவழகனார் திரு.வி.க. தமிழ்க் கொடைத் தொகுதிகளை வெளியிடுதல் தமிழகம் பெற்ற பெரும் பேறேயாம். வாழிய அவர்தம் தொண்டு! வாழியர் அவர்தம் தொண்டுக்குத் துணையாவார்!

அன்புடன்
**இரா. இளங்குமரன்**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| நுழைவுரை | v |
| கொடையுரை | ix |
| **நூல்** | |
| **சதாவதானம்** | |
| **நா. கதிரைவேற் பிள்ளைஅவர்கள் சரித்திரம்** | |
| நூன்முகம் | 3 |
| இந்நூல் ஆக்கியோன் இயற்றிய கதிரைவேல் சரித்திர சாரம் | 5 |
| சதாவதானம் ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேல் பிள்ளை அவர்கள் சரித்திரம் | 7 |
| ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற் பிள்ளையவர்களின் பிரிவாற்றாமையால் இயற்றிய செய்யுள்கள் | 34 |
| **நாயன்மார் வரலாறு** | 39 |
| முன்னுரை | 41 |
| சேக்கிழார் | 46 |
| அறுபத்துமூவர் திருநட்சத்திரம் | 50 |
| நாயன்மார் வரலாறு (பெரியபுராணத்தைத் தழுவியது) | 52 |
| தோற்றுவாய் | 53 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் | 59 |
| தில்லைவாழந்தணர் | 90 |
| திருநீலகண்டர் | 92 |
| இயற்பகையார் | 96 |
| இளையான்குடிமாறர் | 99 |
| மெய்ப்பொருளார் | 101 |
| விறன்மிண்டர் | 105 |
| அமர்நீதியார் | 106 |
| எறிபத்தர் | 110 |
| ஏனாதிநாதர் | 114 |

| | |
|---|---|
| *குங்குலியக்கலயர்* | *123* |
| *மானக்கஞ்சாறர்* | *126* |
| *அரிவாட்டாயர்* | *129* |
| *ஆனாயர்* | *131* |
| *மூர்த்தியார்* | *133* |
| *முருகனார்* | *136* |
| *உருத்திர பசுபதியார்* | *137* |
| *திருநாளைப்போவார்* | *138* |
| *திருக்குறிப்புத் தொண்டர்* | *141* |
| *சண்டேசுரர்* | *143* |
| *திருநாவுக்கரசு சுவாமிகள்* | *147* |
| *குலச்சிறையார்* | *166* |
| *பெருமிழலைக் குறும்பர்* | *168* |
| *காரைக்காலம்மையார்* | *170* |
| *அப்பூதியடிகள்* | *175* |
| *திருநீலநக்கர்* | *179* |
| *நமி நந்தியடிகள்* | *182* |
| *திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்* | *184* |
| *ஏயர்கோன் கலிக்காமர்* | *225* |
| *திருமூலர்* | *228* |
| *தண்டியடிகள்* | *231* |
| *மூர்க்கர்* | *235* |
| *சோமாசிமாறர்* | *237* |
| *சாக்கியர்* | *238* |
| *சிறப்புலியார்* | *241* |
| *சிறுத்தொண்டர்* | *242* |
| *கழறிற்றறிவார்* | *249* |
| *கணநாதர்* | *255* |
| *கூற்றுவர்* | *256* |
| *பொய்யடிமையில்லாத புலவர்* | *258* |
| *புகழ்ச்சோழர்* | *259* |
| *நரசிங்கமுனையரையர்* | *261* |
| *அதிபத்தர்* | *262* |
| *கலிக்கம்பர்* | *264* |
| *கலியர்* | *265* |

| | |
|---|---|
| சத்தியார் | 268 |
| ஐயடிகள் காடவர்கோன் | 270 |
| கணம்புல்லர் | 271 |
| காரியார் | 273 |
| நின்றசீர்நெடுமாறர் | 274 |
| வாயிலார் | 275 |
| முனையடுவார் | 275 |
| கழற்சிங்கர் | 276 |
| இடங்கழியார் | 279 |
| செருத்துணையார் | 281 |
| புகழ்த்துணையார் | 282 |
| கோட்புலியார் | 283 |
| பத்தராய்ப் பணிவார் | 285 |
| பரமனையே பாடுவார் | 286 |
| சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் | 287 |
| திருவாரூர்ப் பிறந்தார் | 288 |
| முப்போதுந் திருமேனி தீண்டுவார் | 290 |
| முழுநீறு பூசிய முனிவர் | 291 |
| அப்பாலும் அடிச்சார்ந்தார் | 292 |
| பூசலார் | 293 |
| மங்கையர்க்கரசியார் | 295 |
| நேசர் | 296 |
| கோச்செங்கட் சோழர் | 297 |
| திருநீலகண்ட யாழ்ப்பாணர் | 300 |
| சடையர் | 302 |
| இசைஞானியார் | 303 |
| வாழ்த்து | 304 |

# சதாவதானம்
# நா. கதிரைவேற் பிள்ளை
# அவர்கள் சரித்திரம்

(1908)

# நூன்முகம்

*"அசிந்திய மவ்வியக்த மநந்த ரூபம் சிவம் ப்ரசாந்த மமிர்தம் ப்ரஹ்ம யோநிம்! ததாதி மத்தியாந்த விகீநமேகம் விபும்சிதாநந்தம ரூப மத்புதம்!" "உமா சகாயம் பரமேஸ்வரம் ப்ரபும் த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரசாந்தம்" என்ற தொடக்கத்தனவாக யசுர் வேதாந்தத் தில் பிரதி பாதிக்கப்பட்ட பரசிவனார் நீர்மையைத் தன்னகத்தே சிறிது உடைத்தாம் மேருகிரி முடிகளுள் ஒன்றாய இலங்காபுரிக்கு ஓர் எழில் முகமாய் இலங்கும் யாழ்ப்பாணத்து உதித்துச் செந்தமிழ் நாடு எங்கணும் சென்று புறச்சமயக் கார் இருளைக் கடிந்த சித்தாந்த பானுக்களுள் சிறந்தார் கதிரைவேல் பிள்ளை எனும் காராளரே. அவர் 1860 ஆம் ஆண்டில் தோன்றி 1907 ஆம் ஆண்டில் கரந்தனர். அப்பெருந்தகைக்குக் கண் இமைபோன்ற கெழுதகை நண்பராய் விளங்கினார் சென்னை சிந்தாதிரிப்பேட்டை வேதாகமோக்த சைவ சிந்தாந்த சபையினர். அச்சபையார் பச்சிமப் புலவகானப் பாவலராம் சைவ சித்தாந்த மகா சரபத்தின் சரிதத்தைத் தத்துவ ரூபமாகச் சுருக்கி வரைய அடியேற்குப் பணித்தனர். அப்பணியை மணி எனச் சிரமேல் தாங்கி உஞற்ற என் உள்ளத்து எழும் பேர் அவா என்னைப் பிடர் பிடித்து உந்தியது.*

*பிள்ளை அவர்கள் வரலாற்றைச் சிறியேன் வரையத் தொடங் கியதை உணர்ந்த அன்பர்கள் தங்கட்கு மாயாவாத தும்சகோளரி மனமகிழ்ந்து விடுத்த கடிதங்களில் உள்ள* **கமலபந்தம், இலிங்க பந்தம், இரத பந்தம், நாக பந்தம், சதுரங்க பந்தம், மயூர பந்தம்** *முதலிய சித்திரக் கவிகளையும் சிலேடைக் கவிகளையும், பிற கவிகளையும் சரிதத்தின் இடை இடையே இன்றியமையாத இடங்களில் புனைக்குமாறு அனைத்தையும் எனக்கு அனுப்பினர்; எனினும் அன்னோர் விழைந்த வண்ணம் யான் செய்யாது சரிதத்தையும் சாலவும் சுருக்கினேன். எற்றுக்கெனில் அங்ஙனம் இயற்றின் அத்துவித சித்தாந்த மதோத்தாரணர் சரிதம் வாரிபோல் பெரிதும் விரிந்து பங்குனி மகத்திற்குள் வெளிவராது; ஆதலால் அக்கவி ரத்தினங்களைப் புவியுள்ள கவிஞர்கள் போற்றிப் புகழ்ந்து அணியப் பின்னர் பிரசுரிப்பல்.*

*மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவராய் இருந்த பிள்ளை அவர்கள் பிரிவாற்றாமைக்காகப் பிரபல வித்வ சிரோன்மணிகள் பாடிய*

*பாக்களுள் வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையார்க்குக் கிடைத்த கவிகளே இந்நூல் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.*[1] *மற்றைய கவிகளை மகா-ள-ள-ஸ்ரீ புரசை பாலசுந்தரநாயகர் வெளியிடுகின்றார் என்று கேட்டுப் பெரிதும் மகிழ்வு எய்தினேன்.*

*அறிவினும் கல்வியினும் சிறியேனாய யான் யாத்த இச்சிறு நூலைச் சொல்நயம் உடைய நல்நயப் புலவர்கள் அன்னம் போல் கொள்வார்களாக.*

*இங்ஙனம்,*

**திரு.வி. கலியாணசுந்தரன்**

1. இவற்றுள், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், கயப்பாக்கம் – திரு. சதாசிவ செட்டியார் அவர்கள், சைவஸ்ரீ ம. தி. பாநுகவி அவர்கள் ஆகிய மூவர் இயற்றிய பிரிவாற்றமைப் பாக்களே இப்பதிப்பில் வெளியிடப் பெற்றுள்ளன. விரிவுபற்றி முற்பதிப்பில் வெளிவந்துள்ள 19 பெரியோர்களின் பிரிவாற்றாமைப் பாடல்கள் விடப்பெற்றன. – *பதிப்பாசியர்.*

## இந்நூல் ஆக்கியோன் இயற்றிய
## கதிரைவேல் சரித்திர சாரம்

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

*சொல்லுபய கதிர்காமத் தூநா கப்பர்*
*சுதன்கதிரை வேற்குரிசில் தொல்வே ளாளர்*
*கல்விமிகு நாவலர்மா ணாக்கர் மாட்டுக்*
*கலைகள்எலாம் கற்றுணர்ந்து கற்பின் மிக்க*
*செல்விவடி வாம்பிகையை மணந்து சென்னை*
*சேர்ந்தேமா யாவாத திமிரம் ஓட்டி*
*நல்அரிக்குக் கண்டிகைநீ(று) என்றே நாட்டி*
*நவையிறுரைத் தமிழ்ச்சங்க நாதர் ஆகி,* 1

*புத்தமத இருள்நீக்கிப் புலவ நாதன்*
*பொற்சபைகண்(டு) அவ்வவைக்குத் தலைமை பூண்டு*
*பத்திமுறை யேயருட்பா என்றே நீதி*
*பதிவியக்க விதிகாட்டி அப்பா விற்குச்*
*சத்தியமாய் உற்சவங்கள் இயற்றி ஈங்குத்*
*தரணிபுகழ் அவதானம் சதமும் ஆற்றி*
*சித்தியளி நீலகிரிக் குன்றூர்க்(கு) ஏகிச்*
*சிவன்அடிக்கீழ்ச் சேரும்ஓரு சீர்பெற் றாரே.* 2

சதாவதானம்

# ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேல் பிள்ளை அவர்கள்

# சரித்திரம்

காப்பு

*தேன்மாமணி திகழும்மலர்த் திருவாரெழில் மருமன்*
*மான்மாமணி மருகன்சபை மருவும்சிவ கதிரை*
*வேன்மாமணி சரிதம்சொல விரிநீர்உல கத்தே*
*வான்மாமணி மழமாஅருள் மலர்த்தாள்பணிந் திடுவாம்.*

## கடவுள் வாழ்த்து

சிவபெருமான்

*ஆனேறும் பெருமானார் அரியேறும் கரியவனார் அளிக*
*ளேறும்*
*தேனேறும் திருமலரின் திசையேறும் சதுமுகனார் செயல்கள்*
*ஏற*
*மானேறும் கரம்அசைய மதியேறும் சடையசைய மன்றில்*
*ஏறும்*
*வானேறும் கடவுளர்தம் வாழ்த்தேறும் சிவனடியை வணங்கு*
*வாமால்*

உமாதேவியார்

*எத்தேவர் செய்தொழிற்கும் முதற்பொருளாய்*
*இலங்குமற இறைவ னார்க்கும்*
*வித்தாகி இருபொருளை விழைந்தளித்தப்*
*பொருளாக விளங்குந் தேவி*
*சித்தாய பெருமாட்டி சிவகுகனை*
*உவந்தளித்த செல்வி என்றும்*
*சித்தாந்த ஒருமுதல்வி சிவகாம*
*சுந்தரிதாள் சிந்தை செய்வாம்.*

### விநாயகர்

*நாரணனார் உருமாற்றி நல்லரவா*
*யோகிருந்து நண்ண அன்னோன்*
*பூரணப்பேர் உருவளித்துப் புகழருளும்*
*புண்ணியத்தைப் புனித மிக்க*
*வாரணக்கே தனன்வேண்ட வனத்தன்று*
*நமையீன்ற வள்ளித் தாய்முன்*
*வாரணமாய் வந்ததனி அத்துவித*
*அரும்பொருளை வணங்கி வாழ்வாம்.*

### சுப்பிரமணியர்

*ஒருமயிலை வலத்தானை ஒருமயிலை*
*இடத்தானை உருக்கை வேண்டும்*
*திருமயிலை அளித்தானைச் சீர்மயிலைப்*
*பதியானைச் சிந்தை செய்வோன்*
*தருமயிலைத் தந்தானைத் தமிழ்மயிலை*
*வளர்த்தானைத் தளிர்த்த தோகைக்*
*கருமயிலை ஊர்வானைக் கரமயிலைத்*
*தரித்தானைக் கருத்துள் வைப்பாம்.*

### சமயாசாரிய சுவாமிகள்

*சீர்பூத்த காழிநகர்ச் சிவஞான சம்பந்தர் திருத்தாள் போற்றி*
*கார்பூத்த கடல்மிதந்த கவின்நாவுக் கரசரது கழல்கள் போற்றி*
*போர்பூத்த திருத்தொண்டத் தொகைவிரித்த பெரியவர்தம்*
*பூந்தாள்போற்றி*
*ஏர்பூத்த மாணிக்க வாசகனார் இணையடிகள் என்றும் போற்றி.*

### சந்தானசாரிய சுவாமிகள்

*சிவஞான போதம்செய் திருவெண்ணெய்*
*மெய்கண்ட தேத்தாள் போற்றி*
*சிவஞான சித்தியளி சித்தாந்தி*
*அருணந்தி சிவன்தாள் போற்றி*
*சிவஞான மறைஞான திருவாளன்*
*செய்யஇணைத் திருத்தாள் போற்றி*
*சிவஞானப் பிரகாசம் செழித்தஉமா*
*பதிக்குரவன் செந்தாள் போற்றி.*

## வித்தியா குரவர்

*செந்தமிழ் மணியே போற்றி சிவம்வளர் அரசே போற்றி*
*இந்தமா நிலத்தில் உள்ளோர்க் கெழிலருட் பாவி னுண்மை*
*தந்திட உற்ற எந்தை சதுரவா சகனே போற்றி*
*கந்தவேள் சபைக்கு நாத கதிரைவேற் குரவ போற்றி.*

## நூல்

### கதிரைவேலர் காசினி கண்டது.

அகண்டாகார நித்த வியாபக அழல்சோதிப் பிழம்பாகிய அமலனுடன் அப்பில் தண்மையென அபேதமாய் இலங்கும் அம்பிகையின் அருளமுது உண்டோன் அருட்பாக்களை அணிந்து ஒளிரும் திருக்கோணவரையும் திருக்கேதீசமும் திகழப் பெற்றது; சிங்காரவேலர் துங்க நற் கோயில்கள் எங்கணும் ஓங்கும் எழிலினை உடைத்து; அமிழ்தினுமினிய தமிழணங்கினுக்கு ஓர் அரும் பீடம்; முத்தமிழ்க் கடலை முழுவதூஉம் உண்ட உத்தமப் புலவர்களுக்கு உற்பத்தித் தலம்; சல நில வளங்களைச் சாலவும் வகித்ததாய் மிளிரும் இமிழ்திரைப் பரவைசூழ் ஈழநாடு. அங்கு மேதாவியர் வாழ் மேலைப் புலோலியிலே, தொன்றுதொட்டு நிலவும் தூ வேளாள மரபில் தோன்றிப் புதுச்சந்நிதிப் புனிதவேள் பூங்கோயில் தர்மகர்த்தத்துவம் பூண்டு, அப்பெருமானுக்கு அல்லும் பகலும் அடிமைத் தொண்டு இயற்றும் அன்பையே இன்பு எனக்கொண்டு ஒழுகும் நாகப்ப பிள்ளை என்பார் நல்லறமாம் இல்லறத்தை நண்ணி நடாத்தினார். அவர் தமக்கு ஓர் ஆண் மகவு இன்றித் தவமணியாம் கதிர்காமக் கதிரைவேற் கடவுள் சந்நிதி அண்மிக் கருணை மிகுந்த அருண கிரியார் அருள் திருப்புகழை ஓதினார். "கனிந்துருகும் அடியவர் களுக்குக் கருணை சுரக்கும் காங்கேய! எமக்கு ஓர் ஆண் மகவு அருளல் வேண்டும்" என்று இரந்தார்; இல்லம் திரும்பித் தாரணி யோர் அனுட்டிக்கற் பாலகவாம் விரதங்களுள் தலைமையுடைத் தாம் சட்டி விரதத்தை அனுட்டித்து வந்தனர். இம்மை மறுமைப் பயன்களை எளிதில் ஈய வல்ல இவ்வரிய நோன்பை அவர் உஞற்ற, அஃதிற்கு உரிய அறுமுகன் அருளால் அவர் தம் அருமைக் கற்பரசியார்க்குக் கருப்பம் எய்தியது. பிரசோற்பதி ஆண்டு மார்கழி மதி குருவாரம் 3 ஆம் தேதிக்குச் சமமான 1860 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அருள் பூடண உண்மை அவனியில் ஓங்கவும், அகம் பிரமவாத அலகைகள் அழியவும், குண்டர்கள் கொட்டம் குறையவும், வேளாளர் மேன்மை விளங்கவும், உண்மை அருட்பா இஃது என உலகு உணர்ந்து உய்யவும் ஒரு மாண்புடைய ஆண்குழவி பிறந்தது. அக்குழவி கதிரைவேல் கடவுளின் அருளால் காசினி கண்டமையால் அதற்குக் "கதிரைவேல்" என்னும் கவின் நாமம்

சூட்டினர் கண்ணுதல் அடியார். அருமருந்தன்ன சுதனை அன்னையும் பிதாவும் பன்னிரு கரத்தனைப் போற்றி வளர்ப்பாராயினர்.

## பள்ளியில் அமர்ந்து பண்டிதர் ஆயது

பிறை என வளரும் பிள்ளைப் பெருமான் பள்ளியில் அமரும் பருவம் பெற்றதை நாகப்பர் கண்டு நனி உவப்பு எய்தித் தம் தவப்பேற்றைச் சைவ வித்தியாசாலையில் அமர்த்தினார். அவண் எம் குருநாதர் அம் தமிழ் இலக்கிய இலக்கணங்களை அங்கை நெல்லிக் கனியென உணர்ந்தனர். பின்னர் பிறைமதிசூடிய இறைவன் புரையும் கறை இல் ஆசிரியர்பால் கன்மம் துமிக்கும் தீக்கைகள் பெற்று, நல்லூர் தோன்றிய நாவலர் சீடருள் சிறந்த யாழ்ப்பாணத்து நல்லூர்-மகாவித்துவான் தியாகராசப் பிள்ளையவர்கள் முதலியோர் மாட்டுத் தொல்காப்பியம் ஆதி இலக்கணங்களையும், சங்க நூல்களையும், தருக்க சாத்திரங்களையும், சித்தாந்த சாத்திரங்களையும், வட மொழிக் கிரந்தங்களையும் செவ்வனே கற்றுணர்ந்து, நல்லூர் - சதாசிவப் பிள்ளையவர்களான் சந்தேகம் பல தெளியப் பெற்றனர். பதினெட்டாண்டுகள் பாவலரும் நாவலரும் பரவும் பண்டித சிரோன்மணியாய் எண்திக்கும் ஏத்த இலங்கினர்.

## இல்லறமாம் நல்லறம் ஏற்றது

கற்றோர் மதிக்கும் காளையாம் கதிரைவேல் பெருமான் "இல்லறமே வாழ்வினுக்கும் உயர்கதிக்கும் வித்தும் ஆம் துறவறத்தின் வேரும் ஆம்" என்னும் ஆரணமொழியின் உள்ளக்கிடக்கையைக் கள்ளம் அறக்கற்ற கவிஞர் பெருமான். ஆகலான் தம் பதி வந்த கோவிந்தபிள்ளை எனும் குணம்மிக்கோன் கோது இலாத் தவத்து உதித்து, அறிவில் அயன்தேவியையும், கற்பில் வடமீனையும், கவியில் கமலாட்சியையும், கருணையில் காமாட்சியையும் ஒத்திருந்த வடிவாம்பிகை என்னும் கடிமலர்க் கோதையைக் கனிந்து அளித்தோர் களிப்பக் கலியாணம் செய்து, கோது இலா இல்லறத்தை நீதியுடன் ஆற்றி வந்தனர். அவர்க்கு மங்கையர்க் கரசியே இற்றை ஓர் உருக்கொளீஇ வந்தால் ஒப்ப ஒரு பெண் மகவு செனித்தது. அத்திருக்குழவிக்குச் சிவஞானாம்பிகை என்னும் சீரிய பெயர் அளித்தனர் கூரிய மதியினர்.

## சென்னை சேர்ந்து செந்தமிழ் வளர்த்தது.

செச்சையப்பன் இருதாளை உச்சியில் அணிந்து, பச்சிம புலவகான நகரத்தில் பைந்தொடியோடு இனிது உறைந்த எம் பெருவாழ்வை அநாரிய பாடையில் விழுந்து மதிமயங்கி இருந்த எங்கள் புண்ணியப் பயன்கள் சென்னை அம் பதிக்கு வலித்தன. சேய இளம் பரிதி எனச் சென்னை சேர்ந்த செவ்வேள் அடியார் செந்நாச் செவிலிகள் செப்பும் ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலரிடம் கெழுதகை நட்பு

கொண்டு, அவர்பால் அவஞானம் அழிக்கும் சிவஞான பாடியம் பெற்று, அத்திருப்பாடியத்தின் உண்மைகளை உள்ளங்கை நெல்லிக்கனி போல் உணர்ந்தனர். அதுகாலை அத்துவித சித்தாந்த போதகாசிரியராய்ப் பிறங்கிய, "வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்" ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயக்கர் அவர்கள் பாலும் அன்பு பாராட்டி வந்தனர். மாதொருபாகனாம் வேத நாயகன் பாத பத்மங்களைச் சித்தத்து இருத்திப் பத்தி மலர் தூவிப் பராவும் சிவவேடம் தரித்த தவவேடத்தார் வேண்டுகோள்படிச் சிவ க்ஷேத்திராலய மகோற்சவ விளக்கம், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் சரித வசனச் சுருக்கம், ஏகாதசிப் புராணத்திற்கு அரும்பதவுரை முதலியன முதியோர் புகழும் கதிரைவேல் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டன.

இவையிற்றைக் கண்ட கற்றவரும், நற்றவரும் மற்றவரும் வெற்றிவேல் போற்றும் குற்றம் இலா எம் குரவரை அடைந்து "குருமுனியே! இக்குவலயத்து உற்றால் என விளங்கும் குணக்குன்றே! தமிழ்க்கடலை உண்ட தவப்பேறே! செந்தமிழ் அணங்கினுக்குச் சிறந்த சுதர்கள் பலர் உளரேனும், அவர்கள் அன்னையாம் கன்னிக்கு ஏற்றன ஆற்றினார் இல்லை. அப்பிராட்டியின் அகம் உவப்ப அரும்பேர் அகராதி ஒன்று ஆக்கல் வேண்டும்" என்று விழைந்து பன்முறை கேட்ப, அவர்தம் விழைவைத் தழைப்பான் உன்னித் தாளாண்மை மிக்க வேளாளர் தமிழ்பேர் அகராதியொன்று தமிழ் நாட்டிற்கு உபகரித்துத் தமிழ்த்தாய்க்குத் தலைமகனாய் இலங்கினார். அவ்வகராதியின் அருமையைப்

***"பூவில்இடை கடைஆதி எழுத்தின்முன்***
***பேருறப் பதித்த புத்தகங்கள்***
***யாவும்இடை கடைஎனவே யாழ்ப்பாணப்***
***புலோலிநக ரினின்மா சீர்த்தி***
***பாவுபுதுச் சந்நிதியான் அருட்கதிரை***
***வேற்புலவன் பதித்த மேன்மை***
***மேவும்அக ராதியிதே முதலதெனற்***
***கிதன்பெயரே விளக்கும் அன்றோ"***

என்று தஞ்சை சதாவதானம் பிரமஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் புகழ்ந்தமை காண்க. பிறரும் ஐயர் மொழியை மணி என அணிந்தனர். அதிவீரராம பாண்டியர் அருளிய கூர்ம புராணத்திற்கு உரையும் கண்டனர் கண்டிகை அணிந்த கதிரைவேலர். பின்னர் பிள்ளையவர்கள் முற்றத் துறந்த முனிவர் பெருமானாம் பட்டினத்து அடிகளார் புராணத்தை முன் ஒருவர் முதல் நூல் சிந்தியாது மொழிந்தமையால், அப்புராணத்துள் முதல் நூற்கு முரணாகக் கூறும் பாக்களை நீக்கி முதல் நூல் தழுவிப் பல பாக்கள் பாடிச்

சேர்த்துப் பதிப்பித்தனர். அதில் எம் பெருந்தகை இயற்றிய செய்யுள் நடை கச்சியப்ப முனிவர் செய்யுள் நடையைக் கடுக்கும்.

## மாயா வாத மருளை மாய்த்தது

இங்ஙனம் வண்தமிழ்க் கன்னியின் தண்தமிழ்ச் சுதர்களுள் தலைமை வகித்து, முன் அறத்தை முரணாது இயற்றும் வேளையில் சூளை நாயகர் வேளை வணங்கும் வேலை விளித்து, "கந்தனைக் கருதும் கதிரைவேலே! எமது யாக்கை வீக்குற்ற இக்கால் நாரணன் அறியாக் காரணன் அருளிய ஆரணத்து ஈற்றைப் பூரணமாய் உணரா நாம் பிரமம் என்னும் வேம்பு ஒத்த சோம்பர்கள் சைவ நிந்தனை புரியா நிற்கின்றனர். அம் மட்டிகளின் கொட்டம் குறைப்பது உம்கடனாம்" என்ன, அவ்வமுத வாக்கைச் செவிமடுத்த எம் சீரியர் "மறைகள் நிந்தனை சைவ நிந்தனை பொறாமனமும்" என்னும் நந்தி எம்பெருமான் பந்தம் அறுக்கும் வார்த்தையைச் சிந்தித்துச் சிந்தாதிரிப்பேட்டையில் சிவன்யாம் என்னும் தீக்கரிகள் குழுவில் அரி எனப்புக்குப் பொறித்த வினாக்கட்கு அன்னோர் விடை அளிக்காது அவை கலைத்தனர். மற்றொரு நாள் காசிவாசி - மாகவித்துவான் - சித்தாந்த பீடம் ஸ்ரீலஸ்ரீ செந்திநாத சுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ் மிக்கது ஓர் சபை தக்கவர்களால் சேர்க்கப் பட்டது. அப்பேர் அவையில் அத்துவிதம் செழிக்க வந்த அறிஞர் தருக்கநெறி பிறழாது சுருக்கமாகக் கடாவிய வினாக்கட்குச் செவ்வன் இறை இறுக்காது விழித்தனர் வேதாந்திகள். அதைக் கண்ட அக்கிராசனர் முக்கணன் நாமம் முழக்கி மக்கள் உய்ய வந்த மாதவப் பெருந்தகைக்கு **"மாயா வாத தும்ச கோளரி"** என்னும் மாண் பட்டம் அளித்தனர். இலக்கியம் இலக்கணம் தருக்க நூல்களில் வல்ல புலவர்களும் புலோலிப் பிறந்த புண்ணியனைப் புகழ்ந்தனர். அவ்வெற்றியைக் கேட்ட செற்றம் இலா நாயகர்க்கு உற்ற கழி பேர் உவகையை ஈண்டு விரிக்கின் பெருகும்.

## ஆரணி சமத்தான வித்துவானாயது

நாம் பிரமம் என்னும் நாதங்கட்கு இடி என இலங்கிய பிள்ளை யவர்களின் பெற்றியைக் கேட்ட பெற்றிமிகுந்த ஆரணி அரசர் எமது ஆசிரியப் பெருந்தகையை அழைத்துச் "சைவ மணியே! நம் சமத்தானத்துக்குத் தாங்கள் வித்துவானாய் விளங்கல் வேண்டும்" எனக் களங்கம் இலா உளம் கொண்டு உரைத்தனர். அங்ஙனே அவர் அகம் மகிழ "நும் சமத்தானத்திற்கு வித்துவானாய் விளங்குவல்" என வித்தகர் விடை விளம்பப் புளகம் போர்த்தனன் தீர்த்தனைப் போற் றும் ஏந்தல். அன்றுதொட்டு அச்சமத்தானம் அடைந்து அரசன் சிறார்கட்கும் பிறர்க்கும் அம் தமிழ் இலக்கிய இலக்கணங்களை அறிவுறுத்தி வந்தனர். அஃது அங்ஙனம் ஆக அவண் போந்து நிதம் அத்துவிதம் எனப் பத்தி அழிக்கும் மாயா வாதத்தை ஓயாமல்

*போதித்து வந்த ஓர் சாத்திரியாரிடம் பாத்திரம் சிவம் எனப் பணியும் மாயா வாததும்ச கோளரியை வாதிப்பான், மன்னன் விடுப்ப, அத்திருப்பணிக்கு என அவனி தோன்றிய எமது ஐயர் சாத்திரியார் நாத்திகக் கொள்கையை மாத்திரைக்குள் ஒட்டி, அன்னவர்க்கு அத்துவித இலக்கணத்தை அறிவுறுத்தினர்; அஃதை நேரில் கண்ட அரசரால் எம் குருநாதர்க்கு* ***"அத்துவித சித்தாந்த மதோத் தாரணர்"*** *என்னும் அரிய பட்டம் அணியப்பட்டது.*

## பூதிமாட்சி புகன்ற மேன்மை

*மாயாவாத தும்ச கோளரி, ஆரணி நகர சமஸ்தான வித்து வான், அத்துவித சித்தாந்த மதோத்தாரணர் என்னும் பட்டங்களைப் பெற்றுப் பலப்பல இடங்களில் உற்றுப் பிரசங்க மாரி பொழிந்து, சைவ வான்பயிர் ஓம்பச் செய்து வருங்கால் அவர் இயற்றிய சைவ பூடண சந்திரிகையில், அரிமேல் துயிலும் கரியவன் தரித்தல் கண்டிகை நீறு என்பது ஆழ்வாராதிகள் உள்ளக்கிடக்கை என்றும், அதற்குக் கரியாக,*

***கரிய மேனிமிசை வெளிய நீறு சிறிதே யிடும்***
***பெரிய கோலத்தடங் கண்ணன் விண்ணோர் பெருமான் தன்னை***
***உரிய சொல்லால் இசைமாலைகள் ஏத்தி உள்ளப் பெற்றேற்கு***
***அரியது உண்டோ எனக்கு இன்று தொட்டும் இனிஎன்றுமே.***

*என்னும் பிரபந்தச் செய்யுளை மேற்கோளாகக் காட்டி மண்குறி இடையில் உண்டாயது என்றும் வரைந்தது முற்றிலும் குற்றம் என்று அழகிய மணவாள இராமாநுஜ ஏகாங்கியாரைத் தலைவராகக் கொண்டு வாதிக்க எழுந்தனர் வைணவர்கள். பிள்ளைப் பெருமான் ஏகாங்கியார்க்குப் பின்னிடாது பிரமன் தாதை பூதி அணிந்த புண்ணிய மூர்த்தி எனப் பிரபந்தத்தினின்றும், வண்ண உரைகள் எண்இல காட்டிப் பிரசங்கவாயிலானும் பத்திரிகை வாயிலானும் நிறுவினர்.*

*இவ்விவாதம் மூன்று மதிகாலம் நீண்டது. இறுதியில் சென்னை வேணுகோபால் சுவாமி அரங்க மண்டபத்தில், அத்தியாச்சிரம பாலசரஸ்வதி ஸ்ரீலஸ்ரீ ஞானானந்த சுவாமிகள் அக்கிராசனத்தின் கீழ் ஈட்டிய மாபெரும் கூட்டத்தில், ஆயிரக்கணக்கான வித்துவ ஜனர்களின்முன் அத்துவித சித்தாந்தி வேதாகம புராண இதிகாசங் களையும், திருவருட்பாக்களையும், திருவாய் மொழியையும் தழுவிக் கண்ணன் கண்ணுதல் அடியார் என்றும், அவர் அக்கமணியையும் அருநீற்றையும் அன்புடன் அணிந்து இன்புடன் ஒழுகுகின்றனர் என்றும் கன்னல் விதானத்தில் கள் மாரி பொழிந்தால் என்ன உபந்நியாச மாரிபொழிந்து, உண்மை அடியவர்களை உவகைக்*

கடலில் தோய்த்தனர். பின்னர் பிள்ளையவர்கள் சைவ பூடண சந்திரிகையில் விட்டுணு விபூதிருத்திராக்க தாரணர் என்பதற்குப் பல பாசுரங்கள் நாலாயிரப் பிரபந்தத்திலேயே திரட்டிப் புனைந்து அதனை இரண்டாம் முறை அச்சிறுத்திச் சென்னை செங்கான் கடைப் பந்தரில் மகா வித்துவான் புரசை ஸ்ரீமத் பாலசுப்பிரமணிய முதலியார் எம். ஏ. அவர்களைச் சபாநாயகராய் அமர்த்தி அரங் கேற்றினர். இஃதுடன் வைணவ விவாதம் முற்றுப் பெற்றது.

விண்டு மூர்த்தி விபூதி ருத்திராக்க தாரணரே என்று நிறுவி வெற்றி உற்ற பின்னர் எமது பற்று இலார் பவம் நசிக்கும் சிவநிசிப் புராணத்திற்குச் சிறந்த விருத்தியுரை விளக்கினார். தடங்கருணைப் பெருங்கடலாய இறையுடன் இரண்டறக் கலந்த அடியவர் திருச் சரிதங்களைக் கேட்போர் மனம் கனிந்து உருகப் பிரசங்கித்து வருவாராயினர். அதுகாலை அவர்க்கு ஓர் சேய் உதித்துச் சேய் அடி சேர்ந்தது. அஃதும் செவ்வேள் அருளாம் எனச் சிந்தித்துச் சித்தாந்தம் செழிக்கச் சிறிதும் தளர்ந்தார் இல்லை.

## ஆவினன் குடி யாத்திரை செய்தது.

அரியும், அயனும், அக்கினியும், அவனியரசியும், ஆவும், ஆதித்தனும் அருந்தவம் செய்து அறுசமயக் கடவுளை அருச்சித்துப் பெறுதற்கு அரிய பெரும் பேறு அடையப் பெற்றதும், மலர்தலை உலகில் மன்னும் மரகத மயூரன் மாத் தலங்களுள் தலையாய் மருவுவதும், கலிமிக்க இக்காலத்தினும் கண்டு தொழுவோர்க்கு வேண்டிய வரங்களை அருள வல்லதூஉம் ஆய பழநித்தல புராணத்துக்குப் பதினைந்து தினத்தில் எம் பாவல சிகாமணி விருத்தியுரை வரைந்து பதிப்பிக்கச் செய்தனர். அஃதைப் பதித்த பி. நா. சிதம்பர முதலியார் சிந்தித்த வண்ணம் பழநிப்பதியிலேயே வெளியிடக் கருதிச் சென்னையினின்றும் வெளிக்கிட்டனர் வேலர். அவர் ஆவினன் குடியை நாடிவருவதை அவண் இருந்த அந்தணரும், அடியவர் குழாங்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும் அறிந்து அறிஞரை எதிர்கொண்டு அழைப்ப, எம் குருநாதர் அன்னவர் களுடன் பன்னிருபுய அசலப் பரமனார் பொன்நிறக் கோயிலைச் சென்னி உற வணங்கித் திருக்கோயிலுள் சென்று பெருமானையும் பெருமாட்டிகளையும் தரிசித்து ஓர் நிலையத்து இருந்தனர். மறுதினம் மாயா வாத தும்ச கோளரியால் பழநித் தலப்புராணத்தில் ஓர் சுருக்கம் சித்தாந்த நயம் தோன்றப் பிரசங்கிக்கப்பட்டது. அப்பிரசங்க அமுதைச் செவிமாந்த சிவனடியார்கள் சித்தாந்த மணிக்குப் பரிவட்டம் கட்டிச் சர்வ வாத்தியங்கள் முழக்கத்துடன் அவரைக் கிரிவலம் செய்வித்து, வாழ்த்தி, யோகமூர்த்தி ஆலயத்துக்கு அழைத்துச் சென்று அறுமுகத்து அண்ணலார்க்கு அருச்சனை செய்வித்தார்கள். மாதவப் பெருந்தகையும் அகத்து ஒளிரும் குகத்

தேவைக் குனிந்து வணங்கிச் சந்நிதி விட்டு முன் இருந்த மந்திரத்தில் தங்கி, அடியவர் வேண்டுகோள்படி அவண் ஐந்து நாள் வதிந்து சென்னை நண்ணிச் செவ்வனே வாழ்ந்திருந்தனர்.

## மதுரைத் தமிழ்ச் சங்க மாண்புலவராயதும் புத்தமதப் புன்மை விளக்கியதும்

பழநித் தலத்திற் பரிவட்டம் தரிக்கப்பெற்ற பண்டிதர் கோமான் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்த வென்றி வேலரும், தவத்தில் கதித்த அகத்தியனாரும், கணக்காயர் மைந்தரும், கன்னித் தமிழ் வளர்த்த மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவ மணியாய், எப்.ஏ., பி. ஏ., வகுப்புகட்குச் சோதனைக் கர்த்தராய்த் துலங்குங்கால், தூ அடியார் பலர் சேர்ந்து அவர்பால் அணைந்து, "அன்பு உருவாய ஐய! சின்னாள் பல் பிணிச் சிற்றறிவினர் ஆய சீவகோடிகள் நிமித்தம் திருவருளையே திருமேனியாக் கொண்டு, திருமறைகளை அருளிய சிவபெருமானிடம் தீக்கை பெற்றுச் சிவ ஞானபோத உண்மை அறிந்து சிவமாய் விளங்கும் திருவாதவூரர் ஆது தினகரர்களால் விலக்கப்பட்ட புத்த இருளில் புண்ணியக் குறைவால் சிலர் நண்ணிப் பித்தம் தலைக்கேறிப் பத்தி நெறி நில்லாது, முத்தி சேர்ந்த முதியோர்களையும், அவர்க்கு அன்பு பூண்டு ஒழுகும் அடியவர்களையும் எள்ளி நகையாடுகின்றனர் ;அவர்கட்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி ஆள வல்ல அறிஞர் தேவரீரே அன்றி வேறு யாவர்?" என்று விண்ணப்பித்தனர். அவ்வார்த்தைகளைக் கேட்ட ஆரணி நகர சமத்தான வித்துவான் அன்று இரவே "புத்தமத கண்டனம் என்னும் ஓர் புனித நூல் இயற்றி, ஆறு தினத்துக்குள் அச்சுவிமானம் ஏற்றி, அனல்பட்ட அத்தியை அங்கம் பூம்பாவை ஆக்கிய அருள் அற்புதம் நிகழ்ந்த திருமயிலாப்பூரிலே". பிரம மகோற்சவ காலத்திலே, பிக்ஷாடன மூர்த்தி உற்சவத்தன்று அரங்கேற்றம் செய்தனர்; சென்னை இராயப்பேட்டை பௌத்த ஆச்சிரமத்தின் பாங்கர் பெரிய பாளையத்தம்மன் பெரிய மண்டபத்தில் அரியதோர் உபந்நியாசமும் செய்து புத்தமதத்தில் தத்துவம் இன்மையை விளக்கினர்.

## வேளாளர் வருணம் விளங்க உரைத்தது

அடுத்த தினம் சென்னை விடுத்து இறைவன், இறைவி, இளை யோன் இவர்களால் புரக்கப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குச் சென்றனர். அவண் காராளரை மன்னர் பின்னர் என்றும், அங்ஙனே நிகண்டு கூறுகிறது என்றும், அதனைப் புரட்டி நான்காம் வருணத்தார் என்று அச்சிட்டனர் ஆறுமுக நாவலர் என்றும் கூறும் வருண சிந்தாமணி விடயமாகப் பலப் பல விவாத சபைகள் சேர்ந்தன; அவையிற்றில், காலம் எல்லாம் காமனைக் காய்ந்து சோமசுந்தரனைச் சேர்ந்த சுத்தராம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

பெருமானை இகழ்ந்தனர் உண்மை உணரார். அவ் வசை வாசகங்களைக் கேட்ட அவர் மாணவரின் மாணவராய அருந்தவப் பெருந்தகையார் அங்கயற்கண்ணம்மை மன்றல் மண்டபத்தில், வடமொழியினும் தென்மொழியினும், பிறமொழிகளினும் வல்ல சங்கப் புலவர்கள் ஏங்க "வேளாளர் நான்காம் வருணத்தவரே" என்று சுமார் 6 மணி காலம் உபந்நியசித்து, வைகறை எழுந்து வைகையில் மூழ்கி, அறுபான் நான்கு அருள் ஆடல்கள் புரிந்த அழகனையும், அங்கயற் கண் நங்கையையும் அங்கம்உற வணங்கிச் சென்னை சேர்ந்தனர். சேர்ந்ததும் செயற்கு அரிய செய்து சித்தாந்த முத்தி சேர்ந்த சேக்கிழார் ஆதி பெரியோர்கள் திருவருளால் திருவாய் மலர்ந்தருளிய அருள் நூல்கட்கு முரணாக வேளாளரை வைசியர் என வகுக்கும் நூலினும், அதனைச் சிந்தியாதும் கண்ணுறாதும், பண்டிதர்கள் பாடிச் சூடிய சாத்துகவிகளினும் மலிந்து கிடந்த மாசுகளை மணிகடல் சுலவும் மாநில வரைப்பில் உள்ள மற்றவர்கள் கண்டு மனம் மகிழப் பத்திரிகையில் பிரசுரித்தனர்.

## புராணம் உரைக்கும் புண்ணியம் ஏற்றது

அவர் கல்வி ஆற்றலை அறிந்த ஸ்ரீமத் பாலசுப்பிரமணிய முதலியார், எம். ஏ., திருமயிலை - மகாவித்துவான் சண்முகம் பிள்ளை முதலிய முதியோர் விழைந்த வண்ணம் வித்தகர் வட மொழிக் கடலையும் தென்மொழிக் கடலையும் நிலைகண்டுணர்ந்த சிவஞான சுவாமிகள் மாணவருள் சிறந்த ஸ்ரீமத் கச்சியப்ப முனிவர் பச்சைமயூரன் அருளால் பாடிய தணிகைப் புராணத்தைத் தனபதிகள் வாழும் கன பதியாம் சென்னைக் கந்தசுவாமி ஆலய வசந்த மண்டபத்தில் பிரதி ஆதிவாரத்தினும், சிந்தாதிரிப் பேட்டை வேதாகமோக்த சைவசித்தாந்த சபையடியவருள் ஸ்ரீமந் வேதாசல முதலியார் விரும்பியபடி விளங்கிழையாள் அருள் பெற்ற பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடல் புராணத்தையும், கந்தன் அருளால் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிய கந்த புராணத்தையும் முறையே புதவாரத்தினும், சனிவாரத்தினும் பிரசங்கித்து வருவாராயினர். இப்பிரசங்க அமுது நறுஞ்சுவையை நுகர்ந்தோர் நூல் ஆராய்ச்சியில் மிகுந்த நுண்ணறிவாளரே.

## அருட்பா மேன்மை அவனியில் விளக்கியது

இவ்வண்ணம் மாயன் இடும் புத்த இருள் விலக்கிய சேயஇளம் பரிதியாம் மாயா வாத தும்ச கோளரியின் கீழ்ச் செந்தமிழ் உலகம் மிளிர்வதைக் கண்ட போலிப் புலவர்கள் பொறாமல் பொறாமையால் புதுச்சந்நிதியனைப் போற்றும் புலோலிப் புலவரேற்றின் புகழொளியைச் சிறுக்கப் பல சூழ்ச்சிகள் செய்தும், அவை பயன் இலவாயின. பின்னர், பிள்ளையவர்களை யாழ்ப்பாணச் சிங்கம் என்றும், சைவம் வளர்க்கும் சம்பந்த மூர்த்தயே நம் பந்தம் கழிக்க

நாகப்பர் சுதராய் உற்றனர் என்றும், சோமசுந்தர நாயகர்க்குப்பின் சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தைச் செழிப்போரில்லை என வாடிய எங்கள் உள்ளம் களி துளும்பச் 'சோமனார் சென்றார் சூரியனார் தோன்றினர்' என்று உலகம் உரைப்ப உதித்த கதிரைவேல் என்றும், சைவ சிந்தாந்தக் கேட்டையைத் தகர்க்க வரும் புறச்சமயவீரர்களின் சிரங்களைக் கொய்யச் சைவ பூடண சந்திரிகை எனும் வாள் ஆயுதத்தை நமக்கு அளித்த நாயகர் என்றும், பலவாறு போற்றிய பண்டித ரத்னங்கள் வினை வயத்தான் நஞ்சநெஞ்சினர்களாகி "சென்னையில் உள்ளார் பலர் வடலூரரை வள்ளல் ஆகவும், அவர் பாக்களை அருட்பா ஆகவும் கொண்டுள்ளமை யானும், அவரோடு நேரில் வாதித்து அவர் பாக்கள் அருட்பா ஆகாது என நிறுவினர் ஆறுமுக நாவலர் ஆகலானும், அவர் மாணவரின் மாணவர் அத்துவித சித்தாந்த மதோத்தாரணர் ஆகலானும், அவர் தொகுத்த அகராதியும் அருட்பா என்பது திருமுறையே என அறைகின்றமை யானும், விவாத சபைகள் சேர்த்து இராமலிங்க பிள்ளையையும் , அவர் பாக்களையும் மருட்பிரகாச பொள்ளல் என்றும், மருட்பா என்றும் மனம் மகிழ்ந்துரைக்கும் யாழ்ப் பாணிகளைத் தாழ்த்தித் கூறின் எதிர் வேல் இல்லாது உலவும் கதிரைவேல் நம்மைக் கண்டிக்க எழுவர். சென்னைச் செல்வர்கள் மாயாவாத தும்ச கோளரிக்கு மாற்றலராய் விடுவார்கள்" என்னும் வஞ்ச யோசனைகளை நெஞ்சில் தாங்கி முல்லா வீதியில் ஓர் சபை சேர்த்து எம் குருநாதனை யும் அவர் பரமாசாரியரையும் தூடித்து, இராமலிங்க பிள்ளை பாட்டை அருட்பா என்றும் ஐந்தாம் வேதம் என்றும் அவரை ஐந்தாம் குரவர் என்றும் உபந்நியாசித்தனர். அக்கரப் பிழை இன்றி அறைய ஆற்றல் இல்லா மக்களை ஓர் பொருட்படுத்திக் கதிரை வேற்பிள்ளை அவர்கள் எதிர்த்தார் இல்லை. பின்னர் அழுக்காறு உடையார் செந்தமிழ் கல்வி நிரம்பப்பெற்ற சித்தாந்த செல்வர் களைக் கொண்டு திருமுறைகளைத் திருவருட்பா என்போர் தீமையில் சிறந்தோர் என்று பிரசங்கிக்கச் செய்யின் பித்தமதம் எனப் புத்தமதத்தைப் பேசிய புலோவியார் தாமதிக்காது வாதத்திற்கு வருவர் என்று உத்தேசித்து, மகாவித்துவான் ஸ்ரீமத் ஆலாசுந்தரம் பிள்ளை அவர்கள்பால் ஏகி "சுந்தர! புறச் சமயக்களைகளை அறக் களைந்து சொல் அரிதாம் தணிகைப் புராணத்தை நல் இசைப் புலவர் முன் ஞாயிற்றுக்கிழமை தோறும் நன்னயம் ஆகப் பிரசங்கித்து வரும் கதிரைவேலையே வல்லவர் என்று வந்திக் கின்றார் பலர். அவர் இன்னும் சின்னாள் இவண் நிலைப்பரேல் நமது வித்துவப் பட்டங்கள் செத்துவிடும் என்பது சத்தியம். திருமுறை களைத் திருவருட்பா எனல் பெருமை அல்ல என்றும் வடலூரர் பாக்களையே அப்பெயரால் அழைக்கப்பட வேண்டும் என்றும் தாங்கள் உபந்நியசிப்பின் கணக்கர் பாக்களைக் கறைப் பாக்கள்

எனக் கழறும் கதிரைவேலைத் துதிப்போரும் பிணக்குறுவர். சங்கப் புலவரும் தன் நாடு சேர்வர்" என்று இயம்ப, உரை ஆசிரியர் உற்று நோக்கிப் "பற்று அறுக்கும் நீற்றை அணியும் நல்தவம் வாய்க்கப் பெற்ற இவர்களே இறை அருள் கொழிக்கும் முறைகட்குக் குறை கூறத் தொடங்குவரேல், சிவநெறியாம் தவநெறியைச் சேரும் புண்ணியம் கைவரப் பெறாக் கைதவர்கள் அருட்பாவை நிந்தியாது ஒழிவாரோ! கலியின் வலிமையே வலிமை" என்று உன்னி வந்தவர் கட்கு முகமன் மொழிந்தாற் போல "அருட்பாவின் அருமையை அன்பர்களிக்க உபந்நியசிக்குதும்" என்று இசைந்து சிந்தாதிரிப் பேட்டையில் பந்தம் ஒழிக்கும் பன்னிரு முறைகளின் மேன்மை களைப் பண்டிதர் வியக்கப் பிரசங்கித்தனர். புண்ணியம் இல்லாப் போலிப் புலவர்கள் தேவார ஆதி திருமுறைகளின் பெருமையையே சுந்தரர் பேசினர் அன்றி வடலூரர் பாக்களின் மாண்பை மனம் மகிழ்ந்து உரைத்தார் இல்லை என்று விசனித்து,

***"இலகா இருள் அலகைபோல் இகலே பேசும்***
***உலகா யதன்பால் உறாதே - பலகாலும்***
***நாம்பிரமம் கண்டவர்போல் தம்மைக்கண்(டு)***
***ஆங்குஅதுவே***
***நான்பிரமம் என்பவர்பால் நண்ணாதே - ஊன் தனக்குக்***
***கொன்றுஇடுவது எல்லாம் கொலைஅல்ல என்றுகுறித்து***
***என்றும்மற மேதெய்வம் என்றுஎன்று - வென்றிப்***
***பொறையே எனும்புத்தன் பொல்லாத் புன்சொல்***
***மிறையே விரும்பி விழாதே - சிறைமேவி***
***வாழ்பவர்போல் மண்உலகில் மன்னும்உரோ மம்பறித்துத்***
***தாழ்வுநினை யாதுதுகில் தான்அகற்றி - ஆழ்விக்கும்***
***அஞ்சும் அடங்கும் அதுமுத்தி என்றுஉரைக்கும்***
***வஞ்சஅம ணன்பாழி மருவாதே - செஞ்சொலால்***
***ஆதிமறை ஓதிஅதன் பயன்ஒன்றும் அறியா***
***வேதியர்சொல் மெய்என்று மேவாதே - ஆதியின்மேல்***
***உற்றதிரு நீறும் சிவாலயமும் உள்ளத்துச்***
***செற்ற புலையர்பால் செல்லாதே - நல் தவம்சேர்***
***வேடமுடன் பூசைஅருள் மெய்ஞ்ஞானம் இல்லாத***
***மூடருடன் கூடி முயங்காதே - நீட***
***அழித்துப் பிறப்பது அறியாது அரனைப்***
***பழித்துத் திரிபவரைப் பாராதே.'***

என்று பெற்றான் சாம்பானுக்கும் முள்ளிச் செடிக்கும் முத்தியருளிய உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருமைத் திருவாக்கை ஒரு சிறிதும் ஓராது மாயாவாதிகள் , வைணவர்கள், புத்தர்கள், வேளாளரை வைசியர் என்போர் ஆகிய இன்னவர்களுடன் கலந்து பன்னிரு திருமுறை

களையும் பரமாசாரிய சுவாமிகளையும் நாவலர் பெருமானையும் தூடித்தனர்.

சைவத்தின்மேல் சமயம் வேறு இல்லை என்றும், அச் சமய ஆசாரிய சுவாமிகளே ஜெகத் குருக்கள் என்றும், அவர்கள் அருளிய பாக்களே திருவருட்பா என்றும் பிரசங்க வாயிலானும் பத்திரிகை வாயிலானும் புத்தக வாயிலானும் கரதல ஆமலகம் போல் காட்டிய வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்களால் தாபிக்கப்பட்ட சென்னை சிந்தாதிரிப்பேட்டை வேதாகமோக்த வைச சித்தாந்த சபையார் அருட்பா நிந்தையைக் கேட்டுச் சகியாது புலவர் ஏற்றை அடைந்து “நம் சபைத் தாபகரும் தலைவரும் ஆய நாயகர் அவர்கள் நம்பன் அடி நணுகிய பின்னர் நாவல மணியாய தங்களையே தலைவர் ஆகக் கொண்டு உள்ளோம்; சென்னைக்கண் உள்ள சிலர் முன் இரு வினையால் பன்னிரு முறைகளைப் பண்டைக் காலம் தொடங்கிப் பரன் அடியார்களான் வழங்கப்பட்டு வரூஉம் திருவருட்பா என்னும் பெயரால் அழைப்பது பாவம் எனப் பகர்ந்து பாவத்திற்கு ஆள் ஆகின்றனர். கற்றோர் அல்லாத மற்றையோர் அவர்தம் பொய் உரைகளை மெய் எனக் கொளாவண்ணம் திருமுறைக்குத் திருவருட்பா என்னும் திருப் பெயர் தொன்றுதொட்டு ஆன்றோர்களான் வழங்கப்பட்டு வருகிறதைப் போதித்தல் வேண்டும்” என வேண்டினர். அடியார்க்கு எளியவன் அடியைப் பேணும் மிடி இல்லார் சபையாரை நோக்கி, “அங்ஙனே செய்வல்” என்னும் அரிய விடை அளித்து அன்று தொன்று, “அருட்பா என்பது திருமுறையே” என்றும், “மருட்பா என்பது முக்குண வயத்தால் முறை மறந்து அறையும் இக் காலப் புலவர் பாக்களே” என்று பசு மரத்து ஆணிபோல் பரத கண்டத்தில் நாட்ட விரதம் கொண்டனர். சிந்தாதிரிப்பேட்டையினும் பிற இடங்களினும் கூடிய விவாத சபைகள்தோறும் சென்று சிற்றம் பலத்து ஆடும் பெற்றம் ஊர்தியே அருட்பிரகாச வள்ளல் என்றும், காழியில் தோன்றிக் கணக்கு இலாச் சீவரைக் கரை ஏற்றிய கௌணியர் பெருமான் ஆதி கருணை வள்ளல்கள் திருவாய் மலர்ந்து அருளிய திருமுறைகளே திருவருட்பா என்றும், இராமலிங்க பிள்ளை அருட்பிரகாச வள்ளல் ஆகார் என்றும் அவர் பாக்கள் அருட்பா ஆகாது என்றும் ஆரண ஆகம அருள் நூல்களையும் மற்றைய தெய்வீக சாத்திரங்களையும் காட்டிச் சாதித்தனர். அவ் உபந்நியாச அமுதைச் செவிமடுத்த புண்ணியர் இன்புற்றார்; பூரியர் துன்புற்றார். ஸ்ரீமத் ஆலால சுந்தரம் பிள்ளை அவர்களும் அருட்பா என்பது திருமுறையே என்று அகமலர்ச்சியுடனும் முகமலர்ச்சி யுடனும் அன்பர்கட்குப் போதிக்கத் தொடங்கி ஆரணி நகர சமத்தான வித்துவானிடம் கெழுதகை நட்புபாராட்டினர்.

ஆலாலசுந்ரம் பிள்ளை அவர்களும் எமது ஆசிரியர் பக்கல் நண்ணியதைக் கண்டு ஆலம் அனைய வன்னெஞ்சர்கள் வடலூர்ப் பிள்ளையை வள்ளல் என்றும் அவர் பாக்களை அருட்பா என்றும் நாட்ட வேண்டும் என எழுந்த நோக்கத்தை அறவே ஒழித்துக் கதிரைவேற்பிள்ளை அவர்கட்கு இன்னல் விளைவிக்கத் தொடங்கி னர். பன்னிரு புய அசலங்களையுடைய பகவனாரைச் சென்னியுற வணங்கிச் செந்தமிழ்ச் மாலை சாத்தும் சீரியர்க்குப் பூரியர்கள் புரியும் புன்குறும்புச் செயல்கள் என்செய்யும்? அவைகள் பரிதிமுன் பட்ட பனி எனப் பறந்தன. திங்கள் அணிந்த சங்கரன் அருளால் தெய்வத் திருவாளர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருமுறைகளை திருவருட்பா வென்றும் மற்றையோர் பாக்கள் மருட்பா என்றும் பெருஞ் சங்கங்களில் சென்று அருஞ் சங்கப் புலவர் செய்த உபந்நியாச சாரங்களைப் பின் வருவார்க்கு உபகரிப்பான் உன்னி வேதாகமோக்த சபையார்கள் அவையிற்றைத் திரட்டி அச்சு விமானம் ஏற்றிப் புத்தகம் ஆக்கி அதற்கு இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு என்னும் எழில் நாமம் ஈந்து உலகு அன்னை சிகி ஆகிப் புன்னையின் கீழ்ச் சென்னி, ஆறு உடையானைச் சென்னியுறத் தாழ்ந்து சிந்தித்து வந்தித்து வழிபடப் பெற்ற மயிலை அம் பதியிலே கபாலீச்சுரத்திற்கு எதிரிலே சித்தாந்த மந்திரம் என்னும் கிருகத்திலே கதிரைவேற் பிள்ளை அவர்களைக் கொண்டு அரங்கேற்றிப் பிரசுரித்தனர்.

மருட்பா மறுப்பைக் கண்ட மக்களுள் மா தேவன் மலரடியை என்றும் மனம் தாங்கி, மறை ஆகம வழி நிற்கும் மேதாவிகள் ஆனந்த வாரிதியில் ஆழ்ந்தனர். பூர்வ பக்கிகள் "கிணறு வெட்டப் போய் பூதம் புறப்பட்டாற் போல" யாழ்ப் பாணத்தானைத் தாழ்த்த வேண்டி யாம் காதலிப்ப இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாசங்கள் வெளியாயினவே; இவ் வண்ணம் நிகழும் எனக் கனவிலும் கருதவில்லையே; நாம் ஒன்று உன்ன நாதன் ஒன்று நினைத்தனனே; என் செய்வது என்று இரங்கி ஏங்கி ஏறு அரும் ஆகுலக் கடலில் ஆழ்ந்தனர்.

"சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி" என்றால் போல வாளா இருந்த வண்தமிழ்க் கதிரைவேலை வலியவாதத்திற்கு அழைத்து, வடலூரரார் மாண்பையும், அவர் பாக்களின் அபிவிருத் தியையும் அழித்தனரே பாவிகள் என்றும் சென்னைப் புலவர்கட்கும் பிறர்க்கும் புலோலிப் புலவன் புகழைக் கெடுக்கக் கருத்து உண்டேல் இராமலிங்கர் பாடலை எற்றிற்கோ இடையில் இழுக்க வேண்டும் என்றும் இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாசம் வெளிவந்ததற்குக் காரணங்கள் சென்னைப் புலவர்களே என்றும் கலியுகத்தில் இவர்கள் கலியாண நாட்டுக் கதிரைவேலை வலிந்து வாதித்தமை யால் அன்றோ பன் அரிதாம் பன்னிரு முறைகளின் மேன்மை பார்

எங்கணும் பரவியது; யாவும் இறை அருளே ஆகும் என்றும் பலர் பலவிதமாகப் பகரா நின்றனர். சுமார் முப்பதிற்றைந்து வருடத்துக்கு முன்னர் வடலூரில் நடந்தேறிய விடயங்களை இக் காலத்தில் மெய்ப்பித்தல் மிக்க கடினம் என்று வழக்கு எடுப்பின் பிள்ளையை வள்ளல் என்போர் மீளா நரகத்திற்கு ஆளாவர் என்று கரையும் கதிரைவேலர் பயந்து கடல் மத்தியிலுள்ள தன் நாடு ஏகுவார்; அல்லது பிள்ளையை வள்ளல் என்றும் அவர் பாக்களை அருட்பா என்றும் ஒத்துக்கொள்வார் என்று யோசித்து விளம்பினர் வேறு சிலர். மருட்பா மறுப்பில் (27) இருபத்தேழு விடயங்கள் பொய்யாக வரையப்பட்டுள்ளன என்று 1904 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சென்னை டவுன் போலீஸ் கோர்ட்டில் இராமலிங்கம் பிள்ளை தமயன் தனயராய வடிவேற்பிள்ளை அவர்களால் வழக்குத் தொடுக்கப்பட்டது. காலண்டர் நம்பர் 24533-1904, சென்னை ஹைகோர்ட் வாசால நியாய துரந்தர சிங்கங்கள் ஆகிய பிரமஸ்ரீவி. விசுவநாத சாஸ்திரியார் B.A., B.L. அவர்களும், பிரமஸ்ரீ சாமராவ், B.A., B.L. அவர்களும் கலியில் திருமுறையின் உண்மையை வலியுறுத்த வந்த பெருந்தகைக்காக வாதிப்பான் நீதிபதி முன்னர் நின்று 27 விடயங்களுள் 20 விடயங்கள் இராமலிங்கர் பாக்களில் வெள்ளிடை மலைபோல் விளங்குவதைக் காட்டினார்கள். எஞ்சிய ஏழும் போலி அருட்பா மறுப்பு, குதர்க்க ஆரணிய நாச மகா பரசு கண்டனம், இராமலிங்கம் படிற்றொழுக்கம், முக்குண வயத்தான் முறை மறந்து அறைதல், தத்துவ போதினி, தத்துவ விவேசினி, தத்துவ விசாரணி, தினவர்த்தமானி, சுகிர்தவசனி, ஞானபானு, நேட்டிவ் பப்ளிக் ஒபினியன், அற்புதப் பத்திரிகை, வர்த்தமான விமர்சனி, திராவிடப் பிரகாசிகை, பாவல சரித்திர தீபம் முதலிய புத்தகங்களையும் பத்திரிகைகளையும் விளம்பரங்களையும் கொண்டு, வடலூர் மேட்டுக்குப்பத்திற்குச் சென்று இராமலிங்கர் செய்கைகளை நேரில் கண்ட சீரியர்களைக் கொண்டும் நிரூபிக்கப்பட்டன. அவ்வழக்கைச் சுமார் ஆறுமாத காலம் விசாரித்த நீதிபதி கனம் அஜீஜுடின் சாயபு பஹதுார் அவர்கள் 1904 ஆம் வருடம் நவம்பர் மாதம் 21 ஆம் தேதி ஆகிய கார்த்திகைச் சோமவாரப் புண்ணியத் தினத்தன்று தள்ளி விட்டனர். அந் நியாயாதிபதி அவர்களால் எம் குருநாதற்கு மாயாவாத தும்ச கோளரி என்ற பட்டம் உறுதிப்படுத்தப்பட்டது. அவ்வெற்றியைக் கேட்ட கற்றறிந்த நல்தவர்கள் வரம்பு இலா இறும்பூது எய்தினர். சிவனே கதி அவனே பதி எனக் கொண்டு சைவம் வளர்த்த சிவஞான சம்பந்தர் ஆதி திருவருள் செல்வர்கள் செம்மலர்த்தாளை நம்பிய ஸ்ரீமத் ஆனந்த முத்துக் குமாரசுவாமி பக்த ஜனசபையாரும், சைவ சித்தாந்த சங்கத்தாரும், சைவ சமய பக்த ஜன சபையாரும் ஒருங்கு சேர்ந்து ஸ்ரீ முத்துக் குமாரசாமியார் நல் திருக்கோயிலிலே 1904 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் தேதி

ஞாயிற்றுக்கிழமை எந்தையாம் கந்தவேட்கும், பரமாசாரிய சுவாமிகட்கும் அபிடேக அலங்கார ஆராதனம் செய்து அருட் பாக்களையும் அன்புடன் பூசித்து அழகிய விமானத்தில் எழுந் தருளுவித்து திருவீதி வலம் செய்வித்து அரசாங்கம் ஏறி அருட் பாவின் உண்மை விரித்த அத்துவித சித்தாந்த மதோத்தாரணரைக் கொண்டு திருமுறைகளின் மான்மியத்தைப் பிரசங்கிக்கச் செய்வித்துப் பெறுதற்கு அரிய பெரும் பேற்றை இம்மலையிலே அடைந்தனர்கள். அடுத்த ஆதிவாரம் எமது ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையின் பிரதம வருடோற்சவத்தன்று சுந்தரேசப் பெருமானார் திருவாலயத்தினின்றும் அடியேம் ஆசிரியரை எதிர்கொண்டு அழைப்பக் கதிரைவேல் பெருந்தகையும் கடை யேமை ஒரு பொருட்படுத்தி எங்களுடன் அளவளாவி சபை நிலயம் அடைந்து அக்கிராசனம் வகித்து வருட உத்சவத்தைப் பெருமை யாய் நடத்தினர். சபைக்காரியதரிசியும் எமது தமயனாரும் ஆகிய திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் இயற்றிய திருவருட்பா விஜய நாமாவளி சிவனடியார்க்கு விநியோகிக்கப்பட்டது. புரசை பரசிவ தமிழ்வேத பாராயண பக்தஜன சபையாரும் 1904 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி பானுவாரம் ஸ்ரீகங்காதரேசுரர்க்கும் பங்கசாட்சி அம்மையார்க்கும் பரமாசிரிய சுவாமிகட்கும் மகாபி டேகம் அலங்காரம் ஆதி நடத்திப் புண்ணியத் திருவருட்பாக் களைப் புட்பச் சிவிகையில் எழுந்தருளுவித்துத் திருவீதி மகோற் சவம் நடாத்தினர்.

இங்ஙனம் சென்னைச் சிவனடியார் திருக்கூழாங்கள் பன்னிரு முறைகட்கும் பத்தியாய் உற்சவம் செய்து பரம ஆனந்தராய்ச் செய்த வந்தன உபசாரங்களையும் பரிசுகளையும் ஏற்ற எம் குருநாதர் அருள் காமக்கோடியின் அம்கயற்கண்கள் களிக்கப் பாதம் தூக்கிப் பாசத்தால் கட்டுண்டு உழலும் பசுக்கள் ஈடேறப் பரமன் பஞ்சகிருத்திய நடம்புரியும் சிதம்பரத்திற்கு ஆரோத்திரா தரிசனத்திற்குச் சென்றனர். தில்லை வாழ் அந்தணர் பெருமான் களும் திருமடத்துத் தம்பிரான் சுவாமிகளும் தேவார பாடசாலை ஓதுவார் மூர்த்திகளும் திருவாதிரைத் தரிசினத்திற்காக வந்திருந்த சிவன் அடியார்களும் சிவஞான தீபத்தைக் கண்டு அகம் குளிர்ந்து முகம் மலர்ந்தனர். அவ் ஆண்டு ஆரோத்திரா தரிசினத்திற்கு அடுத்த தினம் ஆகிய (24.12.1904) ஆதிவாரம் ஸ்ரீ சமயாசாரிய சுவாமிகட்கு அபிடேக அலங்கார ஆராதனங்கள் செய்து அம்பலப் பாக்களாம் அருட்பாக்களை அன்புடன் பூசித்து அரசு உவாவாகிய அத்தியின் மீது எழுந்தருளப் பண்ணி, கொடி, குடை, சாமரம் ஆதிசர்வ உபசாரங்களுடன் புறப்பட்டு இருமொழித் திருவருட்பாக் கோஷத் தோடு மாடவீதி திருவுலா வந்து திருமுறைகளைக் கஜத்தினின்றும் ஹர நாம கோஷமும் கர தாள கோஷமும் திசைகள் தோறும்

செவிடுபடச் சீராக இறக்கி, அரசசபையாம் ஆயிரக்கால் மண்டபத்தில் வீற்றிருக்கச் செய்தனர். அத்தியின் பின்னர் அஞ்செழுத்து ஓதி வந்த அத்துவித சித்தாந்த மதோத்தாரணரை அன்பர்கள் இன்புறுமாறு அருட்பா உண்மையை அம் மண்டபத்தில் உபந்நியசிக்க அந்தண சிகாமணிகள் ஆஞ்ஞாபிக்க அவரும் அன்னவர் ஆணையைச் சிரம்மேல் தாங்கி அருள் நாதன் மகா மண்டபத்தில் சுமார் 8000 அன்பர்கள் மத்தியில் அருட்பா உண்மையை உபந்நியசித்தனர். திருமுறை உற்சவம் செய்த பெரு மறையோர்களால் எம்பிராற்குப் பூமாலை சூடப்பட்டுப் பட்டுப் பரிவட்டமும் சாத்தப் பட்டது.

அவ்வருமையைக் கண்ட பெருமையில் சிறந்த நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் தங்கள் தேவை அம் பதிக்குச் சிந்தாமணியை அழைத்துச் சென்று ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரப் பெருமானார் ஆலயத்திலே திருமுறைகட்குத் தில்லையம் பதியில் செய்த வண்ணம் மகோற்சவம் செய்தார்கள். அன்று இரவு வென்றிவேல் போற்றும் பிள்ளை அவர்களால் வள்ளல் அருள் மணக்கும் திருமுறை மேன்மை உபந்நியாசிக்கப்பட்டது. இறுதியில் மாயாவாத தும்ச கோளரிக்கு மாலை சாத்திப் பட்டுப் பரிவட்டம் தரித்து மாலை ஒழித்தனர் வணிக மாக்கள். அவையிற்றை அகம் மகிழ்ந்து குகன் அடி உன்னி ஏற்றுச் சென்னை அடைந்தனர் செந்நாப் புலவர்.

தொண்டை நாட்டுச் சிவ தலங்களுள் சிறந்த திருக்காஞ்சிச் சிவநேசத் திருக்கூட்டத்தாரும் சிதம்பரத்தில் இரண்டாம் முறை நடந்தேறிய திருவருட்பா உற்சவம்போல் திருவேகம்பத்தினும் நடத்த வேண்டும் என விழைந்து, நம் குருபால் அணைந்து, "நம்பன் அருளால் நாகப்பர் தவத்து உதித்த நாயகமே! இக் காலத்து மக்களும் இனி வருவோரும் இன்புற்று உய்ய உண்மை அருட்பாக்கள் திருமுறைகளே என்று அரச மன்றம் ஏறி அறிவித்த ஆண்டகையே! செம்மறையோர் அம்பலத்தில் அருட்பா உற்சவம் செய்து ஆனந்தம் அடைந்ததற்குக் காரணராய் இருந்த கதிரைவேல் அரசே! அடியேம் அருட்பா வெற்றியைக் குறித்துத் திருக்காஞ்சியில் மகோற்சவம் நிகழ்த்த மகிழ்ந்துளேம். மாதவப் பெருந்தகை ஆண்டு எழுந்தருள வேண்டும் என வேண்டினர். வேண்டும் அடியவர்கட்கு வேண்டிய வரங்களை ஈயும் தாண்டவனை வரிபடூஉம் தாளாண்மை மிக்க வேளாள மணியும் அவர் வேண்டுகோட்கு இணங்கி அயன் ஆதியோர் வாழும் அருங்காஞ்சியை அணைந்தனர். கதிரைவேல் பெருமான் காதல் மேலீட்டால் காஞ்சிக்கு வருவதைக் கேட்ட கறைகண்டன் அடியார் கரை இலா இறும்பூது எய்திக் தெருக்கள் தோறும் பூம்பந்தர்களும் தோரணங்களும் நாட்டி வழிபார்த்திருந்தனர். அவ் வீதிகள் தோறும் அன்பர்கள் அகம் மகிழச் சென்று அன்னவர்கள் பானுவைக் கண்ட பங்கயம் என முகம் மலர்ந்து செய்த வந்தன உபசாரங்களை ஏற்று ஓர் அன்பர் நிலயம்

அடைந்தனர். அடுத்த நாள் (22-1-1905) திருக்கூட்டத்தார் ஏகாம்பரப் பெருமானார் ஆலயத்தில் சமயாசாரிய சுவாமிகட்கும் சேக்கிழார் பெருமானுக்கும் அபிடேக அலங்காரம் செய்து அருட்பாக்களை அருச்சித்து ஆலய அரசு உவா மீது ஆரோகணிக்கச் செய்தனர். யானையும் குமர கோட்டத்துக் கஜமும் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் வேழமும், வெண் சாமரம் வீச இராச வீதி நோக்கி நடந்தது. அந்தணர் வேத ஒலியும் அருந்தவர்கள் அருட்பா ஒலியும் அதிர் வேட்டுகளின் முழக்கமும் வாத்திய கோஷமும் திசைகளைச் செவிடுபடுத்தின. அவ்வுற்சவத் திருக்கோலத்திலே அன்பர்கள் மத்தியில் என்பு அணிந்த இறைவனே என இலங்கினர் எம் குருநாதர். இராசவீதியிலே இருகாலும் திருமுறைகளை முறைப்படி பாரா யணம் செய்யும் பலப்பல பக்த ஜன சபையார்கள் தத்தம் சபைகட்கு எதிராகத் தந்தி வந்தபோது செந்தமிழ் வேத பாராயணத்துடன் யனையை வலம் வந்து யாழ்ப்பாணப் பெருவாழ்விற்குப் பூ மாலைகள் சாத்தி நண்ணரிதாம் புண்ணியத்தைக் கண்ணிமைப் பொழுதில் கைவரப் பெற்றனர். இவ் வண்ணம் பெருங் கோஷ்டி களுடன் வருங் கஜங்கள் ஆயிரக்கால் மண்டபத்தை அண்மின. அந்தணர்கள் அருட்பாவை அத்தியின் நின்றும் பத்தியுடன் இறக்கிச் சபாமண்டபத்தில் வீற்றிருக்கச் செய்தனர். கதிரைவேல் பெருந் தகையைக் கண்டு அறியாத எண் இறந்த புண்ணியர்கள் ஆங்கே நண்ணிக் கதிரைவேல் பிள்ளை யாவர் யாவர் என்று ஒருவரை ஒருவர் வினவிய ஒலியே எங்கும் மலியா நின்றது. அதுகாலை ஆரியம் வல்ல வீரியர் ஓர் உயர்ந்த பீடத்தின் மீது ஏறிச் சிவ நாம சங்கீர்த்தனம் முழக்க அன்பர்களும் கண்ணாரக் கண்டு துன்பு ஒழித்தார்கள். உடனே அருட்பா மான்மியம் ஆசிரியரால் உபந்நியசிக்கப்பட்டது. உற்சவம் செய்து உற்சாகம் எய்திய உண்மைச் சிவநேயர்களால் இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பண விஜய மகாசரபம் முதலிய புத்தகங்கள் பத்தர்கட்கு விநியோகிக்கப்பட்டன. ஞாபகச் சின்னத்திற்காக நாகப்பர்சுதர்க்கு அரதநம் பதித்த கௌரிசங்கர கண்டி அளிக்கப்பட்டது. உறையூர் சைவ சித்தாந்த சபையாரும் யாழ்ப்பாணத்து உபயகதிர்காம வாசரைத் தம்மூர்க்கு அழைத்துச் சென்று உண்மை அருட்பாக்கட்கு மேற்குறித்த வண்ணம் உற்சவம் செய்து பிள்ளை அவர்கட்குச் சன்மானம் செய்தனர். திருவருட்பா விளக்கம் என்னும் ஓர் பிரபந்தமும் இயற்றிப் புனிதர்க்கு உபகரிக்கப் பட்டது. திருவண்ணாமலை, சீர்காழி முதலிய தலங்கட்குச் சுவாமி தரிசனத்திற்காகப் பரிசனங்களுடன் ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபைத் தாபகர் சென்ற காலையில் ஆங்காங்கே அன்பர்கள் அருட்பா உற்சவம் செய்து அருந்தவ மணியை வாழ்த்தினார்கள். செந்தமிழ் உலகம் செய்த வந்தனைகளை ஏற்ற செந்நாப் புலவர் சென்னை சேர்ந்து கந்தசுவாமியார் வசந்த மண்டபத்தில் தணிகைப்

புராணமும் சிந்தாதிரிப் பேட்டையில் கந்த புராணமும், திருவிளை யாடல் புராணமும் பிரசிங்கித்து வந்தனர்.

அநபாயச் சோழ மகாராசன் செய்த அருட்பா உற்சவப் பெருங்கோலத்தை இக் காலத்து உள்ள மக்கட்குக் காட்டி இணை இலாப் பெரு மகிழ்ச்சி எய்துவித்த பெரியாரைப் பெற்றாரும் உற்றாரும் சுற்றத்தாரும் பிறரும் சுதேசத்திற்கு வருமாறு திருமுகங்கள் விடுத்தனர். அவையிற்றைச் சென்னை நேயர்கட்குக் காட்டிச் "சில் நாள் நுமைப் பிரிந்து ஏத்துவோர்க்கு எந் நிதியும் அளிக்கும் சந்நிதி வேளைத்தரிசிப்பான் புலோலிக்குச் சென்று மீளுவல்" என இசைத்து அன்னவர்கள்பால் விடை பெற்று, அருந்ததி அனைய கற்பரசி யாருடனும் புதல்வர்களுடனும் புறப்பட்டனர். இடையில் விடையவர் ஆடும் சிதம்பரம், சீர்காழி, புள்ளிருக்குவேளூர் திருக் கோலக்கா, திருச்செங்கோடு, திருமயிலாடுதுறை, திருவாலவாய், திருநெல்வேலி, இராமேச்சுரம் முதலிய திருப்பதிகளில் தங்கி ஆங்காங்கே உள்ள தீர்த்தங்களில் தோய்ந்து மூர்த்திகளைக் கண்டு வணங்கி அடியவர்கள் அன்பின் மேலீட்டால் செய்த பணிகளை மணி என ஏற்று அவர்கள் அகம் மகிழ்ந்து விழைந்த வண்ணம் அத்துவித சித்தாந்த மகோபந்நியாச மாரியைப் பிரம மேகம்போல் பொழிந்து வீணாகான நகரை அடைந்தனர். அந்தணரைக் கண்ட அந்தணர்களும், ஆசிரியர்களும் அன்பர்களும் அருட்பா முழக்கத் துடன் எதிர்வரக் கதிரைவேலரும் கண்ணுதல் நாம சங்கீர்த்தனம் செய்து, அவர்களுடன் கலந்து, அவர் உபாசனா மூர்த்தியாம் உபயகதிர்காமப் பெருமான் அருள் கோயிலுள் சென்று உமை மகனை உள்ளத்து இருத்தி வணங்கித் தந்தையார் மந்திரம் அடைந்தனர். பலப்பல சைவ சித்தநாதத் திருக் கூட்டத்தினர்கள் தத்தம் கோட்டங்கட்குத் தாளாண்மை மிக்க வேளாளரை உபசாரத்துடன் அழைத்துத் திருவருட்பா உற்சவங்கள் செய்து தீமை ஒழித்தார்கள். பற்பல இடங்களில் மாயாவாத தும்ச கோளரியைக் கொண்டு உபந்நியாசங்கள் செய்வித்தார்கள். அவ் உபந்நியா சங்களைக் கேட்ட எம் குருநாதரின் குருநாதர்களே "எமது ஆசிரியப் பெருந்தகையாம் நாவலர் பெருமான் பிரசங்க அமுதைச் சுமார் நாற்பது ஆண்டுகளாகச் செவி மடுக்காது வாடிய எங்கட்கு இன்றைய தினம் அஃதை உபகரித்த தடம் கருணைப் பெருங் கடல் ஆய சங்கரன் அருளை எங்ஙனம் வியக்க வல்லேம்" என்று மகிழ்ந்து வியந்து புகழ்ந்தனர் எனின் ஏனைய புலவர்கள் புகழ்ந்தமையை ஈண்டு விரிக்கவும் வேண்டுமோ? "போலி அருட்பாப் பிரபந்த நிர்க்கந்த கிஞ்சுக கண்டன பிரசண்ட மாருதம்" "சைவ சித்தாந்த மகா சரபம்" என்னும் அரிய பட்டங்கள் பெரியோர்களால் சூடப்பட்டன.

இணையிலாப் புலவர் பெருமான் ஈழ நாட்டில் வாழுங்கால் வடிவேல் பிள்ளை போலீஸ் நியாயாதிபதி புகன்ற தீர்ப்பு பிழை

உள்ளது என்று சென்னை ஹைகோர்ட்டில் அப்பீல் எடுத்தனர். அதனைப் பத்திரிகைகளானும் கெழுதகை நண்பர்கள் விடுத்த கடிதங்களானும் அறிந்து சென்னை சேர உன்னினர். திடீரென்று விசாரணை தொடங்கினர் அரசாங்கத்து நியாயாதி பதிகளாய கனம் பென்சன் துரை அவர்களும் கனம் மூர் துரை அவர்களும். வேதாக மோக்த சைவ சித்தாந்த சபையார் பிரமஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களையும், பிரமஸ்ரீ விஸ்வநாத சாத்திரியார் அவர்களையும் கொண்டு வாதிக்க, சென்னை போலீஸ் கோர்ட் தீர்மானம் குற்றம் அற்றது என்று (21-11-1905) வழக்கைத் தள்ளி விட்டனர் நீதிபதிகள். சபையார் உடனே தம் சபாநாயகர்க்குத் தந்தி அடித்தனர். இவ் இரண்டாம் முறை வெற்றியைக் கேட்ட ஏதம் இலார் "கதிரைவேல் காட்டில் இருந்தால் என்னை? நாட்டில் இருந்தால் என்னை? வீட்டில் இருந்தால் என்னை? இவ் வழக்கிற்கு அவர் ஓர் முன்னிலைச் சுட்டே அன்றி மூல காரணர் அல்லர்; முழு முதற்பொருளே இவ் வழக்கிற்குப் பிரதிவாதி" என்று உள் எழும் காதல் மீதிட்டால் மொழிந்தனர். ஹைகோர்ட்டினும் வெற்றி பெற்றதை அறிந்த கொற்றவர் சமய சாரிய சுவாமிகள் திருவருளை உன்னி உன்னி ஆனந்த உருவர் ஆயினர். சென்னைச் சிவன் அடியார்களைக் காணப் பேர் அவாக் கொண்டு ஈழநாடு விடுத்துத் திருவாவடுதுறை அடைந்து விடையவனை வணங்கித் திரும்புகையில் ஸ்ரீ பண்டார சந்நிதிகள் விழைந்தபடி "சந்தான பரம்பரை" என்னும் அரிய விடயத்தை உபந்நியசித்துப் பரிசும் பெற்றுச் சிதம்பரம் அடைந்து சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினர்கள் உய்வான் கற்றைச் சடை அசையக் கால் தூக்கிக் கருணை நடம் செய்யும் பெரு வாழ்வைக் கண்டு தரிசித்துப் பல்முறை வணங்கிச் சென்னை நண்ணினர். பானுவைக் கண்ட பங்கயம் போல பன்னிரு திருமுறை சபையினர் முதலியோர் முகங்கள் மலர்ந்தன.

## வாடாவஞ்சியில் வாழ்ந்த சிறப்பு

உடல் பொருள் ஆவி மூன்றையும் உத்தமச் சித்தாந்த சைவத்திற்காக அர்ப்பணம் செய்த அத்துவித சித்தாந்த மதோத் தாரணர் கந்தநாதன் செந்தாள் மலரை அல்லும் பகலும் சிந்தையில் இருத்திப் பழைய வைதிக சைவப் பிரசங்கங்கள் பல செய்து கொண்டு வாழ்வார் ஆயினர். கதிரைவேல் நாவலர் அங்ஙனம் வாழுங்கால் கடைச் சங்கத்தில் அரங்கேற்றப்பட்ட சிலப்பதி காரத்தைச் செய்த இளங்கோ அடிகள் அச்சங்கப் புலவராய் இருந்து கவியரங்கு ஏற்றிய கோவூர்க்கிழார், கருவூர்க்கிழார், ஓல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்திற்கு ஓர் உரை கண்ட ஆரியர் சேனாவரையர் முதலிய செந்தமிழ் மணிகள் வதிந்த வாடா வஞ்சியாம் கருவூரிலே கனம் கிளைடன் துரை (Rev. Clyton) அவர் கட்கு ஓர் தமிழ்ப் பண்டிதர் வேண்டியதாய் இருப்பதை அறிந்து

அத்துரை அவர்கட்கு விண்ணப்பப் பத்திரம் அனுப்பினர். அஃது துரை அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது. சென்னைச் சிவநேயர் கட்குப் பல தேறுதல்கள் கூறிக் கார் இழையுடனும் கன்னியுடனும் கருவூரை அடைந்தனர். மூன்று மதிக்குள் எமது சபை இரண்டாம் வருட உற்சவம் நெருங்க அவ் உற்சவத்தை உற்சகாமாய் நடத்த அவண் நின்று சென்னை அணைந்து பன்னிரு கரத்தோன் பக்த ஜன சபையின் வருட உற்சவத்தை இனிது நடாத்தி எறிபத்தர் வாழ்ந்த எழில் ஊர்க்கு மீண்டனர். உத்தியோக காலம் ஒழிந்த மற்ற காலங்களில் தமிழ் வளர்க்கும் பெருமான் சிவஞான பாடியத்திற்குச் சிறந்த குறிப்புரைகள் வரைந்து கொண்டிருந்தனர். அஃதும் அன்றி சுப்பிரமணிய பராக்கிரமம் என்னும் ஓர் அரிய நூலும் பெரியரால் ஆக்கப்பட்டது. சிவஞான சுவாமிகள் பவஞானம் அழிக்கும் வியாக்கியானங்களின் உண்மை கற்றோர்க்கு அன்றி மற்றை யோர்க்குத் தெற்றெனப் புலப்படா. ஆகலான் அவையிற்றைத் திரட்டி யாவர்க்கும் பயன்படுமாறு எளிதான தமிழ் நடையில் தெளிவு ஆக எழுதினர். அஃது யாவர்பால் அடைந்துளதோ அறியேம்; அறுமுகனே அறிவன். வேனிற்கால விடுமுறை நாள் உறவே இல்லாளுடன் கல்லார் அல்லா நல்லார் கருதும் கதிரைவேற் பிள்ளை சென்னை அடைந்து பன்னிரு திருமுறைத் திருவருட்பாப் பாராயண பக்த ஜனசபையின் பிரதம வருட உற்சவத்தைப் பெற்றியாய் நடாத்தி மருட்பா மறுப்பின் வழக்கில் அவருக்காக வாதித்த வாசால நியாய துரந்தர சிகாமணியாம் விசுவநாத சாத்திரியார் அவர்கட்கு ஞாபகச் சின்னம் ஆகச் சில சன்மானங்கள் செய்து பூவாவஞ்சி எனப் புலவர் புகழ்ந்த கருவூர்க்கு ஏகினர்.

அத்திருப்பதிக்கண் உள்ள பத்தர் குழாங்கள் பண்டித சிரோன் மணிபால் அணுகி, "இனிக் கரு ஊரா வண்ணம் கருவூரில் வதியும் கண்மணியே! இத்தலமான்மியத்தை எவரும் எளிதில் தெளியுமாறு கத்தியம் ஆகச் செய்ய வேண்டும்" என வேண்டினர். அவர் வேண்டு கோளுக்கு இரங்கிய வேள்அடியார் "கரு ஊர் மான்மியம்" என்னும் ஓர் பனுவல் இயற்றிப் பசுபதீச்சுரப் பெருமானார் திருக்கோயில் கும்பாபிடேக தினத்தில் அரங்கேற்றினர். அம் மான்மியத்தில் செம்மான் மருகன் செம்மலர்த் தாளைக் கருதும் கதிரைவேல் கழறிய கவிகள் பல உளவேனும் அவையிற்றுள் இரண்டு சிலேடைச் செய்யுள்களைச் சிவனடியார் களிக்க ஈண்டுக் காட்டுதும்.

எறிபத்த நாயனார்க்கும் , கருவூர்க்கும், ஆம்பிரவ நதிக்கும், சிவ பெருமானுக்கும், விநாயகக் கடவுளுக்கும் சிலேடை

## ஐம்பொருள் சிலேடை

***பரசு கொளலாற் பவானியிட மார்ந்து***
***விரவுநலி தீர்த்தலான் மேற்பணியால் வஞ்சி***

*யறியத்தம் பத்தத்த னாறுமுனோ னன்ன*
*வெறிபத்தன் றாள்பணிவோ மே.*

கும்பாபிடேகத்திற்கும், கருவூர்க்கும், ஆம்பிரவதியாற்றுக்கும், பசுபதீசப் பெருமானுக்கும், பிரமனுக்கும், திருமாலுக்கும், தமிழ்க்கும், ஆரிய வேதத்திற்கும், தமிழ் வேதத்திற்கும், சமய குரவருக்கும் சிலேடை.

## பதின்பொருட் சிலேடை

*வாரம் வரலால் வருகுவனங் கோடலாற்*
*சாரஞ் செறிதலாற் சார்கதியாற் - சீரகரு*
*வூரா றரனயன்மா லொண்டமிழ்வே தங்கரவர்*
*நேராங்கும் பாபிடேக நேர்.*

இச் சிலேடைச் செய்யுள்களைக் கண்ட கருவூர்ச் சிலேடைச் சிங்கமும் பிள்ளையர்வகளை உள்ளில் போற்றியது. கருவூர்த் தேவர்க்குப் புராண சாரம் செய்யுமாறு வேண்டிய தாண்டவ மூர்த்தியின் அடியவர் களிக்க ஓர் விருத்தமும் செய்தனர். கருவூர் கனவான்களும் தனவான்களும் கதிரைவேற் பிள்ளைக்குக் கெழுதகை நண்பர் ஆயினர். அலுவல் ஒழிந்த காலம் தவிர மற்றைய காலங்களில் கற்றைச் சடையான் நெற்றியில் தோன்றிய வெற்றிவேல் குகன் தாளை அகம்தாங்கி அவதானப் பழக்கம் செய்துகொண்டு வாழுங்காலை அவர் மனைவியார் வடிவாம்பிகை ஓர் ஆண் மகவு ஈன்று சிவ நாமம் உச்சரித்துக் கொண்டே சச்சிதானந்த சிற்சோதியில் கலந்தனர். அஃதும் எஃக வேலன் திருவருள் ஆம் என உன்னிச் சுதையையும் சுதனையும் தம்மைப் பெற்றோர்பால் சேர்க்க வேண்டும் எனத் தீர்மானித்து, யாழ்ப்பாணம் நோக்கினர். மத்தியில் திருச்செங்கோட்டில் தங்கி "அரனே அறுமுகன்" என்னும் அரிய உபந்நியாச மாரி பொழிந்தனர். அதைச் செவிமடுத்த அடியவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு ஓர் வரம்பு இன்று. மூன்று நாள் அத் திருப்பதியில் பத்தியாய் இருந்து பின்னர் வேளாளர் வாழும் வீணாகானபுரம் அடைந்தனர்.

ஆங்கே இருமொழிக் கடலையும் பருகி ஏப்பம் இடும் புலவர் பெருமான்கள் முன்னர் சந்நிதிவேள் ஆலயத்திலும் புலோலி பசுபதீச்சுரப் பெருமானார் ஆலயத்திலும் பிள்ளை அவர்களால் சோடசாவதானமும் அஷ்டதசாவதானமும் செய்யப்பட்டன. இங்ஙனம் சிவநாதன் அருளால் அவதானம் செய்த தவநாதரைப் புநர் விவாகம் செய்து கொள்ளுமாறு பெற்றோரும் மற்றையோரும் வேண்டினர்கள். அன்னவர் முகம் நோக்கி "அன்புடையீர்! யான் சென்னைக்கு ஏகிச் சொல்நயம் உடைய நன்னயச் சிவநேயர்கள் வரம்பு இலா இறும்பூது எய்தும் வண்ணம் சதாவதானம் செய்து மீண்டும் நுங்களைக் காணச் செங்கை வேலன் திருவருள் இருப்பின், புநர் விவாகம் புரிந்து

நும்மைப் புளகம் போர்ப்பச் செய்வல்" என்று மொழிய தந்தையும் துணைவரும் குரவர்களும் நாஉலர்ந்து மறுமொழி பகரவும் வாய் எழாது நீர் நிரம்பிய கண்ணுடையர் ஆனார்கள். தம் சோதிடத்தை அவர்கட்குக் காட்டி,

***"முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்***
***பொதுவறு திருவொடு பொலிவ ராயினு***
***மதியின ராயினும் வலிய ராயினும்***
***விதியினை யாவரே வெல்லு நீர்மையார்"***

என்ற ஆன்றோர் அமுதத் திருவாக்கின்படி "விதியை மதியிலேன் எங்ஙனம் வெல்லுவேன். மாயமாம் வாழ்வை மெய் எனக் கொள்வர் அன்றோ மயங்க வேண்டும். முருகன் அருள் விட்டவழி நடக்கும். அஞ்சற்க" என்று பல உறுதி மொழிகளை உற்றார் முதலியோர்க்கு உரைத்துக் கொண்டிருந்தனர். அதுபோது கருவூர்த் துரை அவர்கள் கதிரைவேல் துரையை நீலகிரிக்குன்று ஊர்க்கு வருமாறு கடிதம் விடுத்தனர். யாமும் எமது சபையின் மூன்றாம் வருட உற்சவத்தை முரணாது முற்றுப் பெறுவிக்கச் சென்னைக்கு விஜயம் செய்யுமாறு கடிதம் வரைந்தோம். இவ்விரண்டு கடிதங்களையும் தம் கரம் தாங்கி உடன் தோன்றிய உத்தமியை அருகு அழைத்து "அம்ம! எனது புதல்வி ஆகிய சிவஞானம்பிகையையும் புத்திரன் ஆய திருநாவுக் கரசரையும் நும் செல்வர்கள் போல் பாதுகாத்தல் வேண்டும். யான் சென்னை சென்று பின் குன்றூரில் சின்னாள் தங்கி மீளுவல்" என்று உரைத்து அவர் மாட்டுச் சிறுமியையும் சிறுவனையும் ஒப்புவித்துச் செல்வியை நோக்கித் திலதவதியே! நின் அருமைச் சோதரன் திருநாவுக்கரசைப் பத்திரமாய்ப் பாதுகாக்கவும். யான் ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்த ஜன சபையின் மூன்றாம் வருட உற்சவத்தை இனிது நடாத்திச் சதாவதானம் செய்யச் சென்னைக்குப் போகின்றேன் என்று கூறி விடை பெற்று வெளிக்கிட்டனர் வேலர்.

## ஐயாற்றைக் கண்டு அறுமுகன் சபை சேர்ந்தது.

தாண்டக வேந்தர்க்குத் தண் கயிலைத் தனிக்கோலத்தைத் தற்பர சிவம் சிற்பரையோடு அருளப் பெற்ற பஞ்சநதத்தைப் பார்க்கப் பன்னாளாக உள்ளத்து எழும் பேரவா ஆனது பிடர் பிடித்து உந்த மிடி இலார் இடையில் புகைவண்டி விட்டு இழிந்து திருவையாற்றை நோக்கிச் சென்றனர். தில்லையில் இரண்டாம் முறை உற்சவம் செய்த நல்லை நாவலர் மாணவரின் மாணவர் வரவைக் கேட்ட வள்ளல் அடியார்கள் வரம்பு இலா இறும்பூது எய்தி, "எங்கள் தவமே தவம்" என்று இயம்பி ஆலய அரசுவாக்கள் மீது பூமாலை, பன்னீர் , சந்தனம், பரிவட்டம் முதலியன அமர்த்தி எதிர்வந்து கதிரைவேலற்கு வந்தன உபசாரங்கள் செய்தனர்கள். அவ் அடியவர்களுடன் அகம் பிரம வாதக் கரிகளை அழித்த அரியும்

ஐயாற்றுப் பெருமானையும் பெருமாட்டியையும் தரிசித்து ஆனந்த உருவாயது. பின்னர் சிவ உருவாய் விளங்கிய சித்தாந்தச் செல்வர்கள் விழைந்தபடி சைவ சித்தாந்த மகாசரபம் அத்திருத்தல மான்மியத்தை உபந்நியாசித்தது. மீண்டும் ஆலயத்தைக் கண்டு வணங்கி உண்மைச் சிவனடியார்கள் பால் விடை பெற்றுப் புகை வண்டி ஏறிப் புண்ணியர் வாழும் கண்ணியச் சென்னை சேர்ந்தனர். அடுத்த நாள் (17-2-1907) வருட உற்சவம் தொடங்கப் பெற்றது. அன்று காலை குன்றவில் ஏந்திக் குறுநகையால் திரிபுரம் எரித்த விரிசடைச் சுந்தரேசர் சுந்தர ஆலயத்தில் எழுந்தருளியுள்ள கந்தனாம் எந்தைக்கு அந்தணர் களைக் கொண்டு ஆகம விதி ஒரு சிறிதும் வழாது அபிடேக அலங்காரங்கள் செய்வித்துச் சிங்கார வேலரைத் தங்கவிமானத்தில் எழுந்தருளுவித்துத் திருவீதிம கோற்சவம் நடத்தப்பட்டது. பூதி அணிந்த வேதியர்கள் சிவநாம சங்கீர்த்தனச் சந்தடியும் பலப்பல சைவ சித்தாந்த சபைகளின் தமிழ் வேத பாராயண முழக்கமும் வாத்திய கோஷமும் பேட்டை எங்கணும் செவிடு படுத்தின. மரகத மயூரன் பின்னர் மறை ஓதி வந்த இறையடியார் குழுவில் கதிரை வேலர் அன்று விளங்கிய மேன்மையை என் என்று விரிப்பேம்? மால் அயன் இந்திரன் மற்றையவானோர் முனிவர்கள் போற்றக் கயிலையங் கிரியில் விற்றிருந்தருளும் கங்காதரனே எனக் கண்டோர் கழற இலங்கினர். இங்ஙனம் எழுந்தருளிய பெரு வாழ்வைக் கண்ட நம் பேட்டை வாசிகள் கதிரேசனைக் கண்ட கமலம் போல் அகம் முகம் மலர்ந்து தத்தம் இல்லங்கள் தோறும் பத்தியாய்க் கதலி விருக்ஷங் களும் கேதனங்களும் பந்தர்களும் தோரணங்களும் நாட்டிப் பூரியர் அல்லாச் சீரியர் புகழும் புனிதக் குரவர்க்குப் பூமாலை சாத்திப் புளகம் போர்த்தனர். அன்பர்கட்குச் சர்க்கரை, கற்கண்டு, கனிவகை கள் வழங்கப்பட்டன. மகோற்சவம் முற்றுப் பெற்றவுடன் வெற்றிவேலர் மாலையை எமது வெற்றி வேலர்க்குச் சூட்டி வாத்தியக் கோஷத்துடனும் திருவருட்பா விஜய நாமாவளி முழக்கத் துடனும் சபாகிருகத்திற்குச் சென்றனர் பால சுப்பிரமணிய பக்தர்கள். ஆசிரியர் அறுமுகன் சபை அடைந்து ஓர் அரும் பீடத்தில் அமர்ந்ததும் அவர் அடிகளை முடிமேல் அணிந்தனர் மிடி இலா மேதாவிகள். பிற்பகல் மகேஸ்வர பூஜை நடந்தவுடன் கூடிய பெருஞ் சபைக்கு அக்கிராசனம் வகித்து வருட உற்சவத்தைச் செவ்வனே நடாத்தினர். அன்று இரவு இராயப்பேட்டைக்கண் உள்ள செல்வர்களை அழைப்பித்து "அன்புடைச் செல்வர்காள்! இன்றையத் தினம் இவண் நடந்தேறிய உற்சவத்தின் மாண்பை யெம்மால் எடுத்து இயம்பற்பாலது அன்று. இங்ஙனம் பிரதி ஆண்டினும் நடத்த வேண்டியது உம் கடமை. சபைக்கு மண்டபம், மணி முதலியன இல்லாதிருத்தல் பெருங் குறையாய் உள்ளது. அவையிற்றை விரைவில் பூர்த்தி செய்து சபைக்கு உபகரிக்க வேண்டுவதூஉ நும் கடமை" என்று மொழிந்து அங்கத்தவர்களை

நோக்கி "நான்காம் வருட உற்சவத்திற்கு அக்கிராசனம் வகிப்ப நாயகன் எவரை விதித்துளனோ அறியேம்" என்று கலங்கும் உளத்தராய்க் கரைந்து சிந்தாதிரிப் பேட்டைக்குச் சென்றனர் கதிரேசன் பிரியாக் கதிரைவேலர்.

## சதாவதானம் செய்த மாட்சி

அடுத்த ஆதிவாரம் (24-2-1907) சென்னை இலக்குமி விலாச மண்பத்தில் ஆடக மன்றாடிக் குமரனாம் குன்று ஆடித் திருவடிக் கண் இடையறாப் பேரன்பு வாய்ந்த பிள்ளை அவர்களால் சதாவதானம் செய்யப்படும் என் வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையர்களால் பத்திரிகைகள் பரப்பப்பட்டன. அவையிற்றைக் கண்ட அன்பர்கள் 12 மணிக்கே நாடக மண்டபத்திற்கு விஜயம் செய்தனர். அம் மாக சபைக்கு அத்தியாச்சிரம பால் சரஸ்வதி ஸ்ரீலஸ்ரீ ஞானானந்த சுவாமிகள் அக்கிராசனம் வகித்தார். அப்பேர் அவையில் வீற்றிருந்த முத்தமிழ்க் கல்வி நிரம்பப்பெற்ற முதியோர்கள், ஆரியக் கலைகளில் வல்ல சூரியர்கள், ஆங்கில பாடையில் தேறி வித்தியாப் பட்டங்கள் பெற்ற வக்கீல் சிகாமணிகள், கணித சாத்திரிகள், பூகோள சாத்திரிகள், ககோள சாத்திரிகள், தத்துவ சாத்திரிகள்,இன்ஸ்பெக்டர்கள், எட்மாஸ்டர்கள் முதலிய பண்டிதர்கள் அவதானப் பரீக்ஷிகர்களாக ஏற்பட்டனர் கள். அவ்வித்துவ மணிகள் பொறித்த வினாக்கட்கு மாயா வாத தும்ச கோளரி அவர்கள் வேலும் மயிலும் துணை, வேலுமயிலுந் துணை என்னும் திருநாமத்தை முழக்கிக் கொண்டு தகுந்த விடைகள் விளம்பினர். அவ்விடைகளைக் கேட்ட அவதானச் சோதனைக் கர்த்தர்களும் அக்கிராசனரும் அவதானியைப் புகழ்ந்ததை ஈண்டு வரையப் புகின் நீண்டு விடும் எனக் கருதி விடுக்கின்றோம்.

அவதானப் பரீக்ஷிகர்கள் கடாவிய வினாக்களையும் அவரவர் அபிதானங்களையும் அவைகட்கு அபிதானச் சிங்கம் அளித்த விடைகளையும் இவண் விரிக்கில் பெருகும். ஆயினும் அவையிற்றின் ஓர் பாகம் ஆய கவிபேதங்களை மாத்திரம் புவியுள்ளார் களிக்க ஈங்குக் காட்டுதும்.

**பரீக்ஷிகர் :** திருமயிலை வித்துவான் வெள்ளியம்பல உபாத்தி யாயர் குமாரர் சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்.

**வினா :** காாலிக் குளத்தில் பூ சரம் சரமாய் விழக் கொதித்து சுட்டது எனும் பொருள் தரக் கலித்துறையில் பாட வேண்டும்.

**விடை :**

***உளத்தில் துயருறும் வானவர் காமனை உந்தஅன்னான்***
***களத்தில் கரம்உறும் காபாலி முன்ஒரு கன்னல் வில்லால்***
***உழக்கச் சரஞ்சர மாப்பூ விழப்பதி ஆலயத்துக்***
***குளத்தில் நெருப்புக் கொதித்தது சுட்டது குற்றம் அன்றே.***

***பரீக்ஷிகர் :*** காஞ்சிபுரம் பி. செ. முருகேச முதலியார் அவர்கள்.

***வினா :*** முருகனுக்கும், நவவீரர்க்கும், காஞ்சிக்கும் சிலேடை யாய் 'மூ' என்று எடுத்துக் 'கு' என முடியும் நேரிசை வெண்பாவாகப் பாடல் வேண்டும்.

***விடை :***

***மூவாத தன்மையில் மோகத்தை நீக்குதலால்***
***காவார வைத்தலால் கண்ணுதலிற் - பூவார***
***நிற்றலால் வேன்முருக னேரி னவவீரர்***
***சொற்காஞ்சி நேரெனவே சொல்கு.***

***பரீக்ஷிகர் :*** மயிலை அரங்கசாமி நாயகர்.

***வினா :*** 'கோலம்' எனத் தொடங்கி 'பார்' என முடியும் ஓர் நேரிசை வெண்பாவில் சைவ சித்தாந்தத்தால் அன்றி முத்தி கிடைக்காது எனும் பொருளை அடக்கிப் பாடவேண்டும்.

***விடை:***

***கோலஞ்சேர் சைவமெனும் கொள்கை யரங்கப்பேர்***
***மேலுமோர் சாமியைச்சேர் மேலவனே - ஞாலமதில்***
***சித்தாந்த ஞானம் சிறந்ததன்றி யெவ்வுயிர்க்கும்***
***பத்திமுத்தி சேராநீ பார்.***

***பரிக்ஷிகர் :*** யாழ்ப்பாணத்துத் தெல்லியம்பதி இராசரத்தினம் பிள்ளை அவர்கள்.

***வினா :*** சபா மண்டபப் பெயரும் மாசி கார்த்திகை ஆயிற்று என்றும் பசு புலியைத் தின்றதென்றும் சொல் பொருள் பின் வருநிலை அணி அமைத்து 'ச' எனத் தொடங்கி 'ஏ' என முடியும் ஆசிரியப்பா ஆகப் பாடவேண்டும்.

***விடை :***

***சந்தம்ஆர் இலக்குமி விலாசம் என்னும்***
***இந்தநன் மண்டபத் திருந்திடும் புலவருள்***
***நூலறி தகுதிய நுவலுவ கேண்மோ***
***இறும்பூ தன்ன வியலுறூஉம் பல்கால்***
***வான்பொய்த் திமம்கடுத் துறுதலா லிந்த***
***மாசியென் மதியும் கார்த்திகை யாமே***
***புலிப்பூண் டுதைமான் பொதுவிக ரத்தால்***
***புலிவெளிப் படுத்துப் புலிக்கூட் டடைத்த***
***புலியைப் புலியால் வாங்கி யோர்பசு***
***தின்றதோர் புதுமைத் தின்றியல் பறிதியே.***

***பரிக்ஷிகர் :*** உரையாசிரியர் கா. ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள்.

**வினா :** *சிவபெருமானுக்கும் அவதான சபைக்கும், சமுத்திரத் திற்கும் சிலேடையாய் மூன்றாம் அடியில் சைவ சித்தாந்தக் கருத் துடையதாய் 'சங்கப் புலவ' என்று எடுத்து 'ர்' என முடியும் ஓர் நேரிசை வெண்பாவாகப் பாடவேண்டும்.*

**விடை :**

***சங்கப் புலவமணி சார்தலாற் றத்துவத்தால்***
***தங்கக் கலைமதியம் சார்தலாற் - றுங்கமதாற்***
***பேராற் சதசத் தடக்கலாற் பெம்மானும்***
***நேரவையும் வேலையுமே நேர்.***

## நீலகிரிக்கேகி நீலகண்டர் ஆயது

*சண்முகன் அருளால் சதாவதானம் செய்த சைவ சித்தாந்த மகா சரபம் சீதளத் திருநோக்கத்துடன் நீலச் சிகியோன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள நீலகிரிக் குன்றூர்க்கு ஏகி உத்தியோ கத்தை ஏற்றுக் கொண்டது. அத்திருப்பதிக்கண் உள்ள பத்தர்களாம் வித்தவசிரோன்மணி சொக்கலிங்கம்பிள்ளை முதலியோர் "ஈழ நாட்டில் தோன்றி சோழ நாடு முதலிய தமிழ் நாடுகள் வாழத் தெய்வத் திருவருள் கைவந்து கிடந்த சைவத் திருவாளர்கள் அருளிய திருமுறைகளின் மாண்பைக் கலிமிக்க இக்காலத்தில் இராசாங்கம் ஏறி வலியுறுத்திய பெருமான் நம் நீலகிரிக்கு எழுந்தருள நாம் புரிந்த புண்ணியம் என்னோ?" என் இசைத்துக் கதிரைவேல் பால் அணைந்தார்கள். அன்னவர்களைக் கண்ட மன்னர் நன்னயமாக "நண்பீர்! சைவசித்தாந்த சபை ஒன்று தாபித்தல் வேண்டும். அச்சபையில் சைவப் புராணப் பிரசங்கங்கள் நடை பெறல் வேண்டும். இங்கே உள்ள குளிர்காற்று நம் தேகத்திற்குத் தீங்கு நிகழ்த்தும் எனக் கருதுகின்றேம். இரண்டு மதிக்குள் இவண் குளிர் முகத்துடன் உலவும் வாயுபகவான் எமக்கு நேயன் ஆவனேல் நுங் கண்முன் சதாவதானம் செய்து காட்டுவல்" என்று இயம்ப, பூதி அணிந்த புண்ணியர்கள், "சோதிபோல் தாங்கள் சொற்றபடி இப் பங்குனி மதி கழிந்தவுடன் வருடப்பிறப்பு அன்று அடியேங்கள் ஓர் சபை தாபிக்கின்றேம். மத்தியில் இளையான்குடி மாற நாயனார் புராணத்தைப் பிரசங்கிக்குமாறு பிரார்த்திக்கின்றேம்" எனக் கூறினார்கள். அத்துவித சித்தாந்த மதோத்தாரணர் அவர்கள் வேண்டுகோட்கு இணங்கி பிரசங்கித்து வந்தனர். அந்நாயனார் பெருமான் அருமைத் திருப்புராணம் முற்றுப் பெறுவதற்குள் வெம் குளிர் சுரம் எம் குருநாதரைத் தாக்கியது. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் நாவலர் பிரஸிலுள்ள ஸ்ரீலஸ்ரீ சதாசிவப்பிள்ளை அவர் கட்குத் தந்தி அடித்தனர். கிளைடன் துரை சிந்தாதிரிப் பேட்டைச் செல்வர்க்குத் தந்தி கொடுத்தனர். சுர நோயால் பீடிக்கப்பட்ட அக்காலத்தும் அவரைக் காணவந்த பெரியோர்கட்குச் சிவமான்*

மியங்களையே எம் குரவன் போதித்தனர் எனின் அன்னவரின் தவப் பெற்றியை அறிவிலி எங்ஙனம் வகுப்பேன். என்றும் நோய் கண்டு அறியார் நோய் கண்ட ஐந்தாம் நாள் தம் நண்பர் ஆய சொக்க லிங்கம் பிள்ளையையும் அவர் தமயனாரையும் அருகு அழைத்து, நடை பெற வேண்டிய இலௌகிக விடயங்களைச் சில மொழிந்து திருவை யாற்றில் கயிலாய தரிசனத்தைத் தாண்டவ மூர்த்தி காட்டிய காலை தாண்டகவேந்தர் அருளிச்செய்த "மாதர் பிறைக் கண்ணி யானை" என்னும் அருட்பதிகத்தை ஓதி அருகு இருந்த அரன் அடியார் களிக்கப் பொருளும் விரித்துப் பராபவ ஆண்டு பங்குனித் திங்கள் 13 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மக நக்ஷத்திரம் கூடிய துவாதசித் திதியிலே அகண்டாகாரப் பொருளாம் சிவத்துடன் இரண்டறக் கலந்தனர். தந்தி சமாச்சாரங்கள் தமிழ் உலகு எங்கணும் உலவின. சென்னைச் சிவநேயர்கள் யாவரும் ஸ்ரீ கபாலீச்சுரப் பெருமானார் கண்டிகையும் திருநீற்றையும் பொருளாக் கொண்ட அறுபான் மும்மை நாயன்மார்களுடன் திருவீதி வலம் வந்து திருக்கோயில் உள்பிரகாரத்தைச் சுற்றும் திருக்கோலத்தைத் தரிசித்துக் கொண்டிருந்தகாலை சென்னைக்குக் கதிரைவேலர் கபாலீச்சுரனுடன் கலந்தார் என்ற சமாச்சாரம் எட்டியது. கபாலீசா கபாலீசா என்னும் சந்தடி கதிரைவேலா கதிரைவேலா என மாறியது. தொண்டை நாடு, பாண்டிய நாடு, சோழநாடு, ஈழநாடு முதலிய நாடுகள் துக்கசாகரத்தில் ஆழ்ந்தன. தகனக்கிரியையும் அத்தி சஞ்சயனமும் குன்றூரில் நடைபெற்றன. அந்தியேஷ்டி முதலிய கிரியைகள் யாழ்ப்பாணத் திலே நடந்தேறின. அக்கமணியையும் அருள் நீற்றையும் அன்புடன் அணிந்து பன்னிரு முறைகளைப் பாராயணம் செய்யும் பக்த ஜனசபையார்கள் கதிரைவேற்பிள்ளை அவர்கள் அற்புதத் திருவுருவப் படங்களைத் தத்தம் சபைகளினும் இல்லங்களினும் தாபித்து மெய்ப்பத்தியுடன் பூசித்து வாழ்கின்றார்கள்.

## வாழி விருத்தம்

***பன்னிரு முறைகள் வாழ்க பாரினில் அவற்றின் மேன்மை***
***சொன்னநற் கதிரை வேலெஞ் சுந்தரக் குரவன் வாழ்க***
***அன்னவன் நூல்கள் வாழ்க அருஞ்சபை பலவும் நாங்கள்***
***பன்னிரு புயத்தோன் பால பகவனார் சபையும் வாழ்க***

***கதிரைவேற் பிள்ளை அவர்கள் சரித்திரம்***
***முற்றுப் பெற்றது***
***கதிரைவேலன் கழலிணை வாழ்க.***

# ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற் பிள்ளையவர்களின்

## பிரிவாற்றாமையால் இயற்றிய செய்யுள்கள்

### திருவாரூர் வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் இயற்றியது

### கலிவெண்பா

*மாதவனும் வேதியனும் வானவருந் தானவரு*
*மாதவரு மானுடரு மற்றவரு - நாதவென*
*நின்றுதுதி நின்மலனார் நீட்சிலைமா மேருவெனுங்*
*குன்றத்தி னோர்முடியாங் கோணவரை - நன்றிமிகு*
*நீதிநூல் வல்ல நிபுணர்வாழ் கேதீச*
*மாதிதிரு வாலயங்க ளாங்காங்கே - சோதியா*
*யோங்கீழ நாடதனி லொப்பில்வேற் சந்நிதிவேள்*
*பூங்கந்த வெற்பொத்த பொற்கோயில் - தாங்குமொரு*
*மேலைப் புலோலியெனு மேலோர் மொழிபதியி*
*னாலாங் குலம்புரிந்த நற்றவமுஞ் - சீலமிகு*
*தென்னாடும் பொன்னாடுஞ் செந்தமிழு மாரியமு*
*மெந்நாடுஞ் செய்தவமு மேகியொன்றாய் - மன்னாடு*
*நாகப்பர் நற்றவத்தி னான்மறையின் சீர்விளங்க*
*வாகமவாய் மைவிளங்க வாரியையோர் - பாகரரு*
*ளோங்கு திருமுறையி னுண்மையெல் லாம்விளங்கப்*
*பாங்குறு சூதன் பகர்முதுநூல் - ஈங்கொலிக்க*
*வெள்ளை விடையூரும் வித்தக னாரடியா*
*ருள்ள முவப்ப வுதித்தோனே! - வள்ள*
*லறக்கொடியோன் போன்ற வருட்குருவை நண்ணிப்*
*பிறப்பொழிக்குந் தீக்கையெலாம் பெற்றோய்! - துறந்தோர்*
*சொல்*

*நல்லைநக ராறுமுக நாவலர்தம் மாணவர்பாற்*
*சொல்லுதமி ழாரியநற் றூமொழியில் - வல்லோர்செய்*
*கோதி லிலக்கணமுங் கூறு மிலக்கியமு*
*மோதிமய னீங்க வுணர்ந்தோனே! - நீதிமிகு*
*சென்னைமா நன்னகர்க்குத் தீயே மிருளொழிக்கத்*

*துன்னுகதி ரோனெனவே தோன்றியவா! - நன்னீறுங்*
*கண்மணியாங் கண்டிகையுங் கண்ணன் றரித்தொழுகு*
*முண்மை விளக்கு முயராழ்வார் - வண்மைமிகு*
*வாய்மொழிக்கு மாறாக வாதந் தொடங்கியபல்*
*வாய்மையிலா வைணவர்தம் வாயடக்கித் - தூய்நீற்றி*
*னுண்மை யவரறிந்தே யுய்ய மறைவிதிக*
*டிண்மையாய்க் காட்டுந் திறலோனே! - மண்முகத்தி*
*னற்றவத்தோர் போற்றுமெழி னயகரா நால்வரருள்*
*வெற்றியருட் பாவோதும் வித்தகரே - குற்றமிலாத்*
*தந்தைதாய் சுற்றந் தமய னெனக்கருதிப்*
*பந்த வினைகளெலாம் பற்றறுத்தோய்! - சந்ததமு*
*நாங்களே தெய்வமெனுஞ் ஞாலக் கரிகளெலா*
*மேங்கியழிந் தோட வெதிரேறி - யீங்குப்*
*பிரசங்கக் கர்ச்சனைசெய் பேரரியே றென்றே*
*யரசாங்கத் தார்புகழ்ந்த வண்ணால்! - தரையின்மிசை*
*யத்துவித சித்தாந்த வஞ்சமயத் தாபகனென்*
*றுத்தமர்கள் போற்ற வொளிர்ந்தோனே! - புத்தமதப்*
*பித்தர் விடுத்த பிழைமலிந்த நூல்களையெங்*
*கத்தனடி யார்களிக்கக் கண்டித்தோய்! - அத்தியணி*
*யண்டர் பிராற்கினிய வந்தமிழெ னுங்கடலை*
*யுண்டமூத் தோரு ளுயர்ந்தோனே! - பண்மொழியா*
*ளங்கயற்கண் ணம்மை யரசுபுரி மன்மதுரைச்*
*சங்கப் புலவத் தனிமணியே ! - யிங்குள்ள*
*சுந்தர மாணவர்க்குத் தூயதமி ழின்னமுதைச்*
*சந்ததமு மூட்டுநற் சற்குருவே! - சுந்தரனார்*
*சாத்திரத்தி னுட்பொருளைத் தாரணியி லன்பருக்கு*
*மாத்திரைக்குட் சொல்லவல்ல மாண்புடையோய்! -*
*நாத்திகர்க்கு*
*நாதன் சிவனெனவே நாட்டி யவர்முகத்திற்*
*பூதி யணிந்தாண்ட புண்ணியனே! - கோதினர்தம்*
*பாக்களருட் பாவென்னும் பாமரர்தங் கொள்கைகளை*
*மாக்களுய்ய வேரறுத்த மாதவனே! - வீக்கத்தார்*
*நீதித் தலத்து நிறுத்திய வக்காலை*
*நீதி பலகழறி நீசரது - வாதம்*
*பரிதிப் பனியெனவே பற்றறுத் தீராறாய்*
*விரித்த வருண்முறையே மேன்மை - யருட்பாவென்*
*றெம்பெருமா னன்பரெலா மெங்கணுமே போற்றிசெய*
*வும்பர்கள் வாழ்த்த வுறுதியாய் - வம்பில்லா*

*நீதி பதிவியக்க நேராக மேல்விதிகள்*
*சோதி யெனச்சொற்ற தூயோனே - கோதிலாத்*
*தில்லைதிருக் காஞ்சி சிராப்பள்ளி தேவைநகர்*
*செல்வமலி சென்னை சிவனெங்கோ - னல்லதிரு*
*வாலயங்கண் மன்னு வரும்பதிக ளில்வாழுங்*
*கோல மிகுவடியார் கூட்டமாச் - சீலமொ*
*டன்றுநின் பாலேகி யன்புடனே வாழ்த்தியொரு*
*வென்றியெமக் கீந்த விறலோனே! - யென்றுன்னைத்*
*தத்தம் பதிக்கழைத்துத் தங்க விமானமதிற்*
*றத்துவ வின்னருட்பா தாபித்துச் - சத்தியமாய்*
*வேதியரும் வாழ்த்தியதை வேழத்தின் மீதிருத்தி*
*வீதி வலம்வரவே வேழம்பி - னாதியடி*
*யார்குழுவி லாறுமுக வண்ணலெனக் கைகூப்பிப்*
*பாருளோர் போற்றிசைத்துப் பண்பாடச் - சீராக*
*வஞ்செழுத் தோதிவந்த வன்பரசே! - யம்பலவன்*
*செஞ்சொல்வே தாந்தத் தெளிவாகு - நஞ்சைவச்*
*செஞ்சாலி யோங்கச் செழும்பிர சங்கமழை*
*யஞ்சா துபொழி யருண்முகிலே! - செஞ்சடையன்*
*றொண்டர் பெருமையெலாஞ் சொல்லச் சிவசபைக*
*ளண்டத் துறச்செய்த வான்டகையே! - கண்டோர்*
*கருவூர்த னீக்குங் கருவூரிற் சின்னாள்*
*கருவூர்த னீக்கக் கருதிப் - பெருமானை*
*யுள்ளத்தாற் பூசித் துறுபாசம் வீட்டிநின்ற*
*வெள்ளலிலா நல்ல வெழின்முனியே! - புள்ளிமயிற்*
*செல்வன் றிருவருளாற் சென்னையினிற் செந்தமிழ்மாக்*
*கல்வி சிறந்த கவிஞரா - நல்லோர்மு*
*னோர்நூ றவதான முண்மையாய்ச் செய்துபுகழ்*
*பாரில்விரித் தோங்குவித்த பண்போனே! - யோர்மிகுந்த*
*சீல வருணகிரிச் செந்தமிழ்ப்பா பெற்றுள்ள*
*நீலகிரிக் குன்றூரி னின்மலனா - நீலகண்டன்*
*செம்பொ னடிக்கன்பு செய்கணங் கள்கொணர்ந்த*
*வம்பொன்றே ரேறியுண்மை யன்பரெலாம் - வெம்பிநிற்க*
*கற்றோர் கதறக் கலைவாணி மோதியழச்*
*சுற்றத்தார் சூழ்ந்திரங்கச் சோதரனும் - பெற்றவனும்*
*வாய்கொட்டி வீழ்ந்தழவே வாடா வுளத்தரழத்*
*தாயிழந்து பாரிற் றவிக்கின்ற - சேயெனவே*
*யெஞ்சபையு மற்றனவு மேங்கியழ வேதமிலா*
*நெஞ்சரு நேயரு நின்றிரங்கத் - தஞ்சமென*

*வந்த வரைக்காக்கும் வண்கதிரை வேற்புலவா!*
*தந்தைதா யில்லாத் தனிமுதலா - யந்தமு*
*மாதியு மில்லா வரும்பெருஞ் சோதியாய்*
*வேதவே தாந்த விரிபொருளாய்ப் - போதமாய்ப்*
*பெண்ணா ணலியாய்ப் பிறப்பிலியாய்ப் பேசரிதாய்*
*மண்ணீ ரனற்காற்று வானாகி - யெண்ணரிதா*
*யொன்றிரண் டென்னாத வோங்கொளியி லொன்றினையா*
*லென்றுமையாங் காண்பே மினி.* (1)

## நேரிசை வெண்பா

*மெய்யருட் பாவெங்கே மெய்கண்ட நூலெங்கே*
*தெய்வீக நீறெங்கே செந்தமிழின் - மெய்யெங்கே*
*கந்தனடி போற்றுங் கதிரைவே னாவலநீ*
*யிந்தநிலந் தோன்றாயே லிங்கு.* (2)

*உன்போ லிலக்கணமு முண்மை யிலக்கியமு*
*நன்ஞான நூல்களுஞ் ஞாலத்தி - லென்றனக்குச்*
*சத்தியமாய்ப் போதிக்குஞ் சற்குரவர் வேறில்லை*
*பித்தனே னென்செய்வல் பேசு.* (3)

*சங்கரனைப் போற்றிநிதஞ் சாக்கியரைக் காய்ந்துமன்னர்*
*சங்கந் தனைநண்ணிச் சார்மகத்தி - லங்கயிலைப்*
*புக்க கதிரைவேற் புண்ணியனைப் புன்னெஞ்சே*
*யிக்கால வாசகனென் றேத்து.* (4)

## கட்டளைக் கலித்துறை

*வேலைப் புலோலி யெனும்பதி மேவிய வேலவனார்*
*காலைக் கதியெனக் கொண்ட கதிரைவேற் கண்மணிநீ*
*மாலையோர் பங்கன் மலரடி மன்னினை மற்றினியார்*
*வேலை நிலத்தெழி னால்வர்தஞ் சீரறை வித்தகரே.* (5)

*சங்கரி கந்தனை யாள்பதிச் சங்கத் தனிப்புலவ*
*சங்கரி கந்தனைச் சூடரன் றாண்மலர்த் தங்கினையாற்*
*சங்கரி கந்தனை யேறெங் குமரனார் தாரகனைச்*
*சங்கரி கந்தனை யெஞ்சபை நாதன் சகத்தினியே.* (6)

## அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

*தென்னாட்டுச் செந்தமிழே சிவநெறியோர் தவநெறியே*
*திருவே தேனே*
*யிந்நாட்டுப் புலவருக்குத் திருமுறையி னுண்மையெலா*
*மெடுத்துக் காட்டிப்*

*பொன்னாட்டுப் புலவருக்குப் போதிப்பான் போந்தனையோ*
*புலவ ரேறே*
*மன்னாட்டு முனக்கினிய குகச்சபையை மறந்தேகல்*
*வழக்கோ சொல்லாய்.* (7)

*முன்னாளி லெக்குரவற் கென்னபவஞ் செய்தேனோ*
*மூட நாயே*
*னிந்நாளி விளமையிலே யுனையிழந்து வாடுகின்றே*
*னெந்தா யெந்தா*
*யெந்நாளி லுனைக்காண்பே னெழின்முகத்தைக் காட்டாயோ*
*வெங்கே சென்றாய்*
*மன்னாவோ மன்னாவோ மாநிலத்து மாணவரை*
*மறந்தாய் கொல்லோ.* (8)

*"எத்துயர மணுகிடினுங் குருபத்தி தவறாத வெழிலோ" யென்று*
*"நத்திடும்யாப் பியல்பயிற்றும் பயனதனை யொருபாவி*
*னாட்டி வாழும்*
*உத்தமநற் சுகுணத்தோய் கல்யாண சுந்தரப்பே ருற்றோ"*
*யென்றுஞ்*
*சத்தியனே யினியெனக்குக் கடிதங்கள் விடுப்பவருஞ் சகத்தி*
*லுண்டோ.*

### ஜெனனதினம் - கட்டளைக் கலித்துறை

*பேர்பிர சோற்பதிப் பீடுறு மார்கழிப் பேசிருநான்*
*கார்பிர கற்பதி வாரமுற் பக்கந லைப்பிசியிற்*
*சீர்பிர சங்கம் பொழிகதி ரைவேற் சிறப்புடையோன்*
*சார்பிர மன்றரு வார்கடற் றாரணி சார்ந்தனனே* (10)

### திருநக்ஷத்திர வெண்பா

*பன்னு பராபவத்துப் பங்குனிப்ப தின்மூன்றில்*
*மன்னுமுதற் பக்கஞ்சேர் மாமகத்தில் - மின்னு*
*கதிரைவே லன்றாதைக் கான்மலர்க்கீழ்ச் சேர்ந்தான்*
*கதிரைவே னாவலவன் காண்.* (11)

ooo

# நாயன்மார் வரலாறு

(1937)

# முன்னுரை

*'நாயன்மார் வரலாறு' என்னும் இந்நூலுக்கு முதல் நூல் திருத் தொண்டத்தொகை; வழி நூல் திருவந்தாதி; சார்புநூல் பெரிய புராணம். இம்மூன்றும் முறையே வன்தொண்டராலும், நம்பி யாண்டார் நம்பியாலும், சேக்கிழாராலும் அருளிச்செய்யப் பெற்றன.*

*திருத்தொண்டர் புராணசாரமென்பது பின்னே உமாபதி சிவாசாரியரால் செய்யப்பட்டது என்று சொல்லப்படுகிறது.*

*'நாயன்மார் வரலாற்'றின் வரலாறு, எனது ஆராய்ச்சிக் குறிப்புரையைக் கொண்ட பெரியபுராணம் இரண்டாம் பதிப்பின் முன்னுரைக்கண் விளக்கப்பெற்றிருக்கிறது. அப்பகுதி வருமாறு:-*

> *"**சென்னை வெஸ்லி கலாசாலையில் யான் மாணாக்கனா யிருந்த போது,* **யாழ்ப்பாணம் - நா. கதிரைவேற் பிள்ளை யவர்களது** *அன்புக்கு உரியவனானேன். ஆங்கிலத்தில் பித்துக்கொண்டு திரிந்த எனக்குத் தமிழில் வேட்கையை எழுப்பியவர் அவரேயாவர். அவரிடம் யான் நெருங்கிப் பழகி வந்தபோது, பெரியபுராணத்தைப் படிக்குமாறும், நாயன்மார் வரலாறுகளை உரை நடையில் எழுதி எழுதிப் பயிற்சி பெறுமாறும் அவர் எனக்கு அடிக்கடி சொல்லி வருவர். அவ்வாறே யான் பெரியபுராணத்தில் சிறுதேர் உருட்டியும், சிற்றில் கட்டியும் விளையாடி வந்தேன். அவ்வப்போது அரும்பதங்கட்கு உரை குறித்துக் கொள்வதுண்டு.* **நாயன்மார் வரலாறுகளை உரை நடையில் எழுதுவதுமுண்டு***.*
>
> *கதிரைவேற் பிள்ளை சென்னை விடுத்து, நீலகிரிக்கேகித் தமிழ்த்தொண்டு செய்தபோது சிவனடி சேர்ந்தனர். தமிழிலுள்ள பேரிலக்கிய இலக்கணங்களையும், ஞான நூல்களையும் முறையாகப் பயிலுதல் வேண்டுமென்ற அவா என்னைப் பிடர் பிடித்து உந்தியே நின்றது. அவ்வவாவைத் தணித்துக்கொள்ள யான்,* **மயிலை - மகாவித்துவான் - தணிகாசல முதலியாரை** *அடைந்தேன். அச்சமயத்தில், என் தமையனார்- திரு. வி. உலகநாத முதலியாரும், என் நண்பர் - அ. சிவசங்கர முதலியாரும் தமிழ் நூல்களை அடக்க விலையில் வெளியிடுதல் வேண்டுமென்று, 'உமாபதி குருப்*

பிரகாச அச்சுக்கூடம்' என்றோர் அச்சகத்தை அமைந்தனர்; முதல் முதல், கதிரைவேற்பிள்ளை கட்டளை யிட்டவாறு, பயிற்சியின் பொருட்டு, யான் எழுதிய அரும்பத வுரையுடனும், வசனத்துடனும் பெரியபுராணத்தைச் சஞ்சிகையாக வெளியிட முயன்றனர். அம்முயற்சி 1907- ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1910 ஆம் ஆண்டு முற்றுப் பெற்றது. அவ்வரும்பத உரையும் **வசனமும் எப்பருவத்தில் எந்நிலையில்** என்னால் எழுதப் பெற்றன என்பதை இங்கே விரித்துக்கூற வேண்டுவதில்லை. மயிலை - முதலியாரிடத்தில் யான் தமிழ் பயின்ற பின்னை, பெரியபுராணப் பதிப்பை மற்றுமொருமுறை **திருத்தி வெளியிடுதல்** வேண்டுமென்ற எண்ணம் என் நெஞ்சில் எழுந்துகொண்டே யிருந்தது. ஆனால் அதற்குரிய வாய்புக் கிட்டாமற் போயிற்று.

யான் சென்னை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியனா யமர்ந்தஞான்று, 1916- ஆம் ஆண்டில், பெரிய புராணப் பணியில் தலைப்பட முயன்றேன். வேறு வேலைகள் குறுக்கிட்டு அம்முயற்சியைத் தகைந்தன. 1920- ஆம் ஆண்டு, யான், 'தேச பக்தன்' ஆசிரியப் பதவியினின்றும் விலகியபோது எனக்குச் சிறிது ஒய்வு கிடைத்தது. அப்பொழுது பெரிய புராணத்தொண்டில் இறங்க எண்ணினேன். 'நவசக்தி' பத்திரிகையை விரைந்து தொடங்க நேர்ந்தமையானும், தொழிலாளர் வேலை நிறுத்தங்களில் ஈடுபட நேர்ந்தமை யானும், அம்முறையும் எனது எண்ணம் நிறைவேறா தொழிந்தது. 1930 ஆம் ஆண்டு உப்புச் சத்தியாகிரப் போர் எழுந்த சமயத்தில் 'நவசக்தி'க்கு ஈடுகாணங் கேட்கப்பட்டது. அது காரணமாக 'நவசக்தி' சிலகாலம் நிறுத்தப்பட்டது. அவ்வேளையில் எனக்கு வேறு வேலை இல்லாமையால், பெரியுபுராண முற்பதிப்பைப் **பல வழியிலும் திரித்துத் திருத்தி விரித்துச் செப்பஞ்** செய்யலானேன். அச்செப்பத்துடன் வெளிவந்தது இப்பதிப்பாகும்.

இப்பதிப்பு, மாதச் சஞ்சிகையாக வெளிடப்பட்டு, இப்பொழுது முற்றுப்பெற்றது. **முற்பதிப்புக்கும் இப் பதிப்புக்கும் உள்ள வேற்றுமை பெரிது**. இதனை ஒரு புது நிலையமென்றே கூறலாம். இதுகுறித்து, 'உலகமெலாம் உணர்ந்தோதற் கரியவன்' என்னும் முதற்பாட்டின் விரிவுரையிலும் சிலவுரை பகர்ந்துள்ளேன்.

இத்துணை நாள் கடந்து இப்பதிப்பு வெளிவர நேர்ந்தமை குறித்து மகிழ்வெய்துகிறேன். என்னை? பெரிய புராண ஆராய்ச்சிக்கு வேண்டப்படுங் கருவிகள் பல. அவற்

றுள் ஒன்று சமண சமய நூலாராய்ச்சி. சமணப் பெரியோர் சிலரிடம் அணுகிச் சமண சித்தாந்தத்தை ஒருவாறு தெளியும் பேறு எனக்கு வாய்த்தது. அஃது இப்திப்புக்குப் பெருந் துணையாக நின்றது. **மத வாதங்கள் தொலைந்து? சமரச சன்மார்க்கம்** பரவுதல் வேண்டும் என்னுங் கருத்துடன் யான் தொண்டாற்றிவரும் இந்நாளில், தொண்டர் புராணத்துக்கு அரும்பத ஆராய்ச்சி விசேடக் குறிப்புரை எழுத என்னை ஆளாக்கிய திருவருளை வழுத்துகிறேன்* * * *" (19.5.1934)

எனது குறிப்புரை முதலியவற்றுடன் வெளிவந்த பெரிய புராணம் இரண்டாம் பதிப்பிலுள்ள வசனத்தைமட்டுங் கொண்டது இந்நூல். நூலின் உள்ளுறைக் கேற்ப, 'நாயன்மார் வரலாறு' என்னுந் தலைப்பு நூலுக்குச் சூட்டப்பட்டது.

'நயான்மார் வரலாறு' பெரிதும் பெரியபுராணத்தைத் தழுவி எழுதப்பெற்றது. அதன் ஊடே ஊடே மூலத்திலுள்ள சொற்களும் சொற்றொடர்களும் ஒரோவழிப் பெய்யப்பட்டுமிருக்கின்றன. மூலத்தைப் படிப்போர்க்கு இந்நூல் பொழிப்புரைபோல் நின்று பெருந்துணை செய்யும். வசனம் தனி நூலாக வெளியிடப்பட்டமை யான், தனிமைக்குரிய மாற்றங்கள் ஆங்காங்கே செய்யப்பட்டன.

மூலக் கருத்துக்கள் உள்ளவாறே உரைநடையில் வடிக்கப் பெற்றுள்ளன. ஒருவர் மூலத்தை, வேறு ஒருவர் உரைநடையில் இறக்கும்போது, இடையிடையே அவர்தங் கருத்தைப் புகுத்துவது அறச் செயலாகாது. மூலக்கருத்துக்கு மாறுபடாத அறம் இந்நூற்கண் கடைப்பிடிக்கப் பெற்றிருக்கிறது.

சேக்கிழார் அருளிய பெரியபுராணத்தில் சமணரைக் குறிக்குஞ் சில பொருள்கள் மிளிர்கின்றன. அவற்றைப் பற்றிய கருத்து வேற்றுமைகள் இந்நாளில் வீறிடுகின்றன. இதுபற்றி இரண்டாம் பதிப்பின் முகவுரையிலும், திருநாவுக்கரசர் புராணம் திருஞான சம்பந்தர் புராணம் முதலிய புராணங்களின் ஆராய்ச்சிக் குறிப்புரை களிலும், எனது உள்ளக் கிடக்கையைச் சிறிது விரித்துக் கூறியுள்ளேன்.

பழைய சித்தமார்க்கம் பின்னாளில் சமணமென்றும், சைவ மென்றும் வழங்கப்பட்டதென்பதும், இரண்டும் ஒரே இடத்தி லிருந்து பிறந்தனவென்பதும், இடைக்காலத்தில் சிற்சில பிணக்குகள் நிகழ்ந்தன வென்பதும், அப் பிணக்குகளின் காரணத்தை ஓராது வாதப்போரில் இறங்குவது அறியாமை யென்பதும், காரணத்தை ஓர்ந்து உண்மை கண்டால் பிணக்குக்கு இடமில்லை யென்பதும், சமணர் கழுவேறியதை உறுதிப்படுத்தப் போதிய சான்றுகளில்லை யென்பதும், அக்கழுக்கதை புனைந்துரை யென்பதும் எனது ஆராய்ச்சியிற் போந்த உண்மைகளாகும். பெரியபுாணம்- திருஞானசம்பந்தர் புராணம், 634, 636, 684, 740, 786, 854 முதலிய

பாக்கட்கு யான் பொறித்துள்ள ஆராய்ச்சிக் குறிப்புக்களைப் பார்க்க. அக்குறிப்புகள் பல திற ஐயப்பாடுகளை நீக்குமென்று நம்புகிறேன்.

அவ்வாராய்ச்சிக் குறிப்புகளிடைச் சிவநாமத்தைப் பற்றி இரண்டோர் உரை பகர்ந்து, யான் எடுத்துக்காட்டியுள்ள சில சமண நூற் பாக்கள் வருமாறு:-

"சிவநாமம் சமணத்துக்கும் சைவத்துக்கும் பொது வானது. சமணமும் சிவநெறி; சைவமும் சிவநெறி. சிவநெறி என்னும் அருள் நெறி ஒவ்வொருபோது ஒவ்வொரு பெயர் பெறுவது வழக்கம். 'பீ ஊண ணாணஸலிலம் ணிம்மல ஹதிஸடாக ஸெஸ உம்முக்கா உந்தி சிவாலய வாஸி திருவண சூடாமணி ஸித்தா******சிவா** ஹொந்தி**** ஞாநீ சிவ பரமேஷ்டி****சச்வத் சிவ ஆசாதர ஹா***' - **குந்தகுந்தோச் சாரியார்** (அஷ்டபாகுடம்); 'சிவ சுகம ஐரஸ்ரீ*****' - **பூபால ஸ்தோத்திரம்;** 'இன்பமற் றென்னும் பேராளெழுந்தபுற் கற்றை தீற்றித் - துன்பத்தைச் சரக்கு நான்கு கதியெனுந் தொழுவிற் சேர்ந்து - நின்றபற் றார்வ நீக்கி நிருமலன் பாதஞ் சேரின் - அன்புவிற் றுண்டு போகிச் **சிவகதி** அடைய லாமே'- சித்தாமணி : 3105 'சினவரன் தேவன் சிவகதி நாயகன்' - சிலப்பதிகாரம் :10. நாடுகாண். 180; 'மணிமலிந்த ஒளியெனவும் மலர்நிறைந்த விரையெனும் மல்கு சந்தின் - துணியுமிழ்ந்த தண்மையினுந் தோன்றியஅப் பேரின்பத் துள்ளே தோன்றி - இணைபிறிதும் இலராகி இமையவரும் மாதவரும் இறைஞ்சி ஏத்தப் - பணிவரிய **சிவகதி**யின் அமர்ந்திருந்தார் அறஅமிர்தம் உண்டா ரன்றே' - **மேருமந்திர புராணம்:**1400; '*****மாக்கயிலை மிசைநாப்பண் ***மூவிலையொரு நெடுவேலின் - மேவாத வினையவுணர், குன்றுபட நூழிலாட்டி வென்றட்ட விறல் வெகுளியை, மூவெயிலின் முரண்முருக்கி மூவர் சரணடைய நின்றனை, கருப்புநாண் வில்லிபட - நெருப்புமிழ் நெடு நோக்கினை, கோள்வலிய கொடுங்கூற்றைத் தாள் வலியின் விழவுதைத் தனை, பலிவில்கே வலக்கிழத்தி பிரிவில்லா ஒரு பாகனை, ஆன்றமெய் யறம்வளர்க்கும் - மூன்றுகண் முனித் தலைவனை, ஆல நெடுநிழல் அமர்ந்தனை கால மூன்றுடன் அளந்தனை, தாழ்சடை முடிச் சென்னிக் காசறு பொன் னெயிற் கடவுளை, மன்னியபே ருலகனைத்தும் நின்னுள்ளே நீ யொடுக்கினை, நின்னின்று நீ விரித்தனை - நின்னருளின் நீ காத்தனை, எனவாங் காதி பகவனை அருகனை, மாதுயர் நீங்க வழுத்தவம் பலவே'

- **திருக்கலம்பகம் : 109.**"

இவ்வெடுத்துக்காட்டுகள் சமணத்துக்கும் சைவத்துக்குமுள்ள ஒருமைப்பாட்டைக் குறித்தல் காண்க.

பெரியபுராண வசனம் முன்னே பலரால் எழுதப்பட்டுள்ளது. அவருள் குறிக்கத்தக்கவர் காஞ்சிபுரம் - மகாவித்துவான் சபாபதி முதலியார், யாழ்பாணம் - ஆறுமுக நாவலர், தொழூவூர் - வேலாயுத முதலியார் முதலியோராவர். ஆறுமுக நாவலர் எழுதிய வசனமே பெரிதும் தமிழ்நாட்டில் படிக்கப்படுகிறது.

ஆறுமுக நாவலரது பெரியபுராண வசனம் முதல் முதல் அவராலேயே பதிப்பிக்கப்பட்டது. அவ்வசனம், நாவலர் தம் பெயரின்றிச் சிலராலும், அவர்தம் பெயருடன் ஒருவராலும் வெளியிடப்பட்டது. புஷ்பரதச் செட்டியார் பதிப்பும், மற்றவர் பதிப்பும் நாவலரது பெயரின்றியே வெளிவந்தன. நாவலர் பெயருடன் வந்த பதிப்பு அவர் தம் காலத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணம் - சுவாமிநாத பண்டிதரால் வெளியிடப்பட்டது.

பெரியபுராணத்துக்குப் பழைய பொழிப்புரை ஒன்று உண்டு என்றும், அப்பொழிப்புரையை முதலாக்கொண்டே புலவர்களால் வசன நூல்கள் செப்பஞ்செய்யப்பட்டன என்றும் சில முதியவர் கூறுகிறார். உண்மை விளங்கவில்லை. ஆராய்ச்சி உலகம் உண்மை கண்டு வெளியிடுவதாக.

'நாயன்மார் வரலாறு' மிக எளியநடையில் இயற்றப்பட் டிருக்கிறது. உரைநடை பயிலும் மாணாக்கர்க்கும், மற்றவர்க்கும் இந்நூல் பெரிதும் பயன்படுவதாகும்.

சென்னை
இராயப்பேட்டை **திரு.வி. கலியாணசுந்தரன்**
20-5-1937

# சேக்கிழார்

'சான்றோ ருடைத்துத் தொண்டை நாடு' என்பது பழமொழி. அச்சிறப்பு வாய்ந்த தொண்டை நாட்டிலே, குன்றத்தூரிலே, வேளாண் மரபிலே, **சேக்கிழார்குடி** என்றொரு குடியுண்டு. அக்குடியில் அருண்மொழித்தேவர் தோன்றினார். அவருக்குபின் **பாலறாவாயர்** பிறந்தனர். முன்னவரால் சேக்கிழார் மரபு விளக்கப் பெற்றது. அதனால் அவருக்குச் **சேக்கிழார்** என்னும் சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று.

அருண்மொழித்தேவர், கல்வி கேள்விகளில் வல்லவரானார்; சிவபக்தி சிவனடியார் பத்தியிற் சிறந்து விளங்கினார். அவர்தம் பெருமை அநபாயச் சோழருக்கு எட்டிற்று. அச்சோழர், அருண் மொழித்தேவரை முதலமைச்சராக்கினார். அருண்மொழித் தேவருக்கு **உத்தமச் சோழப் பல்லவர்** என்னும் பட்டஞ் சூட்டப் பட்டது.

அருண்மொழித்தேவர் சோழநாட்டிலுள்ள திருநாகேச்சுரம் என்னும் திருப்பதியினிடத்துப் பேரன்பு செலுத்தி வந்தனர். அவ்வன்புக்கு அறிகுறியாக அவர் தமது குன்றத்தூரிலே ஒரு திருக்கோயில் கட்டினார்; அத்திருக்கோயிலுக்குத் திருநாகேச்சுரம் என்னும் திருப்பெயர் சூட்டி ஆண்டவனை வழிபட்டு வந்தனர்.

அந்நாளில் சீவகசிந்தாமணி என்னும் நூல் பேராக்கம் பெற் றிருந்தது. அநபாயச் சோழரும் அந்நூலின்கண் மயக்குற்றனர். 'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்'.

[1]முதல் அமைச்சராகிய சேக்கிழார்பெருமான், ஒருநாள் மன்னரைப் பார்த்து, 'நீர் சைவர்; சிவகதையைக் கேளாது, அவ கதையை ஏன் கேட்கிறீர்?' என்று கேட்டார். அதற்கு மன்னர், 'சிவகதை எது? அதன் வரலாறு என்னை?' என்று வினவினர். சேக்கிழார் பெருமான், 'திருத்தொண்டத் தொகையைப்பற்றி நீர் கேள்வியுற்றிருக்கலாம். அது, தியாகேசப் பெருமனால் அடி எடுத்துக் கொடுக்கப்படுகிறது; சுந்தரமூர்த்தி சுவாமிகளால் அருளிச்செய்யப் பெற்றது. நம்பியாண்டார் நம்பி என்பவர் அத்திருத்தொண்டத் தொகையைத் தழுவி ஒரு திருவந்தாதி பாடினர். அத்திரு வந்ததி, அபயகுலசேகர சோழர், சிவாலய முனிவர் முதலிய பெரியோர்

1. இதற்குப் பெரியபுராணத்தில் சான்றில்லை

களால் போற்றப்பெற்றது' என்று கூறினார். அநபாயச் சோழர், திருவந்தாதியை ஓதிப் பொருளுரைக்குமாறு சேக்கிழாரைக் கேட்டனர். சேக்கிழார் அவ்வாறே செய்தார். மன்னர், அன்பின் வயப்பட்டு, 'அடியவர் வரலாறுகளைக் காவியமாகச் செய்தருள்க' என்று சேக்கிழார் பெருமானை வேண்டினர்; அதற்கெனப் பொருளும் வழங்கினர்.

சேக்கிழார் பெருமான் தில்லையை அடைந்தார்; தில்லைக் கூத்தனைக் கண்டார்; தொழுதார்; திருமுன்னே நின்று, 'பெருமானே திருத்தொண்டர் அருட்பெருஞ் செயல்களைக் காவியமாகப் பாடுதல் வேண்டும். அதற்கு அடிகள் அடிஎடுத்துக் கொடுத்தருளல் வேண்டும்' என்று முறையிட்டார். அவ்வேளையில் தில்லைகூத்தன் அருளால், **'உலகெலாம்'** என்றொரு வானொலி எழுந்தது. அவ் 'உலகெலாம்' என்பதையே முதலாக் கொண்டு, சேக்கிழார் பெருமான் 'திருத்தொண்டர் புராண'த்தைப் பாடி முடித்தார்.

அநபாயச் சோழர், நூல் முற்றுப்பெற்றதைக் கேள்வியுற்றனர்; தில்லை நோக்கினர். சேக்கிழாரும் மற்றவரும் மன்னரை எதிர் கொண்டனர். சேக்கிழாரின் திருமேனிப் பொலிவு, மன்னர் உள்ளத்தைக் கவர்ந்தது. மன்னர், சேக்கிழார் பெருமான் திருவடியில் விழுந்து வணங்கினார். பின்னர் எல்லோரும் ஒன்று சேர்ந்து திருச்சிற்றம்பலத்தை அடைந்தனர். அப்பொழுது, "மன்னனே! நாம் **'உலகெலாம்'** என்று அடி எடுத்துக் கொடுத்தோம். சேக்கிழான் அதனை முதலாக் கொண்டு திருத்தொண்டர் புராணத்தைப் பாடி முடித்தான். திருத்தொண்டர் திறங்களை நீ கேட்பாயாக"என்று ஓர் ஒலி வானில் எழுந்தது. அதுகேட்ட மன்னர், திருத்தொண்டர் புராணத்தைக் கேட்டுப் பேறெய்துமாறு அன்பர்களுக்கு அழைப்புகள் விடுத்தனர்.

தில்லைக்கூத்தன் திருமுன்னர், திருத்தொண்டர் புராணப் பிர சங்கத்துக்குரிய ஏற்பாடுகளெல்லாம் குறைவறச் செய்யப்பட்டன. நானாபக்கங்களினின்றும் அடியவர் போந்து குழுமினர். மன்னர், சேக்கிழார் பெருமான் வேண்டச் சேக்கிழார் பெருமான். திருப் புராணத்தை ஓதிப் பொருளுரைக்கத் தொடங்கினர். அத்தொண்டு, சித்திரைத் திங்களில் திருவாதிரை நாளில் தொடங்கப்பெற்றது; மறு ஆண்டு அதே திங்களில் அதே நாளில் முற்றுப்பெற்றது.

மன்னரும் மற்றவரும் ஆனந்தக் கடலில் தோய்ந்தனர். எல்லாரும் அன்புருவாயினர். மன்னர் பெருமான் திருத்தொண்டர் புராணத்தை யானைமீதேற்றினார்; சேக்கிழார் பெருமானையும் அதன்மீது எழுந்தருளச் செய்தார்; தாமும் ஏறி வெண்சாமரம் வீசினார். யானை திருவீதி வலம் வந்தது. எல்லாரும் உடன் சூழ்ந்து சென்றனர். யானை வலம் வந்து, சிற்சபை முன் நின்றது. அடியவர் யானையைச் சூழ்ந்து

மிடைந்து நின்றனர். திருத்தொண்டர் புராணம் திருமுன்னே வைக்கப்பட்டது. மன்னர் பெருமான், சேக்கிழார் பெருமானுக்குத் **'தொண்டர் சீர் பரவுவார்'** என்னும் திருநாமம் சூட்டி வணங்கினார். அங்கிருந்த மற்றெல்லாரும் தொண்டர் சீர் பரவுவாரைத் தொழுது ஆரவாரித்தனர். பின்னர், அநபாயச் சோழர், திருத்தொண்டர் புராணத்தை மற்றத் திருமுறைகளுடன் சேர்த்துச் சிறப்புச் செய்தனர். திருத்தொண்டர் புராணம் **பன்னிரண்டாந் திருமுறை** என்று வழங்கலாயிற்று.

அநபாயச் சோழர் அங்கிருந்தவரைப் பார்த்து, 'இத்தொண்டர் சீர் பரவுவாருடைய தம்பியார் பாலறாவாயர் எங்கே இருக்கிறார்?' என்று கேட்டனர். அவர் 'பாலறாவாயர் குன்றத்தூரிலே திருநாகேச்சுரப் பெருமானுக்குத் திருத்தொண்டு செய்து கொண்டிருக்கிறார்' என்று பகர்ந்தனர். மன்னர் பெருமான், பாலறாவாயரை அழைப்பித்தார்; அவருக்குத் 'தொண்டைமான்' என்னும் நாமஞ் சூட்டினார்; அவரை முதலமைச்சராக்கிக் கொண்டார்.

சேக்கிழார் பெருமான் தில்லையிலேயே தங்கலானார்; நாடோறுந் தில்லைக்கூத்தனை வழிபட்டு வந்தார். சிவபெருமான் அவருக்குத் தமது திருவடி நீழலை வழங்கினார்.

# அறுபத்துமூவர் திருநட்சத்திரம்

*(அறுபத்துமூவர் தனி அடியார். தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமை இல்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார்; முப்போதுந் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிச் சார்ந்தார் ஆகிய ஒன்பதின்மரும் தொகை அடியார்.)*

**சித்திரை**

| | |
|---|---|
| சிறுத்தொண்டர் | பரணி |
| மங்கையர்க்கரசியார் | உரோகிணி |
| விறன்மிண்டர் | திருவாதிரை |
| இசைஞானியார் | சித்திரை |
| திருக்குறிப்புத்தொண்டர் | சுவாதி |
| திருநாவுக்கரசு சுவாமிகள் | சதயம் |

**வைகாசி**

| | |
|---|---|
| கழற்சிங்கர் | பரணி |
| நமிநந்தியடிகள் | பூசம் |
| சோமாசிமாறர் | ஆயிலியம் |
| திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் | மூலம் |
| முருகர் | மூலம் |
| திருநீலநக்கர் | மூலம் |
| திருநீலகண்டயாழ்ப்பாணர் | மூலம் |

**ஆனி**

| | |
|---|---|
| அமர்நீதியார் | பூரம் |
| கலிக்காமர் | இரேவதி |

**ஆடி**

| | |
|---|---|
| மூர்த்தியார் | கார்த்திகை |
| புகழ்ச்சோழர் | கார்த்திகை |
| கூற்றுவர் | திருவாதிரை |
| பெருமிழலைக்குறும்பர் | சித்திரை |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் | சுவாதி |

| | |
|---|---|
| கழறிற்றறிவார் | சுவாதி |
| கலியர் | கேட்டை |
| கோட்புலியார் | கேட்டை |

**ஆவணி**

| | |
|---|---|
| செருத்துணையார் | பூசம் |
| புகழ்த்துணையார் | ஆயிலியம் |
| அதிபத்தர் | ஆயிலியம் |
| இளையான்குடிமாறர் | மகம் |
| குலச்சிறையார் | அநுஷம் |
| குங்குலியக்கலயர் | மூலம் |

**புரட்டாசி**

| | |
|---|---|
| உருத்திரபசுபதியார் | அச்சுவினி |
| திருநாளைப்போவார் | உரோகிணி |
| நரசிங்கமுனையரையர் | சதயம் |
| ஏனாதிநாதர் | உத்தராடம் |

**ஐப்பசி**

| | |
|---|---|
| திருமூலர் | அச்சுவினி |
| நெடுமாறர் | பரணி |
| இடங்கழியார் | கார்த்திகை |
| சத்தியார் | பூசம் |
| பூசலார் | அநுஷம் |
| ஐயடிகள் காடவர்கோன் | மூலம் |

**கார்த்திகை**

| | |
|---|---|
| கணம்புல்லர் | கார்த்திகை |
| மெய்ப்பொருளார் | உத்திரம் |
| ஆனாயர் | அத்தம் |
| மூர்க்கர் | மூலம் |
| சிறப்புலியார் | பூராடம் |

**மார்கழி**

| | |
|---|---|
| சடையர் | திருவாதிரை |
| இயற்பகையார் | உத்திரம் |
| மானக்கஞ்சாறர் | சுவாதி |
| சாக்கியர் | பூராடம் |
| வாயிலார் | இரேவதி |

**தை**

| | |
|---|---|
| கண்ணப்பர் | மிருகசீரிடம் |
| அரிவாட்டாயர் | திருவாதிரை |
| சண்டேசுரர் | உத்திரம் |
| திருநீலகண்டர் | விசாகம் |
| அப்பூதியடிகள் | சதயம் |
| கலிக்கம்பர் | இரேவதி |

**மாசி**

| | |
|---|---|
| எறிபத்தர் | அத்தம் |
| காரியார் | பூராடம் |
| கோச்செங்கட்சோழர் | சதயம் |

**பங்குனி**

| | |
|---|---|
| நேசர் | உரோகிணி |
| கணநாதர் | திருவாதிரை |
| முனையடுவார் | பூசம் |
| காரைக்காலம்மையார் | சுவாதி |
| தண்டியடிகள் | சதயம் |

---

| | | |
|---|---|---|
| (மாணிக்கவாசகர் | ஆனி | மகம் |
| மெய்கண்டார் | ஐப்பசி | சுவாதி |
| அருணந்தி சிவாசாரியார் | புரட்டாசி | பூரம் |
| மறைஞான சம்பந்தர் | ஆவணி | உத்திரம் |
| உமாபதிசிவாசாரியார் | சித்திரை | அத்தம் |
| சேக்கிழார் | வைகாசி | பூசம்) |

# நாயன்மார் வரலாறு

(பெரியபுராணத்தைத் தழுவியது)

**அம்பலத்தாடுவான்**

***உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்***
***நிலவு லாவிய நீர்மலி வேணியன்***
***அலகில் சோதியன்அம்பலத் தாடுவான்***
***மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.***

## தோற்றுவாய்

### நூலின் முதலும் வழியும்

*உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவர் சிவபெருமான். அவர் உயிர்கள்மீது என்றுங் கைம்மாறற்ற பெருங்கருணை வாய்ந்தவர். அதனால் அவர் திருவருளையே திருமேனியாக் கொண்டு நங்கை பங்கராய் வீற்றிருந்தருள்கிறார். அப்பெருமான் வீற்றிருந் தருளும் பேறு பெற்றிருப்பது திருக்கயிலாய மலை.*

*அத்திருமலை இமயப் பொற்கோட்டின் ஒரு பாங்கர் ஒளிர்வது. அது தூய வெண்ணிறமுடையது. அஃது அறமே ஒருருக் கொண்டு நிற்பது போன்று விளங்குவது. அதன் பக்கங்களில் முனிவர்களின் மறையோசையும், விஞ்சையர்களின் வீணாகானமும், பூதர்களின் பல்லிய முழக்கமும் என்றும் இன்பமூட்டிக் கொண்டிருக்கும்.*

*முனிவர்களும், கணநாதர்களும், மற்றவர்களும் சிவபெருமான் திருமுன்னர், வரிசை வரிசையாக நின்று, தலைமேற் கைகள் குவிய, இன்பக் கண்ணீர் பெருக்கெடுப்பச் சேவை செய்வார்கள். வாயிலில் நந்திப்பெருமான், பிரம்பு தாங்கித் தம்மாணை செலுத்துவார். பெரும் பெருந்தேவர்கள் தங்கள் தங்கள் குறைகளை முறையிட வேளைபார்த்திருப்பார்கள்.*

*இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருமலையின் அடியிலே உபமன்னிய முனிவரின் அழகிய ஆசிரம மொன்றிருந்தது. அம்*

முனிவர் புலிமுனிவரின் புதல்வர்; சிவபக்தி சிவனடியார் பக்தியிற் சிறந்தவர்; சிவபெருமான் திருவருளாற் பெற்ற பாற்கடலை உண்டு வளர்ந்தவர். அவரைச்சுற்றி எண்ணிறந்த முனிவர்களும் சிவயோகி களும் அமர்ந்து வேத வேதாந்த ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பது வழக்கம்.

ஒருபோது ஆங்கே திடீரென ஒரு பேரொளிப் பிழம்பு தோன்ற லாயிற்று. அத்தோற்றம் ஆயிரம் ஞாயிறு ஒருருக்கொண்டு ஒளி உமிழ்ந்ததுபோன்றிருந்தது. அப்பேரொளியைக் கண்ட முனிவர் களும் மற்றவர்களும், 'இஃது என்ன! என்ன!' என்று வியப்புற்றார்கள். அப்போது உபமன்னிய முனிவர், அந்தி வான்பிறை சூடிய அண்ணலை நினைந்தார்; 'ஆண்டவனருளால் தென்னாட்டில் றோன்றிய வன்றொண்டப் பெருந்தகையார் திருக்கயிலைக்கு எழுந் தருள்கிறார்' என்று தெளிந்தார்; எழுந்தார். அவர்தங் கைகள் தலை மேலேறின; கண்கள் நீர் பொழிந்தன. முனிவர் தென்திசை நோக்கினார். அக்காட்சி கண்ட மற்ற முனிவர்கட்கு ஒருவித ஐயம் உண்டாயிற்று. அவ்வையத்தைக் களைந்துகொள்ள வேண்டி, அவர்கள் பாற்கடலை யுண்ட பரம ஞானியைப் பார்த்து, 'மாமுனிவரே! பிறப்பிறப்பில்லாச் சிவபெருமானை யன்றி - எவரையும் - எதையும் -தொழாத தங்கள் கைகள், இன்று இப்பேரொளியைக் கண்டதுங் குவிந்ததென்ன?' என்று வினவினார்கள். அதற்கு உபமன்னியமுனிவர் , 'இப்பே ரொளிப் பிழம்பாயெழுந் தருள்வோர் நம்பியாரூரரென்று திருப் பெயருடையவர். அவர்தஞ் சிந்தை என்றுஞ் சிவத்தில் அழுந்திக் கிடக்கும். அவரே இறைவர்; இறைவரே அவர். அவர் நாம் வணங்குந் தகுதி வாய்ந்தவர்' என்று திருவாய் மலர்ந்தருளினார். முனிவர்களும் மற்றவர்களும் புலிமுனிவரின் புதல்வரைப் பணிந்து, 'பேரொளிப் பிழம்பா யெழுந்தருளிவரும் நம்பியாரூரரின் தவப்பெருமையைக் கேட்க விரும்புகிறோம். அருளிச்செய்க' என்று வேண்டினார்கள்.

உபமன்னிய முனிவர், மகிழ்வெய்தி, "பேரொளிப் பிழம்பென எழுந்தருளி வருவோர் திருக்கயிலையில் சிவபெருமானுக்குப் பூமாலைத் தொண்டுந் திருநீற்றுத் தொண்டுஞ் செய்து வந்தார். அவர்தம் அருமைத் திருப்பெயர் **ஆலால சுந்தரர்** என்பது. அவர் ஒருநாள் வழக்கம்போல, அம்மையப்பருக்கு மலர்கொய்யத் திருநந்தனவனம் போந்தார். அவருக்கு முன்னே, அம்மையாருக்குப் பூக்கொய்ய **அனிந்திதை, கமலினி** என்ற இரண்டு தோழிமாரும் அவ்வனமே போயினர். அங்கே அழகர் மனம், பூங்கொடிகள் மீதும், பூங்கொடிகள் மனம், அழகர் மீதும் நடந்தன. பின்னர் ஒருவாறு தெளிவுற்றுப் பூப்பறித்து, அவரவர் தத்தம் இருக்கை சேர்ந்தனர்.

எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் எம்பெருமான், ஆலாலசுந்தரரை அருள்விழியால் திரு

நோக்கஞ் செய்து, 'நீ பெண்கள் மீது வேட்கை கொண்டாய். அதனால் நீ தென்னாடு போந்து மானுடனாகப் பிறப்பாயாக. அப்பெண்களும் அங்கேயே பிறப்பார்கள். அவர்களுடன் இன்பம் நுகர்ந்து, வேட்கை தணித்து, மீண்டும் இங்கு வரக்கடவாய்' என்று கட்டளையிட்டார். அது கேட்ட ஆலாலசுந்தரர், நடுநடுங்கிச் சிவபெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்; 'சிவமே மானுடனாய்ப் பிறந்து மாயவலையிற் சிக்கி மயங்கும்போழ்து, அடியேனைத் தடுத்தாட் கொள்ளல் வேண்டும்' என்று வேண்டினர். தடங்கருணைப் பெருங்கடலாகிய சங்கரர், அவ்வேண்டுதலுக்கு இரங்கி அருளினார். பின்னர் ஆண்டவன் ஆணைப்படியே ஆலாலசுந்தரர், அனிந்திதை - கமலினி என்ற இரு பெருமாட்டிக ளுடன் தென்னாட்டிற் பிறந்தார்; இன்பந்துய்த்தார்; இப்பொழுது பேரொளிப் பிழம்பாக எழுந்தருளி வருகிறார்" என்று சுந்தரர் தவப்பெருமையைச் சொன்னார்.

அருமறைவல்ல முனிவர்கள் உபமன்னி முனிவரைப் பணிந்து, 'ஆலாலசுந்தரர் தோன்றிய தென்னாடு, எட்டுத் திசைகளினுஞ் சிறந்து மேம்பட்டு விளங்குவதற்கு அதுசெய்த புண்ணியம் யாது?" என்று கேட்டார்கள். உபமன்னிய முனிவர், "கண்டாலும், சொன்னாலும், நினைந்தாலும், வீடுபேறளிக்கவல்ல பெருமை வாய்ந்த, தில்லை, திருவாரூர், காஞ்சி, திருவையாறு, சீகாழி முதலிய திருப்பதிகள் தென்னாட்டிலுண்டு. அதனால் தென்னாடு பிறநாடுகளினுஞ் சிறந்து மேம்பட்டு விளங்குகிறது' என்றார்.

இங்ஙனம் உபமன்னிய முனிவர், வன்றொண்டருடைய தவப்பெருமையை முனிவர்களுக்கு அன்று சொன்னபடியால், **சேக்கிழார்** தமக்குண்டாகிய பேரவாவினால், திருத்தொண்டத் தொகையை விரித்துக் கூறலானார். திருத்தொண்டர்தொகையே பெரிய புராணத்துக்குப் பதிகம். திருத்தொண்டத் தொகையை முதலாகக்கொண்டு பிறந்த வழிநூல் **நம்பியாண்டார்நம்பி திருவந்தாதி**.

## நாடு - நகரம்

திருத்தொண்டத்தொகை பிறந்த நாடு சோழ நாடு. அந்நாடு தமிழகத்திலுள்ள நாடுகளுள் மிகவுஞ் செழுமையுடையது. அந் நாட்டைக் காவிரி என்றும் வளஞ்செய்த வண்ணமிருக்கிறது. காவிரி பல முகங்கொண்டு கால்வாய்கள் வழியே ஓடிப் பாய்ந்து அந்நாட்டை நீரால் நிரப்புகிறது. அதனால் சோழ நாட்டுக்கு நீர்நாடு (புனல்நாடு) என்றொரு பெயருமுண்டு.

காவிரியால் சோழநாட்டு மருத நிலங்கள் பலவழியிலும் நலம் பெறுகின்றன. அங்கே எங்கணும் மருதநிலப் பொருள்கள் கொழுமை யாக விளைகின்றன. நல்ல விளைவால் மக்கள் இன்பந் துய்ப்பார்கள்.

அந்நாட்டு மன்னர்கள் செங்கோண்மையிலும், வண்மை யிலும், வீரத்திலும், பிறவற்றிலும் பேர்பெற்றவர்கள். அவர்களுக் குரிய புலிக்கொடி இமயத்தில் பொறிக்கப்பெற்ற தென்றால், அவர்க ளுடைய ஆட்சித் திறங்களை விரித்துக் கூறலும் வேண்டுமோ?

இத்துணைச் சிறப்புவாய்ந்த சோழநாட்டில் பழமையிற் சிறந்து விளங்குவது திருவாரூர் என்னுந் திருநகரம். அத்திருநகரில் திருமகள் என்றும் வீற்றிருப்பாள். அங்கே அறவோர்களும் துறவோர்களும் நீங்காமலிருப்பார்கள். அவ்வூரில் திருப்பதிகங்களைக் கிள்ளைகள் பாடும்; பூவைகள் கேட்கும்.

திருவாரூரில் **பரவையார்** திருவவதாரஞ் செய்த திருமாளிகை ஒன்றிருக்கிறது. அவ்வம்மையார் வன்றொண்டரை மணந்து இல்வாழ்க்கை நடாத்திய பெருமையுந் திருவாரூருக்கு உண்டு. அவ்விருவர்க்கும் நேர்ந்த புலவி தீர்க்கவேண்டித் தியாகேசப் பெருமானே திருவாரூர்த் திருவீதியில் தூது சென்றிருக்கிறார். இப்பெற்றிவாய்ந்த திருவாரூரில் என்றுந் தெய்வமணமுஞ் சைவமணமுங் கமழ்ந்துகொண்டேயிருக்கும்.

இத்திருவாரூரை ஆண்ட மன்னருள் ஒருவர் **மனுநீதிகண்ட சோழர்** என்பவர். அவர் அநபாயச் சோழரின் குல முதல்வர்; எல்லா உயிர்கட்குங் கண்ணும் உயிரும் போன்றவர்; ஊனமில் வேள்வி பல செய்தவர்; புற்றிடங்கொண்ட பெருமானார்க்குப் பூசனை முதலியன முறைப்படி நிகழ்த்தியவர். அம்மன்னர் ஆட்சி, அறம் பொருள் இன்பம் என்னும் பேற்றிற்கு அடிப்படையாக நிலவியிருந்தது.

அவ்வரசர் பெருமானுக்கு ஓர் அரிய புதல்வன் பிறந்தான். அவனுக்கு இளமையில் பல கலைகளும், குதிரையேற்றம் - யானை யேற்றம் - தேரூர்தல் - விற்பயிற்சி - முதலியனவும் பயிற்றுவிக்கப் பட்டான். அவன் பிறையென வளர்ந்து இளங்கோவாகும் பருவத்தை அடைந்தான். அப்பருவத்தில் அவன் தேரிலேறி அரசிளங் குமரர்களும் சேனைகளும் மற்றவர்களும் புடைசூழ்ந்துவரத் திருவீதி உலா வருவது வழக்கம். வழக்கம்போல் ஒருநாள் அவன் உலாவரலானான். அன்று வழியில் ஓரிடத்திலிருந்த பசுங்கன்று ஒன்று துள்ளிப்பாய்ந்து தேருருளையில் அகப்பட்டு இன்னுயிர் துறந்தது. அக்காட்சி கண்ட தாய்ப்பசு அங்கே ஓடிவந்து, கதறிக் கதறித் துடி துடித்துக் கீழே விழுந்தது. அதன் கதறலும் துடிப்பும் வீழ்ச்சியும் இளங்கோவின் நெஞ்சைப் பிளந்தன; அவனைத் தேரினின்றுஞ் சாய்த்துத் தள்ளின. தள்ளுண்ட இளங்கோ, மெய் விதிர்விதிர்ப்ப, வாய்குழற, நாவற்றத் தாய்ப்பசுவைப் பார்க்கிறான்; கன்றைப் பார்க்கிறான்; கண்ணீர் உகுக்கிறான்; அலமருகிறான்; பெருமூச்சு விடுகிறான்; ‘அந்தோ! அறக்கோலோச்சும் என் தந்தைக்கு யான் எற்றுக்கோ பிள்ளையாய்ப் பிறந்தேன்’ என்கிறான்;

'மனுவென்னும் பெரும்பேர் தாங்கும் அவருக்கு இப்பெரும்பழி சுமத்தவோ யான் பிறந்தேன்' என்கிறான்; அழுகிறான். அழுது அழுது, 'இப்பெரும் பாவத்துக்குக் கழுவா யுளதோ? உளதாயின், இக்கொலை என் தந்தை அறியா முன்னரே அக்கழுவாய் தேடுவது நலன்' என்று சொல்லிக்கொண்டே, அவன் அந்தணரிருக்கை நோக்கிச் சென்றான். வாயில்லாப் பசு என்ன செய்தது?

பசு, மனங்கலங்க, முகத்தில் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருக, நெருப்புயிர்த்து, மன்னுயிர்களைத் தன்னுயிர்போற் காக்கும் மனுச்சோழ மன்னரின் அரமனை நோக்கி விரைந்து நடந்தது; நடந்து அரமனை அடைந்தது; அடைந்து மனைவாயிலில் தூங்கிக் கொண்டிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் புடைத்தது. அம்மணியோசை அரசர்பெருமான் செவியில் விழுந்தது. விழுந்ததும், அவர் திடுக்கிட்டு அரியாசனத்தினின்றுங் குதித்து வாயிலை அடைந்தார். வாயில் காப்போர் , மன்னர்பிரானை வணங்கி, ' இப்பசு தன் கோட்டினால் இம்மணியை அடித்தது' என்றார். மன்னர்பெருமான் சினந்து அமைச்சர்களை நோக்கினார். அமைச்சருள் ஒருவன் நிகழ்ந்ததைக் கூறினான். கருணை மன்னர் ஆவுறு துயரம் எய்தினார்; நஞ்சு தலைக்கேறினாலென மயக்குற்றார்; விழுந்தார்; எழுந்தார்; பசுவைப் பார்க்கிறார்; 'என்னரசாட்சி நன்று! நன்று!!' என்று ஏங்குகிறார்; இரங்குகிறார்.

இவ்வாறு துயருறும் வேந்தரை அமைச்சர்கள் பார்த்து, 'அரசே! சிந்தை தளரற்க. இப்பழிக்குக் கழுவாயுண்டு. அதைச் செய்வதே முறை' என்று சொன்னார்கள். அதற்கு அரசர், "அமைச்சர் களே! நீங்கள் கூறுங் கழுவாய்க்கு யான் இசையேன். அக்கழுவாய் கன்றை இழந்து அலமரும் பசுவின் நோய்க்கு மருந்தாகுமோ? மைந்தன் பொருட்டுக் கழுவாய் தேடினால் அறக்கடவுள் சலிப்புறாதோ? உயிர்களுக்குத் தன்னாலாவது, பரிசனங்களாலாவது, பகைவர்களாலாவது, கள்வர்களாலாவது, பிற உயிர்களாலாவது விளையும் ஐந்து பயத்தையுந் தீர்த்து அறத்தைக் காப்பவனல்லனோ அரசன்? இன்று உங்கள் உரைக்கு யான் இசைந்து, நாளை வேறொருவன் ஓர் உயிரைக் கொன்றால், அவனுக்கு மட்டுங் கொலைத்தண்டனை விதிக்கலாமோ? 'பண்டை மனுவின் நீதி, பாவி மனுவால் தொலைந்தது' என்னும் பழமொழி உலகில் நிலவாதோ? நீங்கள் மந்திரிகள்! வழக்கப்படி மொழிந்தீர்கள்!" என்று இயம்பினார். மன்னரின் மனோ நிலையை உணர்ந்த மந்திரிகள், அவரைப் பார்த்து, 'இத்தகைய நிகழ்ச்சி முன்னரும் நேர்ந்துள்ளது. இதன்பொருட்டு அருமைப் புதல்வனை இழப்பது முறையாகாது. கழுவாய் தேடுவதே முறை' என்று வேண்டிநின்றார்கள். சோழர் பெருமான், 'இத்தகைய நிகழ்ச்சி எங்கே நேர்ந்தது? எங்கே எந்தப் பசு துன்பத்தால் மணியடித்தது? ஆகவே பசு உற்ற துயரை யானும்

உறுதல் வேண்டும். திருவாரூரில் பிறந்த உயிரையன்றோ என் மைந்தன் கொன்றான்? அவனைக் கொல்வதே தகுதி' என்று கூறி அவ்வாறு செய்ய உறுதி கொண்டார். அவ்வுறுதி கண்ட அமைச்சர்கள் நடுக்குற்று அகன்றார்கள். நீதி மன்னர் தம்மொரு புதல்வனை வரவழைத்து, ஓர் அமைச்சரை விளித்து, 'இவனைக் கன்றிறந்த இடத்திலே கிடத்தித் தேரைச் செலுத்தக்கடவை' என்று ஆணையிட்டனர். அவ்வமைச்சர் அவ்வாணைவழி நின்று கடனாற்ற ஒருப்படாது அவ்விடத்தின்றும் அகன்று, தம்முயிரை மாய்த்துக் கொண்டார். அதற்குமேல் அரசர்பெருமான் தம்முடைய குலமகனைத் தாமே அழைத்துச் சென்று, எண்ணியவாறு செய்து முடித்தார்.

கருணை வேந்தரின் செயற்கருஞ் செயல்கண்டு மண்ணவர் கண்மழை பொழிந்தனர்; விண்ணவர் பூமழை சொரிந்தனர். வீதி விடங்கப் பெருமான் விடைமேல் காட்சி வழங்கினார். சோழர் பெருமான் ஆண்டவனைத் தொழுது இன்பக் கடலில் திளைத்தார். அந்நிலையில் பசுவின் கன்று எழுந்தது; அரசிளங் குமரனும் விழித்தெழுந்தான். அமைச்சரும் உயிர் பெற்றெழுந்தார். தம்மை வணங்கிய புதல்வனை மார்புறத் தழுவிச் சோழவேந்தர் வரம்பிலா மகிழ்வெய்தினார். பாலூட்டிய கன்றைக்கண்டு பசுவும் துன்பம் நீத்தது. தியாகேசப்பெருமான், வெற்றி வேந்தர்க்கு வீதியிலே திருவருள் புரிந்தார். அக்கருணைத்திறத்தை ஏழுலகமும் வியந்தோதின.

இங்ஙனம் அறவழி நின்று ஒழுகும் மெய்யன்பர்கட்கு ஆண்டவன் அருள்புரியும் பெருமை வாய்ந்தது திருவாரூர். அதன் சிறப்பு எம்மொழி யில் எவ்வளவில் அடங்குவதாகும்? அத்திரு நகரினுக்குப் புற்றிடங் கொண்டவரது பூங்கோயில் அகமலராகப் பொலிகிறது.

**திருக்கூட்டம்**

திருவாரூர்ப் பூங்கோயிலிலே, தேவாசிரியனென்னுந் திருப் பெயருடைய மண்டபம் ஒன்று உளது. அம்மண்டபத்திலே தேவர்கள் என்றும் நிறைந்திருப்பார்கள். கண்டிகை விளங்குகின்ற திருமேனியின்மீது பூசுந் திருநீற்றைப்போல் உள்ளத்தினும் புனித முடையவரும், சிவஞான ஒளியால் எல்லாத் திசைகளையும் விளக்கினவரும், ஐந்து பூதமும் தன் நிலையில் கலங்கினும் அம்மை அப்பரது திருவடிகளை மறவாதவரும், அன்புருவாய் நின்றவரும், குணத்தில் மலையை ஒத்தவரும், இன்ப துன்பங்களை ஒழித்தவரும், ஓட்டையும் பொன்னையும் ஒக்கவே நோக்குவோரும், பேரன்பினால் சிவபெருமானை வணங்குவதன்றி வீட்டின்பத்தையுங் கருதாதவரும், கண்டிகையை ஆரமாகவும், கந்தையை உடையாகவும், இறைபணி நிற்றலைப் பெரும்பணியாகவுங் கொண்டுள்ளவரும் அத்திருக் காவணத்தில் வீற்றிருப்பர். அவர்தம் அருட்டன்மை அளப்பரிது.

ஆலாலசுந்தரர், திருக்கயிலையின்றுந் தென்திசையில் திருவவதாரஞ் செய்து, அம்மாதவர் திருக்கூட்டத்தைத் தொழுது, திருத்தொண்டத் தொகையைத் திருவாய்மலர்ந்தருளினர். அத் திருத்தொண்டத் தொகையை அடிப்படையாக் கொண்டது இந்நூலென்க.

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*நந்திக்கு நம்பெரு மாற்குநல் லாரூரில் நாயகற்குப்*
*பந்திப் பரியன செந்தமிழ் பாடிப் படர்புனலின்*
*சிந்திப் பரியன சேவடி பெற்றவன் சேவடியே*
*வந்திப் பவன்பெயர் வன்தொண்ட னென்பரிவ் வையகத்தே.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*தண்கயிலை யதுநீங்கி நாவ லூர்வாழ்*
*சைவனார் சடையனார் தனய னாராய்*
*மண்புகழ அருட்டுறையான் ஓலை காட்டி*
*மணம்விலக்க வன்தொண்டாய் அதிகை சேர்ந்து*
*நண்பினுடன் அருள்புரிய ஆரூர் மேவி*
*நலங்கிளரும் பரவைதோள் நயந்து வைகித்*
*திண்குலவும் விறன்மிண்டர் திறங்கண் டேத்துந்*
*திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னாரே.*

*செப்பலருங் குண்டையூர் நெல்ல ழைத்துத்*
*திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாச் செய்து*
*தப்பில்முது குன்றர்தரும் பொருளாற் றிட்டுத்*
*தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்*
*ஒப்பில்தனித் தூதுவந்தா றூடு கீறி*
*உறுமுதலை சிறமதலை உமிழ நல்கி*
*மெய்ப்பெரிய களிறேறி அருளாற் சேர*
*வேந்தருடன் வடகயிலை மேவி னாரே.*

### பிறப்பும் வளர்ப்பும்

*திருமுனைப்பாடி நாட்டிலே, திருநாவலூரிலே, ஆதி சைவ மரபிலே சடையனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர், இசை ஞானியார் என்ற பெண்மணியை மணந்து இல்லறம் நடாத்தி வந்தார். வருநாளில், அவருக்கு ஒரு புதல்வர் பிறந்தார். அப் புதல்வருக்கு நம்பியாரூரர் என்னுந் திருநாமம் சூட்டப்பட்டது. நம்பியாரூரர் பிறையென வளர்ந்துவரலானார்.*

நம்பியாரூரர் தமது குழந்தைப் பருவத்துக்கேற்பச் சிறுதேர் உருட்டி விளையாடிக் கொண்டிருந்தார். ஒருநாள், அவ் விளையாட்டின்போது, அந்நாட்டு மன்னராகிய நரசிங்கமுனையர், குழந்தைப் பெருமானைக் கண்டார்; காதல் கூர்ந்தார்; சடைய னாரிடஞ் சென்றார்; நம்பியாரூரரைத் தருமாறு வேண்டினார். மன்னர் வேண்டுதலுக்குச் சடையனார் இணங்கினார். நரசிங்க முனையர் நம்பியாரூரரை அன்பினால் மகன்மை கொண்டனர்.

நம்பியாரூரர், அரசிளங்குமரர்போல் அந்தணர் நெறியில் வளர்க்கப்பட்டார். உரியகாலத்தில் அவருக்கு உபநயனம் செய்யப் பட்டது. நம்பியாரூரர் அளவிலாக் கலைகளை ஆய்ந்து ஆய்ந்து வல்லவரானார். அவருக்குத் திருமணப் பருவம் உற்றது.

## திருமணம்

புத்தூரிலே சடங்கவி சிவாசாரியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு பெண்மகவு உண்டு. அப்பெண்மணியை நம்பி யாரூரருக்கு மணஞ்செய்விக்கச் சடையனார் விரும்பினார்; விரும்பிச் சில பெரியோர்களைப் புத்தூருக்கு அனுப்பினார். அவர்கள், புத்தூருக்குப் போய்ச் சடங்கவி சிவாசாரியாரைக் கண்டு, சடையனார் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். சடங்கவி சிவாசாரியார், சடையனார் விருப்பத்துக்கு உடன்பட்டார். பெரியோர்கள் திரும்பி வந்து, சடங்கவி சிவாசாரியார் உடன்பட்டதைச் சடையனாருக்கு அறிவித்தார்கள். சடையனார் மகிழ்வெய்தித் திருமணத்துக்குத் திருநாள் குறிப் பிட்டார். நானாபக்கமும் அழைப்புகள் அனுப்பப் பட்டன. சடங்கவி சிவாசாரியாரும் புத்தூரில் திருமண வினைகளைக் குறைவறச் செய்து முடித்தார்.

திருமணத்துக்கு முன்னாளில் நம்பியாரூரர்க்குக் காப்பணிதல் முதலிய சடங்குகள் செய்யப்பட்டன. அவர், அடுத்தநாள் காலைக் கடன்களை முடித்துத் திருமணக்கோலங் கொண்டார்; குதிரைமேல் ஏறினார்; புத்தூரை அடைந்தார். பெண்மணிகள் நம்பியாரூரரை எதிர்கொண்டார்கள். திருமணப் பொலிவை விரித்துக் கூறுதல் இயலாது. அது வருணனைக்கு எட்டாதது. புத்தூர், மணம்வந்த புத்தூர் ஆயிற்று. நம்பியாரூரர் குதிரை விட்டிறங்கித் திருமணப் பந்தருள் நுழைந்தார்; அங்கே இடப்பட்டிருந்த ஒரு பீடத்தில் அமர்ந்தார்.

## தடுத்தாளல்

அவ்வேளையில் திருக்கயிலாயத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு வாக்களித்தவாறு, அவரைத் தடுத்தாட்கொள்ளும் பொருட்டுச் சிவபெருமான் புறப்பட்டார். அவர், ஒரு முதிய அந்தணக்கோலந் தாங்கினார்; தாங்கித் தண்டூன்றிக் கொண்டே வந்தனர்; திருமணப் பந்தருள் நுழைந்தனர்; சபையாரை உற்று

நோக்கினர்; நோக்கிச், 'சபையோரே என் மொழியைக் கேளுங்கள்' என்றனர். சபையோரும் நம்பியாரூரரும் அந்தணரைப் பார்த்து, 'அடிகள் இங்கே எழுந்தருளியது எங்கள் தவம்; சொல்வதைச் சொல்லும்' என்று கூறினர்.

அப்பொழுது அந்தணர், நாவலூரரைக் கருணை நோக்கஞ் செய்து, 'ஏ நம்பீ! எனக்கும் உனக்கும் ஒரு பெரும் வழக்கு உண்டு. அதைத் தீர்த்த பின்னரே நீ மணஞ் செய்தல் வேண்டும்' என்று சொன்னார். நாவலர் பெருமான், 'என்ன! வழக்கா? வழக்காயின், அதைத் தீர்த்தே மணஞ்செய்வேன். வழக்கைச் சொல்லும்' என்றார். உடனே அந்தணர், சபையோரைப் பார்த்து, 'கேளுங்கள், இந்நம்பியாரூரன் எனக்குப் பரம்பரை அடிமை. இதுவே யான் சொல்ல வந்தது' என்று கூறினர்.

இக்கூற்று, அங்கிருந்தவர்களைத் திடுக்கிடச் செய்தது. சிலர், 'இவன் யாவன்,' என்றார். சிலர் அந்தணர் அருகே சென்றனர். சிலர் வெகுண்டார். சிலர் சிரித்தார். நம்பியாரூரர், 'இவ்வந்தணர் மொழி நன்றாயிருக்கிறது!' என்று நகைத்தார். அச்சமயத்தில் அந்தணர், ஆரூரர் அருகே போய், 'அடே! அந்தக் காலத்தில் உன் பாட்டன் எனக்கு எழுதிக்கொடுத்த அடிமை ஓலை இருக்கிறது. நீ ஏன் என்னை இகழ்ந்து நகையாடுகிறாய்?' என்று கேட்டனர்.

நாவலர் பெருமானது நகைப்பு ஒழிந்தது. அவர் அந்தணரை நோக்கி, 'அந்தணர்க்கு அந்தணர் அடிமையாதல் உண்டோ! அதை இன்று நீர் சொல்லவே கேட்டேன். நீர் பித்தரோ!' என்று மொழிந்தார். அதற்கு அந்தணர், 'யான் பித்தனாயினும் ஆக; பேய னாயினும் ஆக; நீ என்ன கூறினுங் கூறு. யான் நாணமுறேன். நீ என்னை அறிந்தாயில்லை; வித்தகம் பேசாதே; பணிசெய்ய வா' என்றனர்.

நம்பியாரூரர், 'இஃதென்ன! அடிமை ஓலை ஒன்றிருப்பதாக இவர் கூறுகிறாரே; அதன் உண்மையை அறிதல்வேண்டும்' என்று சிந்திக்கலானார்; சிந்தித்து அந்தணரைப் பார்த்து, 'அடிமை ஓலை எங்கே? காட்டும்!' என்று கேட்டார். அந்தணர், 'நம்பி! ஓலையைக் காண்டற்கு நீ அருகனல்லன். அதை இச்சபை முன்னே காட்டுவேன். உண்மை உறுதிப்பட்ட பின்னர், எனக்கு அடிமைத் தொழில் செய்யவே நீ அருகன்' என்று உரைத்தனர். அவ்வுரை நாவலர் பெருமானுக்குக் கோபமூட்டிற்று. அவர் வெகுண்டார்; எழுந்தார்.

அந்தணர் ஓடினர். ஆரூரர், அவரைத் தொடர்ந்து ஓடினார்; பிடித்தார்; ஓலையைப் பிடுங்கினார்; 'அந்தணர்க்கு அந்தணர் அடிமையாவது என்ன முறை? ' என்று அதைக் கிழித்தெறிந்தார். அந்தணர், நாவலர் பெருமானைப் பற்றி, 'இது முறையோ! ' என்று கூக்குரலிட்டார்.

அருகிலிருந்தவர்கள் இருவரையும் விலக்கினார்கள். அவர்கள், அந்தணரைப் பார்த்து, 'என்ன ஐயரே! உலகத்தில் இல்லாத வழக்கைக் கொண்டுவந்தீர்! நீர் இருப்பது எங்கே?' என்று கேட்டார்கள். அதற்கு அந்தணர், 'யான் இருப்பது இத் திருவெண்ணெய்நல்லூர். இவன் என் ஓலையை வலிந்து பிடுங்கிக் கிழித்தான். அதனாலேயே இவன் என் அடிமை என்பது உறுதியாயிற்று' என்று முழங்கினார். அதுகேட்ட நாவலூரர், 'இவன் பழைய மன்றாடி போலும்!' என்று நினைந்து, 'அந்தணரே! உமது ஊர் இத் திருவெண்ணெய் நல்லூர் என்று சொல்கிறீர். அங்கே போய் இவ்வழக்கைப் பேசலாம்' என்றார். அதற்கு அந்தணரும், 'அப்படியே செய்வோம். என்னிடத்தில் மூல ஓலை இருக்கிறது. அதைக் கொண்டு என் கட்சியை நிலைபெறுத்தல் கூடும்' என்று சொல்லிக் கொண்டே தண்டூன்றிப் புறப்பட்டனர்.

எல்லோரும் திருவெண்ணெய்நல்லூரை அடைந்தனர்; அங்கே வேதியர்கள் நிறைந்த சபைக்குச் சென்றனர். அந்தணர், சபையாரை நோக்கி, 'மூதறிஞரே! இந்த நம்பியாரூரன் எனக்கு அடிமை. அதை உறுதிப்படுத்த ஓலை காட்டினேன். இவன் அதை வலிந்து பிடுங்கிக் கிழித்தெறிந்தான். அது குறித்து இருவேமும் இங்கே வந்திருக்கிறேம்' என்று முறையிட்டனர். சபையர் அந்தணரைப் பார்த்து, 'அந்தணர் அடிமையாகும் வழக்கம் எங்கும் இல்லையே!' என்றார். தன்னந்தனியாராய் நின்ற அந்தணர், 'என் வழக்கு நியாயமானது. இவன் வலிந்து கிழித்த ஓலை, இவன் பாட்டன் எழுதிக்கொடுத்தது, என்றனர்.

சபையார் நம்பியாரூரரைப் பார்த்து, 'ஓலையை வலிந்து கிழிக்கலாமா? அது வெற்றியாகுமா? இம் முதியோர் தமது வழக்கைச் சொன்னார். உமது எதிர்ப்பு என்ன?' என்று கேட்டார். நம்பியாரூரர், சபையாரை நோக்கி, 'நூலறி புலவீர்! யான் ஆதிசைவன் என்பதை நீர் அறிவீர். இவர் என்னைத் தம் அடிமை என்கிறார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. இது மாயையாய் இருக்கிறது' என்று சொன்னார். அது கேட்ட சபையார், அந்தணரைப் பார்த்து, 'உமது வழக்குக்குச் சான்று வேண்டும். ஆட்சி, எழுத்து, அயலார் கூற்று என்று மூன்றுவிதச் சான்றுகள் உண்டு. அவற்றுள் ஒன்றையாவது காட்டுக' என்று கேட்டார்.

அந்தணர் சபையாரைப் பார்த்து, 'முன்னே இவன் கிழித்தது படி ஓலை. மூல ஓலை என்னிடத்தில் இருக்கிறது' என்றார். 'அதைக் காட்டுக' என்று சபையார் கூறினர். அந்தணர், 'மூல ஓலையைக் காட்டுவேன். அதையும் இவன் கிழித்தால் என்செய்வது?' என்றார். சபையார் 'நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்; அஞ்சாது காட்டுக' என்று உறுதி கூறினர். அந்தணர், மூல ஓலையை எடுத்தார். சபையார் ஏவுதல்படி ஒரு கணக்கன் அவ்வோலையை வாங்கிப் படித்தான்.

அதில், 'திருநாவலூரில் வாழும் ஆதி சைவனாகிய ஆரூரன், திருவெண்ணெய்நல்லூர்ப் பித்தனுக்கு எழுதிக் கொடுத்தது: யானும் என் மரபினரும் திருவெண்ணெய்நல்லூர்ப் பித்தனுக்கு வழித் தொண்டு செய்ய அகமும் புறமும் ஒத்து உடன்படுகிறோம். இங்ஙனம் ஆரூரன்' என்ற வாசகம் இருந்தது. அதில் கையெழுத் திட்டவர், தத்தம் கையெழுத்தென்றே ஒத்துக் கொண்டனர்.

அதற்குமேல் சபையார், நம்பியாரூரரைப் பார்த்து, 'இஃது உமது பாட்டன் கையெழுத்தா? பாரும்' என்றார். அப்பொழுது அந்தணர், 'இவன் பாட்டன் கையெழுத்தை இவனா பார்க்க வல்லான்! இவன்றன் பாட்டனுடைய வேறு கையெழுத்துக்களை வரவழைத்து நீங்கள் பாருங்கள்; பார்த்து உண்மையை வெளியிடுங்கள்' என்றார். அவர்கள் அப்படியே செய்தார்கள். இரண்டு கையெழுத்தும் ஒத்திருந்தன. சபையார் நம்பியாரூரரை நோக்கலாயினர்; நோக்கி, 'நம்பியாரூரரே! என்ன செய்தி? இவ்வந்தணருக்கு நீர் தோற்றீர். அவருக்கு அடிமையாயிருப்பது உமது கடன்' என்று முடிவு கூறினார். நம்பியாரூரர் என்செய்வார்! 'இஃது என் தலை எழுத்து. உங்கள் தீர்ப்புக்கு இசையாது யான் வேறு என் செய்தல் கூடும்?' என்று ஏக்குற்றார்.

அவ்வேளையில் சபையார் அந்தணரைப் பார்த்து, "முதியவரே! ஓலையில் உமது ஊர் 'இவ்வூர்' என்று குறிக்கப் பட்டிருக்கிறது. இவ்வூரில் நீர் எங்கே வதிகிறீர்?" என்று கேட்டனர். அந்தணர், 'இங் குள்ள ஒருவரும் என்னை அறியீரா? என் வீட்டைக் காட்டுகிறேன்; வாரும்' என்று சொல்லி நடந்தனர்.

நம்பியாரூரரும் மற்றவரும் அந்தணரைத் தொடர்ந்து சென்றனர். அந்தணர், அவ்வூரிலுள்ள திரு அருட்டுறை என்னுந் திருக்கோயிலி னுள்ளே நுழைந்தார்; மறைந்தார். தொடர்ந்து சென்றவர் எல்லோரும் மயங்குகிறார்; திகைக்கிறார். நம்பியாரூரர், 'என்னை ஆட்கொண்ட அந்தணர் திருக்கோயிலுள்ளே நுழைந்தார். இஃதென்ன?' என்று வியப்படைகிறார். அவர் தனியே போய் அந்தணரை அழைத்துப் பார்த்தார்.

அப்போது, சிவபெருமான் உமாதேவியாருடன் மழவிடை மேல் தோன்றினார்; தோன்றி, 'நாவலூரா! முன்பு நீ நமக்குத் தொண்டன்; வேட்கை கூர்ந்தாய்; அதனால் நமது ஏவற்படி இம்மண்ணில் பிறந்தாய். இவ்வுலகப் பாசம் உன்னைப் பிடியாதபடி நாமே தடுத்தாட்கொண்டோம்' என்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்வருளொலி கேட்ட நம்பியாரூரர் ஆனந்தப் பரவசராய், 'அடியேன் நாயினும் கடையேன். என்னை ஒரு பொருளாகக் கருதித் தடுத்தாட்கொண்டீர். உமது கருணையே கருணை' என்று போற்றி நின்றார்.

சிவபெருமான் நாவலூரரைப் பார்த்து, "நீ நம்மோடு வன்மை பேசினாய்., அதனால் உனக்கு **'வன்தொண்டன்'** என்று பெயர் வழங்குவதாக. நமக்குரிய அர்ச்சனை பாட்டே யாகும். நீ அவ்வர்ச்சனை செய்யக்கடவாய்" என்றார். அதற்கு நம்பியாரூரர், 'யான் சிறியேன்; ஒன்றும் அறியேன்; பெருமான் அருட் குணங்கள் எனக்கு என்ன தெரியும்? எப்படிப் பாடுவேன்?' என்று முறையிட்டார். "சிவ பெருமான், என்னைப் 'பித்தன்' என்று முன்னே நீ பேசினாய்; என்னைப் 'பித்தன்' என்று பாடு" என்று அருளிச் செய்தார். வன்தொண்டப் பெருமான் **'பித்தா பிறைசூடி'** என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார். அதைக் கேட்ட சிவபெருமான், வன்தொண்டரைப் பார்த்து, 'இன்னும் நமது புகழைப் பாடிக் கொண்டு இருப்பாயாக' என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

புத்தூரிலே திருமணம் குலைந்தது. சடங்கவி சிவசாரியா ருடைய புதல்வியார், வன்தொண்டப் பெருமான் திருவடியிலேயே நெஞ்சைப் பதியவைத்தார்; அவரையே நினைந்து நினைந்து சிவலோகமடைந்தர்.

வன்தொண்டர் திருவெண்ணெய்நல்லூரினின்றும் திருநாவ லூருக்குச் சென்றார்; ஆண்டவனைத் தொழுதார்; திருத்துறை யூருக்குப் போனார்; அங்கே இறைவனை நோக்கித் தவநெறி வேண்டினார். அவருக்குத் 'தில்லையைக் கண்டு தொழுதல்வேண்டும்' என்னும் வேட்கை எழுந்தது. அவ் வேட்கையுடன் அவர் புறப்பட்டார்.

### திருவடி சூடல்

நாவலர் பெருமான் பெண்ணையாற்றைக் கடந்தார். மாலைக்காலம் வந்தது. அவர் திருவதிகைப் புறத்தே அணைந்தார். திருவதிகை திருநாவுக்கரசு சுவாமிகள் உழவாரத் திருத்தொண்டு செய்த திருப்பதி. ஆனால், அதனை மிதிக்க வன்தொண்டர் அஞ்சினார்; பக்கத்திலே இருந்த சித்தவடமடத்தில் தங்கினார்; திருவதிகைப் பெருமானை நினைந்து கொண்டே துயின்றார். திருவதிகைப் பெருமான், ஒரு கிழவேதியராய் அம்மடம் போந்தார்; போந்து, வன்தொண்டப் பெருமானுடைய தலையின்மீது காலை வைத்துக் துயில்வார் போல் இருந்தார். வன்தொண்டர் விழித்துப் பார்த்தார்; ஐயர் நிலை கண்டு, 'ஐயரே! உமதடியை என் முடிமீது வைத்தீர்' என்று சொன்னார். ஐயர் 'என் மூப்பு திசையறியாமற் செய்து விட்டது!' என்றார். வன்தொண்டர் வேறொரு திசையில் தலை வைத்து உறங்கினார். அவ்வேதியர் மீண்டும் வன்தொண்டர் முடிமீது அடியை வைத்தார். வன்தொண்டர், 'ஐயரே! நீர் யார்? பலகாலும் என்னை மிதிக்கிறீர்?' என்று கேட்டார். வேதியர், 'என்னை அறியாயோ!' என்று கூறி மறைந்தருளினார். உடனே நாவலர் பெருமான், 'வந்தவர் சிவபெருமான்' என்று உணர்ந்தார்;

'இறுமாப்பால் கெட்டேன்' என்று வருந்தினார்; 'தம்மானை அறியாத சாதியா ருளரோ?' என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார்.

பின்னர்த் திருநாவலூரர் திருக்கெடில நதியிலே நீராடினார்; திருமாணிக்குழியையுந் திருத்தினை நகரையுந் தொழுதார்; தில்லை சேர்ந்தார்; தில்லைக் கூத்தனைக் கண்டார்; வணங்கினார்; புலன்கள் ஒன்றப் போற்றினார்; தம்மை மறந்தார்; இன்புறுவரானார். அவ்வேளையில் 'வன்தொண்ட! திருவாரூருக்கு வா' என்றொரு வானொலி எழுந்தது. அதுகேட்ட வன்தொண்டர் தில்லையைத் தொழுது புறப்பட்டார்; கொள்ளிடத்தைக் கடந்தார்; சீர்காழியை அணுகினார்; 'சீர்காழி ஆளுடைய பிள்ளையார் பிறந்த திருப்பதி' என்று அதனை மிதியாது, அதன் எல்லைப்புறத்தை வலம் வந்தார். அப்பொழுது சிவபெருமான் காட்சி கொடுத்தருளினார். வன்தொண்டர், 'கழுமல வளநகர் கண்டுகொண் டேனே' என்று பாடி இன்புற்றார்.

பின்னே, வன்தொண்டர் திருக்கோலக்காவைத் தொழுது, திருப்புன்கூரை வணங்கிக் காவிரிக் கரையைச் சேர்ந்தார்; காவிரியில் நீராடித் திருமயிலாடுதுறை, திரு அம்பர்மாகாளம், திருப்புகலூர் முதலிய திருப்பதிகளைக் கண்டு தொழுது, தமிழ் பாடித் திருவாரூரை அணைந்தார்.

### தோழமை

தியாகேசப் பெருமான் கட்டளைப்படி, திருவாரூர் வாசிகள் நம்பியாரூரரைச் சிறப்புடன் வரவேற்றார்கள். நம்பியாரூரரும் அவர்களோடு கலந்து, 'எந்தை இருப்பதும் ஆரூர் அவர் என்னையும் ஆள்வரோ கேளீர்?' என்று பாடிக் கொண்டே சென்றார்; திருக்கோயிலுள் நுழைந்தார்; தேவாசிரிய மண்டபத்தைத் தொழுதார்; திருமூலட்டானத்தை அடைந்தார்; ஆண்டவனை வணங்கி, அன்பால் அகங்குழைந்து குழைந்து உருகினார். அப்பொழுது திருவருளால் 'நமது தோழமையை உனக்குத் தந்தோம்; நாம் உன்னைத் தடுத்தாட் கொண்டபோது நீ பூண்டிருந்த திருமணக்கோலத்தை என்றும் பூண்டிருப்பாயாக; வேட்கை தீர வாழ்வாயாக' என்ற வாக்கு எழுந்தது. வன்தொண்டர் இறைவனை வணங்கிப் போற்றினார். அன்றுதொட்டு, அடியவர்கள் நாவலூரரைத் **'தம்பிரான் தோழர்'** என்று அழைக்கலானார்கள். தம்பிரான் தோழன், இறைவன் ஆணைப்படி திருமணக்கோலந் தாங்கலானார். அவர், திருவாரூரில் தங்கி நாடோறுஞ் சிவபெருமானை வழிபட்டு வந்தார்.

### பரவையார் திருமணம்

திருக்கயிலாயத்திலே உமாதேவியாரின் தோழிமார் இருவர் இருந்தனர். அவருள் ஒருவர் **கமலினியார்** என்பவர். அவர் திருவாரூரிலே, உருத்திரகணிகையர் மரபிலே பிறந்தார். அவருக்குப்

***பரவையார்*** என்ற பெயர் அணியப்பட்டது. பரவையார் உற்ற வயதடைந்தார். நாள்தோறும் திருவாரூர்ப் பெருமானை வழிபடுவது அவர்தம் வழக்கம்.

வழக்கம்போலப் பரவையார் ஒருநாள் திருக்கோயிலுக்குப் போனார். அவ்வேளையில் தம்பிரான் தோழரும் திருக்கோயிலுக்குப் புறப்பட்டார். இருவரையும் பண்டைவிதி கூட்டிற்று. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். இவர் மனத்துள் அவர் நின்றார். அவர் மனத்துள் இவர் நின்றார். பரவையார் திருக்கோயிலுட்புகுந்தார். வன்தொண்டர் அங்கிருந்தவர்களைப் பார்த்து, 'இவள் யார்? என் மனத்தைக் கவர்ந்தாள்' என்று கேட்டார். அவர்கள் 'பரவையார்' என்றார்கள். தம்பிரான் தோழர், 'என்னை ஆண்ட பெருமானிடஞ் செல்கிறேன்' என்று திருக்கோயிலுக்குப் போனார். ஆரூரர் போவதற்கு முன்னரே, பரவையார் இறைவனைத் தொழுது வெளியே சென்றார். நம்பியாரூரர் பரவையாரை விரும்பி ஆண்டவனை வேண்டினார்; வேண்டி, 'எம்பிரான் திருவருள் எந்நெறிச் சென்றது' என்று தமக்குள் வினவிக்கொண்டே தேவாசிரியமண்டபத்தை அடைந்தார்; என்னைத் தடுத்தாட் கொண்ட பெருமான் எனக்குப் பரவையாரைத் தந்தருள்வார்' என்று நினைந்திருந்தார். மாலைக் காலம் உற்றது.

பரவையார், நம்பியாரூரர் நினைப்புடன் வீடு சேர்ந்தார். வேட்கை கிளர்ந்து கிளர்ந்து பரவையாரை முடுக்கலாயிற்று. பரவையார் மலரணையில் அமர்ந்தார்; தோழியைப் பார்த்தார்; 'நாம் கோயிலுக்குப் போனபோது நமக்கு எதிரே வந்தவர் யார்?' என்று கேட்டார். தோழி, 'அவர் நம்பியாரூரர்; தம்பிரான் தோழர்; சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப் பெற்றவர்' என்று கூறினார். ***'சிவனடியார்'*** என்று கேட்டதும் பரவையார்க்கு மேலும் காதல் பெருகலாயிற்று. காதல் பெருக்கு அவரைப் புலம்பவுஞ் செய்தது.

அன்பர்கள் வேண்டியவற்றை வேண்டியாங் களிக்குஞ் சிவபெருமான், 'பரவை நாயகியாரை நம்பியாரூரருக்குத் திருமணம் செய்து கொடுங்கள்' என்று திருவாரூர் நேயர்களுக்குக் கட்டளை யிட்டார்; அதனை வன்தொண்டருக்கும் பரவையாருக்குந் தெரிவித்தார். அடுத்தநாள் காலையில், சிலநேயர்கள் எல்லாரும் ஒருங்கு சேர்ந்து திருவருளை வழுத்தினர்; வழுத்திப் பரவையாரைத் தம்பிரான் தோழருக்குத் திருமணஞ் செய்து கொடுத்தனர். இருவரும் இன்பவாழ்வு நடாத்தி வந்தனர்.

### திருத்தொண்டத்தொகை அருளல்

வழக்கம்போல் நம்பியாரூரர் ஒருநாள் திருக்கோயிலுக்குச் சென்றார்; தேவாசிரிய மண்டபத்திலே கூடியிருந்த திருத்தொண்டர் களைக் கண்டார்; 'இவர்களுக்கு யான் அடியன் ஆகும் நாள்

எந்நாள்?' என்று கருதிக்கொண்டே சிவசந்நிதியை யடைந்தார். அதை அறிந்த தியாகேசப் பெருமான், வன்தொண்டர் முன்னே தோன்றினார். அடியவருடைய வழித்தொண்டை அவருக்கு உணர்த்தினார்; அவர்கள்மீது பதிகம் பாடும்படி நாவலூரருக்குக் கட்டளை இட்டார். தம்பிரான் தோழர், 'யான் சிறியேன்; அடியவர்கள் இயல்பை அறியேன்; அவர்கள் திறத்தை என்னென்று பாடுவேன்! திருவருள் துணை வேண்டும்' என்று முறையிட்டார். சிவபெருமான், 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடி எடுத்துக் கொடுத்தருளினார். உடனே நாவலர்பெருமான், தேவாசிரிய மண்டபத்தை அடைந்தார்; திருக் கூட்டத்தை வணங்கினார்; திருத்தொண்டத் தொகையை அருளிச்செய்தார்; மீண்டும் திருக்கூட்டத்தைத் தொழுதார். ஆனந்த வெள்ளத்துள் அழுந்தினார்; பின்னே வீடு சேர்ந்தார்.

### நெல் பெற்றது

குண்டையூரிலே ஒரு கிழவர் இருந்தார். அவர் வேளாளர். அக்குண்டையூர்க் கிழார், தம்பிரான் தோழரின் சிறப்புக்களைக் கேள்வியுற்று அவருக்கு அன்பராயினார். குண்டையூரர், தம்பிரான் தோழருக்குத் திருவமுதாகும்படி, செந்நெல் - பருப்பு முதலிய வற்றைப் பரவையார் திருமாளிகைக்கு அனுப்பிவைத்தனர். வருநாளில், மழைவளஞ் சுருங்கியது. ஒரு நாள் கிழவருக்குப் போதிய நெல் கிடைக்கவில்லை. கிழவர் வருந்தினார்; உணவுங் கொண்டா ரில்லை; நேர்ந்த குறையை நினைந்துகொண்டே துயின்றார். அவர்தங் கனவிலே சிவபிரான் தோன்றி, 'ஆரூரனுக்காக உனக்குப் போதிய நெல் அளித்தோம்' என்றார்; உடனே குபேரனை ஏவினார். குபேரன் குண்டையூர் முழுவதும் மலைமலையாக நெல்லைக் குவியச் செய்தான். நெற்குவியல்களால் விண்ணும் மறைந்தது. எங்கும் நெல் மயமாகவே இருந்தது. பொழுது விடிந்தது. குண்டையூர்க்கிழவர் விழித்து எழுந்தார்; நெல் மலைகளைக் கண்டார்; திருவருளை வியந்தார்; வன்தொண்டரை எண்ணினார்; 'இந்நெல்லை யரால் எடுத்தல் கூடும்! இதனை வன்தொண்டர்க்குத் தெரிவிப்பேன்' என்று திருவாரூர் நோக்கினார்.

இந்நிகழ்ச்சியைச் சிவபிரான் நம்பியாரூரர்க்குத் தெரிவித்தார். நம்பியாரூரர் குண்டையூரை நோக்கிவந்தார். குண்டையூர்க் கிழவர் ஆரூரரைக் கண்டார்; வணங்கினார்; ஆண்டவன் அருட் செயலையும், நெல்லெடுத்தனுப்புதல் இயலாமையையும் விளக்கி னார். இருவருங் குண்டையூரைச் சேர்ந்தனர். நாவலர் பெருமான், நெல்மலைகளைக் கண்டார்; சிவபிரானைப் போற்றினார்; 'இவைகளை எடுத்துச் செல்லச் சிவபிரான் அருளால் ஆட்கள் பெறுதல் வேண்டும்' என்று எண்ணி, அருகேயுள்ள திருக்கோளிலி

என்னும் திருப்பதிக்குப் போனார்; கோயிலுக்குள் நுழைந்தார்; 'நீள நினைந்தடியேன்' என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார்; அதன் வாயிலாக 'ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே' என்று வேண்டினார். அப்பொழுது சிவபெருமான் திருவருளால், 'இன்று இரவு பூதகணங்கள் நெல்மலைகளைத் தூக்கி வரும்' என்று வானில் ஓர் ஒலி எழுந்தது. தம்பிரான் தோழர் திருவாரூரரை அடைந்து, இறைவனைத் தொழுது, பரவையாரிடம் நிகழ்ந்ததைச் சொன்னார்.

அன்றிரவே பூதகணங்கள் நெல்மலைகளைத் திருவாரூரில் சேர்த்தன. பொழுது புலர்ந்தது. திருவாரூர் வாசிகள், எங்கணும் நெல் மலைகளைக் கண்டார்கள்; 'இவை பரவையாருக்கு நம்பியாரூர ரால் அளிக்கப்பட்டவை' என்றும், 'நடப்பதற்கும் வழியில்லையே' என்றும், 'இவ்வளவு நெல்லைப் பரவையார் எங்கே வைப்பார்' என்றும் பேசினார்கள். பலர் வீட்டைவிட்டு வெளியே வந்தாரில்லை. சிறிது நேரத்திற்குள் பரவையார், 'அவரவர் வீட்டின் எல்லையில் உள்ள நெல்லை அவரவர் எடுத்துக்கொள்ளலாம்' என்று பறையறைவித்தார். மக்கள் அவ்வாறே செய்து மகிழ்வெய்தினார்கள்.

**சிங்கடி - வனப்பகை - அப்பனாதல்**

திருநாட்டியத்தான்குடியில் கோட்புலியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர், திருவாரூரை அடைந்து, வன்தொண்டரைக் கண்டு தொழுதார்; தம் ஊருக்கு வருமாறு ஆரூரரை வேண்டினார். அவர்தம் வேண்டுகோளுக்கு ஆரூரர் இணங்கினார். கோட்புலியார் மகிழ்ச்சியுடன் தம் ஊருக்குத் திரும்பினார். பின்னர்த் தம்பிரான் தோழர் திருநாட்டியத்தான்குடி நோக்கினார். கோட்புலியார் நம்பியாரூரரை முறைப்படி எதிர்கொண்டார். நம்பியாரூரர் கோட்புலியார் வீடு சேர்ந்து, அவ்வன்பர் விருந்தினராய் இருந்தார்.

கோட்புலியார் , தம் புதல்விகளாகிய **சிங்கடியாரையும், வனப்பகையாரையும்** அழைத்து வந்தார். அவர்கள் வன் தொண்டரைப் பணிந்து நின்றார்கள். அப்பொழுது, கோட்புலியார், நாவலர் பெருந்தகையைப் பார்த்து, 'அடிகளே இவ்விருவரையும் ஆட்கொண் டருளல்வேண்டும்' என்று முறையிட்டார். அதற்குப் பரவையார் கணவர், 'இவ்விருவரும் எனக்குப் புத்திரிகள்' என்று கூறினார்; அம்முறையில் அவர்களை உச்சிமோந்தார்; திருக் கோயிலுக்குப் போனார்; பதிகம் பாடினார். அன்றுமுதல் நாவலூரரர் தம்மைச் 'சிங்கடியப்பன்' என்றும், 'வனப்பகையப்பன்' என்றும் தாம் பாடும் பதிகங்களில் அமைத்துப் பாடலானார். வன்தொண்டப் பெருமான் அங்கிருந்து திருவலிவலம் போய்த் தமிழ் பாடித் திருவாரூரைச் சேர்ந்தார்.

### செங்கல் பொன்னாயது

*பங்குனி உத்திரத் திருநாள் நெருங்கிற்று. பரவையார்க்குச் செலவுக்குப் பொன் தேவையா யிருந்தது. அதன் பொருட்டு நாவலர்பெருமான் திருப்புகலூருக்குச் சென்றார்; திருப்பதிகம் பாடித் தங் கருத்தைச் சிவசந்நிதியில் குறிப்பாக முறையிட்டார்; முறையிட்டு அருகேயுள்ள திருமடத்துக்குச் சென்றாரில்லை; கோயில் முற்றத்தின் ஒரு பக்கத்தில் அமர்ந்திருந்தார். அப்பொழுது சிவபிரான் திருவருளால் வன்தொண்டருக்கு உறக்கம் வந்தது. அவர் கோயில் திருப்பணிக்கென அங்கே இருந்த செங்கற்களை எடுத்தார்; தலையணையாக வைத்தார்; வெண்பட்டாடையை விரித்தார்; பள்ளி கொண்டார். உடனிருந்த அடியார்களும் உறங்கினார்கள்.*

*வன்தொண்டர் சிறிது நேரம் உறங்கி விழித்தெழுந்தார்; செங்கற்களெல்லாம் பொன்கற்களாக மாறி இருப்பதைக் கண்டார்; சிவனருளை வியந்தார்; திருக்கோயிலுள்ளே நுழைந்தார்; 'தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்' என்னுந் திருப்பதிகம் பாடினார்; பாடிப் பொன்னை எடுத்துத் திருப்பனையூரைச் சேர்ந்தார். அங்கே சிவபெருமான் திருக்கூத்துக் காட்சி வழங்கினார். நாவலர் பெருமான், 'அரங்கில் ஆடவல்லார் அவரே அழகியரே' என்று பாடித் திருவாரூருக்கேகினார்.*

*நம்பியாரூரர் சிலநாள் திருவாரூரில் இருந்தார். பின்னே அவர், திருநன்னிலம், திருவீழிமிழலை, திருவாஞ்சியம், திருநரையூர், அரிசிற்கரைபுத்தூர், திருவாவடுதுறை, திருவிடமருதூர், திருநாகேச்சுரம், சிவபுரம், திருக்கலைய நல்லூர், கும்பகோணம், திருவலஞ்சுழி, திருநல்லூர், திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி முதலிய திருப்பதிகளுக்குச் சென்றார்; ஆங்காங்கே, சிவபெருமானை வழிபட்டுத் திருப்பதிகம் பாடினார்.*

### பொன் பெறல்

*தம்பிரான் தோழர் திருவாலம்பொழிலைத் தொழுது, அன்றிரவு அங்கே தங்கிப் பள்ளிகொண்டார். சிவபெருமான் அவர்தங் கனவிலே தோன்றி, 'மழபாடியை மறந்தாயோ' என்று கேட்டருளினார். தோழர் விழித்து எழுந்தார்; திருமழபாடிக்குச் சென்றார்; 'பொன்னார் மேனியனே' என்னும் திருப்பதிகம் பாடினார்; அவ்விடத்தில் சிலநாள் தங்கினார்; பின்னர் அங்கிருந்து திருவானைக்கா அணைந்து, 'மறைகளாயின நான்கும்' என்று பாடினார்; அதில் சோழ மன்னருக்குச் சிவபெருமான் அருளிய பெருமையைச் சிறப்பித்தார்; அத்திருப்பதியை விடுத்துத் திருப்பாச்சி லாச்சிராமஞ் சேர்ந்தார். அங்கே சிவபெருமான் வன் தொண்டருக்குப் பொன் அளிக்கவில்லை. தம்பிரான் தோழர், 'இவரல்லா தில்லையோ பிரானார்' என்று பாடிப் பொன் பெற்றார்; சில நாள் அங்கே*

வதிந்தார்; பின்னர்த் திருப்பைஞ்ஞீலி, திருஈங்கோய் மலை முதலிய திருப்பதிகளைத் தொழுது கொங்கு நாடு நோக்கினார்.

வன்தொண்டப் பெருமான் திருப்பாண்டிக்கொடுமுடிக்குச் சென்றார்; 'மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்' என்னும் பஞ்சாக்கரப் பதிகத்தைப் பாடியருளினார்; பல திருப்பதிகளைத் தொழுது பாடித் திருப்பேரூரைச் சேர்ந்தார். அங்கே சிவபெருமான், தாம் தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடும் திருக்கூத்தைக் காட்டியருளினார். வன்தொண்டர் அக்காட்சி கண்டு ஆனந்தமுற்றார். 'தில்லைக்கு ஏகுதல் வேண்டும்' என்னும் வேட்கை அவர்பால் முருகி எழுந்தது. அவ்வேட்கையுடன், அவர், திருவெஞ்ச மாக்கூடலை அடைந்தார்; இறைவனை வழிபட்டார்; அங்கிருந்து சோழநாடு போந்து, திருக்கற்குடி, திருவாறைமேற்றளி, திரு இன்னம்பர், திருப்புறம்பயம் முதலிய திருப்பதிகளைத் தொழுது திருக்கூடலையாற்றூரை அணுகினார்.

வன்தொண்டர் திருக்கூடலையாற் றூருக்குப் போகாது, திருமுதுகுன்றை நோக்கி நடந்தார். வழியிலே சிவபெருமான் ஒரு கிழவேதியராய் வீற்றிருந்தார். வன்தொண்டர் அவரைப் பார்த்துத் திருமுதுகுன்றுக்கு வழி கேட்டார். 'கூடலை யாற்றூருக்குப் போகும்வழி இது' என்றுசொல்லி, வேதியர் வன்தொண்டருடன் சென்று திடீரென மறைந்தார். வன்தொண்டர், 'அடிகள் இவ்வழிப் போந்த அதிசயம் அறியேனே' என்று பாடினார்; திருக்கூடலை யாற்றூருக்குச் சென்றார்; இறைவனைத் தொழுதார்; அங்கிருந்து திருமுதுகுன்றை அடைந்தார்; சிவபெருமானை வழிபட்டுத் தமிழ்மாலை சாற்றினார்.

## பொன்னை ஆற்றிலிட்டுக் குளத்திலெடுத்தல்

முதுகுன்றப் பெருமான், தந் தோழர்க்குப் பன்னீராயிரம் பொன் கொடுத்தார். நம்பியாரூரர், சிவபெருமானை வணங்கி, 'இப்பொன் முழுவதும் திருவாரூர்க்கு வருதல் வேண்டும். அதனால் திருவாரூர் மக்களுக்கு ஒரு வியப்புத் தோன்றுதல்வேண்டும்' என்று வேண்டினார். அப்பொழுது 'ஆரூர! இப்பொன் எல்லாவற்றையும் இம் மணிமுத்தா நதியிலே இடுவாயாக; திருவாரூர் திருக்குளத்திலே எடுத்துக்கொள்வாயாக' என்று ஒரு வாக்கு எழுந்தது. அது கேட்ட வன்தொண்டர் மகிழ்வெய்தினார்; [1]மச்சம் வெட்டி எடுத்துக் கொண்டார்; திருவருள் ஆணைப்படி பொன் எல்லாவற்றையும் மணிமுத்தா நதியில் இட்டார்; இட்டு, 'என்னை வலிந்து ஆண்டருளிய இறைவன் திருவருளை இதில் பார்ப்பேன்' என்று நினைக்கலானார்.

1. மாற்றுநிலை அறிய வெட்டி எடுக்கும் பொன்.

வன்தொண்டர் திருமுதுகுன்றை விடுத்தார்; தில்லையை நோக்கினார்; வழியில் திருக்கடம்பூர் முதலிய திருப்பதிகளுக்குச் சென்றார்; ஆங்காங்குப் பதிகம் பாடித் தில்லை சேர்ந்தார்; தில்லைக் கூத்தனைக் கண்டு வணங்கினார்; 'மடித்தாடும் அடிமைக்கண்' என்னுந் திருப்பதிகத்தை ஓதினார்; அதிலே, தாம் திருப்போரூரில் கண்ட காட்சியை அமைத்துச் சிறப்பித்தார்; பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருக்கருப்பறியலூர், திரு மண்ணிப் படிக்கரை, திருவாழ்கொளிபுத்தூர், திருக்கானாட்டு முள்ளூர், திருஎதிர் கொள்பாடி, திருவேள்விக்குடி முதலிய திருப்பதிகளைத் தொழுது தொழுது திருவாரூரை நண்ணினார்.

தம்பிரான் தோழன் திருமுதுகுன்ற நிகழ்ச்சியைப் பரவை யாருக்கு விளக்கிச் சொன்னார். பரவையார் வியப்புற்று, 'இஃ தென்ன அதிசயம்!' என்று புன்னகை செய்தார். வன்தொண்டர், 'பரவையே! திருக்குளத்தில் பொன்னை எடுக்கலாம் வா' என்றார். இருவரும் திருக்கோயிலுக்குச் சென்றனர்; திருவாரூர்ப் பெருமானை வணங் கினர்; திருக்குளத்தை அடைந்தனர். தம்பிரான் தோழர், பரவையாரைக் கரையிலே நிறுத்திவிட்டுத் தாம் குளத்திலே இறங்கினார்; பொன்னைத் தடவினார். அவரது பாட்டின் பயனாக உள்ள சிவபெருமான் அவரைப் பாடுவிக்க விரும்பினார். அதனால் ஆரூரருக்குப் பொன் கிடைக்கவில்லை. கரையில் உள்ள பரவையார், 'இஃதென்ன! ஆற்றில் இட்டுக் குளத்தில் தேடுவதா? இதுதான் அருள்போலும்!' என்று நகைத்தார். ஆரூரர், பொன் செய்த மேனியினீர்' என்னும் திருப்பதிகத்தை எடுத்துப் , 'பரவை இவள் தன் முகப்பே என் செய்தவா றடிகேள்' என்று பாடியருளினார்; ஒன்பதாம் பாட்டில் 'ஏத்தா திருந்தறியேன்' என்று இரங்கினார். உடனே பொன்திரள் புலனாயிற்று. வன்தொண்டர் அதை எடுத்துக் கரை ஏறினர்; அப்பொன்னையும் தாம் கொண்டு வந்த மச்சத்தையும் உரைத்துப் பார்த்தார். பார்க்கவே, குளத்தினின்றும் எடுக்கப்பட்ட பொன்னின் உரை தாழ்ந்திருந்தது. நம்பியாரூரர் வருந்திச் சிவபெருமானைப் பாடினார். பின்னே உரை ஒத்தது. நம்பியாரூரர் மகிழ்வெய்தினார். பொன்னெல்லாம் பரவையார் வீட்டுக்கு அனுப்பப் பட்டன. வன்தொண்டரும் பரவையாரும் திருக்கோயிலுக்குப் போய் இறைவனைத் தொழுது வீடு சேர்ந்தனர்.

சில நாட்கள் கழிந்தன. நம்பியாரூரருக்கு 'இன்னும் பல திருப்பதி களைக் கண்டு தொழுதல் வேண்டும்' என்னும் வேட்கை எழுந்தது. எழவே, அவர் திருவாரூரை விடுத்துத் திருநள்ளாறு, திருக்கடவூர் மயானம், திருக்கடவூர் வீரட்டம், திருவலம்புரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருநனிபள்ளி, திருச்செம்பொன்பள்ளி, திருநின்றி யூர், திருநீடூர், திருப்புன்கூர் முதலிய திருப்பதிகளுக்குச் சென்றார்; ஆங்காங்கே ஆண்டவனை வழிபட்டுப் பதிகம் பாடினார்;

திருக்கோலக்காவை அடைந்தார்; இறைவனைத் தொழுது தமிழ் பாடினார்; அதில் ஞானசம்பந்தப் பெருமான் தாளம் பெற்றதைச் சிறப்பித்தார்; அங்கிருந்து சீர்காழி சேர்ந்தார்; எல்லையை வலம்வந்து ஆண்டவனை வணங்கினார்; ஞானசம்பந்தரையும் வழுத்தினார்; வழுத்தித் திருக்கருகாவூருக்குப் புறப்பட்டார்.

### தண்ணீரும் பொதிசோறும்

வழியில் பசியும் தாகமும் நம்பியாரூரரை வருத்தின. சிவ பெருமான் அதையுணர்ந்து, ஒரு வேதியராய், வழியில் ஓரிடத்தில் பந்தர் அமைத்துத் தண்ணீர், பொதிசோறு முதலியன வைத் திருந்தார். தம்பிரான்தோழர் திருக்கூட்டத்தோடு அவ்விடத்துக்கு வந்தார்; பந்தரைக் கண்டார்; பந்தரின் கீழே போய், ‘சிவாயநம சிவாயநம’ என்று ஓதிக்கொண்டிருந்தார். அருகே இருந்த வேதியர், வன்தொண்டரைப் பார்த்து, ‘நீர் மிகப் பசித்ததிருக்கீறீர் போலும்; என்னிடத்தில் பொதிசோறு இருக்கிறது. அதை உண்டு தண்ணீர் அருந்தும்; இளைப்பாறும்’ என்றார். நம்பியாரூரர் அதற்கு இசைந்தார். வேதியர் பொதிசோற்றைத் தந்தார். நம்பியாரூரரும் அவர்தம் அடியார்களும் அச்சோற்றை உண்டார்கள். அஃது எல்லோர்க்கும் பயன்படு முறையில் வளர்ந்தது. எல்லாரும் தண்ணீர் அருந்தினர். நம்பியாரூரர் வேதியருடன் பேசிக் கொண்டே உறங்கினர். மற்றவர்களும் உறங்கினார்கள். நம்பியாரூரர் விழித்து எழுந்தார். வேதியரையுங் காணோம்; பந்தரையுங் காணோம். ‘இத்தனை யாமாற்றை அறிந்திலேன்’ என்று பாடித் தம்பிரான் தோழர் திருக்கருகாவூரைச் சேர்ந்தார்; அங்கே சிலநாள் தங்கினார்; பின்னே, திருக்கழிப்பாலை, தில்லை, திருத்தினைநகர் முதலிய திருப்பதிகளை வணங்கித் திருநாவலூர் போந்தார். அன்பர்கள் எதிர் கொண்டார்கள். வன்தொண்டர் அவர்களுடன் கலந்து இறைவனைத் தொழுதார்; அங்கே சிலநாள் இருந்தார். அப்பொழுது நம்பியாரூரர்க்குத் தொண்டைநாட்டின்மீது எண்ணஞ் சென்றது. செல்லவே, அவர் தொண்டை நாட்டை நோக்கிப் புறப்பட்டார்.

### சோறுங் கறியும் இரந்தளித்தல்

வன்தொண்டர் தொண்டைநாடு புகுந்து திருக்கழுக்குன்றம் சேர்ந்தார்; சிவபெருமானைத் தொழுதார்; பதிகம் பாடினார்; அங்கிருந்து திருக்கச்சூர் ஆலக்கோயிலுக்கு எழுந்தருளினார்; அங்கே சிவபெருமானை வழிபட்டு வெளியே வந்தார். சாப்பாட்டு வேளை வந்தது. சமையல் செய்வோர் வரவில்லை. நம்பியாரூரர்க்குப் பசிமேலிட்டது. அவர் மதிலின் ஒரு புறத்தே தங்கினார். அப்பொழுது சிவபிரான், ஒரு மறையவராய் நம்பியாரூரரை அணைந்து, ‘நீர் பசித்திருக்கிறீர் போலும். யான் இரந்து சோறு கொண்டு வருகிறேன்.

இங்கே இரும்' என்று அருளிச்செய்தார்; அப்படியே அவர் சோறும் கறியும் இரந்து வந்தார்; வன்தொண்டருக்குக் கொடுத்தார். வன் தொண்டர் அடியவர்களுடன் சோறு உண்டார். உண்டதும் மறையவர் மறைந்தார். 'வந்தவர் சிவபெருமான்' என்று அறிந்து, நாவலர் பெருமான், 'முதுவாய் ஓரி கதற' என்னுந் திருப்பதிகத்தை அருளினார்.

பின்னர்த் தம்பிரான் தோழர், திருக்கச்சூரை விடுத்துத் திருக் காஞ்சியை அடைந்தார்; திருஏகம்பத்தைத் தொழுது பதிகம் பாடினார்; காமக்கோட்டத்தையும் கண்டு தொழுதார்; அங்கிருந்து, திருமேற்றளி, திருஓணகாந்தன்றளி, திருஅநேகதங்காபதம், திருப்பனங்காட்டூர், திருமாற்பேறு, திருவல்லம் முதலிய திருப்பதி களுக்குச் சென்று , சிவபெருமானை வழிபட்டுத் திருக்காளத்தி சேர்ந்தார்; காளத்தியப்பரை வணங்கினார்; தமிழ் பாடினார்; கண்ணப்பரைக் கண்டு தொழுதார்; அத்திருப்பதியில் இருந்து கொண்டே வட திசையிலுள்ள ஸ்ரீபருப்பதம், ஸ்ரீகேதாரமலை முதலிய திருத்தலங்களைப் பணிந்து பதிகம் பாடினார்; திருக் காளத்தியினின்றும் புறப்பட்டுத் திருவொற்றியூரை அடைந்தார்; அடைந்து, மூன்று வேளையும் எழுத்தறியும் பெருமானை வழிபட்டு வந்தார்.

**சங்கிலியார் திருமணம்**

ஞாயிறு என்னும் ஊரிலே வேளாளர் ஒருவர் இருந்தார். அவர் **ஞாயிறு கிழவர்** என்பவர். திருக்கயிலையிலே சுந்தரரைக் காதலித்த இருவருள் **அனிந்திதையார்** என்பவர், ஞாயிறு கிழவர்க்குப் புதல்வியராகப் பிறந்தார். அப்புதல்வியார் சங்கிலியார் என்னும் பெயர் சூட்டப்பெற்றார். சங்கிலியார், உமையம்மையாரிடத்து இயற்கை யன்புடையராய் வளர்ந்தார்; வளர்ந்து திருமணப் பருவம் எய்தினார். தாய் தந்தையர், 'சங்கிலியரைத்தக்க ஒருவர்க்குத் திருமணஞ் செய்துகொடுத்தல்வேண்டும்.' என்று பேசிக் கொண்டனர். அப்பேச்சு, சங்கிலியார் காதில் விழுந்தது. சங்கிலியார், 'யான் ஒரு சிவனடியாருக்கு உரியவள்; இவர்கள் என் செய்வார் களோ!' என்று உள்ளங் கலங்கி மயங்கி விழுந்தார். தாய் தந்தையர் சங்கிலியாரை எடுத்தனர்; பனி நீர் தெளித்தனர்; சங்கிலியார் தெளிவடைந்தார். பெற்றோர், சங்கிலியாரைப் பார்த்து, 'உனக்கு உற்றது என்ன?' என்று கேட்டார். சங்கிலியார், தாய் தந்தையரை உற்றுநோக்கி, 'நீங்கள் பேசிய மாற்றம் எனக்குப் பிடிக்கவில்லை. யான் சிவனடியார் ஒருவருக்கு உரியவள். இனி யான் திருவொற்றி யூரை அடைந்து திருவருள் வழி நடப்பேன்' என்றார். பெற்றோர்க்கு நடுக்கமும் அச்சமும் உண்டாயின. சங்கிலியார் சொன்னதை வெளியிடாமல் அவர் வாழ்ந்துவந்தனர்.

**ஓற்றியில் சங்கிலியார்**

ஞாயிறு கிழவரது மரபில் தோன்றிய ஒருவன் இருந்தான். அவன், சங்கிலியாரை மணம்பேச ஞாயிறு கிழவர்பால் சில முதியோரை அனுப்பினான். அவனுக்குச் சங்கிலியார் நிலை தெரியாது. அம் முதியோர் ஞாயிறு கிழவரிடம் போந்து, தம்மை அனுப்பினவன் கருத்தைத் தெரிவித்தனர். ஞாயிறு கிழவர் என் செய்வார்! அவர், முதியோரிடம் ஒருவாறு இனிய மொழிகள் பேசி அவரை அனுப்பினர். முதியோர் வீடு சேர்வதற்கு முன், அவரை அனுப்பினவன், ஏதோ ஒரு தீங்குசெய்து மாண்டவனைப் போல மாண்டான். அச்செய்தி, ஞாயிறு கிழவருக்கு எட்டிற்று. அவரும் அவர்தம் மனைவியாரும், 'சங்கிலியார்பால் பேசத் தகாத மொழி களைப் பேசலாமா? இனிச் சங்கிலியார் வழி நடப்பதே நல்லது' என்று கருதலாயினர்; உண்மையை உறவினர்க்கு உணர்த்தினர். பின்னே, பெற்றவரும், மற்றவரும் ஒன்று சேர்ந்து, சங்கிலியாரைத் திருவொற்றி யூருக்கு அழைத்துச்சென்றனர்; ஆண்டவனை வழிபட்டனர்; ஒரு கன்னிமாடங் கட்டுவித்தனர்; அதிலே சங்கிலியாரை இருக்கும்படி செய்து, அவரை வணங்கி, விடைபெற்று வருத்தத்தோடு ஊருக்குத் திரும்பினர்.

சங்கிலியார் கன்னிமாடத்தில் இருந்துகொண்டு ஆண்ட வனை வழிபட்டு வந்,தார். அவருக்குப் பழைய திருக்கயிலாயத் திருத் தொண்டின் உணர்ச்சி முகிழ்க்கலாயிற்று. அதனால் சங்கிலியார், பூமண்டபத்தில் திரைசூழ்ந்த ஓரிடத்தில் இருந்து, பூமாலை கட்டித் திருக்கோயிலுக்கு அனுப்பிவந்தார்.

**சங்கிலியார் காட்சி**

நம்பியாரூரர் வழக்கம்போல ஒருநாள் திருக்கோயிலுக்குச் சென்றார்; இறைவனைத் தொழுதார்; அடியவர் செய்யுந் திருத் தொண்டுகளைத் தனித்தனியே கண்டு கண்டு வணங்கிச் செல்வா ரானார். அவர் பூமண்டபத்தின் உள்ளே புகுந்தபோது, சங்கிலியார் திரையை நீக்கி, ஆண்டவனுக்கு அணிதற் பொருட்டுப் பூமாலையைத் தோழிகளிடங் கொடுத்தார்; மின்போல் மறைந்தார். நம்பியாரூரர் அவரைக் கண்டார். இருவரையும் பண்டைவிதி கூட்டலாயிற்று.

வன்தொண்டர் வெளியே வந்தார்; அங்கிருந்த சிலரைப் பார்த்துப், 'பூமண்டபத்திலே திரைக்குள்ளே ஒரு நங்கையைக் கண்டேன். அவள் என் மனத்தைக் கவர்ந்தாள். அவள் யார்?' என்று வினவினார். அவர்கள், 'அவர் சங்கிலியார் என்போர்; கன்னிகை யார்; சிவபெருமானுக்குத் தொண்டு செய்வோர்' என்றார்கள். அதுகேட்ட வன்தொண்டர், 'இப்பிறவி இருவர் பொருட்டு அளிக்கப்பட்டது. அவருள் ஒருத்தி பரவை; மற்றொருத்தி இவள்தான்' என்று மருண்டார்; உடனே திருக்கோயிலுக்குச் சென்றார்; சிவபெருமானைக் கண்டார்;

சங்கிலியாரைத் தந்தருளுமாறு வேண்டினார்; வேண்டி, வெளியே வந்து, திருக்கோயிலின் ஒரு புறத்திலே இருந்து, சிவபெருமானை நினைந்து நினைந்து உருகலானார். மாலைக்காலம் வந்தது.

**சிவபெருமான் அணைதலும் சபதமும்**

சிவபெருமான தம் தோழர்பால் அணைந்தார்; 'ஆரூர! சங்கிலியை உனக்குக் கொடுக்கின்றோம்; கவலையை ஒழி' என்று அருளிச் செய்தார். வன்தொண்டர், 'பெருமானே! அன்று என்னைத் தடுத்தாட்கொண்டீர்; இன்று என் விருப்பத்துக்கு இணங்கி வந்தீர்; அருள் செய்தீர்' என்று வியந்து வணங்கி மகிழ்வெய்தினார்.

பின்னர்ச் சிவபெருமான், சங்கிலியார் கனவிலே தோன்றினார். சங்கிலியார் எழுந்தார்; தொழுதார்; ஆனந்தப் பரவசரானார்; 'என் தவமே தவம்! பெருமான் எழுந்தருளினார்' என்று மீண்டும் வணங்கினார். சிவபெருமான், அம்மையாரைப் பார்த்துச் , 'சங்கிலி! நம்பியாரூரன் என்பவன், நம் மாட்டுப் பேரன்புடையவன்; நம்மால் தடுத்தாட்கொள்ளப் பெற்றவன். அவன் உன்னை மணஞ்செய்ய விரும்பி என்னை வேண்டினான். அவன் விருப்பத்துக்கு நீ உடன்படுவாயாக' என்று திருவாய் மலர்ந்தருளினார். சங்கிலியார், 'பெருமான் ஆணைப்படி இசைகிறேன்; ஆனால் திருமுன்னே முறையிட்டுக்கொள்ள வேண்டுவது ஒன்றுண்டு' என்று தொழுதார்; தொழுது, நாணத்துடன், 'வன்தொண்டர், திருவாரூரில் மகிழ்ச்சியுடன் வாழ்பவர். இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்றார். சிவ பெருமான், வன்தொண்டர் நிலையை உணர்ந்து, சங்கிலி! அவன் உன்னைப் பிரிந்து போகாதவாறு ஒரு சபதஞ் செய்து கொடுப்பான் என்று கூறியருளினார்.

சிவபெருமான் மீண்டும் நம்பியாரூரரிடம் எழுந்தருளினார்; எழுந்தருளி, 'நம்பி! சங்கிலியைக் கண்டோம்; உன் கருத்தைத் தெரிவித்தோம். ஒரு குறையுண்டு. அக்குறையைத் தீர்த்தல்வேண்டும்' என்றார். வன்தொண்டர், 'அஃதென்ன?' என்று கேட்டார். சிவபெரு மான், "அவன் முன்னிலையில், 'உன்னைப் பிரிந்து போகேன்' என்று ஒரு சபதம் இன்றிரவே செய்துகொடு" என்றார். நம்பியாரூரர், 'எதைச் செய்தல் வேண்டுமோ அதைச் செய்வேன்; உமது அருள் வேண்டும்' என்றார்.

சிவபெருமான், 'இன்னும் என்னவேண்டும்?' என்று கேட்டார். தம்பிரான் தோழர், 'இச்சபதம், பிற பதிகளை வணங்குதற்கு இடையூறு செய்யுமே!' என்று எண்ணலானர்; எண்ணிப் பெருமானை வணங்கிப், 'பெருமானே! சபதஞ் செய்து கொடுக்கச் சங்கிலியோடு திருச் சந்நிதிக்கு வருவேன். அப்போது அடிகள், திருமகிழின்கீழ் எழுந் தருளல் வேண்டும்' என்று வேண்டினார். சிவபெருமான் அதற்கு இசைந்தார்; இசைந்து மீண்டுஞ் சங்கிலியாரிடஞ் சென்றார்;

சென்று, 'சங்கிலி! ஆரூரன் சபதஞ் செய்துகொடுக்க இசைந்தான்; அதன் பொருட்டு உன்னுடன் கோயிலுக்கு வருவான். அப்பொழுது மகிழின்கீழ்ச் சபதஞ் செய்துகொடுக்குமாறு அவனை நீ கேட்பாயாக' என்று அருளிச் செய்தார். சங்கிலியார் சிவபெருமான் கருணையைப் போற்றி நின்றார். சிவபெருமான் திருவுருக்கரந்தார்.

## இருவர் சந்திப்பு

சங்கிலியார், திருவருளை நினைந்து துயிலாதவரானார்; தோழிமாரை எழுப்பினார்; நிகழ்ந்ததைக் கூறினார். தோழிமார் மகிழ்வெய்தி, அம்மையாரைத் தொழுதார். திருப்பள்ளி எழுச்சிக்கு மலர்தொடுக்கும் பொழுதாயிற்று. சங்கிலியார் தோழிமாருடன் திருக்கோயிலுக்குப் புறப்பட்டார். தம்பிரான், தோழர் முன்னரே எழுந்து, சங்கிலியார் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். அவர் சங்கிலியாரைக் கண்டார்; அருகே சென்றார்; சிவபெருமான் அருளிச் செய்ததைச் சொன்னார். சங்கிலியார், நாணத்தால் ஒன்றுங் கூறாது திருக்கோயிலை நோக்கி நடந்தார். அவரைத் தொடர்ந்து போனார். எல்லாரும் சிவசந்நிதி சேர்ந்தனர்.

## மகிழின் கீழ்

நம்பியாரூரர், சங்கிலியாரைப் பார்த்து, 'நான் உன்னைப் பிரியேன் என்று சபதஞ் செய்து கொடுத்தல் வேண்டும். முன்னே வா' என்று கூறினார். சங்கிலியார் வாயிலாக எல்லாவற்றையும் உணர்ந்துள்ள தோழிமார், 'அடிகள் இதற்காக இறைவன் முன் சபதஞ் செய்தல் தகாது' என்றனர். நம்பியாரூரர் சிவபெருமானின் திருவிளையாடலை அறியாதவராய்ப், 'பின்னை எங்கே சபதஞ் செய்து கொடுத்தல் வேண்டும்?' என்று கேட்டார். தோழிமார், 'மகிழின் கீழ்' என்றார். வன்தொண்டர் மருள்வாரானார்; வேறு வழியில்லை! என்செய்வார்! 'அப்படியே செய்கிறேன் வாருங்கள்' என்றார். எல்லாரும் மகிழின்கீழ்ச் சென்றனர். சங்கிலியார் காணுமாறு தம்பிரான் தோழர் மகிழை மும்முறை வலம் வந்தார்; வந்து, 'யான் சங்கிலியைப் பிரியேன்' என்று சபதஞ்செய்து கொடுத்தார். அதைக் கண்ட சங்கிலியார் கலங்கினார்; 'சிவ பெருமான் ஆணையால் பாவியேன் இக்காட்சி கண்டேன்' என்று நைந்து, ஒரு பக்கத்திலே மறைந்து வருந்தினார். நம்பியாரூரர் திருக்கோயிலுள் நுழைந்து, ஆண்டவனை வாழ்த்திச் சென்றார். சங்கிலியார், வழக்கம்போலத் தமது திருத்தொண்டைச் செய்து கன்னிமாடத்துக் கேகினார்.

சிவபெருமான், அன்றிரவு திருவொற்றியூரிலுள்ள தொண்டர்கள் கனவில் தோற்றி, வன்தொண்டருக்குச் சங்கிலியாரைத் திருமணஞ்செய்து கொடுக்குமாறு கட்டளை யிட்டார். தொண்டர்கள் சிவபணியை அடுத்த நாளே நிறை வேற்றினார்கள். தம்பிரான்

தோழர், சங்கிலியாரோடு இன்பம் நுகர்ந்து திருவொற்றியூரில் வாழ்ந்து வந்தார்.

### இரண்டு கண் மறைவு

தென்றற் காலம் வந்தது. தென்றற் காற்று நம்பியாரூரருக்குத் திருவாரூர் வசந்த விழா நினைவை யூட்டிற்று. ‘எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே’ என்று ஆரூரர் பாடினார். நாளுக்குநாள் திருவாரூர் வேட்கை அவர்பால் முறுகி எழலாயிற்று. ஒருநாள் நாவலர் பெருமான், திருக்கோயிலுக்குப் போய், ஆண்டவனைத் தொழுது, திருவொற்றியூரை விட்டு நீங்கினார். நீங்கினதும், அவர் தம் இருவிழியும் மறைந்தன. நம்பியாரூரர் மூர்ச்சித்தார்; துார்ச்சித்தார்; திகைத்தார்; பெருமூச்சு விட்டார்; ‘சபதம் தவறினமையால் இத்துன்பம் நேர்ந்தது’ என்பதை உணரலானார்; ‘சிவநாதனைப் பாடியே இத்துன்பத்தைப் போக்கிக் கொள்வேன்’ என்று உறுதி கொண்டார்; ‘அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்’ என்னுந் திருப்பதிகத்தை அருளிச் செய்தார்; அதில், ‘ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்’ என்றும், ‘ஊன்றுகோல் எனக் காவதொன் றருளாய்’ என்றும், ‘உற்றநோய் உறுபிணி தவிர்த்தருளாய்’ என்றும் வேண்டுதல் செய்தார். ஊறு நீங்கவில்லை. ‘திருவாரூருக்குப் போதல் வேண்டும்’ என்னும் உறுதியினின்றும் நம்பியாரூரர் பிறழவில்லை. சிலர் வழிகாட்ட அவர் திருமுல்லைவாயிலுக்குச் சென்றார்; ‘சங்கிலிக்காக என்கண் கொண்ட பண்ப!’ என்று பாடினார்; அங்கிருந்து திருவெண்பாக்கம் சேர்ந்தார்; ‘திருக்கோயில் உள்ளீரோ?’ என்று சிவபெருமானைக் கேட்டார். சிவபெருமான், அவருக்கு ஊன்று கோல் தந்து, ‘உளோம் போகீர்’ என்றார். நம்பியாரூரர், ‘பிழையுளன பொறுத்திடுவர்’ என்னுந் திருப்பதிகத்தை ஓதிப் பழையனூர்த் திருவாலங்காட்டை அடைந்தார்.

### ஒற்றைக் கண் பெறல்

திருவாலங்காடு, காரைக்கால் அம்மையார் தலையாலே வலஞ் செய்த பெருமை யுடையது. அதனால் நம்பியாரூரர், அதன் அகத்தே நுழையாது புறத்தே நின்று, ‘முத்தா முத்தி தரவல்ல’ என்னுந் திருப்பதிகத்தை அருளினார்; அங்கிருந்து புறப்பட்டுத் திருவூறலைத் தொழுது, திருக்காஞ்சியை அணைந்தார்; திருக்காமக்கோட்டத்தை வணங்கித் திரு ஏகம்பத்தை நோக்கினார்; திருஏகம்பர் திருமுன் நின்று, ‘பெருமானே! கண்ணளித் தருளும்’ என்று வேண்டினார். இடக்கண்மட்டும் ஒளிபெற்றது. ஏகம்பநாதர் தமது காட்சியை வழங்கினார். வன்தொண்டர் மகிழ்வெய்தி, ‘எம்மானைக் காணக் கண்ணடியேன் பெற்றவாறே’ என்று வழுத்தினார்; அங்கே சிலநாள் தங்கினார்.

## மற்றொரு கண் பெறல்

பின்னர் நம்பியாரூரர் திருக்காஞ்சியை விடுத்தார்; ‘திருவாரூர் புக்கு எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே?’ என்று பாடிக்கொண்டே திருஆமாத்தூர் சேர்ந்தார்; அங்கே திருப்பதிகம் பாடித் திருஅரத்துறை நண்ணினார்; ‘எற்றே ஒரு கண்ணிலன் நின்னையல்லால் நெல்வாயில் அரத்துறை நின் மலனே - மற்றேல் ஒரு பற்றிலன்’ என்றுருகி ஓதினார்; ஓதித் திருவாவடுதுறை நோக்கினார்; ‘ஆரெனக்குறவு அமரர்களேறே!’ என்றும், ‘கண்ணிலேன் உடம்பில் அடுநோயால் கருத்தழிந்து உனக்கே பொறையானேன்’ என்றும் பரவித் திருத்துருத்திக்குப் போனார்; சிவபெருமானைத் தொழுதார்; ‘அடியேன்மீதுள்ள பிணியை ஒழித்தருளல் வேண்டும்’ என்று வேண்டினார். சிவபெருமான், நம்பியாரூரரைப் பார்த்து, ‘நம்பி! இக்கோயிலுக்கு வடபுறத்திலே ஒரு தீர்த்தம் உண்டு. அதில் மூழ்குவாயாக’ என்று அருளிச்செய்தார். நம்பியாரூரர் அப்படியே செய்தார். பிணி நீங்கிற்று. பொலிவு தோன்றிற்று. நாவலர் பெருமான், ‘என்னுடம் படும்பிணி இடர் கெடுத்தானை’ என்று ஆண்டவனை வாழ்த்தினார்; பிறகு பல திருப்பதிகளைக் கண்டு கண்டு வணங்கிக் கொண்டே திருவாரூர் அணைந்தார்; ஒற்றைக் கண்ணால் திருவாரூரைக் கண்டார்; மாலைக்காலத்திலே ஊருக்குள் நுழைந் தார்; முன்னே தூவாயாரை வணங்க விரும்பிப் பரவையுண் மண்டளி என்னுந் திருக்கோயிலுக்குச் சென்றார்; ஆண்டவனை வணங்கி மற்றும் ஒரு கண் தந்தருளுமாறு வேண்டினார்; ‘தூவாயா’ என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார்; அங்கிருந்து, நள்ளிரவிலே திருமூலட்டானத்துக்குப் போனார். அடியவர் எதிரே வந்தனர். தம்பிரான் தோழர் அவரைக் கண்டு, ‘குருகு பாய’ என்னுங் கைக்கிளைப் பதிகத்தை அருளினார்; தியாகேசப்பெருமானைக் கண்டார்; தொழுதார்; வலக்கண்ணை அருளுமாறு கேட்டார்; ‘மீளா அடிமை உமக்கே ஆளாய்’ என்னுந் தமிழ்மாலை சாத்தினார்; அதில், ‘எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிபட்டீர், மற்றைக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதீரே’ என்பதை அமைத்து ஓதினார். தியாகேசப் பெருமான், தந்தோழருக்கு வலக்கண்ணைக் கொடுத்தருளினார். நம்பியாரூரர், ஆண்டவனை இரு கண்ணாரக் கண்டார்; இன்ப வெள்ளத்தில் அழுந்தினார்; பின்னே, புறத்தே வந்து, தேவாசிரிய மண்டபம் போந்து அங்கே வீற்றிருந்தார்.

## பரவையார் புலவி

பரவையார், தம்மை நீண்டகாலமாக நம்பியாரூரர் பிரிந் திருந்தமையால், அவர்தம் நிலையைத் தெரிந்துவரச் சிலரை விடுத்தார்; அவர் வாயிலாக நம்பியாரூரர் திருவொற்றியூரிலே

சங்கிலியாரைத் திருமணஞ் செய்துகொண்டதை உணர்ந்தார். அதனால் பரவையார் துயரக்கடலில் அழுந்திக் கிடந்தார். நம்பியாரூரர் திருக்கோயிலுக்குப் போன போது, அவர் தம் பரிசனங்களிற் சிலர், பரவையார் வீட்டுக்குச் சென்றனர். அவர் உள்ளே நுழையாதவாறு தடுக்கப்பட்டார். அவர் திரும்பிவந்து, தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருந்த வன்தொண்டரைக் கண்டு, 'அடிகளே! நாங்கள் பரவையார் வீட்டுக்குச் சென்றோம்; உள்ளே நுழையாதவாறு தடுக்கப்பட்டோம்; திருவொற்றியூர்ச் செய்கை முற்றும் பரவையார் உணர்ந்திருக்கிறார்' என்று கூறினர். வன்தொண்டர் வருந்திப் பரவையார் செற்றந்தீர்க்கக் கற்ற மாந்தர் சிலரை அனுப்பினார். அவர் சென்று பரவையாரைக் கண்டனர்; பல நியாய உரைகளால் பரவையார் செற்றந் தீர்க்க முயன்றனர். பரவையார் அவரைப் பார்த்து, 'நம்பியாரூரர் குற்றம் பொருந்தி யவர்; அவர் சார்பில் ஒன்றும் பேசாதேயுங்கள்; இனிப் பேசின், என் உயிர் போய்விடும்' என்றார். அவர் நடுங்கி, வெளியே வந்து தம்பிரான் தோழரிடஞ் சென்று நிகழ்ந்ததைக் கூறினர்.

### சிவபெருமான் தூது சென்றமை

வன்தொண்டருக்குத் துயரம் பெருகிவிட்டது. பக்கத்துள்ள எல்லாரும் உறங்கினர். நள்ளிரவு உற்றது. நம்பியாரூரர் சிவபெருமானை நினைந்தார்; 'பெருமானே! இஃதென்ன வினை? இதற்கு மூலமா யிருப்பவள் பரவை. இந்த நள்ளிரவில் நீர் அவளிடஞ் சென்று, அவள் தன் புலவி தீர்த்தல் வேண்டும். இல்லையேல் யான் பிழையேன்' என்று முறையிட்டார். அப்பொழுது அங்கே சிவ பெருமான் எழுந்தருளினார். பெருமான் வன்தொண்டரைப் பார்த்துத், 'தோழனே! உனக்கு உற்றது என்ன?' என்று கேட்டார். வன்தொண்டர், சிவபெருமானை வணங்கி, "உமது அருளால் சங்கிலியைப் பெற்றேன். அதைப் பரவை கேள்வியுற்றாள். இப் பொழுது யான் அவளிடஞ் சென்றால், 'உயிர் விடுவேன்' என்கிறாள். யான் அடியன் என்பதும், நீர் தோழர் என்பதும் உண்மையானால் இன்றிரவே நீர் பரவைபால் சென்று, அவள் புலவியைத் தீர்த்தருள்க" என்று வேண்டினார். சிவபெருமான், 'நம்பி! இப்பொழுதே பரவை வீட்டுக்குத் தூதாகச் செல்வோம்' என்று சொல்லிப் புறப்பட்டார். சில தேவரும் முனிவரும், அன்பரும் சிவபெருமானைச் சூழ்ந்து சென்றனர். சிவபெருமான், பரவையார் மாளிகையை அடைந்தார். உடன் போந்தவர் அனைவரும் புறத்தே நின்றனர். சிவபெருமான் தம்மை அர்ச்சிக்கும் மறைமுனிவராய்க் கோலங்கொண்டு கதவைத் தட்டினார். துயிலின்றிக் கிடந்த பரவையார், 'என்ன! அர்ச்சகர் குரல்போல் இருக்கிறது! இந்நள்ளிரவில் அவர் இங்கு வருவானேன்!' என்று விரைந்து வந்து கதவைத் திறந்தார்; குருக்களைப் பார்த்தார்; 'சிவபெருமானைப் போல இங்கே நீர் எழுந்தருளினீர்; என்ன

செய்தி?' என்று கேட்டார். மறையவர், 'என் சொற்படி நடப்ப தாயின், யான் வந்ததைச் சொல்வேன்' என்றார். 'நீர் அதை அருளிச் செய்க; அது கூடுமானதாயின், அதன்படி நடப்பேன்' என்று பரவையார் கூறினார். அதுகேட்ட பெருமான், 'நம்பியாரூரர் உன்னிடம் வர, நீ இசைதல் வேண்டும்' என்றார். பரவையார், 'முனிவரே! உமது கூற்று நன்றாயிருக்கிறது! அவர் என்னைப் பிரிந்தார்; திருவொற்றியூரிலே சங்கிலியின் தொடக்குண்டார். அவருக்கு இங்கே என்ன சார்பு' என்று சொன்னார். அர்ச்சகர், 'நம்பியின் குற்றங்களை மனத்திற் கொள்ளாதே. உன் கோபதத்தைத் தணிக்கவே யான் இங்கே வந்தேன்; மறாதே' என்று வேண்டினர். பரவையார், 'இது குறித்து நீர் ஏன் வந்தீர்? இஃது உமது பெருமைக்குத் தகாது; போம்' என்றார். பெருமான், சிரித்துத் தமது உண்மைக் கோலத்தைக் காட்டாது நம்பியாரூரரிடம் திரும்பினார்.

நம்பியாரூரர், 'சிவபெருமானைத் தூதாக அனுப்பினேனே!' என்பார்; 'சிவபெருமான் என் செய்தாரோ!' என்பார்; 'பரவையின் புலவியைத் தீர்த்தே சிவபெருமான் மீள்வார்' என்பார்; இவ்வாறு பலபல பேசிப், பலபல நினைந்து, சிவபெருமான் வரவை எதிர் நோக்குவார்; அவரைக் காணாது திரும்புவார்; வருந்துவார். அச் சமயத்தில், சிவபெருமான் வந்தார். நம்பியாரூரருக்கு மகிழ்ச்சி பொங் கிற்று. அவர், 'அன்று அடியேனைத் தடுத்தாட்கொண்டீர்; இன்று பரவையின் புலவி தீர்த்து வந்தீர்' என்று சொன்னார். சிவபெருமான், வன்தொண்டரைப் பார்த்துத், 'தோழனே! நீ விரும்பியவாறு பரவை வீட்டுக்குச் சென்றோம்; உன் விருப்பத்தைத் தெரிவித்தோம். அவள் நம்மையும் நிந்தித்து மறுப்புரை கூறினாள்' என்றார். நம்பியாரூரர் நடுக்குற்று, 'உமது ஆணையைப் பரவையோ மறுக்க வல்லாள்! நஞ்சை உண்டீர் - தேவர்களை ஆண்டீர்; முப்புரம் எரித்தீர் - மூவர்க்கு அருள்செய்தீர்; காலனைக் காய்ந்தீர் - மார்க் கண்டர்க்குக் கருணை புரிந்தீர். அவர்கள் அன்பு எனக்கு ஏது? நீர் திரும்பிவந்தீர். என்னடிமை வேண்டாத நீர் அன்று ஏன் என்னைத் தடுத்தாட் கொண்டீர்? என் துன்பந் தீர்க்க மீண்டும் நீர் பரவையிடஞ் செல்லுதல் வேண்டும்; இல்லையேல் என் உயிர்போய் விடும்' என்று முறையிட்டு விழுந்தார். உடனே சிவபெருமான், 'நாம் பரவைபால் செல்வோம்; அவளை நீ அடையுமாறு இப்பொழுதே செய்வோம்; வருந்தாதே' என்று தேறுதல் கூறினார். வன்தொண்டர், சிவபெருமானைப் பணிந்து, 'அடியேன் பயங்கெடுத்து இவ்வாறு பணிகொள்வதன்றோ கருணை' என்று போற்றினார். சிவபெருமான் மீண்டும் பரவை வீடுநோக்கிப் புறப்பட்டார். முன்னர் அவருடன் சூழ்ந்து செல்லாத, தேவரும் மற்றவரும், இப்பொழுது அவரைச் சூழ்ந்து சென்றனர்.

மறையவர் திரும்பிய பின்னர், பரவையார் நெஞ்சில் 'வந்தவர் சிவபெருமான்' என்று விளங்கத்தக்க சில அறிகுறிகளும் அதிசயங்களும்

தோன்றின. பரவையார் நெஞ்சம் சுழன்றது. அவர், 'யான் பாவி; எம்பிரான்முன் எதிர் மொழி கூறினேன். தோழர் பொருட்டுப் பெருமான் குருக்கள் கோலந் தாங்கிவந்தார். மறுப்புரை வழங்கிவிட்டேன்' என்று வருந்திவருந்தி வாயிலையே பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது சிவபெருமான் எழுந்தருளினார். தேவர், முனிவர், யோகர், சித்தர் முதலிய எல்லாருஞ் சூழ்ந்திருந்தனர். பரவையார் மாளிகை, திருக்கயிலை யாயிற்று.

பரவையார் சிவபெருமானைக் கண்டார்; நடுக்குற்றார்; வணங்கினார்; சிவபெருமான், 'பரவையே! நம்மை நம்பி ஏவினான். மீண்டும் உன்பால் வந்தோம்; முன்போல் மறாதே; ஆரூரன் வர இசைதல் வேண்டும்' என்றார். பரவையார், 'முன் எழுந்தருளிவந்த மறையவர் நீவிரோ! என் தவமே தவம்! அன்பர் பொருட்டு அங்கும் இங்கும் உழன்றீர். யான் இசையாது என் செய்வேன்!' என்றார். அப்பொழுது சிவபெருமான், பரவையாரைப் பார்த்து, 'பரவையே! நீ உன் தன்மைக்கேற்ப நன்மையே மொழிந்தாய்' என்று திருவாய் மலர்ந்தருளினார். பரவையார் வணங்கி நின்றார். சிவபெருமான் உடனே புறப்பட்டார்; கங்கை ததும்ப விரைந்து நடந்தார். நம்பியாரூரர், 'என்ன பதில் வருமோ?' என்று ஏங்கிக்கொண் டிருந்தார்; சிவபெருமான் வருதலைக் கண்டார்; 'என்ன பதில்?' என்று கேட்டார். சிவபெருமான், 'பரவையின் கோபத்தைத் தணித்து விட்டோம்; நீ அவளிடம் செல்லலாம்' என்று மகிழ்ச்சியுடன் கூறியருளினார். அச்சொல் கேட்டதும், நம்பியாரூரர் கழிபேருவகை யுற்றார்; "பெருமானே!'போகமும் நீர் - மோட்சமும் நீர்' என்பது விளங்கலாயிற்று. இனி எனக்குத் துன்பம் ஏது?" என்று சிவபெருமானை வணங்கினார். சிவபெருமான் தோழருக்கு அருள் புரிந்து மறைந்தருளினார்.

வன்தொண்டர், பரவையார் வீடுநோக்கிச் சென்றார். உறங்கிக் கொண்டிருந்த அடியவர் எல்லாரும் விழித்து எழுந்து அவருடன் கலந்துகொண்டனர். பரவையார் மாளிகையை அலங்கரித்தார்; வாயிலிலே நின்று, ஆரூரர் வரவை எதிர்பார்த்து நின்றார். பரவையார் நம்பியாரூரரைக் கண்டார்; கண்டதும் அவரைத் தொழுதார்; ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார். அப்பொழுது நம்பியார், நங்கையாரின் கையைப்பற்றி உள்ளே புகுந்தார். முன்போல் இருவரும் இன்பம் நுகர்ந்து ஆண்டவனை வழிபட்டு வந்தனர்.

### கலிக்காமர் அன்பு

நம்பியாரூரர், சிவபெருமானைத் தூதுகொண்ட செய்தி **ஏயர்கோன் கலிக்காமருக்கு** எட்டிற்று. அவர் நம்பியாரூரரை வெறுக்கலானார். அது காரணமாக நாயனார்க்கு இடர் நேர்ந்தது.

நம்பியாரூரர், கலிக்காமருக்கு உற்ற இடரைச் சிவபிரான் திருவருளால் போக்கினார். இருவரும் நண்பராகித் திருப்புன்கூர் சென்றனர். 'அந்தணாளன் உன் அடைக்கலம்' என்னும் திருப் பதிகத்தை நாவலர் பெருமான் அருளிச்செய்தார். இருவரும் திருவாரூருக்கேகினர். கலிக்காமர், சிலநாள் திருவாரூரில் வன் தொண்டரோடு தங்கி இருந்தார். பின்னே அவர், வன்தொண்டரிடம் விடைபெற்றுத் தம் பதி நோக்கினர். நம்பியாரூரர் திருநாகைக் காரோணத்துக்குப் போய்த் தமிழ் பாடினர்; சிவபெருமான் திருவரு ளால் பொன், மணி, அணி, உடை, சாந்தம், குதிரை, சுரிகை முதலியன பெற்றுத் திருவாரூருக்குத் திரும்பினர்.

### சேரமான் தோழமை

கழறிற்றறிவார் என்னும் சேரமான்பெருமாள் சிவபிரான் திருவருளால் செங்கோல் தாங்கி, மலைநாட்டைப் புரந்து வந்தார். அவர், வன்தொண்டர் பெருமையை இறைவனால் அறியப்பெற்றார். 'வன்தொண்டரைக் காணுதல் வேண்டும்' என்னும் வேட்கை அவருள்ளத்தில் கிளர்ந்து எழுந்தது. அவ்வேட்கையைத் தணித்துக் கொள்ள அவர் மலை நாட்டினின்றும் புறப்பட்டார்; தில்லை, சீர்காழி முதலிய திருப்பதிகளைத் தொழுதுகொண்டே திருவாரூரை அணுகினார்.

சேரமான் வருகையைக் கேள்வியுற்ற வன்தொண்டர், அவரை எதிர்கொண்டார்; ஒருவரை ஒருவர் வணங்கி இன்புற்றனர். இருவரும் ஓருயிராயினர். அதனால் நம்பியாரூரருக்குச் **சேரமான் தோழர்** என்னும் பெயரும் வழங்கலாயிற்று. தம்பிரான் தோழரும், சேரமானும் திருவாரூரில் ஆண்டவனை வழிபட்டுக்கொண்டிருந்தனர்.

### பாண்டிய நாட்டுக்கேகல்

அச்சமயத்தில் பாண்டியநாடு போந்து, மதுரை முதலிய திருப்பதிகளை வணங்க வன்தொண்டர் விரும்பினர். அவருடன் செல்லச் சேரமான் பெருமாளும் விழைந்தனர். இருவரும் திரு வாரூரை விடுத்தனர்; கீழ்வேளூரையும், திருநாகைக்காரோணத்தையும் வணங்கித் திருமறைக்காட்டைச் சேர்ந்தனர். திருநாவுக்கரசு சுவாமிகளாலும், திருஞானசம்பந்த சுவாமிகளாலும் முறையே திறக்கவும் மூடவும் பெற்ற திருவாயிலை இரண்டு பெரியாருங் கண்டு இன்புற்றனர். நாவலர் பெருமான் தமிழ் பாடினர். இருவரும் அங்கே சிலநாள் தங்கி மறைக்காட்டு மணியை வழிபட்டனர். பின்னர் அங்கிருந்து வன்தொண்டப் பெருமான், சேரமான் பெருமாளுடன் அகத்தியான்பள்ளிக்குப் போய்க் கோடிக்குழகரைத் தொழுது பதிகம் பாடிப் பாண்டிநாடு புகுந்தார்.

### மூவேந்தர் வணக்கம்

இருவரும் திருப்புத்தூருக்குச் சென்று ஆண்டவனை வாழ்த்தி மதுரை சேர்ந்தனர். பாண்டியனும், அவன் மகளை மணந்து அங்கிருந்த சோழனும், ஆரூரரையும் சேரமானையும் அன்புடன் எதிர் கொண்டனர். எல்லோருஞ்சேர்ந்து திருக்கோயிலுக்குப் போய்ச் சொக்க நாதரை வணங்கினர். தம்பிரான் தோழர் ஆண்டவனுக்குத் தமிழ்மாலை சாத்தினர். நாவலர் பெருமான், மூவேந்தருடன் மதுரையில் தங்கி அளவளாவி இறைவனை வழிபட்டு வந்தனர்.

நம்பியாரூரர் திருப்பூவணந் தொழப் புறப்பட்டார். மூவேந்தரும் உடன் சென்றனர். அடியவர்கள் திருக்கோயிலைக் காட்ட, வன்தொண்டர், 'பூவணம் ஈதோ' என்று பாடி, இறைவனை வழிபட்டு மதுரைக்கு வந்தார். பின்னர் அவர், அரசர்களுடன் திருவாப்பனூர், திருவேடகம் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று திரும்பினார்.

வன்தொண்டப் பெருமானும், மூன்று மன்னரும் திருப்பரங் குன்றத்துக்குப் போயினர். சிவபெருமானுக்கு ஆட்செய்தலின் அருமைப் பாட்டை வன்தொண்டர் நினைந்து, 'கோத்திட்டையுங் கோவலும்' என்றெடுத்து, 'உமக்கு ஆட்செய அஞ்சுதுமே' என்று பாடினர். அத் திருப்பதிகத்தைக் கேட்ட வேந்தர் மூவரும், வன்தொண்டரை வணங்கிப்போற்றினர். வன்தொண்டர், சேரமான் பெருமாளுடன் பிற தலங்களை வணங்க எழுந்தருளினர். பாண்டி யனும் சோழனும், இரு பெரியார்க்கும் வேண்டுவன செய்யச் சிலரை விடுத்து, விடைபெற்று மதுரை நோக்கினர்.

தம்பிரான் தோழர், சேரமான் பெருமாளுடன் , திருக் குற்றாலம், திருக்குறும்பலா, திருநெல்வேலி முதலிய திருப்பதி களைத் தொழுது, இராமேச்சுரத்தை அடைந்தனர்; அங்கிருந்து கொண்டே ஈழநாட்டிலுள்ள மாதோட்டத் திருக்கேதீச்சுரத்தை வணங்கித் தமிழ் பாடினர்; பிறகு இராமேச்சுரத்தை விடுத்துத் திருச்சுழியலைச் சேர்ந்தனர்; சிவபெருமானை வழிபட்டு வந்தனர்.

### காளைக் காட்சி

ஒருநாள் சிவபெருமான், காளையாய், திருக்கையிலே பொற்செண்டு திகழ, திருமுடியில் சுழியம் பொலிய, வன்தொண்டர் கனவிலே தோன்றி, 'நாம் இருப்பது கானப்பேர்' என்று அருளி மறைந்தார். வன்தொண்டர் விழித்தெழுந்தார்; தாம் கனவில் கண்டதைச் சேரருக்குத் தெரிவித்தார்; உடனே புறப்பட்டார்; 'கண்டு தொழப்பெறுவ தென்றுகொலோ அடியேன் கார்வயல்சூழ் கானப் பேருறை காளையையே' என்று பாடிக்கொண்டே திருக்கானப் பேரூருக்குப் போனார்; அங்கே ஆண்டவனை வழிபட்டுச் சிலநாள் தங்கினார்; அங்கிருந்து திருப்புனவாயிலுக்குச்

சென்றார்; பதிகம் பாடினார்; பாண்டியநாடு விடுத்துச் சோழ நாட்டையடைந்து பாதாளீச்சரத்தை வணங்கித் திருவாரூர் சேர்ந்தார்.

### காவிரி வழிவிடல்

இருவரும் திருவாரூர்ப் பெருமானை வழிபட்டுக் கொண்டிருந்தனர். சேரமான்பெருமாள் நாயனர், தமது நாட்டுக்கு எழுந்தருமாறு வன்தொண்டரைப் பன்முறை வேண்டினர். வன் தொண்டர் அவ் வேண்டுதலுக்கு இணங்கினர். வன்தொண்டர் சேரருடன் திருவாரூரை விடுத்துக் காவிரியின் தென்கரையே நடந்தனர்; திருக்கண்டியூரைக் கண்டனர்; ஆண்டவனை வணங்கினர். அப்பொழுது வடகரையிலுள்ள திருவையாறு புலப்பட்டது. சேரமான் அத்திருப்பதியைக் கண்டு தொழ விரும்பினார். அந்நாளில் காவிரி, பெருக்கெடுத்து ஓடிற்று. அப்பெருக்கிடை ஓடங்களுஞ் செல்லா. அக்காட்சி கண்ட நம்பியாரூரர் ஆண்டவனை நினைந்து, 'எதிர்த்து நீந்த மாட்டேன் நான் எம்மான் தம்மான் தம்மானே - விதிர்த்து மேகம் மழைபொழிய வெள்ளம் பரந்து நுரைசிதறி - அதிர்க்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ' என்று பாடினார். ஆண்டவன் அருளால் காவிரி பிரிந்து வழி விட்டது. அடியார்கள் ஆரவாரஞ் செய்தார்கள். சேரபெருமான் வன்தொண்டரை வணங்கி வாழ்த்தினார். வன்தொண்டரும், சேரமான்பெருமாளை வணங்கி, 'இஃது ஆண்டவன் உமக்கு அருளியதன்றோ' என்று அருளினர். பின்னே எல்லாருங் காவிரியைக் கடந்து திருவையாற்றுக்குப்போய் இறைவனை வழிபட்டுத் திரும்பினர். காவிரி பெருக்கெடுத்து ஓடலாயிற்று. இருவரும் திருவருளை வியந்து கொங்குநாடு போந்தனர்; அங்கிருந்து மலைநாடு சேர்ந்தனர். அடியவர்கள், இருவரையும் எதிர்கொண்டு வாழ்த்தினார்கள்.

சேரமான்பெருமாள், வன்தொண்டப்பெருமானைத் திருவஞ்சைக்களத்துக்கு அழைத்துச் சென்றார். நாவலர் பெருமான், 'முடிப்பது கங்கை' என்னுந் தமிழ்ப்பதிகம் ஓதினார்.

### சேரமான் வன்தொண்டரை வழிபடல்

சேரமான் பெருமாள், தம்பிரான் தோழரை யானைமீதேற்றினார்; தாம் பின்னே அமர்ந்து வெண்சாமரம் வீசினார். யானை, திருமாளிகை வாயிலை அடைந்தது. சேரமான் பெருமாள், தாம் யானையினின்றும் இறங்கி, ஆரூரரையும் இறக்கினார்; இறக்கித் தந்தோழரை அரியாசனத்தில் அமர்த்தினார். பெண்மணிகள் கரகநீர் வார்த்தார்கள். சேரமான் பெருமாள், வன்தொண்டர் திருவடிகளை விளக்கப் புகுந்தார். 'இஃது என்ன! தகாத செயல்' என்று வன்தொண்டர், தமது திருவடிகளை வாங்கிக்கொண்டனர்.

கழறிற்றறிவார், தம்பிரான் தோழரைப் பணிந்து, 'நாங்கள் அன்பால் செய்யும் வழிபாடுகளை மறாது ஏற்றருளல் வேண்டும்' என்று முறையிட்டார். ஆரூரர், அரசர் பெருமான் அன்புக்கு எளியராயினர். இருவரும் அஞ்சைக்களத்தப்பனை வழிபட்டு இன்புற்று வந்தனர்.

சில நாட்கள் கழிந்தன. வன்தொண்டருக்குத் திருவாரூர் நினைவு தோன்றிற்று. அவர், 'ஆரூரானை மறக்கலுமாமே' என்று பாடித் திருவாரூர்க்குப் புறப்பட முயன்றனர். அது கண்ட சேரமான் பெருமாள், 'அடிகளைப் பிரிந்து யான் எங்ஙனம் வாழ்வேன்?' என்று வன்தொண்டரை வணங்கினார். வன்தொண்டர், இன்மொழி யால் தேறுதல் கூறி, மலை நாட்டில் ஆட்சி புரிந்திருக்குமாறு மன்னருக்குக் கூறினார். மன்னர் பெருமான், நம்பியாரூரரைப் பார்த்து, அடிகள் திருவடியே எனக்குரிய ஆட்சி' என்று வணங்கி னார். வன்தொண்டர், 'திருவாரூர்ப் பெருமானை மறந்திரேன்' என்று சொல்லி, மன்னரை வணங்கினர். சேரமான் பெருமாள், வன்தொண்டரின் மனோ நிலையை உணர்ந்து, அமைச்சர்களைப் பார்த்து, 'அரண்மனையிலுள்ள பண்டாரம் எல்லாவற்றையும் பொதி செய்யுங்கள்; அவற்றைச் சுமந்து, ஆரூரர் பரிசனங்கள் முன்னே போமாறு ஆட்களை ஏவுங்கள்' என்றார். உடனே, அமைச்சர்கள் அரசர் கட்டளையைச் செய்து முடித்தார்கள். வன்தொண்டர், சேரர் பெருமானைத் தழுவி விடை பெற்றனர்.

### பூதகணங்கள் பொருளைக் கவரல்

நம்பியாரூரர் மலைநாட்டை விடுத்தார்; கொங்கு நாட்டிற் புகுந்தார்; திருமுருகன் பூண்டி வழியே வரலானார். சிவபெருமான், ஆரூரருக்குப் பிறர் பொன் கொடுத்தலாகாதென்றோ, சேரமான் பெருமாள் அளித்த பொருளைத் தாம் பறித்து மீண்டுந் தாமே கொடுத்தருளல் வேண்டுமென்றோ திருவுளங்கொண்டார்; கொண்டு, பூதகணங்களைப் பார்த்தார்; 'நீங்கள் வேடர்களாகி, வன்தொண்டன் எடுத்துச் செல்லும் பொருள்களைப் பறித்து வாருங்கள்' என்று கட்டளையிட்டார். பூதகணங்கள், இறைவன் ஆணைப்படி வேடுவர் களாகி, நம்பியாரூரர் பரிசனங்களுக்கு முன் சென்ற சுமையாட்களை மறித்தன; வில்லைக் காட்டி மருட்டின; பொருள்களைப் பறித்தன; நம்பியாரூரரிடம் ஓடிவந்தார்கள். அக்காட்சி கண்ட வன்தொண்டர், திருமுருகன் பூண்டித் திருக்கோயிலுள் நுழைந்து, 'கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்' என்றெடுத்து, 'எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரான் நீரே' என்று பாடியருளினார். உடனே, இறைவனருளால் பூதகணங்கள் தாங்கள் பறித்த பொருள்கள் எல்லாவற்றையும திருவாயிலின் முன்னே கொண்டு வந்து வைத்தன. நம்பியாரூரர் அவற்றைப் பெற்றுத் திருவாரூரைச் சேர்ந்தனர்.

வன்தொண்டப் பெருமான் திருவாரூர்ப் பெருமானை வழிபட்டு வந்தார். வருநாளில், அவருக்குச் சேரமான் பெருமாள் நினைவு தோன்றலாயிற்று. நம்பியாரூரர் திருவாரூரை விடுத்துப் பல திருப்பதிகளைத் தொழுதுகொண்டே கொங்கு நாட்டைச் சேந்தனர்; திருப்புக்கொளியூரை அடைந்தனர்; மாடவீதி வழியே நடந்தனர்.

## முதலைவாய்ப் பிள்ளை

அப்பொழுது அங்கே, ஒரு வீட்டில் மங்கல ஒலியும், மற்றொரு வீட்டில் அழுகை ஒலியும் எழுந்தன. நாவலர்பெருமான், அது குறித்துப் பக்கத்தில் இருந்தவர்களைக் கேட்டார். அவர்கள், 'அடிகளே! இரண்டு சிறுவர்கள் - ஐந்து வயதுடையவர்கள் - மடுவிலே குளிக்கப் போனார்கள். அவர்களில் ஒருவனை முதலை விழுங்கிற்று. பிழைத்தவனுக்கு இவ்வீட்டில் உபநயனம் நடைபெறுகிறது. இம்மங்கல ஒலி, இறந்தவன் நினைப்பைப் பெற்றோருக்கு எழுப்பி இருக்கிறது' என்றார்கள். அவ்வுரை கேட்ட நம்பியாரூரருக்கு இரக்கம் மேலிட்டது. அவர் அங்கேயே நின்றுவிட்டனர். மகனை இழந்த தாய் தந்தையர், நின்றவர் வன்தொண்டர் என்று உணர்ந்து ஓடிவந்தனர்; வன்தொண்டரை வணங்கினர். வன்தொண்டர் அவர்களைப் பார்த்து, 'மகனை இழந்தவர்கள் நீங்களா?' என்று வினவினார். அவர்கள், 'அடிகளைக் கண்டு வணங்கல் வேண்டும் என்னும் எண்ணம் எங்களுக்கு நீண்ட நாட்களாக உண்டு. அது திருவருளால் இன்று கூடிற்று!' என்று கூறி மகிழ்வெய்தினார்கள். அம்மகிழ்ச்சிகண்ட ஆரூரர், 'இவர்கள் புத்திர சோகத்தையும் மறந்து எனது வரவைக் குறித்து மகிழ்கிறார்கள். இவர்கள் அன்பே அன்பு! இறைவனருளால் யான் இவர்கள் புதல்வனை முதலை வாயினின்றும் அழைத்துக் கொடுத்தே அவிநாசி அப்பனைத் தொழுவேன்' என்று உளங்கொண்டார்; கொண்டு பக்கத்தே நின்றவர்களைப் பார்த்து, 'மடு எங்கே இருக்கிறது?' என்று கேட்டார்; அவர்கள் வாயிலாக மடுவுள்ள இடத்தைத் தெரிந்து அங்கே போனார்; திருப்பதிகம் பாடினார்; 'கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே' என்று வேண்டினார். உடனே காலன், பிள்ளை பூமியில் வளர்ந்தால் எவ்வயது உற்றிருப்பானோ, அவ்வயதுடன் பிள்ளையை முதலை வாயில் சேர்த்தான். முதலை, பிள்ளையைக் கரையிலே கொண்டு வந்து உமிழ்ந்தது. தாயார் விரைந்து ஓடிப் பிள்ளையை எடுத்தார். பிள்ளையுடன் தாயாரும் தந்தையாரும் நம்பியாரூரரை வணங்கினர். செயற்கருஞ் செய்கையைக் கண்ட வானும் மண்ணும் வியப்பெய்தின. வன்தொண்டர், புதல்வனை அழைத்துக் கொண்டு அவிநாசிக்குப் போய் ஆண்டவனைத் தொழுதார்; பின்னே, அப்பிள்ளையின் வீட்டுக்குப் போனார்; அவனுக்கு உபநயனம்

செய்வித்தார். அங்கும் மங்கல ஒலி எழுந்தது. பின்னர், நம்பியாரூரர் அவிநாசி விடுத்து மலைநாடு நோக்கினார்.

### மகோதையில் தங்கல்

அவிநாசியில் ஆரூரர் நிகழ்த்திய அற்புதச் செய்தி எங்கும் பரவிற்று; மலைநாட்டிலும் பரவிற்று. அங்குள்ள அன்பர்கள் சேரர்பெருமானை அணைந்து, 'அவிநாசியில் ஆரூரர் முதலை வாயினின்றும் பிள்ளையை வருவித்துத் தந்து, நமது நாடு நோக்கி வருகிறார்' என்று தெரிவித்தார்கள். அச்செய்தி சொன்ன அன்பர் களுக்குச் சேரர்பெருமான், பலவகைப் பொருள் கொடுத்தார்; இன்பக் கடலுள் தோய்ந்தார்; யானை ஏறிப் புறப்பட்டார். அமைச்சர் முதலிய அனைவரும் புடைசூழ்ந்து சென்றனர். சேரர், பலப்பல சிறப்புடன் வன்தொண்டரை எதிர்கொண்டனர். ஒருவரை ஒருவர் தழுவினர்; வணங்கினர். இரு சார்பினருஞ் சிவ நாம முழக்கஞ் செய்தனர். அன்பு அலை எங்கணும் வீசிற்று.

சேரர்பெருமான், தம்பிரான் தோழரை யானைமேல் ஏற்றினார்; தாமே வெண்கொற்றக்குடை பிடித்தார். யானை ஊர்வலம்வந்து திருமாளிகையை அடைந்தது. சேரர்பெருமான், யானையினின்றும் இறங்கி வன்தொண்டப்பெருமானை அழைத்துச் சென்று அரியாசனத்தில் அமர்த்தினார்; வணங்கினார்; அன்பர்கள் மகிழப் பொன்னையும் மணியையும் வாரி வாரி மழைபோலப் பொழிந்தார். வன்தொண்டப் பெருமானும் சேரர்பெருமானும் பல திருப்பதி களை வணங்கி, ஆண்டவனை வழிபட்டு, மகோதையில் தங்கி இருந்தனர்.

### வன்தொண்டர் யானை ஏறிச்செல்லல்

ஒருநாள் சேரமான்பெருமாள் நாயனார் தலை முழுகிக் கொண்டிருந்த வேளையில், நம்பியாரூரர் திருவஞ்சைக்களம் என்னுந் திருக்கோயிலுக்குச் சென்றார்; ஆண்டவன் திருமுன்னே நின்றார்; குழைந்து குழைந்து உருகினார்; பிறவிப் பெருங்கடலி னின்றும் கரை ஏற்றுமாறு ஆண்டவனை வேண்டினார்; 'தலைக்குத் தலை' என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார். சிவபெருமான் கட்டளைப்படி வன்தொண்டரைத் திருக்கயிலாயத்துக்கு அழைத்துச் செல்லத் திருமால் பிரமன் முதலிய தேவர்கள், வெள்ளை யானையைக் கொண்டுவந்தார்கள். தேவர்கள், வன்தொண்டரைக் கண்டு, சிவாஞ்ஞையைத் தெரிவித்தார்கள். வன்தொண்டர், சிவபெருமானை நினைந்து தம்மை மறந்துநின்றார். தேவர்கள் வன்தொண்டரை யானை மீது ஏற்றினார்கள். வன்தொண்டர், தந்தோழராகிய சேரமான் பெருமாள் நாயனாரை நினைந்து கொண்டே ஏகினார்.

### சேரமான் குதிரை ஏறிச் செல்லல்

கழறிற்றறிவார், தம்பிரான்தோழர் நிலையை உணர்ந்தார்; பக்கத்தில் இருந்த ஒரு குதிரைமீது ஏறினார்; திருவஞ்சைக் களத்துக்குச் சென்றார். நம்பியாரூரர் வெள்ளை யானைமீது வான்வழிச் செல்வதைப் பார்த்தார்; குதிரையின் செவியிலே சிவமந்திரத்தை ஓதினார். குதிரை, மேலே எழும்பி, வெள்ளை யானையைக் கிட்டி, அதனை வலஞ் செய்து, முன்னே சென்றது.

சேரமான் பெருமாள் குதிரைமீது வான்வழிச் செல்வதை அவருடைய படைவீரர்கள் கண்டார்கள்; நீண்ட நேரம் உற்று உற்றுப் பார்த்தார்கள். அதற்குமேல் குதிரை புலப்படவில்லை. மன்னரைப் பிரிந்துநிற்க அவர்கள் மனம் இடந்தரவில்லை. அவர்கள், தங்களை வாளால் சிதைத்துக் கொண்டார்கள். அவர்கள் நுண்ணுடல்பெற்று மன்னர்க்கு முன்னே தொழுது சென்றார்கள்.

### இருவருங் கயிலை சேரல்

வன்தொண்டர், **'தானெனை முன்படைத்தான்'** என்னுந் திருப்பதிகத்தை எடுத்து, 'மத்தயானை அருள்புரிந்து ஊனுயிர் வேறு செய்தான்' என்றும், 'இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம், வந்தெதிர்கொள்ள என்னை மத்தயானை அருள் புரிந்து' என்றும் பாடிக்கொண்டே திருக்கயிலையை அடைந்தனர். சேரர்பெருமான் குதிரையைவிட் டிறங்கினர். நம்பியாரூரரை யானையினின்றும் இறங்கினர். இருவரும் பலப்பல படிகளைக் கடந்து சென்றனர். திரு அணுக்கன் திருவாயிலிலே சேரர்பெரு மானுக்குத் தடை நேர்ந்தது. வன்தொண்டர், உள்ளே சென்றனர்; சிவபெருமானைக் கண்டு வணங்கினர். சிவபெருமான், 'ஆரூரனே, வந்தனையோ!' என்றார். வன்தொண்டர், 'அடியேனுடைய பிழையைப் பொறுத்தருளினீர்; தடுத்தாட் கொண்டீர்; கயிலைப் பேற்றையும் அருளினீர். பெருமான் கருணையே கருணை! ' என்று போற்றினர். பின்னர், வன்தொண்டர், திருவணுக்கன் திருவாயிலிலே சேரர்பெருமான் தடைப்பட்டு நின்றதைச் சிவபிரானிடம் முறையிட் டனர். சிவபெருமான், சேரமான் பெருமாளை அழைத்துவருமாறு நந்தியெம் பெருமானுக்குக் கட்டளையிட்டார். நந்தியெம்பெருமான் அக்கட்டளையை உடனே நிறைவேற்றினார்.

### திருவுலா அரங்கேற்றம்

சேரமான் பெருமாள் போந்து சிவபெருமானைக் கண்டார்; தொழுதார். இன்ப வெள்ளத்துள் மூழ்கி நின்றார். அப்பொழுது சிவபெருமான் புன்முறுவல்புரிந்து, 'சேரனே! நாம் உன்னை அழைக்கவில்லை; நீ வந்தது என்னை?' என்று கேட்டார். சேரர் பெருமான் சிவபெருமானைத் தொழுது, 'வெள்ளையானைக்கு முன்னே ஆரூரரை வணங்கிக்கொண்டே வந்தேன். பெருமான்

*கருணை வெள்ளம் இங்கு என்னைக் கொண்டு வந்து நிறுத்தியது. திருமுன் ஒரு விண்ணப்பஞ் செய்து கொள்ள விரும்புகிறேன்' என்றார். சிவபெருமான், 'அஃதென்ன?' என்று கேட்டார். "பெருமான் மீது 'ஞான உலா' ஒன்று பாடியுள்ளேன். அதைக் கேட்டருளல் வேண்டும்" என்று சேரர் பணிந்தார். சிவபெருமான் அன்பர் வேண்டுதலுக்கு இசைந்தார். சேரமான்பெருமாள் 'திருவுலா' வைச் சொற்றனர். சிவபெருமான் திருவருள் செய்து, 'ஆரூரனாகிய ஆலாலசுந்தரனும், நீயும் நம் கணங்களுக்குத் தலைமைபூண்டு இருங்கள்' என்று திருவாய்மலந்தருளினார். இருவரும் சிவபெருமானை வணங்கினர்.*

*வன்தொண்டர், பழையபடி ஆலாலசுந்தரராகித் தந்திருத் தொண்டை நிகழ்த்தி வரலானார். சேரமான் பெருமாள் கணத் தலைவராய்த் தொண்டாற்றி வரலானார்.*

### பரவையாரும் சங்கிலியாரும் பழம்பேறெய்தல்

*உமையம்மையார் திருவருளால் பரவையார் கமலினியா ரானார்; சங்கிலியார் அநிந்திதையாரானார். இருவரும் திருக் கயிலையில் தமது பழமைத் திருத்தொண்டில் ஈடுபட்டனர்.*

*வன்தொண்டர், தாம் வழியில் அருளிய திருப்பதிகத்தை வருணனிடம் கொடுத்தருளினர். அவன் அதை ஏற்றுத் திருவஞ்சைக் களத்திலே கொண்டுவந்து வெளியிட்டனன். சேரர் பெருமான் அருளிய திருவுலாவைத் திருக்கயிலாயத்திலே கேட்ட மாசாத்தா வானவர், அதைத் திருப்பிடவூரிலே வெளிப்படுத்தினர்.*

# தில்லைவாழந்தணர்

## திருத்தொண்டத் தொகை

*தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்*
*திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்*
*இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்*
*இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்*
*வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்*
*விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்*
*அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.*

## திருத்தொண்டர் திருவந்தாதி

*செப்பத் தகுபுகழ்த் தில்லைப் பதியில் செழுமறையோர்*
*ஒப்பப் புவனங்கள் மூன்றினும் உம்பரின் ஊர்எரித்த*
*அப்பர்க் கமுதத் திருநடர்க் கந்திப் பிறையணிந்த*
*துப்பர்க் குரிமை தொழில்புரி வோர்தமைச் சொல்லுதுமே.*

## திருத்தொண்டர் புராணசாரம்

*நல்லவா னவர்போற்றுந் தில்லை மன்றுள்*
*நாடகஞ்செய் பெருமானுக் கணியார் நற்பொன்*
*தொல்லைவான் பணிஎடுத்தற் குரியார் வீடுந்*
*துறந்தநெறி யார்தொண்டத் தொகைமுன் பாடத்*
*தில்லைவாழ் அந்தணரென் றெடுத்து நாதன்*
*செப்பும்அரு ளுடையார்முத் தீயார் பத்திக்*
*கெல்லைகாண் பரியாரொப் புலகில் தாமே*
*எய்ந்துளார் எமையாள வாய்ந்து ளாரே.*

தில்லைவாழ் அந்தணர்கள், நடராஜப் பெருமான் திருவடித் தொண்டர்கள். அத்திருத்தொண்டே. அவ்வந்தணர்களுக்குரிய பெருந்தவம். முறைப்படி எரிமூன்றோம்பி உலகுக்கு நலஞ்செய்வதில் அவர்கள்தங் கண்ணுங் கருத்தும் படிந்து கிடக்கும். அறத்தைப் பொருளாக்கொண்டு வேதங்களையும் வேதாங்கங்களையும் பயில்

வதில் அவர்கள் பொழுது போகும். அவர்கள் மரபு மாசில்லாதது. அவர்கள் ஒழுக்கம் மாறில்லாதது. அவர்களது அறுதொழில் ஆட்சியால் அருங்கலி நீங்கும். திருநீறு அவர்களது செல்வம். ஞானம் முதலிய நான்குபாதங்களில் அவர்களது உழைப்புச் செல்லும். அவர்கள் மானமும், பொறையுந் தாங்கும் இல்லறம் பூண்டு, இப்பிறவியிலேயே இறைவனை வணங்கும் பேறு பெற்றமையால், இனிப் பெறும் பேறு ஒன்றுமில்லாதவர்கள். அவர்கள் பெருமையிற் சிறந்தவர்கள்; தங்களுக்குத் தாங்களே ஒப்பானவர்கள்; தியாகேசப் பெருமானே, சுந்தரமூர்த்தி சுவாமிகட்குத் 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துச் சிறப்பித்த முதன்மை வாய்ந்தவர்கள். அவர்கள் பெருமையை என்னென்று சொல்வது?

# திருநீலகண்டர்

## திருத்தொண்டர் திருவந்தார்தி

*சொல்லச் சிவன்திரு ஆணைதன் தூமொழி தோள்நசையை*
*ஒல்லைத் துறந்துரு மூத்ததற் பின்னுமை கோனருளால்*
*வில்லைப் புரைநுத லாளொ டிளமைபெற் றின்பமிக்கான்*
*தில்லைத் திருநீல கண்டக் குயவனாஞ் செய்தவனே.*

## திருத்தொண்டர் புராணசாரம்

*தில்லைநகர் வேட்கோவர் தூர்த்த ராகித்*
*தீண்டிலெமைத் திருநீல கண்ட மென்று*
*சொல்லுமனை யாள்தனையே அன்றி மற்றுந்*
*துடியிடையா ரிடையின்பந் துறந்து மூத்தங்*
*கெல்லையிலோ டிறைவைத்து மாற்றி நாங்கள்*
*எடுத்திலமென் றியம்புமென இழிந்து பொய்கை*
*மெல்லியலா ளுடன்மூழ்கி இளமை எய்தி*
*விளங்குபுலீச் சரத்தரனை மேவி னாரே.*

தில்லை என்னும் பழம் பெரும்பதியிலே குயவர் குலத்திலே தோன்றியவர் ஒருவர் இருந்தார். அவர் அறவழியிலே நின்றவர்; சிவபக்தி சிவனடியார் பத்திகளிற் சிறந்தவர். அப்பெரியார் மட்கலம் வனையுந் தொழில் செய்து வாழ்வு நடாத்திவந்தார். அடியவர்களுக்குத் திருவோடு கொடுப்பது அவர்தந் திருத்தொண்டு. சிவபெருமான்றன் திருநீலகண்டத்தினிடத்துப் பேரன்புக்கொண்டு, 'திருநீலகண்டம் - திரு நீலகண்டம்' என்று அவர் சொல்லி வந்தமையான், அவருக்குத் **திருநீலகண்ட நாயனார்** என்னுந் திருப்பெயர் வழங்கலாயிற்று.

**ஊடல்**

நாயனார் இன்பத்துறையில் எளியராய் அருந்ததியனைய ஒரு மங்கை நல்லாரைத் திருமணஞ் செய்து இல்லறத்தில் வாழ்ந்து வந்தார். வருநாளில் ஒருநாள் அவர் ஒரு பரத்தைபா லணைந்து வீடுசேர்ந்தார். அதையுணர்ந்த இல்லக்கிழத்தியார், ஊடல்கொண்டு, வீட்டுப் பணிகளெல்லாவற்றையுங் குறைவறச் செய்து, கூடலுக்கு மட்டும் இசையாதிருந்தார். ஊடலைத் தீர்க்கவேண்டி, நாயனார்

ஒருபோது, இரப்புரைகள் பலகூறி, மனைவியாரைத் தழுவ முயன்றார். அவ்வேளையில் அம்மையார் வெகுண்டு, 'நீர் எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்' என்றார். அடியவரோ திரு நீலகண்டத்தினிடத்தில் பெரும் பற்றுடையவர். அப்பற்று மாறு படா வண்ணம் நாயனார், தம் மனைவியாரைத் தீண்டாதகன்று, அவரை அயலாரைப்போல் பார்த்து, "இவள் 'எம்மை' எனப் பன்மையாகக் கூறினமையால் இவளையும், இவளினமாகிய மற்ற மாதர்களையும் யான் மனத்திலுந் தீண்டேன்" என்று சூளுரை பகர்ந்தார். இக்கொள்கையுடன் இருவரும் வீட்டைவிட்டுத் துறவாது, புணர்ச்சியின்மையை அயலறியாதவாறு, மற்ற இல்லப் பணிகளை இயற்றி வாழ்ந்து வந்தனர். இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன. இளமைச்செவ்வி மறைந்து முதுமை எய்தலாயிற்று. எய்தியும் சிவபத்தி சிவனடியார் பத்திமட்டும் அவரிடந் தளர்ச்சியுறவில்லை.

### சிவயோகியார் ஓடளித்தல்

திருநீலகண்ட நாயானாரது திருத்தொண்டின் பெருமையை உலகுக்குணர்த்தவேண்டி, நடராஜப் பெருமான், ஒரு சிவயோகிய ராகிக் குயவர் பெருமான் வீட்டுக்கு எழுந்தருளினர். நாயனார் அவரை முறைப்படி வழிபட்டு, 'அடியேன் செய் பணி யாது?' என்று கேட்டனர். சிவயோகியார், 'அன்பனே! இத் திருவோட்டைச் சேமித்து வைத்திருந்து யான் கேட்கும்போது கொடுப்பாயாக. இத்திருவோடு, தனக்குத்தானே ஒப்பானது; தன்னிடஞ் சேரும் எல்லாப் பொருளையுந் தூய்மை செய்யும் ஆற்றலுடையது; பொன்னினும் மணியினும் போற்றுந் தகையது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த இத்திருவோட்டினை வாங்கிவை' என்று அதை நீட்டினார். நாயனார் அதை அன்புடன் வாங்கி, இல்லத்தில் ஒரு பக்கத்தில் - காப்புடைய ஓரிடத்தில் - வைத்துத் திரும்பினார். சிவயோகியார் அவ்விடத்தினின்றும் புறப்பட்டார். நாயனார் அவருடன் சிறிது தூரஞ் சென்று விடைபெற்றனர். சிவயோகியாக வந்த நடராஜ வள்ளல் பொற்சபைக் கெழுந்தருளினார்.

### திருவோட்டின் மறைவு

பன்னெடு நாட்கள் கடந்தன. ஒருநாள், திருவோடு வைக்கப் பெற்ற இடத்தினின்றும் மறைந்தொழியச் சிவபெருமான் திருவருள் செய்து, முன்போலச் சிவயோகியர் வடிவந் தாங்கி நாயனார் இல்லம் போந்தனர். நாயனார் அவரை வழிபட்டு நின்றார். சிவயோகியார் அவரைப் பார்த்து, 'முன்னே உன்னிடந் தந்த ஓட்டைக் கொண்டுவா' என்றார். நாயனார், திருவோடு கொண்டுவரச் சென்றார்; திருவோட்டைக் கண்டாரில்லை; என் செய்வார் பாவம்! மனைவி யாரைக் கேட்கிறார்; மற்றவரைக் கேட்கிறார்; பிற இடங்களில் தேடுகிறார்; திகைக்கிறார்; 'யோகியார்க்கு என் சொல்வேன்; என்

செய்கேன்' என்று அலமருகிறார்; ஒன்றுந் தோன்றாது நிற்கிறார். இந்நிலையில் சிவயோகியார், 'என்ன இவ்வளவு நேரம்?' என்று கூவுகிறார். நாயனார் ஓடிவந்து, 'எந்தையே! திருவோட்டை வைத்த இடத்திலுந் தேடினேன்; வேறிடங்களிலுந் தேடினேன்; அதைக் கண்டிலேன்; அப் பழைய ஓட்டினுஞ் சிறந்த புதிய ஓடு ஒன்று வனைந்து தருகிறேன்; ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். பிழை பொறுத்தருளல் வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். சிவயோகியார்க்குச் சினம் மூண்டெழுகிறது. அவர் நாயனாரை உற்று நோக்கி, 'என்ன சொன்னாய்? புது ஓடா கொடுக்கப்போகிறாய்? யான் கொடுத்த மண்ணோடே வேண்டும். மற்றது பொன்னோடே யாயினுமாக. அஃதெனக்கு வேண்டா. என் ஓட்டைக் கொண்டுவா' என்றார். அடியவர் நடுக்குற்றுப் பெரியவரைப் பணிந்து, 'ஐயரே! தங்கள் திருவோடு கெட்டுவிட்டது. வேறொரு நல்ல ஓடு கொடுக்கிறேனென்றாலும் அதை ஏற்க மறுக்கிறீர். தங்கள் மறுப்புரை என் உணர்வு முழுவதையும் ஒழித்து விட்டது. என்ன செய்வேன்!' என்று ஏக்குற்று நின்றார். புண்ணியப் பொருளாக நின்ற பெருமான், 'என்ன இது! உன்பால் வைத்த அடைக்கலப் பொருளை வெளவிக் கொண்டாய்; பழி பாவங்கட்கு அஞ்சுகிறா யில்லை. யான் உன்னை விடேன்; விடேன்; என் ஓட்டை வாங்கிக்கொண்டே போவேன்' என்றார். நாயனார், 'திருவோட்டை நான் வெளவினே னில்லை; என் உள்ளத்திலுங் களவின்மையை எங்ஙனம் விளக்க வல்லேன்' என்று இரங்கிக் கூறினார். அங்ஙன மாயின், "உன் மகனைப் பற்றிக் குளத்தில் மூழ்கித் 'திருவோடு கெட்டது' என்று சொல்லிப் போ" என்று சிவயோகியார் உரைத்தார். அதற்கு நாயனார், 'எனக்குப் புதல்வ னில்லையே' என்றார். சிவயோகியார் 'உன் மனைவியைப் பற்றிச் சொல்' என்று கூறினார். அதற்கும் நாயனார், 'எனக்கும் என் மனைவிக்கும் ஒரு சூள் உண்டு. அதனால் அவள் கையைப் பிடித்து மூழ்க இயலாமை குறித்து வருந்துகிறேன். யானே மூழ்கி உண்மை சொல்கிறேன்' என்று மொழிந்தார். உடனே, சிவயோகியார் கனன்று, 'என் ஓட்டையுங் கொடாமல் - மனைவியைப் பற்றிக் குளத்தில் மூழ்கவும் இசையாமல்- சிந்தை வலித்திருக்கிறாய். தில்லைவா ழந்தணர் கூடியுள்ள பேரவையில் என் வழக்கை உரைக்கப் போகிறேன்' என்று சொல்லி விரைந்து நடந்தார். நாயனாரும் அவரைத் தொடர்ந்து நடந்தார். சிவயோகியார், அந்தணர் அவைக்களம் புகுந்து நிகழ்ந்ததைக் கூறினார். அந்தணர் வேட்கோவரைப் பார்த்தனர். வேட்கோவரும் விளைந்ததை விளம்பினர். இருவர் கூற்றையுங் கேட்ட அந்தணர், வேட்கோவரை நோக்கி, 'இவர்தம் ஓட்டை நீரிழந்தீராயின், இவர் விரும்பும் வண்ணம் செய்வது நியாயம்' என்று தீர்ப்பளித்தனர். தமக்கும் மனைவிக்குமுள்ள தீண்டாமையை நாயனார் வெளியிட

மாட்டாராய், 'பொருந்திய வகையால் குளத்தில் மூழ்குகிறேன்' என்று சொல்லிச் சிவயோகியாருடன் தமது இல்லத்திற் கேகி, மனைவியாரை அழைத்துக்கொண்டு, திருப்புலீச்சுரத்திற்கு முன்னுள்ள திருக்குளத்தையடைந்து, ஒரு மூங்கிற்றண்டின் ஒரு முனையை மனைவியார் பற்ற, மற்றொரு முனையைத் தாம் பற்றி மூழ்கலானார். அப்போது சிவயோகியார், 'உன் மனைவி கையைப் பற்றி மூழ்கு' என்றார். திருநீலகண்ட நேயர் அப்படிச் செய்யக் கூடாமையை யாவரும் அறிய விளக்கி மூழ்கிக் கரையேறினர். ஏறிய இருவரிடமும் முதுமை ஒழிந்து இளமைச் செவ்வி மலர்ந்தது. அக்காட்சி கண்டவர், அங்கிருந்த சிவயோகியாரைக் கண்டார்க ளில்லை. 'இஃதென்ன மாயம்!' என்று அவர்கள் மருண்டு நின்றார்கள்.

### இளமைப் பேறு

அந்நேரத்தில் சிவயோகியராக வந்த சிவபெருமான் உமை யம்மையாருடன் விடைமீது காட்சி வழங்கினார். திருநீலகண்ட நாயனாரும், அவர் தம் மனைவியாரும் சிவபெருமானை வணங்கிப் போற்றி இன்பக் கடலில் மூழ்கினர். எல்லாம்வல்ல இறைவர், 'ஐம்புலனை வென்ற விழுமிய அன்பர்களே! இவ்விளமை என்றும் நீங்காமல் நம்பாலிருங்கள்' என்று திருவருள் சுரந்து எழுந்தருளினர். நாயனாரும், நாயகியாரும் சிவலோகமடைந்து பெறுதற்கரிய இளமை பெற்றுப் பேரின்ப முற்றனர்.

# இயற்பகையார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*செய்தவர் வேண்டியதி யாதுங் கொடுப்பச் சிவன் தவனாய்க்*
*கைதவம் பேசிநின் காதலி யைத்தரு கென்றலுமே*
*மைதிகழ் கண்ணியை ஈந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்*
*தெய்திய காவிரிப் பூம்பட் டினத்துள் இயற்பகையே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*எழிலாருங் காவிரிப்பூம் பட்டி னத்துள்*
*இயல்வணினர் இயற்பகையார் இருவர் தேட*
*அழலாய பிரான் தூர்த்த மறையோ னாகி*
*ஆயிழையைத் தரவேண்டி அணைய ஐயன்*
*கழலாரப் பணிந்துமனைக் கற்பின் மேன்மைக்*
*காதலியைக் கொடுத்தமர்செய் கருத்தால் வந்த*
*பிழையாருஞ் சுற்றமெலாந் துணித்து மீளப்*
*பிஞ்ஞகனார் அழைத்தருளப் பெற்று ளாரே.*

சோழ நாட்டிலே, காவிரிப்பூம் பட்டினத்திலே, வணிகர் குலத்திலே பிறந்த அடியவர் ஒருவர் இருந்தார். அவர் இயற்பகை என்ற பெயரை உடையவர். அவர் இல்லற ஞானியார். அவர்பால் அடியவராய் அணைவோர் எவராயினும், அவர் விரும்புவது எதுவாயினும், அவருக்கு அதை இல்லை என்னாது அளித்து வருவது அவர்தந் திருத் தொண்டாகும்.

### சிவபெருமான் வருகையும் ஒரு பொருள் கேட்டலும்

ஒருநாள் சிவபெருமான் இயற்பகை நாயனாரது திருத் தொண்டின் திறத்தை உலகுக்கு உணர்த்த விரும்பினார்; விரும்பி வேதியராய்த் திருநீற்று மேனியராய்க் காமுகராய்க் கோலங் கொண்டார்; நாயனாரிடம் போந்தார். நாயனார் அடியவரைக் கண்டதும் முறைப் படி வழிபட்டு நின்றார். நின்ற அன்பரை அந்தணர் நோக்கி, ‘உமது திருத்தொண்டின் திறத்தைக் கேள்விற்யுற்று ஒரு பொருள் நாடி இங்கு வந்தோம். அதை அளிப்ப நீர் இசைவீராயின், அதை இன்னதென்று இயம்புவோம்’ என்றார். அன்பிற் சிறந்த நாயனார், ‘எப் பொருளாயினும்

ஆக. அஃதென்பால் இருப்பின், அஃதடியவருடைமை. அதை அருளிச் செய்க' என்று கூறினார்.

## இல்லையே என்னும் அறங்காத்தல்

மறையோர், முன்பின் சிந்தியாது, 'உம் மனைவியை நாடி இங்கு வந்தோம்' என்றார். என்றதும், இயற்பகையார் 'அடிகள் என்னிடம் உள்ள பொருளையே நாடியது எனது புண்ணியப் பயன்' என்று அதிக மகிழ்வெய்தினார்; உள்ளே விரைந்து நுழைந்தார்; இல்லக் கிழத்தியாருக்கு அடிகள் விருப்பத்தையும் தங் கருத்தையும் தெரிவித்தார். மனைவியார்க்குச் சிறிது மனக்கலக்கம் உண்டாயிற்று; உடனே தெளிவும் பிறந்தது. அம்மையார், நாயனார் கருத்துக்கு இணங்கி அவரை வணங்கினார். நாயனாருங் காதலியாரைத் தொழுதார். மாதரசியார் மறையவரிடஞ் சென்று, அவரைப் பணிந்து எழுந்து திகைத்து நின்றார்.

## நாயனார் துணை போதல்

அக்காட்சி கண்டு மகிழ்வெய்திய இயற்பகையார், வேதியரை நோக்கி, 'இன்னும் யான் என் செய்தல் வேண்டும்?' என்று கேட்டார். சுவாமியார், 'இத்தையலை யான் தனியே அழைத்துக்கொண்டு போதல் வேண்டும். உம்முடைய உறவினரையும் இவ்வூரையுங் கடந்துபோக நீர் எமக்குத் துணை வரல் வேண்டும்' என்று வாய்மலர்ந்தார். நாயனார், 'இப்பணியை யானே செய்ய முற்பட்டிருத்தல் வேண்டும். இவர் அருளும் வரை தாழ்த்தது பிழை' என்று வருந்தி, வேறோரிடஞ் சென்றார்; போர்க்கோலம் பூண்டு வந்தார்; வேதியரையும் அருந்ததியனையாரையும் தமக்கு முன்னேபோக விடுத்தார்; தாம் அவருக்குப் பின்னே தொடர்ந்து சென்றார்.

## சுற்றத்தவருடன் பொருதல்

அச்செய்தி ஊர் முழுவதும் பரவிற்று. பரவியதும், சுற்றத்தவர் ஒருங்கே திரண்டு, 'என்ன அநியாயம்! இத்தகைய அடாத செயலை இதுகாறும் எவரே செய்தார்! இயற்பகை பித்தனாயினும் நாம் வாளா கிடத்தல் வேண்டுமோ?' என்று கூறிக்கொண்டு, தங்கள் குலத்துக்கு நேரும் பழியை ஒழிக்கப் போர்க் கருவிகளைத் தாங்கி ஐயரை வளைத்துக் கொண்டனர். ஐயர் அம்மையாரை நோக்கினார். அம்மையார், 'எம்பிரானே! அஞ்சற்க. இவரை இயற்பகையார் வெல்வார்' என்றார். உடனே இயற்பகை நாயனார் வேதியருக்குத் தேறுதல் கூறி, உறவினர்க்கு நல்லுரை வழங்கினார்; ஓடிப்பிழைக்கு மாறு அறிவுறுத்தினார். சுற்றத்தவர், 'அடா! நீ என்ன செய்தாய்? ஊரார் பழிப்பர்; பகைவர் நகைப்பர். உனக்கு நாணமில்லை. மனைவியை மறையவனுக்குக் கொடுத்தோ நீ வீரம் பேசுகிறாய்? நாங்கள் ஒருங்கே செத்தாலும் சாவோம். இப்பெண்ணை

மறையவன் கொண்டு போக விடோம்' என்று வீரமொழி பகர்ந்தனர். இயற்பகையார் சினந்து, 'உங்கள் உயிரை விண்ணுக் கேற்றி, இப்பெரியாரைப் போகவிடுவேன்' என்று விளம்பி, உறவினரை எதிர்த்தார். உறவினர் இயற்பகையாரை விடுத்து, அந்தணரைத் தாக்கினர். இல்லையே என்னாத இயற்பகையார், அந்தணரைத் தாக்கிய அனைவரையும் வாளினால் துண்டம் துண்டமாக வெட்டி வீழ்த்தினார்; எதிர்ப்பவர் ஒருவருமின்றி ஏறுபோல் உலாவினார். பின்னர் பிறவி வேரை வெட்டி வீழ்த்திய பெருந்தகையார் அந்தணரைப் பார்த்து, 'இக்காட்டை அடிகள் கடக்கும்வரை உடன் வருகிறேன்' என்று மொழிந்து, திருச்சாய்க் காடு என்னுந் திருப்பதிவரை உடன் சென்றார். அங்கே அந்தணர், அன்பரைத் திருக்கண்ணோக்கஞ் செய்து, 'நீர் வீட்டிற்குத் திரும்பலாம்' என்றருளினார். செயற்கருஞ் செய்கை செய்த இயற்பகை நாயனார், அந்தணரைத் தொழுது வாழ்த்தித் திரும்பினார்.

### சிவத்தின் ஓலம்

சிவபெருமான், 'இவன் மனைவியை விடுத்துத் திரும்பியும் பாராது போகிறான். இவன்றன் அன்புநிலை என்னே! என்னே!!' என்று வியந்து, 'இயற்பகை முனிவா ஓலம்! ஓலம்! இவ்விடம் விரைந்து வருக' என்று ஓலமிட்டார். திருத்தொண்டர் அவ்வோலங் கேட்டு, 'வந்தேன்; வந்தேன். இன்னுந் துன்பஞ் செய்பவர் இருக்கி றாரா? அவரைத் தொலைத்துவிடுகிறேன்' என்று முழங்கிக் கொண்டு விரைந்து ஓடினார். ஓடிவந்தவர், மறையவரைக் கண்டா ரில்லை; நங்கையை மட்டுங் கண்டார்; அந்நிலையில் சிவபிரான் உமாதேவியாரோடு விடைமேற் காட்சியளிப்பதையுங் கண்டார்; நாயனார், விழுந்து விழுந்து, வணங்கி வணங்கி, வாழ்த்தி வாழ்த்தி ஆனந்த வடிவினராயினர். அப்பொழுது சிவபெருமான், 'அன்பனே! உன் தொண்டின் திறம் எமக்குப் பெருமகிழ்வளித்தது. நீ உன் மனைவியுடன் நம்மோடு வரக்கடவாய்' என்று திருவாய் மலர்ந்தருளித் திருவுருக்கரந்தனர்.

இயற்பகை நாயனாரும், அவர்தம் மனைவியாரும் சிவலோக மெய்தி இன்ப வாழ்வைப் பெற்றனர். இறந்துபட்ட உறவினரும் விண்ணடைந்து பிறவாத இன்பம் நுகர்ந்தனர்.

# இளையான்குடிமாறர்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*இயலா விடைச்சென்ற மாதவர்க் கின்னமு தாவிதைத்த*
*வயலார் முளைவித்து வாரி மனையலக் கால்வறுத்துச்*
*செயலார் பயிர்விழுத் தீங்கறி யாக்கு மவன்செழுநீர்க்*
*கயலார் இளையான் குடியுடை மாறனெங் கற்பகமே'*

### திருத்தொண்டர் புராண சாரம்

*மன்னியவே ளாண்தொன்மை இளசை மாறர்*
*வறுமையால் உணர்வுமிக மறந்து வைகி*
*உன்னருநள் ளிருள்மழையில் உண்டி வேண்டி*
*உம்பர்பிரான் அணையவயல் உழுது வித்துஞ்*
*செந்நெல்முளை அமுதுமனை அலக்கால் ஆக்கிச்*
*சிறுபயிரின் கறியமுது திருந்தச் செய்து*
*பன்னலரும் உணவருந்தற் கெழுந்த சோதிப்*
*பரலோகம் முழுதாண்ட பான்மை யாரே.*

இளையான் குடிப்பதியிலே வேளாளர் மரபிலே பிறந்தவர் ஒருவர் இருந்தார். அவர் மாறனார் என்ற பெயருடையவர். அவருக்கு வேளாண்மையில் ஏராளமான வருவாயுண்டு. அவர் சிவபக்தி சிவனடியார் பத்தியிற் சிறந்தவர். தமது இல்லம் போதரும் அடியவர் எவராயினும் அவருக்குச் சோறிடுவதை ஒரு பெருந் தொண்டாகக் கொண்டு அவர் வாழ்ந்து வந்தார்.

### சோறிடுந் தொண்டும் வறுமையும்

இத் திருத்தொண்டின் பயனாக மாறனார்க்குச் செல்வம் பெருகலாயிற்று. இளையன் குடியில் அவர் அளகேசனைப் போல வாழலானார். அவர் வறியராய் வருந்தினுஞ் சோறிடுந் திருத் தொண்டைத் தளராது செய்யும் உறுதி உடையார் என்பதை உலகுக்கு உணர்த்தச் சிவபெருமான் திருவுளங்கொண்டார்; அதனால் மாறனார்க்கு வறுமை எய்திற்று. எய்தியும் தொண்டில் அவர் சிறிதும் சலிப்புற்றுத் தளர்ச்சியுற்றாரில்லை. அவர், தம் பொருள்களை விற்று விற்றுத் திருத்தொண்டு செய்து வந்தனர்;

பின்னே, தம்மை விற்றுக் கொடுக்கத்தக்க கடன் வாங்கியும் தமது தொண்டை நெகிழ விடாது செய்தே வந்தனர்.

### பசியின் கொடுமையும் அடியவரை வரவேற்றலும்

வருநாளில் மழைக்காலத்தில் ஒரு நாளிரவில் இளையான்குடி மாற நாயனார் உணவின்றி நீண்ட நேரந் தனியே விழிந்திருந்தார். எவ்வித உதவியும் அவருக்குக் கிடைக்கவில்லை. பசியோ, முறுகி எழுந்து குடைகிறது. அவர் பசியைப் பொறுத்துக்கொண்டு வீட்டுக் கதவை அடைத்துச் சென்றார். சிறிது நேரத்திற்குள் அம்மையப்பர், அடியவர் வேடந் தாங்கிக் கதவைத் தட்டினார். உடனே நாயனார், கதவைத் திறந்தார்; அன்பரைக் கண்டார்; அவரை அழைத்துச் சென்று, திருமேனி துடைத்து, ஈரம் போக்கி, இருக்கும்படி செய்தார்.

### மனைவியார் வழி காட்டல்

அடியவர்க்கு அமுதளிக்க விரும்பி மாறனார் மனைவியாரைப் பார்த்தார். அம்மையார் என் செய்வார்! கணவரை நோக்கி, ‘வீட்டில் ஒரு பொருளுமில்லை. அயலாரும் இனிக் கடன் கொடுத்தல் அரிது. பொழுதும் போயிற்று. போகும் இடம் வேறில்லை. என் செய்வேன்?’ என்று வருந்தினார். மின்போல் ஒரு நினைவு அம்மையாரிடந் தோன்றிற்று. தோன்றவும், அவர் ‘இன்று வயலிலே நெல் விதைக்கப் பட்டது. அந்நெல்லை வாரிக்கொண்டு வந்தால் கூடியவரை முயன்று அமுதாக்கலாம். இஃதன்றி வேறொன்றும் எனக்கு விளங்கவில்லை’ என்றார். அவ்வுரை மாறனார்க்கு வரம்பிலா இறும்பூதெய்துவித்தது. அவர் பெருஞ் செல்வம் பெற்றது போன்றவரானார். அவருள் பெருமகிழ்ச்சி பொங்கிப் பொங்கி வழிந்தது.

### வறுமையிற் செம்மை

மழைபொழியும் நள்ளிரவிலே ஒரு கூடையைக் கவிழ்த்துக் கொண்டு மாறானர் புறப்பட்டார்; கால்களினால் தடவித் தடவிச் சென்று தம் வயலை அடைந்தார்; மழை நீரிலே மிதந்த நெல்முளை களைக் கோலி வாரினார்; அவைகளால் கூடையை நிரப்பினார்; கூடையைத் தூக்கிச் சுமந்து வந்தார்.

நாயகியார், நாயனார் வரவைப் பேராவலோடு எதிர் பார்த்து, வாயிலில் நின்று கொண்டிருந்தார்; கூடையை அன்புடன் வாங்கினார்; நெல்முளைகளைக் கழுவினார்; நாயனாரைப் பார்த்தார்; ‘விற கில்லையே! ’ என்றார். அன்பிற் பெரியவர், கிலமாய்க் கிடந்த தம் இல்லத்தின் வரிச்சுகளை அறுத்துத் தள்ளினார். மனைவியார் அவற்றை அடுப்பில் வைத்து, நென்முளை களை வறுத்து, அரிசிகொண்டு சோறாக்கினார்; ‘கறியமுதுக்கு என் செய்வது’ என்று துணைவனாரைக் கேட்டார். தொண்டர் பெருமான் புறக்கடை போந்து, புன்செய் குறும் பயிர்களைத் தடவிப் பிடுங்கிக் கொணர்ந் தார்; இல்லக்கிழத்தியார்

*அவற்றைக் கழுவித் தூய்மைசெய்தார். கைத்திறமையால் பலதிறக் கறியமுதாக்கினார்; ஆக்கியதை நாயனார்க்குத் தெரிவித்தார்.*

## ஆண்டவன் சோதியாய்த் தோன்றல்

*நாயனார், கண்துயிலும் அடியவரிடஞ் சென்று, பெரியீர்! திருவமுதுசெய்ய எழுந்தருள்க' என்று அழைத்தார். அவ்வேளையில் அடியவர், சோதியாய் எழுந்து தோன்றினார். நாயனாரும் அவர்தம் நாயகியாருந் திகைத்து நின்றனர். சிவபிரான் உமாதேவியாருடன் விடைமீது எழுந்தருளி, 'அன்பனே! அறுசுவை உண்டியை அன்பர்களுக்கு நாடோறும் ஊட்டிய ஐயனே! நீ உன் மனைவியுடன் நமது உலகை அடைந்து, குபேரன் உன் ஏவல் கேட்ப, இன்ப நுகர்வாயாக' என்று திருவாய்மலர்ந்தருளித் தமது அருளுருவை மறைத்தருளினார்.*

# மெய்ப்பொருளார்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*கற்றநன் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன்*
*காய்சினத்தால்*
*செற்றவன் தன்னை அவனைச் செறப்புக லுந்திருவாய்*
*மற்றவன் தத்தா நமரே எனச்சொல்லி வானுலகம்*
*பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு ளாமென்று பேசுவரே.*

### திருத்தொண்டர் புராண சாரம்

*சேதிபர்நற் கோவலூர் மலாட மன்னர்*
*திருவேடம் மெய்ப்பொருளாத் தெளிந்த சிந்தை*
*நீதியினார் உடன்பொருது தோற்ற மாற்றான்*
*நெடுஞ்சினமுங் கொடும்படையும் நிகழா வண்ணம்*
*மாதவர்போல் ஒருமுறைகொண் டணுகி வாளால்*
*வன்மைபுரிந் திடமருண்டு வந்த தத்தன்*
*காதலுற நமர்தத்தா என்று நோக்கிக்*
*கடிதகல்வித் திறைவனடி கைக்கொண் டாரே.*

மெய்ப்பொருள் நாயனார் சேதி நன்னாட்டில் திருக்கோவலூரில் வாழ்ந்த வேந்தர் பெருமான். அடியவர் திருவேடத்தையே மெய்ப் பொருளெனக் கொண்டமையால் அவர், **மெய்ப்பொருள் நாயனார்** என்று அழைக்கப்பட்டனர். அவர், மலையமான் வழியில் தோன்றியவர்; பகைவரை வென்று நாட்டுக்கு நலஞ் செய்வதில் பேர்பெற்றவர்; அடியவர் கருத்தறிந்து ஏவல் செய்வோர்; தமது உடைமை எல்லாம் அடியவரது உடைமை என்னுங் கருத்துடையவர். திருக்கோயில்களில் பூசை, விழா முதலியன செய்வதும் அவர் தம் திருத்தொண்டுகளில் ஒன்றாம்.

### முத்தநாதன் தோல்வி

முத்தநாதன் என்ற ஓர் அரசன் மெய்ப்பொருள் நாயனாரிடம் பகைமை பூண்டிருந்தான். அவனுக்கும் நாயனார்க்கும் பலமுறை போர்கள் நிகழ்ந்தன. ஒரு முறையாவது முத்தநாதன் வெற்றிபெற்றானில்லை. 'நேரிய முறையில் போர் புரிந்தால் இந்நாயனாரை வெல்லுதல் இயலாது' என்று அவன் எண்ணினான்; நாயனாரின்

திருநீற்றன்பையுஞ் சிவனடியார் நேயத்தையும் உணர்ந்தான்; வஞ்சனையால் அவரை வெல்லக் கருதினான்.

### முத்தநாதன் கரவுக்கோலம்

அக்கருத்துக்கொண்ட முத்தநாதன் என்ன செய்தான்? ஒருநாள் அவன் தன்னுடல் முழுமையுந் திருநீறு பூசினான்; சடைகளைச் சுருட்டிக்கட்டினான்; உடைவாளை மறைத்து வைத்துள்ள ஒரு புத்தகக் கவளியை ஏந்திக்கொண்டான்; மனத்தில் மட்டுங் கரவெனும் கறுப்புக்கொண்டான்; இக்கோலத்துடன் மெய்யடியார் அரண்மனை நோக்கினான்; வாயில்காப்போர் அவனைச் சிவனடியார் எனக் கருதி, அரண்மனையில் நுழைந்து போமாறு அவனை விடுத்தனர். அவன் பலவாயில்களையுங் கடந்தான்; பள்ளிவாயில் அடைந்தான். அங்கிருந்த தத்தன் என்ற வாயில் காப்போன், வஞ்சகனை நோக்கி, 'இது மன்னர் உறங்கும் நேரம்; சமயமறிந்து போதல் வேண்டும்' என்று எச்சரிக்கை செய்தான். விரைந்து நுழையும் வஞ்சகன், 'மன்னருக்கு யான் உறுதிப் பொருள் கூறப்போகிறேன்; தடை செய்யாதே' என்று தத்தனை விலக்கிக் கொண்டே உள் நுழைந்தான். அப் பாவி, அரசர் பெருமான் துயில்வதையும், பெருமாட்டியார் பக்கத்திலிருப்பதையுங் கண்டான்; கண்டுங் கட்டிலின் அருகணைந்தான். உடனே அம்மையார், உண்மை நாயனாரை எழுப்பினார். நாயனார் விழித்து விரைந்திழிந்தார்; கயவனைச் சிவனடியானெனக் கருதிப் பணிந்தார்; 'அடியவரே! இங்கு எழுந்தருளிய நோக்கம் என்னை?' என்று கேட்டார்.

### ஆகமப் போதனையென்று வாளால் ****?

முத்தநாதன், 'உங்கள் இறைவன் முன்னர் அருளிச் செய்த ஆகமங்களுள் ஒன்று என்னிடமிருக்கிறது. அஃது எங்கணுங் காணப்படாதது. அதை உமக்கு அறிவுறுத்த வந்தேன்' என்று சொன்னான். அச்சொல், அடியவர் பெருமானை ஆனந்த வாரிதியில் தோய்த்துவிட்டது. 'இதைவிட எனக்கு என்ன பேறு! அவ்வருளாக மத்தை வாசித்தருள்க' என்று மன்னர் பாதகனை வேண்டினார். பாதகன், 'உன் மனைவி இங்கே இருத்தலாகாது. நாம் இருவேமும் தனித்திருத்தல் வேண்டும்' என்று இயம்பினான். உடனே மன்னர் பெருமான், தம் நாயகியாரை அந்தப்புரம் போகும்படி கட்டளையிட்டார்; கரவாடும் வன்னெஞ்சனைப் பீடத்திலிருத்தினார்; தாம் கீழேயிருந்து, 'மெய்யன்பரே! அருள் செய்க' என்று பாதகனைப் பணிந்தார். அப்போது, இரக்கமில்லா அரக்கன் கவளியை எடுத்தான்; புத்தகம் அவிழ்ப்பவனைப்போல் நடித்தான். கவளியில் மறைத்துக் கொணர்ந்த உடைவளால் நினைந்தவாறே செய்தான். அந்நிலையில் நாயனார் பெருமான், 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என்று கொடியனைத் தொழுதார்.

### சத்தியாக்கிரகம்

முத்தநாதன் உள் நுழைந்தபோதே அங்கு மனம் வைத்த தத்தன், நொடிப் பொழுதில் அரசர் பெருமானிடம் அணுகினான்; பாவியை வாளினால் வீசப்போனான். அப்பொழுது, செங்குருதி பொங்க விழப்போகும் வேந்தர் பெருமான், 'தத்தனே! இவர் நம்மவர்; சிவனடியார்' என்று தடுத்துச் சாய்ந்தார். சாய்ந்த மெய்யன்பரைத் தத்தன் தாங்கி, 'அரசே! எனக்குள்ள பணி யாது?' என்று வினவினான். மெய்ப்பொருள் நாயனார், 'இவ்வடியவர்க்கு எவராலும், வழியில் தீங்கு நேராதவாறு காத்து இவரைக்கொண்டு போய்விடு' என்று சொன்னார். ஆணைப்படியே தத்தன் அவ்வஞ்ச கனை அழைத்துச் சென்றான்.

அரண்மனை நிகழ்ச்சி ஊரில் பரவிற்று. அதை அறிந்தவ ரெல்லாரும் ஆங்காங்கே முத்தநாதனை வளைத்துக் கொண்டனர். அவர்கட்கெல்லாம், அரசர் பெருமானின் அருள் மொழியைத் தத்தன் தெரிவித்து அவரைத் தடுத்தான்; நகரத்தைக் கடந்து, காட்டை அடைந்து, வாளேந்தி மக்கள் வராத இடத்தில் பாவியை விடுத்தான்; அரண்மனைக்குத் திரும்பி, நாயனாருக்குச் செய்தி தெரிவித்தான்.

### திருநீற்று நெறி

அந்நற் செய்தியைக் கேட்கும் வரை உயிர் தாங்கிக் கொண் டிருந்த நாயனார், தத்தனைப் புகழ்ந்தார்; அரசியலுக்குரிய புதல்வர் களையும் மற்ற அன்பர்களையும் பார்த்தார்; திருநீற்று நெறியை அன்புடன் பாதுகாக்குமாறு அறிவுறுத்தினார்; தில்லைக் கூத்தன் சேவடியைச் சிந்தைசெய்தார். அப்பொழுது சிவபெருமான், மெய்ப்பொருள் நாயனார் எண்ணியவாறு அவர்க்குக் காட்சி யளித்து, அவரைத் தமது அருட்கழல் நீழலில் சேர்த்தருளினார்.

# விறன்மிண்டர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

***பேசும் பெருமையவ் வாரூ ரனையும் பிரானவனாம்***
***ஈசன் தனையும் புறகுதட் டென்றவன் ஈசனுக்கே***
***நேசன் எனக்கும் பிரான்மனைக் கேபுக நீடுதென்றல்***
***வீசும் பொழிற்றிருச் செங்குன்ற மேய விறன்மிண்டனே.***

## திருத்தொண்டர் புராண சாரம்

***விளங்குதிருச் செங்குன்றூர் வேளாண் தொன்மை***
***விறன்மிண்டர் திருவாரூர் மேவு நாளில்***
***வளங்குலவு தொண்டரடி வணங்கா தேகும்***
***வன்தொண்டன் புறகவனை வலிய ஆண்ட***
***துளங்குசடை முடியோனும் புறகென் றன்பால்***
***சொல்லுதலும் அவர்தொண்டத் தொகைமுன் பாட***
***உளங்குளிர உளதென்றார் அதனால் அண்ணல்***
***உவகைதர உயர்கணத்துள் ஓங்கி னாரே.***

*சேர நாட்டிலே, செங்குன்றூரிலே, வேளாள குலத்திலே பிறந்தவர் விறன்மிண்ட நாயனார் என்பவர். முன்னே திருத்தொண்டர்களை வணங்கிப் பின்னே சிவபெருமானைப் பணிவது அவரது வழக்கமாகும். அவர், பல திருப்பதிகளைத் தொழுது திருவாரூரை அடைந்தார்; அங்கே ஒரு நாள் சுந்தரமூர்த்தி சுவாமிகள், தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளியுள்ள அடியவர்களை வணங்காது ஒருவாறு ஒதுங்கிச் சென்றதைக் கண்டார்; கண்டதும், 'திருத்தொண்டர்களுக்கு வன்றொண்டனும் புறம்பு; அவனை ஆண்ட சிவனும் புறம்பு' என்றார். விறன்மிண்ட நாயனார் அடியவரிடத்துக் கொண்டுள்ள அன்புறுதியைக் கண்டு, நம்பியாரூரர் தங்கருத்து முற்றுப்பெறவும், உலகுய்யவுந் திருத்தொண்டத் தொகையைத் திருவாய் மலர்ந் தருளினார். அத் திருத்தொண்டத்தொகை விறன்மிண்ட நாய னாருக்குப் பெருமகிழ்ச்சி யூட்டிற்று. சிவபெருமான், தன் கணங் களுக்குத் தலைவராயிருக்கும் பெருவாழ்வை நாயனார்க்கு அளித்தருளினார்.*

# அமர்நீதியார்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*மிண்டும் பொழிற்பழை யாறை அமர்நீதி வெண்பொடியின்*
*முண்டந் தரித்த பிராற்குநல் லூரின்முன் கோவணநேர்*
*கொண்டிங் கருளென்று தன்பெருஞ் செல்வமுந்*
*தன்னையுந்தன்*
*துண்ட மதிநுத லாளையும் ஈந்த தொழிலினனே.*

### திருத்தொண்டர் புராண சாரம்

*பழையாறை வணிகர்அமர் நீதி யார்பால்*
*பரவுசிறு முனிவடிவாய்ப் பயிலும் நல்லூர்க்*
*குழைகாதர் வந்தொருகோ வணத்தை வைக்கக்*
*கொடுத்ததனை எடுத்தொளித்துக் குளித்து வந்து*
*தொழிலாரும் அதுவேண்டி வெகுண்டு நீர்இத்*
*துலையிலிடுங் கோவணநேர் தூக்கும் என்ன*
*எழிலாரும் பொன்மனைவி இளஞ்சேய் ஏற்றி*
*ஏறினர்வா னுலகுதொழ ஏறி னாரே.*

சோழநாட்டிலே, பழையாறை என்னும் பழம் பதியிலே, வணிகர் குலத்திலே தோன்றிய நாயனார் ஒருவர் இருந்தார். அவர்தம் பெயர் அமர்நீதி நாயனார் என்பது. அவருக்கு அளவில்லாச் செல்வம் உண்டு. அவர், அச்செல்வத்தை, அடியவர்க்குத் திருவமுது செய்வித்தல், அவர்தங் கருத்துதறிந்து, அவர்க்குக் கந்தை, கீள், உடை, கோவணம் அளித்தல் முதலிய திருத்தொண்டுகட்குப் பயன்படுத்தி வந்தனர்.

### திருநல்லூரில் திருத்தொண்டு

திருநல்லூர் என்னுந் திருப்பதியிலே நடைபெறுந் திருவிழாவைக் கண்டு இன்புற அடியவர் பலர் அங்கே போவது வழக்கம். அவ்விடத்தில் அடியவர்க்குத் திருவமுது செய்விக்கும் பொருட்டு நாயனார் ஒரு திருமடங்கட்டினார். நாயனார் சுற்றத்தவருடன் அத் திருமடத்தில் தங்கித் தந்தொண்டுகளைக் குறைவற ஆற்றிவரலானார்.

### பிரமசாரியார் கோவணங் கொடுத்தல்

நாயனார்க்குத் திருவருள் சுரக்கவேண்டிச் சிவபெருமான் திவுளங்கொண்டார்; ஒரு நாள் ஒரு வேதியப் பிரமசாரி வடிவந்

தாங்கினார்; இரண்டு கோவணமும் திருநீற்றுப்பையும், தருப்பையுங் கட்டப்பெற்ற ஒரு தண்டேந்தினாரர்; இக்கோலத்துடன் திருமடம் நோக்கிவந்தார். வந்ததும், அமர்நீதிநாயனார், அவரை முறைப்படி வழிபட்டார்; வேதியர் பெருமான் நாயனாரை நோக்கி, 'உமது திருத்தொண்டைக் கேள்வியுற்றோம்; உம்மைக் காணவந்தோம்' என்றார். அதுகேட்ட நாயனார், 'இங்கே அந்தணரும் அமுது செய்வர். அந்தணராற் சமைக்கப்பெற்ற அமுதும் உண்டு' என்று அந்தணரை வணங்கினார். பிரமசாரியார், 'காவேரியில் நீராடி வருவோம். ஒருவேளை மழைவரினும் வரும். இவ்வுலர்ந்த கோவணத்தை வைத்திருந்து கொடும்' என்று தண்டிலுள்ள ஒரு கோவணத்தை அவிழ்த்தார்; அவிழ்த்து, 'இதன் பெருமையை உமக்குச் சொல்ல வேண்டியதில்லை; இதனை இகழாமல் வைத்துக் கொடும்' என்று அதனை நாயனாரிடம் அளித்துச் சென்றார். அடியவர் பெருமான், அக்கோவணத்தை ஒரு தனியிடத்திற் சேமித்து வைத்தார்.

**கோவண மறைவு**

திருவருளால் அக்கோவணம் மறையலாயிற்று. அந்தணர் நீராடி மழையில் நனைந்து வந்தார். மடத்தில் திருவமுதுஞ் சித்தமாயிருந்தது. அந்தணர் பெருமான், தொண்டர் அன்பெனுந் தூயநீராட விரும்பினார்; அன்பரைப் பார்த்தார் ;'ஈரத்தை மாற்றல் வேண்டும். தண்டிலுள்ள கோவணமே ஈரமாயிருக்கிறது. ஆதலால், உம்மிடம் அளித்த கோவணத்தைக் கொண்டுவாரும்' என்றார். நாயனார், கோவணத்தைக் கொண்டுவரச் சென்றார். சென்ற நாயனார், கோவணத்தைக் கண்டாரில்லை. என் செய்வார் பாவம்! தேடுகிறார்; திகைக்கிறார்; அங்கு மிங்கும் ஓடுகிறார்; அலைகிறார்; 'இடர் வந்ததே' என்று அலமருகிறார். இனி நிற்கமாட்டாதவராய் வேறொரு கோவணத்தைக் கொண்டுவந்தார்; அடிகளை நோக்கினார்; 'அடிகள் அளித்த கோவணம் கெட்டுவிட்டது. அதனைத் தேடித் தேடிப் பார்த்தேன். அதை எங்குங் கண்டேனில்லை. வேறு இக்கோவணங் கொண்டுவந் திருக்கிறேன். இஃது ஒன்றினின்றுங் கிழிக்கப்பட்டதன்று. புதிதாக நெய்யப் பட்டது. இதனை ஏற்றருளும்; பிழை பொறுத்தருளும்' என்று இறைஞ்சினார். மறையவர் வெகுண்டு, 'இன்று கொடுத்த கோவணம்! அஃது எப்படிக் கெட்டுவிடும்? அதனைக் கவர்ந்து வேறு கோவணங் கொடுக்கவா துணிந்தீர்? அடியவர்க்கு நல்ல கோவணங் கொடுப்பதாகச் சொல்வித்தது, என் கோவணத்தைக் கவருதற்கே போலும்! உமது வாணிபம் நன்று; நன்று; மிக நன்று!' என்று கூறினார். நாயனார் நடுநடுங்கி ஐயரைப் பணிந்து, 'இப் பிழையைத் தெரிந்து செய்தேனில்லை. இக் கோவணமின்றி நல்ல பட்டாடைகளையும் மணிகளையுங் கொடுக்கிறேன். ஏற்றருளல் வேண்டும்' என்று

வேண்டினார். அடிகள் தணிவுற்று, 'எனக்கு ஒன்றும் வேண்டா. எமது கோவணத்துக்கு ஒத்த நிறையுள்ள கோவணம் ஒன்று கொடுத்தாற் போதும்' என்றார். அதற்கு நாயனார், 'எதன் நிறைக்கு ஒத்திருத்தல் வேண்டும்?' என்று கேட்டார். அந்தணர் பெருமான், 'இக் கோவாண நிறைக்கு' என்று தண்டில் கட்டியுள்ள கோவணத்தை அவிழ்த்துக் காட்டினார்.

### துலை நாட்டலுந் துகிலிடுதலும்

அடியவர் விரைந்து ஒரு துலை நாட்டினார். அந்தணர் நமது கோவணத்தை ஒரு தட்டில் இட்டார். நாயனாரும் தாம் கொண்டு வந்த கோவணத்தை மற்றொரு தட்டில் இட்டார். நிறை ஒத்துவர வில்லை. நாயனார், அந்தணரின் ஆணை பெற்றுத் தம்பாலிலுள்ள கோவணங்களையும் பட்டாடைகளையும் கொண்டுவந்து ஒவ்வொன்றாகவும் பொதி பொதியாகவும் இட்டு இட்டுப் பார்த்தார். தட்டு ஒத்து வரவில்லை. நாயனார் அந்தணர் அனுமதிபெற்றுத் தம்மிடமுள்ள பொன் வெள்ளி முதலிய உலோகங்களையும் பிற பொருள்களையும் குவியல் குவியல்களாகக் கொண்டுவந்து கொண்டுவந்து முறைமுறையே தட்டில் சேர்த்தார். தட்டு நேர் நிற்கவில்லை. அக்காட்சி கண்ட நாயனார், 'அடிகளே! என்னிடத் துள்ள எல்லாவற்றையுங் கொண்டுவந்து வைத்து விட்டேன். இனி அடியேனும் மனைவியும் புதல்வனும் எஞ்சி நிற்கிறோம். திருவுள மிருப்பின், நாங்களும் தட்டில் ஏறுகிறோம்' என்றார். அந்தணரும் அதற்கிசைந்தார். அமர்நீதி நாயனார் பெரிதும் மகிழ்ந்து, மனைவி யுடனும் மைந்தனுடனும் துலையை வலம்வந்து, 'இது காறும் நாங்கள் நிகழ்த்திவந்த தொண்டு தவறுதலில்லாத தாயின், நாங்கள் ஏறினதும் இத்துலை நேர் நிற்பதாக' என்று மொழிந்து, ஐந்தெழுத்தை ஓதித் தட்டிலேறினர். ஏறினதும், தட்டுகள் நேர் நின்றன.

மண்ணவர் வாழ்த்தினர். விண்ணவர் மலர் சொரிந்தனர். பிரமசாரியாக வந்த பெருமான் உமாதேவியாருடன் மழவிடைமேல் தோன்றினார். தட்டிலே நின்ற நாயனாரும் அவர்தம் மனைவியும் மைந்தனும் ஆண்டவன் திருக்கோலத்தைக் காண்கிறார்; போற்று கிறார். சிவபெருமான், மூவர்கோலத்தைக் காண்கிறார்; போற்று கிறார்; சிவபெருமான், மூவர்க்கும் தம்மை என்றுந் தொழுது கொண்டிருக்கும் வான்பதம் அருளி எழுந்தருளினார். திருவருளால் அத்துலையே விமானமாகி மேலே சென்றது. அமர்நீதி நாயனார் தம் மனைவியுடனும் மைந்தனுடனுஞ் சிவலோகஞ் சேர்ந்தார்.

# எறிபத்தர்

## திருத்தொண்டத் தொகை

*இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்*
*ஏனாதி நாதன்றன் அடியார்க்கு மடியேன்*
*கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்*
*கடவூரிற் கலயன்றன் அடியார்க்கு மடியேன்*
*மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்*
*எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கு மடியேன்*
*அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.*

## திருத்தொண்டர் திருவந்தாதி

*ஊர்மதில் மூன்றட்ட உத்தமர்க் கென்றோர் உயர்தவத்தோன்*
*தார்மலர் கொய்யா வருபவன் தண்டின் மலர்பறித்த*
*ஊர்மலை மேற்கொளும் பாகர் உடல்துணி யாக்குமவன்*
*ஏர்மலி மாமதில் சூழ்கரு வூரி லெறிபத்தனே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*திருமருவு கருவூர்ஆ னிலையார் சாத்துஞ்*
*சிவகாமி யார்மலரைச் சிந்த யானை*
*அரனெறியோர் எறிபத்தர் பாக ரோடும்*
*அறஎறிய என்னுயிரும் அகற்றீர் என்று*
*புரவலனார் கொடுத்தபடை அன்பால் வாங்கிப்*
*புரிந்தரிவான் புகஎழுந்த புனித வாக்கால்*
*கரியினுடன் விழுந்தாரும் எழுந்தார் தாமுங்*
*கணநாத ரதுகாவல் கைக்கொண் டாரே*

கருவூர், சோழமன்னர்க் குரிய தலைநகரங்கள் ஐந்தனுள் ஒன்று. அது கொங்கு நாட்டி லிருப்பது. அங்கே ஆனிலை என்னுந் திருக் கோயில் ஒன்றிருக்கிறது. அவ்வானிலையில் எழுந்தருளியுள்ள சிவ பெருமானை வழிபட்டுச் சிவனடியார்க்குத் தீங்கிழைப்பவரை எறிந்து வீழ்த்த மழுப்படை தாங்கி நின்றவர் ஒருவர் வாழ்ந்தார். அவர், எறிபத்த நாயனார் என்ற பெயருடையவர்.

### சிவகாமியாண்டார்

எறிபத்தர் காத்தில் சிவகாமியாண்டார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சினடியார்; ஆனிலையடிகளுக்குப் பூத்தொண்டு செய்வோர். ஒருநாள் - அதாவது நவமி முன்னாள் - சிவகாமி யாண்டார் வழக்கம்போலப் பூக்கொய்தார்; பூக்களால் கூடையை நிரப்பினார்; கூடையைத் தண்டில் தூங்கச்செய்து, திருக்கோயில் நோக்கிச் செல்வாரானார்.

### யானை பூக்களைச் சிந்தல்

அவ்வேளையில் அவ்வழியே புகழ்ச்சோழ மன்னரின் பட்டவர்த்தன யானை, காவிரியில் மூழ்கி, பாகர்கள் மேலேயிருப்ப, குத்துக்கோற்காரர் முன்னே ஓட, விரைந்து நடந்து வந்தது. அந்த யானை சிவகாமியாண்டாரை நெருங்கித் தண்டிலிருந்த பூங் கூடையைப் பற்றி மலர்களைச் சிந்தியது. அதைக்கண்ட பாகர்கள், யானையை வாயுவேகமாக நடாத்திச் சென்றார்கள். சிவகாமி யாண்டார் சினந்து வேழத்தைத் தண்டினால் புடைக்க விரைந்து நடந்தார். யானையின் கதிநடை எங்கே! சிவகாமி யாண்டார் தளர்நடை எங்கே! மூப்பால் சிவகாமியாண்டார் கால்தவறிக் கீழே விழுந்தார். விழுந்தவர் தரையைக் கையால் மோதினார்; எழுந்து நின்றார்; 'ஆனிலையப்பா! நின் முடிமீது ஏறும் மலரையா ஒரு யானை மண்ணிற் சிந்துவது? சிவதா! சிவதா!' என்று ஓலமிட்டார்.

### எறிபத்தர் யானையை எறிதல்

அச்சமயத்தில் எறிபத்த நாயனார் அவ்வழியே வந்தார். அவருக்குச் சிவகாமியாண்டாரது ஓலங் கேட்டது. நாயனார் சிவகாமியாண்டாரை யடைந்து பணிந்து, 'அக்கொடிய யானை எங்குற்றது?' என்று கேட்டார். சிவகாமியாண்டார்'அந்த யானை இவ்வீதி வழியே போயிருக்கிறது' என்றார். என்றதும், எறிபத்த நாயனார் காற்றெனப் பறந்தார்; யானையைக் கிட்டினார்; அதன்மீது பாய்ந்தார். யானையும் எறிபத்தர்மீது பாய்ந்தது. நாயனார் சிறிதும் அஞ்சாது யானையை எதிர்த்தார்; எதிர்த்துத் தமது மழுவினால் அதன் துதிக்கையைத் துணித்தார். யானை கதறிக்கொண்டே கருமலைபோல் விழுந்தது. பின்னே குத்துகோற்காரர் மூவரையும், பாகர் இருவரையும் நாயனார் வெட்டி வீழ்த்தினார். மற்றவர் விரைந்து ஓடி, 'பட்டவர்த்தனத்தைச் சிலர் கொன்றனர்' என்று புகழ்ச்சோழ மன்னருக்கு அறிவித்தனர்.

### மன்னர் வருகை

சோழர்பெருமான், வடவைபோற் சீறி, ஒரு குதிரைமீது இவர்ந்து புறப்பட்டார். நால்வகைச் சேனைகளும், பிறவும் அவரைச் சூழ்ந்து சென்றன. மன்னர் பெருமான், யானை இறந்துபட்ட

இடத்தைச் சேர்ந்தார். யானையைக் கொன்றவர் எறிபத்தர் என்று கொள்ளாதவராய், 'யானையைக் கொன்றவர் யார்?' என்று கேட்டார். அங்கிருந்த பாகர்கள், 'மழுவைத் தாங்கி நிற்கும் இவரே நமது யானைக் கொன்றவர்' என்றார்கள். புகழ்ச்சோழ நாயனார் திடுக்கிட்டு, 'இவர் சிவனடியார்; குணத்திற் சிறந்தவர். யானை பிழைசெய்திருத்தல் வேண்டும். இல்லையேல் இவர் அதைக் கொன்றிரார்' என்று எண்ணினார்; சேனைகளை யெல்லாம் நிறுத்தி விட்டுக் குதிரையினின்றும் இறங்கி, 'இப்பெரியவர் யானைக்கெதிரே சென்றபோது வேறொன்றும் நிகழாதிருந்ததே! யான் முன்னே என்ன தவஞ் செய்தேனோ! அடியவர் இவ்வளவு முனியக்கெட்டேன்! நேர்ந்த பிழை என்னோ?' என்று அஞ்சி, நாயனார் முன்னே சென்று அவரைத் தொழுதார்; தொழுது 'யானையைக் கொன்றவர் அடியவர் என்று யான் அறியேன்; யான் கேட்டதொன்று; இந்த யானை செய்த பிழைக்கு , இதனைப் பாகரோடும் மாய்த்தது போதுமா?' என்று கேட்டார். நாயனார் நிகழ்ந்ததைக் கூறினார்.

### அன்புக் காட்சி

சோழர் பெருமான், எறிபத்தநாயனாரை வணங்கி, 'சிவனடி யாருக்கு விளைத்த தீங்குக்கு யானையையும் பாகர்களையும் கொன்றது போதாது; என்னையுங் கொல்லுதல் வேண்டும்; அடிகளின் மங்கல மழுவால் என்னைக் கொல்லுதல் முறைமை யன்று' என்று மொழிந்து, தமது உடைவாளை எடுத்து, 'இதனால் என்னைக் கொன்றருள்க' என்று அதை நீட்டினார். எறிபத்தர், 'அந்தோ! இவர் அன்பர்! இவர் தம் அன்பிற்கோரளவில்லை; வாளை வாங்காவிடின் தற்கொலை செய்து கொள்வர்' என்று கருதி வாளை வாங்கினார். புகழ்ச்சோழர், 'ஆ! இப்பெரியவர் அடியேனைக் கொன்று, என் பிழைதீர்க்கும் பேறு பெற்றேன்' என்று மனமகிழ்ந் தனர். எறிபத்தர், 'இத்தகை அன்பருக்கோ தீங்கு நினைந்தேன்! யான் பாவி! முதலில் என்னுயிரை மாய்த்துக் கொள்வதே முறை' என்று உறுதிகொண்டனர்; வாளைத் தங் கழுத்திலிட்டு அரியப்புகுந்தனர். அக்காட்சி கண்ட அரசர் பெருமான், 'கெட்டேன்! கெட்டேன்!!' என்று வாளையுங் கையையும் பிடித்தார். 'அரசர் கையைப் பற்றினரே' என்று அன்பர் வருந்தா நிற்கிறார். இஃது அன்பின் பெருக்கால் நேர்ந்த இடுக்கண்.

### வானொலியும் அருளெழுச்சியும்

உற்ற இடுக்கணை மாற்ற 'உங்கள் திருத்தொண்டின் மாண்பை உலகத்தவர்க்குக் காட்டவேண்டிச் சிவபெருமான் திருவருளால் இவை யாவும் நிகழ்ந்தன' என்று ஒரு வானொலி பிறந்தது. பிறந்ததும், யானை, பாகர்களோடு உயிர்பெற்றெழுந்தது. எறிபத்த நாயனார் வாளைவிடுத்துப் புகழ்ச்சோழ நாயனாரை

வணங்கினார். புகழ்ச்சோழர் வாளை எறிந்து எறிபத்தரைப் பணிந்தார். இருவரும் திருவருளை வழுத்தினர். திருவருளால் கூடையில் பூக்கள் நிறைந்தன. சிவகாமியாண்டார் ஆனந்தவாரிதியிற் றிளைத்தனர்.

பட்டவர்த்தனத்தை அழைத்துக்கொண்டு பாகர்கள் அரசர் முன்னே வந்தார்கள். எறிபத்த நாயனார் வேண்டுகோளுக் கிணங்கிப் புகழ்ச்சோழ நாயனார் யானைமீ தெழுந்தருளிச் சேனைகள் புடைசூழ்ந்து செல்ல அரமனையை அடைந்தார். சிவகாமி யாண்டார் பூங்கூடையைத் தண்டிற்றாங்கித் தந்தொண்டின்மேற் சென்றார். எறிபத்த நாயனார் தாம் ஏற்ற திருத்தொண்டைக் குறைவறச் செய்து வாழ்ந்து, திருக்கயிலையில் சிவகணங்களுக்குத் தலைவரானார்.

# ஏனாதிநாதர்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*பத்தனை ஏனாதி நாதனைப் பார்நீ டெயினை தன்னுள்*
*அத்தனைத் தன்னோ டமர்மலைந் தான்நெற்றி நீறுகண்டு*
*கைத்தனி வாள்வீ டொழிந்தவன் கண்டிப்ப நின்றருளும்*
*நித்தனை ஈழக் குலதீபன் என்பர்இந் நீணிலத்தே.*

### திருத்தொண்டர் புராண சாரம்

*ஈழ குலச்சான்றார் எயின னூர்வாழ்*
*ஏனாதி நாதனார் இறைவன் நீற்றைத்*
*தாழத் தொழுமரபார் படைகள் ஆற்றுந்*
*தன்மைபெறா அதிசூரன் சமரில் தோற்று*
*வாழத் திருநீறு சாத்துக் கண்டு*
*மருண்டார் தெருண்டார்கை வாள்வி டார்நேர்*
*வீழக் களிப்பார்போல் நின்றே யாக்கை*
*விடுவித்துச் சிவனருளே மேவி னாரே.*

***ஏனாதிநாத நாயனார்*** *சோழநாட்டிலுள்ள எயினனூரில் தோன்றியவர்; ஈழகுலச் சான்றோர். அவர், திருநீற்றினிடத்துப் பேரன்பு வாய்ந்தவர். அரசர்க்கு வாள்வித்தை பயிற்றுவிப்பது அவர்தந் தொழிலாகும். அதனால் கிடைக்கும் பொருளைச் சிவனடியார்க்குக் கொடுத்து வருவது அவர்தந் திருத்தொண்டாகும்.*

#### அதிசூரன் அழுக்காறும், போரும்

*ஏனாதிநாதர் காலத்தில் அதிசூரன் என்ற மற்றுமொரு வாள் வீரன் இருந்தான். அவனது தொழிலும் வாள் வித்தை பயிற்று விப்பது. நாயனார் தமது தொழின் முறையில் அதிசூரனிலும் நலம் பெற்றுவந்தார். அதை யுணர்ந்த அதிசூரன் அழுக்காற்றால் புழுங்க லானான். அவன் நாயனாரிடம் போரிடக் கருதிக்கொண் டிருந்தான். ஒரு நாள் அவன்தன் வீட்டினின்றும் புறப்பட்டான். மாணாக்கரும் மற்றவரும் அவனைச் சூழ்ந்து சென்றனர். அதிசூரன், நாயனார் இல்லம் போந்தான்; போந்து தலைவாயிலில் நின்று அவரைப் போருக்கழைத் தான். சூரன் அழைத்தலைக் கேட்ட நாயனார், போர்க்கோலந் தாங்கி*

வெளிவந்தார். அவர்தம் மாணாக்கரும், ஊரவரும், மற்றவரும் படை தாங்கி அவரைச் சூழ்ந்து தொடர்ந்தனர்.

### அதிசூரன் தோல்வி

அதிசூரன், நாயனாரைப் பார்த்து, 'இவ்வெளியிலே அமர் செய்வோம். வெற்றியடைவோரே வாள்வித்தை கற்பிக்கும் உரிமை ஏற்றல் வேண்டும்' என்று கூறினன். அதற்கு நாயனாரும் உடன் பட்டனர். உடனே இருவருந் தத்தம் படைகளுடன் அவ்வெளி யடைந்து போர் புரிந்தனர். இறுதியில் அதிசூரன் புறமுதுகிட்டு ஓடினன்.

### சூழ்ச்சி

ஓடிய சூரன், அன்றிரவு முழுவதும் உறங்கினானில்லை; துயர்க்கடலில் அழுந்தினான்; 'ஏனாதி நாயனாரை எப்படிக் கொல்வது' என்று எண்ணி எண்ணி ஏக்குற்றான்; முடிவில் 'வஞ்சனை வழியில் கொல்லுதல் வேண்டும்' என்று உறுதி கொண்டான். பொழுது புலர்ந்தது. அதிசூரன் ஓர் ஒற்றனை அழைத்தான்; "நீ ஏனாதி நாயனாரிடம் போய், 'போருக்கு வேறு எவரும் உடன்வருதல் கூடாது; அவரும் யானும் மட்டும் தன்னந் தனியராய்ப் போர் புரிதல்வேண்டும்' என்று அவரிடஞ் சொல்லி, அவர்தங் கருத்தைத் தெரிந்து கொண்டுவா" என்று ஏவினான். ஒற்றன் அவ்வாறே நாயனாரிடம் போந்து, சூரன் சொன்னதை அவர்க்குத் தெரிவித்தான். நாயானார் அதற்கு உடன்பட்டார்; உடனே ஒருவருக்குந் தெரியாமல் அதிசூரன் குறிப்பிட்ட போர்க்களம் சேர்ந்தார்.

### திருநீற்றுப் போலியும் அன்பும்

என்றும் வெண்ணீறணியாத அதிசூரன், அன்று புண்ணிய நீற்றை நெற்றியிலணிந்து, போர்க்களம் நோக்கினான். அங்கே, சிங்க ஏறுபோல் நாயனார் உலாவிக்கொண்டிருந்தார். அவரை நெருங்கும் வரை அதிசூரன் கேடகத்தால் தன் நெற்றியை மறைத்துச் சென்றான். ஏனாதி நாயனார் அதிசூரன்மேல் பாய அடி பெயர்த்தார். அவ் வேளையில், அதிசூரன், முகமூடி போன்ற கேடகத்தை விலக்கினான். அவன் நெற்றியில், புண்ணிய நீறு பொலிகிறது! அப்பொலிவு கண்ட நாயனார், 'கெட்டேன்! இவர் நெற்றியிலே நீற்றினை இன்று கண்டேன். இவர் சிவபிரான் தொண்டராயினார்' என்று நினைந்து வாளையுங் கேடகத்தையும் விட்டெறியக் கருதினார்; பின்னே 'நிராயுதனைக் கொன்றார் என்னும் பழி இவரை அடர்க்கும்' என்றஞ்சி, வாளையுங் கேடகத்தையும் நீக்காது, போரிடுவார்போல் நடித்தனர். அப்பொழுது நாயனார் முன்னின்ற பாதகன், தன் கருத்தை முற்றுவித்தான்.

சிவபெருமான் ஏனாதிநாத நாயனார்முன் எழுந்தருளித் தம்மை என்றும் பிரியாப் பெருவாழ்வை அவருக்கு அளித்து மறைந்தருளினார்.

# கண்ணப்பர்

### திருத்தொண்டர் திருவந்தாதி

***நிலத்தில் திகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மேல்***
***நலத்திற் பொழிதரு கண்ணிற் குருதிகண் டுள்நடுங்கி***
***வலத்திற் கடுங்கணை யால்தன் மலர்க்கண் இடந்தப்பினான்***
***குலத்திற் கிராதனங் கண்ணப்ப னாமென்று கூறுவரே.***

### திருத்தொண்டர் புராண சாரம்

***வேடர்அதி பதியுடுப்பூர் வேந்தன் நாகன்***
***விளங்கியசேய் திண்ணனார் கன்னி வேட்டைக்***
***காடதில்வாய் மஞ்சனமும் குஞ்சிதரு மலருங்***
***காய்ச்சினமென் றிடுதசையுங் காளத்தி யார்க்குத்***
***தேடரும்அன் பினில்ஆறு தினத்தளவும் அளிப்பச்***
***சீறுசிவ கோசரியுந் தெளியவிழிப் புண்ணீர்***
***ஓடஒரு கண்ணப்பி ஒருகண் ணப்ப***
***ஒழிகஎனும் அருள்கொடரு குறநின் றாரே.***

*பொத்தப்பி நாடு வேடர் நிறைந்த ஒரு மலை நாடு. அதன் பேரூர் உடுப்பூர் என்பது. அவ்வூரில் வேட மன்னன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் நாகன்.*

#### திண்ணனார் பிறப்பு

*நாகன், தத்தை என்பவளை மணந்து இல்லறம் நடாத்தி வந்தான். வந்த நாளில் அவன், தனக்கு மகப் பேறின்மை கருதி வருந்தி, முருகப் பெருமானை வழிபடலானான். முருகப்பெருமான் திருவரு ளால் அவனுக்கு ஓர் ஆண்குழவி பிறந்தது. அக்குழவியை நாகன் ஏந்தியபோது அது திண்மையாகத் தோன்றியது. அதனால் அவன் அதற்குத் திண்ணன் என்னுந் திருப்பெயரைச் சூட்டினான்.*

#### விற்பயிற்சி

*திண்ணனார், வேடர்கள் போற்ற வளர்ந்து விற்பயிற்சிக்குரிய பருவத்தை அடைந்தார். அவர் நல்லாசிரியர்பால் வில்வித்தை பயின்று தேர்ச்சி பெற்றார். திண்ணனார்க்கு வயது பதினாறு ஆயிற்று. அவர் தந்தை நாகன், முதுமையால் மெலிவுற்றான். அதனால் அவன் காடுபோந்து வேட்டையாட இயலாதவனானான்.*

### திண்ணனார்க்கு முடி சூட்டடல்

ஒருநாள், வேடர் குழு ஒன்று, நாகனிடம் போந்து, 'அரசே! மாதந்தோறும் வேட்டையாடுதல் தவறியபடியால், கொடிய விலங்குகள் பெருகிப் புனங்களை அழிக்கின்றன' என்று முறை யிட்டது. அதற்கு நாகன், 'நான் மூப்பால் மெலிந்து விட்டேன் இனி வேட்டையாடுதல் என்னால் இயலாது. என்மகன் திண்ணனை உங்களுக்குத் தலைவனாக்குகிறேன்' என்று சொல்லித் தேவ ராட்டியை அழைப்பித்துத் திண்ணனார்க்கு அரசுரிமை வழங்கினான். தேவராட்டியுந் திண்ணனாரை வாழ்த்திச் சென்றாள்.

### வேட்டை

வேடமன்னராகிய திண்ணனார், வேட்டைக்குரிய கோலந் தாங்கிக் காடு நோக்கினார். வேடவீரர்களும் அவருடன் புறப்பட் டார்கள். நாய்களுஞ் சூழ்ந்து ஓடின. வேடர்கள் காட்டில் நுழைந்து ஆங்காங்கே முறைப்படி வலைகளை வளைத்துக் கட்டினார்கள். திண்ணனார் காட்டிலே சுழன்று சுழன்று வேட்டை யாடினார்; கொடிய விலங்குகளை வீழ்த்தினார். அப்பொழுது கொழுத்த பன்றி ஒன்று வீறிட்டு எழும்பி வலைகள் அறும்படி கடுவிசையில் ஓடிற்று. அப்பன்றியைத் தொடர்ந்து திண்ணனாரும் அவ்விசையில் ஓடினார்.

### பன்றியைத் தொடரல்

திண்ணனார் பன்றியைத் தொடர்ந்து ஓடியது மற்ற வேடர்க்குத் தெரியாது. நாணன் காடன் என்ற இருவர் மட்டுந் திண்ணனாரைத் தொடர்ந்தே ஓடினர். அப்பன்றி, நாய்களுக்குந் தப்பி நெடுந்தூரம் ஓடிற்று; இளைப்புற்றது; மேலும் ஓட இயலாததாய், ஒரு மலையடியிலே உள்ள சோலையை அடைந்தது; அங்கே மரச்செறிவில் நின்றது. திண்ணனார் அப்பன்றியைக் கண்டார்; அதன்மீது அம்புகளை எய்தாரில்லை; அதனிடம் நெருங்கினார்; உடைவாளை உருவி அதைக் குத்தினார். அவரைப் பின்தொடர்ந்து ஓடிவந்த நாணன், காடனைப் பார்த்து, 'காடனே! பல காதங்கள் ஓடிவந்தோம்; இளைத்தோம். முடிவில் இப்பன்றியை நம் வேடர் பெருமானே கொன்றார்' என்று திண்ணனாரை வியந்தான். இருவரும் திண்ணனாரை வணங்கினர்.

### காளத்திக் காட்சி

அதற்குமேல் இருவரும் திண்ணனாரை நோக்கி, 'நாம் நெடுந்தூரம் வந்துவிட்டோம். பசி நம்மை அரிக்கிறது. இப் பன்றியைக் காய்ச்சித் தின்று தண்ணீர் அருந்திப் பசி தணித்துக் கொள்வோம்; பின்னே, வேட்டைக் காட்டுக்குப் போவோம்' என்றனர். திண்ணனார், 'நல்லது இக்காட்டில் தண்ணீர் எங்கே யிருக்கிறது?' என்று கேட்டார். நாணன், 'அதோ பெரிய தேக்குமரம்

தெரிகிறதன்றோ? அதற்கு அப்பால் நீண்ட குன்று ஒன்று இருக்கிறது. அதற்கு அயலில் பொன்முகலி ஆறு ஓடுகிறது' என்றான். திண்ணனார், 'நாம் அங்கே போவோம். இப்பன்றியை எடுத்து வாருங்கள்' என்று சொல்லி, அக்குன்று நோக்கிப் போனார். போம்போது அரைக்காதத்துக் கப்பால் திருக்காளத்தி மலைச்சாரலிலுள்ள சோலை அவர்தங் கண்ணுக்கு விருந்தளித்தது. அவ்விருந் துண்ட திண்ணனார், 'நாணனே! நமக்கு முன்னே தோன்றும் இக்குன்றினுக்குப் போவோம்' என்றார். அதற்கு அவன், 'இக்குன்றில் நல்ல காட்சி காண்போம். அங்கே குடுமித்தேவர் வீற்றிருக்கிறார். கும்பிடலாம்' என்றான். 'என்ன நாணா! மலையை நெருங்க நெருங்க என்மேலுள்ள சுமை குறைகிறதுபோலத் தோன்றுகிறது. ஒருவிதப் புது விருப்பமும் பொங்கி எழுகிறது. அது விரைந்து என்னுள் பாயா நிற்கிறது. தேவர் இருக்கும் இடம் எங்கே? கடிது செல்க' என்று திண்ணனார் விரைந்து நடந்தார்.

### பொன் முகலி அடைதல்

மூவரும் பொன் முகலியை அடைந்தனர். அவ்வாற்றங் கரையிலுள்ள ஒருமர நிழலிலே பன்றி வைக்கப்பட்டது. தீக்கடைக்கோலால் நெருப்பை உண்டுபண்ணி வைக்குமாறு காடனுக்குக் கட்டளையிட்டுத் திண்ணனார் நாணனோடு மலை நோக்கிச் சென்றார்.

### தத்துவப்படி ஏறல்

முன்னைத் தவம் திண்ணனாரை வேற்றுருவாக்குகிறது. அவர்பால் அன்பு பெருக்கெடுக்கிறது; அளவிலா ஆர்வம் பொங்குகிறது; காதல் கூர்ந்து கூர்ந்தெழுகிறது; என்பு நெக்கு நெக்குருகுகிறது. இவ்வாறு உள்ளத்தெழும் வேட்கையோடு திண்ணனார் மலையேறுகிறார். நாணன் முன்னே செல்கிறான். அவனுக்குப் பின்னே அன்பு செல்கிறது. அதற்குப் பின்னே திண்ணனார் மலைப்படிகளென்னும் தத்துவப்படிகளை ஏறிச் செல்கிறார்.

### அன்பேயாதல்

திண்ணனார் சிவபெருமானைக் காண்பதற்கு முன்னே, சிவபெருமான் அவரைத் திருக்கண்ணோக்கஞ் செய்தார். செய்ததும், வேடர் கோமான், ஒளிமயமாய் அன்புருவம் பெற்றார். அவர் மலைக்கொழுந்தென விளங்கும் மகாதேவரைக் கண்டார்; கண்டதும் கட்டித்தழுவுகிறார்; மோந்து மோந்து நிற்கிறார்; பெருமூச்சு விடுகிறார். அவர்தம் மெய்ம்மயிர் சிலிர்க்கிறது. புளகம் போர்க்கிறது; கண்களினின்றும் அருவி பெருகுகிறது. 'அச்சோ! இவர் அடியேனுக்கு அகப்பட்டார்' என்று திண்ணனார் கூறுகிறார்; ஆனந்தக் கூத்தாடுகிறார். 'இது கொடிய விலங்குகள் திரியுங் கானம்! இங்கே வேடரைப்போல ஐயன் தனித்திருப்பதென்னே! துணைவர்

ஒருவருமிங்கில்லையே! அந்தோ! கெட்டேன்; கெட்டேன்' என்று அவர் நைந்து நைந்து உருகுகிறார். கைச்சிலை நழுவி விழுந்தது. அஃதும் அவருக்குத் தெரியவில்லை. பின்னர் அவர் சிறிது தெளி வுற்று, 'இவர் முடிமீது நீரை வார்த்துப் பச்சிலையும் பூவுமிட்டுச் சென்றவர் யாரோ?' என்கிறார்; சுற்று முற்றும் பார்க்கிறார். அருகிருந்த நாணன், 'யார் என்பது எனக்குத் தெரியும். முன்னொரு நாள் உம் தந்தையாருடன் வேட்டையாடி இங்கே வந்தோம். அப்பொழுது ஒரு பார்ப்பான் இவர்மீது நீரை வார்த்தான்; பச்சிலைகளையும் மலர்களையுஞ் சூட்டினான்; உணவூட்டினான்; முன்னின்று சில மொழிகளைச் சொன்னான். இவற்றை நான் பார்த்தேன். அவனே இன்றும் இச்செயல்கள் செய்திருத்தல் வேண்டும்' என்றான். அதைக்கேட்ட அன்பர், 'இவை இறைவனார்க்கு இனியவை போலும்' என்று அவற்றை உளங்கொண்டு, ஆண்டவனைப் பிரிந்து செல்ல மனமில்லாதவராய், 'இவர் இங்கே தனியராய் இருக்கிறார். இவர் அமுதுசெய்ய இறைச்சியும் அளிப்பாரில்லை. இவரைப் பிரிதலும் ஒண்ணாது. என் செய்வேன்! இவருக்கு இறைச்சி கொண்டுவந்தே தீர்தல் வேண்டும்' என்று நினைந்து சிறிது தூரம் போவார்; மீண்டுந் திரும்புவார்; தழுவிக்கொள்வார்; திரும்பவும் போவார்; காதலால் நோக்கி நோக்கி நிற்பார்; கன்றை விட்டகலும் பசுப்போலாவார்; 'ஐயனே! திருவமுதுசெய்ய நல்ல இறைச்சியை நானே கொண்டுவருவேன். இங்கு உனக்குச் சுற்றத்தார் ஒருவரு மில்லை. உன்னைப் பிரிந்து செல்லவும் மனம் எழவில்லை. பசியோ டிருத்தலையும் மனம் விரும்பவில்லை. ஆதலால் போய்வருகிறேன்' என்று கூறிக் கண்களில் அருவிபாய, வில்லை எடுத்து, மலையி னின்றும் இழிந்து சோலை சேர்ந்தார். நாணனும் அவர் பின்னே தொடர்ந்து போனான்.

### நாணன் - காடன் வருந்தல்

அங்கிருந்த காடன், திண்ணனார் எதிரேசென்று பணிந்து, 'தீக்கடைந்து வைத்துளேன். பன்றியின் உறுப்புகளையெல்லாம் உமது குறிப்புப்படி பார்த்துக்கொள்க. இவ்வளவு நேரந் தாழ்த்தது என்னை?' என்றான். அதற்கு நாணன், நிகழ்ந்தவைகளைக் கூறி, 'குடுமித் தேவர்க்கு இறைச்சி கொண்டு போகும்பொருட்டு இவர் இங்கே வந்திருக்கிறார்; நமது குலத் தலைமையை விட்டுவிட்டார்; அத்தேவர் வழி பட்டுவிட்டார்' என்று சொன்னான். அதைக்கேட்ட காடன், 'திண்ணனாரே! என் செய்தீர்! நீங்கள் எங்கள் குலத் தலைவரல்லரோ! என்ன பித்துக்கொண்டீர்' என்று கூறினார்.

### 'அன்புப் பித்தம்'

கானவர் பெருமான் காடனை நோக்காது பன்றியை நெருப்பிலே வதக்குகிறார்; வதக்கி அதன் இறைச்சியைப் பதம்

செய்கிறார்; வெந்த இறைச்சிகளை வாயிலிட்டு அதுக்குகிறார்; அதுக்கி, இனியவற்றைக் கல்லையிலே வைக்கிறார்; மற்றவற்றைப் புறத்திலே துப்புகிறார். இச்செயல்களைப் பார்த்த நாணனுங் காடனும், 'இவர்க்குப் பித்தம் தலைக்கேறி விட்டது. இவர் பசியால் பீடிக்கப்பட்டிருக்கிறார்; இருந்தும், இறைச்சிகளை உண்கி றாரில்லை; அவற்றை வீணாக இலைக்கலத்திலிடுகிறார்; புறத்தில் உமிழ்கிறார்; நமக்குங் கொடுக்கிறாரில்லை. இவர் தெய்வப் பித்துக்கொண்டிருக்கிறார். நாம் என்செய்வது? தேவராட்டியையும் நாகனையும் அழைத்து வருதல்வேண்டும்; நாம் காடு நண்ணி, நம்முடன் சூழ்ந்து வந்த மற்றவரையும் அழைத்துப் போவோம்' என்று பேசிச்சென்றார்.

## ஞானார்ச்சனை

இருவருஞ் சென்றது சிவத்தில் ஈடுபட்டுள்ள திண்ணனார்க்குத் தெரியாது. அவர் ஊனமுதைக் கல்லையிலே வைத்தார்; திருமஞ் சனத்துக்குப் பொன்முகலியாற்று நீரை வாயிலே முகந்தார்; பச்சிலை களையும் மலர்களையும் குடுமியிலே செருகினார்; ஒரு கையில் ஒரு வில்லையும் அம்பையும் தாங்கினார்; மற்றொரு கையில் ஊனமுத முள்ள இலைக்கலத்தை ஏந்தினார்; எனக்கினிய பெருமான் சாலப் பசித்திருப்பார்' என்று இரங்கி ஏங்கி விரைந்து நடந்து மலையை அடைந்தார்; அங்கே சிவனார் திருமுடிமீதிருந்த மலர்களைக் கால் செருப்பால் மாற்றினார்; வாய் நீரைத் திருமுடிமீது அன்புபோல் உமிழ்ந்தார்; குடுமியில் செருகிவந்த பூக்களை ஆண்டவனுக்குச் சாத்தினார்; ஊனமுதைத் திருமுன்னே வைத்து, 'ஆண்டவனே! இவ்விறைச்சிகள் நல்லன; இவற்றை யானே சுவை பார்த்துத் திருமுன்னர்ப் படைத்துள்ளேன்; அமுது செய்தருள்க' என்று இன்சொற் கூறி அமுதூட்டுவித்தார்.

## அன்பில் சிவத்தைக் காணல்

அப்பொழுது கதிரவன் மறைந்தான். 'இரவில் கொடிய விலங்குகள் ஐயனுக்குத் தீங்கு செய்யும்' என்று திண்ணனார் கருதி அஞ்சித் திருக்கையில் சிலை தாங்கிச் சிவபிரானை நோக்கி நின்றார். காடுகளில் நுழைந்தும் மலைகளிற் புகுந்தும் பன்னெடு நாள் அருந்தவங் கிடந்த தேவர்களும் முனிவர்களும் காண்டற்கரிய பெருமானைத் திண்ணனார் அன்பினால் கண்டுகொண்டார். பொழுது புலர்ந்தது. பறவைகள் ஒலி செய்தன. இரவு முழுவதும் கண் துயிலாத வீரர், ஆண்டவனுக்கு ஊனமுது கொண்டுவர வேட்டைக்குப் புறப்பட்டார்.

### சிவகோசரியார் ஆகமப் பூசை

*திண்ணனார் சென்ற பின்பு, சிவகோசரியார் அங்கே வந்தார். சிவகோசரியார் என்வர், திருக்காளத்தியப்பரை நாள்தோறும் ஆகமவிதிப்படி அருச்சிப்பவர். அவர் வழக்கம் போலத் தொண் டாற்றத் திருமுன்னர்ச் சென்றார்; அங்கே வெந்த இறைச்சியையும் எலும்பையும் பார்த்தார்; அகல மிதித்து ஓடினார்; 'இவ்வநு சிதத்தைச் செய்தவர் யாவர்? வேடப் புலையர்களே இதைச் செய் திருத்தல் வேண்டும். இக் கொடுமைக்குத் தேவ தேவன் திருவுள்ளமும் இசைந்ததே' என்று கலங்கினார்; தெளிவடைந்தார்; இறைச்சி, இலை, செருப்படி, நாயடி முதயவற்றைத் திருவலகால் மாற்றினார்; பொன்முகலி போந்து மூழ்கினார்; விரைந்து சந்நிதி சேர்ந்து பிராயச்சித்தம் செய்தார்; முறைப்படி அருச்சித்துத் தமது தபோ வனம் போனார்.*

### மாறுபட்ட ஆசைகள்

*திண்ணனார் கான் புகுந்தார்; வேட்டையாடிப் பன்றி மான் முதலிய விலங்குகளைக் கொன்றார்; அவற்றின் ஊனெடுத்துப் பதஞ்செய்து தேன் கலந்து கல்லையிலே வைத்தார்; முன் போலவே மஞ்சனமும் மலருங் கொண்டார்; இவற்றைக் கொண்டு மலை யேறிப் பழையபடி பார்ப்பனர் பூசையை அகற்றித் தமது பூசையைச் செய்தார்; இறைச்சிகளைத் திரு முன்னே வைத்து, 'ஐயனே! இவ்விறைச்சிகள் முன்னவைகளைவிடச் சிறந்தன; இவை பன்றி, மான், கலை, மரை, கடமை இவற்றின் இறைச்சிகள்; யானுஞ் சுவை பார்த்தேன்; தேனுங் கலந்துள்ளேன்; தித்திக்கும்! அமுது செய்தருள்' என்று இன்மொழி பகர்ந்து அமுது செய்வித்தார். இவ்வாறு திண்ணனார் பகலில் வேட்டையாடி ஆண்டவனுக்கு ஊனமுதம் படைத்தும், இரவிலே உறங்காமல் ஆண்டவன் முன்னே நின்றும் திருத்தொண்டு நிகழ்த்தி வந்தார். சிவகோசரியாரும் சிவசந்நிதி போந்து வனவேந்தர் பூசனையை மாற்றி மாற்றி ஆகம முறைப்படி அருச்சித்து வந்தார்.*

### நாகன் முயற்சி பலியாமை

*நாணனுங் காடனும் ஊருக்குச் சென்று, திண்ணனார் செயல் களை நாகனுக்கு அறிவித்தனர். நாகன் ஊணுறக்கமின்றித் தேவ ராட்டியையும் அழைத்து மைந்தரிடம் போந்தான்; அவரைத் தன் வழிப்படுத்தப் பற்பல வழியில் முயன்றான்; முயன்றும் பயன் விளையாமை கண்டான்; மனம் நொந்து வீட்டுக்குத் திரும்பினான்.*

### சிவகோசரியார் ஒளித்திருத்தல்

*சிவகோசரியார் நாடோறும் அநுசிதத்தை விலக்கி விலக்கிச் சலிப்புற்றார்; ஒருநாள் ஆண்டவன் எதிரே நின்று, 'என்னுடைய*

நாயகனே! இவ்வநுசிதஞ் செய்தாரைக் காண்டல் கூடவில்லை. இதனை உன்னருளாலேயே ஒழித்தல்வேண்டும்' என்று வேண்டிச் சென்றார். அன்றிரவு சிவபெருமான் சிவகோசரியார் கனவிலே தோன்றி, 'அநுசிதஞ் செய்யும் ஒருவனை வேடுவன் என்று நீ நினைத்தல் வேண்டா. அவன் அன்பன். அவனுடைய வடிவெல்லாம் நம் பக்கலுள்ள அன்பேயாகும். அவனுடைய அறிவெல்லாம் நம்மை அறியும் அறிவேயாகும். அவனுடைய செயல்களெல்லாம் நமக்கு இனியவையாகும். அவன் நிலை இத்தகைத்து. நீ நாளை நமக்குப் பின்னே ஒளித்திரு; அவன்தன் அன்புச் செயல்களைக் காண்பாய்; கவலையொழிக' என்றருளி மறைந்தார். சிவகோசரியார் கண் விழித்தார். பொழுது விடியும்வரை அவருக்கு உறக்கம் வரவில்லை. பொழுது விடிந்தது. சிவகோசரியார் எழுந்து பொன் முகலியில் நீராடினார்; மலையேறினார்; வழக்கம் போல ஆண்டவனை வழிபட்டார்; ஆண்டவன் ஆணைப்படி பின்பக்கம் ஒளித்திருந்தார்.

**ஒரு கண் அகழ்ந்து அப்பல்**

ஆறாம்நாள் வழக்கம்போலத் திண்ணனார் இறைச்சி முதலியவற்றைத் தாங்கி விரைந்து வருகிறார். அவர் அன்று வழியில் துர்ச்சகுனங்களைக் காண்கிறார்; 'இவை உதிரங்காட்டுங் குறிகள். என் ஐயனுக்கு என்ன நேர்ந்ததோ!' என்று கலங்கி ஓடிவருகிறார். திருக்காளத்திப் பெருமான், திண்ணனார்தம் அன்பின் பெருமையைக் காட்டத் தமது வலக் கண்ணினின்றும் உதிரம் பெருகச் செய்தார். அக்காட்சியைத் தூரத்தே கண்ட திண்ணனார், ஓடோடி வந்தார். இரத்தங்கண்டார்; மயங்கினார். அவர்தம் வாயிலுள்ள நீர் சிந்திற்று; கையிலுள்ள ஊன் சிதறிற்று; வில்லும் விழுந்தது; தலைமயிரினின்றும் மலர்கள் விழுந்து அலைந்தன. திண்ணனார் பதை பதைத்து வீழ்கிறார்; எழுகிறார்; எழுந்துபோய் இரத்தத்தைக் துடைக்கிறார்; துடைத்தும் இரத்தம் நிற்கவில்லை. அவர் பெருமூச்சு விட்டு விழுந்தார்; பின் ஒருவாறு தேறி, 'யார் இது செய்தார்?' என்று எழுந்தார்; திசை திசை ஓடிப்பார்க்கிறார்; வில்லை எடுக்கிறார்; அம்பைத் தொடுக்கிறார். 'எனக்கு மாறாக இத்தீங்கை வேடர் செய்தனரோ? கொடிய விலங்குகள் செய்தனவோ?' என்று கூறிக் கொண்டே மலைப் பக்கங்களில் ஓடுகிறார்; நெடுந் தூரம் ஓடிப் பார்க்கிறார். திண்ணனார் வேடரையுங் கண்டாரில்லை; விலங்குகளையும் கண்டாரில்லை; அன்பர் திரும்பி வந்து, ஆண்டவனைக் கட்டி, 'ஐயனே! உனக்கு அடுத்தது என்னோ? என்னோ?' என்று கதறிக் கதறி அழுகிறார்; 'இஃது என்செய்தால் தீரும்? பச்சிலை மருந்துகளைத் திரட்டி வருவேன்' என்று காடெலாஞ் சுற்றிப் பச்சிலைகளை பறித்து வந்தார்; அவற்றைப் பிசைந்து பிசைந்து ஐயன் கண்ணில் வார்க்கிறார். இரத்தம் நிற்கவில்லை. 'இனி என்செய்வது?'

என்று அண்ணல் சிந்தித்து நிற்கிறார். அப்பொழுது 'ஊனுக்கு ஊன்' என்ற பழமொழி அவரது நினைவுக்கு வந்தது. வந்ததும், திண்ணனார் அம்பால் தமது வலக்கண்ணை அகழ்ந் தெடுத்து ஐயன் திருக் கண்ணில் அப்பினார். இரத்தம் நின்று விட்டது. அன்பர் பெருமான் குதிக்கிறார்; தோள் கொட்டுகிறார்; கூத்தாடுகிறார்; 'நான் செய்தது நன்று நன்று!' என்று கூறிக்கூறி மகிழ்ச்சி யடைகிறார். மகிழ்ச்சிப் பெருக்கால் அன்பர் உன்மத்தர் போலானார்.

**மற்றொரு கண்ணகழ்தலும் கண்ணப்பராதலும்**

இன்னும் திண்ணனார் அன்பின் உண்மையைக் காட்டச் சிவபிரான் தமது இடக்கண்ணிலும் உதிரம் பெருகச் செய்தார். அதைக் கண்ட திண்ணனார், 'இதற்கு யான் அஞ்சேன்; மருந்து கைக் கண்டிருக்கிறேன்; இன்னும் எனக்கொரு கண்ணுண்டு; அதை அகழ்ந்து அப்பி ஐயன் நோயைத் தீர்ப்பேன்' என்று அடை யாளத்தின் பொருட்டு காளத்திநாதர் திருக்கண்ணில் தமது இடக் காலை ஊன்றினார்; உள் நிறைந்த விருப்பத்தோடும் தமது இடக் கண்ணைத் தோண்ட அம்பை ஊன்றலானார். ஊன்றிய பொழுது, தடங்கருணைப் பெருங்கடலாகிய தேவதேவர் மனந் தாளாதவராய், 'கண்ணப்ப நிற்க! கண்ணப்ப நிற்க! கண்ணப்ப நிற்க!' என்றருளிக் கொண்டே திண்ணனார் கையைத் தமது திருக்கையால் பிடித்துத் தடுத்தார்.

அவ்வரும் பெருங் காட்சி கண்ட சிவகோசரியார் ஆனந்த வாரிதியில் மூழ்கினார். கண்ணப்பர் திருக்கையைப் பற்றிய முக்கணப்பர், கண்ணப்பரைப் பார்த்து, 'மாறிலா அன்பனே! என் வலப்பக்கத்தில் இருக்கக் கடவாய்' என்று அவருக்குப் பேரருள் புரிந்தார்.

# குங்குலியக்கலயர்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி எழிற்பனந்தாள்*
*சாய்ந்த சிவனிலைத் தானென்பர் காதலி தாலிகொடுத்*
*தாய்ந்தநற் குங்குலி யங்கொண்ட னற்புகை காலனைமுன்*
*காய்ந்த அரற்கிட்ட தென்கட வூரிற் கலயனையே.*

### திருத்தொண்டர் புராண சாரம்

*சீலமலி திருக்கடவூர் கலய னராந்*
*திகழ்மறையோர் பணிவறுமை சிதையா முன்னே*
*தாலியைநெற் கொளஎன்று வாங்கிக் கொண்டு*
*சங்கையில்குங் குலியத்தால் சார்ந்த செல்வர்*
*ஞாலநிகழ் திருப்பனந்தாள் நாதர் நேரே*
*நரபதியுந் தொழக்கச்சால் நயந்து போதப்*
*பாலமுதம் உண்டாரும் அரசும் எய்திப்*
*பரிந்தமுது செயஅருள்சேர் பான்மை யாரே.*

சோழ நாட்டிலுள்ள திருக்கடவூரிலே ஒரு நாயனார் வாழ்ந்தார். அவர் மறையவர்; கலயனார் என்னும் பெயருடையவர்; சிவபத்தியிலும் ஒழுக்கத்திலும் மிகச் சிறந்தவர். திருக்கோயிலில் குங்குலியத் தூப மிடுவது அவர்தந் திருத்தொண்டு.

#### வறுமையும் கொடுமையும்

இத் திருத்தொண்டைக் கலயனார் குறைவற நிகழ்த்தி வரு நாளில், ஆண்டவன் அருளால் அவருக்கு வறுமை நேர்ந்தது. நேர்ந்தும் அவர் திருத்தொண்டைத் தவறாது செய்து வந்தார்.

கலயனார் தமக்குள்ள நிலபுலங்களையும் பிறவற்றையும் விற்கலானார். அவர்தஞ் செல்வங்களெல்லாம் ஒழிந்தன. அவருக்கு நேர்ந்த வறுமையின் கொடுமைக்கு ஓர் அளவில்லை. அக்கொடுமை அவரையும், அவர்தம் மனைவி மக்களையும் மற்றவரையும் இரண்டு நாள் பட்டினி கிடக்கவுஞ் செய்தது.

### தாலிகொண்டுந் தொண்டு செய்தல்

*அந்நிலைகண்டு மனஞ்சகியாத நாயனாரின் அருமை மனைவியார், தாலியை நாயனாரிடந் தந்து, 'நெல் வாங்கிவாரும்' என்றார். கலயனார் தாலியைக் கொண்டு கடைவீதி வழியே சென்றார். அவ்வேளையில் ஒருவணிகன் குங்குலியப் பொதிக் கொண்டு அவ்வழியே வந்தான். அடியார் அவனைப் பார்த்து, 'இஃதென்ன?' என்று வினவினார். அவன், 'குங்குலியப்பொதி' என்றான். அன்பர், 'இன்று யான் பெரும்பேறு பெற்றேன்' என்று அளவிலா மகிழ்வெய்தி, 'பொன் தருகிறேன். இதைக்கொடும்' என்றார். வணிகன், 'எவ்வளவு பொன்?' என்று கேட்டான். நாயனார் தாலியை நீட்டினார். வணிகன் தாலியை வாங்கிப் பொதியைக் கொடுத்தான். கலயனார் அப்பொதியை ஏற்று விரைந்து ஓடினார்; திருக்கோயிற் பண்டாரத்தில் அதைச் சேர்த்தார்; சிவபெருமான் திருவடியைப் போற்றிக்கொண்டிருந்தார்.*

### சிவபிரான் பொருள் அருளல்

*இல்லத்தில் நாயனாரின் மனைவி மக்கள் முதலியோர் பசியால் வருந்தி வருந்தி உறங்கிவிட்டனர். அந்நிலையில் அடியவர்க் கெளியவராகிய சிவபிரான், நாயனார் வீடு முழுவதும் பொற்குவிய லும், நெற்குவியலும், பிறவும் நிரம்புமாறு திருவருள் செய்தார்; செய்து, அதை அம்மையார்க்குக் கனவில் உணர்த்தினார். அம்மையார் விழித்தெழுந்தார்; செல்வக் குவியல்களைக் கண்டார்; ஆண்டவன் அருளை வியந்து வியந்து போற்றினார்; போற்றிக் கணவனார்க்கு அமுது சமைக்கச் சென்றார்.*

### நாயனார் அமுதுண்ணல்

*திருக்கோயிலிலுள்ள நாயனார் கனவிலுஞ் சிவபெருமான் தோன்றி, 'நீ பசியால் வருந்துகிறாய்; வீடு போந்து உணவு கொள் வாயாக' என்று கட்டளையிட்டருளினார். நாயனார் திருவருள் ஆணையை மறுத்தற்கஞ்சி, வீடுநோக்கிச் சென்றார்; வீட்டை அடைந்தார்; வீட்டில் நிரம்பியுள்ள செல்வக் காட்சியைக் கண்டார். மனைவியாரை பார்த்தார்; 'இஃதென்ன?' என்று கேட்டார். அம்மையார் 'எல்லாம் ஆண்டவன் அருள்' என்று சொன்னார். நாயனார் ஆண்டவன் அருளைப் போற்றிப் புகழ்ந்து, அடியவருடன் அமுதுண்டு இன்புற்றார். கலயனார் வழக்கம்போலத் தமது திருத்தொண்டைக் குறைவற நிகழ்த்தி, அறுவகைச் சுவையுடன் அடியவர்க்கு அமுதூட்டி வந்தார்.*

### சிவலிங்கச் சாய்வு

*திருப்பனந்தாளிலே சிவலிங்கத் திருவுருவிற்குச் சாய்வு நேர்ந்தது. அச்சாய்வைப் போக்கிப் பெருமானை வழிபட மன்னன் விரும்பினான். அவன், தன் சேனை யானைகளை யெல்லாம் பூட்டித்*

திருவுருவை இழுப்பித்தான். இழுப்பித்தும், அவன் விருப்பம் நிறைவேறவில்லை. அவன் துயரக்கடலில் அழுந்தினான்.

### சிவலிங்க நிமிர்வு

மன்னன் படுந் துயரைக் குங்குலியக்கலய நாயனார் கேள்வி யுற்றுத் திருப்பனந்தாள் சேர்ந்தார்; அங்கே மன்னன் துயரையும் சேனை யானைகளின் இளைப்பையுங் கண்டார்; 'யானும் இத் தொண்டில் ஈடுபடுகிறேன்' என்று, சிவலிங்கத்திற் பூட்டியுள்ள கயிற்றைத் தங்கழுத்திற் பூட்டி இழுத்தார். அன்புக்கயிற்றின் இழுப்புக்குச் சிவலிங்கம் நிமிராதிருக்குமோ? சிவலிங்கம் நிமிர்ந்து விட்டது. மன்னன், நாயனாரை வணங்கி வாழ்த்தித் திருக்கோயில் திருப்பணிசெய்து தனது பதியைச் சேர்ந்தான்.

### இரு பெரியார் காட்சி

நாயனார் திருப்பனந்தாளில் சிலநாள் தங்கிப் பின்னே தமது திருக்கடவூருக்குத் திரும்பினார். திருக்கடவூருக்குத் திருஞான சம்பந்த சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் எழுந்தருளி னார்கள். குங்குலியக்கலயர் அப்பெரு மக்களை எதிர்கொண்டழைத்து, அவர்கட்குத் திருவமுது செய்வித்தார்; அவர்கள் அருளையும் ஆண்டவன் அருளையும் பெற்றார்.

நாயனார் தமது திருப்பணியை முறையாகச் செய்து வாழ்ந்து சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார்.

# மானக்கஞ்சாறர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*கலச முலைக்கன்னி காதற் புதல்வி கமழ்குழலை*
*நலசெய் தவத்தவன் பஞ்ச வடிக்கிவை நல்கெனலும்*
*அலசும் எனக்கரு தாதவள் கூந்தல் அரிந்தளித்தான்*
*மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ் சாற னெனும்வள்ளலே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*கஞ்சநகர் மானக்கஞ் சாற னார்சீர்க்*
*காதல்மகள் வதுவைமணங் காண நாதன்*
*வஞ்சமலி மாவிரதத் தலைவ னாகி*
*வந்துபுகுந் தவளளக மகிழ்ந்து நோக்கிப்*
*பஞ்சவடிக் காமென்ன அரிந்து நீட்டும்*
*பத்தர்எதிர் மறைந்திறைவன் பணித்த வாக்கால்*
*எஞ்சலில்வண் குழல்பெற்ற பேதை மாதை*
*ஏயர்பிராற் குதவியருள் எய்தி னாரே.*

மானக்கஞ்சாற நாயனார் கஞ்சாறூரிலே தோன்றியவர். அவர் வேளாண்குலத் தலைவர்; சேனாதிபதி; சிவனடியாரைச் சிவனே என்று கருதுவோர்; 'தமது உடைமை யெல்லாம் சிவனடியார் உடமை' என்று எண்ணும் பெருநிலையில் நின்றவர்; எதையுங் குறிப்பறிந்து கொடுப்பவர்.

### பெண் மகவு பிறத்தல்

நாயனார்க்கு நீண்டகாலமாக மகப்பேறில்லாமலிருந்தது. அது குறித்து அவர் திருவருளை வாழ்த்துவார். திருவருளால் அவருக் கொரு பெண்மகவு பிறந்தது. அதை நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக அவர் வளர்த்து வந்தார். அப்பெண்மகள் உற்ற வயதடைந்தாள்.

### திருமணம்

அப்பெண்மணியை ஏயர்கோன் கலிக்காம நாயனார்க்கு மணம்பேசச் சில முதியோர், மானக்கஞ்சாற நாயனாரிடம் போந்தனர். நாயனார் முதியயோரை முறைப்படி உபசரித்தனர். அவர் தங்

கருத்தைத் தெரிவித்தனர். அதற்கு மானக்கஞ்சாறர் உடன் பட்டார். இருசார்பிலும் திருமண முயற்சி நிகழ்ந்து வரலாயிற்று.

### மாவிரதியார் வருகை

ஏயர்கோன் கலிக்காம நாயனார் மணக்கோலங் கொண்டு உறவினருடனும் மற்றவருடனும் கஞ்சாறூருக்குப் புறப்பட்டார். அவர் கஞ்சாறூரை அடைவதற்குள், சிவபெருமான் மாவிரத கோலந் தாங்கி, மானக்கஞ்சாற நாயனார் வீட்டுள் நுழைந்தார். நாயனார் அவரை எதிர்கொண்டு வணங்கி, 'உய்ந்தேன் உய்ந்தேன்' என்று குழைந்து குழைந்து உருகினார். உருகும் அடியவரை மாவிரதியார் பார்த்து, 'இங்கென்ன? மணவினையா நடக்கப்போகிறது?' என்று கேட்டார். மானக்கஞ்சாறர் 'அடியேனது ஒரு புதல்விக்குத் திருமணம் நடக்கப்போகிறது' என்று பணிவுடன் கூறினார். மாவிரத முனிவர், உமக்கு நலம் உண்டாக' என்று வாழ்த்தினார்.

### தலைமயிர் கேட்டுப் பெறல்

உடனே நாயனார் உள் புகுந்து தம் புதல்வியை அழைத்து வந்து முனிவரைத் தொழச் செய்தார். தொழு தெழுந்த மணப்பெண்ணின், மேகம்போன்று தழைத்துப் பொலியும் அழகிய கூந்தல்மீது முனிவரனார் மனஞ்செலுத்தினார்; செலுத்தி நாய னாரைப் பார்த்து, 'இவ்வணங்கின் கூந்தல் நமது பஞ்சவடிக்கு உதவக்கூடும்' என்றார். என்றதும், நாயனார் தமது உடைவாளை உருவிப் புதல்வியின் கூந்தலை அறுத்து மாவிரதியாரிடம் நீட்டினார். அதை வாங்குவார் போல் நின்ற சிவபெருமான், தாம் ஏற்ற கோலத்தை மறைத்து, உமையம்மையாருடன் மழவிடைமேல் காட்சி தந்தார். நாயனார் விழுந்து எழுந்து மெய்ம்மறந்தார். சிவபெருமான், அன்பரை நோக்கி, 'நம்மாட்டு உனக்குள்ள அன்பின் திறத்தை உலகறியச் செய்தோம். இனி நம்மை அடைவாயாக' என்று திருவருள் செய்து திருவுருக் கரந்தார். நாயனார் ஆண்டவன் அருட் பெருந்திறத்தைப் போற்றும் அரும்பேற்றைப் பெற்றார்.

### ஏயர்கோன்கலிக்காமர் அன்பு

ஏயர்கோன்கலிக்காம நாயனார் கஞ்சாறூரை அடைந்தார்; நிகழ்ந்ததைக் கேள்வியுற்றார்; திருவருளைப் போற்றி மகிழ்ந்து, 'அந்நிகழ்ச்சியைக் காணும் பேற்றை யான் பெறவில்லையே' என மனந் தளர்ந்தார். அருளால் எழுந்த திருவாக்கைக் கேட்டு அவர் துன்பம் நீத்தார். திருவருளால் மணப் பெண்ணின் கூந்தல் முன்போல் வளரப்பெற்றது. ஏயர்கோன் கலிக்காம நாயனார் அப்பெண் மணியை மணந்து தம்மூர் நோக்கினார்.

# அரிவாட்டாயர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

***வள்ளற் பிராற்கமு தேந்தி வருவோ னுகலுமிங்கே***
***வெள்ளச் சடையாய்! அமுதுசெய் யாவிடில் என்தலையைத்***
***தள்ளத் தகுமென்று வாள்பூட் டியதடங் கையினன்காண்***
***அள்ளற் பழனக் கணமங் கலத்தரி வாட்டாயனே***

## திருத்தொண்டர் புராண சாரம்

***தாவில்கண மங்கலத்துள் வேளாண் தொன்மைத்***
***தாயனார் நாயனார் தமக்கே செந்நெல்***
***தூவரிசி எனவிளைவ தவையே யாகத்***
***துறந்துணவு வடுவரிசி துளங்கு கீரை***
***ஆவினில்ஐந் துடன்கொணரக் கமரிற் சிந்த***
***அழிந்தரிவாள் கொண்டூட்டி அரியா முன்னே***
***மாவடுவின் ஒலியும்அரன் கரமுந் தோன்றி***
***வாள்விலக்கி அமரர்தொழ வைத்த தன்றே.***

*சோழ நாட்டில் கணமங்கலம் என்றொரு பதியுண்டு. அப் பதியில் தாயனார் என்ற பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவர் செல்வத்திற் சிறந்தவர்; வேளாண்குலத் தலைவர். செந்நெல் அரிசியையும், செங்கீரையையும், மாவடுவையும் சிவபெருமானுக்குத் திருவமுது செய்விப்பது அவர்தந் திருத்தொண்டு.*

### செல்வ மாற்றம்

*தாயனாரின் செல்வ வளங்களை யெல்லாம் மாற்றச் சிவபெருமான் திருவுளங் கொண்டார். அன்பருடைய செல்வங்க ளெல்லாம் யானையுண்ட விளங்கனிபோல் ஒழிந்தன. ஒழிந்தும் நாயனார் தமது திருத்தொண்டினின்றும் வழுவினா ரில்லை.*

### தாயனார் கூலிக்கு நெல்லறுத்தல்

*தாயனார் கூலிக்கு நெல்லறுக்கப் புகுந்தார். அவர், செந்நெல் லறுத்துக் கூலியாகப் பெறுஞ் செந்நெல்லை ஆண்டவனுக்கு அமுதாக்குவார்; கார்நெல் லறுத்துக் கூலியாகப் பெறுங் கார் நெல்லைத் தாம் உண்பார். தாயனார் இந்நெறி பற்றி ஒழுகுநாளில்,*

அவர் செல்லும் வயல்களெல்லாம் செந்நெல்லாகக் காணப்பட்டன. அன்பிற் சிறந்த தாயனார், 'இது யான் செய்த புண்ணியம்' என்று மகிழ்ந்து, பெறுஞ்செந்நெல்லை யெல்லாம் ஆண்டவனுக்கே உதவித் தாம் பட்டினி கிடக்கலானார்.

**இலையும் நீரும் உண்டு காலங்கழித்தல்**

தாயனாரின் அருமை மனைவியார், வீட்டுக்கொல்லையி லுள்ள இலைக்கறிகளைக் கொய்து அவருக்குப் படைக்கத் துவங்கி னார். அன்பர் அதை உண்டு கழிப்பார். கொல்லையில் இலைக்கறி களும் அற்றுப்போயின. அம்மையார் நீர் வார்ப்பார். நாயானர் அதையும் அருந்தித் தமது தொண்டைச் செய்துவந்தார்.

**தாயனார் வீழ்தல்**

ஒருநாள் தாயனார் வழக்கப்படி ஆண்டவனுக்கு அமு தூட்டச் செந்நெல் அரிசியையும், செங்கீரையையும், மாவடுவையும் கூடையில் வைத்துச் சுமந்து செல்கிறார். அவர் பின்னே, மனைவியார் பஞ்சகவ்யத்தை ஏந்திச் செல்கிறார். உணவின்றி மெலிவுற்றிருந்த தாயனார், கால் தளர்ந்து தவறி வீழ்ந்தார். அப்போது அம்மையார் பஞ்சகவ்யக் கலத்தை மூடியிருந்த கையால் நாயகரை அணைக்க முயன்றார். முயன்றும் பயன் விளையவில்லை. செந்நெல் முதலிய யாவும் நிலவெடிப்பில் சிந்திவிட்டன.

**ஊட்டியை அறுத்தல்**

தாயனார், 'இனி ஏன் திருக்கோயிலுக்குப் போதல் வேண்டும்? செந்நெல் முதலியவற்றை ஆண்டவன் அமுது செய்யும் பேற்றைப் பெற்றேனில்லை' என்று அரிவாளை எடுத்துத் தமது ஊட்டியை அறுக்கலுற்றார். அச்சமயத்தில் அன்பனார் தமது கையைத் தடுக்க, எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் இறைவனாரது வீசிய கையும், (அவர் மாவடுவைக் கடிப்பதின்றும் எழும்) 'விடேல்' 'விடேல்' என்னும் ஓசையும் வெடிப்பின்றும் எழுந்தன. ஆண்டவன் திருக்கை அடியவரின் கையைப் பற்றியது. தாயனார் வெருக்கொண்டார். ஊறு நீங்கியது.

**ஆண்டவன் அருளல்**

தாயனார் ஆண்டவன் அருளைப் போற்றி நிற்கிறார். சிவ பெருமான் விடைமேல் தோன்றி, 'நீ புரிந்த செய்கை நன்று. உன் மனைவியுடன் என்றும் நமது உலகில் வாழ்வாயாக' என்று அருள் செய்து எழுந்தருளினார். அவருடன் நாயனாரும் அவர்தம் மனைவி யாருஞ் சென்று பெறுதற்கரிய பேற்றைப் பெற்றார்.

தாயனார் தமது ஊட்டியை அறுக்க அரிவாள் பூட்டினமை யால், அவர் அரிவாட்டாயர் என்னும் தூயநாமம் பெறலானார்.

# ஆனாயர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*தாயவன் யாவுக்குந் தாழ்சடை மேல்தனித் திங்கள்வைத்த*
*தூயவன் பாதந் தொடர்ந்துதொல் சீர்துளை யாற்பரவும்*
*வேயவன் மேன்மழ நாட்டு விரிபுனல் மங்கலக்கோன்*
*ஆயவன் ஆனாயன் என்னையு வந்தாண் டருளினனே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*மங்கலமா மழநாட்டு மங்கலமா நகருள்*
*மருவுபுகழ் ஆனாயர் வளர்ஆ மேய்ப்பார்*
*கொங்கலர்பூந் திருக்கொன்றை மருங்கு சார்ந்து*
*குழலிசையில் ஐந்தெழுத்துங் குழைய வைத்துத்*
*தங்குசரா சரங்களெலாம் உருகா நிற்பத்*
*தம்பிரான் அணைந்துசெவி தாழ்த்தி வாழ்ந்து*
*பொங்கியவான் கருணைபுரிந் தென்றும் ஊதப்*
*போதுகஎன் றருளஉடன் போயி னாரே.*

மழநாட்டில் திருமங்கலம் என்னும் பதியில் ஆயர் குலத்தில் தோன்றியவர் ஆனாய நாயனார். அவர் திருநீற்றினிடத்திற் பேரன்பு வாய்ந்தவர்; மன மொழி மெய்களில் சிவபெருமான் திருவடியையே போற்றுபவர்.

### பசுக் காத்தலும் குழலூதலும்

அப் பெரியார், இடையர்க்குத் தலைமை பூண்டு, பசுக் கூட்டங்களைக் காத்துவந்தார். அவர்தம் முயற்சியால் பசுக் கூட்டங்கள் காட்டுக்குப்போய் எவ்வித இடையூறுமின்றி நறும்புல் மேய்ந்து, தூநீர் அருந்தி, நல்வழியில் பெருகலாயின. பசுக்கூட்டங் களை மேய்த்துக் காப்பதுடன், வேய்ங்குழல் வாசிப்பதும் ஆனாயரின் வழக்கமா யிருந்து வந்தது.

### கொன்றைக் காட்சி

ஒரு நாள், ஆனாயர் வழக்கம்போலக் கார்காலத்திற் காடு நோக்கச் சென்றார். அங்கே பூத்துத் தளிர்த்து நின்ற ஒரு கொன்றை மரம் அவரது கண்ணையுங் கருத்தையுங் கவர்ந்தது. அவ்வருங்

கொன்றை, தாழ்சடையில் கொன்றை யணிந்த சிவபெருமானைப் போலவே ஆனாயருக்குத் தோன்றலாயிற்று. தோன்றவே, அவர்தம் மனம் சிவத்தில் ஒன்றிவிட்டது; கருவி கரணங்களெல்லாம் குழைந்து குழைந்து உருகின. அவர்பால் அன்புமடை திறந்துகொண்டது. அன்பில் மூழ்கிய ஆயர் பெருமான், வேய்ங்குழலை மணிவாயில் வைத்து, அஞ்செழுத்தை இசையில் அமைத்து, வாசிக்கத் துவங் கினார். அவ்விசையின் திறத்தை என்னென்று கூறுவது!

### எல்லாம் இசை மயம்

அவ்விசை அமுதம் எல்லா உயிர்களிலும் பாய்கிறது. அறுகம் புற்களை மேய்ந்துகொண்டிருந்த ஆனிரைகள் அசைவிடாமல் அவரைச் சூழ்ந்தன; நுரைவாயுடன் பாலூட்டிக் கொண்டிருந்த இளங்கன்றுகள் தங்களை மறந்தன; எருதுகளும், மான் முதலிய காட்டு விலங்குகளும் மயிர் முகிழ்த்து அங்கே வந்து சேர்ந்தன; ஆடும் மயில்கள் அசையாது அணுகின; மற்றப் பறவை இனங்க ளெல்லாம் மயங்கி மயங்கி நெருங்கின; மாடு மேய்த்துக் கொண் டிருந்த கோவலர் அவ்வப்படியே நின்றனர்; நாகலோக வாசிகள் பிலங்கள் வழியாக வந்தார்கள்; மலையில் வாழுந் தெய்வப் பெண்கள் இசையிற் றேங்கி நின்றார்கள்; விஞ்சையர், சாரணர், கின்னரர், தேவர் முதலியோர் விமானங்களில் போந்தனர்; கற்பகத் தருவின் மருங்கிருந்து கிளிகளுக்கு அமுதூட்டிய தேவமகளிர், அக்கிள்ளைகளுடன் தங் குழல் அலைய, விமானங்களில் விரைந் தேறி இசை அமுதத்தைப் பருகினர். வலியார் மெலியா ரெல்லாரும் இசையால் ஒன்றுபட்டமையான், பாம்புகள் மயில்மீது விழு கின்றன; சிங்கமும் யானையும் ஒருங்குசேர்ந்து வருகின்றன; மான்கள் புலியின் பக்கத்தில் செல்கின்றன. காற்று விசைத் தசையவில்லை; மரக்கிளைகள் சலிக்கவில்லை; மலைவீழ் அருவிகளும் காட்டாறு களும் கலித்து ஓடவில்லை; முகில்கள் புடை பெயரவுமில்லை; மழை பொழியவு மில்லை; முழங்கவுமில்லை.

### இசைக்கு இறைவன் எளிவரல்

இவ்வாறு சராசரங்களெல்லாம் இசைவாய்ப்பட்டுப் பொறி புலன்கள் ஒன்றப்பெற்றன. ஆனாயர் குழலோசை, வையத்தை நிறைத்து வானையும் வசப்படுத்திவிட்டது. எஞ்சி நிற்பது என்ன? சிவம் ஒன்றே. அச்சிவத்தின் செவியிலும் குழலோசை நுழைந்தது. பொய்யன்புக் கெட்டாத பெருமான் ஆனாயர் முன்னே தோன்றி, 'இப்படியே நம்பால் அணைவாய்' என்றருளினார். ஆனாய நாயனாரும் அப்படியே ஆண்டவனை அடைந்து பேரின்பம் பெற்றார்.

# மூர்த்தியார்

## திருத்தொண்டத் தொகை

*மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்*
*முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்*
*செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்*
*திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்*
*மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க*
*வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த*
*அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.*

## திருத்தொண்டர் திருவந்தாதி

*அவந்திரி குண்டம ணாவதின் மாள்வன்என் றன்றாலவாய்ச்*
*சிவன்திரு மேனிக்குச் செஞ்சந் தனமாச் செழுமுழங்கை*
*உவந்தொளிர் பாறையில் தேய்த்துல காண்டஒண்*
*மூர்த்திதன்னூர்*
*நிவந்தபொன் மாட மதுரா புரிஎன்னு நீள்பதியே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*வழங்குபுகழ் மதுரைநகர் மூர்த்தி யாராம்*
*வணிகர்திரு வாலவாய் மன்னர் சாத்தத்*
*தழங்குதிர முழங்கை தரத் தேய்த்த ஊறும்*
*தவிர்ந்தமணர் வஞ்சனையும் தவிர மன்னன்*
*இழந்தவுயி ரினனாக ஞாலம் நல்க*
*எழில்வேணி முடியாத இலங்கு வேடம்*
*முழங்குபுகழ் அணியா விரைநீ றாக*
*மும்மையுல காண்டருளின் முன்னி னாரே.*

பாண்டி நாட்டிலே மதுரைமா நகரிலே வணிகர் குலத்திலே பிறந்தவர் **மூர்த்தி நாயனார்**. அவர் சிவபத்தியிற் சிறந்தவர்; அன்பையே திருவுருவாக் கொண்டவர்.

**சந்தனக் காப்பு**

*அப்பெரியார், சொக்கலிங்கப் பெருமானுக்குச் சந்தனக் காப் பணிவதைத் தமக்குரிய திருத்தொண்டாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். வருநாளில் வடுகக் கருநாடக மன்னன் ஒருவன், தென்னாடு போந்து, பாண்டியனை வென்று, மதுரைக்கு அதிபதியானான். அவன் சமண சமயத்தைத் தழுவித் திருநீறணியுஞ் சிவனடியார்க்குத் தீங்கிழைத்து வந்தான். அவன் தீங்கிடை மூர்த்தி நாயனாரது திருத் தொண்டும் நிகழ்ந்து வந்தது.*

**தொண்டுக்கு இடர்**

*கருநாடக மன்னன், மூர்த்தியார்க்குப் பல இடையூறுகள் புரியத் தொடங்கினான். புரிந்தும், மூர்த்தியார் தந்திருத்தொண்டி னின்றும் வழுவினாரில்லை. அது கண்ட மன்னன், நாயனார் சந்தனக் கட்டைகளைப் பெறாதவாறு எவ்வெத் தடைகளைச் செய்ய வேண்டுமோ, அவ்வத் தடைகளைச் செய்தான். நாயனார் மனம் வருந்தலாயிற்று. வருத்தமேலீட்டான் நாயனார், 'இக் கொடுங் கோலன் என்றே மாய்வான்? இந்நாடு திருநீற்று நெறியினைத் தாங்கும் வேந்தனை என்றே பெறும்?' என்று எண்ணி எண்ணிச் சந்தனக் கட்டையைத் தேடித் தேடிப் பகல் முழுவதுந் திரிந்தார். சந்தனக் கட்டை எங்குங் கிடைக்கவில்லை.*

**முழங்கையைத் தேய்த்தல்**

*மூர்த்தியார் என் செய்தார்? அவர் திருக்கோயிலுட் புகுந்தார்; 'இன்று சந்தனக் கட்டைக்கு முட்டு நேர்ந்தால் என்ன? அதைத் தேய்க்கும் என் கைக்கு எவ்வித முட்டும் நேரவில்லையே' என்று கருதி, ஒரு சந்தனக் கல்லின்மீது தமது முழங்கையை வைத்துத் தேய்த்தார். இரத்தம் வெள்ளம்போல் பெருகிப் பாய்ந்தது. எலும்பு வெளிப்பட்டது. என்புத் துவாரங்கள் திறந்தன. மூளை ஒழுகியது.*

**இராச்சியம் அருளல்**

*அக்காட்சி கண்டு பொறா ஆண்டவன் அருளால் 'ஐயனே! மெய்யன்பின் முனிவால் இதைச் செய்யாதே. இராச்சியமெல்லாம் நீயே கைக்கொள்க; கொடுங்கோலனால் விளைந்த தீமைகளை ஒழித்துவிடுக; உன் திருப்பணியைச் செய்து நமது சிவலோகத்தை அடைவாயாக' என்று ஒரு வானொலி எழுந்தது. எழுந்ததும், நாயனார் நடுக்குற்றார்; கையைத் தேய்த்தலை நிறுத்தினார். அவரது கையின் ஊறு நீங்கிற்று; கை பழையபடி யாயிற்று.*

**மன்னன் மரணம்**

*மூர்த்தியார், 'இறைவன் திருவருள் சுரப்பின், இன்வையத்தை நான் தாங்குவேன்' என்று நினைந்து, திருக்கோயிற் புறத்தில் நின்றார்.*

அன்றிரவே அக்கொடிய மன்னன் இறந்துவிட்டான். அடுத்தநாட் காலையில் அவனுக்கு ஈமக்கடன்கள் செய்யப்பட்டன.

## யானை அரசரைத் தேர்ந்தெடுத்தல்

இறந்துபட்டவனுக்குப் புதல்வரில்லை; தாயத்தாருமில்லை. அதனால் 'எவரை அரசராக்குவது?' என்று அமைச்சர்கள் ஆலோசித்தார்கள்; முடிவாக, ஒரு யானையைக் கண்கட்டி விடுதல் வேண்டுமென்றும், அஃது எவரை எடுத்து வருகிறதோ அவரே அரசராதல் வேண்டுமென்றுந் தீர்மானித்தார்கள்; அவ்வாறே, ஒரு யானையை முறைப்படி அருச்சித்து, ஓர் ஏந்தலை எடுத்து வருமாறு பணித்துத் துகிலால் அதன் கண்ணைக் கட்டிவிட்டார்கள். யானை தெருக்களிலே திரிந்து, மூர்த்தி நாயனார் முன்னே போய்த் தாழ்ந்து, அவரை எடுத்துப் பிடரியில் வைத்தது. அமைச்சர்கள் மூர்த்தி நாயனாரை அரசராகக் கொண்டு அவர் திருவடியில் விழுந்து வணங்கினார்கள்; அவரை முடிசூட்டு மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள்; சிங்காசனத்தில் வீற்றிருக்கச் செய்தார்கள்.

## மும்மையும் முடிசூட்டலும்

முடி சூட்டற்குரிய வினைகள் தொடங்கப்பட்டன. அப்போது நாயனார், அமைச்சர்களை நோக்கி, 'சமணம் அழிந்து சைவம் ஓங்கினால் யான் அரசாட்சியை ஏற்றல் கூடும்' என்றார். அதற்கு எல்லாரும் இசைந்தனர். பின்னும் நாயனார், 'எனக்குத் திருநீறு அபிடேகப் பொருளாகவும், கண்டிகை கலன்களாகவும், சடைமுடி முடியாகவும் இருத்தல் வேண்டும்' என்று கூறினார். அதற்கும் அமைச்சர் முதலாயினோர் உடன் பட்டனர். அம்முறையில் முடி சூட்டுவிழா நன்கு நடைபெற்றது. நாயனார் திருக்கோயிலுக்குப் போய்ச் சொக்கநாதரைத் தொழுது, யானைமீது ஏறி அரண்மனை சேர்ந்தார்.

மூர்த்தி நாயனார், பிரமசரியத்தில் உறுதிகொண்டு, திருநீறு - கண்டிகை - சடைமுடி ஆகிய மூன்றையும் அணிந்து, சைவம் ஓங்கப் பன்னெடுநாள் ஆட்சி புரிந்து, சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார்.

# முருகனார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*பதிகந் திகழ்தரு பஞ்சாக் கரம்பயில் நாவினன்சீர்*
*மதியஞ் சடையார்க் கலர்தொட் டணிபவன் யான்மகிழ்ந்து*
*துதியங் கழற்சண்பை நாதற்குத் தோழன்வன்*

*தொண்டனம்பொன்*
*அதிகம் பெறும்புக லூர்முரு கன்னெனும் அந்தணனே.*

## திருத்தொண்டர் புராணம் சாரம்

*மன்னுதிருப் புகலூர்வாழ் முருக னாராம்*
*மறையவர்கோ வர்த்தமா னீச்ச ரத்தார்*
*சென்னியினுக் கழகமரும் மலர்கள் கொய்து*
*திருமாலை புகழ்மாலை திகழச் சாத்திக்*
*கன்னிமதிற் கழுமலநா டுடைய நாதன்*
*காதல்மிகு மணங்காணுங் களிப்பி னாலே*
*இன்னல்கெட உடன்சேவித் தருளால் மீளா*
*திலங்குபெரு மணத்தரனை எய்தி னாரே.*

**முருக நாயனார்** சோழ நாட்டிலே திருப்புகலூரிலே வேதியர் குலத்திலே தோன்றியவர். அவர் சிவபத்தியிலும் அடியார் பத்தியிலுஞ் சிறந்தவர். அவர் நாள்தோறும் வைகறை எழுவார்; காலைக் கடன்களை முடிப்பார்; நீராடுவார்; திருநந்தனவனம் புகுவார்; கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நால்வகை பூக்களைக் கொய்வார்; அப்பூக்களால் இண்டை, தாமம், கண்ணி, பிணையல் முதலிய மாலைகள் கட்டுவார்; அம்மாலைகளைச் சிவபிரானுக்குச் சூட்டுவார்; நெஞ்சங் குழைந்து குழைந்து உருகுவார்; அஞ்செழுத்து ஓதுவார். இம்முறையில் திருத்தொண்டு செய்து வந்த முருக நாயனார், திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு நண்பராகி, அச்சுவாமிகளின் திருமணச் சிறப்பிற் கலந்து சிவபிரான் திருவடி நீழலை அடைந்தார்.

# உருத்திர பசுபதியார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*அந்தாழ் புனலிடை அல்லும் பகலுநின் றாதரத்தால்*
*உந்தாத அன்பொ டுருத்திரஞ் சொல்லிக் கருத்தமைந்த*
*பைந்தார் உருத்ர பசுபதி தன்னற் பதிவயற்கே*
*நந்தார் திருத்தலை யூரென் றுரைப்பரிந் நானிலத்தே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*பங்கமில்வண் புகழ்நிலவு தலையூர் வாழும்*
*பசுபதியார் எனும்மறையோர் பணிந்து செந்தேன்*
*அங்கமல மடுவினிடை அல்லும் எல்லும்*
*அகலாதே யாகளமாய் அமர்ந்து நின்று*
*திங்கள்வளர் சடைமுடியான் அடியே போற்றித்*
*திருஎழுத்தும் உருத்திரமும் திருந்த ஓதி*
*மங்கையிடம் உடையபிரான் அருளால் மேலை*
*வானவர்கள் தொழும்உலகில் மன்னி னாரே.*

சோழ நாட்டுப் பதிகளில் திருத்தலை என்னும் பதியும் ஒன்று. அப்பதியில் அந்தணர் குலத்தில் தோன்றியவர் பசுபதி என்பவர். அப்பெரியார் தாமரைத் தடாகத்துட் சென்று கழுத்தளவு நீரிலே நின்று ஸ்ரீ ருத்திரத்தை ஓதுவார். இஃது அவர்தந் திருத்தொண்டு. அவர் இத்திருத்தொண்டில் ஈடபட்டுச் சின்னாள் வாழ்ந்து சிவபதஞ் சேர்ந்தார். உருத்திர மந்திரத்தை ஓதியபடியால், அவர் **உருத்திர பசுபதி நாயனார்** என்ற திருப்பெயரைப் பெற்றார்.

# திருநாளைப்போவார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*நாவார் புகழ்த்தில்லை அம்பலத் தானருள் பெற்றுநாளைப்*
*போவா னவனாம் புறத்திருத் தொண்டன்றன் புன்புலைபோய்*
*மூவா யிரவர்கை கூப்ப முனியாய வன்பதிதான்*
*மாவார் பொழில்திகழ் ஆதனூர் என்பரிம் மண்டலத்தே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*நன்மைதிகழ் மேற்காநாட் டாத னூர்வாழ்*
*நந்தனார் புறத்தொண்டர் நாளைப் போகப்*
*பொன்மலிதென் புலியூர்க்கென் றுரைப்பார் புன்கூர்ப்*
*பொய்கைஅமைத் தடலேறு பிரிய நோக்கி*
*வன்மதில்சூழ் தில்லைஇறை அருளால் வாய்ந்த*
*வண்தழலின் இடைமூழ்கி மறையோர் போற்ற*
*மின்மலிசெஞ் சடைமுனியாய் எழுந்து நாதன்*
*விளங்குநடந் தொழமன்றுள் மேவி னாரே.*

சோழ நாட்டின் ஒரு பாங்கரிலுள்ளது மேற்காநாடு. அந் நாட்டில் ஆதனூர் என்னும் ஒரு திருப்பதி உண்டு. அத் திருப்பதியில் ஆதிதிராவிடர் மரபில் தோன்றியவர் **நந்தனார்** என்பவர்.

### அன்புத் தொண்டும் நெகிழ்ச்சியும்

நந்தனார்க்கு மானிய நிலங்களிருந்தன. அவைகளின் விளைவு அவர்தம் வாழ்விற்குப் பயன்பட்டு வந்தது. சிவாலயங்களிலுள்ள பேரிகைக்குத் தோலும் வாரும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், சிவார்ச்சனைக்குக் கோரோசனையும் அவரால் கொடுக்கப்பட்டு வந்தன. அவரது சிந்தை சிவன் கழலிலேயே சேர்ந்து நிற்கும். திருக்கோயில்களின் வாயிற் புறத்தே நின்று ஆண்டவனைத் தொழுவது அப்பெரியாரது வழக்கம். தொழுகையில் அவருடைய நெஞ்சங் கசிந்து கசிந்து உருகும்; கண்கள் நீர் சொரியும். அன்பால் அவர் மெய்ம்மறந்து ஆடுவார்; பாடுவார்.

### திருப்புன்கூர்த் தரிசனம்

*திருப்புன்கூர்ச் சிவலோகநாதனைக் கண்டு பணிசெய்தல் வேண்டும் என்னும் வேட்கை நந்தனார்பால் எழுந்தது. அவ்வேட்கையைத் தணிக்கை செய்ய அவர் திருப்புன்கூர் சென்றார்; சென்று திருக்கோயில் வாயிலிலே நின்று, சிவலிங்கப் பெருமானை நேரே கண்டு தொழ விரும்பினார். அன்பர்கள் விரும்புமாறு அருள்புரியும் சிவபெருமான், தம்முன்னுள்ள இடபதேவரை விலகும்படி செய்து, நந்தனார்க்குக் காட்சி தந்தருளினார். அடியவர் பெருமான் அன்புடன் பணிந்து ஆனந்த முற்றார்; பின்னே அவ்விடத்தில் ஒரு பள்ளத்தைக் கண்டு, அதைப் பெரிய திருக்குளமாக வெட்டித் திருப்பணி செய்து தமதூருக்குத் திரும்பினார். அவர் வேறு பல திருப்பதிகட்கும் போந்து போந்து தமது வழித்தொண்டு செய்வார்.*

### 'நாளைப் போவேன்'

*ஒருநாள் நந்தனாரது சிந்தை சிதம்பர தரிசனத்தின்மீது சென்றது. சென்ற அன்றிரவு முழுவதும் அவர் உறங்கினாரில்லை. பொழுது புலர்ந்தது. சிதம்பரப் பித்து அவரை விட்டகலவில்லை. அவர் தில்லையை நினைந்து நினைந்து, 'அந்தோ! தில்லை நண்ணினும் திருக்கோயிலுட் புகுந்து திருக்கூத்தைக் காணும் பேறு இப்பிறவிக்கு இல்லையே' என்று வருந்துவார்; 'இஃதும் எம் பெருமான் திருவருள் என்று போக்கொழிவார்; மேலும் மேலும் எழுங் காதலால் 'நாளைப்போவேன்; நாளைப்போவேன்' என்று சொல்வார். இவ்வாறு பல நாட்கள் கழிந்தன. ஒருநாள் **திருநாளைப் போவார்** உறுதிகொண்டு தில்லை நோக்கிச் சென்று திருவெல் லையை அடைந்தார்.*

### ஆண்டவனருளல்

*அங்கே, அவர், அந்தணர்தம் யாகசாலைகளையும், வேதம் ஓதும் இடங்களையும், மடங்களையும், பிறவற்றையுங் கண்டனர்; அஞ்சினர்; அஞ்சித் திருவெல்லையை மட்டும் இரவு பகல் வலஞ் செய்வாராயினர்; செய்து செய்து ஒருநாள், [1]"உள் நுழைவிற்கு இப்பிறவி தடையாக நிற்கிறதே; எவ்வழியில் திருக்கூத்தைக் கண்டு தொழுவது?' என்று நினைந்து நினைந்து மனம் நொந்து நொந்து உறங்கிவிட்டனர். அன்பருளங் கோயில் கொண்ட தில்லைக்கூத்தன், நந்தனார் கனவில் தோன்றிப் புன்முறுவல்செய்து, 'இப்பிறவி ஒழிய நீ நெருப்பில் மூழ்கி அந்தணருடன் நம்முன் அணைவாய்' என்று திருவாய் மலர்ந்தருளினன்; மேலுந் தொடர்ந்து தில்லைவாழ்*

---

1. இது மூலத்தையொட்டி எழுதப்பட்ட உரைநடை. மூலத்தில் நுட்பங்கள் பல இருக்கின்றன. அந்நுட்பங்களைப் பற்றி ஆராய்ச்சிக்குறிப்புகள் என்னால் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றை எனது பெரியபுராணப் பதிப்பிற் காண்க.

அந்தணர்தங் கனவில் தோன்றித் திருநாளைப் போவார் நிலையை அவர்க்கு உணர்த்தி, எரி அமைக்குமாறு பணித்தருளினன்.

**அந்தணர் ஐயரைக் காண்டல்**

அந்தணர் பெருமக்கள் விழித்தெழுந்து, அச்சத்துடன் ஆலயத்திலே ஒருங்கு சேர்ந்து, ஆண்டவன் கட்டளையை நிறைவேற்ற உறுதிகொண்டு, திருநாளைப் போவாரிடஞ் சென்றார்கள்; சென்று, 'ஐயரே! ஆண்டவன் ஆணைப்படி இங்கே வந்தோம்; உம் பொருட்டு எரி அமைக்கப் போகிறோம்' என்றார்கள். திருநாளைப் போவார், 'உய்ந்தேன்; உய்ந்தேன்' என்று ஆண்டவன் திருவருளைப் போற்றினார்.

**பொன்மேனி பெறல்**

அந்தணர் தென்மதிற் புறத்துத் திருவாயிலின் முன் தீ வளர்த்து, அதைத் திருநாளைப்போவார்க்குத் தெரிவித்தனர். திருநாளைப் போவார் தீக்குழியை அடைந்து, இறைவன் திருவடியை மனங் கொண்டு, அதை வலம் வந்து நெருப்பில் மூழ்கினார். முழுகியதும், அவர்தம் மாயப்பொய்யுடலம் ஒழிந்தது. அவர், புண்ணியப் பொன்மேனி திகழும் முனிவராய்ப் பூணூலுஞ் சடைமுடியும் பொலிய எழுந்தார். அது கண்டு அமரர் மலர் மாரி சொரிந்தனர்; அந்தணர் கை கூப்பித் தொழுதனர்; அடியவர் மகிழ்வெய்தினர்.

**சிவமாதல்**

திருநாளைப்போவார், தில்லைவாழ் அந்தணர் முதலியவருடன் சென்று திருக்கோபுரத்தைக் கண்டு தொழுது பொன்னம்பலம் புகுந்தார். புகுந்ததும், அவர்தம் திருவுருவம் மறையவர்க்கும் மற்றவர்க்கும் புலப்படவில்லை. அவரனைவரும் அதிசயித்தனர். நடராஜப்பெருமான் திருநாளைப் போவார்க்குத் தமது திருவடிப் பேற்றை நல்கினர்.

# திருக்குறிப்புத் தொண்டர்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*மண்டும் புனற்சடை யான்தமர் தூசெற்றி வாட்டும்வகை*
*விண்டு மழைமுகில் வீடா தொழியின்யான் வீவனென்னா*
*மீண்டும் படர்பாறை முட்டும் எழிலார் திருக்குறிப்புத்*
*தொண்டன் குலங்கச்சி ஏகா லியர்தங்கள் தொல்குலமே.*

### திருத்தொண்டர் புராண சாரம்

***கொந்தலர்பூம் பொழிற்கச்சி நகர்ஏ காலிக்***
***குலத்தலைவர் தவர்குறிப்புக் குறித்து ளார்பால்***
***வந்திறைவா நமக்கின்று தாரீ ராகில்***
***வருந்தும் உடல் எனவாங்கி மாசு நீத்த***
***கந்தைபுல ராதொழிய மழையும் மாலைக்***
***கடும்பொழுதும் வரக்கண்டு கலங்கிக் கன்மேல்***
***சிந்தமுடி புடைப்பளவில் திருவே கம்பர்***
***திருக்கைகொடு பிடித்துயர்வான் சேர்த்தி னாரே.***

தொண்டை நாட்டிலே உமையம்மையார் அறம் வளர்த்த திருப்பதி காஞ்சிமா நகரம். அத் திருப்பதியிலே வண்ணார் குலத்திலே தோன்றிய ஒரு நாயனார் இருந்தார். அவர், அடியவர் திருக்குறிப்பை அறிந்து திருத்தொண்டு செய்தமையால் அவருக்குத் **திருக்குறிப்புத் தொண்டர்** என்னும் பெயர் வழங்கலாயிற்று. அடியவர்க்கு வஸ்திரம் வெளுத்துக் கொடுப்பது அவர்தந் தொண்டு.

### தொண்டுக்கு இடர்

குளிர் காலத்தில், ஒருநாள் சிவபெருமான் திருநீறு பூசி, அழுக்கேறிய கந்தை யுடுத்தி, மெலிந்த மேனியாய், வறியராய், 'நாயனார்பால் அணைந்தார். நாயனார் அவரைக் கண்டு, எதிர் கொண்டு பணிந்து, அவர்தந் திருக்குறிப்பை அறிந்து, 'தவத்தீர்! திருமேனி இளைத்திருப்பதென்ன? அணிந்துள்ள கந்தையை அளித்தருளும்; வெளுத்துத் தருகிறேன்' என்று வேண்டி நின்றார். தவவேடர், நாயனாரை நோக்கி, 'இக்கந்தை அழுக்கேறியதே. குளிரின் கொடுமையால் இதைவிடவும் மனமெழவில்லை. பொழுது

போவதற்குள் இதை ஒலித்துக்கொடுக்க முடியுமாயின், இதைக் கொண்டு போம்' என்றருளினார். நாயனார் அதற்கு இசைந்தார். இறைவர், 'பொழுது போவதற்குள் இதை வெளுத்து உலர்த்திக் கொடுத்தல் வேண்டும். இல்லையேல், நீர் இவ்வுடலுக்கு இடர் செய்தவராவீர்' என்று கூறிக் கந்தையைக் கொடுத்தார். நாயனார் அதை வாங்கி வெளுக்கப் புகுந்தார். அப்பொழுது சிவனருளால் மேகங்கள் திரண்டு எழுந்து மழை பொழிந்தன.

**தலையைப் பாறையில் மோதல்**

திருக்குறிப்புத் தொண்டர் என்செய்வார்! அவர், சிவனடியார்க் களித்த உறுதிமொழியை நினைக்கிறார்; வருந்துகிறார்; 'மழை விடவுங் கூடும்' என்று நின்று பார்க்கிறார். மழை விடவில்லை. பொழுது போயிற்று. 'அடியேன் குற்றேவல் தவறிற்றே' என்று நாயனார் விழுந்தார்; விழுந்து, 'மழை யொழியாது; அடியவர் குறிப்பிட்ட காலவரையுங் கழிந்தது. முன்னரே இதை ஒலித்து வீட்டில் காற்றேறக் கட்டிவிட்டேனில்லை; அடியவர் திருமேனியைக் குளிரினால் வருந்தச் செய்தேன்; பாவியானேன்' என்று எழுந்து, கற்பாறையில் தமது தலையை மோதினார். அங்கே சிவபெருமான் திருக்கைதோன்றி நாயனாரைப் பற்றிக் கொண்டது. புனல்மழை யொழிந்தது. பூமலை சொரிந்தது.

சிவபெருமான் உமையம்மையாருடன் மழ விடைமேற்றோன் றினார். திருக்குறிப்புத் தொண்ட நாயனார் மெய்ம்மறந்து பணிந்து எழுந்து கைதொழுது நின்றார். சிவபெருமான் நாயனாரைப் பார்த்து, 'உனது நிலையை மூவுலகும் அறியும்படி செய்தோம். நீ நமது உலகை அடைவாயக' என்று அருள் சுரந்து மறைந்தருளினார்.

# சண்டேசுரர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*குலமே றியசேய்ஞ லூரிற் குரிசில் குரைகடல்சூழ்*
*தலமே றியவறற் சண்டிகண் டீர்தந்தை தாளிரண்டும்*
*வலமே றியமழு வாலெறிந் தீசன் மணிமுடிமேல்*
*நலமே றியபால் சொரிந்தவர் சூட்டிய நன்னிதியே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*வேதமலி சேய்ஞலூர் எச்ச தத்தன்*
*விளங்கியசேய் மறைபயிலும் விசார சன்மர்*
*கோதனம்மேய்ப் பவன்கொடுமை பொறாது தாமே*
*கொண்டுநிரை மண்ணியின்தென் கரையி னீழல்*
*தாதகியின் மணலிலிங்கத் தான்பா லாட்டத்*
*தாதைபொறா தவைஇடறுந் தாள்கள் மாளக்*
*காதிமலர்த் தாமமுயர் நாம முண்ட*
*கலமகனாம் பதமருளாற் கைக்கொண் டாரே.*

சோழநாட்டுத் தலைநகரங்களுள் ஒன்றாயிருப்பது திருச்சேய்ஞலூர் அவ்வூரில் வேதியர் குலத்தில் காசிபர் கோத்திரத்தில் உதித்தவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் எச்சதத்தன் என்பது. அவன், பவித்திரை என்பவளை மணந்து இல்லறம் நடாத்தி வந்தான். அவனுக்கு விசாரசருமர் என்பவர் தவப் புதல்வராகப் பிறந்தார்.

### முற்பிறப்புணர்வு

விசாரசருமருக்கு முற்பிறவி உணர்ச்சி உண்டு. அதனால் அவர் ஐந்து வயதிலேயே வேதாகமங்களின் உணர்வை இயல்பாகப் பெற்றனர். ஏழாம் ஆண்டில் அவருக்கு உபநயனச் சடங்கு நடைபெற்றது. உலகியல் முறைப்படி ஆசிரியர் அவருக்கு வேதம் முதலிய கலைகளைக் கற்பிக்கத் தொடங்கினர். அவைகளைத் தாம் கற்பிப்பதற்கு முன்னரே அவைகளின் பொருள்களை விசாரசருமர் உணர்ந்திருந்ததைக் கண்டு ஆசிரியர் அதிசயித்தனர். வேதாக மங்களின் பயன் ஆண்டவன் திருவடிக்கு அன்பு செய்தல் எனத் துணிந்து அவ்வன்பில் விசாரசருமர் நிற்பாராயினர்

### பசுவின் மாண்பு

*ஒரு நாள் விசாரசருமர் ஒருசாலை மாணாக்கருடன் வெளியே புறப்பட்டார். அவ்வேளையில் அவருடன் அவ்வூர் ஆனிரைகளும் போந்தன. அந்நிரைகளிலுள்ள ஓரிளங்கன்றுப் பசு, மேய்ப்பவனை முட்டப் போயிற்று. அவன் அதைக் கோலால் அடிக்கலானான். அதைக் கண்ட விசாரசருமரின் நெஞ்சம் பதைத்தது. அவர், மேய்ப்பன் அருகே சென்று அடிப்பதைத் தடுத்தார்; ஆங்கே பசுக்களின் மாண்பை நினைந்தார்; 'என்னே! பசுக்களின் உறுப்புகளில் தேவரும் முனிவரும் இருக்கின்றனர். புண்ணியத் தீர்த்தங்கள் இருக்கின்றன! சிவபிரான் அபிடேகத்துக்குப் பஞ்சகவ்ய மளிக்கும் பெருமையைப் பசுக்கள் பெற்றிருக்கின்றன! அவற்றின் சாணம் திருநீற்றுக்கே மூலம்! ஆண்டவன் ஊர்தியாகிய வெள்ளேறு பசுக்களினத்தைச் சேர்ந்தது!' என்று எண்ணி எண்ணி நின்றார்; மேலும் பசுக்களின் மாண்பை உன்னி, 'இப்பசுக்களை மேய்த்துக் காப்பதைவிட வேறு சிறந்த தொண்டு ஒன்றுண்டோ? இதுவே சிவபிரானுக்குரிய சிறந்த வழிபாடாகும்' என்று உறுதி கொண்டார்; கொண்டு, ஆயனைப் பார்த்து, 'இவ்வானிரையை இனி நீ மேய்த்தல் வேண்டா. அத் தொண்டை யானே செய்யப் போகிறேன்' என்றார். ஆயன் நடுநடுங்கிக் கைகூப்பி ஓடிப்போனான். விசாரசருமர் அந்தணர் களின் சம்மதம் பெற்று, அன்றுமுதல் பசுக்களை மேய்க்குந் திருத் தொண்டை ஏற்றார்.*

### பசு மேய்த்தல்

*விசாரசருமர் பசுக்களை மண்ணியாற்றங் கரையிலும் வேறிடங் களிலும் மேய்ப்பார்; பசும் புற்களைப் பறித்துப் பசுக்களுக்கு ஊட்டுவார்; நல்ல துறைகளில் தண்ணீர் அருந்த அவைகளை விடுவார்; அச்சத்தைத் தாமே முன்னின்று நீக்குவார்; காலங்களில் பசுக்களை வீடுபோகச் செய்வார். அவர் பார்வையில் பசுக்கள் முன்னிலும் அழகொழுகச் செழித்தன. வேதியரும் மற்றவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.*

### பசுக்களின் அன்பு

*பசுக்கள் தங்கள் கன்றுகளைப் பார்க்கிலும், மறைக் கன்றாகிய விசாரசருமரை அதிகம் நேசித்துவந்தன. கன்றுகள் தங்களைப் பிரியினும் அவை தளரமாட்டா. விசாரசருமர் தங்களைவிட்டுப் பிரியின், அவை தளர்ச்சி அடையும். பசுக்கள் அவர் அருகே செல்லும்; தாங்களே பால் சொரியும்.*

### சிவபூசை

*பசுக்கள் அன்பால் சொரியும் பாலைக் காணுந்தொறுங் காணுந்தொறும் விசாரசருமருக்குச் சிவபெருமான் திருமஞ்சன*

நினைவு தோன்றும். அதனால் அவருக்குச் சிவபூசை வேட்கை எழுந்தது; விசாரசருமர் மண்ணியாற்றங்கரையில், ஒரு மணற் றிட்டையில், ஓர் ஆத்தி மரத்தடியில், மணலினால் சிவலிங்கம் ஒன்று அமைப்பார்; திருமதில்கள் எழுப்புவார்; கோபுரங்கள் வகுப்பார்; சுற்றாலயங்கள் எடுப்பார்; வழிபாட்டுக்கு அவர் ஆத்தி முதலிய மலர்களைக் கொய்து வருவார்; புதிய குடங்களை வாங்கி வருவார்; கறவைப் பசுக்களிடஞ் சென்று மடியைத் தீண்டுவார்; பசுக்கள் கனைத்துச் சொரியும் பாலைக் குடங்களில் நிரப்பிக் கொணர்வார்; சிவலிங்கத்தை அருச்சிப்பார்; திருமஞ்சனம் ஆட்டுவார்; பூசைக்குக் கிட்டாத பொருள்களை மனத்திலே பாவித்து நிரப்புவார். இவ் வன்புப் பூசையைச் சிவபெருமான் இன்புடன் ஏற்பார். திரு மஞ்சனத்துக்குப் பால் உதவியும் பசுக்கள் உரியவர்க்குப் பால் குறையாதபடி வழங்கி வந்தன.

### அந்தணர் எச்சரிக்கை

இவ்வாறு நிகழ்ந்துவரு நாளில், ஒருநாள் ஒருவன் சேய்ஞலூர்ப் பிள்ளையார் செய்கையைக் கண்டான். அவன் உண்மை யுணராதவ னாய், அவ்வூர் அந்தணர்க்கு அதை அறிவித்தான். அவர் உடனே எச்சதத்தனை அழைப்பித்து, அவ்வொருவன் சொன்னதை அவனுக்குச் சொற்றனர். எச்சதத்தன், ‘இஃதெனக்குத் தெரியாது. சிறுவன் பிழையைப் பொறுத்தருளல் வேண்டும். இனி அப்பிழை நிகழுமாயின் அஃது என்னுடையதாகும்’ என்று வணங்கி விடை பெற்றுச் சென்றான்.

### தந்தையைத் தடிதல்

அடுத்தநாள் காலையில் விசாரசருமர் வழக்கம் போலப் பசுக்களை மேய்க்கப்போனார். அன்று எச்சதத்தன் அவரைத் தொடர்ந்து பின்னே சென்றான்; சென்ற மணற்றிட்டையின் அருகேயுள்ள ஒரு குராமரத்தில் ஏறி ஒளித்திருந்தான். விசாரசருமர் வழக்கப்படி பூசை தொடங்கினார். அவர், பாற் குடங்களை ஏந்தி அபிடேகஞ் செய்வதை எச்சதத்தன் கண்டான். கண்டதும், அவன் மரத்தினின்றும் விரைந்திறங்கி ஓடிக் கைத்தண்டால் பிள்ளையார் முதுகில் ஓங்கி அடித்தான். வெம்மொழிகளால் அவரை வைதான். பெரியவர் சிந்தை சிவபூசையில் திளைத்துக் கிடக்கிறது. எச்சதத்தன் மேலும் மேலும் சீறிச் சீறி அன்பரைப் புடைக்கிறான். அன்பர் நிலை குலையவில்லை. அதற்குமேல் பாவி, பாற்குடங்களை உதைத்தான் அவ்வடாத செயலைச் செய்தவன், தந்தை என்று விசாரசருமர் நன்கு உணர்ந்தார்; உணர்ந்து அவன் கால்களைத் துணிக்கத் தமக்கு முன்னிருந்த ஒரு கோலை எடுத்தார். அக்கோல் மழுவாயிற்று. அம்மழுவால் தந்தையின் கால்களை வெட்டி, அவர் முன்போலச் சிவபூசையில் அமர்ந்தார். சிவபெருமான் தேவியுடன் விடைமேல்

தோன்றினார். விசாரசருமர், ஆண்டவனைக் கண்டு எல்லை இல்லா ஆனந்தம் எய்தினார்; விழுந்து வணங்கினார்.

**சண்டீச பதமருளல்**

சிவபெருமான், விசாரசருமரைத் திருக்கையால் எடுத்து, 'நம் பொருட்டு நீ உன் தந்தையைத் தடிந்தாய்? இனி நாமே உனக்கு அடுத்த தந்தை' என்று திருவாய்மலர்ந்து அவரை அணைத்தார்; அவருடலைத் தடவினார்; உச்சிமோந்தார்; மகிழ்ந்தருளினார். விசாரசருமரது திருமேனி சிவமயமாயிற்று. அவர் பேரொளியாய் விளங்கினார். சிவபெருமான் சேய்ஞலூர்ப் பிள்ளையாரை நோக்கி, 'திருத்தொண்டர்க்கு உன்னைத் தலைவனாக்கினோம். நாம் உண்பன, உடுப்பன, அணிவன முதலிய எல்லாம் உனக்கே ஆகுக. அதன் பொருட்டு உனக்குச் சண்டேசுர பதத்தைத் தந்தோம்' என்று அருளித் தமது திருச்சடையிலுள்ள கொன்றை மாலையை எடுத்து அவருக்குச் சூட்டினார். சண்டீச நாயனார், தேவதேவரைத் தொழுது, அவர் அருள் செய்த சண்டேசுர பதத்தை அடைந்தார்.

எச்சதத்தன் சண்டீசுரப் பெருமானால் வெட்டுண்டமையால் அவன் குற்றம் நீங்கிற்று. அவன் சுற்றத்துடன் சிவலோகம் எய்தினான்.

# திருநாவுக்கரசு சுவாமிகள்

## திருத்தொண்டத் தொகை

*திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட*
*திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்*
*பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்*
*பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்*
*ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்*
*ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்*
*அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.*

## திருத்தொண்டர் திருவந்தாதி

*நற்றவன் நல்லூர்ச் சிவன்திருப் பாதந்தன் சென்னிவைக்கப்*
*பெற்றவன் மற்றிப் பிறப்பற வீரட்டர் பெய்கழற்றாள்*
*உற்றவன் உற்ற விடமடை யாரிட ஒள்ளமுதாத்*
*துற்றவ னாமூரில் நாவுக் கரசெனுந் தூமணியே.*

*மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண்மொழியால்*
*திணையன நீள்கத வந்திறப் பித்தன தெண்கடலில்*
*பிணியன கல்மிதப் பித்தன சைவப் பெருநெறிக்கே*
*அணியன நாவுக் கரையர்பி ரான்ற னருந்தமிழே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*போற்றுதிரு வாமூரில் வேளாண் தொன்மைப்*
*பொருவில்கொறுக் கையர்அதிபர் புகழ னார்பால்*
*மாற்றரும்அன் பினில்திலக வதியாம் மாது*
*வந்துதித்த பின்புமரு ணீக்கி யாரும்*
*தோற்றிஅமண் சமயமுறு துயரம் நீங்கத்*
*துணைவர்அருள் தரவந்த சூலை நோயால்*
*பாற்றருநீள் இடரெய்திப் பாடலிபுத் திரத்திற்*
*பாழியொழித் தரனதிகைப் பதியில் வந்தார்.*

*வந்துதமக் கையரருளால் நீறு சாத்தி*
*வண்டமிழால் நோய்தீர்ந்து வாக்கின் மன்னாய்*

***வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி***
***வியன்சூலங் கொடிஇடபம் விளங்கச் சாத்தி***
***அந்தமில்அப் பூதிமகன் அரவு மாற்றி***
***அருட்காசு பெற்றுமறை அடைப்பு நீக்கிப்***
***புந்திமகிழ்ந் தையாற்றில் கயிலை கண்டு***
***பூம்புகலூர் அரன்பாதம் பொருந்தி னாரே.***

*தமிழ்நாட்டில் பலப்பல அழகிய நாடுகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று திருமுனைப்பாடி நாடு. அத் திருநாட்டில் திருவாமூர் என்றொரு திருப்பதி உண்டு. அதன்கண் வேளாளமரபில், குறுக்கையர் குடியில் தோன்றிய புகழனார் என்பவர் ஒருவர் இருந்தனர். அவர், மாதினியார் என்ற பெண்மணியை மணந்து இல்லறம் நடாத்திவந்தனர். விருந்தோம்புவதிலும் சுற்றங்களைத் தாங்குவதிலும் அவர் பேர்பெற்றவர்.*

### திலகவதியார் - மருணீக்கியார் - தோற்றம்

*புகழனார்க்கும் மாதினியார்க்கும் முதலில் திலகவதியார் என்ற புதல்வியார் பிறந்தார். சில ஆண்டு கடந்த பின்னர் அவர்கள்பால் மருணீக்கியார் என்பவர் தோன்றினார். புகழனார் மருணீக்கியாரை அன்புடன் வளர்த்துக் கலைகளைப் பயிற்றுவித்தார். மருணீக்கியார் பல கலைகளைப் பயின்று இளம்பிறைபோல் வளர்ந்து வரலானார். திலகவதியார்க்குப் பன்னிரண்டு வயதாயிற்று.*

### கலிப்பகையார் திலகவதியாரை மணம் பேசுவித்தல்

*அந்நாளில், கலிப்பகை நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் வேளாளர்; சிவனடியார்; சேனாதிபதி. அந்நாயனார், திலகவதி யாரை மணம் புரிய விரும்பிச் சில பெரியோரைப் புகழனாரிடம் அனுப்பினார். அவர் புகழனாரிடம் போந்து கலிப்பகையார் கருத்தைத் தெரிவித்தனர். புகழனார், குணம் குலம் முதலியன பேசிய பின்னர்த் தம் மகளைக் கலிப்பகையார்க்குக் கொடுக்க இசைந்தனர். அந் நற்செய்தியைப் பெரியோர் கலிப்பகையார்க்கு அறிவித்தனர். திருமணம் நிகழ்வதற்குள் வடபுலத்தில் போர்மூண்டது. அப் போர்முனைக்குக் கலிப்பகையார் அனுப்பப்பட்டார். அங்கே அவர் நீண்டநாள் போர்புரிதல் நேர்ந்தது.*

### பெற்றோர் மறைவு

*அவ்வேளையில் திருவாமூரில் புகழனார் பிணிவாய்ப்பட்டு விண்ணெய்தினார். அவர்தம் மனைவியாராகிய மாதினியாரும் அவருடன் உயிர் துறந்தார். திலகவதியாரும், மருணீக்கியாரும் துயரக் கடலில் அழுந்தினர். உறவினர் தேற்றத்தேறி அவ்விருவரும் தாய் தந்தையருக்கு இறுதிக்கடன் ஆற்றினர்.*

### தம்பியார் பொருட்டுத் தமக்கையார் உயிர் தாங்குதல்

*கலிப்பகையார் வீரப் போர் புரிந்து போர்களத்தில் மாண்டார். அச் செய்தி திலகவதியார்க்கு எட்டிற்று. அம்மையார், 'என்னருமைத் தாய் தந்தையர் என்னை அவருக்கு மணம் பேசி முடிவு செய் திருந்தனர்; இவ்வுயிர் அவருடையதாயிற்று; ஆதலால் இவ்வுயிரை அவ்வுயிரோடு இசைவிப்பேன்' என்று துணிவு கொண்டார். அந் நிலையில் மருணீக்கியார், அம்மையாரை வணங்கி, 'நம் தாய் தந்தையர் சிவலோகமடைந்த நாள்தொட்டு உம்மையே அவராகக் கருதி வாழ்ந்து வருகிறேன்; என்னைத் தனியனாக விடுத்துச் செல்லத் துணிவீராயின், முதலில் என் உயிரை விடுகிறேன்' என்று புலம்பினார். திலகவதியார், 'தம்பியார் உலகில் வாழ்தல் வேண்டும்' என்னும் தயா உடையரானார். அதனால் அம்மையார், பொன் மணி நூல் பூணாது, அனைத்துயிர்க்கும் அருள் பூண்டு, இல்லத்திலேயே தவம் புரிய லானார். மருணீக்கியார் துயரொழிந்தார்.*

### மருணீக்கியார் அறத்தொண்டு

*பின்னே, மருணீக்கியார் உலக நிலையாமை முதலியவற்றை உணர்ந்து அறநெறியில் நின்றார். அவர் அறச்சாலைகள் அமைத்தார்; தண்ணீர்ப் பந்தர் வைத்தார்; சோலைகள் வளர்த்தார்; குளங்கள் எடுத்தார்; விருந்தளித்தார்; நாவலர்க்கு உதவினார். அவர் துறவு பூண்டு சமய ஆராய்ச்சியில் தலைப்பட்டார். 'சமயங்களிற் சிறந்த சமயம் எது?' என்பதை உணர அவருக்கு ஆண்டவன் அருளினானில்லை.*

### மருணீக்கியார் தருமசேனராதல்

*மருணீக்கியார் சமண சமயத்தில் பற்றுள்ளங்கொண்டு, பாடலிபுத்திரம் போந்து, சமண் பள்ளி அடைந்தார். அங்கே சமணர், 'வீடறியும் நெறி தம் நெறியே' என்று மருணீக்கியாருக்கு அறிவுறுத்தினர். மருணீக்கியார் சமண சமயக் கலைகளை நன்றாக ஓதி யுணர்ந்தார். அவர்தம் புலமையையுந் தெளிவையுங் கண்ட சமணர், அருக்குத்* ***தருமசேனர்*** *என்னும் பெயரும் சூட்டி, அவரைக் குருவாகக் கொண்டனர். தருமசேனர் புத்தரை வாதில் வென்று, சமண சமயத்தை வளர்த்து வந்தார்.*

### திலகவதியாருக்குத் தம்பியார் நினைவு தோன்றல்

*திலகவதியார் சிவநெறியில் நின்று, சிவனருள் பெறத் திருவதிகை வீரட்டானஞ் சேர்ந்து, திருத்தொண்டு செய்து வந்தார். ஒருநாள் அவருக்குத் தம்பியார் நினைவு தோன்றிற்று. அவர், துயருற்றுத் திருவதிகைப் பெருமானைத் தொழுது, 'பெருமானே! என்னை ஆண்டருள்பவர் நீராயின், இக்காலச் சமணப் படுகுழியில் வீழ்ந்து கிடக்கும் என் தம்பியாரை அதனின்றும் எடுத்தாளல் வேண்டும்' என்று பன்முறை விண்ணப்பித்தார். சிவபெருமான்*

அம்மையார் கனவில் தோன்றி, 'உன் மனக்கவலையை ஒழிப்பாயக; உன் தம்பி முன்னமே முனியாகி நம்மை அடையத் தவஞ் செய்தவன்; அவனிடம் சூலை நோய் செலுத்தி அவனை ஆண்டருள்வோம்' என்று அருளிச் செய்தார்.

### சூலை நோய்

எல்லாம் வல்ல இறைவனருளால் தருமசேனர் வயிற்றில் சூலை நோய் புகுந்தது; புகுந்து குடலை முடுக்குகிறது. தருமசேனர் வருந்தினார்; வருந்தி வருந்தி அவர் பாழி அறையில் மயங்கி வீழ்ந்தார். அவர் சமண சமயத்தில் தாம் கற்ற மந்திரங்களால் நோய் தீர்க்க முயன்றார். நோய் மேலும் மேலும் முடுகியே எழுகிறது. அவர்தம் துன்பங் கண்ட சமணர் பலர் ஒன்று சேர்ந்து, 'இச்சூலை மிகக் கொடியதாயிருக்கிறது. இது நஞ்சுபோல் கவர்கிறது. இதைப் போன்ற தொன்றை நாம் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. இதற் கென் செய்வது!' என்று துயருழந்தனர். பின்னே அவர் 'பார்ப்போம்' என்று குண்டிகை நீரை மந்திரித்துத் தருமசேனரைக் குடிப்பித்தனர்; மயிற்பீலிகொண்டு அவரது காலளவுந் தடவினர். நோய் தணிந்த பாடில்லை. அது, முன்னிலும் வீறுகொண்டு முடுக்குகிறது. அடி கண்மார் வேறு பல வழியிலும் முயன்றனர்; முடிவில் 'இது நம்மால் போக்கல் அரிது' என்று சொல்லிக் கைவிட்டனர்.

### தருமசேனர் தூதனுப்பல்

தருமசேனர் என் செய்வார் பாவம்! அவர்தம் நெஞ்சம் திலகவதியாரை நினைந்தது. அவர் தமது நிலையைத் திலகவதி யாருக்குத் தெரிவிக்கச் சமையற்காரனை அனுப்பினார். அவன் திருவதிகை யடைந்து, அருந்தவக் கொழுந்தாகிய திலகவதி யம்மையார் நந்தனவனத்தின் புறம்பணையும்போது, அவரைக் கண்டான்; இறைஞ்சினன்; 'உமக்கிளையவர் ஏவலினால் வந்தேன்' என்றனன். அம்மையார், 'என்ன! அவருக்கு ஏதாகிலும் தீங்கு உண்டோ?' என்று கேட்டார். அதற்கு அவன் 'ஆம்; உண்டு' என்று நிகழ்ந்ததைக் கூறி, 'உம்மிடம் உய்யும் வழி கேட்டு இரவே திரும்பி வருமாறு என்னை அவர் அனுப்பினார்' என்றான். அம்மையார், 'சமண் பள்ளியில் யான் அடி எடுத்து வையேன். இதைத் தம்பியாருக்குத் தெரியப்படுத்து' என்று கூறினார். அதைக் கேட்ட சமையற்காரன் திரும்பித் தருமசேனரிடஞ் சென்று அம்மையார் சொற்றதைச் சொற்றான்.

### தருமசேனர் திருவதிகை சேரல்

நோயால் வருந்துந் தருமசேனர், 'அந்தோ! என் செய்கேன்!' என்று மனஞ் சோர்ந்தார். அந்நிலையில் ஆண்டவன் அருள் கூடலாயிற்று. மருணீக்கியார், 'இவ்வெந் நோய், இப்புன்னெறியில் உள்ளவரை

ஒழியாது; நன்னெறி நின்று ஒழுகும் திலகவதியார் திருவடி அடைவேன்' என்று உறுதி கொண்டார். அப்பொழுது சிறிது ஆறுதல் உண்டாயிற்று. அவர் சமணக் கோலங்களை நீக்கி, வெள்ளாடை புனைந்து, சூலைநோய்க் காரணத்தால் சிலரைப் பற்றிக் கொண்டு திருவதிகையில் உள்ள திலகவதியார் திருமடத்தைச் சோர்ந்தார். அங்கே அவர் தமக்கையாரைப் பார்த்து, 'நங்குலஞ் செய்த நற்றவப் பயனே! அடியேன் சூலை நோயால் பெரிதும் வருந்துகிறேன்; பொறுக்க முடியவில்லை; உய்யும் வழி உணர்த்தி யருள்க' என்று திருவடியில் வீழ்ந்தார்.

### திலகவதியார் தம்பியாருக்குத் தீக்கை செய்தல்

அம்மையார் தடங்கருணைப் பெருங்கடலாகிய சிவ பெருமான் திருவருளை நினைந்தார்; கைதொழுதார். தொழுது 'பரசமயப் படுகுழியில் வீழ்ந்து வருந்தும் தம்பியாரே! எழுந்திரும்' என்றார். மருணீக்கியார் நோயுடன் நடுங்கி எழுந்து தமக்கையாரை வணங்கி நின்றார். அருந்தவ அரசியார், 'இது சிவபெருமான் திருவருளாகும். அவரே பற்றை யறுக்கும் பேரருளாளர். அவர்க்கே தொண்டு செய்க' என்று கட்டளையிட்டார்; தம்பியார் திருக்கோயிலுள் புகுதற்குத் திருவைந்தெழுத்தை ஓதித் திருநீற்றை அவருக்குக் கொடுத்தார். மருணீக்கியார் திருநீற்றை வாங்கி அணிந்துகொண்டார்; பொழுது புலர்ந்தது.

### சூலை போதல்

திலகவதியார் வழக்கம்போலத் திருவலகும், திருமெழுக்கும், திருத்தோண்டியுந் தாங்கி ஆலயத்துக்குப் புறப்பட்டார். அவர் தம்பியாரையும் உடனழைத்துச் சென்றார். மருணீக்கியார், வீரட்டானேசுரர் திருக்கோயிலைத் தொழுது, வலம் வந்து, திருமுன் விழுந்து எழுந்து நின்றார். அதுகாலை, சிவநாதன் திருவருளால் அவருக்குத் தமிழ்ப் பாமாலை சாத்தும் மெய்யுணர்ச்சி தோன்றிற்று. தோன்றவே, சூலை நோய் ஒழியவும், உலகம் உய்யவும், **'கூற்றாயினவாறு விலக்ககிலீர்'** என்னுந் திருப்பதிகத்தை அவர் ஓதியருளினார். ஓதியருளினதும் சூலை நோய் ஒழிந்தது.

### திருநாவுக்கரசராதல்

தெய்வத் திருவருள் கைவரப் பெற்ற அடியவர் பெருமான், அன்புருவாய் நிற்கிறார்; நின்று விழுந்து புரண்டு புரண்டு எழுகிறார்; 'இப்பெரு வாழ்வைப் பெறச் செய்த சூலை நோய்க்கு என்ன கைமாறு செய்வேன்' என்கிறார். அப்பொழுது ஆண்டவன் அருளால், மொழிக்கு மொழி தித்திக்கும் தீந்தமிழ்ப் பதிகத்தை நீ பாடினாய், அதனால், **நாவுக்கரசு** என்னும் பெயர் உனக்கு ஏழுலகங்களிலும் வழங்குவதாக' என்றொரு வானொலி எழுந்தது. அது கேட்ட

யாவரும் வியப்புற்றனர். திருநாவுக்கரசர், 'தீவினையேன் அடையும் பேறோ இது' என்று இன்புற்றார். அப்பொழுது அவர், இராவண னுக்கு ஆண்டவன் செய்த திருவருட்டிறத்தின் உண்மையை உணர லானார்; உணர்ந்து அத் திருவருட்டிறத்தைத் துதித்தலை மேற் கொண்டார். அடியவர் ஆரவாரித்தனர்.

## முத்திறத் தொண்டு

திருநாவுக்கரசருக்கு மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்க ளாலும் தொண்டு செய்தல் வேண்டும் என்ற பேரவா எழுந்தது. அவர் மனத்தால் ஆண்டவனைத் தியானித்தும், வாயால் அவன் புகழைப் பாடியும், கையால் உழவாரத் தொண்டு செய்தும் வரலானார். திலகவதியார், 'எம்மை ஒரு பொருளாக மதித்து ஆண்டருளிய சிவபிரான் கருணைத் திறத்தை இங்கே பெற்றவர் யாவர்?' என்று வியந்து வியந்து ஆண்டவனைப் போற்றினார்.

## மாற்றார் சூழ்ச்சி

திருநாவுக்கரசர் திருவருள் பெற்ற செய்தி பாடலிபுரத்தில் பரவிற்று. ஆங்குள்ள சமணர் புழுங்கினர். அவர், 'தருமசேனர்க்குற்ற சூலை நோயைத் தீர்த்தல் நம்மால் முடியாமற் போயிற்று. அன்னார் திருவதிகைக்குப் போய், முன்போலச் சைவராயினர். இனி நமது சமயம் ஒழிந்தது' என்று தளர்ந்து ஒருங்கு சேர்ந்தனர். சேர்ந்த சமணர், 'இதைப் பல்லவ அரசன் கேள்வியுறுவானாயின், அவனுஞ் சைவனாவன். நமது விருத்தியும் கெடும்' என்று மனங்கலங்கிச் சூழ்ச்சியிலிறங்கினர். அவர் அனைவரும் தருமசேனரின் தமக்கை சைவ நெறியில் நிற்றலால், தருமசேனரும் அந்நெறி நிற்க எண்ணிச் சூலை நோய் தீரவில்லை என்று நடித்துப் போய்விட்டார் என்று அரசனிடங் கூறுதல் வேண்டும்' என்று தீர்மானித்தனர். 'இதை அரசன் கேள்வியுறுதற்கு முன்னரே நாம் போய் முறையிடுவோம்' என்று அவர் எழுந்து, அரமனை வாயிலை அடைந்து, தமது வரவை அரசனுக்குத் தெரிவிக்கும்படி வாயில் காப்பவரிடம் சொல்லினர். வாயில் காப்பவர் அடிகண்மார் வரவை அரசனுக்குத் தெரிவித்தனர். அரசன் ஆணைமேல் அடிகண்மார் அரமனைக்குள் நுழைந்தனர். அடிகண்மார் மன்னவனைக் கண்டு தாம் சித்தரித்த பொய்மையைக் கூறினார்.

## 'நாமார்க்குங் குடியல்லோம்' என்னல்

பல்லவன் வெகுண்டு, 'இதற்கு என் செய்வது? என்றான். சமணர், 'நஞ் சமயங் கெடுத்த பாவியைத் துன்புறுத்தல் வேண்டும்' என்று விடையிறுத்தனர். உடனே மன்னவன், அமைச்சரை நோக்கி, 'இவர் குறிப்பிட்ட தீயோனைப் பிடித்து வாரும்' என்று கட்டளை யிட்டனன். அமைச்சர் திருவதிகை அடைந்து, திருநாவுக்கரசு

சுவாமிகளைக் கண்டு, அரசன் ஆணையைத் தெரிவித்தனர். சுவாமிகள் 'நாமார்க்குங் குடியல்லோம்'என்னுந் திருத்தாண்டகத்தைத் திருவாய்மலர்ந்தருளி, அரசன் ஆணைக்கு இணங்க மறுத்தனர். அமைச்சர், திருநாவுக்கரசர் திருவடிகளில் பன்முறை விழுந்து விழுந்து வணங்கி வேண்டினர். திருநாவுக்கரசர், எல்லாவற்றுக்கும் எம்பெருமானுளன் ' என்று நினைந்து அமைச்சருடன் மன்னன் சபை சேர்ந்தனர்.

**நீற்றறையிலிடல்**

மன்னன், அழுக்காறுடைய அடிகண்மாரை நோக்கி, 'இவனை என் செய்வது?' என்று கேட்டான். அவர், 'நீற்றறையிலிடுக' என்றனர். அவ்வாறு செய்யுமாறு அரசன் ஏவலாளர்க்குக் கட்டளை யிட்டான். ஏவலாளர், திருநாவுக்கரசரை நீற்றறையில் இட்டுக் கதவைத் தாளிட்டனர். திருநாவுக்கரசர் , தாண்டவ மூர்த்தியின் தாள் நிழலைத் தலைக்கொண்டு, 'ஈசனடியார்க்கு ஈண்டு வருந் துயருளவோ?' என்றறிந்தார். நீற்றறை, இளவேனிலாய்த், தென்றலாய்க், கழுநீர்த்தடமாய், வெண்ணிலவாய், யாழொலியாய், இறைவன் திருவடி நீழலெனக் குளிர்ந்தது. திருநாவுக்கரசர், 'மாசில் வீணையும்' என்னுந் திருக்குறுந்தொகையை ஓதி, அங்கு இனிது வீற்றிருந்தார்.

**நஞ்சூட்டல்**

நாட்கள் ஏழாயின. அரசன் அடிகண்மாரை அழைத்து, நீற்றறையைத் திறந்து பார்க்குமாறு கூறினன். சமணர் அப்படியே நீற்றறையைத் திறந்து பார்த்தனர். அங்கே அருளாளராகிய நாவரசர், ஒருவிதத் துன்பமுமின்றி இனிது விளங்கிக் கொண்டிருந்தனர். அடிகண்மார், 'இஃதென்ன அதிசயம்!' என்று உள்ளே வியந்தார்; வியந்து அரசனிடஞ் சென்று, 'தருமசேனன் நமது சமய மந்திரங்களை நன்கு உணர்ந்தவன். அம் மந்திர வலியால் பிழைத்தான்' என்று சொல்லி, நஞ்சூட்டுமாறு அரசனுக்குப் போதித்தார். அவ்வாறே அப்பாவி மன்னன், திருநாவுக்கரசருக்கு நஞ்சு கலந்த பாலமுதை, ஊட்டுவித்தான். 'நாதனடியார்க்கு நஞ்சும் அமுதாம்' என்று, அருளாளர் அந் நஞ்சமுதை அருந்தினர். அதனால் அவருக்குத் தீங்கு நேரவில்லை.

**யானையை ஏவல்**

அதைக் கண்டு சமணர் நடுக்குற்றனர். 'இவனுக்கு நஞ்சும் அமுதமாயிற்று; இவன் பிழைத்திருப்பானாயின், நமக்குத் தீங்கு விளையும்' என்று அவர் கருதி, அரசனிடஞ் சென்று, 'நமது சமய மந்திரப் பயிற்சியால் தருமசேனன் நஞ்சாலும் செத்தானில்லை. அவன் இனி உயிரோடிருத்தல் ஆகாது. இருப்பின் எமது உயிரும், உமது அரசாட்சியும் அழிவது திண்ணம்' என்றார். 'இனி அவனை

எப்படி மாய்ப்பது?' என்று அரசன் கேட்டான். கருணையற்றவர் 'உமது யானையை அவன்மீது ஏவுக' என்றார். அரசன் அங்ஙனே செய்தனன்.

கொலையானை கோபங்கொண்டு திருநாவுக்கரசர் எதிரே வந்தது. திருநாவுக்கரசர் சிறிதும் அஞ்சினாரில்லை. அவர் சிவன் கழலைச் சிந்தித்து, 'சுண்ணவெண் சந்தனச் சாந்தும்' என்னுந் திருப்பதிகத்தை எடுத்து, யானையைப் பார்த்து, 'யான் வீரட்டநாதன் அடியவன்; அஞ்சுவது யாதொன்றுமில்லை - அஞ்ச வருவது மில்லை' என்று ஓதி யருளினர். எதிர்த்துச் சீறிப் பாயவந்த யானை, திருநாவுக்கரசரை வலம் வந்து வணங்கி, அப்புறம் போயிற்று. அதன்மேலிருந்த பாகர், மீண்டும் அதனைச் சுவாமிகள் மீது திருப்பினர். அஃது ஓடிச் சமணரிற் சிலரை மிதித்தது; சிலரைப் பிளந்தது; சிலரைத் தேடித் தேடிப் பற்றிப் பாழ்படுத்தியது. இவ்வாறு யானை நகரத்தைக் கலக்கிற்று. அரசன் துயரக் கடலில் வீழ்ந்தான்.

### கல்லொடு பிணித்துக் கடலில் விடல்

யானைக்குத் தப்பிப் பிழைத்த சமணர், மான மழிந்து மயங்கி வருந்திய சிந்தையராய் மன்னனிடம் தஞ்சம் புகுந்தனர்; அவன் தாளில் தனித்தனியே வீழ்ந்து வீழ்ந்து புலம்பினர்; புலம்பிப் புலம்பி, 'நமது மந்திரவலி' என்ற பழம் பாட்டையே பாடினர். அரசன் சீறி, 'இனிச் செய்வதென்ன?' என்றனன். தீமைக்கஞ்சாதவர், 'தரும சேனனைக் கல்லுடன் பிணித்துக் கடலில் எறிக' என்று முழங்கினர். முழங்கியதும், அரசன், அருகிருந்த ஏவலாளரை நோக்கினன். அவர் அப்படியே செய்தனர்.

### கரையேறல்

திருநாவுக்கரசர், 'எப்பரிசாயினும் ஆக; யான் எந்தையை ஏத்துவன்' என்று , சொற்றுணை வேதியன்' என்னும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடியருளினார். கடல்மீது கல் மிதந்தது. பிணித்த பாசமும் அறுந்தது. கருங்கல்லே சிவிகையாக, அதை வருணன் தாங்கித் திருநாவுக்கரசரைத் திருப்பாதிரிப்புலியூர் அருகே விடுத்தனன். சுவாமிகள் திருக்கோயிலுக்குச் சென்று ,'ஈன்றாளுமாய்' என்னும் தமிழ் மாலையைச் சாத்தினர். அது போன்ற பல தமிழ் மாலைகளைச் சுவாமிகள் அங்கே சாத்திக்கொண்டிருந்தனர்.

### திருவதிகை யடைதல்

பிறவிக் கடல் கடந்தேறிய அன்பர் பெருமானுக்குத் திரு வதிகையின்மீது காதல் முருகி எழுந்தது. எழவே, அவர், திருப்பாதிரிப் புலியூரை விடுத்துத் திருமாணிக்குழியையும், திருத்தினை நகரையுங் கண்டு தொழுது திருவதிகை அடைந்தனர். அப் பதியிலுள்ள அடியவர் நகரை அலங்கரித்துப் பெரியவரை எதிர்கொண்டு

*பணிந்தனர். பெரியவர், அடியவருடன் திருக்கோயிலுட் புகுந்து? பெருமானை வணங்கி, 'வெறிவிரவு கூவிளம்' என்னும் ஏழைத் திருத்தாண்டகம் முதலிய திருப்பதிகங்களைப் பாடித் திருத் தொண்டு செய்துவந்தனர்.*

### பல்லவன் நல்லறிவு பெறல்

*பல்லவன் நல்லறிவு பெற்று, உண்மை தெளிந்து, திருவதிகை அடைந்து, திருநாவுக்கரசு சுவாமிகளை வணங்கிச் சிவனடியவனா னான். அவன் பாடலிபுத்திரத்திலிருந்த சமணப் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்து, அவைகளின் கற்களையும் பிறவற்றையுங் கொண்டு, திருவதிகையிலே* **குணபரவீச்சரம்** *என்னும் சிவாலயம் கட்டினான்.*

### சூலம் - இடபம் - பொறிக்கப் பெறல்

*சிவமயமாக விளங்குந் திருநாவுக்கரசு சுவாமிகள், திருவெண்ணெய்நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலிய திருப்பதிகளை வணங்கிப் பதிகம் பாடிக்கொண்டே திருப் பெண்ணாகடம் அடைந்தனர். அவர், அங்குள்ளள திருத் தூங் கானைமடம் என்னுந் திருக்கோயிலுட் சென்று, ஆண்டவனைத் தொழுது, 'நாயகனே! அடியேன் உடல் ஆருகத சமயத் தொடக் குண்டது. இவ்வுடலோடு யான் உயிர் வாழேன். உயிர் வாழ்வதற்குச் சூலத்தையும் இடபத்தையும் என்மீது பொறித்தருளல் வேண்டும்' என்று வேண்டி, 'பொன்னார் திருவடிக் கொன்றுண்டு, என்னுந் திருவருட் பதிகம் பாடினர். பாடினதும், ஆண்டவன் அருளால் ஒரு சிவபூதம் தோன்றியது. அப்பூதம், ஒருவரும் அறியாதவாறு சுவாமிகள் திருத்தோளில் இரு குறியையும் பொறித்தது. சுவாமிகள் ஆண்டவன் அருளை வியந்து கசிந்து கசிந்துருகினார்.*

### தில்லை வணங்கல்

*திருநாவுக்கரசர் திருப்பெண்ணாகடத்திலிருந்து கொண்டே, திருவரத்துறை, திருமுதுகுன்றம் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று, ஆண்டவனைத் தொழுது, தமிழ் பாடி வந்தார்; பின்னே, நிவாநதிக்கரை வழியே நடந்து, சிதம்பரம் சேர்ந்தார்; அங்கே, 'என்று வந்தாய்' என்னுங் குறிப்புடன் ஆனந்தக் கூத்தாடும் ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பணிந்து, திருவிருத்தம் அருளினார்; 'பத்தனாய்ப் பாடமாட்டேன்; என்னுந் திருநேரிசையையும், 'அன்னம் பாலிக்கும்' என்னுந் திருக்குறுந்தொகையையும் பாடிப் பரவினார்.*

*சுவாமிகள் தில்லையினின்றும் திருவேட்களம் போந்து பெருமானைப் பணிந்து பதிகம் பாடினார்; திருக்கழிப்பாலை நண்ணி, 'வனபவள வாய்திறந்து' என்னுந் திருப்பதிகம் ஓதி அங்கே*

தங்கினார். அங்குத் தில்லை நினைவு சுவாமிகளுக்குத் தோன்றிற்று. தோன்றவே, சுவாமிகள் திருக்கழிப்பாலை விடுத்து, 'பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்' என்னுந் திருக்குறுந்தொகையை எடுத்து, 'அம்பலக் கூத்தனைத் தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ' என்று ஓதிக் கொண்டே திருச்சிற்றம்பலத்தை அடைந்தார்; 'அரியானை' என்னும் பெரிய திருத்தாண்டகத்தைப் பாடி யருளினார்; மேலுந் தொடர்ந்து, 'நெஞ்சடைக் கற்றை' என்னுந் திருநேரிசையைப் பாடித் திருப்பணி செய்துவந்தார்.

**சீர்காழி நண்ணல்**

அந்நாளில், சீர்காழியிலே அம்மையார் திருமுலைப்பால் உண்டு, 'இவன் எம்மான்' என்று ஆண்டவனைச் சுட்டிக் காட்டிய திருஞானசம்பந்த சுவாமிகளின் தெய்விகச் செயல்களை அடியவர் பேசிக்கொண்டிருந்தனர். அதைக் கேட்ட திருநாவுக்கரசு சுவாமி கட்குத் திருஞானசம்பந்த சுவாமிகளின் சேவடியை வணங்குதல் வேண்டுமென்னும் வேட்கை எழுந்தது. எழுந்ததும், அவர் நடராஜப்பெருமானைத் தொழுது, விடைபெற்றுத் திருவீதியிலே புரண்டு, தில்லை எல்லையைக் கடந்தார்; வழியில் திருநாரையூரைப் பணிந்து பாடிச் சென்று சீர்காழியை அணுகினார்.

**ஞானசம்பந்தரைக் காணல்**

திருநாவுக்கரசரது வருகையைக் கேள்வியுற்ற திருஞான சம்பந்தர், அடியவர் குழாத்துடன் அவரை எதிர் கொண்டனர். திருநாவுக்கரசு சுவாமிகள், திருஞானசம்பந்த சுவாமிகள் திருவடி களில் விழுந்து வணங்கினர். கௌணியர்பெருமான், திருநாவுக்கரசு சுவாமிகளின் திருக்கரங்களைப் பற்றி, இறைஞ்சி, 'அப்பரே!' என்றார். அரசரும் 'அடியேன்' என்றார். இரண்டு பெரியவரின் அடியார் கூட்டங்களும் இருபெருங்கடலைபோல ஒன்றோ டொன்று கலந்து ஆரவாரித்தன. பெரியவர் இருவரும் வரம்பிலா இன்பம் எய்தினர். பின்னர் இருவரும் திருக்கோயிலுக்குச் சென்று ஆண்டவனை வணங்கினர். திருஞானசம்பந்தப் பெருமான், அப்பர் சுவாமிகளை நோக்கி, 'உம் தம்பிரானாரைப் பாடும்' என்றார். அப்பர் சுவாமிகள், 'பார்கொண்டு மூடி' என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினர். அங்கிருந்து சுவாமிகள், திருஞானசம்பந்த சுவாமிகள் திருமடத்துக்கு எழுந்தருளி, அவருடன் அமுதுண்டு, அங்கே பலநாள் தங்கியிருந்தனர்.

**திருவடி சூட்டல்**

இருக்கும் நாளில் 'சோழநாட்டுத் திருப்பதிகளைக் காண்டல் வேண்டும்' என்று திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தருக்குத் தெரிவித் தார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசருடன் திருக் கோலக்கா

வரை சென்று, ஆண்டவனைத் தொழுது, விடைபெற்றுச் சீர் காழிக்குத் திரும்பினார். திருநாவுக்கரசர், திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கை, திருநின்றியூர், திருநனிபள்ளி, திருச்செம்பொன்பள்ளி, திருமயிலாடுதுறை, திருத்துருத்தி, திருவேள்விக்குடி, திருஎதிர்கொள்பாடி, திருக்கோடிக்கா, திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், திருப்பழை யாறை முதலிய திருப்பதிகளைக் கண்டு தொழுது பதிகம் பாடித் திருச்சத்தி முற்றத்தைச் சேர்ந்தார்; அங்கே 'கோவாய் முடுகி' என்னுந் திருப்பதிகத்தை எடுத்து, 'பூவார் திருவடி என் தலைமேல் பொறித்து வைப்பாய்' என்று முறையிட்டார். அப்பொழுது சிவபெருமான், 'நல்லூருக்கு வா' என்று அருளிச் செய்தார். திருநாவுக்கரசர் நல்லூரை அணைந்து, இறைவனை வணங்கி எழுந்தார். எழும் போது, சிவபிரான் 'உன்னுடைய நினைப்பை முடிக்கின்றோம்' என்று பாதமலரை அப்பர் திருமுடிமீது சூட்டியருளினார். அப்ப ரெம்பெருமான், 'நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே' என்று பாடிப் போற்றினார். அவர் இன்னும் பல பதிகங்களைப் பாடினார்.

அப்பர் சுவாமிகள் திருநல்லூரில் வதிந்துகொண்டே திருக் கருகாவூர், திருவாவூர், திருப்பாலைத்துறை முதலிய தலங்கட்குச் சென்று ஆண்டவனை வணங்கி வருவார். பின்னர்ச் சுவாமிகள் திருநல்லூரை விடுத்துத் திருப்பழனஞ் சேர்ந்தார். அங்கும் சுவாமிகள் தங்கிப் பல திருப்பதிகளைக் காண்பாராயினார்.

### அப்பூதி அடிகளுக்கு அருளல்

ஒருநாள் திருநாவுக்கரசு சுவாமிகள் திங்களூருக்குச் சென்றார். அங்கே அப்பூதியடிகள் என்பவர் ஒருவர் உளர். அவர் திருநாவுக் கரசரிடம் பேரன்பு வாய்ந்தவர். அவ்வன்புக்கு அறிகுறியாக அவர், தம் புதல்வர்க்கும் - அன்னசாலை, கிணறு, குளம், தண்ணீர்ப்பந்தர் முதலியவற்றிற்கும் 'திருநாவுக்கரசு' என்னும் திருப்பெயரையே சூட்டி அறம் வளர்த்து வந்தார். அவர்தம் அன்புச் செயலைத் திருநாவுக்கரசர் கண்டுங் கேட்டும் அவரது திருமாளிகை நோக்கினார். அப்பூதியடிகள் மனைவி மக்களுடன் தங் குருநாதனை எதிர்கொண்டு பணிந்தார்; 'திருவமுது செய்தருளல் வேண்டும்' என்று அவரைக் கேட்டுக் கொண்டார். திருநாவுக்கரசரும் அதற்கு உடன்பட்டார். திருவமுது விதம் விதமாக ஆக்கப்பட்டது. அப்பூதிநாயனார், 'திருநாவுக்கரசு' என்னும் பெயருடைய தம் புதல்வரை அழைத்து வாழைக் குருத்து அறுத்து வருமாறு கூறினார். புதல்வர் விரைந்தோடித் தோட்டம் புகுந்து குருத்தை அரிந்தார். அப்போது ஒரு நாகப் பாம்பு அவரைத் தீண்டிற்று. அவர் அதைப் பொருட்படுத்தாது, மனோவேகமாகப் பறந்து வந்து குருத்தை

அன்னையாரிடங் கொடுத்தார்; கொடுத்ததும் நஞ்சு தலைக்கேற மயங்கி விழுந்து உயிர் துறந்தார். 'பெரியவர் திருவமுது செய்தற்கு இடையூறு நேர்ந்ததே' என்று அப்பூதியாரும், அவர் தம் மனைவியாரும் வருந்திச் சவத்தை மறைத்தனர். அவ்விருவரும் திருநாவுக்கரசரிடம் போந்து, அமுது செய்ய அவரை வேண்டினர். அவ்வேளையில் திருநாவுக்கரசருக்கு ஒருவிதத் தடுமாற்ற முற்றது. இறைவன் அருளால் அவர் நிகழ்ந்ததை உணர்ந்தார். திருநாவுக்கரசர், சவத்தைச் சிவாலயத்தின் முன்னர்க் கொணர்வித்து, 'ஒன்று கொலாமவர்' என்னுந் திருப்பதிகத்தை ஓதியருளினார். அப்பூதியடிகளின் அருமைப்புதல்வர் உயிர் பெற்றெழுந்தார். அதற்கு மேல் அப்பூதியடிகள் வேண்டுகோட் கிணங்கித் திருநாவுக்கரசர் திருவமுதுசெய்து சிலநாள் அடிகளுடன் தங்கியிருந்தார். பின்னே அவர், திருப்பழனஞ் சென்று, 'சொன்மாலை' என்னுந் திருப்பதிகத்தை எடுத்து, 'அப்பூதி குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்' என்று அப்பூதியடிகளைச் சிறப்பித்தார். அப்பர் சுவாமிகள், திருச்சோற்றுத்துறை முதலிய திருப்பதிகட்குச் சென்று, ஆண்டவனை வணங்கித் திருப்பழனத்தில் வதிந்து வந்தார்.

### திருவாரூர் நினைவு

அப்பர் சுவாமிகள் திருப்பழனம் விடுத்துத் திருநல்லூரை அடைந்து திருப்பணி செய்துகொண்டிருந்தார். அவ்வேளையில் அவருக்குத் திருவாரூர் நினைவு தோன்றிற்று. தோன்றவே, அவர் திருநல்லூரினின்றும் நீங்கித் திருப்பழையாறை, திருவலஞ்சுழி, கும்பகோணம், திருநாவலூர், திருச்சேறை, திருக்குடவாயில், திருநறையூர், திருவாஞ்சியம், பெருவேளூர், திருவிளமர் முதலிய திருப்பதிகளைக் கண்டு பணிந்து திருவாரூரை நண்ணினார். அடியவர் அவரை எதிர்கொண்டனர். அப்பர் சுவாமிகள், 'தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே' என்று பாடிக் கொண்டு, திருவீதியுள் புகுந்து, தேவாசிரிய மண்டபம் சேர்ந்து, திருக்கோயிலுள் நுழைந்து, 'போற்றித் திருத்தாண்டகம்' அருளிச் செய்தனர்; 'காண்டலே கருத்தாய்' என்னுந் திருப்பதிகம் ஓதி உருகினாரர்; 'கொய்யுலா மலர்ச் சோலைக் குயில் கூவ மயிலாலும் ஆரூரை - கையினால் தொழாதே முன் கனியிருப்பக் காய் கவர்ந்த கள்வனேனே' என்று கசிந்தனர்; 'பாடிளம்' என்னுந் திருப்பதிகம் அருளினர்; ஒரு திருப்பதிகத்தில் நமிநந்தியடிகளைச் சிறப்பித்தனர்; அங்குள்ள அரநெறி என்னுந் திருக்கோயிலையுங் கண்டு தொழுதனர். திருநாவுக்கரசர் திருவாரூரில் அமர்ந்துகொண்டே, திருவலிவலம், கீழ்வேளூர், கன்றாப்பூர் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று வருவார். அவ்வேளையில் திருவாரூரில் திருவாதிரைத் திருவிழா நடைபெற்றது. அத்திருவிழாவை அப்பர் சுவாமிகள் கண்டு மகிழ்ந்தார். பின்னே அவர் ,திருப்புகலூரை நினைந்து,

திருவாரூரை ஒருவாறு நீத்து, வழியில் பல திருப்பதிகளைக் கண்டு வணங்கித் திருப்புகலூரை நோக்கினார்.

### திருவாரூர் பெருமை யருளல்

அச் சமயத்தில் திருப்புகலூரில் திருஞானசம்பந்த சுவாமிகள் முருக நாயனார் திருமடத்தில் எழுந்தருளி யிருந்தனர். அவர் திருநாவுக்கரசு சுவாமிகள் வருகையைக் கேள்வியுற்று அவரை எதிர் கொண்டார். ஒருவரை ஒருவர் வணங்கினர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரை நோக்கி, 'அப்பரே! நீர் வரும் நாளில் திருவாரூரில் நிகழ்ந்த பெருமையை வகுத்துரையும்' என்று கேட்டனர். அப் பெருமையைத் திருநாவுக்கரசு சுவாமிகள், 'முத்து விதானம்' என்னுந் திருப்பதிகத்தால் விளக்கினர். உடனே திருஞான சம்பந்தர், 'திருவாரூர் போய் வருகிறேன்' என்று திருவாரூரை நோக்கினார். திருநாவுக்கரசு சுவாமிகள், திருப்புகலூரை அணைந்து ஆண்ட வனைத் தொழுது, பதிகங்கள் பாடித் திருத்தொண்டு செய்து கொண் டிருந்தனர்.

### முருக நாயனார் மடத்திலிருத்தல்

அப்பர் சுவாமிகள் திருப்புகலூரை விடுத்துத் திருச் செங்காட்டங் குடி, திருநள்ளாறு, சாத்தமங்கை, அயவந்தி, திருமருகல் முதலிய தலங்களுக்குச் சென்று மீண்டும் திருப்புகலூரை அடைந்தார். திருஞானசம்பந்தர் திருவாரூர்ப் பெருமானை வணங்கித் திருப்புகலூர் சேர்ந்தார். திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தரை எதிர்கொண்டு அளவளாவி இருந்தார். அப்பொழுது சிறுத்தொண்ட நாயனாரும், திருநீலநக்க நாயனாரும் அங்கே எழுந்தருளினர். எல்லாரும் முருக நாயனார் திருமடத்தில் வீற்றிருந்து இன்பத்தில் தோய்ந்திருந்தனர்.

### குங்கிலியக்கலையர் விருந்து

இரண்டு பெரியாரும் பிற திருப்பதிகளை வணங்கத் திருவுளங் கொண்டு திருப்புகலூரை விடுத்துப் புறப்பட்டனர். திருநீலநக்க நாயனார், சிறுத்தொண்ட நாயனார், முருகநாயனார் முதலியோர் விடை கொண்டேகினர். இருவரும் திருப்புகலூரை நீத்துத் திருவம் பரைத் தொழுது, திருக்கடவூரை அடைந்து, அங்கே குங்கிலியக் கலைய நாயனார் விருந்தினராயிருந்து, திருவாக்கூர்த் தாந்தோன்றி மாடக் கோயிலைக் கண்டு பணிந்து, திருவீழிமிழலை சேர்ந்தனர். அங்குள்ள அடியவர் இருவரையும் எதிர்கொண்டனர். இருவரும் திருக்கோயிலை அணைந்தனர். அப்பர் சுவாமிகள், 'திருவீழிமிழலை யானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே' என்று திருத் தாண்டகம் பாடினார். இருவரும் அங்கே தங்கினர்.

### வட்டமில்லாக் காசு பெறல்

அந்நாளில் மழைவளஞ் சுருங்கினமையால், காவிரி வறண்டது. அதனால் பஞ்சம் உண்டாயிற்று. உயிர்கள் வருந்தின. சிவபெருமான்

இரண்டு சுவாமிகளின் கனவில் தோன்றி, 'காலநிலை உங்களுக்கு ஒன்றுஞ் செய்யாது. 'ஆனால் அஃது உங்கள் தொண்டரைத் தாக்கும். ஆதலால் அவர் பொருட்டுப் படிக்காசு வழங்குவோம்' என்றருளினார். அருளியவாறே கிழக்கு மேற்குப் பீடங்களில் படிக்காசுகள் வைக்கப்பட்டன. அவற்றைக் கொண்டு அடியவர், அமுதாக்கிப் பறைசாற்றி, உயிர்களையெல்லாம் உண்பித்தனர். திருஞானசம்பந்தர் சிவகுமார ராதலான், வட்டக்காசு பெற்றுவந்தார். திருநாவுக்கரசர் கைத்தொண்டு செய்தலான் வட்டமில்லாக் காசு பெற்று வந்தார். பின்னே மழை பெய்தமையால் பஞ்சம் நீங்கிற்று.

### மறைக்கதவு திறப்பித்தல்

இரண்டு அன்பரும் திருவீழிமிழலையை விடுத்துத் திரு வாஞ்சியம் முதலிய திருப்பதிகட்குச் சென்று திருமறைக்காட்டுக் கேகினர்; அங்கே அடியவருடன் திருக்கோயிலுக்குப் போயினர். திருமறைக் காட்டின் திருக்கதவு வேதங்களால் பூசிக்கப்பெற்று அடைக்கப்பட்டது. அதைத் திறக்கவல்ல அன்பர் அணையாமை யால், அதன் பக்கத்தில் ஒரு வாயில் செய்து, அதன் வழியே அடியவர் சென்று ஆண்டவனைத் தொழுவது வழக்கமா யிருந்தது. அதை இருவரும் நேரே கண்டனர்; கேட்டனர். ஞானசம்பந்த வள்ளல், நாவரசுப் பெருமானைப் பார்த்து, 'நாம் இருவேமும் நேரே சென்று பெருமானைத் தொழுதல் வேண்டும். ஆகவே இக்கதவு திறக்க நீர் பாடும்' என்றார். அப்பரெம்பெருமான் 'பண்ணினேர்' என் றெடுத்து, 'கண்ணினால் உமைக்ககாணக் கதவினைத் திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே' என்று பாடினார். சிவபிரான் திருக்காப்பு நீக்கத் தாழ்க்கவே, 'இரக்க மொன்றிலீர்' என்று திருக்கடைக் காப்பில் அருளி இறைஞ்சினார். உடனே காப்பு நீங்கியது. கதவு திறந்துகொண்டது. இரு முனிவரரும் அடியவருடன் தொழுது விழுந்தனர். அடியவர் ஆரவாரித்தனர். இருவரும் உள் நுழைந்து தமிழ் மாலைகள் சாத்தி வெளியே வந்தனர். தாண்டக வேந்தர் முத்தமிழ் விரகரைப் பார்த்து, 'இத் திருக்கதவு திறக்கவும் அடைக்கவும் வழக்கத்தில் வரும்பொருட்டு நீர் அடைக்கப்பாடும்' என்றார். முத்தமிழ் விரகர் திருப்பதிகம் பாடத் தொடங்கியதும் திருக்கதவு திருவருளால் அடைந்து கொண்டது. பிள்ளையார் திருப்பதிகத்தைப் பாடி முடித்தார். அன்று முதல் அத் திருக்கதவு திறக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் வருகிறது. ஞானசம்பந்தரும், நாவரசரும், மற்ற அடியவரும் திருவருளை வியந்து திருமடத்தைச் சேர்ந்தனர்.

### திருவாய்மூரில் சிவக்காட்சி

திருநாவுக்கரசருக்கு ஒருவித ஏக்கம் உண்டாயிற்று. 'என்ன! என் பாட்டுக்குக் கதவு அரிதில் திறக்கப்பட்டது; அவர் பாட்டுக்கு

அஃது எளிதில் மூடிக்கொண்டது!'என்று அவர் கவன்று மடத்தின் ஒரு பக்கத்தில் ஆண்டவனை நினைந்து உறங்கினார். அப்பொழுது சிவபெருமான் தோன்றி, 'வாய்மூரிலிருப்போம்; தொடர வா' என்றருளினார். அப்பரெம்பெருமான் விழித்து, 'திருவாய்மூர் செல்வனார் - அங்கே வாவென்று போனார்; அதென்கொலோ' என்று பாடிக் கொண்டு எழுந்தார். சிவபெருமான் அப்பருக்கு வழங்கிய திருக்கோலத்தோடு முன் செல்கிறார். அப்பர் அவரை தொடர்ந்து செல்கிறார். அப்பர் ஆண்டவனை அணைய முயன்று முயன்று பார்க்கிறார். அவர் அணையப் பெற்றாரில்லை. பெருமான், அப்பர் சுவாமிகளுக்கு அணித்தே காட்சி கொடுப்பார் போலத் திருக்கோயில் ஒன்றை எதிரே காட்டி, அதனுள்ளே புகுந்தார். அப்பர் சுவாமிகள் விரைந்து தொடர்ந்தார். திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர் திருவாய்மூர் நோக்கியதைக் கேள்வியுற்று, அவரும் அங்கே போந்தார். அப்பர் சுவாமிகளுக்கு ஆண்டவன் திருவுருவம் புலனாக வில்லை. அவர் அயர்ந்து, 'திருக்குறிப்பை அறியாது கதவைத் திருப்பித்த அடியேனுக்குத் திருவுருவை மறைக்கலாம். உறைக்கப் பாடிக் கதவை அடைப்பித்த அன்பர் இங்கே போந்துள்ளார். அவருக்கும் திருவுருவை மறைக்கலாமோ' என்று விண்ணப்பித்தார். சிவபெருமான் திருஞானசம்ந்த சுவாமிகளுக்குக் காட்சி வழங்கினார். அவர் அக்காட்சி கண்டு தொழுது, திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு அதைக் காட்டினார். திருநாவுக்கரசர், சிவபெருமானைக் கண்டு, 'பாட அடியார்'என்னுந் திருத்தாண்டகத்தைப் பாடினார். சிவபெருமான் அத்தமிழ் மாலையை யணிந்து எழுந்தருளினார். இருவரும் திருவாய்மூர் போந்து, இறைவனை வணங்கி, அங்கே தங்கியிருந்தனர். இருவரும் அங்கிருந்து மீண்டுந் திருமறைக்காட்டுக் கெழுந்தருளினர்.

**ஞானசம்பந்தரைக் தடுத்தல்**

திருஞானசம்பந்தப் பெருமானைக் கண்டு வருமாறு பாண்டிமா தேவியாராகிய மங்கையர்க்கரசியார் முன்னிலையில் அமைச்சராகிய குலச்சிறை நாயனார் ஒற்றரை அனுப்பினார். ஒற்றர் திருமறைக்காடு போந்து, திருஞானசம்பந்த சுவாமிகளைக் கண்டனர்; கண்டு, பாண்டி நாட்டில் சைவ நன்னெறியை மாய்க்கச் சமணர் புரிந்து வருங் கொடுமைகளைத் தெரிவித்தனர். உடனே ஞானசம்பந்தர் அக் கொடுமைகளைத் வீழ்த்திச் சைவம் வளர்க்கத் தெய்வ நீற்றை நினைந்து புறப்பட்டனர். அப்பொழுது திருநாவுக்கரசர், 'இக்காலச் சமணர் மிகப் பொல்லாதவர்; என்னைச் சொல்லொணாத் துன்பத்துக்குட்படுத்தினர்; நீர் போதலாகாது' என்று தடுத்தனர். ஞானசம்பந்தப் பெருமான், 'திருநீற்று நெறி போற்றிவரும் மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார் ஆகிய இருவரையுங் காண்டல்வேண்டும் என்னும் வேட்கை எனக்கு எழுந்து விட்டது.

சமணர் கொடுமைகளை ஒழித்துச் சைவநெறி ஓம்பாது, இனி யான் ஒன்றுஞ் செய்யேன்; உமது ஆணை' என்றார். திருநாவுக்கரசர், 'நீர் அங்கே போகுமாறு துணிந்துவிட்டீர். நீர் போதல் கூடாதென்பது எனது கருத்து. யான் போய்க் கொடுமைகளைச் சிதைத்து வருகிறேன்' என்று முறையிட்டுப் பிள்ளையார் செலவைத் தடுக்க முயன்றனர். அம்முயற்சி பயன் படாமை கண்டு திருநாவுக்கரசர் நின்றனர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரிடம் விடைபெற்றுத் திருமறைக்காட்டுப் பெருமானைத் தொழுது, பாண்டி நாடு நோக்கினார்.

### ஆயிரம் பொன் கொடையைச் சிறப்பித்தல்

திருநாவுக்கரசர் திருவீழிமிழலையைக் கண்டு தொழுதற்குத் திருமறைக்காட்டினின்னும் புறப்பட்டுத் திருநாகைக் காரோணம் முதலிய தலங்களை வணங்கித் திருவீழிமிழலை யடைந்தார். அவர் அங்கிருந்து திருவாவடுதுறை போந்து ஆளுடைய பிள்ளையார்க்கு ஐயன் ஆயிரம் பொன் கொடுத்ததை, 'கழுமல வூரர்க் கம்பொன் ஆயிரங்கொடுப்பர் போலும் ஆவடு துறையனாரே' என்று சிறப் பித்துத் திருப்பழையாறைக்குச் சென்றார்.

### வடதளியில் சத்தியாக்கிரகம்

திருப்பழையாறையிலே வடதளி என்றொரு சிவாலயமுண்டு. ஆங்குள்ள சிவலிங்கப் பெருமான் சமணரால் மூடப்பட்டிருந்தார். அப்ப ரெம்பொருமான் ஆண்டவனைத் தொழுதபோது, 'அது சமணர் விமானம்' என்று கேட்டு மனம் நொந்து, ஓரிடத்தில் ஒதுங்கிச் சிவபெருமான் திருவடியைச் சிந்தித்து, 'ஐயனே! சமணர் வஞ்சம் ஒழிதல் வேண்டும். அவர் திறம் அழிதல் வேண்டும். திரு வுருவைக் கண்டு தொழாது யான் போகேன்' என்று உறுதி கொண்டு அமுது செய்யாமலிருந்தார். அடியவருக் கெளிய அம்பலவாணர், மன்னன் கனவில் தோன்றி, நிலைமையை உணர்த்திச் சமணரைத் தொலைக்குமாறு கூறித் தாம் எழுந்தருளியுள்ள இடத்தின் அடையாளத்தையுங் குறிப்பிட்டார். மன்னன் எழுந்து, அமைச்சரை யும் உடன் அழைத்துச் சென்று, திருநாவுக்கரசர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிச் சமணர் வேர் அறுத்தான். யானையினால் ஆயிரம் சமணர் மிதியுண்டனர். மன்னன் சிவலிங்கப் பெருமான் மறைப்பை நீக்கி, விமானம் அமைத்துத் திருப்பணிகள் செய்தனன். திருநாவுக் கரசர் கண்ணாரவும் மனமாரவும் சிவலிங்கப் பெருமானைக் கண்டு தொழுது, உருகி, ஆங்கே நிகழ்ந்த செயல்களைப் பொறித்துத் 'தலையெலாம்' என்னுந் திருப்பதிகம் பாடினார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பழையாறையில் சில நாள் தங்கித் திருத்தொண்டு செய்து வந்தார்; பின்பு அத்திருப்பதியை விடுத்துத் திருவானைக்கா, திருவெறும்பியூர், திருச்சிராப்பள்ளி,

திருக்கற்குடி முதலிய திருப்பதிகளைத் தொழுது தமிழ் பாடினார்; திருப்பராய்த்துறை தொழ விரும்பிச் சென்று, அத்திருப்பதியையுங் கண்டு தொழுதார்; அங்கிருந்து திருப்பைஞ்ஞீலியை நோக்கினார்.

### பொதிசோறுண்ணல்

வழியில் நீர் வேட்கையும் பசியும் அவரைப் பற்றின. அப்பர் சுவாமிகள் சித்தம் அலையாது சிவ சிந்தனையுடன் நடந்தார். அருட்கடலாகிய சிவபெருமான் திருநீற்று அந்தணராய் வழியில் ஓரிடத்தில் சோலையையுங் குளத்தையுஞ் சமைத்துக் காட்டி, வழி நடப்பார்போலப் பொதிசோறு வைத்துக்கொண் டிருந்தார். திருநாவுக்கரசர் அவ்விடஞ் சேர்ந்தபோது, அந்தணர் அவரைப் பார்த்து, 'இளைப்பாயிருக்கிறீர். என்னிடம் பொதிசோறு இருக்கிறது. அதை யுண்டு இக்குளத்தில் நீர் அருந்தி இளைப்பாறும்' என்றார். அப்பர் சுவாமிகள் அதற்கு உடன்பட்டுச் சோறுண்டு நீர் அருந்தி இளைப்பாறினார். அதற்குமேல் அந்தணர் அப்பரைப் பார்த்து, 'நீர் எவ்விடம் போகிறீர்?' என்று கேட்டார். அப்பர், 'பைஞ்ஞீலிக்குப் போகிறேன்' என்றார். அந்தணர், 'யானும் அவ்விடமே போகிறேன்' என்றார். இருவரும் பைஞ்ஞீலி நோக்கி நடந்து அத்திருப்பதியை அணுகினர். அணுகியதும், அந்தணர் மறைந்தருளினர். திருநாவுக்கரசர் ஆண்டவன் அருட்பெருந் தன்மையை வியந்து பதிகம் பாடினர். பின்னே அவர் திருக்கோயிலுட் புகுந்து தமிழ் மாலை சாத்தித் தொண்டு செய்துகொண்டிருந்தனர்.

### கண்ணப்பரைத் தொழுதல்

அப்பர் சுவாமிகள்அங்கிருந்து புறப்பட்டுத் திருவண்ணா மலை, திருவோத்தூர், திருவேகம்பம், திருக்கச்சி மயானம், திருமேற்றளி, திருமாற்பேறு, திருக்கழுக்குன்றம், திருவான்மியூர், திருமயிலாப்பூர், திருவொற்றியூர், திருப்பாசூர், திருவாலங்காடு, திருக்காரிகரை முதலிய திருப்பதிகளைச் சேர்ந்தார்;ஆங்காங்கே திருப்பதிகம் பாடினார்; திருக்காளத்தியடைந்து, ஆண்டவனை வணங்கித் தமிழ்மாலை சூடிக் கண்ணப்பரையுந் தொழுந்திருந்தார்.

### வடகயிலை நோக்கல்

தென்கயிலையாகிய திருக்காளத்தி, அப்பருக்கு வட கயிலை நினைவூட்டிற்று. வடகயிலையைக் காண அப்பர் உறுதி கொண்டார். கொண்டு அவர் வடதிசை நோக்கினார்; ஸ்ரீ சைலத்தை அணைந்தார்; பதிகம் பாடினார்; தெலுங்கு, கன்னடம், மாளவம் முதலிய நாடுகளைக் கடந்தார் காசியை யடைந்தார்; ஆண்டவனை வணங்கினார்; தம்முடன் வந்தவரை அவ்விடத்தில் நிறுத்திவிட்டார்; சாகமூல பலங்களை உண்பதையும் நீக்கினார்; அனல் உமிழும் கற்சுரங்களிலே நடக்கலானார்; பாதங்கள் தேய்ந்தன; கைகளால்

தாவிச் சென்றார்; கைகள் தேய்ந்தன; மார்பினால் ஊர்ந்தார்; மார்பும் நைந்து தேய்ந்தது; எலும்புகளும் முறிந்தன; புரண்டு புரண்டு பார்த்தார்; உடலம் தேயலாயிற்று; மெல்ல மெல்ல நகர முயன்றார்; அதற்கு மேல் அப்பர் செயலற்றவரானார்.

**கயிலைக் காட்சி**

அப்பர் சுவாமிகள் வாயிலாக இன்னுந் தமிழ்மறை வெளி வருதல் வேண்டும் என்று சிவபெருமான் திருவுளங் கொண்டார். அதனால் சிவபெருமான் அப்பருக்கு வடகயிலையில் காட்சியருளத் திருவுளம் பற்றினாரில்லை. சிவபெருமான் ஒரு முனிவராய் ஒரு பொய்கையை உண்டாக்கி, அப்பர் எதிரிலே தோன்றி, 'உறுப்பு களெல்லாம் தேய்ந்து சிந்த இவ்வருங் கானகத்தில் நீர் வந்ததன் நோக்கம் என்னை?' என்று கேட்டார். அம்முனிவர் திருக்கோலத்தைக் கண்டதும், அப்பர் சுவாமிகளுக்குப் பேசும் ஆற்றல் சிறிது பிறந்தது. அப்பர் சுவாமிகள் முனிவரிடம் தம் கருத்தைத் தெரிவித்தார். முனிவர், 'கயிலைக் காட்சியா?' அது தேவர்க்குங் கிட்டுதல் அரிது! அது மனிதருக்கு எங்ஙனம் கிட்டும்? நீர் திரும்புவதே நலம்' என்றார். அதற்கு அப்பர், 'இவ்வுடல் மாளுந் தகையது. கயிலைக் காட்சி கண்டல்லால் யான் திரும்பேன்' என்றார். உடனே சிவபிரான் திருவுருக்கரந்து, 'நாவுக்கரசனே! எழுந்திரு' என்றருளினார். திருநாவுக்கரசர் தீங்கெலாம் நீங்கி ஒளிதிகழ் மேனியுடன் எழுந்தார்; எழுந்து, 'அண்ணலே! என்னை ஆண்டு கொண்டருளிய அமுதே! கயிலைக் காட்சி வழங்கி யருள்க' என்று வேண்டினார். அடியார் வேண்டுவதை வேண்டியாங் கருளும் சிவபெருமான், 'நாவுக்கரசனே! இப் பொய்கையில் மூழ்கு. நமது கயிலைக் கோலத்தைத் திருவையாற்றில் காண்பாய்' என்றருளினார். திருநாவுக்கரசர் அஞ்செழுத்தோதிப் பொய்கையில் மூழ்கினார். அவர் திருவையாற்றிலே ஒரு தடாகத்திலே தோன்றிக் கரைசேர்த்தார். அத் திருப்பதியிலுள்ள சராசரங் களெல்லாம் சத்தி சிவமாகப் பொலிந்தன. அப் பொலிவு கண்டு, உளங் குளிர்ந்து, அப்பர் திருக்கோயிலுக்குச் சென்றார். திருக்கோயில் கயிலையாக விளங்குகிறது. அப்பர் சுவாமிகள் ஆனந்தவாரிதியில் மூழ்கித் திருத்தாண்டகங்கள் பாடுகிறார். சிவபிரான் கயிலைக் காட்சியை மறைத்தருளினார். அப்பர் சுவாமிகள் வருந்திப் பின்னே 'எல்லாம் ஆண்டவனருள்' என்று தெளிந்து, தாங் கண்ட காட்சியை, 'மாதர் பிறைக் கண்ணி யானை' என்னும் திருப்பதிகமாக அருளினார். அத் திருப்பதியிலேயே அப்பர் பெருமான் சில நாள் தங்கித் தமிழ்த் தொண்டுங் கைத்தொண்டுஞ் செய்து வந்தார்.

**பல்லக்குத் தாங்கல்**

திருநாவுக்கரசு சுவாமிகள் அங்கிருந்து புறப்பட்டுத் திருநெய்த் தானம் , திருமழபாடி முதலிய தலங்களை யடைந்து, பதிகம் பாடித்

திருப்பூந்துருத்தி சேர்ந்தார். அங்கே தங்கி அவர் ஒரு திருமடங் கட்டினார்; திருவங்கமாலை உள்ளிட்ட பல திருப்பதிகங்கள் பாடினார். அவ்வேளையில் திருஞானசம்பந்தர், பாண்டி நாட்டை விடுத்துச் சோழ நாட்டை அடைந்து, அப்பர் சுவாமிகள் திருப் பூந்துருத்தியி லிருத்தலைக் கேள்வியுற்று, அத் திருப்பதி நோக்கி வந்தனர். அவர் வருகையைக் கேள்வியுற்ற அப்பர், அவரை எதிர் கொள்ள எழுந்தனர். அப்பர், தம்மை ஒருவரும் அறியாதபடி, திருக்கூட்டத்திடை நுழைந்து, திருஞானசம்பந்தர் முத்துச் சிவிகையைத் தாங்குபவருடன் தாமும் ஒருவராயினர். திருஞான சம்பந்தர் திருப்பூந்துருத்தியை நெருங்கினர்; 'அப்பர் எங்குற்றார்' என்று கேட்டனர். அப்பர், 'திருவடி தாங்கும் பேறு பெற்று இங்குற்றேன்' என்றனர். என்றதும், ஞானசம்பந்தர் பதைப்பெய்திச் சிவிகை விட்டிழிந்து அப்பரை வணங்கினர். அவருக்குமுன் இவர் அவரை வணங்கினர். அடியவர் ஆரவாரித்தனர்.

இருவரும் திருப்பூந்துருத்தி அணைந்து, சிவபெருமானைப் போற்றினர். திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டில் நிகழ்ந்த வைகளைக் கூறினர். திருநாவுக்கரசு சுவாமிகள் பாண்டியநாடு நோக்க விரும்பித் தொண்டை நாட்டுத் தலங்களைக் கண்டு, தமிழ் பாடுமாறு திருஞானசம்பந்தருக்குச் சொல்லிப் புறப்பட்டார்.

### மூவரைக் காண்டல்

திருநாவுக்கரசர் பாண்டி நாடு புகுந்து, திருப்புத்தூரைத் தொழுது, மதுரை அணைந்தார்; அங்கே ஆலவாய்க் கடவுளை நோக்கி, 'மூளைத்தானை' என்னுந் திருத்தாண்டகம் பாடினார். மங்கையர்க்கரசியாரும், கூன் நிமிரப் பெற்ற பாண்டியனும், குலச் சிறையாரும் அப்பர்சுவாமிகளிடம் போந்து வணக்கஞ் செய்தனர். அவர்களுடன் அப்பர்சுவாமிகள் சிலநாள் தங்கி, விடைபெற்றுத் திருப்பூவணம், திருவிராமேச்சுரம், திருநெல்வேலி, திருக்கானப்பேர் முதலிய திருப்பதிகளைக் கண்டு, பதிகங்கள் பாடிப் பாண்டி நாட்டை நீத்துச் சோழநாட்டை அடைந்து, திருப்புகலூரைச் சேர்ந்தார்.

### ஓட்டையும் பொன்னையும் ஒக்கப் பார்த்தல்

திருநாவுக்கரசு சுவாமிகள், பூம்புகலூரீசனை நாடோறும் தொழுது உழவாரத் தொண்டு செய்துகொண்டிருந்தார். அங்கே அவர், நின்ற திருத்தாண்டகம், தனித் திருத்தாண்டகம், க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம், குறைந்த திருநேரிசை, தனித் திருநேரிசை, ஆருயிர்த் திருவிருத்தம், தசபுராணத்தடைவு, பாவநாசப் பதிகம், சரக்கறைத் திருவிருத்தம் முதலிய திருப்பதிகங்களைப் பாடி வழிபாடு செய்து வந்தார். வருநாளில் சிவபெருமான் அப்பர் சுவாமிகளுடைய நன்னிலைமையை உலகத்துக்குக் காட்டத் திருவுளம் பற்றினார்; பற்றிச் சுவாமிகள் புல் செதுக்கும்போது,

உழவாரப்படை நுழைந்த இடங்களிலெல்லாம் பொன்னும், நவ மணியும் பொலிந்து இலங்கும்படி திருவருள் செய்தார். அப்பரெம் பெருமான் அவைகளைப் பருக்கைக் கற்களோடு உழவாரத்தில் ஏந்தித் தடாகத்தில் எறிவார். அவர் புல்லோடும், கல்லோடும், பொன்னோடும், மணியோடும், சொல்லோடும் வேறுபாடில்லாத நிலைமையில் நின்றார். அதற்குமேல் ஆண்டவன் அருளால் தேவதாசிகள் மின்னுக்கொடிகள் போல ஆகாயத்தினின்றும் இறங்கி வந்து, பாட்டாலும் கூத்தாலும் பிறவாற்றாலும் சுவாமிகள் நிலையைக் குலைக்க முயன்றார்கள். சுவாமிகளின் சித்தநிலை ஒரு சிறிதுந் திரியவில்லை. சுவாமிகள் திருத்தொண்டில், உறுதிகொண்டு, 'பொய்ம்மாயப் பெருங்கடலுள்' என்னுந் திருத்தாண்டகத்தை அருளிச் செய்தார். தேவதாசிகளும் சுவாமிகளுக்குச் சிவமாகவே காணப்பட்டார்கள். அவர்கள் சுவாமிகளை வணங்கிப் போய் விட்டார்கள். ஏழுலகமும் சுவாமிகளை வாழ்த்தின.

அன்புவடிவா யிலங்கும் திருநாவுக்கரசர், 'புகலூர்ப் பெருமானே! என்னை இனிச் சேவடிக்கீழ்ச் சேர்த்திடுக' என்று திருவிருத்தங்கள் பல பாடினார். ஒரு சித்திரையில், சமயம் கூடிய திருநாளில், 'எண்ணுகேன்' என்னுந் திருத்தாண்டகத்தை எடுத்து, 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்' என்று ஓதித் திருநாவுக்கரசர் சிவானந்த ஞான வடிவைப் பெற்றுச் சிவபெருமான் சேவடியில் அமர்ந்தார்.

# குலச்சிறையார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

***அருந்தமி ழாகரன் வாதில் அமணைக் கழுநுதிமேல்***
***இருந்தமிழ் நாட்டிடை ஏற்றுவித் தோனெழிற் சங்கம்வைத்த***
***பெருந்தமிழ் மீனவன் தன்னதி காரி பிரசமல்கு***
***குருந்தவிழ் சாரல் மணமேற் குடிமன் குலச்சிறையே.***

## திருத்தொண்டர் புராண சாரம்

***கோதில்புகழ் தகுமணமேற் குடியார் கோவண்***
***குலச்சிறையார் தென்னர்குல அமைச்சர் குன்றா***
***மாதவர்கள் அடிபரவும் மரபார் பாண்டி***
***மாதேவி யார்அருள்வான் பயிர்க்கு வேலி***
***காதல்மிகு கவுணியர்கோன் வாதில் தோற்ற***
***கையரைவை கைக்கரைசேர் கழுவில் ஏற்று***
***நீதியினால் ஆலவாய் நிமலர்ச் சேர்ந்த***
***நின்மலனார் என்மலங்கள் நீக்கி னாரே.***

*பாண்டி நாட்டிலே மணமேற்குடி என்றொரு பதியுண்டு. அப்பதியில் தோன்றியவர்* **குலச்சிறையார்.**

### குலன் கருதாமை

*குலச்சிறையார், சுந்தரமூர்த்தி சுவாமிகளால் ‘பெரு நம்பி’ என்று சிறப்பிக்கப்பட்டவர். அவர் சிவனடியாரிடத்திற் பேரன்பு வாய்ந்தவர்; சிவனடியாரின் குலநலன் முதலியன கருதாது அவருக்குத் தொண்டு செய்பவர். சிவனடியார் பலராய் அணையிலும், ஒருவராய் அணையினும் அவருக்கு அவர் அமுதூட்டுவார்.*

### தொண்டர்க்குத் தொண்டர்

*குலச்சிறையார், நின்றசீர்நெடுமாறன் என்ற பாண்டியனுக்கு முதல் அமைச்சரா யிருந்தவர். அவர், அப்பாண்டியன் மனைவியா ராகிய மங்கையர்க்கரசியாரின் திருத்தொண்டுக்குத் தொண்டராக நின்றவர்; சமணம் ஒழியவும், சைவம் ஓங்கவும் திருஞானசம்பந்த சுவாமிகளது பொன்னடியைப் போற்றியவர்; வாதிலே தோற்ற சமணரைக் கழுவில் ஏற்றுவித்தவர்.*

# பெருமிழலைக் குறும்பர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

***சிறைநன் புனல்திரு நாவலூ ராளி செழுங்கயிலைக்***
***கிறைநன் கழல்நாளை எய்தும் இவனருள் போற்றஇன்றே***
***பிறைநன் முடியன் அடியடை வேனென் றுடல்பிரிந்தான்***
***நறைநன் மலர்த்தார் மிழலைக் குறும்பன் எனுநம்பியே.***

## திருத்தொண்டர் புராண சாரம்

***கொண்டல்பனி வளர்சோலை மிழலை நாட்டுக்***
***கோதில்புகழ்ப் பெருமிழலைக் குறும்ப னார்சீர்***
***அண்டர்பிரான் அடியவருக் கடியா ராகும்***
***ஆதரவால் அணுக்கவன் தொண்டர்க் காளாய்***
***மண்தொழும்எண் தருசித்தி வாய்ந்து ளார்தாம்***
***வன்தொண்டர் வடகயிலை மருவு நாள்முன்***
***எண்திகழும் மறைமூல நெறியூ டேகி***
***இலங்கொளிசேர் வடகயிலை எய்தி னாரே.***

*மிழலை நாட்டிலுள்ள மிழலை என்னுந் திருப்பதியிலே தோன்றியவர் குறும்பர் என்பவர். அவர் மிழலையில் தோன்றிய காரணத்தால் பெருமிழலைக் குறும்ப நாயனார் என்னப்பட்டார். அவர் சிவனடியாரின் குறிப்பறிந்து தொண்டு செய்வதில் பேர் பெற்றவர். அடியவருக்கு அன்னமளிப்பதும், பொருள், உதவுவதும் அவர்தந் தொண்டாகும்.*

### யோகப் பயிற்சி

*பெருமிழலைக் குறும்பருக்குச் சுந்தரமூர்த்தி, சுவாமிகளிடம் அளவிறந்த அன்பு உண்டு. நாயனார், சுவாமிகளைத் திரிகரணங்க ளாலும் வழிபட்டு வந்தார். அதனால் அவருக்கு அஷ்டசித்திகளுங் கூடலாயின. நாயனார் அஞ்செழுத்தை இடையறாது ஓதி ஓதி, யோகப் பயிற்சியில் முதிர்ச்சி யடைந்தார்.*

### யோகக் காட்சி

*ஒருநாள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவஞ்சைக் களத்தைப் பணிந்து, தமிழ் பாடிய சமயத்தில், அவருக்கு வடகயிலை வாழ்வை*

அளிக்கச் சிவபிரான் திருவுளம் பற்றினார். அதனை யோகக் காட்சியால் பெருமிழலைக் குறும்பர் உணர்ந்தார்; உணர்ந்து, ‘சுந்தரமூர்த்தி சுவாமிகள் நாளை வடகயிலைக்கு ஏகப்போகிறார்; மணி இழந்த கண்ணால் விளையும் பயன் என்ன? அவரைப் பிரிந்து இங்கு யான் வாழேன்’ என்று யோகத்தால் சுந்தரமூர்த்தி சுவாமி களுக்கு முன்னர் வடகயிலை யடைந்தார்.

# காரைக்காலம்மையார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*நம்பன் திருமலை நான்மிதி யேனென்று தாளிரண்டும்*
*உம்பர் மிசைத்தலை யால்நடந் தேற உமைநகலும்*
*செம்பொன் னுருவன்என் னம்மை எனப்பெற்*
*றவள்செழுந்தேன்*
*கொம்பி னுகுகாரைக் காலினில் மேய குலதனமே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*தங்குபுகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க*
*தனதத்தன் தரும்புனித வதியார் மாவின்*
*செங்கனிகள் திருவருளால் அழைப்பக் கண்டு*
*திகழ்கணவன் அதிசயித்துத் தேசம் நீங்க*
*அங்கஉடல் இழந்துமுடி நடையால் ஏறி*
*அம்மையே எனநாதன் அப்பா என்று*
*பொங்குவட கயிலைபணிந் தாலங் காட்டில்*
*புனிதனடம் அனவரதம் போற்றி னாரே.*

காரைக்காலிலே வணிகர் குலத் தலைவன் ஒருவன் வாழ்ந்தான். அவன் பெயர் தனதத்தன் என்பது. அவனது தவப் பயனால், அவனிடம் திருமகள் தோன்றினாலென்ன ஒரு பெண் மகவு பிறந்தது. அம் மகவுக்குப் புனிதவதியார் என்னும் பெயர் சூட்டப்பட்டது.

### குழந்தை விளையாட்டிலும் சிவபத்தி

புனிதவதியார் குழந்தைப் பருவத்திலேயே இயல்பாகச் சிவநேசமுடையவரானார். விளையாட்டுக் காலங்களிலும் அவர் சிவநாமத்தை முழக்குவார்; தொண்டர்கள்வரின் அவரைத் தொழுவார். இவ்வாறு அவர் ஒழுகி, அழகு ஒளி விடுவது போல வளர்ந்து, திருமணப் பருவமடைந்தார்.

### திருமணம்

நாகப்பட்டினத்திலே நிதிபதி என்றொரு வணிகத் தலைவன் இருந்தான். அவன், தன்மகன் பரமதத்தனுக்குப் புனிதவதியாரை மணஞ்செய்விக்க விரும்பினான்; விரும்பியவாறு சில முதியோரைத்

தனதத்தனிடம் அனுப்பினான். முதியோர் காரைக்கால்போந்து, தனதத்தனிடம் நிதிபதியின் கருத்தை வெளியிட்டார். தனதத்தன் நிதிபதியின் விருப்பத்துக்கு உடன்பட்டான். இதை முதியோர் நாகைக்கேகி நிதிபதியினிடம் தெரிவித்தனர். இரு சார்பிலும் மணவினைக் குரிய செயல்கள் நிகழ்ந்து வந்தன. திருமணம் காரைக்காலில் நடைபெற்றது.

### இல்லறம் நடாத்தல்

தனத்தத்தனுக்குப் புனிதவதியார் ஒரு பெருந்தவப் புதல்வியாரதலின், அவன், தன் மகளையும் மருமகனையும் நாகைக்கு அனுப்ப விரும்பினானில்லை. அவன், தன் வீட்டருகே ஒரு தனி வீடுகட்டி, அதில் இருவரையும் வதியுமாறு செய்து பெரும் பொருளும் உதவினான். பரமதத்தன் வாணிபத் துறையைப் பெருக்கி வாழலானான். புனிதவதியார், பரமதத்தனுக்கு வாழ்க்கைத் துணையாகி, இல்லறத்தை இனிது நடாத்தி வந்தார்.

புனிதவதியார்பால் சிவநேயம் நாளுக்குநாள் முருகிப் பெருகி ஓங்கி வளரலாயிற்று. மனைக்கு வருஞ் சிவனடியாருக்கு அம்மையார் அமுதூட்டிப் பொன்னும் பொருளும் கொடுத்து வந்தார்.

### மாம்பழம் இரண்டு பெறல்

ஒரு நாள் பரமதத்தனைக் காண வந்தவரிற் சிலர், அவனுக்கு இரண்டு மாங்கனி கொடுத்தனர். அவன் அவைகளை வாங்கி, அவர்தங் குறை முடித்து, அவைகளை இல்லிற்கு அனுப்பினன். அம்மையார் அப்பழங்களை வாங்கி வைத்தார்.

### மாம்பழத்தை அடியார்க்குப் படைத்தல்

அவ்வேளையில் அங்கே ஒரு சிவனடியார் பசியால் வாடி இளைப்புற்றவராய் வந்தார். புனிதவதியார் அவரது நிலைமை கண்டு, 'அடியவர் பசி தீர்ப்பேன்' என்று கால் கழுவ நீர் கொடுத்தார்; கலத்திலே திருவமுது படைத்தார். அப்பொழுது கறியமுது சமைக்கப்படாமலிருந்தது, 'சிவனடியாரே விருந்தினராய் வந்துள்ளார். இப் பேற்றினுஞ் சிறந்ததொன்றில்லை' என அம்மையார் கருதிக் கணவன் அனுப்பிய இரண்டு பழங்களில் ஒன்றைக் கொண்டு வந்து படைத்தார். சிவனடியார் மாங்கனியுடன் அமுதுண்டு அம்மையார் செயலைப் பாராட்டிப் போனார்.

### மாங்கனித் திருவிளையாடல்

பரமதத்தன் பகலிலே இல்லிற்கு வந்தான். அவன் வழக்கம் போல் நீராடினான்; பின்னே அமுதுண்ண அமர்ந்தான். அம்மையார் திருவமுது முதலியவற்றைப் படைத்தார். அவர், தம்பாலுள்ள மாங்கனியையுங் கொண்டுவந்து வைத்தார். பரமதத்தன் கனியை

உண்டான். அஃது அதிக சுவையா யிருத்தல் கண்டு, அவன் மற்று மொரு கனியையுங் கேட்டான். அம்மையார் கனியைக் கொண்டு வருவார்போல அகன்றார்; அகன்று, மெய் மறந்து, உணர்வினால், 'உற்றவிடத்து உதவும் பெருமானே!' என்று ஆண்டவனை நினைத்தார். ஆண்டவனருளால் ஒரு மாங்கனி அம்மையார் கையில் வந்து நின்றது. அம்மையார், அப்பழத்தைக் கொண்டுவந்து கணவனுக்கு இட்டார். அவன் அதை உண்டான்; உண்டு, 'என்னே இதன் சுவை! இது நான் அனுப்பிய மாங்கனியா யிருக்குமோ? இராது. இதைப்போன்றதொரு கனியை மூன்று உலகத்திலும் பெறுதல் அரிது. இத்தகைய ஒன்றை நீ எங்கே பெற்றாய்?' என்று அம்மையாரைக் கேட்டான். புனிதவதியார், 'திருவருள் உதவிய திறத்தை வெளியிடலாமோ' என்று கருதுகிறார்; 'கணவனுக்கு உண்மையை மறைத்தலுந் தவறன்றோ' என்றும் எண்ணுகிறார். இருவழியிலும் அம்மையார் நெஞ்சஞ் சுழன்றது. பின்னே அம்மையார் தெளிவுற்று நிகழ்ந்ததைக் கூறினார்.

### திருவருள் மாங்கனியாதல்

பரமதத்தன் திருவருள் நெறியில் நில்லாதவன். அவனுக்கு உண்மை விளங்கவில்லை. அவன் அம்மையாரைப் பார்த்து, 'சிவனருளா! சிவனருளாயின், அவனருளால் இன்னொரு கனி கொண்டுவா பார்ப்போம்!' என்றான். கற்பரசியார் அவ்விடத்தை விட்டு நீங்கி, அடியார்க் கெளியனாகிய ஆண்ட வனைச் சிந்தித்து, 'இன்னும் ஒரு பழம் அருளல்வேண்டும். இல்லையேல் என்னுரை பொய்யாகும்' என்று வேண்டினார். எங்குமுள்ள சங்கரன் அருளால் மாங்கனி யொன்று அம்மையார் கையில் சேர்ந்தது. அம்மையார் அதைக் கொண்டுவந்து நாயகனிடந் தந்தார். அவன் அதிசயித்து அதை வாங்கினான். உடனே அது மறைந்தது. பரமதத்தன் நெஞ்சம் சுழல்கிறது. அவன் அம்மையாரைப் பார்க்கிறான்; பார்த்துப் பார்த்து 'இவள் தெய்வம்; இவளை விட்டு நீங்குதல் வேண்டும்' என்று கருதலானான். அவன், தன் கருத்தை வெளியிடாது, அம்மையா ரோடு தொடர்பின்றி வாழலானான்.

### பரமதத்தன் மறுமணம்

சின்னாள் கழிந்த பின்னர்ப் பரமதத்தன், 'கடல்மீது சென்று வாணிபஞ் செய்து பொருள் திரட்டிவருவேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தான். சுற்றத்தவர் சேர்ந்து மரக்கலஞ் சமைத்துத் தந்தனர். அம்மரக்கலத்தில் பல பண்டங்களை ஏற்றிப் பரமதத்தன் சிலருடன் புறப்பட்டான். அவன் வாணிபஞ் செய்து கொண்டே, பாண்டி நாட்டிலுள்ள ஒரு துறைமுகப் பட்டினத்தைச் சேர்ந்தான். அங்கே அவன் ஒரு வாணிபன் பெண்ணை மணஞ்செய்து கொண்டான். அவளுக்கு ஒரு பெண் குழவி பிறந்தது. அக் குழவிக்குப்

பரமதத்தன், தான் தெய்வமாகக் கொண்டு வழிபட்டு வரும் முதல் மனையின் பெயரை இட்டுச் சிறப்பாக வாழ்ந்துவந்தான்.

### நாயகன் நாயகியை வணங்கல்

பரமதத்தன் பாண்டியநாட்டிலிருப்பதைக் காரைக்காலிலுள்ள புனிதவதியார் சுற்றத்தவர் கேள்வியுற்றனர். அவர் சிலரை அனுப்பிப் பரமதத்தன் நிலையை உணர்ந்தனர். அவர் 'புனிதவதியாரைப் பரமதத்தனிடஞ் சேர்த்தல்வேண்டும்' என்று தீர்மானித்து, ஒரு சிவிகையிலே அம்மையாரை ஏற்றிப் பரமதத்தன் வாழும் பட்டினத்தை அணைந்தனர்; அணைந்து தமது வரவைப் பரமதத்தனுக்குத் தெரிவித்தனர். பரமதத்தன் அதைக் கேட்டதும், மனைவி - மகளுடன் விரைந்து வந்து புனிதவதியாரைத் தொழுதான்; தொழுது, 'உம்முடைய திருவருளால் இனிது வாழ்கிறேன்; இக் குழந்தைக்கும் உமது திருநாமத்தையே சூட்டியுள்ளேன்' என்கிறான்; அம்மையார் காலில் விழுகிறான்; எழுகிறான். இக்காட்சி கண்ட புனிதவதியார்க்கு அச்சமுண்டாயிற்று. அவர் சுற்றத்தவர்பால் ஒதுங்கி நின்றார். சுற்றத்தவர் நாணிப் பரமதத்தனைப் பார்த்து, 'பரமதத்தா! என்ன இது! உன் மனைவியை வணங்குகிறாய்?' என்று கேட்டனர். அதற்கு அவன், 'என்ன சொல்கிறீர்! இவர் மானிடம் அல்லர்; தெய்வம். இவ்வாறு கருதியே இவரை விட்டுப் பிரிந்தேன்; பின்பு பெற்ற இக்குழவிக்கு இவர் பெயரையே அணிந்தேன்; இப்பொழுது இவர் திருவடிகளிலும் பணிந்தேன்; நீரும் பணிமின்' என்றனர். அவர், 'இஃதென்ன மாயம்!' என்று திகைத்தனர்.

### பேய்வடிவம் பெறல்

புனிதவதியார் சிவபெருமான் திருவடியைப் போற்றி, ஒன்றிய சிந்தையராய், 'ஈசனே! இவன் குறித்த கொள்கை இது. இவனுக்காகத் தாங்கிய அழகு நிரம்பிய தசைப் பொதியைக் கழித்தல் வேண்டும்; உன்னைச் சூழ்ந்து, உன் தாள்கள் போற்றும் பேய் வடிவை அடியேனுக்கு அளித்தருளல் வேண்டும்' என்று இறைஞ்சினார். ஆண்டவன் திருவருள் அவ்வாறே கூடிற்று. அம்மையார் திருவருளை முன்னிட்டு, ஊன் நிறைந்த அழகை உதறினார்; எற்புடம்பானார்; மண்ணும் விண்ணும் வணங்கும் பேய் வடிவம் பெற்றார். மலர் மாரி பொழிந்தது. வானதுந்துபிகள் முழங்கின. தேவரும் முனிவரும் ஆரவாரித்தனர். சிவகணங்கள் கூத்தாடின. சுற்றத்தவர் அச்சமுற்று அம்மையாரைத் தொழுது சென்றனர்.

### பாடல் அருளல்

பேய் வடிவாகிய அம்மையார், திருவருளால் அற்புதத் திருவந்தாதியையும் , திருவிரட்டை மணிமாலையையுந் திருவாய் மலர்ந்தார். அம்மையார் உருவைக் காண்பவரெல்லாம் ஓடுவார்;

அதன் தன்மையைப் பேசுவார். அதைக் கேட்ட அம்மையார், 'அண்டர் நாயகர் என்னை அறிவாராயின், வாய்மை அறியா மக்களுக்கு யான் எவ்வுருவாக விளங்கினாலென்ன' என்று சொன்னார்.

**கயிலை அணைதல்**

'திருக்கயிலாயத்தைக் காணுதல் வேண்டும்' என்ற விருப்பம் அம்மையாருக்கு எழுந்தது. அம்மையார், மனோவேகத்தினும் அதிவேகமாக நடந்து சென்றார்; திருக்கயிலையை அணுகினார்; காலால் நடத்தலைத் தவிர்த்தார்; தலையால் நடந்தார்; மலை மீதேறினார். அப்பொழுது உமாதேவியார் அதிசயித்துச் சிவபெருமானைப் பார்த்து, 'இங்கே தலையினால் நடந்து வரும் என்புடலின் அன்பு என்னே! ' என்றார். சிவபிரான், 'உமையே! இவள் நம்மைத் துதிக்கும் அம்மை. இப்பெருமை வாய்ந்த வடிவத்தையும் நம்மை வேண்டியே பெற்றாள்' என்று அருளினார். பின்னர்ப் பேயார் சிவபெருமான் திருமுன்னே நெருங்கி வந்தார். சிவபெருமான், அவரைத் திருநோக்கஞ் செய்து, 'அம்மையே' என்று அழைத்தார். அம்மையாரும் 'அப்பா' என்று சொல்லி, ஆண்டவன் அடியில் விழுந்து வணங்கினார்.

**வேண்டுதல்**

கயிலாயபதி, பேயாரைப் பார்த்து, 'நம்பால் இங்கு வேண்டுவது என்ன?' என்று கேட்டார். அம்மையார், 'ஆண்டவனே! அடியேனுக்கு இறவாத இன்ப அன்பு வேண்டும்; பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல், என்றும் உம்மை மறவாமை வேண்டும்; ஐயன் நடம் புரியும்போது அடியேன் மகிழ்ந்து பாடி, ஐயன் திருவடியின்கீழ் இருத்தல் வேண்டும்' என்று முறையிட்டார். சிவபெருமான் திருவருள் சுரந்து, 'அம்மையே! தென்திசையில் திருவாலங்காடு என்றொரு பதி இருக்கிறது. அங்கே நாம் நடம்புரிகிறோம். அதைக் கண்டு இன்புற்று நம்மைப் பாடிக்கொண்டிருப்பாயாக' என்றருளினார்.

**திருவாலங்காடு போதரல்**

பேயார், பெருமானைப் பணிந்து, விடைபெற்றுத் திருக்கயிலையை விடுத்துத் தலையினால் நடந்து, திருவாலங்காட்டை அடைந்தார்; அங்கே ஆண்டவன் புரியுந் திருக்கூத்தைக்கண்டு தொழுதார்; 'கொங்கை திரங்கி', 'எட்டி இலவம்' என்னும் இரண்டு மூத்த திருப்பதிகங்களைப் பாடினார். பின்னர்க் காரைக்காலம்மையார் ஆண்டவன் திருவடிக்கீழ் என்றும் சிவானந்தத்தை நுகரும் பெரும்பேற்றை அடைந்தார்.

# அப்பூதியடிகள்

### திருத்தொண்டர் திருவந்தாதி

***தனமா வதுதிரு நாவுக் கரசின் சரண மென்னா***
***மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்தமிழ்க்கே***
***இனமாத் தனது பெயரிடப் பெற்றவன் எங்கள்பிரான்***
***அனமார் வயல்திங்க ளூரினில் வேதியன் அப்பூதியே.***

### திருத்தொண்டர் புராண சாரம்

***அந்தமிழ்நற் றிங்களூர் வரும்அப் பூதி***
***அருமறையோர் திருநாவுக் கரசின் நாமம்***
***பந்தரிடை எழுதக்கண் டரசும் எய்தப்***
***பணிந்துபரி கலநேடிப் படப்பை சேர்ந்த***
***மைந்தனுயிர் உயர்கதலி இலைமேல் துஞ்சும்***
***வாளரவு கவரஉடன் மறைத்தல் கேட்டுச்***
***சிந்தைமகிழ்ந் துயர்பதிக மருந்தால் தீர்த்துத்***
***திருவமுது செயஅருளைச் சேர்ந்து ளாரே.***

*__அப்பூதி அடிகள்__ திங்களூரிலே மறையவர் குலத்திலே தோன்றிவர்; காமம் கோபம் முதலிய குற்றங்களைக் காய்ந்தவர்; இல்லறத்தில் நின்றவர்; சிவபத்தி சிவனடியார் பத்திகளிற் சிறந்தவர்; திருநாவுக்கரசு சுவாமிகளிடம் பேரன்பு வாய்ந்தவர். அவ்வன்புக்கு அறிகுறியாக அவர், தம் வீட்டிலுள்ள அளவை, நிறைகோல், பிள்ளைகள், பசு, எருமை முதலியவற்றுக்கும், தாம் அமைத்த திருமடம், தண்ணீர்ப்பந்தர் முதலியவற்றுக்கும் , __'திருநாவுக்கரசு'__ என்னும் பெயரையே சூட்டி, அப்பெயராலேயே திருத்தொண்டு செய்து வந்தனர்.*

#### அப்பர் அப்பூதியடிகள் அறங் காண்டல்

*திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பழனத்தைப் பணிந்து பணி செய்து, மற்றும் பல திருப்பதிகளைத் தொழ வேண்டித் திங்களூர் வழியே சென்றார்; அங்கே ஒரு தண்ணீர்ப்பந்தரைக் கண்டார்; அதிலே தம் பெயர் எங்கும் வரையப்பட்டிருத்தலைப் பார்த்தார். அவர் அங்கிருந்தவர்களை நோக்கி, 'இப்பந்தரை இப்பெயரிட்டு அமைத்தவர் யார்?' என்று வினவினர். அவர்கள், 'அப்பூதி அடிகள்'*

என்று சொல்லி, "அவரால் அமைக்கப் பெற்றுள்ள வேறு பல அறச்சாலைகட்கும் 'திருநாவுக்கரசு' என்னும் பெயரையே அவர் சூட்டியுள்ளார்; அப்படிச் செய்வது அவரது வழக்கம்" என்றார்கள். திருநாவுக்கரசர், 'இதற்குக் கருத்தென்னை?' என்று, அவர்களை நோக்கி, 'அவர் எவ்விடத்தவர்?' என்று கேட்டார். அவர்களும், 'அப்பூதி அடிகள் இப்பதியிலுள்ளவரே. அவர் இப்பொழுதான் வீட்டுக்குப் போனார். அவர் வீடும் சேய்மையிலில்லை. அது மிக அணித்தே இருக்கிறது' என்று சொன்னார்கள்.

**வேறொரு பெயர்!**

திருநாவுக்கரசு சுவாமிகள் அவ்விடத்தினின்றும் நீங்கி, அப்பூதியடிகள் வீடு நோக்கி விரைந்து நடந்து தலைக்கடை வாயிலைச் சேர்ந்தார். அதை அறிந்த அப்பூதி அடிகள் விரைந் தோடிச் சுவாமிகளை வணங்கினார். சுவாமிகளும் நாயனாரை வணங்கினார். நாயனார் திருநாவுக்கரசரை நோக்கி, 'கருணை வடிவுடையீர்! தாங்கள் என் வீட்டுக்கு எழுந்தருளினீர். யான் செய்த தவம்' என்றார். திருநாவுக்கரசர், 'நாம் திருப்பழனத்தைத் தொழுது வழியே வந்துகொண்டிருந்தோம்; உமது தண்ணீர்ப் பந்தரைக் கண்டோம் ; உமது பிற அறங்களையுங் கேட்டோம்; உம்மைக் காண வந்தோம்' என்று சொன்னார். அதற்குமேல் திருநாவுக்கரசர், அப்பூதி அடிகளை நோக்கி, 'அடியவர் பொருட்டு நீர் தண்ணீர்ப்பந்தர் வைத் திருக்கிறீர். அதன்கண் உம்முடைய பெயரை எழுதுவதே முறை. வேறு ஒரு பெயரை எழுதிய தென்னை?' என்று கேட்டார்.

**அப்பூதி அன்பால் வெகுளல்**

அவ்வுரை கேட்ட அப்பூதியடிகள் நிலையழிந்த சிந்தைய ரானார்; ஆகி, 'நீர் நல்லது அருளிச் செய்தீர் இல்லை. பல்லவன் சமணரோடு சேர்ந்து செய்த கொடுங் கொடுஞ் சூழ்ச்சிகளை எல்லாம் திருத்தொண்டின் உறைப்பால் வென்ற ஒருவர் பெயரோ வேறொருவருடையது?' என்று வெகுண்டார்; வெகுண்டு, 'திருத்தொண்டாலே இம்மையிலும் பிழைக்கலாம்' என்று எம் போன்றவருந் தெளியத் திருவருள் புரிந்தவர் திருநாவுக்கரசர். அவர்தம் திருப்பெயரை யான் எழுதினேன்; நீர் வெம்மை மொழி கூறக் கேட்டேன். திருநாவுக்கரசர் கருங்கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடலைக் கடந்தவர். அப் பெருமான் பெருமையை அறியாதவர் இவ்வுலகத்தில் யாவருளர்? சிவ வேடந் தாங்கி இவ்வெம்மொழி பகர்ந்தீர்! நீர் எங்கே இருப்பவர்?' நீர் யாவர்? என்று கேட்டார்.

**அடியார் அன்பில் மூழ்கல்**

திருநாவுக்கரசர், அப்பூதி அடிகளின் பெருமையை உணர்ந்து, 'சமணப் படுகுழிவிட்டு ஏறச் சிவபெருமான் சூலைநோய் தந்து

ஆளப்பெற்ற தெளிவுணர்வில்லாத சிறுமையேன் யான்' என்றார். என்றதும், அப்பூதி அடிகளின் கைகள் தலைமீது குவிந்தன; கண்கள் அருவிநீர் பொழிகின்றன; உரை குழறுகிறது; உடம்பெல்லாம் மயிர்க் கூச்செறிகிறது. அடிகள் கீழே விழுந்து, சுவாமிகளின் திருவடித் தாமரையைச் சூடிக்கொண்டார். திருநாவுக்கரசர் எதிர்பணிந்து அடிகளை எடுத்தருளினார். அப்பூதி அடிகள் அருநிதியம் பெற்றவர் போல் ஆனார். ஆனந்த மேலீட்டால் அவர் ஆடுகிறார்; பாடுகிறார்; ஓடுகிறார்; இன்னது செய்வதென்றறியாது களிக்கிறார்; வீட்டுள் நுழைந்தார்; 'திருநாவுக்கரசர் வந்திருக்கிறார்' என்று மனைவி மக்களுக்குச் சொல்கிறார். அவர்களுடன் வந்து சுவாமிகளை வணங்கு கிறார். அப்பூதி அடிகள் உற்ற ஆர்வத்துக்கோர் அளவில்லை.

**அமுதாக்கல்**

அப்பூதி அடிகள், திருநாவுக்கரசரை வீட்டினுள் அழைத்துச் சென்றார்; அவர்தம் திருவடிகளை மனைவி மக்களுடன் நீரால் விளக்கினார். அந்நீரை அவர்கள் எல்லோரும் தலைமேல் தெளித்து மகிழ்வெய்தினார். பின்பு அவர்கள் உலகுய்யத் தோன்றிய சுவாமிகளைப் பீடத்திலிருத்தி வணங்கித் , 'திருவமுது செய்தருளல் வேண்டும்' என்று வேண்டினார்கள். சுவாமிகளும் உடன்பட்டார். அப்பூதி அடிகள், மனைவியாரைப் பார்த்து, ஆண்டவன் அருளால் பெறுதற்கரிய பேறு பெற்றிருக்கிறோம்' என்று சொல்ல அவரும் திருவமுது சமைக்கப் புகுந்தார்; அறுசுவைக் கறிகளாக்கி அமுதும் ஆக்கினார்; தம் புதல்வருள் மூத்த திருநாவுக்கரசரை அழைத்து, வாழைக் குருத்து அறுத்து வருமாறு தோட்டத்துக்கு அனுப்பினார்.

**குருத்தும் பாம்பும்**

மூத்த திருநாவுக்கரசர் பெற்றோர் சொற்படி தோட்டத்துக்குச் சென்று வாழைக்குருத்தை அரிந்தனர். அப்பொழுது ஒரு பாம்பு, அவர்தம் கையைத் தீண்டிச் சுற்றிக்கொண்டது. மூத்த திருநாவுக் கரசர் பாம்பை உதறிக் கீழே வீழ்த்திப் பதைபதைத்து, 'விஷ வேகந் தலைக்கேறி என்னைச் சாய்த்து விடும். அதற்குமுன் யான் வேகமாக ஓடி இக்குருத்தைக் கொடுப்பேன்; நேர்ந்ததை எவரிடமுஞ் சொல்லேன். பெரியவர் திருவமுது செய்தருளல் வேண்டும்' என்று நினைந்து, அதிவேகமாக ஓடிவந்து, குருத்தைத் தாயாரிடம் நீட்டினர். அவரது உடல் கறுத்தது; உரை தடுமாறிற்று. அவர் கீழே விழுந்தனர். விழுந்த மகனைக் கண்டு தாய் தந்தையர் இருவரும் உளம் பதைத்து, உற்று நோக்கி, 'மகன் விஷத்தால் மாண்டான்' என்றுணர்ந் தனர். இருவரும் நடுங்காது, பெரியவர்க்கு அமுது செய்விப்பதிலேயே கருத்திறுத்தினர். சவத்தைப் பாயிலே சுற்றி வீட்டின் ஒரு புறத்தில் மறைத்து வைத்தனர். பெரியவர்க்கு இது தெரியா வண்ணம் அமுது செய்விப்போம்' என்று எண்ணிச் சுவாமிகளிடம் அணைந்தனர்;

அணைந்து சுவாமிகளைப் பணிந்து, 'எங்கள் குடிமுழுதும் உய்யுமாறு திருவமுது செய்ய எழுந்தருளல் வேண்டும்' என்று வேண்டினர்.

**மூத்த குமாரர் எங்கே?**

திருநாவுக்கரசு சுவாமிகள் எழுந்து, கைகால் கழுவி, வேறொரு பீடத்தில் அமர்ந்து, திருநீறணிந்தார்; அப்பூதியடிகட்கும், அவர்தம் மனைவியார்க்குந் திருநீறு கொடுத்தார்; இளைய புதல்வர்க்குத் திருநீறளிக்கும்போது, அப்பூதியாரைப் பாத்து, 'மூத்த குமாரனையும் அழையும்' என்றார். அடிகள் நிகழ்ந்ததை விளக்கமாகக் கூறாதவராய், 'அவன் இங்கே இப்போது உதவான்' என்றார். அதைக் கேட்டதும், சுவாமிகளுக்குத் திருவருளால் ஒருவிதத் தடுமாற்றம் உண்டாயிற்று. 'இவ்வுரையை என் உள்ளந் தாங்காது. அவன் என் செய்தான்? உண்மை உரையும்' என்று சுவாமிகள் வினவினார்.

**விஷம் நீக்கல்**

அப்பூதி அடிகள், 'பெரியவர் அமுது செய்தற்கு இடையூறு நேர்ந்துவிட்டது; நிகழ்ந்ததை மறைத்தலுங் கூடாது' என்று விதிர்ப்புற்று, நிகழ்ந்ததைக் கூறினார். திருநாவுக்கரசு சுவாமிகள், 'நீர் செய்தது நன்றா யிருக்கிறது! எவரே இப்படிச் செய்தார்!' என்று சொல்லி எழுந்தார்; எழுந்துபோய்ச் சவத்தைப் பார்த்தார்; திருவருளை நினைந்தார்; 'ஒன்று கொலாம்' என்னும் திருப் பதிகத்தைப் பாடினார். விஷம் நீங்கிற்று. மூத்த திருநாவுக்கரசர் உயிர் பெற்றெழுந்தார்; எழுந்து தங் குலகுருவாகிய திருநாவுக்கரசு சுவாமிகளை வணங் கினார். திருநாவுக்கரசு சுவாமிகள் அவருக்குத் திருநீறு கொடுத்தார். நாயனாரும் நாயகியாரும், 'சுவாமிகள் அமுது செய்வதற்கு இவன் சிறிது இடையூறு செய்தான்' என்று வருந்தினார். அதை உணர்ந்த திருநாவுக்கரசு சுவாமிகள், அப்பூதி அடிகளின் வீட்டுக்குள் நுழைந்தார். அப்பூதி அடிகளும், அவர்தம் மனைவி யாரும் திருவமுது படைத்தனர். சுவாமிகள், 'அப்பூதி அடிகளே! நீரும் புதல்வர்களும் உடனிருந்து உண்ணலாமே!' என்றார். அவ்வாறே அப்பூதி அடிகளும், அவர்தம் பிள்ளைகளும் திருநாவுக் கரசருடன் அமுது செய்தார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திங்களூரிலேயே சிலநாள் தங்கி இருந்து, திருப்பழனம் போந்து, பதிகம் பாடிச் சென்றார். அப்பதிகத் தில் சுவாமிகள் அப்பூதி அடிகளைச் சிறப்பித்தார். அப்பூதி அடிகள், திருநாவுக்கரசரின் திருவடிகளை நினைந்து, தமக்குள்ள யாவும் அவர்தம் திருவடிகளுக்கு உரியனவே என்று கொண்டு, சிலநாள் வாழ்ந்து? தில்லைக்கூத்தன் திருவடியடைந்தார்.

# திருநீலநக்கர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*பூதிப் புயத்தர் புயத்திற் சிலந்தி புகலுமஞ்சி*
*ஊதித் துமிந்த மனைவியை நீப்பவுப் பாலவெல்லாம்*
*பேதித் தெழுந்தன காணென்று பிஞ்ஞகன் காட்டுமவன்*
*நீதித் திகழ்சாத்தை நீலநக் கன்னெனும் வேதியனே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*நீதிதரு மறையோர்வாழ் சாத்த மங்கை*
*நீலநக்கர் அயவந்தி நிமலர் மேனி*
*ஊதிவிழுஞ் சிலம்பிகடிந் தவளை நீத்தார்க்*
*குமியாத இடம்நாதன் உறுநோய் காட்டக்*
*காதல்மிகு மனைவியையும் மகிழ்ந்து மேவிக்*
*காழியர்கோன் அமுதுசெயக் களித்து வாழ்ந்து*
*வேதிகையில் பாணனார்க் கிடமும் நல்கி*
*விளங்குபெரு மணத்தரனை மேவி னாரே.*

சோழ நாட்டிலே சாத்தமங்கை என்றொரு பதியுண்டு. அப்பதியில் மறையவர் குலத்தில் தோன்றியவர் திருநீலநக்க நாயனார் என்பவர். அவர், ‘சிவபெருமானுக்கும் சிவனடியார்க்குந் தொண்டு செய்வது, வேதம் அறிவுறுத்தும் உண்மை’ என்ற கொள்கையுடையவர். அக்கொள்கைப் படியே அவர் நடந்துவந்தார்.

### சிலம்பியைத் துமிந் தகற்றல்

அப்பதியில் அயவந்தி என்னும் ஒரு கோயிலுண்டு. அக்கோயிலில் வீற்றிருந்தருளும் சிவபெருமானை அர்ச்சிக்கத் திருநீலநக்க நாயனார் விரும்பினார். ஒரு திருவாதிரைநாளில் மனைவியாரோடு அவர் அங்கே சென்றார். நாயனார் விதிப்படி ஆண்டவனைத் தொழுதார்; அர்ச்சித்தார்; அஞ்செழுத்தை ஓதிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் ஒரு சிலம்பி மேலே நின்றும் வழுவிச் சிவலிங்கத்தின் மீது விழுந்தது. அதை நாயனார் மனைவியார் கண்டார். குழந்தைமேல் சிலம்பு விழுந்தால், அதை எப்படி ஊதித் துமிப்பாரோ, அப்படியே சிவலிங்கத்தின்மீது விழுந்த சிலம்பியை அம்மையார் ஊதித் துமிந்தார்.

**மனைவியாரைத் துறத்தல்**

மனைவியார் செயலைத் திருநீலநக்க நாயனார் பார்த்தார்; பதை பதைத்தார்; கண்களைப் புதைத்துக்கொண்டார்; புதைத்து மனைவியாரை நோக்கி, 'உணர்வில்லாதவளே! இப்படி ஏன் செய்தாய்?' என்று கேட்டார். 'சிலம்பி சிவலிங்கத்தின்மீது விழுந்தது. அதை ஊதித் துமிந்தேன்' என்று அம்மையார் கூறினார். நாயனார், நாயகியாரது அன்பைக் கருதினாரில்லை; அவர்தஞ் செயலையே அநுசிதமாகக் கருதினார். அவர் அம்மையாரை நோக்கி, "சிலம்பியை வேறொரு கையால் நீக்கியிருக்கலாம். அதை எச்சில்பட ஊதிச் துமிந்தாய். அடாதது செய்த உன்னைத் துறந்தேன். என்னைவிட்டு நீங்குவாயாக' என்றார். அப்பொழுது மாலைக் காலம் வந்தது. அம்மையார், நாயனார் கட்டளைப்படி ஒரு வழி நீங்கினார். நேர்ந்த பழுது தீரப் பூசை செய்து முடித்து நாயனார் வீடுசேர்ந்தார். அம்மையார் வீடுநோக்க அஞ்சித் திருக்கோயிலிலேயே தங்கினார்.

**மனைவியாரின் அன்பை உணரல்**

அன்றிரவு அடியவர்க் கெளியவராகிய அயவந்திநாதர், நாயனார் கனவிலே தோன்றி, 'உன் மனைவி மெய்யன்போடு ஊதித் துமிந்த இடம் இது. இங்கே கொப்புளமில்லை. அவள் ஊதாத இடமாகிய இப்புறத்தைப் பார். கொப்புளம் எழும்பி யிருக்கிறது' என்று காட்டினார். நாயனார் விழித்து எழுந்து கனவை நினைவாக் கொண்டு திருவருளைப் போற்றுகிறார்; ஆடுகிறார்; பாடுகிறார்; அழுகிறார்.

பொழுது விடிந்தது. திருநீலநக்க நாயனார் திருக்கோயிலுக்குச் சென்றார்; ஆண்டவனைத் தொழுதார்; மனைவியாரை அழைத்து வீடு சேர்ந்தார். நாயனார் வழக்கம்போலத் திருத்தொண்டு செய்து வந்தார்.

**சாதி வேற்றுமை களைதல்**

திருநீலநக்க நாயனார், திருஞானசம்பந்த சுவாமிகளின் மாண்புகளைக் கேள்வியுற்றார். அச்சுவாமிகளைக்கண்டு தொழல் வேண்டும் என்னும் பேரவா அவருக்கு எழுந்தது. அச்சமயத்தில் ஒரு நாள் திருஞானசம்பந்தப் பெருமான் அயவந்தி அப்பரைத் தொழுது, சாத்தமங்கைக் கெழுந்தருளினார். அவருடன் திருநீலகண்ட யாழ்ப்பாணரும், அவ்யாழ்ப்பாணர் மனைவியாரும் மற்றும் பல அடியவரும் போந்தார். திருநீலநக்க நாயனார் தமது ஊரை அலங்கரித்துத் திருஞானசம்பந்தரையும் மற்றவரையும் எதிர் கொண்டார்; அவரையெல்லாம் எதிர்கொண்டு அழைத்துத் திருவமுது செய்வித்தார். அன்றிரவும் திருஞானசம்பந்தர் அவ்விடமே தங்கினார். எல்லாரும் அமுதுண்ட பின்னர்த் திருஞான சம்பந்தர் திருநீலநக்க நாயனாரை அழைப்பித்து, 'திருநீலகண்டப் பெரும்பாணர் இன்று

தங்க ஓரிடம் அளியும்' என்றார். திருநீலநக்க நாயனார் மகிழ்வெய்தி, நடுமனையில் வேதிகையின் பக்கத்தில் யாழ்ப்பாணருக்கு இடம் அளித்தார். அங்கே வேதிகையிலுள்ள நித்தியாக்கினி எழுந்து ஓங்கி நாவிட்டு முன்னிலும் பிரகாசமாக எரியலாயிற்று. அதைக் கண்டு திருநீலநக்க நாயனார் இன்புற்றார். பெரும்பாணர் விறலியாரோடு அங்கே பள்ளி கொண்டார்.

### ஞானசம்பந்தரிடம் அன்பு

பொழுது விடிந்தபின், திருஞானசம்பந்த சுவாமிகள் அய வந்திக்குப் போனார்; போய்த் திருநீலநக்கரைச் சிறப்பித்துப் பதிகம் பாடினார். சுவாமிகள் சிலநாள் அங்கிருந்து, நாயனாருக்கு விடை கொடுத்து, வேறு பதிகளுக்குச் சென்றார். திருஞான சம்பந்தரைப் பிரிந்து வாழ நாயனாருக்கு மனம் எழவே இல்லை. ஆனாலும், சுவாமிகள் கட்டளைப்படி நாயனார் சாத்தமங்கையிலே இருந்தார். அவர் மனம் திருஞானசம்பந்த சுவாமிகளிடத்திலேயே படிந்து கிடந்தது. இடை நாட்களில் நாயனார், திருஞானசம்பந்தர் போகுந் திருப்பதிகளுக்குத் தாமும்போய் அவரைக்கண்டு தொழுது வருவார்.

இவ்வாறொழுகி வந்த திருநீலநக்க நாயனார், திருஞானசம்பந்த சுவாமிகளுடைய திருமணத்தைச் சேவித்துச் சிவபிரான் திருவடி சேர்ந்தார்.

# நமி நந்தியடிகள்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*வேத மறிக்கரத் தாரூர் அரற்கு விளக்குநெய்யைத்*
*தீது செறிஅமண் கையாட் டாவிடத் தெண்புனலால்*
*ஏதம் உறுக அருகரென் றன்று விளக்கெரித்தான்*
*நாதன் எழிலேமப் பேறூர் அதிபன் நமிநந்தியே.*

### திருத்தொண்டர் புராண சாரம்

*நண்ணுபுகழ் மறையோர்வாழ் ஏமப் பேறூர்*
*நமிநந்தி யடிகள்திரு விளக்கு நல்க*
*எண்ணெய்அம ணர்கள்விலக்க நீரால் ஆரூர்*
*இலங்கும்அர னெறியாருக் கேற்று நாளில்*
*கண்ணமணர் கெடக்கண்பெற் றடிகள் வாழக்*
*காவலனால் நிபந்தங்கள் கட்டு வித்தே*
*அண்ணலருள் கண்டாரூர் அமர்ந்து தொண்டர்க்*
*காணிஎனும் அரசினருள் அடைந்து ளாரே.*

சோழநாட்டிலே ஏமப்பேறூரிலே தோன்றயவர் நமிநந்தியடிகள். அவர் அந்தணர்; வாய்மையிற் சிறந்தவர்; திருநீற்றன்பர்; இரவும் பகலும் ஆண்டவன் அடியை நினைப்பதையே பேரின்பமாகக் கொண்டவர். அவர் திருவாரூருக்குச் சென்று ஆண்டவனை வழிபடுவது வழக்கம்

### திருவிளக்குக்கு நெய் கேட்டல்

ஒருநாள் அவர் புற்றிடங் கொண்ட புனிதரைப் பணிந்து, அருகேயுள்ள அரனெறி என்னுங் கோயிலை யடைந்து திருத் தொண்டுகள் செய்தார். அங்கே தீபத்தொண்டு செய்தல் வேண்டும் என்னும் விருப்பம் அவருக்கு எழுந்தது. அவ்வேளை, மாலைக் காலமாயிருந்தமையால், அவர் வேறிடஞ் செல்ல மனங் கொண்டா ரில்லை; அருகேயிருந்த ஒரு வீட்டுக்குள் நுழைந்தார்; திருவிளக் கேற்ற நெய் கேட்டார். அவ்வீட்டிலுள்ளவர் சமணர்.

### நீரால் விளக்கெரித்தல்

சமணர் அடிகளை நோக்கி, 'கையிலே கனலுடைய கடவுளுக்கு விளக்கு எற்றுக்கு? இங்கு நெய்யில்லை. நீரை முகந்து விளக்கெரியும்'

என்றார். அவ்வுரையைக் கேட்ட நாயனார் மனஞ் சகியாதவரானார். அவர் மனவருத்தத்தோடு, சிவசந்நிதி அடைந்து, பெருமானை வணங்கி விழுந்தார். அச்சமயத்தில், 'கவலையொழி; அருகேயுள்ள குளத்து நீரை முகந்து விளக்கேற்று' என்ற ஒரு வானொலி எழுந்தது. நாயனார்க்கு வரம்பிலா இன்பமுண்டாயிற்று!

நமிநந்தியடிகள் குளத்தில் இறங்கி, நீரை முகந்து அதைத் திரியிட்ட அகலிலே வார்த்து, ஒரு விளக்கேற்றினார். அது சுடர்விட் டெரிந்தது. அடியவர் மகிழ்ந்து, கோயில் முழுவதும் தண்ணீரால் விளக்கெரித்தனர். சமணர் நாணுற்றனர்.

நமிநந்தியடிகள் நாடோறும் திருவிளக்குத் திருத்தொண்டு செய்து வரலானார். அவர், விடியுமளவும் திருவிளக்குகள் நின்றெரியும் பொருட்டு, நீர் குறையுந் தகழிகளுக்கெல்லாம் நீரை வார்ப்பார்; தம் ஊருக்குச் செல்வார்; மனையில் நியதி தவறாது சிவபிரானை அர்ச்சிப்பார்; திருவாரூரை அடைவார்; தொண்டு செய்வார்.

### பங்குனி உத்திர விழா

தண்டியடிகளால் சமணர்தம் வீறு அழிந்தது. திருவாரூர் சிவமயமாக விளங்கிற்று. நமிநந்தியடிகளின் திருத்தொண்டு குறைவற நிகழ்ந்துவரச் சோழமன்னன் அமுது படி முதலான நிபந்தங்கள் அமைத்தான். நாயனார் வீதிவிடங்கப்பெருமானுக்குத் திருவிழா நிகழ்த்த, அப்பெருமான் திருவடியை நோக்கி முறையிட்டார். ஆண்டவனருளால் பங்குனி உத்திரத் திருவிழா நன்கு நடைபெற்றது.

### நாயனார் புறக்கடையில் துயிலல்

திருவிழாவிலே ஒருநாள் சிவபெருமான் திருமணலிக்கு எழுந்தருளினார். எல்லாக் குலத்தவரும் ஆண்டவனைத் தொழுது உடன் சென்றனர். அவருடன் நமிநந்தியடிகளுஞ் சென்று, ஆண்டவன் திருவோலக்கத்தைக் கண்டு ஆனந்த முற்றனர். பொழுது போயிற்று. சிவபெருமான் திருமணலியினின்றுந் திருவாரூருக்கு எழுந்தருளினார். நாயனார் சிவபெருமானை வணங்கித் தம்மூரை யடைந்தார். அடைந்தவர் மனைக்குள் நுழைந்தாரில்லை; புறக் கடையில் துயின்றார்.

### சாதிப்புன்மை யொழித்தல்

மனைவியார் போந்து நாயனாரைப் பார்த்து, 'வீட்டுக்குள் வந்து சிவபூசை முதலியன முடித்துத் துயிலும்' என்றார். அதற்கு நாயனார், 'இறைவனார் இன்று திருமணலிக்கு எழுந்தருளினார். எல்லாச் சாதியாருடன் நானும் போனேன். பிராயச்சித்தஞ்செய்து மனைக்குள் நுழைந்து பூசை செய்தல் வேண்டும். தண்ணீர் கொண்டு வா' என்றார். அம்மையார் வீட்டுக்குள் புகுந்தார். அதற்குள் சிவபிரான் திருவருளாலோ அல்லது அயர்வாலோ நாயனாருக்கு

உறக்கம் வந்தது. சிவபெருமான் அவர் கனவிலே தோன்றி, 'திருவாரூரில் பிறந்தவர் எல்லாரும் நம் கணங்கள்; அத்தன்மையை நீ காண்பாய்' என்று அருளி மறைந்தார். உடனே நாயனார் பெருமான் துயில் நீங்கி, 'இரவு சிவபூசை செய்தேனில்லை. நான் நினைத்தது குற்றம்' என்று எழுந்தபடியே சிவவழிபாடு செய்தார்; நிகழ்ந்ததை மனைவியாருக்குச் சொன்னார். விடிந்ததும் அவர் திருவாரூரை அடைந்தார்; அங்கே எல்லோரும் சிவகணங்களாக விளங்குதலைக் கண்டார்; விழுந்து விழுந்து அவரை வணங்கினார். அவரெல்லாரும் பழையபடியே ஆயினர். அதையும் நாயனார் கண்டார். 'என் பிழை பொறுத்தருளல் வேண்டும்' என்று அவர் ஆண்டவனைத் தொழுதார்.

### தொண்டர்க்கு ஆணி

நமிநந்தியடிகள் தம் ஊரை விடுத்துத் திருவாரூரிலே குடிபுகுந்து, அடியவருக்கு வேண்டுவன எல்லாஞ் செய்து வந்தார். அவர், 'தொண்டர்க்கு ஆணி' என்று அப்பர் சுவாமிகளால் சிறப்பிக்கப் பெற்றார்.

நமிநந்தியடிகள் முறைப்படி திருத்தொண்டுகளைச் செய்து, தியாகேசப் பெருமான் திருவடி நீழலை யடைந்தார்.

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

## திருத்தொண்டத் தொகை

*வம்பறா வரிவண்டு மணநாற மலரும்*
*மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா*
*எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்*
*ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்*
*நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்*
*நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்*
*அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.*

## திருத்தொண்டர் திருவந்தாதி

*வைய மகிழயாம் வாழ அமணர் வலிதொலைய*
*ஐயன் பிரம புரத்தரற் கம்மென் குதலைச்செவ்வாய்*
*பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்*
*தையல் அருள்பெற் றனனென்பர் ஞானசம் பந்தனையே.*

*பந்தார் விரலியிர் வேள்செங்கட் சோழன் முருகனல்ல*
*சந்தா ரகலத்து நீலநக் கன்பெயர் தான்மொழிந்து*
*கொந்தார் சடையர் பதிகத்தில் இட்டடி யேன்கொடுத்த*
*அந்தாதி கொண்ட பிரானருட் காழியர் கொற்றவனே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த*
*கவுணியர்கோன் அழுதுமையாள் கருதி யூட்டும்*
*ஏழிசையின் அமுதுண்டு தாளம் வாங்கி*
*இலங்கியநித் திலச்சிவிகை இசைய ஏறி*
*வாழும்முய லகனகற்றிப் பந்தர் ஏய்ந்து*
*வளர்கிழிபெற் றரவின்விடம் மருகல் தீர்த்து*
*வீழிநகர்க் கரசெய்தி மறைக்கதவம் பிணித்து*
*மீனவன்மே னியின்வெப்பு விடுவித் தாரே.*

*ஆரெரியிட் டெடுத்தஏ டவைமுன் னேற்றி*
*ஆற்றிலிடும் ஏடெதிர்போய் அணைய ஏற்றி*

***ஓரமணர் ஒழியாமே கழுவி லேற்றி***
***ஓதுதிருப் பதிகத்தால் ஓடம் ஏற்றிக்***
***காருதவும் இடிபுத்தன் தலையில் ஏற்றிக்***
***காயாத பனையின்முது கனிகள் ஏற்றி***
***ஈரமிலா அங்கம்உயிர் எய்த ஏற்றி***
***இலங்குபெரு மணத்தானை எய்தி னாரே.***

*சோழநாட்டிலே வளஞ்சிறந்து விளங்கும் பதிகளுள் ஒன்று சீர்காழி. அதற்குப் பன்னிரண்டு திருப்பெயர்கள் உண்டு. அது கடையுகத்திலும் தோணிபோல் மிதக்கும் பெருமையுடைது.*

### சிவபாதவிருதயர் - பகவதியார் தவம்

*அத்திருப்பதியில் சிவபாதவிருதயர் என்றொரு வேதியர் இருந்தார். அவர், பகவதியார் என்ற பெண்மணியைத் திருமணஞ் செய்து இல்லறம் நடாத்தி வந்தார். இருவரும் சிவபெருமானிடத்திலும், சிவனடியாரிடத்திலும், திருநீற்றினிடத்திலும் பேரன்பு வாய்ந்தவர்.*

*அந்நாளில் தமிழ் நாட்டில் பௌத்தம் சமணம் என்னும் இரு சமயமும் முறை பிறழ்ந்த வகையில் ஆக்கம் பெற்றிருந்தன. மறை நெறியும் திருநீற்று நெறியும் அருகி நின்றன. அந்நிலை, சிவபாத விருதயருக்குத் துன்பமூட்டிற்று. அதனால் அவர் செந்நெறியை ஓம்பவல்ல ஒரு புதல்வரைப் பெற விரும்பினார். அவ்விருப்ப மேலீட்டான், அவர் சிவபெருமானை நோக்கித் தவங் கிடந்தார். அத்தவத்தின் பயனாகப் பகவதியார் கருவுற்றார்.*

### பிள்ளையார் பிறப்பு

*கோள்கள் நன்னிலையில் நிற்கும் வேளையில், திருவாதிரைத் திருநாளில், செந்நெறி தழைத்தோங்கவும், தென்னாடு சிறக்கவும், தமிழ் ஆக்கமுறவும், எதிர்காலம் நலம் பெறவும் சராசரங்க ளெல்லாம் சிவம் பெருக்கவல்ல பிள்ளையார் பிறந்தார். பிள்ளைப் பேறு குறித்துச் சிவபாதவிருதயர் செய்யத் தக்க கடமைகளைச் செவ்வனே செய்தார்.*

### பண்டையுணர் வெழல்

*பிள்ளையார் பிறையென வளர்ந்து செங்கீரை யாடினார்; சப்பாணி கொட்டினார்; பிற ஆடல்களையும் புரிந்தார். அவருக்கு மூன்றாம் ஆண்டு உற்றது. அந்நிலையில் அவருக்குப் பண்டை உணர்வு ஒவ்வொருபோது தோன்றுவதாயிற்று. தாம் சிவபெரு மானை விட்டுப் பிரிந்த உணர்வு, தமக்குள் எழும் போதெல்லாம், அவர் வெருக்கொள்வது வழக்கம்.*

### பிள்ளையார் பொய்கைக் கரையிலிருத்தல்

*சிவபாதவிருதயர் ஒருநாள் வழக்கம்போல நீராடப் போனார்; பிள்ளையார் அழுதுகொண்டே அவரைத் தொடர்ந்து சென்றார். சிவபாதவிருதயர் திரும்பிப் பார்த்து, முனிவார் போலப் பிள்ளையாரை விலக்கினார். பிள்ளையார் வீட்டிற்குத் திரும்பினா ரில்லை. அவர் கால்கொட்டித் தொடர்ந்தே சென்றார். சிவபாத விருதயர் அவரை அழைத்துக்கொண்டு போய்ப் பிரமதீர்த்தக் கரையை அடைந்தார். சிவபாதவிருதயர், பிள்ளையாரைக் கரையிலேயே நிறுத்தித் தாம் மட்டும் தீர்த்தத்திலே மூழ்கினார்; மூழ்கி அகமருஷணம் முதலியன செய்தார்.*

### பிள்ளையார் அழுதல்

*கரையிலிருந்த பிள்ளையார், தந்தையாரைக் காணாது நொடிப்போதுந் தரியாதவரானார். அச்சமயத்தில், சிவபெருமானை வழிபட்ட முன்னுணர்ச்சி அவர்பால் மூண்டெழுந்தது. பிள்ளையார் அழத்தொடங்கினார். கண்மலர்களில் நீர் ததும்புகிறது. கைம்மலர்கள் கண்களைப் பிசைகின்றன. மணியதரந்துடிக்கிறது. பிள்ளையார் அழுகிறார்; முன்னைத் தொடர்புணர்ந்தோ, பிள்ளைமையாலோ அழுகிறார்; திருத்தோணிச் சிகரம் பார்த்துப் பார்த்து 'அம்மே அப்பா' என்று அழுகிறார்.*

### அம்மையார் அமுதூட்டடல்

*தடங்கருணைப் பெருங்கடலாகிய சிவபெருமான், பிள்ளை யாரது பழந்தொண்டைக் கருதி, அவருக்குத் திருவருள் புரியத் திருவுளங் கொண்டார்; கொண்டு, உமையம்மையாருடன் மழவிடைமேல் இவர்ந்து, பொய்கைக் கரை நண்ணினார். சிவ பெருமான், உமையம்மையாரைத் திருநோக்கஞ் செய்து, 'உன் முலைப்பாலைப் பொற்கிண்ணத்திற் கறந்து இவனுக்கு ஊட்டு' என்று கூறியருளினார். உமையம்மையார் அப்படியே சிவஞானப் பாலமுதை ஊட்டிப் பிள்ளையாரின் அழுகையைத் தீர்த்தார். பிள்ளையார், தாய் தந்தையராகிய பராசக்தியாலும், பரமசிவனாலும் ஆளப்பட்டமையால், அவர்* ***ஆளுடைய பிள்ளையார்*** *ஆயினார்; சிவஞானப்பா லுண்டமையால்* ***சிவஞான சம்பந்தர்*** *ஆயினார்.*

### சிவபாதவிருதயர் முனிதல்

*சிவபாதவிருதயர் சிறிது பொழுதிலே கடமைகளை முடித்துக் கரை ஏறினார்; பேருணர்ச்சியிற் பொலிகின்ற பிள்ளையாரைப் பார்த்தார்; 'நீ எவர் பாலை உண்டாய்?' என்று வெகுண்டார்; 'எச்சில் மயங்க உனக்கு இப்பாலைக் கொடுத்தவர் யார்? காட்டு' என்று சிறிய கோல்கொண்டு ஓச்சினார்.*

### கடவுளைக் காட்டல்

*ஞானசம்பந்த வள்ளலார் கண்களின்றும் ஆனந்த அருவி பெருகத் திருக்கை விரலினாலே சுட்டித் தம்முன் காட்சியருளும் அம்மை யப்பனைத் 'தோடுடைய செவியன்' என்று பாடி, 'எனக்கு இதைச் செய்தபிரான் இவன் அன்றே' என்று காட்டினார்; அத் திருப்பதிகத்தில், பிழை செய்தவரும் தம்மைச் சரணடையின், சிவபெருமான் அவருக்குக் கருணை செய்யும் நீரார் என்னும் உண்மை விளங்க இராவணன் செயலையும், முனைப்பின்றித் தம்மை வழிபடுவோர்க்கு அப்பெருமான் அருளுந் தன்மையர் என்பது விளங்கத் திருமாலும் பிரமனும் அடிமுடி தேடியதையும், அக்காலப் பௌத்த சமண நிலைகளையும் முறையே எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது பாடல்களில் அமைத்து ஓதியருளினார்.*

### சிவபாதவிருதயர் தெளிவு

*சிவபெருமான் உமையம்மையாரோடு திருத்தோணிக்கு எழுந்தருளினார். அன்பே உருவாக விளங்கும் ஆளுடைய பிள்ளை யார் சிவபெருமானைத் தொடர்ந்து திருக்கோயிலிலுள்ளே புகுந்தார். சிவபாதவிருதயர் வியப்புற்றார்; பிள்ளையார் அருளிய திருநெறித் தமிழின் பொருளைச் சிந்தித்தார். திருஞாசம்பந்தர் கண்ட காட்சியைச் சிவபாதவிருதயர் எளிதில் காண்டல் இயலுமோ? அஃது அவருக்கு அரிதன்றோ? ஆயினும், அங்கே நிகழ்ந்ததைக் கண்டு, 'இது தோணியப்பர் திருவருள்' என்று அவர் தெளிந்தார்; தெளிந்து பிள்ளையாரைத் தொடர்ந்தார்.*

### வீதி வலம் வரல்

*இந் நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்ற அடியவர், 'இத்தகைய அற்புதம் எங்கே நடந்தது! எப்பொழுது நடந்தது!!' என்று வியந்து வியந்து, திருக்கோயிலினுள்ளே கூட்டங் கூட்டமாகக் கூடினர். திருஞாசம்பந்தர் ஆண்டவனைத் தொழுது, பதிகம் பாடித் திருக்கோயிலினின்றும் புறப்பட்டனர். சிவபாதவிருதயர், பிள்ளை யாரை எடுத்துத் தோள் மீது வைத்தனர். அடியவர் ஆர்க்கின்றனர். மறைகள் முழங்குகின்றன. பெண்மணிகள் வாழ்த்துகிறார்கள். சிவபாதவிருதயர் திருவீதி வலம் வந்து தமது இல்லம் சேர்ந்தனர்.*

### தாளம் பெறல்

*திருஞானசம்பந்தர் அன்றிரவு தோணியப்பர் நினைவுடனே துயின்றார்; காலையில் எழுந்து திருக்கோயிலுக்குச் சென்றார்; அம்மையாரைத் தொழுதார். அங்கிருந்து அவர் திருக்கோலக்கா நோக்கினார்; திருக்கோலக்காவை அடைந்து, ஆண்டவனைத் தொழுது, திருமுன்னே நின்று, திருக்கையிலே தாள ஒத்தறுத்து, 'மடையில் வாளை' என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார்.*

அப்பொழுது திருவருளால் ஐந்தெழுத்துப் பொறிக்கப்பெற்ற திருத்தாளம் பிள்ளையார் திருக்கையிலே வந்திறங்கியது. பிள்ளை யார்க்கு மகிழ்ச்சி பொங்கித் ததும்பி வழிந்தது. பிள்ளையார் தாளத்தைத் திருமுடியில் வைத்து வழுத்தினார்; ஏழிசையுந் தழைத்தோங்கப் பதிகம் பாடினார்; பின்னே சீர்காழி நோக்கி நடக்கலானார்.

**இளமைக் காட்சி வழங்கல்**

பிள்ளையார் திருப்பாதம் நோவ நடத்தலைக் கண்ட சிவபாத விருதயர், அவரைத் தோளின்மேல் ஏற்றிக்கொண்டனர். பிள்ளையார் திருத்தோணியை அடைந்து, 'பூவார் கொன்றை' என்னுந் திருப் பதிகத்தைப் பாடி, வீடு சேர்ந்தார். அங்கே அவர் சீர்காழி வாசிகளுக்குத் தமது இளமைக் காட்சியை வழங்கி இன்பூட்டி வந்தனர்.

**சீர்காழி சிவலோகம்**

பகவதியாரை ஈன்ற திருப்பதியாகிய திருநனிபள்ளியிலும், மற்றப் பதிகளிலும் உள்ள அன்பர் பலர், பிள்ளையார் பெருமை யைக் கேள்வியுற்றுக் கூட்டங் கூட்டமாகச் சீர்காழியைச் சேர்ந்து, பிள்ளையாரைப் பணிந்து வந்தனர். சீர்காழி சிவலோகம் போல் விளங்கலாயிற்று.

**அன்னையாரது திருப்பதிக் கேகல்**

திருநனிபள்ளி அன்பர்களது வேண்டுகோளுக்கிணங்கிப் பிள்ளையார் அத்திருப்பதிக்கேக உளங்கொண்டார்; தோணி யப்பரைத் தொழுது விடைபெற்றுப் புறப்பட்டார். பிள்ளையாரின் சீறடிகள் தரைமீது நடப்பதைச் சிவபாதவிருதயர் கண்டார். அத்திருவடிகளைப் பிறர் தாங்கவும் அவர் மனங்கொள்ளவில்லை. அவரே பிள்ளையாரை எடுத்துத் தோள்மீது வைத்து நடந்தார். திருநனிபள்ளி சமீபித்தது. ஞானசம்பந்தப் பெருமான், 'அதோ மலர்ச்சோலை தோன்றுகிறது. அப்பதி யாது?' என்று கேட்டார். தாதையார், 'திருநனிபள்ளி' என்றார். உடனே பெருமான், - 'காரைகள் கூகை' என்னுந் திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டே திருக்கோயிலை அடைந்தார்; திருக்கடைக்காப்பில் 'நனிபள்ளி உள்க வினைகெடுதல் ஆணை நமதே' என்று அருளிச் செய்தார். பிள்ளையார் அத்திருப்பதியிலே சிலநாள் தங்கினார்.

அவ்வேளையில் திருத்தலைச்சங்காட்டு அன்பர்கள், தங்கள் பதிக்கு எழுந்தருளுமாறு பிள்ளையாரை வேண்டினார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கிப் பிள்ளையார் அத்திருப்பதி நோக்கினார்; அங்கு ஆண்டவனைத் தொழுது பதிகம் பாடினார்; அங்கிருந்து பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, தென்திருமுல்லை வாயில் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று, ஆங்காங்கே தேவாரம்

ஓதிச் சீர்காழியை நண்ணினார். பின்னே பிள்ளையார் திரும யேந்திரப்பள்ளி, திருக்குருகாவூர் முதலிய திருப்பதிகளுக்குப் போய், ஆண்டவனை வணங்கித் தமிழ்வேதம் அருளித் திரும்பினார்.

### திருநீலகண்ட யாழ்ப்பாணர் வரவு

அந்நாளில், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், பிள்ளையார் பெருமையைக் கேட்டு, அவரைக் காணச் சீர்காழி அணைந்தார். அவருடன் அவர்தம் அருமை மனைவியாராகிய மதங்க சூளா மணியாரும் போந்தார். அவர்கள் வருதலைக் கேள்வியுற்று திருஞான சம்பந்தர், அவர்களை எதிர்கொண்டார். யாழ்ப்பாணரும், அவர்தம் அருமை மனைவியாரும் காழிவள்ளலார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். காழிப்பெருமான் அவர்களைத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் புறமுன்றில் நின்று, இறைவனைத் தொழுதார்கள். ஞானசம்பந்தர், யாழ்ப்பாணரை நோக்கி, ‘நீர் உம் இறைவற்கு யாழ் வாசியும்’ என்றார். பாணனார் யாழ் வாசித்தார். பிள்ளையார் மகிழ்வெய்தினார். மற்றவர் அதிசயித்தனர். பின்னர்ப் பிள்ளையார், திருநீலகண்ட யாழ்ப்பாணரை அழைத்துச் சென்று, தங்க இடந் தந்து விருந்தளித்தார்.

### திருநீலகண்டர் வேண்டுதல்

திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய பாக்களைக் கேட்டு வரம்பிலா இன்பமெய்தினர்; அத் திருப்பாக்களின் இசையை யாழிலே இட்டு வாசித்து மகிழ் வெய்தினர். அவர் பிள்ளையாரைப் பணிந்து, “ஐயரே! எனக்கு ஒரு வரந் தருதல்வேண்டும். அடிகளைப் பிரியாது. அடிகள் அருளும் பதிகங்களின் இசையை யாழில் இட்டு வாசித்துக்கொண் டிருத்தல் வேண்டும். இப் பெரு வாழ்வை அடியேற்கு அளித்தருள்க’ என்று வேண்டினர். அதற்கு ஞானசம்பந்தப்பெருமான் இசைந்தார். அன்று முதல் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், திருஞானசம்பந்தரைப் பிரியாது தமது தொண்டை ஆற்றி வரலானார்.

### தில்லையை வணங்கல்

ஆளுடைய பிள்ளையார்க்குத் தில்லைமீது சிந்தை நடந்தது. நடக்கவே, அவர், தந்தையாரோடும், திருநீலகண்ட யாழ்ப்பாண ரோடும் தொண்டர்கள் புடைசூழப் புறப்பட்டார்; புறப்பட்டுத் தில்லையம்பதியைச் சேர்ந்தார்; பிள்ளையார் தில்லைத் திருவெல்லையைத் தொழுதார்; திருவீதியை வணங்கினார்; திருக்கோபுரத்தைக் கும்பிட்டார்; திருமாளிகையை வலம் வந்தார்; பேரம்பலத்தைப் போற்றினார்; சிற்சபையை அடைந்தார்; தில்லைக்கூத்தனைக் கண்டார்; அனலிடைப் பட்ட மெழுகென உருகினார்; ‘கற்றாங் கெரியோம்பி’ என்னுந் திருப்பதிகத்தைப் பாடி

யருளினார். பின்னர் ஞானசம்பந்த வள்ளலார், படிப்படியாக வெளியே வந்து, தில்லையில் தங்குதற்கு அஞ்சித் திருவேட் களத்துக்குச் சென்றார்; அங்கே சிவபெருமானை வழிபட்டுப் பதிகம் பாடி எழுந்தருளி யிருந்தார். அங்கிருந்து கொண்டே அவர் தில்லை போந்து, அம்பலக்கூத்தனைக் கும்பிட்டு வருவர் ; இடையே திருக்கழிப்பாலை சென்று திரும்பினர்.

### மூவாயிரவர் சிவகணமாகத் தோன்றல்

ஒருநாள், பிள்ளையார், திருவேட்களத்தினின்றும் வழக்கம் பேலச் சிற்றம்பலம் போந்தபோது, தில்லை மூவாயிரவரும் சிவகண நாதராய் விளங்கியதைக் கண்டார். அக்காட்சியை அவர் யாழ்ப் பாணருக்குங் காட்டினர். அந்தணர் தம்மை வணங்குதற்கு முன்னமே, பிள்ளையார் அவரை வணங்கினார். பிறகு பிள்ளையார் திருக்கோயிலுட் புகுந்து, ‘ஆடினாய் நறு நெய்யொடு’ என்னுந் திருப்பதிகத்தை ஓதி, அதன்கண் தாம் அந்தணரைக் கண்டவாறு அமைத்துப் பாடினார். பிள்ளையார், தில்லைக்கூத்தனைத் தொழுது வெளியே வந்தார்.

### நீலகண்டர் அழைப்பு

அவ்வேளையில், திருநீலகண்ட யாழ்ப்பாணர், பிள்ளை யாரை வணங்கி, ‘அடிகளே! அடியேன் பிறந்த பதியாகிய திருவெருக்கத்தம் புலியூரையும், நிவாநதிக் கரையிலுள்ள பல திருப்பதிகளையுங் காணத் திருவுளம் பற்றல்வேண்டும்’ என்று வேண்டினர். ஆளுடைய பிள்ளையார், அவ் வேண்டுதலுக்கு இசைந்து, தந்தையாரோடும், அடியவரோடும் திருவெருக்கத்தம் புலியூரை அடைந்து, ஆண்ட வனைத் தொழுதார்; பின்னே, திருமுதுகுன்றஞ் சென்று, திருப் பெண்ணாகடம் போந்தார்; திருத்தூங்கானைமாடக் கோயிலை வணங்கினார்; வணங்கித் திருநெல்வாயில் அரத்துறை காண விரும்பினார்; விரும்பிச் சிவபாதவிருதயர் தோளின்மேல் இருத்தலைத் தவிர்த்தார்; சிறிய திருவடிகள் நோவப் பையப் பைய நடந்தார்; ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு, மாறன்பாடி என்னும் பதியை அணைந் தார். அப்பொழுது சூரியன் மறைந்தான். அன்றிரவு பிள்ளையார் அப்பதியிலேயே தங்கினார்.

### முத்துச்சிவிகை முதலியன பெறல்

திருநெல்வாயில் அரத்துறையில் எழுந்தருளியுள்ள சிவ பெருமான், பிள்ளையார் காலால் நடந்துவந்த வருத்தத்தைத் திருவுள்ளத்திற் கொண்டார். சிவபெருமான், ஒவ்வோர் அந்தணர் கனவிலுந்தோன்றி, ‘ஞானசம்பந்தன் நம்பால் அணைகிறான்; முத்துச் சிவிகையும், முத்துச் சின்னமும், முத்துக்குடையும் எடுத்துச் சென்று அவனுக்குக் கொடுங்கள்’ என்று அருளினார். வேதிய ரெல்லாரும் விழித்தெழுந்தனர்; எழுந்து, ஒருங்கே ஆலயத்தில்

திரண்டனர். ஆலயத்திலுள்ளவரும் அக்கனவு கண்டு எழுந்தனர். இவரும் அவரும் ஒருங்கே சேர்ந்து ஆச்சரியமுற்றனர். திருப்பள்ளி எழுச்சிக்காலம் வந்தது. அன்பர்கள் திருக்காப்பு நீக்கினார்கள். முத்துச் சிவிகையும், முத்துச் சின்னமும், முத்துக் குடையும் காணப் பட்டன. எல்லாரும் அளவிலா ஆனந்த மெய்தினர். வேதியர் வேதகோஷஞ் செய்துகொண்டு, முத்துச் சிவிகை முதலியவற்றைத் தாங்கி, மாறன்பாடிக்குப் புறப்பட்டனர். அன்றிரவு சிவபெருமான் ஆளுடைய பிள்ளையார் கனவிலுந் தோன்றி, 'நம்மாணைப்படி முத்துச்சிவிகை முதலியன உனக்கு வரும். அவைகளை ஏற்றுக் கொள்' என்று அருளிந் செய்தார். திருஞானசம்பந்தப் பெருமான் தாங்கண்ட கனவைத் தந்தையார்க்கும் மற்றவர்க்குந் தெரிவித்தார். தெரிவித்து, வெண்ணீறணிந்து அஞ்செழுத்தோதி யிருந்தார். சூரியன் உதயமானான். சிவநாம கோஷத்துடன் அரத்துறை அந்தணர் முத்துச்சிவிகை முதலியிவற்றைக் கொண்டுவந்தனர். அவர், பிள்ளையாரைக் கண்டு வணங்கி, 'இவை ஆண்டவன் திருவருள்; ஏற்றருள்க' என்று முறையிட்டனர். திருஞான சம்பந்தப் பெருமான், 'எந்தை ஈசன்' என்னும் திருப்பதிகத்தைப் பாடித் திருவருளை வியந்தார்; அருள்வடிவாகிய முத்துச் சிவிகையை வலம் வந்தார்; அதை வணங்கினார்; அதிலே ஏறியருளினார். முத்துக்குடை நிழற்றியது. முத்துச் சின்னங்கள், 'திருஞானசம்பந்தர் வந்தார்; உலகுய்யத் தோன்றிய ஒருவர் வந்தார்; பாலறாவாயர் வந்தார்; ஓதாதுணர்ந்தவர் வந்தார்; பரசமயகோளரியார் வந்தார்' என்று முழங்கின. பிள்ளையார் திருத்தொண்டருடன் திருஅரத் துறை சேர்ந்தார்; முத்துச் சிவிகை விட்டிறங்கினார்; திருக்கோயி லுள்ளே நுழைந்தார்; ஆண்டவனைத் தொழுதார்; பதிகம் பாடினார்; அப்பதியில் தங்கியிருந்தார்; இடையில் திருநெல் வெண்ணெய் முதலிய திருப்பதிகட்குச் சென்று திரும்பினார். சுவாமிகளுக்குத் திருத்தோணி நினைவு தோன்றிற்று. அதனால் அவர், அரத்துறை யடிகளை வணங்கி, விடைபெற்றுப் புறப்பட்டனர்; வழியில் திருப்பழுவூர், திருவிசயமங்கை, திருவைகா, திருப் புறம்பயம் முதலிய திருப்பதிகளுக்குப் போய், ஆண்டவனை வழி பட்டுத் திருச்சேய்ஞு லூருக்குச் சென்றனர்.

**சண்டேசுரரைச் சிறப்பித்தல்**

திருச்சேய்ஞுலூரிலுள்ள அடியவர் பிள்ளையாரை எதிர் கொண்டனர். 'திருச்சேய்ஞுலூர், சண்டேசுர நாயனார் பிறந்த திருப்பதி' என்று, பிள்ளையார் முத்துச்சிவிகையினின்றும் இறங்கி னார். அவர், தம்மை எதிர்கொண்ட அடியவருடன் கலந்து நடந்தார்; நடந்து, திருக்கோயிலுட் புகுந்தார்; புகுந்து, சிவபெரு மானைக் கண்டு தொழுதார்; திருப்திகம் பாடினார்; அத்திருப்பதிகத்தில்

சண்டேசுர நாயனார் திருத்தொண்டை அமைத்துச் சிறப்பித் தருளினார். பிள்ளையார், அத்திருப்பதியை விடுத்துத் திருப்பனந் தாள், திருப்பந்தணநல்லூர், திருவோமாம்புலியூர், திருவாழ் கொளிபுத்தூர், திருக்கடம்பூர், திருநாரையூர், திருக்கருப்பறியலூர் முதலிய திருப்பதிகளைக் கண்டு, பதிகம் பாடிச் சீர்காழியை அடைந்தார்.

### பகவதியார் வணக்கம்

பிள்ளையார், முத்துச் சிவிகையின்மேல் எழுந்தருளிவந்த அற்புதத் திருக்காட்சியைச் சீர்காழி வாசிகள் கண்டார்கள்; ஆனந்த பரவசரானார்கள். பிள்ளையார் திருக்கோயிலுட்சென்று, தோணி யப்பரைத் தொழுது வீடுசேர்ந்தார்; திருநீலகண்ட யாழ்ப் பாணரை அவர்தம் இருக்கைக்குப் போம்படி விடைகொடுத்து அனுப்பினார். பகவதியார் திருநீற்றுக் காப்புச் சாத்திப் பிள்ளையாரை வணங்கி னார். அவருக்கு அருள் புரிந்து பிள்ளையார் இருந்தார்.

### உபநயனம்

திருஞானசம்பந்தருக்கு உபநயனப் பருவம் வந்தது. வரவே, பிராமணர் சடங்குகளைச் செய்ய முற்பட்டனர். காழிப் பெருமான் வைதிகந் தழைக்க நூலணிந்தார். பிராமணர், ‘நான்மறை யோதும் உரிமையைத் தந்தோம்’ என்று மந்திரங்கள் முழங்கினர். மறைகளை யெல்லாம் ஓதாதுணர்ந்த பெருமான், அப்பிராமணருக்கு எல்லாவித மறைகளையும், அவைகளின் அங்கமாகிய பல கலைகளின் பொருளையும் அறிவுறுத்தினார். பிராமணர், ஆளுடைய பிள்ளையாரைத் திருவருட் செல்வரென வியந்து, அவரைச் சிவமே என்று கருதி, அவர் திருவடியில் விழுந்து வணங்கினர். அவர், தாம் முன் கற்ற வேதங்களையும் பிள்ளையார்பால் கேட்டு ஐயந்தீரப் பெற்றார். பிள்ளையார் அவருக்கு மந்திரங்களையும் உபதேசித்தார்; முடிவில் எல்லா மந்திரங்களுக்குந் தாயகம் பஞ்சாட்சரம் என்பதை அப்பிராமணர் உணருமாறு ‘துஞ்சலுந் துஞ்சல்’ என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார்; அதிலே, ‘வேதியர்க் கந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே’ என்று அருளிச் செய்தார். பிராமணர் மகிழ் வெய்திப் பிள்ளையாரை வணங்கிச் சென்றனர்.

### இருவர் சந்திப்பு

திருநாவுக்கரசு சுவாமிகள், திருஞானசம்பந்த சுவாமிகளின் பெருமையைக் கேள்வியுற்றார். கேள்வியுற்றதும், சுவாமிகளைக் காணுதல் வேண்டுமென்னும் பேரவா அவர் தம் உள்ளத்தில் பொங்கி எழுந்தது. அவர் சீர்காழிக்கு எழுந்தருளினர். அவர்தம் வருகையை உணர்ந்த ஆளுடையபிள்ளையார், அடியவருடன் அவரை எதிர் கொண்டார். இவரை அவர் வணங்கினார்; அவரை இவர் வணங்கி

னார்; இருவரும் திருக்கோயிலுக்குச் சென்றனர்; சென்று ஆண்டவனை வழிபட்டனர். பிள்ளையார், அப்பரைத் தமது இல்லத்துக்கு அழைத்துச் சென்று அவருக்கு விருந்து செய்தார். அப்பர் சுவாமிகள் சீர்காழியிலே சிலநாள் தங்கியிருந்தார். பின்னர், அவர் பிற திருப்பதிகளை வணங்கப் புறப்பட்டனர். திருஞான சம்பந்தர் அவருடன் சிறிது தூரம்போய் விடைபெற்றுத் திரும்பினர்.

### பலதிறப் பாமலை சூட்டல்

பிள்ளையார், சீர்காழியிலே இருந்துகொண்டு, திருமொழி மாற்று, திருமாலை மாற்று, திருவழி மொழி, திருவியமகம், திருவேக பாதம், திருவிருக்குக் குறள், திருவெழு கூற்றிருக்கை, ஈரடிமேல் வைப்பு, நாலடிமேல்வைப்பு, திருவிராகம், திருச்சக்கர மாற்று முதலிய பாமாலைகளைத் தோணியப்பருக்கு அணிந்து வரலானார். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. திருஞானசம்பந்த சுவாமிகளுக்குத் தமிழ்நாட்டிலுள்ள பல திருப்பதிகளைக் கண்டு தொழுதல் வேண்டும் என்னும் வேட்கை எழுந்தது. அவ் வேட்கையைத் தந்தையார்க்கும் மற்றவர்க்கும் அவர் தெரிவித்தார். தந்தையாராகிய சிவபாதவிருதயர் பிள்ளையாரைப் பார்த்து, ‘யான் உன்னை அருமையாகப் பெற்றேன்; உன்னைப் பிரிந்திருக்க இசையேன்; இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பயக்க வல்ல வேள்வியையும் யான் செய்தல் வேண்டும். ஆதலால் இன்னுஞ் சின்னாள் உன்னைத் தொடர்ந்தே வருவேன்’ என்றார். அதற்கு ஆளுடைபிள்ளையார் உடன்பட்டார். பிள்ளையார் தோணியப்பரைத் தொழுது, விடை பெற்று, முத்துச் சிவிகையில் ஏறினார். முத்துக்குடை நிழற்றியது. திருச்சின்னங்கள் முழங்கின. தந்தையாரும், திருநீலகண்ட யாழ்ப்பாணரும் உடன் புறப்பட்டனர். இச்சிறப்புடன் பிள்ளையார் திருக்கண்ணார் கோயிலுக்குப் போனார்; அங்கிருந்து காவிரியின் வடபாலிலே மேற்குத்திசை நோக்கினார்; நோக்கிச் சென்று, திருப்புள்ளிருக்கு வேளூர், திருநின்றியூர், திருநீடூர், திருப்புன்கூர், திருமண்ணிப்படிக்கரை, திருக்குறுக்கை, திருவன்னியூர், திருப்பந்தணநல்லூர், திருமணஞ் சேரி, திருவெதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி, திருத்துருத்தி, திருக்கோடிகா, திருக்கஞ்சனூர், திருமாந்துறை, திருமங்கலக்குடி, திருவியலூர், திருந்துதேவன்குடி, திருஇன்னம்பர், வடகுரங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு, திருநெய்த் தானம், திருமழபாடி, திருக்கானூர், திருஅன்பிலாலந்துறை, வடகறை மாந்துறை முதலிய திருப்பதிகளுக்குப் போய், அங்கங்கே தேவாரம் பாடினார்; பின்னர் மழநாட்டிற் புகுந்தார்.

### ‘முயலகன்’ என்னும் நோய் தீர்த்தல்

திருஞானசம்பந்தர், காவிரியின் வடகரையே போய், திருப் பாச்சிலாச்சிராமத்தை நோக்கினார். அங்கே கொல்லி மழவன்

என்னும் ஓர் அரசன் இருந்தனன். அவனுக்கு ஒரு புதல்வி உண்டு. அவள், 'முயலகன்' என்னும் நோயால் பீடிக்கப்பட்டாள். அதனால் அரசனுக்குக் கவலையுண்டாயிற்று. மணிமந்திர ஔடத முயற்சிகள் செய்யப்பட்டன. பயன் விளையவில்லை. கொல்லிமழவன் சைவ வழி வந்தவனாகையால், அவன் சிவசந்நிதி முன்னே தனது அருமைப் புதல்வியைக் கிடத்தினான். அவ்வேளையில் அவன் திருஞான சம்பந்தர் வருகையைக் கேள்வியுற்றான்; நகரை அன்புடன் அலங்கரித்தான்; பிள்ளையாரை எதிர்கொண்டான்; முத்துச் சிவிகை முன்னே விழுந்து வணங்கினான். பிள்ளையார் அவனுக்கு அருள் செய்தார். அவனுடன் பிள்ளையார் திருக்கோயிலுட் சென்றார்; அங்கே உணர்வழிந்து கிடந்தபெண்ணைப் பார்த்தார்; 'என்ன இது?' என்று கேட்டார். கொல்லிமழவன், வள்ளலாரை வணங்கி, "இவள் அடியேன் புதல்வி. இவளை 'முயலகன்' என்னும் வெந்நோய் பீடித்திருக்கிறது. அந்நோய் மணிமந்திர ஔடதங்களால் தீர வில்லை. அதனால் இவளைச் சிவசந்நிதி முன்னே கிடத்தியுள்ளேன்" என்றான். ஆளுடைய பிள்ளையார் சிவபெருமானைச் சிந்தித்து, 'துணிவளர் திங்கள்' என்றெடுத்து, 'மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே' என்று பாடியருளினார். உடனே அக்கன்னியின் பிணி நீங்கிற்று. கொல்லிமழவன் பெரு மகிழ்வெய்திப் புதல்வியோடும் பிள்ளையாரை வணங்கினான். பிள்ளையார் அவர்களுக்கு அருள் செய்து, அங்கே சிலநாள் தங்கி யிருந்தார்; பின்னர் அங்கிருந்து திருப்பைஞ்ஞீலி, திருஈங்கோய் மலை முதலிய திருப்பதிகளுக்குச் சென்று, கொங்குநாட்டின் மேற்பால் நோக்கிக் காவிரியின் தென்கரையே சென்று, திருக்கொடி மாடச் செங்குன்றூரைச் சேர்ந்தார்; அங்கிருந்துகொண்டே திருநணா போய்த் திரும்பினார்.

### நளிர்சுரம் போக்கல்

அந்நாளில் மாரிக்காலம் போய்ப் பனிக்காலம் வந்தது; குளிர் மிகுந்தது. நளிர்சுரத்தின் கொடுமையை அடியவர் பிள்ளையாருக்குத் தெரிவித்தனர். பிள்ளையார், 'இஃது இந்நிலத்தின் இயல்பு. இது நம்மை ஒன்றுஞ் செய்யாது' என்று, 'அவ்வினைக் கிவ்வினை' என்னுந் திருநீலகண்டத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அந்நளிர் சுரம், அந்நகரில் மட்டுமின்றி, அந்நாட்டையே விட்டகன்றது. திருஞான சம்பந்தர் சின்னாள் அப்பதியில் தங்கினார்; பின்னர் அங்கிருந்து திருப்பாண்டிக் கொடுமுடி, திருவெஞ்சமாக் கூடல், திருக்கருவூர் முதலிய திருப்பதிகளுக்குப் போய், இறைவனைப் பாடி வழிபட்டனர்.

பின்பு பிள்ளையார் கொங்குநாட்டை விடுத்தார்; மாணிக்க வெற்பு முதலிய தலங்களைத் தொழுதார். அவர், காவிரியின் தென்கரையை நோக்கிச் சென்று, திருப்பராய்த்துறை, திருவாலந்

துறை, திருச்செந்துறை, திருக்கற்குடிமாமலை, திருமூக்கீச்சரம், திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, திருத்தவத்துறை, திருப்பாற்றுறை, திருவெறும்பியூர், திருநெடுங்களம், திருக்காட்டுப்பள்ளி, திருச் சோற்றுத்துறை, திருவேதிக்குடி, திருவெண்ணி, திருச்சக்கரப்பள்ளி, திருப்புள்ளமங்கை, திருச்சேலூர், திருப்பாலைத் துறை, திருநல்லூர், திருக்கருகாவூர், திருவவளிவணல்லூர், திருப்பரிதி, நன்னியமம், திருப்பூவனூர், திருவாவூர் முதலிய திருப்பதிகளைக் கண்டு, ஆங்காங்கே திருப்பதிகம் பாடினர். மீண்டும் பிள்ளையார் திரு நல்லூருக்குப் போய்த் திருவலஞ்சுழியைச் சேர்ந்தார். அப்போது வேனிற்காலம் வந்தது.

## முத்துப்பந்தர் பெறல்

பிள்ளையார் திருவலஞ்சுழியை விடுத்துத் திருப்பழயாறை நோக்கினார்; திருவாறை மேற்றளி, திருச்சத்தி முற்றம் என்னுந் தலங்களுக்குச் சென்று, திருப்பட்டீச்சுரத்துக்குப் புறப்பட்டார். அப்பொழுது வெப்பம் அதிகமாயிருந்தது. அதைத் தணிக்க ஒரு சிவபூதம், பிள்ளையார் திருமுடிமீது முத்துப்பந்தரைப் பிடித்தது; பிடித்து, ‘இது பட்டீசர் திருவருள்’ என்று இயம்பிற்று. அவ் வுரையும் முத்துப்பந்தரும் வானத்திலே தோன்றின. ஞானப் பிள்ளையார் புளகாங்கிதங் கொண்டார்; திருவருளை வியந்தார்; பூமியிலே விழுந்து வணங்கினார். அடியவர் பந்தரின் காம்பைத் தாங்கினார். காழிப் பெருமான் திருபட்டீச்சரத்தை அடைந்து, சிவபெருமானைத் தொழுது தேவாரம் பாடினார். பிறகு பிள்ளையார் அப்பதியை விடுத்துப் புறப்பட்டு, திருவாறைவடதளி, திருவிரும் பூளை, திருவரதைப் பெரும்பாழி, திருச்சேறை, திருநாலூர் மயானம், திருக்குடவாயில், திருநறையூர், தென்திருப்புத்தூர், திருச்சிவபுரம், திருக்குடமூக்கு, திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், திருக்குடந்தைக் காரோணம், திருநாகேச்சுரம், திருவிடைமருதூர், திருக்குரங்காடு துறை முதலிய திருப்பதிகளை வணங்கிக்கொண்டு, திருவாவடுதுறை போந்து அங்கே தங்கலானார்.

## ஆயிரம் பொன் பெறல்

ஒருநாள் சிவபாதவிருதயர் பிள்ளையாரைப் பார்த்து, ‘வேள்வி செய்யும் காலம் நெருங்கலாயிற்று. அதற்குப் பொருள் தேவை’ என்றனர். திருஞானசம்பந்தர், திருக்கோயிலுட் சென்று, இறை வனுக்குத் தமிழ்மாலை சாத்தினர். சாத்தினதும், சிவபிரான் திருவருளால் ஒரு பூதம் விரைந்து வந்தது; வந்து பலிபீடத்தின் உச்சியில் ஆயிரம் பொன்கொண்ட ஒரு கிழியை வைத்தது; வைத்துப் பிள்ளையார் திருமுன்னே நின்று, ‘இது பொற்கிழி; இஃது உமக்குச் சிவபிரனால் அருளப்பட்டது’ என்று சொல்லிற்று. உடனே பிள்ளையார் திருவருளை வியந்து, பூமியில் விழுந்து வணங்கினார்.

அப்பொற்கிழியைப் பிள்ளையார் எடுத்துத் தந்தையார்க்குத் தந்து, அவரைச் சீர்காழிக்கு அனுப்பினார். பின்னே பிள்ளையார், திருவா வடுதுறையை விடுத்துத் திருக்கோழம்பம், திருவைகன் மாடக் கோயில், திருநல்லம், திருவழுந்தூர், திருத்துருத்தி, மூவலூர், திரு மயிலாடுதுறை, திருச்செம்பொன்பள்ளி, திருவிளநகர், திருப்பறிய லூர், திருவேட்டக்குடி முதலிய திருப்பதிகளுக்குப் போய், ஆங்காங்கே தமிழ் மறை ஓதித் தருமபுரத்தை அணைந்தார்.

**'யாழ்மூரி' பாடல்**

தருமபுரம், திருநீலகண்ட யாழ்ப்பாணரின் அன்னையார் பிறந்த திருப்பதி. அத்திருப்பதியிலுள்ள அடியவர் பிள்ளையாரை எதிர்கொண்டனர். யாழ்ப்பெரும்பாணர், தஞ் சுற்றத்தவரைப் பார்த்து, 'இப்பெருமான் அருளிச்செய்த திருப்பாக்களின் இசையை யான் யாழிலிட்டு வாசிக்கும் பெரும்பேறுடையேன்' என்று கூறினார். அதற்குச் சுற்றத்தவர், 'நீங்கள் இப்பேற்றை உடைமையால், உலகமெல்லாம் இசை ஓங்குக' என்றனர். அவர்தம் உரை, திருநீலகண்டப் பெரும்பாணரை நடுக்குறச் செய்தது. பாணர், ஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளிலே விழுந்து வணங்கி, 'பெருமானே! இவர் நல்லறிவு பெறுதல் வேண்டும். உலகமும் உண்மை உணர்தல் வேண்டும். இசை அளவுபடா முறையில் ஒரு திருப்பதிகம் அருளுதல் வேண்டும். அதை யான் யாழிலிட்டு வாசித்து, இசை அடங்காமையைக் காட்டும் பேறு பெறுதல் வேண்டும்' என்று வேண்டினர். அவ்வாறே பிள்ளையார், 'மாதர் மடப்பிடி' என்னுந் திருப்பதிகத்தை அருளிச்செய்தார். அதை வழக்கம்போல யாழ்ப்பெரும்பாணர் தமது யாழிலே அமைத்து வாசிக்கப் புகுந்தனர். அஃது அடங்கவில்லை. யாழ்ப்பெரும்பாணர், பிள்ளையாரைப் பணிந்து எழுந்து, "இப்பெரியவர் அருளிச்செய்த திருப்பதிகத்தின் இசையை 'ஏற்பேன்' என்று சொல்லச் செய்தது இவ் யாழன்றோ? இதை யான் தீண்டுதலுங் கூடாது" என்று அதை உடைக்க ஓங்கினர். உடனே காழி வள்ளலார், அவரைத்தடுத்து? யாழை வாங்கிக் கொண்டார். 'நீர் எதற்காக இதை உடைக்க முயன்றீர்? உமாதேவியாரோடு சிவபிரான் அளித்த திருவருளின் பெருமை இவ் யாழில் அடங்குமோ? சிந்தையிலும் அளவுபடாத ஒன்று, செய்கையில் அளவுபடுதல் உண்டோ? இக்கருவியைக் கொண்டே இயன்ற அளவு வாசியும்' என்று யாழைக் கொடுத்தார். திருநீலகண்டர், பிள்ளையாரைத் தொழுது யாழை வாங்கினர்.

திருஞானசம்பந்தர் தருமபுரத்தை விடுத்துத் திருநள்ளாற்றுக் கேகினர்;அங்கே 'போகமார்த்த பூண் முலையாள்' என்னும் திருப்பதிகத்தைப் பாடித் திருச்சாத்த மங்கைக்கு எழுந்தருளினர். அத்திருப்பதியிலுள்ள திருநீலநக்க நாயனார், நம் பெருவாழ்வை

எதிர்கொண்டார். பிள்ளையார், நாயனாரோடு அயவந்தி என்னுந் திருக்கோயிலுக்குப் போய்க் கடவுளைத் தொழுதார்; நாயனார் அழைப்புக்கிணங்கி அவர் தம் இல்லம் போந்து அமுதுண்டார். அன்றிரவு அங்கே தங்கி, அடுத்த நாள் மீண்டுந் திருக்கோயிலுக்குச் சென்று, 'திருமலர்க் கொன்றை' என்னுந் திருப்பதிகத்தை அருளிச் செய்து, அதன்கண் நாயனாரைச் சிறப்பித்துக் கூறினார். பின்னர் அவ்விடத்தினின்றும் பிள்ளையார் திருநாகைக்காரோணம், திருக் கீழ்வேளூர் முதலிய திருப்பதிகளை அடைந்து, பதிகம் பாடி, மற்றும் பல திருப்பதிகளைக் காண எழுந்தருளினார். அவ்வேளை யில் சிறுத்தொண்ட நாயனார் பிள்ளையாரை எதிர் கொண்டார். அந்நாயனார் வேண்டுகோளுக்கிணங்கி, ஞான சம்பந்தப்பெருமான், திருச்செங்காட்டங்குடிக்குப் போனார்; அங்குள்ள கணபதீச்சுரம் என்னுந் திருக்கோயிலுனுள் நுழைந்து, 'பைங்கோட்டு மலர்ப் புன்னை' என்னுந் திருப்பதிகத்தை ஓதி, அதிலே நாயனாரைச் சிறப்பித்தார்; அத்திருப்பதியில் சிலநாள் தங்கி, நாயனாரின் விருந்தினரா யிருந்தார்; அங்கிருந்து புறப்பட்டுத் திருமருகல் என்னுந் திருப்பதியைச் சேர்ந்து, இறைவனை வழிபட்டுவந்தார்.

### விடந்தீர்த்து மணஞ் செய்வித்தல்

திருமருகல் திருக்கோயிற் புறத்தே ஒரு மடம் உண்டு. அம் மடத்திலே ஒருநாள் ஒரு வணிகன் ஒரு கன்னியோடு போந்தான். அன்றிரவு அவன் அங்கே துயின்றான். அச்சமயத்தில் ஒரு பாம்பு அவனைத் தீண்டிற்று. அவன் இறந்தான். அருகிருந்த கன்னி, அவனைத் தீண்டாமலேயே கதறலானாள். அவள் கதறுதலைக் கேட்டு , மாந்திரிகர்களிற் சிலர் மனம் பொறாது ஓடிவந்தனர். அவர் மணிமந்திர ஔஷதங்களைப் பிரயோகித்துப் பார்த்தனர். விடம் இறங்கவில்லை. கன்னியானவள், 'வணிககுலமணியே! அன்னையை யும் அத்தனையும் பிரிந்தேன்; உன்னையே அடைவாகக் கொண் டேன்; உடன் போந்தேன்; நீயோ அரவால் மாண்டாய். யான் என் செய்வேன்! இவ்விடுக்கண் தீர்ப்பார் யாவர்? யான் எப்படி உயிரோடு வாழ்வேன்!' என்று புலம்பினாள். அதற்குமேல் அவள் என் செய்வாள்! 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை.' அவள் திருக் கோயிலை நோக்கி, 'ஆண்டவனே! இவ் வேழையைக் காவாயோ? பாற்கடலில் எழுந்த நஞ்சை உண்டாய்; தேவர்களைக் காத்தாய்; அரி அயனுக்கு அறியொணா மறைப்பொருளே! மன்மதனை நீறாக்கி னாய்; அவன் மனைவி வேண்ட அவனுக்கு உயிரை நல்கினாய்; காலனை உதைத்தாய்; மார்க்கண்டருக்கருள் செய்தாய்; ஏழைக் கருள் செய்யாயோ? என்னாருயிரே! அமுதே! கருணைக்கடலே! மருகற் பெருமானே!' என்று வேண்டிப் புலம்பினள். அப்புலம்பல் ஓசை, திருஞனாசம்பந்த சுவாமிகளுக்குக் கேட்டது. கருணைக்

கடலாகிய காழி வள்ளலார், அக்கன்னியின் துயர் தீர்க்க எழுந்தருளி வந்தார். அவர் அவளைப் பார்த்து, 'நீ சிறிதும் அஞ்சாதே. நிகழ்ந்ததென்னை?' என்று கேட்டனர். அவள், பிள்ளையாரை வணங்கி, 'அடிகளே! என் தகப்பன் வைப்பூருக்குத் தலைவன். அவன் தாமன் என்னும் பெயருடையவன். அவனுக்குப் புத்திரிகள் எழுவர். இவன் அவன்தன் மருமகன். மூத்த புத்திரியை இவனுக்குத் திருமணஞ் செய்விக்க என் தந்தை உறுதிமொழி கூறினான்; பின்னே வேறொருவனிடம் பெரும் பொருள் பெற்று அவளை அவனுக்குக் கொடுத்தான்; இரண்டாம் புத்திரியை இவனுக்குக் கொடுப்பதாகச் சொன்னான்; அவளையும் அய லானுக்கே கொடுத்தான்; இவ்வாறு ஏமாற்றி ஏமாற்றி மற்ற நான்கு புத்திரிகளையும் அயலாருக்கே மணஞ்செய்வித்தான். இவன் நிலை கண்ட யான், இவனோடு போந்தேன். இது தாய் தந்தையருக்குத் தெரியாது. இவனோ இங்கே பாம்பின் வாய்ப்பட்டு மாண்டான். நடுக்கடலில் கப்பல் கவிழ்ந்து விட்டது! என்னிலை இதுவாகும். சுற்றம்போல எழுந்தருளி வந்தீர்; அருள் செய்தீர்' என்று கூறினாள். திருஞானசம்பந்தர், திருமருகற் பெருமானைச் சிந்தித்து, 'சடையாய் எனுமால்' என்னுந் திருப் பதிகத்தை அருளிச் செய்தார். உடனே வணிகன் உயிர்பெற் றெழுந்தான்; எழுந்து பிள்ளையாரை வணங்கி நின்றான். அன்பர் கூட்டம் ஆரவாரித்தது. இளம் பெண் எல்லை யில்லா ஆனந்தம் பெற்றாள்; பிள்ளையாரைத் தொழுதாள். ஞான சம்பந்தப் பெருமான், அவ்விருவருக்கும் மணஞ் செய்வித்தார். பின்னே பிள்ளையார், அவருக்கு விடைகொடுத்து, அத்திருப்பதியில் எழுந்தருளியிருந்தார்.

சிறுத்தொண்ட நாயனார், திருஞானசம்பந்தர் பால் அணைந்து, மீண்டுந் தம் பதிக்கு எழுந்தருளுமாறு வேண்டினார். பிள்ளையாரும் உடன்பட்டுத் திருச்செங்காட்டங்குடிக்குச் சென்றார். அங்கே சிவபெருமான், தமது திருமருகல் திருக் கோலத்தைக் கணபதீச் சுரத்தில் காட்டி யருளினார். காழிப் பெருமான் 'அங்கமும் வேதமும்' என்னும் அருமைத் திருப் பதிகத்தை ஓதி, அங்கே தங்கியிருந்தார். சில நாள் கழிந்த பின்னர், ஆளுடைய பிள்ளையார் அத்திருப்பதியி னின்றும் புறப்பட்டார்.சிறுத்தொண்ட நாயனார் அவரைத் தொடர்ந்தே போனார். காழிப் பெருமான், நாயனாருக்கு விடையளித்துப் பல திருப்பதி களைக் கண்டு தொழுது , திருப்புகலூரை அடைந்தார்.

### பிள்ளையாரும் அப்பரும்

திருப்புகலூரில் புஷ்பத் திருத்தொண்டு செய்து, அன்புநெறி ஓம்பிவரும் முருகநாயனார், பிள்ளையாரை எதிர்கொண்டார். பிள்ளையார், அவருடன் திருக்கோயிலுக்குச் சென்று, கடவுளைத் தொழுது, திருமடத்துக்கு எழுந்தருளினார்; அங்கே முருகநாயனார்

விருந்தினராய் அமர்ந்திருத்நார்; ஒரு நாள் வழக்கம்போலத் திருக் கோயிலுக்குப் போய், முருகநாயனார் திருத்தொண்டைச் சிறப்பித்து, 'ஈசன் ஏறமர் கடவுள்' என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அவ்வேளையில், திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூரினின்றும் புறப்பட்டுத் திருப்புகலூரை நோக்கிவந்தார். அவர்தம் வருகையைக் கேள்வியுற்று ஆளுடைய பிள்ளையார் அவரை எதிர்கொண்டார். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கி, நலம் வினவிக்கொண்டனர்.

**திருவாரூர் வேட்கை**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரை நோக்கி, 'நீர் திருவா ரூரை எவ்வகையில் தொழுது உய்ந்தீர்?' என்று கேட்டனர். திருநாவுக்கரசர், தாங் கண்ட திருவாதிரைத் திருநாட் சிறப்பைத் திருப்பதிக வாயிலாக விளக்கிக் காட்டினர். திருஞானசம்பந்தருக்குத் திருவாரூர் வேட்கை எழுந்தது. அவர், அப்பர் சுவாமிகளைப் பார்த்து, 'திருவாரூரை வணங்கி, மீண்டும் உம்பால் அடைவேன்' என்று விடை பெற்றுக்கொண்டனர். திருநாவுக்கரசர் திருப்புக லூருக்கு எழுந்தருளினர்.

**திருவாரூர் தரிசனம்**

திருஞானசம்பந்தப் பெருமான், திருவிற்குடிக்குச் சென்று, இறைவனைத் தொழுதார்; அங்கிருந்து, 'பாடலநான் மறையன்' என்னுந் திருப்பதிகத்தை எடுத்து, 'ஆதிரையன் ஆரூர் அமர்ந்தானே' என்று பாடிக்கொண்டே போனார்; திருவாரூர் சமீபித்ததும் 'ஆரூர் அடைவோமே' என்று பாடித் திருவாரூர் எல்லையைச் சேர்ந்தார். அடியவர் பிள்ளையாரை எதிர்கொண்டனர். பிள்ளையார் அடியவ ருடன் திருவாரூருக்கு எழுந்தருளினார். அவர் நாடோறுந் தியாகேசப் பெருமானை வழிபட்டுப் பதிகங்கள் பாடி வந்தார்; ஆரூர் அறநெறியையும் தரிசித்து வந்தார்; இடையில் திருவலிவலம், திருக்கோளிலி முதலிய திருப்பதிகளுக்குப்போய், மீண்டும் திருவாரூரை அடைந்தார். பிள்ளையாருக்கு அப்பர் சுவாமிகளின் நினைவு தோன்றிற்று. தோன்றவே, அவர், 'பவனமாய்ச் சோடையாய்' என்னுந் திருப்திகத்தைப் பாடித் திருவாரூரை விடுத்தார்; திருப்பனை யூரைப் பணிந்து திருப்புகலூரைச் சேர்ந்தார். திருநாவுக்கரசு சுவாமிகளும், முருக நாயனாரும், பிள்ளையாரை எதிர்கொண்டனர். காழிப்பெருமான், அவருடன் கலந்து, திருக்கோயிலுள் நுழைந்தார்; ஆண்டவனைத் தொழுதார்; முருக நாயனார் திருமடத்தில் தங்கலானார். அச்சமயத்தில் திருநீலநக்க நாயனாரும், சிறுத் தொண்ட நாயனாரும் திருப்புகலூருக்குப் போய்ப் புண்ணிய மூர்த்திகளோடு கலந்துகொண்டனர்.

### அப்பருடன் நடத்தல்

*திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் மற்றும் பல திருப்பதிகளைக் காண விரும்பினர். அவர்தம் ஆணைப்படி முருகநாயனார் திருப்புகலூரிலேயே இருக்க இசைந்தார்; திருநீலநக்க நாயனாரும் சிறுத்தொண்ட நாயனாரும் தத்தம் பதிக்கு ஏக உடன்பட்டனர். பிள்ளையாரும் அப்பரும் புறப்பட்டனர். பிள்ளையார் முத்துச் சிவிகை பின்னே வர, அப்பர் சுவாமிகளுடன் நடந்தார். அப்பர் சுவாமிகள், ஆளுடைய பிள்ளையாரை நோக்கி, 'சிவ பெருமான் உமக்கு முத்துச் சிவிகை அருளியுள்ளார். அதன் மீது எழுந்தருள்க' என்றார். ஆளுடைய பிள்ளையார், 'இது, திருவருள் குறிப்புப் போலும்' என்று எண்ணி அப்பரைப் பார்த்து, 'எத்தலத்துக்கும் எனக்கு முன்னே போங்கள். யான் பின்னே வந்து சேர்வேன்' என்றார். அப்பர் சுவாமிகள் அதற்கிசைந்து அன்று முதல் அங்ஙனே செல்வாரானார்.*

### திருவீழிமிழலை அடைதல்

*அப்பர் சுவாமிகள் அடியவருடன் நடந்து திருவம்பரை அணைந்தனர். திருஞானசம்பந்தர் முத்துச் சிவிகையிலேறிப் போந்தனர். பிள்ளையார், 'அப்பர் எங்கே எங்கே' என்று வினவிக் கொண்டே திருவம்பரைச் சேர்ந்தார். இருவரும் திருக்கோயிலுக்குச் சென்றனர். அங்கே, பிள்ளையார் 'எரிதர வனக்கை' என்னுந் திருப்பதிகத்தைப் பாடி, அதில் கோச்செங்கட்சோழ நாயனாரைச் சிறப்பித்தார். பின்னர் இருவரும் திருக்கடவூருக்கேகினர்; அங்கே குங்குலியக்கலய நாயனார் விருந்தினரா யிருந்து, சிவபெருமானை வழிபட்டு உவந்தனர்; அங்கிருந்து புறப்பட்டுத் திருவாக்கூர், திருமீயச்சூர், திருப்பாம்புரம் முதலிய திருப்பதிகளைக் கண்டு தொழுது திருவீழிமிழலை யடைந்தனர். இருவரும் திருக்கோயில் போந்து பதிகம் பாடினர். திருநாவுக்கரசு சுவாமிகள் ஒரு திருமடத்தில் தங்கினர். திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் வேறொரு திருமடத்தில் தங்கினர். அங்கிருந்துகொண்டே இருவரும் பேணுபெருந்துறை, திலதைப்பதி முதலிய திருப்பதிகட்குப் போய் வந்தனர்.*

### மிழலையில் தோணிக் காட்சி

*சீர்காழிப் பிராமணர், திருஞானசம்பந்த சுவாமிகளைக் காண விரும்பித் திருவீழிமிலையை நோக்கினர். அவர் போந்து, பிள்ளையாரைப் பணிந்து, 'திருத்தோணிக்கு எழுந்தருளல் வேண்டும்' என்று வேண்டினர். அதற்குப் பிள்ளையார், 'இன்று கழித்துத் திருவீழி மிழலை ஈசனார் அருள்பெற்று, நாளைப் போவோம்' என்றார். திருத்தோணிப் பெருமான், அன்றிரவு ஆளுடைய பிள்ளையார் கனவிலே தோன்றி, 'நமது திருத்தோணிக் கோலத்தை இங்கே*

காட்டுவோம்' என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். திருஞான சம்பந்தர் விழித்தெழுந்து திருக்கோயிலுக்குப் போனார். அங்கே விண்ணிழிந்த விமானத்திலே சிவபெருமான் திருத்தோணித் திருக்கோலத்தைக் காட்டினார். பிள்ளையார், 'மைம்மருபூங் குழற்கற்றை' என்னுந் திருப்பதிகத்தை வினாவுரையாகப் பாடித் தொழுதார். பிள்ளையார், பின்னே திருமடஞ் சேர்ந்து, தம்மை அழைக்க வந்த பிராமணரைப் பார்த்து, 'தோணியப்பர் தமது அருமைத் திருக்கோலத்தை இங்கே காட்டியருளினார். நீங்கள் போங்கள்' என்று விடைகொடுத்தார். அவர் சீர்காழிக்குத் திரும்பினர்.

### காசு பெறல்

அந்நாளில் வான் பொய்த்தது. காவிரியின் வளங் குறைந்தது. எங்கும் பஞ்சம் பரவலாயிற்று. ஜீவகோடிகள் வருந்தலாயின. அப் பஞ்சம் அடியவரையுந் தீண்டிற்று. அதை யுணர்ந்த பிள்ளையாரும் அப்பரும், 'அடியவர்க்குங் கவலை நேருமோ' என்று கருதி, எள்ளுக்குள் எண்ணெயைப்போல் எங்கும் நிறைந்துள்ள ஈசனை நினைந்து கொண்டே ஆனந்த நித்திரை செய்தனர். அம்பிகை பாகர், அவர்தங் கனவிலே தோன்றி, 'இது காலபேதம். பசி நோய் உங்களைச் சிறிதும் பாதியாது. உங்களைச் சூழ்ந்துள்ள அடியவர்க்கு மன வாட்டம் உண்டாகும். அதை ஒழித்தல் வேண்டும். நாடோறும் ஆலயத்தின் கீழ்ப் பீடத்திலும், மேற் பீடத்திலும் ஒவ்வொரு பொற்காசு உங்களுக்கு வழங்குவோம். பஞ்சம் ஒழிந்தால் அவ் வழங்கலும் ஒழியும்' என்று திருவாய் மலர்ந்தருளினார். இருவரும் விழித்தெழுந்தனர்; திருக்கோயிலை அடைந்தனர்; அங்கே ஆண்டவன் அருளியவாறு கீழ்மேல் பீடங்களில் பொற்காசு இருத்தலைக் கண்டனர்; திருவருளை வியந்தனர்; அக்காசினைக் கொண்டு பறை யறைவித்துச் சிவனடியார் திருக்கூட்டங்களுக்கு அமுதூட்டி வந்தனர்.

### வட்டக் காசு

தாண்டக வேந்தர் திருமடத்தில் அடியவர் காலம் பெற அமுதுண்டு வந்தனர். பிள்ளையார் திருமடத்தில் அவ்வாறு நடப்பதில்லை. அதைக் கண்ட பிள்ளையார், சமையற்காரரை அழைத்து, 'அம்மடத்தில் அடியவர் காலத்தில் அமுதுண்கிறார். இம்மடத்தில் அடியவர் காலத்தில் அமுதுண்ணாமைக்குக் காரணம் என்ன?' என்று கேட்டார். சமையற்காரர், பிள்ளையாரை வணங்கி, 'அடிகளே! நீங்கள் தரும் காசுக்கு வணிகர் வட்டங் கேட்கிறார். அப்பர் சுவாமிகள் தருங் காசுக்கு அவர் வட்டங் கேட்பதில்லை. காலந் தாழ்ப்பதற்குக் காரணம் இதுவே' என்று கூறினார். அவ்வுரை கேட்ட பிள்ளையார், 'அப்பர் கைத்தொண்டு செய்கிறார். அதனால் அவர் வாசியில்லாக் காசு பெறுகிறார்' என்று நினைந்து, 'வாசி

தீரவே காசு நல்குவீர்' என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார்; நல்ல காசு பெற்றார். சமையல் செய்வோர் அக்காசினைக் கடைக்குக் கொண்டு போனார். வணிகர் அதைப் பார்த்து, 'இது நல்ல காசு' என்று சொல்லிப் பொருள்களை விரைந்து கொடுத்தனர். அன்று முதல் அடியவர் காலத்திலே அமுது செய்விக்கப் பட்டனர்.

### திருமறைக்காடு சேர்தல்

இவ்வாறு நிகழ்ந்துவருங் காலத்தில் மழை பெய்தது. பஞ்சம் ஒழிந்தது. இருவரும் சிலநாள் திருவீழிமிழலையில் தங்கியிருந்து, பின்னர் அத்திருப்பதியை விடுத்துத் திருவாஞ்சியம், திருத் தலையாலங்காடு, திருப்பெருவேளூர், திருச்சாத்தங்குடி, திருக் கரவீரம், திருவிளமர், திருவாரூர், திருக்காறாயில், திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைச்சினம், திருத்தெங்கூர், திருக்கொள்ளிக் காடு, திருக்கோட்டூர், திருவெண்டுறை, திருத்தண்டலைநீணெறி, திருக்களர் முதலிய திருப்பதிகளுக்குப் போய், இறைவனைத் தொழுது திருமறைக்காட்டை நோக்கினார்.

### திருக்கதவைத் திறத்தலும் அடைத்தலும்

வழக்கப்படி திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் முன்னும் பின்னுமாகத் திருமறைக்காடு சேர்ந்தனர். அங்குள்ள அடியவர், இருவரையும் எதிர்கொண்டு வரவேற்றனர். இருவரும் அடியவருடன் திருக்கோயிலுக்குச் சென்றனர்; அங்கே திருக்கதவு மூடப்பட்டிருந்ததைக் கண்டனர். 'இஃதென்ன?' என்று அடியவரைக் கேட்டனர். 'இத்திருக்கதவை வேதங்கள் பூசித்துத்திரு காப்பிட்டன. அன்றுதொட்டு இது மூடப்பட்டே இருக்கிறது. அவ்வேதத்தை ஓதித் திறப்பார் ஒருவரும் இங்கே வரவில்லை. தொழுகைக்குச் செல்வோர் வேறு ஒரு வாயில் கோலி, அதன் வழியாகச் செல்கிறார்' என்று அடியவர் கூறினர். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசு சுவாமிகளை நோக்கி, 'அப்பரே! இந்நேர் வழியாகவே நாம் போய் இறைவனைத் தொழுதல் வேண்டும். ஆதலால், இக்கதவு திறக்க நீரே பாடும்' என்றனர். திருநாவுக்கரசர் திருப்பதிகம் பாடத் தொடங்கினர். திருக்கதவு திறந்துகொள்ள வில்லை. அவர் திருக்கடைக்காப்புச் சாத்தியதும் திருக்கதவு திறந்துகொண்டது. இருவரும் உள்ளே போய், இறைவனைத் தொழுது, பாடியாடி வெளியே வந்தனர். திருநாவுக்கரசு, திருஞான சம்பந்தரைப் பார்த்து, 'அத்திருக்கதவு நாள்தோறும் திறக்கவும் அடையவும் வழக்கத்தில் வருதல் நலம். ஆகவே, இத்திருக்கதவை அடைக்க நீர் பாடும்' என்றனர். திருஞானசம்பந்தர், 'சதுரம் மறை' என்று பதிகத்தைத் தொடங்கினர். உடனே திருக்கதவு அடைந்தது. ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகத்தைப் பாடி முடித்தார். எல்லாரும் வியப்பும் ஆனந்தமும் எய்தினர். அன்று முதல் அத்திருக்

கதவு, திறக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் வருகிறது. இரு முது குரவரும் திருமடத்தை அடைந்தனர்.

### திருவாய்மூர்க் காட்சி

திருநாவுக்கரசு சுவாமிகள் நெஞ்சில், திருக்கதவு அரிதில் திறந்துகொண்டதையும், எளிதில் அடைந்துகொண்டதையும் ஒட்டி, ஒருவித சுழற்சி ஏற்பட்டது. 'நான்மறைகளும் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டன. அவைகளை வெளியிடும் உரிமைப்பாடு திருஞானசம்பந்த சுவாமிகளுக்கே உண்டு. என் போன்றவர்க்கும் அவர்க்கும் உள்ள இடையீடு பெரிது' என்று எண்ணி, அப்பர் துயிலலானார். அப்பொழுது சிவபெருமான், அப்பர் சுவாமிகள் முன்னே தோன்றி, 'நாம் வாய்மூரில் இருப்போம். அங்கே வா' என்று அருளிச் சென்றார். தாண்டகவேந்தர் எழுந்து, சிவபெருமானைத் தொடர்ந்து விரைந்துநடந்தனர். சிவபெருமான் அணித்தே காட்சி வழங்குவார் போலக் காட்டிக் காட்டிப் போனார். காழிப்பெருமான் விழித்து, 'அப்பர் எங்குற்றார்?' என்று கேட்டார். அடியவர், 'அவர் திருவாய்மூருக்கேகினர்' என்று சொன்னார். பிள்ளையார் திருவாய்மூருக்கு எழுந்தருளினார். அப்பொழுது சிவபெருமான் உமாதேவியாரோடு ஆடல் காட்டினார். பிள்ளையார், 'தளரிள வளரென' என்னுந் திருப்பதிகத்தைப் பாடிப் பெருமானைத் தொழுது இன்புற்றார். இருவரும் திருவாய்மூரில் சின்னாளிருந்து, மீண்டுந் திருமறைக்காட்டுக்குத் திரும்பினர்.

### பாண்டி நாட்டினின்றும் ஒற்றர்

அந்நாளில் பாண்டி நாட்டில் சமணம் பெருகிச் சைவம் அருகிற்று. பாண்டியனும் சமணனானான். குடிகளிற் பலரும் அவன்வழி நிற்பாராயினர். பாண்டிநாடு புரிந்த பெருந்தவத்தால், பாண்டிமா தேவியாராகிய மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் பெருமானாகிய குலச்சிறையாரும் சைவச் செந்நெறி நின்று ஒழுகி வந்தனர். அவ்விருவரும் பாண்டியநாட்டுக் குற்ற இடுக்கணை நினைந்து நினைந்து வருந்துவதுண்டு. அவர்க்குத் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளின் பேரும் புகழும் எட்டின. திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டில் எழுந்தருளி யிருத்தலும் அவர்க்குத் தெரிய வந்தது. இருவரும் அளவிலா ஆனந்தமெய்தி, ஒற்றரைத் திருமறைக்காட்டுக்கு அனுப்பினர்.

### பாண்டி நாட்டுக்கேக ஒருப்படல்

ஒற்றர் திருமறைக்காட்டைச் சேர்ந்து, பிள்ளையார் திருமடத்தைக் கண்டனர். அவர், வாயில்காப்போரைப் பார்த்து, 'நாங்கள் மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் ஏவற்படி வந்துள்ளோம். பிள்ளையாரைப் பார்த்தல் வேண்டும்' என்று சொற்றனர்.

வாயில்காப்போர், உள்ளே போய்ப் பிள்ளையாருக்கு ஒற்றர் கருத்தைத் தெரிவித்தார். பிள்ளையார் அருள்கூர்ந்து அவரை அழைத்து வருமாறு கட்டளை யிட்டார். அவ்வாறே வாயில் காப்போர், அவரை அழைத்துச் சென்றனர். ஒற்றர், ஆளுடைய பிள்ளையாரைக் கண்டு தொழுது எழுந்து நின்றனர். கருணைக் கடலாகிய காழிப்பெருமான், அவரைத் திருநோக்கஞ் செய்தார்; செய்து, 'மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் நலமா?' என்று கேட்டார். அவர் 'அவ்விருவரும் நலமே' என்றனர்; பின்னே, பாண்டிய நாட்டின் நிலைமையைச் செவ்வனே விளக்கிக் கூறினார். அவ்வேளையில் அங்கே சூழ்ந்திருந்த அடியார் கூட்டம், திருஞான சம்பந்தரைத் தொழுது, 'அடிகள் பாண்டிநாட்டுக்கு இப்பொழுதே எழுந்தருளல் வேண்டும்; சமணரை வென்று சைவத்தின் உண்மையை நிலைநாட்டல் வேண்டும்; அரசனையுந் திருநீற்று நெறியில் நிறுத்தி ஆளுதல் வேண்டும்' என்று வேண்டிற்று. அவ் வேண்டுதலுக்கு ஆளுடைய பிள்ளையார் உடன்பட்டார்.

### அப்பர் தடை

பின்னர்த் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரோடு திருக் கோயிலுக்குச் சென்றனர். அங்கே, மங்கையர்க்கரசியாரும் குலச் சிறையாரும் ஒற்றர் வாயிலாகத் தெரிவித்ததைப் பிள்ளையார் அப்பருக்குச் சொன்னார்; சொல்லிப் பிள்ளையார் பாண்டிநாடு நோக்க உறுதிகொண்டார். அது கண்ட அப்பரெம்பெருமான், 'பிள்ளையாரே! பொறும். சமணர் பொல்லாதவர்; வஞ்சனைகளை எல்லையின்றிச் செய்ய வல்லவர். கோள்நிலையும் நன்றாயில்லை. ஆதலால், இப்பொழுது பாண்டி நாட்டுக்குப் போதல் தகாது' என்று தடுத்தார். அதற்குப் பிள்ளையார், 'நாம் போற்றுவது சிவபிரான் திருவடி. நாள் கோள் நம்மை என் செய்யும்?' என்று 'வேயுறு தோளிபங்கன்' என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அதற்குமேல் அப்பர்சுவாமிகள் தடை கூறாது உடன்பட்டு, அவருக்கு முன்னே தாம் புறப்படத் துணிந்தார். திருஞானசம்பந்தப் பெருமான், அப்பரைத் தடுத்து, 'நீர் சோழ நாட்டிலே ஆண்ட வனைத் தொழுது கொண்டிரும்' என்று கைகூப்பி வணங்கினார். திருநாவுக்கரசரும் ஒருவாறு சம்மதித்தார்.

### பாண்டிநாடு நோக்கல்

ஆளுடைய பிள்ளையார் திருக்கோயிலுள் நுழைந்து, மறைக் காட்டு மணாளனை வணங்கி அருள் பெற்றார்; திருநாவுக்கரசு சுவாமிகளைத் தொழுது அவருக்கு விடை கொடுத்தார்; பின்னர் முத்துச்சிவிகையில் ஏறி, அஞ்செழுத்தை ஓதி, ஆண்டவன் திருநீற்றுத் திருமேனியை நினைந்துகொண்டே பாண்டி நாட்டை நோக்கினார்; வழியில் திருஅகத்தியன்பள்ளி, திருக்கோடிக்குழகர் கோயில்,

திருக்கடிக்குளம், திருஇடும்பாவனம், திருஉசாத்தானம் முதலிய திருப்பதிகளுக்குப் போய், இறைவனுக்குத் தமிழ்மாலை சூட்டிப் பாண்டிநாடு புகுந்து, திருநெடுங்குன்றை இறைஞ்சி, மதுரைக்கு அணித்தே சென்றார்.

**சமணர் தீக்கனாக் காணல்**

அதுகாலை எண்பெருங் குன்றங்களில் வாழும் சமணர் தீக் கனாக்கள் கண்டனர். அவர் அனைவரும் மதுரையம் பதியிலே ஒருங்கு திரண்டார்; தாம் தாம் கண்ட தீக்கனாவைப் பற்றி ஒருவரோ டொருவர் பேசிக்கொண்டனர். அவருக்குக் கவலை மேலிட்டது. அவர் தமது நிலையை அரசனுக்குந் தெரிவித்தனர். அவர் தமக்குத் தீமை விளைவது நிச்சயமெனக் கருதி உணவுங் கொள்ளாமல் துயரக் கடலில் அழுந்தினர். பாண்டிமா தேவியாரும் குலச்சிறை நாயனாரும் நற்குறிகள் கண்டார்; ஆனந்தக் கடலில் அழுந்தினார். அப்பொழுது சிலர் ஓடிவந்து, பிள்ளையார் வருகையை அவ்விருவருக்குந் தெரி வித்தனர். அந்நற்செய்தி கூறியவருக்குச் சன்மானஞ் செய்யப்பட்டது. மங்கையர்க்கரசியார், மந்திரியாரை நோக்கி, 'நமது ஆருயிர் அமுதம் வருகிறது; எதிர்கொள்க' என்று கட்டளை இட்டார். அவர் அம்மையாரை வணங்கி, 'அரசனுக்கும் உறுதியே' என்று கூறி விரைந்து சென்றார்; மதுரைக்குப் புறத்தே அணைந்தார். பாண்டிமா தேவியார், 'கோயிலுக்குப் போய் வருகிறேன்' என்று பாண்டி யனிடஞ் சொல்லி, அவ்வாறே கோயிலுக்குப் போய், ஆண்டவனை வழிபட்டுப் பிள்ளையாரின் வருகையை எதிர்நோக்கி நின்றார்.

**குலச்சிறையார் எதிர்கொள்ளல்**

முத்துச் சின்னங்கள் , 'பாலறாவாயர் வந்தார். பரசமய கோளரி யார் வந்தார்' என்று முழங்கின. ஞானசம்பந்தர் முத்துச் சிவிகையில் முத்துக்குடை நிழற்ற எழுந்தருளி வந்தனர். அப்பெருங் காட்சி கண்டு, குலச்சிறையார் ஆனந்தப் பரவசராய் விழுந்து செயலற்றுக் கிடந்தார். அடியவர், திருஞானசம்பந்தப் பெருமானை நோக்கி, 'அடிகளே! பாண்டியன் அமைச்சர் குலச்சிறையார் அடியற்ற பனைபோல் விழுந்து கிடக்கிறார்' என்று சொற்றனர். பிள்ளையார் முத்துச் சிவிகை விட்டிழிந்து, தமது அருமைத் திருக்கையால் அவரை எடுத்தார். அமைச்சர் தெளிந்தெழுந்து, கைகூப்பித் திருமுன்னே நின்றனர். முத்தமிழ்விரகர் அவரை நோக்கி, 'மங்கையர்க் கரசியாரும், நீரும் எம்பெருமான் திருவருளால் நலமோ?' என்று கேட்டனர். மந்திரியார், ஞானசம்பந்தப் பெருமான் மலரடிகளில் விழுந்து வணங்கி, "சென்ற காலத்தில் பழுதிலாத் திறம் பெற்றிருந்தேம். இனிவருஞ் சிறப்பும் உடையேம். அடிகள் எழுந்தருளியிருக்கிறீர்கள். நாங்கள் என்றுந் திருவருளுடையேம். இந்நாடும் பண்டியனும் திருநீற்றொளியால் விளங்கும் மேன்மையும் அடைந்தேம். அடிகளின்

வருகையைக் கேட்ட பாண்டிமா தேவியார், 'நமது ஆருயிர் வருகிறது; அடிபணிந்து அவ்வமுதை எதிர்கொள்க' என்று அடியேனை ஏவினர்" என்று கூறினார். கூறி உள்ளத்தெழும் பேரன்பால் மீண்டும் பெருமானைப் பணிந்தெழுந்தார்.

### மங்கையர்க்கரசியார் வணக்கம்

மதுரையம்பதி தோன்றலாயிற்று. பிள்ளையார் அடியவரை நோக்கி, 'திருவாலவாய் எங்கே?' என்று கேட்டார். அடியவர், 'இதோ கோபுரந் தெரிகிறது. இதுவே திருவாலவாய் 'என்றனர். உடனே ஞானசம்பந்த வள்ளலார் பூமியில் விழுந்தார்; இறைவனை இறைஞ்சினார்; 'மங்கையர்க்கரசி' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்; அதிலே மங்கையர்க்கரசியார் - குலச்சிறையார் திருத் தொண்டுகளைச் சிறப்பித்தார்; 'ஆலவா யாவதும் இதுவே' என்று அருளிக்கொண்டே திருக்கோயிலுட் புகுந்தார். மங்கையர்கரசியார் ஒருபுறம் ஒதுங்கி நின்றார். பிள்ளையார், 'நீலமாமிடற் றால வாயிலாய்' என்னுந் திருப்பதிகத்தைப் பாடித் திருமுன்றிலை அடைந்தார். அப்பொழுது, தலையில் கூப்பிய கையினராய் - அன்புருவினராய் - மங்கையர்க்கரசியார், பிள்ளையார் திருமுன்னே வந்தார். குலச்சிறையார், 'பிள்ளையாரைப் பணிந்து, 'இவரே பாண்டிமா தேவியார்' என்றார். என்றதும், பிள்ளையார் அம்மையாருக்கெதிரே சென்றார். பாண்டிமாதேவியார், அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினார். பிள்ளையார் அவரைத் தம் அருமைத் திருக்கரத்தால் எடுத்தருளினார். அம்மையார், 'நமது கருத்து முற்றுப்பெற்றது' என்று நினைந்து?, 'யானும் என் பதியும் செய்த தவம் என்னே! ' என்று சொல்லி மீண்டும் வணங்கினார். கருணைப் பிரகாசராகிய கவுணியர் பெருமான், 'புறச்சமயத்தார் இடையிலே சைவத் திருத்தொண்டை வழாதுசெய்து வாழ்வீர்! உம்மைக் காண வந்தனம்' என்றார். அவ்வருட் சொற்களைக் கேட்ட அம்மையார் மீண்டும் பாலறாவாயர் பாதங்களில் விழுந்து வணங்கினார். பிள்ளையார் பாண்டிமா தேவியார்க்கு விடைகொடுத் தருளினார். அவ்வேளையில் ஆலவாய்த் தொண்டர்களும் போந்து பிள்ளையாரைத் தொழுதார்கள். அவர்கட்கும் பிள்ளையார் அருள்செய்தார்; செய்து, புறத்தே சென்றார். பிள்ளையார், குலச் சிறையார் காட்டிய திருமடத்திலே எழுந்தருளி இருந்தார்.

### கண்டு முட்டு - கேட்டு முட்டு

ஞானசம்பந்தர் வருகையும், அடியவர் முழக்கமும் சமணருக்குப் பொறாமை யூட்டின. அவர் ஓரிடத்தில் திரண்டு கூடினர்; பின்னே அரசன் அரண்மனையைச் சேர்ந்தனர். மன்னன், அவர் தம் மனவாட்டத்தைக் குறிப்பால் உணர்ந்தனன்; 'என்ன செய்தி' என்று கேட்டனன். சமணர், 'சொல்லத் தகாத செய்தி' என்றனர்.

'அஃதென்ன? சொல்லும்' என்று மீண்டும் மன்னன் கேட்டனன். சமணர், 'உமது மதுராபுரியிலே இன்று சைவவேதியர் மேவினர். நாங்கள் கண்டு முட்டு' என்றனர். மன்னனும் 'யான் கேட்டு முட்டு' என்றனன். பின்னே மன்னன் வெகுண்டு, 'அவர் நம் பகுதிக்கு இன்று ஏன் வந்தார்? அவர் யார்?' என்று வினவினான். அதற்குச் சமணர், ஒரு வேதியச் சிறுவன் - சோழ நாட்டிலே சீர்காழிப் பதியிலே பிறந்தவனாம்; சூலபாணியினிடம் ஞானம் பெற்றவனாம். அவன் முத்துச் சிவிகையிலேறிக் கூட்டத்தோடு வந்திருக்கிறான். எங்களை வாதில் வெல்லப் போகிறானாம்' என்று சொற்றனர். அது கேட்ட அரசன், இதற்கு என் செய்வது?' என்று கேட்டான். பாதகர், 'அச்சிறுவனை வலிந்து துரத்துதல் கூடாது. அவன் உள்ள மடத்தில் மந்திரத்தால் தீயிட்டால் , அவன் தானே ஓடிவிடுவான்' என்றனர். அரசன் அதற்கு உடன்பட்டான். சமணர் மன்னனிடம் விடை பெற்றுச் சென்றனர்.

### அரசியார் நல்லுரை

மன்னன் கவலையோடு அந்தப்புரத்துக்குப் போனான். பாண்டி மாதேவியாரும் அங்கே போந்தார். மன்னன் ஒன்றும் பேசாது வாளா கிடந்தனன். அதைக் கண்ட அம்மையார், 'என்னுயிரே! என்ன முகவாட்டம்?' என்று கேட்டார். அதற்கு மன்னன், சமணர் கூறியதைக் கூறி, 'யான் கேட்டு மூட்டானேன்' என்றனன். அம்மையார், 'இருபாலாரும் வாது செய்தால் வெற்றி அடைவோர் பக்கஞ்சார்வதே ஒழுங்கு' என்று தேர்தல் கூறி, மகிழ்ச்சியோடு தமது மாளிகை நோக்கினார்.

குலச்சிறை நாயனார், அரச மாளிகைக்குச் சென்றார். அம்மையார் நிகழ்ந்ததை அவருக்குக் கூறினார். அமைச்சர், கைகூப்பி, 'இன்று பிள்ளையார் வரப்பெற்றோம்; அவரையும் அடியவரையும் காணவும் பெற்றோம்; இனிச் சமணர் என் செய்வாரோ அறியோம்' என்றனர். அம்மையார், அமைச்சரைப் பார்த்து, 'சமணர் பொல்லாதவர் ; வஞ்சனையே செய்யவல்லவர்; அவர் வஞ்சனையால் பிள்ளையாருக்கு யாதாயினும் தீமை நேரின், நாமும் உயிர் துறப்போம்' என்று சொன்னார்.

### மடத்தில் தீ வைத்தல்

அரசனிடம் விடைபெற்றுச் சென்ற சமணர், பிள்ளையார் எழுந்தருளி யிருந்த திருமடத்தை அணுகினர்; மந்திரஞ் செபித்தனர். மந்திரத்தால் தீப்பற்றவில்லை. அவரனைவரும் ஒன்று கூடி, 'மன்னன் இதை அறிந்தால் நம்மை மதியான்; நமது விருத்தியையுங் கெடுப்பான்' என்று நடுக்குற்றுக் கையிலே தீக்கோல்கொண்டு சென்று மடத்தில் தீயிட்டனர். தீப்பற்றியது. தீயைக் கண்ட அடியவர் அதைத் தணித்தனர். 'இது சமணரால் செய்யப்பட்டது' என்று அவர்

தெளிந்து, ஆளுடைபிள்ளையாரிடம் அதைத் தெரிவித்தனர். பிள்ளையார், 'அன்பர்கள் துயிலுந் திருமடத்திற்கோ பழுது செய்வது?' என்று இரங்கி, 'அப்பாவிகள் என் பொருட்டுச் செய்த தீங்காயினும், அது சிவனடியார்களை எய்துமோ?' என்று வருந்தி, 'அரசாட்சியின் வழுவினால், இது நேர்ந்தது' என்று கருதலானார்; உடனே 'செய்யனே திருவாலவாய்' என்னுந் திருப்பதிகத்தை எடுத்து, 'அமணர் கொளுவுஞ்சுடர் பையவே சென்று பாண்டியற் காகவே' என்று திருவாய்மலர்ந்தருளினார்.

மங்கையர்க்கரசியாரது மங்கலநாணைப் பாதுகாக்கவும், குலச்சிறை நாயனாரது அன்பை முன்னிட்டும், மன்னவன்பால் உற்ற பிழை கருதியும், அவன் மீண்டுஞ் சிவநெறி அடையப்போதலை நினைந்தும், 'பையவே சென்று' என்று பிள்ளையார் பதிகத்தில் அமைத்தார். திருப்பதிகம் முற்றுப் பெற்றது. தீ, வெப்ப நோயாகிப் பாண்டியனைப் பற்றியது.

### பாண்டியன் சுரத்தால் பீடிக்கப்படல்

பொழுது புலர்ந்தது. திருமடத்தில் நிகழ்ந்த தீச்செய்தி பாண்டிமா தேவியார்க்கும், குலச்சிறையார்க்கும் எட்டிற்று. 'நாம் உயிர் துறத்தல் வேண்டும்' என்று இருவரும் உறுதி கொண்டனர்; அந்நிலையில், தீயால் திருமடத்துக்குப் பழுது நேரவில்லை' என்ற நற்செய்தி கேட்டனர். 'சமணர் செயலால் இனி என்ன விளையுமோ?' என்று அவ்விருவரும் கலங்கிக்கொண்டிருந்தனர். அப்பொழுது மெய்காப்பாளர் ஓடிவந்து, 'மன்னர் வெஞ்சுரத்தால் பீடிக்கப் பட்டார்' என்று சொற்றனர். உடனே அம்மையாரும், அமைச்சரும் விரைந்து ஓடினர்; பாண்டியனை அடைந்தனர். மணிமந்திர ஔடதமுறைகள் முறை முறையே செய்யப்பட்டன. நோய் நீங்கவில்லை. நோய் முன்னிலும் அதிகமாகி முறுகி எழுந்தது.

### சமணரால் நோய் தீராமை

இதைக் கேள்வியுற்ற சமணர் பாண்டியனை அணைந்தனர்; தங் கையிலுள்ள மயிற்பீலிகளால் அவன் உடலைத் தடவினர். பீலிகளெல்லாம் எரிந்து கரிந்தன. பிறகு அவர், கமண்டல நீரை எடுத்து மன்னன் மீது தெளித்தனர். அந்நீர் நெருப்பிற் சொரிந்த நெய்போலாயிற்று. வெம்மை அதிகரித்துவிட்டது. பாண்டியன், சமணரைப் பார்த்து, 'நீங்கள் ஒருவரும் இங்கே நிற்றல் வேண்டா; போங்கள்' என்று கூறிச் சோர்ந்தான்.

### ஞானசம்பந்தரிடம் அடைக்கலம் புகல்

பாண்டிமாதேவியார், அமைச்சரை நோக்கி, 'நம்மை ஆட்கொள்ள எழுந்தருளிய திருஞானசம்பந்த சுவாமிகளுக்குச் சமணர் இரவு செய்த தீங்கு இப்படி முடிந்ததோ' என்று கேட்டார்.

*அதற்கு அமைச்சர் 'ஆம்' ; அத்தீங்கே இப்படி முடிந்தது. அப் பாவிகள் நோயைத் தீர்க்கப் புகுந்தால், அது முதிர்ந்தோங்காது என் செய்யும்?' என்றனர். உடனே பாண்டிமா தேவியாரும், குலச்சிறை யாரும் மன்னனை வணங்கி, 'திருஞானசம்பந்தர் எழுந் தருளியுள்ள திருமடத்தில் இச்சமணர் தீயிட்டனர். அத்தீயே வெப்பமாகி உம்மைப் பற்றி வருத்துகிறது. இவர் மந்திரங்களும், பிறவும் நோயைப் போக்குதல் அரிது. திருஞானசம்பந்தப் பெருமான், இங்கே எழுந்தருளித் திருநோக்கஞ் செய்தால், இத்தீப் பிணியும் போம்; பிறவிப்பிணியும், போம்' என்று சொன்னார். 'திருஞான சம்பந்தர்' என்னும் நாம மந்திரம் பாண்டியன் செவியில் நுழைந்ததும், அவன் சிறிது அயர்வு நீக்கப் பெற்றான். அவன், 'சமணரின் தீச்செயலே நோய்க்கு மூலம் போலும்' என்று எண்ணலானான்; எண்ணித் தன் பக்கத்தே நிற்கும் அம்மையாரையும் அமைச்சரையும் நோக்கி, 'நீர் விரும்பின், திருஞானசம்பந்த சுவாமிகளை அழைத்து வாரும். என் நோய் தீர்ப்பார் யாரோ, அவர் பக்கம் யான் சேர்வேன்' என்றான். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் ஆனந்தமெய்தி, ஆளுடைப் பிள்ளையார் எழுந்தருளியுள்ள திருமடத்தை அடைந்தனர்; அடைந்து, அவருடைய பாத தாமரைகளில் விழுந்து, 'அடைக்கலம்; அடைக்கலம்' என்று திருவடிகளைப் பற்றிக் கொண்டனர். திருஞானசம்பந்தர், 'ஏதாயினுந் தீங்குண்டோ?' என்று கேட்டனர். அவர், பாண்டியனுக்கு நிகழ்ந்ததை விளக்கிக் கூறி, அடிகள் எழுந்தருளிச் சமணரை வென்றருளினால், மன்னன் உயிரும் உய்யும்; எங்கள் உயிரும் உய்யும்' என்று இரங்கினர். பிள்ளையார் இருவரையும் நோக்கி, 'நீங்கள் அஞ்சவேண்டா. சமணரை வென்று, பாண்டியனைத் திருநீறிடச் செய்வோம்' என்று அருள் செய்தார்.*

### ஞானசம்பந்தர் ஆண்டவனிடம் விடை பெறல்

*திருஞானசம்பந்தர், 'சிவபெருமான் திருவுள்ளக்குறிப்பை அறிதல் வேண்டும்' என்று உடனே திருக்கோயிலுக்குச் சென்றனர்; அங்கே 'சமணருடன் வாது செய்யத் திருவுள்ளமோ' என்று, 'காட்டுமாவதுரித்துரி' என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார்; தொடர்ந்து, 'வேத வேள்வியை' என்னுந் திருப்பதிகத்தை ஓதினர்; ஆண்டவன் திருஉள்ளக் குறிப்பை உணர்ந்து மகிழ்வெய்தினர்.*

*பின்னர் பிள்ளையார், பாண்டியன் அரமனை நோக்கினார்; குலச்சிறையார் முன்னே சென்றார். மங்கையர்க்கரசியார் பின்னே வந்தார். குலச்சிறையார் விரைந்து சென்று, பிள்ளையார் வரவைப் பாண்டியனுக்குத் தெரிவித்தார். அவன் சிறிது துயர் நீங்கப் பெற்றான். அவன், தன் முடியின் பக்கத்திலே ஒரு பொன் பீடத்தை இடுமாறு சொல்லவும் வல்லவனானான். பாண்டியன் கட்டளைப்படி, குலச்சிறையார், சுவாமிகளை மீண்டும் எதிர்கொண்டார்.*

### மன்னனை மயக்கல்

*சமணர், இந் நிகழ்ச்சிகளைக் கண்ணுற்றுக்கொண் டிருந்தனர். அவர், 'மன்னன் நமது சமயத்தை நிலைநிறுத்தும் முறை நன்று! நன்று!!' என்று மன்னனை நோக்கி, 'உமது அறநெறியை நீரே காத்தருளல் வேண்டும். சிறுவரை இங்கே வரவழைத்தீர். நோயைத் தீர்க்கும் பொறுப்பை இருவருக்கம் வழங்குக. நோயை முற்றிலும் அவர் தீர்த்தாலும், நாங்கள் தீர்த்ததாகச் சொல்லுதல் வேண்டும்' என்று முறையிட்டனர். அதற்கு மன்னன், 'நான் வஞ்சகம் பேச மாட்டேன். நீங்கள் இருவரும் உங்கள் தெய்வ வலிமையால் என் நோயைத் தீரும்' என்றனன். சமணர் மனம் சோர்வுற்றனர்.*

### ஞானசம்பந்தர் பாண்டியனைக் காண்டல்

*சமண இருளழிக்க எழுந்த சிவபானு - ஞானவள்ளல் - முத்துச் சிவிகையில் எழுந்தருளி வந்தனர். அவர், முத்துச் சிவிகை விட்டிறங்கி, அரமனைக்குள் நுழைந்தனர். பாண்டியன், அவரைப் பார்த்துக் கைகூப்பித் தன் முடியின் பக்கத்திலுள்ள பொன் பீடத்தைக் காட்டி னான். வள்ளலார் அதிலே அமர்ந்தார். சமணர் திகிலடைந்தனர்.*

### ஞானசம்பந்தரது அஞ்சாமை

*பாண்டியன் பாலறாவாயரைக் கண்டதும், நோய், சிறிது நீங்கப்பெற்றான். அவன் பிள்ளையாரை நோக்கி, 'உமது பதி யாது?' என்று வினவினன். சுவாமிகள், 'பிரமனூர் வேணுபுரம்' என்னுந் திருப்பதிகத்தைப் பாடி, 'கழுமலம் நாம் பரவும் ஊரே' என்று அருளினார். சூழ்ந்து நின்ற சமணர், மனம் பொறாது, பொங்கி எழுந்து, தமது நூல்களில் உள்ளவற்றை எடுத்துச் சொல்லி வீறிட்டனர். பிள்ளையார், அமைதியாக அவரைப் பார்த்து, 'பொருள் நிலையை முறைப்படி பேசுங்கள்' என்றார். சமணர், வடவைபோல் சீறி, வாயில் வந்ததைப் பிதற்றிப் பிள்ளையாரை நெருங்கினர். அக்காட்சி, மங்கையர்க்கரசியாரைத் திடுக்கிடச் செய்தது. அம்மையார் நடுக்குற்றார்; பாண்டியனைப் பார்த்தார்; 'ஞானசம்பந்தப் பிள்ளையார் இளந்திருமேனி உடையவர். இவரோ பலர்; திண்ணர். உமது தீப் பிணியைத் தீர்க்கப் பிள்ளையாரை விடும். பின்பு சமணர் வல்லவராயின், வாதஞ்செய்வாராக' என்று விண்ணப்பித்தார். அதற்கு மன்னன் அம்மையாரை நோக்கி, 'நீ வருந்தாதே. இனி என்ன வாது இருக்கிறது! என்று சொல்லிச் சமணரைப் பார்த்து, 'நீங்களும் இவரும் எனது நோயைத் தீர்த்து, உங்கள் தெய்வத் தன்மையை நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்' என்று சொன்னான். அப்பொழுது, ஞானசம்பந்த வள்ளலார், அம்மையார் நிலையை உணர்ந்து, 'மானினேர் விழிமாதராய்' என்னுந் திருப் பதிகத்தை எடுத்து, "இந்த 'ஈனர்கட் கெளியே னலேன் திருஆலவாய் அரன் நிற்கவே'" என்று அருளினார்.*

### சமணர் நோய் தீர்க்கப் புகல்

பாண்டியன் , சமணரை நோக்கி, ‘எனக்குற்ற வெப்பத்தை நீங்கள் இகலித் தீருங்கள். நோய் தீர்த்தவர் வென்றவ ராவர்’ என்று கூறினன். உடனே சமணர், ‘எங்கள் தெய்வ வல்லமையால் நாங்கள் இடப்பக்கத்து நோயைத் தீர்ப்போம்’ என்று பாண்டினை அணுகினர். அவர், அருகநாமத்தை முழக்கிப் பீலியினால் இடப் பாகத்தைத் தடவினர். வெப்பம் முன்னிலும் அதிகமாகிக் கொதித் தெழுந்து வருத்தலாயிற்று.

### ஞானசம்பந்தர் நோய் தீர்த்தமை

பாண்டியன், ஆற்ற முடியாதவனாய், ஞானசம்பந்தரைப் பார்த்தான். பெருமான், ஆலவாய்ச் சொக்கனை நினைந்து, ‘மந்திரமாவது நீறு’ என்னும் திருப்பதிகத்தை யோதி, திருநீறு கொண்டு, அரசன் வலப்பக்கததைத் தடவி அருளினார். தடவியதும், வலப்பக்கம் நோய் நீங்கிப் பொய்கை போலக் குளிர்ந்தது. ஆனால் அவ்வலப்பக்க நோய், இடப்பக்கத்தில் புகுந்து பெருகலாயிற்று. சமணர்தம் பீலிகள் எரிந்து கரிந்தன. வெப்பு அலைபோல் வீசிற்று. அனல் சமணரையும் தாக்கிற்று. அவர் தாங்க முடியாது ஒதுங்கினர். பாண்டியன், ‘இஃதென்ன! நரகத் துன்பம் ஒரு பக்கம்; வீட்டின்பம் மற்றொரு பக்கம்’ என்று நொந்தான். அவன், சமணரைப் பார்த்து, ‘நீங்கள் தோற்றீர்கள்; போங்கள்’ என்று கடிந்தான். பின்னே, அவன் திருஞானசம்பந்தரை நோக்கி , ‘அடிகளே! இடப்பக்கத்துக்கும் அருள் செய்யும்’ என்று வேண்டினான். கவுணியர் பெருமான், திருநீறு கொண்டு, அப்பக்கத்தையுந் தடவினார். அதுவும் குளிர்ந்தது. பாண்டியன் உய்ந்தான். மங்கையர்கரசியாரும் குலச்சிறையாரும் உற்ற மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. அவ்விருவரும், கருணை வள்ளலார் திருவடிகளில் விழுந்து விழுந்து வணங்கி, ‘நாங்கள் பெருமை யடைந்தோம்; பெறுதற்கரிய பிறவியை இன்றே பெற்றோம். எங்கள் வேந்தரும் பிறவாமேன்மையைப் பெற்றார்’ என்று மொழிந்து, இன்பக் கடலில் தோய்ந்தனர். பாண்டியனும் எழுந்து, ‘நான் உய்ந்தேன்’ என்று பரசமய கோளரியாரைப் பணிந்தான்.

### பாண்டியன் மனம் மாறல்

சமணர், பிள்ளையார் திறத்தைக் கண்டனர்; விழித்தனர்; ‘இனித் தர்க்க வாதத்தை விடுதல் வேண்டும். அதனால் இப் பிள்ளையை வெல்லுதல் முடியாது. அனால் புனல் வாதங்களால் வெல்ல முயலுதலே தகுதி’ என்று சிந்திக்கலாயினர். பிள்ளையார் சமணரை நோக்கி, ‘என்ன சிந்தனை? உங்கள் தத்துவங்களைப் பேசுங்கள்’ என்றார். சமணர், ‘இனித் தர்க்க வாதம் வேண்டுவ தில்லை. நமது சமய உண்மைகளை செயலில் நிறுத்திக் காட்டுவதே சிறப்பு’ என்றுரைத்தனர். அப்பொழுது மன்னன், சமணரைப்

பார்த்து, 'எனக்குற்ற நோயை நீக்க நீங்கள் முயன்றீர்கள்; வெற்றி பெற்றீர்களில்லை. இனி உங்களுக்கு என்ன வாது!' என்று கேட்டனன். 'என்ன வாது?' என்பதைச் சமணர் வேறு வழியாகக் கொண்டனர். அவர் அதை இழிவுரையாக் கொள்ளாது, நேராகக் கொண்டனர். கொண்டு, 'நாங்கள் இருவேமும் எங்கள் சமய உண்மைகளை ஏட்டிலெழுதி நெருப்பிலிடுவோம். எந்த ஏடு வேவாமலிருக்கிறதோ, அந்த ஏட்டிற்குரியவர் வெற்றி பெற்றவராவர்' என்று முழங்கினர். அதற்குப் பாண்டின் பதில் சொல்வதற்குள், பாலறாவாயர், 'வேந்தன் முன்னிலையில் நீங்கள் சொல்லியவாறே செய்வோம்' என்று சமணரைப் பார்த்துக் கூறினர்.

**அனல் வாதம்**

பாண்டியன் ஆணைப்படி, அவன் முன்னிலையில் எரி வளர்க்கப்பட்டது. திருஞானசம்பந்தர் தாம் பாடிய திருமுறைகளை எடுத்தனர்; கயிற்றை அவிழ்த்தனர்; ஏடுகளை மறித்தனர்; 'போக மார்த்த பூண்முலையாள்' என்னும் திருநள்ளாற்றுப் பதிகம் கிடைத்தது. பெருமான், அத்திருப்பதிகத்தைத் திருக்கரத்திலே தாங்கினார்; அதற்கு ஆக்கந்தேடத் 'தளிரிள வளரொளி' என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார்; 'நள்ளாறர் தம் நாமமே மிளரிள வளரெரி இடில் இவை பழுதிலை மெய்ம்மையே' என்று ஓதி, அதை நெருப்பிலிட்டார். அஃது அழியாது பச்சைப் பசேலென விளங்கிற்று. சமணரும் தம் சமய உண்மையை ஏட்டில் எழுதினர்; கவலையுடன் அதை நெருப்பிலிட்டனர். இட்டதும், அவ்வேடு எரிந்து சாம்பராயிற்று. திருஞானசம்பந்தர், குறித்த நாளிகையில், ஏடுபழுதுறாமை கண்டு, அதை எடுத்தார். அதன்பால் பசுமையும் புதுமையும் அதிகமாக விளங்கின. திருஞானசம்பந்தப் பெருமான், அவ்வேட்டினை எல்லாருக்குங் காட்டினார். காட்டிப் பழையபடி அதைத் திருமுறையிலே கோத்தருளினார். அதுகண்ட மன்னன் வியப்படைந்தான். அவன் சமணரை நோக்கி, 'உங்கள் ஏட்டை எடுங்கள்' என்றான். அவர் ஏட்டை எடுக்க நெருங்கினர். நெருப்பு கொழுந்துவிட்டெரிந்தது. மன்னர், தண்ணீர் கொண்டு எரியைத் தணிவித்தான். சமணர் ஏட்டைத் தடவித் தடவிப் பார்த்தனர். அவர் என்ன கண்டார்? சாம்பரையும் கரியையுமே கண்டார். அவர் வேறென்ன காணவல்லார்! அவர் மனம் வருத்தித் திகைத்தார்; சாம்பரைப் பிசைந்து பிசைந்து பார்த்தார்; தூற்றித் தூற்றிப் பார்த்தார். அரசனுக்குச் சிரிப்பு வந்தது. அவன் சிரித்துச் சமணரைப் பார்த்து, 'இன்னும் நன்றாக அரித்து அரித்துப் பாருங்கள்; பொய்யை மெய்யாக்கப் புகுந்தவர்களே! போங்கள்; போங்கள்; முன்னுந் தோற்றீர்கள்; இப்பொழுதும் தோற்றீர்கள். இன்னுமா தோற்கவில்லை?' என்றான். சமணர் மன்னனைப் பார்த்து, 'முன்னே இருமுறை முயன்றோம்; இன்னும் ஒருமுறை முயல்வோம்; ஒரு

முறையவாது வெற்றி பெறுவோம்' என்றனர். அதற்கு மன்னன், 'இஃதென்ன மாற்றம்' என்று மறுத்தான். ஆயினும் திருஞான சம்பந்தர், சமணரைப் பார்த்து, 'இனி என்ன வாது செய்ய நீங்கள் நினைக்கிறீர்கள்?' என்று கேட்டனர். சமணர், 'இனிப் புனல்வாதஞ் செய்வோம்; நமது சமண உண்மைகளை ஏட்டில் எழுதி, அவ் வேட்டை வைகையில் விடுவோம். எதிர் நோக்கி வரும் ஏடே பெருமையுடையது' என்றனர். கவுணியர் பெருமான் அதற்கும் உடன் பட்டனர்.

### குலச்சிறையார் தண்டனை விழைதல்

அப்பொழுது குலச்சிறையார், 'இவ்வாதில் தோற்றவரை என் செய்வது? அதை முடிவு செய்துகொண்டே வாதில் இறங்கல் வேண்டும்' என்றார். குலச்சிறையார்மீது சமணருக்குக் கோபமும், பொறாமையும் பொங்கி வழிந்தன. அவர் வாய், தவறி, 'நாங்கள் தோற்றோமாயின், எங்களை இம்மன்னன் கழுவில் ஏற்றுவானாக' என்று கூக்குரலிட்டனர். மன்னன் சமணரைப் பார்த்து, 'கோபமும் பொறாமையும் உங்களை இவ்வாறு கூறச்செய்தன' என்று சொன்னான்.

### புனல் வாதம்

அதற்குமேல் மன்னன் எல்லாரையும் வைகைக்குப் போகு மாறு கட்டளையிட்டுத் தானும் புறப்பட்டான். எல்லாரும் வைகைக் கரையை அடைந்தனர். மன்னன் இரு சாராரையும் பார்த்து, 'உங்கள் ஏடுகளை வைகையில் விடுங்கள்' என்றான். சமணர் 'தோற்றவர் தோலார்' என்னும் உறுதியில் நின்றனர். அவ்வுறுதியினின்றும் அவருக்கு அவா எழுந்தது. அவர் 'அத்தி நாத்தி' என்று எழுதி, ஏட்டை வைகையிலே விட்டனர். அவ்வேடு, கடல்நோக்கி ஓடிற்று. சமணர், திருஞானசம்பந்த சுவாமிகளைப் பார்த்து, 'உம்முடைய ஏட்டை விடும்; விளைவதைப் பார்ப்போம்' என்றனர். திருஞான சம்பந்தர், 'வாழ்க அந்தணர்' என்னுந் திருப்பாசுரத்தை ஏட்டிலே வரைந்து, அதை வைகையிலே விட்டனர். அவ்வேடு எதிர்நோக்கி, நீரைக் கிழித்துக்கொண்டு வந்தது. அத்திருப் பாசுரத்தில் பிள்ளையார், 'வேந்தனும் ஓங்குக' என்று அருளினமையால், மன்னன் கூன் நிமிரப் பெற்றான். ஏட்டை எடுப்பதற்குக் குலச்சிறை யார் குதிரைமீது இவர்ந்து சென்றார். ஏட்டை நிறுத்தப் பிள்ளையார், 'வன்னியும் மத்தமும்' என்னும் திருப்பதிகத்தைப் பாடி யருளினார். ஏடு, திருவேடகத் திருக்கோயிலுக்குப் பக்கத்திலே, நீர் நடுவிலே, தேங்கி நின்றது. குலச்சிறையார், நீரிலே, இறங்கி ஏட்டை எடுத்துக் கரை ஏறினார். அவர், சிவபெருமானைத் தொழுது ஞானசம்பந்தப் பிள்ளையாரிடம் வந்து, அவரைப் பணிந்தார். அமைச்சர் தாம் எடுத்து வந்த ஏட்டை எல்லாருக்குங் காட்டினார்.

### பாண்டிய நாட்டில் மீண்டும் திருநெறி

*மன்னன், அமைச்சரை நோக்கி, 'இச்சமணர் முன்னே பிள்ளை யாருக்குக் கேடு சூழ்ந்தனர்; மும்முறை தோற்றனர். இவர்சொற்படி இவரைக் கழுவேறச் செய்க' என்றான். குலச்சிறையார் கழுமரங்களை நாட்டினார். [1]சமணர் எண்ணாயிரவரும் அம்மரங்களில் ஏறினர். திருஞானசம்பந்தர் பாண்டியனுக்குத் திருநீறு கொடுத்தனர். அவன் அதை அன்போடு ஏற்றுப் பூசிக் கொண்டான். பாண்டியநாடு முழுவதும் திருநீறுமயமாயிற்று.*

### பாண்டியன் முறையீடு

*திருஞானசம்பந்தர் திருக்கோயிலுக்குப் போனார். பாண்டியன், பாண்டிமா தேவியார், குலச்சிறையார் உள்ளிட்ட அடியவரெல்லாரும் அவருடன் போந்தனர். பிள்ளையார் திருக்கோயிலுள் நுழைந்து, 'வீடலால வாயிலாய்' என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். பாண்டியன், 'ஆலவாய் அரசே! சமண வலையிற் சிக்குண்டு கிடந்தேன். என் பிணி அறுக்கப் பிள்ளையாரைத் தந்தனை. உன் அருட்டிறத்தை என்னென்று போற்றுவேன்' என்று வணங்கி நின்றனன். பிள்ளையார் திருக்கோயிலினின்றும் திருமடத்துக்கு எழுந்தருளினார். மற்றவர் பிள்ளையார் பால் விடை பெற்றுத் தத்தம் இருக்கைக்கேகினர்.*

*திருஞானசம்பந்தர், 'ஆலநீழல் உகந்த' என்னுந் திருப்பதி கத்தைப் பாடியருளினார்; அதிலே சிவபெருமான் திருநீலகண்டப் பெரும்பாணர்க்கு அருளிய திறத்தை அமைத்துச் சிறப்பித்தனர். பாண்டியனும், பாண்டிமாதேவியாரும், குலச்சிறையாரும், மற்ற அடியவரும் நாடோறும் பிள்ளையாரிடம் போந்து, அவரைப் பணிந்து வரலானார்.*

### தோணியப்பர் நினைவு

*சிவபாதவிருதயர், மதுரையில் நிகழ்ந்ததை அறியவேண்டிச் சீர்காழியின்றும் புறப்பட்டனர். அவர் பாண்டி நாடடைந்து, மதுரை சேர்ந்து, சொக்கநாதனைத் தொழுது, பிள்ளையாரது திரு மடத்துக்குச் சென்றனர். அவரைக் கண்டதும் பிள்ளையார்க்குத் தோணியப்பர் நினைவு தோன்றிற்று. பிள்ளையார், 'மண்ணினல்ல வண்ணம்' என்னுந் திருப்பதிகத்தைப் பாடி மகிழ்ந்தார்.*

### மதுரை நேயர் ஞானசம்பந்தரைச் சூழ்ந்து செல்லல்

*வேறு பல பதிகளையுங் காண்டல் வேண்டும் என்னும் வேட்கை திருஞானசம்பந்தருக்கு எழுந்தது. எழவே, அவர் மதுரையை விடுத்துப் புறப்படலானார். மதுரை நேயர் மூவரும்,*

1. இது மூலத்தையொட்டி எழுதப்பட்டது. விளக்கம் முகவுரையிற் பார்க்க.

பிள்ளையாரை வணங்கிக் கண்ணீருங் கம்பலையுமானார். காழி வள்ளலார் அவரை நோக்கி, 'வருந்தல் வேண்டா . இந்நாட்டிலுள்ள திருப்பதிகளைத் தொழ என்னுடன் வாரும்' என்று அருளிச் செய்தார். அம்மூவரும், மற்ற அடியவரும் புடைசூழப் பிள்ளையார், திருப்பரங்குன்றம், திருவாப்பனூர், திருப்புத்தூர், திருப்பூவணம், திருக்கானப்பேர், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருக்குறும்பலா, திருநெல்வேலி முதலிய திருப்பதிகளைக் கண்டு, பதிகம் பாடி, இராமேச்சரத்தை அடைந்தார்; அங்கே சில நாள் தங்கினார்; அங்கிருந்து கொண்டே ஈழநாட்டுக்குத் திருப்பதிகளாகிய திருக்கோண மலையையும், திருக்கேதீச்சரத்தையும் திக்கு நோக்கி வணங்கித் தமிழ் மாலை சாத்தினார். பின்னர்ப் பிள்ளையார் இராமேச்சரத்தை விடுத்தார். விடுத்துத் திருவாடானை, திருப்புனவாயில் முதலிய திருப்பதிகளுக்குப் போய், மணமேற்குடி நண்ணினார். அது குலச்சிறை நாயனார் பிறந்த இடமாதலால், பிள்ளையார் அங்கே தங்கலானார். அங்கிருந்துகொண்டே, அவர் சில திருப்பதிகளுக்குச் சென்று திரும்பினார்.

### மூவர்க்கும் விடையளித்தல்

திருஞானசம்பந்தர், பாண்டி நாட்டை விடுத்துச் சோழநாட்டிற் கெழுந்தருள விரும்பினர். அஃதுணர்ந்த பாண்டியனும், அம்மை யாரும், அமைச்சரும் பிள்ளையாரைப் பிரிந்து வாழ மனமில்லாதவ ராய் அவருடன் செல்லவே உளங்கொண்டனர். அவரது நிலையை உணர்ந்த பிள்ளையார், அவரைப் பார்த்து, 'என்னுரைக்குச் செவி சாயுங்கள்; இந்நாட்டிலிருந்துகொண்டே சைவப் பயிரை ஓம்பி வாழுங்கள்' என்று அருள் சுரந்தார். மூவரும் பிள்ளையார் ஆணையை மறுத்தற்கஞ்சி, அவர்தம் திருவடிகளில் விழுந்து வணங்கி, அத்திரு வடிகளை ஆனந்தக் கண்ணீரால் நனைந்து, எழுந்து நின்றனர். பிள்ளையார், மூவர்க்கும் விடை நல்கிப் பாண்டிநாட்டை விட்டகன்றார்; சோழநாட்டிற் புகுந்தார்; பல திருப்பதிகளைக் கண்டு தொழுதுகொண்டே சென்றார்; திருக்களர், திருப்பாதாளீச்சரம் முதலிய திருப்பதிகளை அடைந்து ஆண்டவனை வழிபட்டார்; பின்னர் முள்ளிவாய்க்கரையைச் சேர்ந்தார்.

### ஓடம் அருளால் ஓடல்

அவ்வேளையில் அங்கே ஆற்றுப்பெருக்கு அதிகமாயிருந்தது. அதனால் ஓடக்காரர் ஓடங்களை கரையிலே நிறுத்திப் போய் விட்டனர். பிள்ளையார்க்குத் திருக்கொள்ளம்பூதூர் எதிரே தோன்றிற்று. அத்திருப்பதியைக் கண்டு தொழுதல் வேண்டும் என்னும் அவா அவர்க்கு எழுந்தது. எழவே, தமிழ் விரகர் ஓர் ஓடத்தின் கட்டை அவிழ்த்தனர்; சூழ்ந்துள்ள அடியவரை அவ்வோடத்தில் ஏற்றினர்; அதன் மேல் ஏறி நின்று, 'கொட்டமே

கமழும்' என்னுந் திருப்பதிகத்தைப் பாடினர். ஓடம் ஓடி, ஆண்டவ னருளால் அக்கரையைச் சேர்ந்தது. பாலறாவாயர் இறங்கினர். மற்றவரும் இறங்கினர். எல்லாருஞ் சேர்ந்து திருக் கோயிலுக்குச் சென்றனர்; அங்கே ஆண்டவனை வழிபட்டுத் திருநள்ளாறு போந்தனர். பிள்ளையார் 'பாடகமெல்லடி' என்னுந் திருப்பதிகத்தை அருளிச் செய்து, அத்திருப்பதியிலேயே சிலநாள் தங்கியிருந்தார்; பின்னே அங்கிருந்து புறப்பட்டுத் திருத்தெளிச்சேரி சேர்ந்து, போதிமங்கையை நெருங்கினார்.

## அஞ்செழுத்து அத்திரமாதல்

போதிமங்கை, பௌத்தர்மலிந்த பதி. அடியவர் ஆரவாரமும், திருச்சின்ன ஓசையும், சிவநாம முழக்கமும் பௌத்தருக்கு நாரா சம்போலிருந்தன. அவர் எல்லாம் ஒருங்குதிரண்டு, புத்த நந்தியைத் தலைவனாக் கொண்டு , திருக்கூட்டத்தை மறித்தனர்; 'வெற்றிச் சின்னங்கள் எற்றுக்கு? எங்களை வாதில் வென்றீர்களா? வாதில் வென்றன்றோ அவைகளை முழக்கல் வேண்டும்?' என்று வெகுண்டு விலக்கினர். அச்செயலைக் கண்ட அடியவர், 'இத்தலைவனை மாய்த்தல் வேண்டும். இல்லையேல் இவன் தீங்கு விளைப்பன்' என்று கருதி, நிலைமையைப் பிள்ளையாருக்குதத் தெரிவித்தனர். பிள்ளை யார், 'இஃதென்ன! நன்றாயிருக்கிறது! புத்த நந்தியின் திறத்தை வாதத்தில் பார்ப்போம்' என்று திருவாய்மலர்ந் தருளினர். அதற்குள் நெருக்கு அதிகமாகத் தேவாரத் திருமுறைகளை எழுதி வரும் அன்பர், 'புத்தர் சமண் கழுக்கையர்' என்னுந் திருப்பாட்டை ஓதி, 'அத்திரமாவன அஞ்செழுத்துமே' என்று முடித்தனர். முடித்ததும், புத்த நந்திமீது இடி விழுந்தது. பௌத்தர் நிலைகலங்கி ஓடினர். அந் நிகழ்ச்சியை அடியவர் பிள்ளையாருக்கு அறிவித்தனர். பிள்ளையார் அவரை நோக்கி, 'இது விதியால் நேர்ந்தது. சிவநாம சங்கீர்த்தனஞ் செய்யுங்கள்' என்றார். அடியவர் அப்படியே செய்தனர்.

## பௌத்தருடன் வாதம்

மருண்டு ஓடிய பௌத்தர் பலர், சாரிபுத்தனைத் தலைவனாக் கொண்டு மீண்டும் வந்தனர்; வந்து, 'மந்திர வாதம் வேண்டா. தருக்கவாதஞ் செய்யுங்கள்! பார்ப்போம்!' என்று அடர்ந்தனர். பிள்ளையார், சிவிகையினின்றும் இறங்கி, ஒரு மண்டபத்துக்குச் சென்றார். பௌத்தரை அழைத்து வருமாறு பிள்ளையார் அடிய வர்க்குக் கட்டளையிட்டார். அடியவர், பௌத்தரை அழைத்து வந்தனர். தலைவனாகிய சாரிபுத்தன், பிள்ளையார் அருகே நின்றான். புத்த நந்தியை இருகூறுபடுத்திய அன்பர், பிள்ளையார் முன்னிலை யில் வாதம் துவக்கினர். சாரிபுத்தனும் வாதத்தில் ஈடுபட்டனன். முடிவில் சாரிபுத்தன் தோல்வியடைந்தான். அவன், திருஞானசம்பந்த சுவாமிகளை வணங்கினன். மற்றப் பௌத்தரும் பெருமானைப்

பணிந்தனர். பிள்ளையார் எல்லாருக்குந் திருநீறளித்து அருள் செய்தார்.

### அப்பர் சிவிகை தாங்கல்

பின்னர்த் திருஞானசம்பந்தர் திருக்கடவூரை அடைந்து, அங்கே சிலநாள் தங்கியிருந்தனர். அவ்வேளையில், திருஞான சம்பந்தருக்குத் திருநாவுக்கரசர் நினைவு தோன்றிற்று. தோன்றவே, அவர் அடியாரை நோக்கி, 'திருநாவுக்கரசு சுவாமிகள் எங்குள்ளார்?' என்று கேட்டனர். அவர், 'திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பூந் துருத்தியில் எழுந்தருளியிருக்கிறார்' என்று சொற்றனர். உடனே அப்பரைக் காணப் பிள்ளையார் புறப்பட்டார். பிள்ளையார் வருகையைக் கேட்ட அப்பர், அவரை எதிர்கொள்ள எழுந்து சென்றார். அப்பர் திருக்கூடத்திலே நுழைந்து, முத்துச் சிவிகையைத் தாங்கி வருபவரோடு கலந்து? சிவிகையைத் தாங்கிவந்தனர். பிள்ளையாருக்குத் திருப்பூந்துருத்தி தோன்றலாயிற்று. தோன்றவே, அவர், 'அப்பர் எங்குற்றார்?' என்று கேட்டனர். அப்பர், 'நானேயோ தவஞ் செய்தேன்; திருவடிகளைத் தாங்கிவரும் பெருவாழ்வைப் பெற்றிருக்கிறேன்' என்றார். என்றதும், ஞானசம்பந்தப் பெருமான், பதை பதைத்துச் சிவிகை விட்டிறங்கி, 'இப்படியுஞ் செய்யலாமா!' என்று அப்பர் சுவாமிகளை வணங்கினார். 'இதைவிட வேறு என் செய்ய வல்லேன்! என்று அப்பர் சுவாமிகள் திருஞானசம்பந்தரை வணங்கினர். அடியவர் ஆரவாரித்தனர். இருவரும் திருப்பூந் துருத்தியை அடைந்து, திருக்கோயிலுக்குச் சென்று, ஆண்டவனை வழிபட்டுக்கொண் டிருந்தனர்.

### காழி சேரல்

அப்பொழுது திருஞானசம்பந்தர், பாண்டிநாட்டில் நிகழ்ந்தன வற்றையெல்லாம் அப்பர் சுவாமிகளுக்கு அருளிச் செய்தனர். அப்பர் சுவாமிகள் தமது தொண்டைநாட்டு யாத்திரையைப் பிள்ளை யாருக்கு விளக்கிக் கூறினார். திருநாவுக்கரசர், பிள்ளை யாரிடம் விடைபெற்றுப் பாண்டிநாடு நோக்கினர். பிள்ளையார், திருநெய்த் தானம் , திருவையாறு, திருப்பழனம் முதலிய திருப்பதிகளை வணங்கி வழிபட்டுச் சீர்காழியைச் சேர்ந்தார்; 'உற்றுமை சேர்வது மெய் யினையே' என்னுந் திருப்பதிகம் பாடினார்; பின்னே தந்தையாருடன் இல்லம் போந்து இனிதிருந்தார்.

### தொண்டை நாடு நோக்கல்

பிள்ளையாருக்குத் தொண்டை மண்டலத்தின்மீது கருத்துச் சென்றது. அவர் யாத்திரைக்குச் சித்தமானார். சிவபாதவிருதயரும் உடன் தொடர்ந்தார். பிள்ளையார், அவரைத் தடுத்து, 'நீர் இங்கிருந்துகொண்டே தோணியப்பரை வழிபட்டுக் கொண்டிரும்'

என்று சொன்னார். சிவபாதவிருதயர் அதற்கு உடன்பட்டனர். பிள்ளையார் சிதம்பரம், திருத்தினைநகர், திருமாணிகுழி, திருப்பாதிரிப் புலியூர், திருவடுகூர், திருவக்கரை, திருவிரும்பை மாகாளம், திருவதிகை, திருவாமாத்தூர், திருக்கோவலூர், திருவறையணி நல்லூர், திருவண்ணாமலை முதலிய திருப்பதி களுக்குப் போய், இறைவனைத் தொழுது, தமிழ் பாடித் திருவோத் தூரை அடைந்தார்.

### ஆண்பனை பெண்பனை யாக்கல்

திருவோத்தூரில் ஓர் அன்பர் இருந்தனர். அவர் சிவபெரு மானுக்கெனப் பனைகள் அமைத்து வளர்த்தனர். அப் பனைகள் ஆண்களாகிக் காயாதிருந்தன. அதைக் கண்ட சமணர், 'ஓ சிவபக்தரே! உமது ஆண் பனைகள் காய்க்குமா? சிவனருளால் காய்க்கச் செய்தல் முடியுமா?' என்று எள்ளுவது வழக்கம். அதனால் அன்பர் மனக்கவலை உறுதல் உண்டு. அன்பர் அதனைத் திருஞான சம்பந்தரிடம் முறையிட்டனர். அவ்வுரை கேட்ட பிள்ளையார், திருக்கோயிலினுள்ளே நுழைந்தார்; ஆண்டவனை நினைந்து நினைந்து உருகினார்; 'பூத்தேர்ந்தாயென' என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார்; திருக் கடைக்காப்பிலே'குறும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்' என்று அருளிச் செய்தார். ஆண் பனைகளெல்லாம் பெண் பனைகளாயின. ஒவ்வொன்றிலும் குலைகள் தொங்கின. காய்கள் பழுத்தன. இவ்வாறு, ஆளுடைய பிள்ளையார் அன்பர்க்கு அருள் செய்தார். சமணரிற் பலர் ஊரை விட்டு ஓடினர்; சிலர் வெண்ணீறணிந்து சிவநெறி நின்றனர். பனைகள், பிள்ளையார் அருள்பெற்ற காரணத்தால், தங்கள் காலங் கழித்து, முடிவில் சிவமாயின.

### காரைக்காலம்மையாரிடம் அன்பு காட்டல்

திருஞானசம்பந்தர், திருவோத்தூரை விடுத்துத் திருமாகறல், திருக்குரங்கணில்முட்டம், திருவேகம்பம், திருக்கச்சிநெறிக் காரைக்காடு, திருவனேகதங்காவதம், திருக்கச்சிமேற்றளி, திருமாற் பேறு, திருஊறல் முதலிய திருப்பதிகளை வணங்கிக் கொண்டு, திருவாலங்காட்டை அணுகினர்; 'இத்திருப்பதி காரைக்கால் அம்மையார் தலையாலே நடந்து பேறுபெற்றது' என்று நினைந்து, அஞ்சி, உள்நுழையாது, அருகே உள்ள ஓர் ஊரிலே, அன்றிரவு தங்கினர். ஆலங்காட்டுப் பெருமான், காழிச் செல்வர் கனவில் தோன்றி, 'நம்மைப்பாட மறந்தனையோ?' என்று திருவாய்மலர்ந் தருளினார். உடனே வள்ளலார் விழித்து எழுந்தார்; 'துஞ்ச வருவாரும்' என்னும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார்; அதிலே பழையனூரார் உறுதிமொழி காத்ததைச் சிறப்பித்தார். பொழுது விடிந்தது. அடியார் பலர் கௌனியர் பெருமானைக் காணவந்தனர். அவருக்குப் பெருமான், இரவு நிகழ்ச்சியைக் கூறி, அவருடன்

அளவளாவி யிருந்தார்; பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருப் பாச்சூர், திருவெண்பாக்கம், திருக்காரிகரை முதலிய திருப்பதி களுக்குப் போய்த் திருக்காளத்தி நோக்கினர்.

**கண்ணப்பரை வணங்கல்**

திருக்காளத்தி சமீபித்தது. காளத்தி அன்பர்கள், பிள்ளை யாரை எதிர்கொண்டார்கள். பிள்ளையார், அவர்களை நோக்கி, இம் மலைகளில் காளத்திமலை எது?' என்று கேட்டார். 'இது காளத்தி மலை' என்று அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். வள்ளலார், 'வானவர்கள் தானவர்கள்' என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார்; அதிலே கண்ணப்பர் திருத்தொண்டைச் சிறப்பித்தார்; பின்னே பொன்முகலியைக் கடந்தார்; மலையடியில் வந்தார்; ஆண்டவனை வணங்கினார்; மலைமேல் ஏறினார்; அங்கே இறைவனைக் கண்டு தொழுதார்; அவ்விடத்தில் அன்பே உருவாய் நின்றருளுங் கண்ணப்பரைக் கண்டார்; அவரடியில் விழுந்தார்; எழுந்தார்; ஆனந்தப் பரவசரானார்; அப்பரவசத்துடன் மலையைவிட்டு நீங்கி, ஒரு திருமடத்திலே தங்கியிருந்தார்; அங்கிருந்துகொண்டே வட கயிலாயம், திருக்கேதாரம், திருக்கோகரணம், திருப்பருப்பதம், இந்திரநீல பருப்பதம் முதலிய திருப்பதிகளின் திக்குநோக்கித் தமிழ் பாடினார். பின்னர் ஞானசம்பந்தர், திருக்காளத்தியை விடுத்துத் திருவேற்காடு, திருவலிதாயம் முதலிய திருப்பதிகளைக் கண்டு தொழுது, திருவொற்றியூரை அடைந்து, இறைவனை வழிபட்டுக் கொண்டிருந்தனர்.

**பூம்பாவையார் பிறப்பு**

திருமயிலாப்பூரிலே சிவநேசர் என்பவர் ஒருவர் வதிந்தனர். அவர் வணிகர்; சிவனடியார்; செல்வத்திற் சிறந்தவர். அவர் திருஞானசம்பந்தப் பெருமான் சிறப்புக்களைக் கேள்வியுற்று, அவர்பால் பேரன்புடையவராய் வாழ்ந்து வந்தனர்.

சிவநேசருக்குப் புத்திரப்பேறு இல்லாமலிருந்தது. அது குறித்து அவர் தவங்கிடந்தனர். அவருக்கு ஒரு பெண் குழவி பிறந்தது. அக் குழவிக்குப் 'பூம்பாவை'என்னும் பெயர் சூட்டப்பட்டது. பூம்பாவையார், பிறை என வளர்ந்தார். சிவநேசர், 'என் புதல்விக்குக் கணவனாக வாய்க்கிறவன் எவனோ, அவனே என் அருநிதிக்கும் உரியவனாவன்' என்று சொல்லிக்கொண்டிருந்தனர். அந்நாளில் சிவநேசரிடம் சிலர் போந்து, திருஞானசம்பந்தர் பாண்டிநாட்டில் நிகழ்த்திய அற்புதங்களைக் கூறினர். சிவநேசர், அவருக்குப் பொன்னையும் மணியையும் துகிலையும் வாரி வாரிக் கொடுத்தனர். மகிழ்ச்சிப் பெருக்கால் அவர், 'என் புதல்வி, என் நிதி முதலிய எனக்குள்ள எல்லாவற்றையும், என்னையும் பிள்ளையாருக்குக் கொடுத்தேன்' என்று சொல்லி இன்பக் கடலில் திளைத்தனர்.

### அரவு தீண்டல்

*ஒருநாள், பூம்பாவையார் நந்தவனத்துட் சென்றார்; பூக் கொய்யப் புகுந்தார். அப்பொழுது ஒரு பாம்பு, மல்லிகைப் பந்தரிலே மறைந்து வந்து அம்மையாரைத் தீண்டிற்று. அம்மையார் சாய்ந்தார். சேடியர், அவரைத் தாங்கிக் கன்னி மடத்துக்குக் கொண்டுபோனார். மணி மந்திர ஔடத முயற்சிகள் செய்யப்பட்டன. பயன் விளைய வில்லை. உயிர் நீங்கிய குறிகள் பூம்பாவையாரிடம் தோன்றின. சிவநேசரும், மற்ற உறவினரும் துயரக்கடலில் அழுந்தினர். சிவநேசர், ஒருவாறு தெளிவுற்று, 'இந்நஞ்சை இறக்குவோர்க்கு, நிதி, குவையல் குவையலாக வழங்கப்படும்' என்று பறைசாற்றுவித்தனர். இராஜ வயித்தியர்களும் மந்திரவாதிகளும் போந்து, தங்களால் இயன்றவரை மூன்று நாள் முயன்றார்கள். பயன் விளையாமை கண்டு அவர்கள் திரும்பினார்கள். அது கண்ட சிவநேசர், 'இப்பூம்பாவை திருஞான சம்பந்தருக்கு உரியவள் அல்லளோ? யான் ஏன் வருந்தல் வேண்டும்? இவள் உடலை எரித்து, எலும்பையும், சாம்பரையும் அவர் வரும்வரை, சேமித்து வைத்தலே நலம்' என்று எண்ணினர்; எண்ணியவாறே செய்தனர்; எலும்புகளையும், சாம்பரையும் குடத்திலே இட்டு, அக்குடத்தைப் பொன், மணி, முத்து, துகில் முதலியவற்றால் அலங்கரித்துக் கன்னி மாடத்திலே வைத்தனர்; நாள்தோறும் மாலை, சந்தனம், அன்னம், விளக்கு முதலியன அங்கே அமைத்து வந்தனர்.*

### சிவநேசர் எதிர்கொள்ளல்

*அவ்வேளையில், ஆளுடைய பிள்ளையார், திருவொற்றியூரில் எழுந்தருளி இருப்பதைச் சிவநேசர் கேள்வியுற்றனர். அவர் திருஞான சம்பந்தரை அழைத்துவரக் கருதினர்; கருதித் திருமயிலாப்பூரி லிருந்து திருவொற்றியூர் வரை நடைப்பந்தர் முதலியன அமைத்தனர்; அமைத்து, அடியவருடன் புறப்பட்டனர். திருஞானசம்பந்தரும் திருவொற்றியூரை விடுத்துத் திருமயிலை நோக்கி வரலானார். சிவநேசரும், அவர் கூட்டத்தாரும் பெருமானைக் கண்டு வணங் கினர். பெருமானும் எதிர்தொழுது அவரோடு கலந்து கொண்டார். அப்பொழுது அடியவர் சிவநேசச் செட்டியார்க்கு உற்றதைப் பிள்ளையார்க்குத் தெரிவித்தனர். பிள்ளையார், திருமயிலாப்பூரைச் சேர்ந்தார்; கபாலீச்சரம் என்னுந் திருக் கோயிலுட் புகுந்தார்; ஆண்டவனைத் தொழுது புறத்தே வந்தார்.*

### என்பைப் பெண்ணாக்கல்

*பிள்ளையார், தம்முடனிருந்த சிவநேசரை நோக்கி, 'என்புக் குடத்தைக் கொண்டுவாரும்' என்றார். சிவநேசர் என்புக் குடத்தைச் சிறப்பொடு கொண்டுவந்து கோபுரத்துக்கு எதிரே, திருமுன்னர் வைத்தனர். அவ்வூரிலுள்ளாரும், பிற ஊராரும், சமணரும்,*

மற்றவரும் அங்கே போந்து சூழ்ந்து நின்றனர். காழிப்பெருமான், திருவருளைச் சிந்தித்து, 'மட்டிட்ட' என்னுந் திருப்பதிகத்தை எடுத்து, 'போதியோ பூம்பாவாய்' என்று பாடலானார். பூம்பாவை யார் குடத்தில் உருப்பெற்றார். 'உரிஞ்சாய வாழ்க்கை' என்னுந் திருப்பாட்டை வள்ளலார் பாடினதும் குடம் உடைந்தது. பூம் பாவையார் பன்னிரண்டு வயதுடையவராய் வெளித் தோன்றினார். பிள்ளையார் திருக்கடைக்காப்புச் சாத்தினார். அடியவர் சிவநாம கோஷம் செய்தனர்; ஆனந்தக் கூத்தாடினர். அமரர் மலர்மாரி சொரிந்தனர். சமணர் தள்ளாடினர். சிவநேசர் ஞானசம்பந்தரைப் பணிந்தார். பூம்பாவையாரும் பெருமானைத் தொழுது வணங்கி நின்றார். ஞானப்பிள்ளையார் சிவநேசரைப் பார்த்து, 'உமது அருமை மகளை அழைத்து வீட்டுக்குச் செல்க' என்றார். சிவநேசர் சுவாமிகளைத் தொழுது, 'இவளை அடிகள் திணமணஞ் செய் தருளல் வேண்டும்' என்று வேண்டினர். திருஞானசம்பந்தப் பெருமான், சிவநேசரை நோக்கி, 'நீர் பெற்ற பெண், விடத்தால் மாண்டாள். பின்னர்ச் சிவனருளால் அவளை நாம் தோற்று வித்தோம். ஆகவே, உமது உரை தகாது' என்று மறுத்தார். சிவ நேசரும், அவர்தம் உறவினரும் மயங்கி நின்றனர். பிள்ளையார் அவர்க்கெல்லாம் தேறுதல் கூறித் திருக்கோயிலுட் புகுந்தார்.

சிவநேசர், பூம்பாவையாரை வேறு ஒருவருக்கும் மணஞ் செய்து கொடுக்க விரும்பவில்லை. அவர் அம்மையாரைக் கன்னி மாடத்திலேயே இருக்கச் செய்தார். அம்மையார் அங்கிருந்து தவங்கிடந்து சிவனடி சேர்ந்தார்.

ஞானசம்பந்தர் திருமயிலாப்பூரிலே சில நாள் தங்கியிருந்தனர். அவர் சிவநேசர் முதலிய அடியவருக்கு விடை கொடுத்துத் திருவான்மியூர், திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்றம், திருஅச்சிறு பாக்கம், திருவரசிலி, திருப்புறவார் பனங்காட்டூர் முதலிய திருப்பதி களைத் தொழுது , பதிகம் பாடிக்கொண்டே தில்லையைச் சேர்ந்தனர்.

### தில்லை கண்டு சீர்காழி அடைதல்

சிவபாதவிருதயரும் மற்றவரும், பிள்ளையார் தில்லையில் இருத்தலைக் கேள்வியுற்றனர். அவரனைவரும் சீர்காழியினின்றும் புறப்பட்டுத் தில்லை யடைந்தனர். அவருடன் பிள்ளையாருங் கலந்து, பல திருப்பதிகளைக் கண்டு தொழுதுகொண்டே சென்றார். சீர்காழி தூரத்திலே காட்சி தந்தது. உடனே கௌணியர் பெருமான் சிவிகை விட்டிறங்கினார்; 'வண்டார் குழலரிவை' என்னுந் திருப் பதிகத்தைப் பாடினார். அவர் சீர்காழியைச் சமீபித்ததும், 'நம் பொருள் நம்மக்கள்' என்றெடுத்து, 'நலங்கொள் காழி சேர்மினே' என்று அருளிக் கொண்டே திருக்கோயிலை அடைந்தனர்; அங்கே ஆண்டவனை வழிபட்டுத் தமது திருமாளிகை சேர்ந்தனர்.

அப்பொழுது முருக நாயனார், திருநீலநக்க நாயனார் முதலிய திருத்தொண்டர்கள் தங்கள் தங்கள் சுற்றத்தவருடன் சீர்காழிக்கு வந்தார்கள். திருஞானசம்பந்தப் பெருமான், அவர்களுடன் தோணியப்பரை வழிபட்டுக் கொண்டிருந்தனர்.

### திருமண முயற்சி

அச்சமயத்தில், 'பிள்ளையார்க்குத் திருமணஞ் செய்வித்தல் வேண்டும்' என்ற விருப்பம், சிவபாதவிருதயர்க்கு உண்டாயிற்று. அவர், தம் சுற்றத்தாருடன் கலந்து ஆலோசித்தனர். எல்லாரும் ஒருங்குகூடித் தங் கருத்தை ஞானசம்பந்தருக்குத் தெரிவித்தனர். அதற்குச் சம்பந்தர் இணங்கினாரில்லை. அவரனைவரும் வள்ளலாரைத் தொழுது, 'உலகுய்யத் தோன்றிய பெருமானே! உலகுய்ய மணஞ்செய்து காட்டுதல் வேண்டும்' என்று வேண்டினர். பிள்ளையார் திருவருளை நினைந்து, அவர்தம் வேண்டுதலுக்கு இணங்கினார். சிவபாதவிருதயரும், மற்றவரும் மகிழ்வெய்தினர்.

எல்லாரும் ஒருங்கு சேர்ந்து, சிந்தித்து, 'திருல்நலூரிலுள்ள நம்பாண்டார் நம்பியின் மகளே பிள்ளையார்க்கு உரிவள்' என்னும் முடிவிற்கு வந்தனர். அவர் திருநல்லூருக்குப் போய்த் தங்கருத்தை நம்பாண்டர் நம்பிக்குத் தெரிவித்தனர். நம்பாண்டார் நம்பி, 'நான் உய்ந்தேன். என் குலமும் உய்ந்தது. பிள்ளையாருக்கு என் பெண்ணைக் கொடுக்க என்னதவஞ் செய்தேன்! செய்தேன்!' என்று கூத்தாடினர்; ஆனந்தமுற்றனர்; உடன்பட்டனர். எல்லோரும் நம்பாண்டார் நம்பிபால் விடைபெற்றுச் சீர்காழிக்குத் திரும்பினர்; ஞானசம்பந்தப் பெருமானுக்கு நம்பாண்டார் நம்பியின் விருப்பத்தைத் தெரி வித்தனர். திருமணத் திருநாள் குறிக்கப்பட்டது. திருமண ஓலை எங்கணும் அனுப்பட்டது. நம்பாண்டார் நம்பியும் திருமண முயற்சியில் தலைப்பட்டனர்.

### அணிசெய்தல்

திருஞானசம்பந்தப் பெருமான், தோணியப்பரை வணங்கி விடைபெற்றார். சிவபாத விருதயர் - உறவினர் - அடியவர் - எல்லாரும் திருநல்லூரை நோக்கினர். பிள்ளையார், திருநல்லூரை அடைந்து, 'பெருமணம்' என்னுங் கோயிலுட் புகுந்தார். அவர் ஆண்டவனை வழிபட்டு அருள் பெற்றார். மற்றவர், தத்தமக்கெனக் குறிக்கப்பபெற்றிருந்த விடுதிகளுக்குச் சென்றனர். அப்பொழுது அந்தணரிற் சிலர் போந்து காழிச் செல்வரைப் பார்த்து, 'ஐயனே! திருமணக் கோலம் புரிந்தருளல் வேண்டும்' என்றனர். அது கேட்ட வள்ளலார், ஒரு திருமடத்துக்குச் சென்றார். அந்தணர், பிள்ளையாரை நீராட்டி, ஆடை புனைந்து, பொண் மணி முத்து முதலிய அணி களால் அலங்கரித்தனர். ஞானசம்பந்தர், 'அந்தணர் புனைவன எல்லாம் புனைக' என்றிருந்து, முடிவில் உருத்திராக்க மாலையைத்

தாமே எடுத்து அணிந்துகொண்டனர்; ஐந்தெழுத்தோதித் திரு வெண்ணீறு அணிந்தனர்; அணிந்து, முத்துச் சிவிகையில் ஏறினர். வாத்தியங்கள் கோஷித்தன. அந்தணர் மறை முழங்கினர். அடியவர் ஆரவாரஞ் செய்தனர். சின்னங்கள் முழங்கின. இச்சிறப்புடன் பெருமான், திருமணப் பந்தரை அடைந்தார்; ஒரு பொன் பீடத்தில் அமர்ந்தார். அப்பொழுது மங்கையர் மணப் பெண்ணையும் அணிசெய்தனர்.

### திருமணம்

நம்பாண்டர் நம்பி, தம் மனைவியாருடன் பாலும் நீருங் கொண்டுவந்தனர். அவர், பிள்ளையாரைச் சிவமாகக் கருதி, அவருடைய திருவடிகளை விளக்கினர்; அந்நீரைத் தாமும் தெளித்துக்கொண்டனர்; மற்றவர்மீதும் தெளித்தனர். நம்பாண்டர் நம்பி, பிள்ளையார் திருக்கரத்திலே நீரைச் சொரிந்து, 'என் புதல்வியை உமக்கு அளித்தேன்' என்று மொழிந்தனர்.

### வேண்டுதல்

பெண்மணிகள் மணப்பெண்ணை அழைத்துவந்து பிள்ளை யார் வலப்பக்கத்திலே அமர்த்தினார்கள். திருநீலநக்க நாயனார் சடங்குகளைச் செய்தார். எரியிலே பொரி இடப்பட்டது. எரியை வலம் வரவேண்டித் திருஞானசம்பந்தர், அம்மையார் திருக் கரத்தைப் பற்றலானார். அவ்வேளையில் ஆளுடைய பிள்ளையார், 'எரி சிவமன்றோ!' என்று நினைந்தார்; 'திருக்கோயிலுக்கேகல் வேண்டும்' என்று எண்ணினார்; 'இவ்வில்லொழுக்கம் வந்து சேர்ந்ததே. இவளோடு நான் இறைவனடி சேர்வேன்' என்று உறுதி கொண்டார்; கொண்டவாறே, திருக்கோயிலுக்குப் போனார். உறவின ரும், அடியவரும், மற்றவரும் அவரைத் தொடர்ந்தே சென்றனர். சீர்காழிச் செல்வர், ஆண்டவன் திருமுன்னே நின்று, 'கல்லூர்ப் பெருமணம்' என்னும் பதிகத்தைப் பாடினர்; பாடி, 'அம்மை அப்பனே! உன் திருவடி நீழலை அடையும் சமயம் இதுவே' என்று வேண்டினர்.

### சிவசோதியிற் கலத்தல்

சிவபெருமான், 'ஞானசம்பந்தனே! நீயும் உன் மனைவியும், திருமணம் காணவந்த மக்களும் இச்சோதியினுள்ளே வந்து சேருங்கள்' என்று திருவாய்மலந்து, திருக்கோயில் முழுவதும் சோதி மயமாக்கி, அதன்கண் ஒரு திருவாயிலையும் வகுத்துக் காட்டினார். அதுகண்ட பிள்ளையார், 'காதலாகிக் கசிந்து' என்னும் பஞ்சாக்கரத் திருப்பதிகத்தை ஓதினார். அத்திருப்பதிகம் எல்லார் செவியிலும் நுழைந்தது. வள்ளலார், திருமணத் திருக்கூட்டத்தாரை நோக்கி, 'எல்லீரும் இச்சோதியுள் புகும்' என்று அருளினார். அவ்வாறே

சோதியில் எல்லாரும் புகுந்தனர்; திருநீலநக்க நாயனார், முருக நாயனார், சிவபாதவிருதயர், நம்பாண்டர் நம்பி, திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் முதலியோர் தம் மனைவிமாருடனும் சுற்றாத்தாருடனும் புகுந்தனர். முத்துச் சிவிகை முதலியவற்றைத் தாங்கிவந்தவரும், மற்ற அடியவரும், அறுவகைச் சமயத்தவரும், முனிவரும் புகுந்தனர். திருஞானசம்பந்தப் பெருமான், தங் காதலியைக் கைப்பற்றிச் சிவசோதியை வலம் வந்து, அதனுள் நுழைந்து, இரண்டறக் கலந்தார். சோதி மறைந்தது. திருக்கோயில் பழையபடி விளங்கலாயிற்று. சோதியுள் நுழையும் பேறு பெறாதவர் கலங்கி நின்றார். பெரும் பெரும் தேவரெல்லாம் போற்றி நின்றனர்.

# ஏயர்கோன் கலிக்காமர்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*கொற்றத் திறலெந்தை தந்தைதன் தந்தைஎங் கூட்டமெல்லாம்*
*தெற்றச் சடையாய் நினதடி யேந்திகழ் வன்தொண்டனே*
*மற்றிப் பிணிதவிர்ப் பானென் றுடைவா ளுருவி அந்நோய்*
*செற்றுத் தவிர்கலிக் காமன் குடிஏயர் சீர்க்குடியே.*

### திருத்தொண்டர் புராண சாரம்

*ஏதமில்வே ளாளர்பெரு மங்க லத்துள்*
*ஏயர்கோன் கலிக்காமர் இறையை நேரே*
*தூதுகொளு மவனணுகில் என்னாம் என்னுந்*
*துணிவினர்பால் இறைவன் அருஞ் சூலை ஏவி*
*வேதனைவன் தொண்டன்வரின் நீங்கும் என்ன*
*வெகுண்டுடல்வாள் கொடுதுறந்து மேய நாவல்*
*போதகமும் உடல்இகழ எழுந்து தாழ்ந்து*
*போற்றியது விலக்கிஅருள் பொருந்தி னாரே.*

*சோழநாட்டில் திருப்பெருமங்கலம் என்றொரு பதியுண்டு. அப்பதியில் வேளாண் மரபில் **ஏயர்குடியில்** தோன்றியவர் **கலிக்காமர்**. கலிக்காமர், சோழ மன்னனின் சேனைக்குத் தலைமை பூண்டவர். அஃது அவர்தம் பரம்பரைத் தொழிலாகும்.*

### திருப்புன்கூர்த் திருத்தொண்டு

*திருப்புன்கூர் என்னும் பதிக்கும், கலிக்காமருக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. அத்திருப்பதியில் அவரால் பல திருப்பணிகள் செய்யப்பட்டன.*

### தூதுகேட்டு மனம் நோதல்

*சுந்தரமூர்த்தி சுவாமிகள், தியாகேசப் பெருமானைப் பரவைபால் தூதுவிட்ட செய்தி, கலிக்காமருக்கு எட்டிற்று. எட்டவே, அவர் வெம்பி வெம்பி வீழ்ந்தார்; துன்பத்தில் ஆழ்ந்தார்; 'ஆண்டவனை அடியான் தூது விடுவதோ? நன்று! நன்று!' என்பார்; 'இச்செயலுக்குத் துணிந்தவனும் ஒரு தொண்டனா? இக்கொடுமை கேட்கும் என் ஆவி சோரவில்லையே!' என்பார்; ' ஒரு பெண்ணின் பொருட்டா*

ஆண்டவனைத் தூது விடுவது? ஆண்டவன் இசைந்தாலும் அவனைத் தூதுக்கு ஏவலாமோ? ஓர் இரவு முழுவதும் ஐயன் தூதனாக உழன்றானாம்! என்ன கொடுமை!' என்பார்; 'இக் கொடுமைக்கு மனங் கம்பியாத ஒருவனைக் காணும் நாள் எந்நாளோ? அவனைக் காணல் நேர்ந்தால் என்ன விளையுமோ?' என்பார். இவ்வாறு கலிக்காமர் மனம் நொந்து கிடந்தார்.

### சூலைநோய் பற்றல்

கலிக்காமர் நிலை, வன்தொண்டருக்குத் தெரியவந்தது. அதனை வன்தொண்டர், ஆண்டவன் முன்னிலையில் முறையிட்டுக் கொண் டிருந்தார். சிவபெருமான் இருவரையும் ஒருமைப் படுத்தத் திருவுளங் கொண்டார். கொண்டு, கலிக்காமர்பால் சூலைநோயை ஏவினார். அந்நோய் நாயனாரைப்பற்றி முடுக்கிக் குடைந்தது. நாயனார், சிவபெருமானை நினைந்து நினைந்து உருகினார்; போற்றினார். சிவபெருமான் கலிக்காமர் முன்னே தோன்றி, 'அன்பனே! இந்நோய் எவலாலுந் தீராது. இதைத் தீர்க்கவல்லான் ஒருவனே. அவன் வன்தொண்டன்' என்றார். என்றதும், நாயனார், சிவபெருமானைப் பார்த்து, 'எம்பிரானே அடிகளுக்கு வழிவழித் தொண்டு செய்யும் மரபில் தோன்றியவன் யான், வன்தொண்டனோ புதிதாக அடிமைப் பட்டவன். அவனா என் நோயைத் தீர்க்க வல்லான்! நோயால் வருந்துவதே எனக்கு மகிழ்ச்சி' என்றார்.

### வன்தொண்டர் புறப்பாடு

உடனே, சிவபெருமான், வன்தொண்டர்பால், ஏகி, 'தோழனே! கலிக்காமன் சூலை நோயால் பீடிக்கப்பட்டு வருந்துகிறான். அது நமது ஏவலால் நேர்ந்தது. நீ அவனிடஞ் சென்று அந்நோயைத் தீர்ப்பாயாக' என்றருளினார். வன்தொண்டருக்கு மகிழ்ச்சி பொங்கித் ததும்பி வழிந்தது. அவர், தாம் சூலை நோயைத் தீர்க்க வருவதைக் கலிக்காமருக்குத் தெரிவித்துப் புறப்பட்டார்.

### வாளால் வயிற்றைக் கிழித்தல்

கலிக்காமர், 'பெண்பொருட்டு ஆண்டவனைத் தூதுவிட்ட ஒருவனா இங்குவருகிறான்? அவன் வந்து நோயைத் தீர்த்தற்கு முன்னர், என் வயிற்றைக் கிழித்துக்கொள்கிறேன்' என்று உடை வாளை எடுத்தார்; எண்ணியவாறே செய்து முடித்தார்.

### வன்தொண்டரை வழிபடல்

அக்காட்சி கண்ட நாயனார் மனைவியார், தாமும் உயிர் துறக்கத் துணிந்தார். அவ்வேளையில், சிலர் போந்து, 'வன்தொண்டர் வருகிறார்' என்று சொன்னார். அம்மையார் திடுக்கிட்டார்; அங்கே அழுதுகொண்டிருந்தவரைப் பார்த்து, 'அழாதேயும்' என்று கட்டளையிட்டார்; சுவாமிகளை எதிர் கொள்ளுமாறு அங்

கிருந்தவரை ஏவினார். அவர் அவ்வாறே சென்று சுவாமிகளை எதிர்கொண்டனர். சுவாமிகள், கலிக்காமர் இல்லம் போந்தனர்; அங்கே இடப்பட்டிருந்த பீடத்தில் அமர்ந்தனர். அவருக்கு அர்ச்சனை முதலியன செய்யப்பட்டன. அவற்றைத் தம்பிரான் தோழர் ஏற்று, 'கலிக்காமர் எங்கே? அவர்க்கு உற்றநோயைத் தீர்த்து அவரோடு யான் இருத்தல் வேண்டும்? என்று கேட்டனர்.

**வன்தொண்டர் நாயனாரைக் காண விழைதல்**

அம்மையார் ஏவலாளரை அழைத்து, 'நாயனார்க்குக் கெடுதி ஒன்றும் இல்லை. அவர் உள்ளே உறங்குகிறார் என்று வன் தொண்டருக்குச் சொல்லும்' என்றார். ஏவலாளர், அவ்வாறே வன் தொண்டருக்கு அறிவித்தனர். அதற்கு வன்தொண்டப் பெருமான், 'நாயனார்க்குத் தீங்கு இல்லையாயினும், என் மனத்திற்குத் தெளிவு ஏற்படல் வேண்டும்.' என்றார். மேலும் மேலும் பெருமான் தங்கருத்தை வலியுறுத்தினார். ஏவலாளர்க்கு ஒன்றுந் தோன்றவில்லை. அவர் வன்தொண்டருக்குக் கலிக்காமரைக் காட்டினர்.

**இருவரும் நண்பராதல்**

வன்தொண்டப் பெருமான் நாயனாரைப் பார்த்தார்; அவர் தம் நிலையை உணர்ந்தார்; உணர்ந்ததும், யானும் உயிர் துறப்பேன்' என்று உடைவாளை எடுத்தார். உடனே ஆண்டவனருளால் கலிக்காம நாயனார் உயிர்பெற்றெழுந்தார்; எழுந்ததும், 'அந்தோ! கெட்டேன்' என்று விரைந்து போய்ச் சுவாமிகள் கையிலிருந்த வாளைப் பற்றினார். வன்தொண்டப் பெருமான், நாயனார் திருவடி களில் வீழ்ந்து வணங்கினார். நாயனாரும் சுவாமிகளை வணங்கினார். அன்றுதொட்டு இருவரும் கெழுதகை நண்பராயினர்.

இருவரும் திருப்புன்கூருக்குப் போய்த் திருவாரூரை அடைந்து, ஆண்டவனை வழிபட்டு வந்தனர். சிலநாள் கடந்த பின்னை, கலிக்காம நாயனார் வன்தொண்டர்பால் விடைபெற்றுத் தம்பதி சேர்ந்தார். நாயனார், ஆங்கே திருத்தொண்டுகள் பல செய்து, ஆண்டவன் திருவடி நீழலை யடைந்தார்.

# திருமூலர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம் மேய்ப்போன்*
*குரம்பைபுக்கு*
*முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்*
*படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி*
*அடிமன்ன வைத்த பிரான்மூல னாகின்ற அங்கணனே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*கயிலாயத் தொருசித்தர் பொதியில் சேர்வார்*
*காவிரிசூழ் சாத்தனூர் கருதும் மூலன்*
*பயிலாநோ யுடன்வீயத் துயர நீடும்*
*பசுக்களைக்கண் டவனுடலிற் பாய்ந்து போத*
*அயலாகப் பண்டையுடல் அருளான் மேவி*
*ஆவடுதண் டுறைஆண்டுக் கொருபா வாகக்*
*குயிலாரும் அரசடியில் இருந்து கூறிக்*
*கோதிலா வடகயிலை குறுகி னாரே.*

திருக்கயிலாயத்திலே நந்தி யெம்பெருமான் திருவருள் பெற்ற சிவயோகிகள் பலர் இருக்கிறார். அவருள் ஒருவர் அணிமா முதலிய சித்திகளில் வல்லவர். அவருக்கு 'அகத்தியருடன் சிலநாள் தங்குதல் வேண்டும்' என்னும் வேட்கை எழுந்தது.

### பொதிகை நோக்கிப் புறப்படல்

சிவயோகியார், தம்பால் எழுந்த வேட்கையைத் தணித்துக் கொள்ளத் திருக்கயிலையினின்றும் பொதிகை நோக்கிப் புறப் பட்டார்; வழியில் திருக்கேதாரம், பசுபதிநேபாளம், காசி, ஸ்ரீசைலம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சிபுரம், திருவதிகை, சிதம்பரம் முதலிய திருப்பதிகளைக் கண்டு தொழுது, திருவாவடுதுறையை அடைந்தார். அத்திருப்பதியை விடுத்து அகலாத ஒரு கருத்து அவர்தம் உள்ளத்தில் உதித்தது. ஆயினும் அவர், ஒருநாள், திரு வாவடுதுறையை விடுத்துச் சிறிது தூரஞ்சென்றார். அப்பொழுது காவிரிக்கரையில் உள்ள ஒரு பசுங்காட்டிலே பசுக்கூட்டங்கள் புலம்பிக்கொண்டிருந்தன. அக்காட்சியைச் சிவயோகியார் கண்டார்.

### பசுக்களின் அழுகைக் காட்சி

*அப்பசுக்களை மேய்ப்பவன் சாத்தனூரில் உள்ள ஓர் இடையன். அவன், **மூலன்** என்னும் பெயரை உடையவன். அவன் அன்று இறந்துபட்டான். பசுக்கள் அவனைச் சுற்றி நின்று, மோந்து மோந்து அழுதுகொண்டிருந்தன. பசுக்களின் அழுகை சிவயோகி யார் நெஞ்சைக் கவர்ந்தது. 'பசுக்களின் துயரை நீக்குதல் வேண்டும்' என்னுங் கருணை அவர்தம் உள்ளத்தில் பிறந்தது. 'இவ்விடையன் உயிர் பெற்றெழுந்தாலன்றி இப்பசுக்களின் துயர் நீங்காது' என்று அவர் நினைக்கலானார்.*

### கூடுவிட்டுக் கூடுபாய்ந்து திருமூலராதல்

*சிவயோகியார், கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தில் வல்லவர். அதனால், அவர், தமது உடலை ஓரிடத்தில் சேமித்து வைத்தனர்; இடையன் உடலிலே நுழைந்தனர்; **திருமூலராய்** எழுந்தனர். பசுக்கள் எல்லாம் ஆனந்தமுற்றன; அவரை நாத்தழும்பத் தழும்ப நக்கின; மோந்தன; கனைத்தன; துள்ளியோடி மேய்ந்தன. பொழுது போயிற்று. பசுக்கள் வழக்கம்போலச் சாத்தனூரை நோக்கி நடந்தன. திருமூலரும் அவைகளுடன் சென்றனர். பசுக்கள் இல்லந்தோறும் நுழையலாயின. திருமூலர் வீதியிலே ஓரிடத்தில் நின்றனர்.*

### திருமூலன் மனைவியின் தளர்ச்சி

*மூலனுக்கு ஒரு மனைவி உண்டு. அவள், 'என்ன! நாயகர் இன்னும் வரவில்லையே' என்று வெளியே வந்து பார்த்தாள்; சிவயோகியார் நின்ற இடத்துக்கு வந்தாள்; 'இவர் ஏன் இங்கே நிற்கிறார்? இவருக்கு என்ன? தீட்டா?' என்று சிவயோகியாரைத் தீண்டப் போனாள். சிவயோகியார், அவளை பார்த்து, 'என்னைத் தீண்டாதே' என்றார். அவள் மருண்டு, 'இஃதென்ன!' என்று தளர்வுற்றாள். சிவயோகியார், அவளை நோக்கி, 'எனக்கும் உனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை' என்று சொல்லி ஒரு பொது மடத்திலே நுழைந்தார்.*

### ஊரார் கைவிடல்

*இடையன் மனைவி இரவு முழுவதும் துயிலாது வருந்தினள். பொழுது விடிந்தது. விடிந்ததும், அவள் ஊரிலுள்ள அறிஞரிடஞ் சென்று, தன் கணவன் செயலைத் தெரிவித்தாள். அறிஞர் சென்று திருமூலரைப் பார்த்தனர்; பார்த்து, 'இது பித்தன்று; மயக்கன்று. இவர் சித்தம் சிவயோகத்தில் ஈடுபட்டிருக்கிறது. இனி இவர் சுற்றத்துடன் சேர்ந்து வாழார்' என்று சொல்லிவிட்டனர். அது கேட்ட மனைவி துயரக் கடலில் ஆழ்ந்தனள். அறிஞர் அவளைத் தேற்றி உடனழைத்துச் சென்றனர்.*

**உடல் மறைவு**

பின்னே திருமூலர் எழுந்து பசுக்கள் வந்த வழியே சென்றார்; தாம் சேமித்துவைத்த தமது உடலைத் தேடினார்; அதைக் கண்டாரில்லை. ‘சிவாகமத்தின் உண்மைப் பொருளைத் தம் வாயிலாகத் தமிழில் வெளியிடவேண்டி உடலை மறைத்தது சிவபிரான் திருவருள்’ என்பதை ஞான உணர்வினால் திருமூலர் தெளியலானார். அந்நிலையில், சுற்றத்தார், திருமூலரைத் தொடர்ந்து சூழ்ந்தனர். திருமூலர் அவரைப் பார்த்து, ‘உமக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. நீர் போம்’ என்றார். அவர் திரும்பிப் போனார்.

திருமூலர், திருவாவடுதுறை சேர்ந்தனர்; திருக்கோயிலுள் நுழைந்தனர்; மேற்புறத்திலுள்ள அரசமரத்தடியில் அமர்ந்தனர்; மூவாயிரம் ஆண்டு சிவயோகத்தில் இருந்தனர். ஆண்டுக்கு ஒரு மாத்திரமாகத் திருமந்திரம் மூவாயிரமும் அவரால் அருளிச் செய்யப்பட்டன. அத்திருத்தொண்டு முற்றுப்பெற்றதும் அவர் திருக்கயிலை அடைந்தனர்.

# தண்டியடிகள்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*கண்ணார் மணியொன்று மின்றிக் கயிறு பிடித்தரற்குத்*
*தண்ணார் புனல்தடந் தொட்டலுந் தன்னை நகும்அமணர்*
*கண்ணாங் கிழப்ப அமணர் கலக்கங்கண் டம்மலர்க்கண்*
*விண்ணா யகனிடைப் பெற்றவன் ஆரூர் விறற்றண்டியே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*திருவாரூர் வருந்தண்டி யடிகள் காட்சி*
*சேராதார் குளந்தொட்டற் கமணர் சீறி*
*குருடாநீ முன்செவிடுங் கூடிற் றென்று*
*குறித்தறியைப் பறித்தெறியக் கொதித்துத் தங்கண்*
*அருளாலே விழித்தெவரும் அந்த ராக*
*அமணர்கலக் கம்பலக்கண் டவர்கள் பாழிப்*
*பருவான கற்பறித்தா விக்கரையுங் காட்டிப்*
*பரனருளால் அமருலகம் பற்றி னரே.*

**தண்டியடிகள்** சோழநாட்டிலே திருவாரூரிலே பிறந்தவர்; பிறவிக் குருடர்; அகக்கண்ணினாலே ஆண்டவனை வழிபடுவோர். அவர் திருவாரூர்த் திருக்கோயிலை வலம் வருவர்; அஞ்செழுத்தை ஓதுவர்.

### திருக்குளத்தைப் பெருக்கும் முயற்சி

திருக்கோயிலுக்கு மேற்பால் ஒரு திருக்குளம் உண்டு. அதன் பக்கமெங்கும் சமண மடங்கள் நிரம்பி இருந்தன. அதனால், திருக் குளம் இடத்தால் சுருக்கமுற் றிருந்தது.

அத் திருக்குளத்தைப் பெருக்கத் தண்டியடிகள் முயன்றார். அவர், திருக்குளத்தினுள்ளே ஒரு தறி நட்டார்; கரையிலே மற்றொரு தறி நட்டார்; இரண்டுக்கும் இடையே கயிறு கட்டினார்; கயிற்றைத் தடவிக்கொண்டே போவார்; மண்ணை வெட்டுவார்; அதைக் கூடையிலே சுமந்து வருவார்; கொட்டுவார்.

## தொண்டுக்கு இடையூறு

அச்செயலைச் சமணர் கண்டனர்; பொறாமை கொண்டனர். அவர், நாயனாரை அணைந்து, 'மண்ணைக் கல்லாதேயும், பிராணிகள் இறக்கும். அவைகளை வருத்தல் வேண்டா' என்று சொற்றனர். அதற்கு அடிகள், 'அறிவு கெட்டவரே! இது சிவத் தொண்டு; அறத்தொண்டு. இதன் பெருமை உமக்குத் தெரியுமா?' என்று கேட்டனர். சமணர் வெகுண்டு, 'நாங்கள் சொன்னது அற உரை. அதைக் கேட்கின்றாய் இல்லை. செவியும் இல்லைபோலும்!' என்றனர். நாயனார் 'மந்த உணர்வும், குருட்டு விழியும், கேளாச் செவியும் உமக்கே உண்டு. சிவனடியை அன்றிப் பிறிதொன்றை என்கண் பாராது. அந்நுட்பம் உமக்கு விளங்காது. புற உலகம் எல்லாவற்றையும் யான் காணக் கண் பெற்றால், நீர் என் செய்வீர்?' என்று கேட்டார். சமணர், 'நீ உன் தெய்வ வல்லமையால் கண் பெறுக, பார்ப்போம்! பெறுவையேல் நாங்கள் இவ்வூரில் இருப்பதில்லை' என்று கூறினர். அவ்வளவில் சமணர் நில்லாது, நாயனாருடைய மண்வெட்டியையும், குறித்தறிகளையும், கயிற்றையும் பறித்துப் பிடுங்கி எறிந்தனர். தண்டியடிகள் என் செய்வார்! அவருக்கு வெகுளி மேலிட்டது. அவர், திருக்கோயில் திருவாயிலிலே சென்றனர்; ஆண்டவனை இறைஞ்சினர்; 'ஐயனே! இன்று சமணர் என்னை அவமானஞ் செய்தனர். அதனால் யான் மிக வருந்துகிறேன். அதை ஒழித்தருள்க' என்று வேண்டினர். வேண்டி, அவர் தமது திருமடத்தை அடைந் தனர்; துன்பத்தில் மூழ்கித் துயின்றனர்.

### மன்னனுக்கருளல்

சிவபெருமான் அன்றிரவு, நாயனார் கனவிலே தோன்றி, 'அன்பனே! கவலையுறாதே. உன் கண் காணவும், சமணர் கண்கள் குருடாகவும் அருள் செய்வோம்' என்று திருவாய் மலர்ந்தார். அப்பொழுது சிவபெருமான், சோழமன்னன் கனவிலுந் தோன்றி, 'தண்டி என்பவன் நமக்குக் குளங்கல்லினான். அதற்குச் சமணர் இடையூறு செய்தனர். நீ அவனிடம் போந்து அவன் கருத்தை முடிப்பாயாக' என்று கட்டளை யிட்டார். மன்னன் விழித்து, ஆண்டவனருளைப் போற்றினன்.

### மன்னன் விசாரனை

பொழுது விடிந்தது. மன்னன், நாயனார் பாலணைந்தான். அவன், தான்கண்ட கனவை நாயனாருக்குத் தெரிவித்தான். நாயனாரும், சமணர் நிகழ்த்தியதையும், அதன்பொருட்டுத் தாம் ஏற்ற சூளையும் மன்னனுக்கு விளங்க உணர்த்தினார். மன்னன் சமணரை அழைப்பித்து விசாரணை புரிந்தான். சமணர், தண்டி கண் பெற்றால், தாம் இவ்வூரை விட்டுப் போவதாக உறுதி கூறினர்.

## அடிகள் கண் பெறல்

*தண்டியடிகள் குளக்கரைக்குச் சென்றார். மன்னனும் உடன் போந்தான். மன்னன், கரையிலே நின்று, தண்டியடிகளை நோக்கி, 'சிவநேயரே! சிவனருளால் கண்ணைப் பெறுதலைக் காட்டுக' என்றான். நாயனார், 'சிவபெருமானுக்கு யான் தொண்டு செய்வது உண்மையாயின், மன்னன் எதிரே, யான் கண் பெறுதல் வேண்டும். சமணர் கண்ணிழத்தல் வேண்டும்' என்று உரைத்து, அஞ்செழுத்தை ஓதிக்கொண்டே திருக்குளத்தில் மூழ்கினார்; கண் பெற்றே எழுந்தார். சமணர் கண்ணிழந்து தடுமாறினர்.*

*அக்காட்சி கண்ட மன்னன், சமணரை ஊரைவிட்டுத் துரத்தி னான்; சமணருடைய பள்ளிகளையும் பாழிகளையும் இடித்தான்; திருக்குளத்தை நாயனார் கருத்துப்படி ஒழுங்கு செய்தான்; நாயனாரைப் பணிந்து விடைபெற்றுச் சென்றான். தண்டியடிகள், வழக்கம்போலத் தொண்டுசெய்து, சிவபெருமான் திருவடி நீழலை யடைந்தார்.*

# மூர்க்கர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*தண்டலை சூழ்திரு வேற்காட் டூர்மன்னன் தருகவற்றால்*
*கொண்டவல் லாயம்வன் சூதரை வென்றுமுன்*
*கொண்டபொருள்*
*முண்டநன் னீற்றன் அடியவர்க் கீபவன் மூர்க்கனென்பர்*
*நண்டலை நீரொண் குடந்தையின் மேவுநற் சூதனையே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*தொண்டைவள நாட்டுவளர் வேற்காட் டூர்வாழ்*
*தொல்லுழவர் நற்சூதர் சூது வென்று*
*கொண்டபொருள் கொண்டன்பர்க் கமுத ளிக்கும்*
*கொள்கையினார் திருக்குடந்தை குறுகி யுள்ளார்*
*விண்டிசைவு குழறுமொழி வீணர் மாள*
*வெகுண்டிடலான் மூர்க்கரென விளம்பு நாமம்*
*எண்டிசையும் மிகவுடையார் அண்டர் போற்றும்*
*ஏழுலகு முடனாளும் இயல்பி னாரே.*

தொண்டை நாட்டில் திருவேற்காடு என்றொரு பதியுண்டு. அத்திருப்பதியில் வேளாளர் மரபில் தோன்றியவர் **மூர்க்க நாயனார்.** அடியவரை அமுது செய்வித்த பின்னர் உண்பது அவரது நியதி. அடியவர் விரும்பும் பொருளைக் கொடுப்பதும் அவர்தம் வழக்கம்

### வறுமைக் கொடுமை

நாளுக்குநாள் அடியவர் கூட்டம் பெருகலாயிற்று. நாயனாரிடம் இருந்த பொருளெல்லாஞ் செலவாயின. நிலம் முதலியவற்றை விற்றும் அவர் தமது தொண்டை வழாது நடாத்தி வந்தார். எவ்வகைப் பொருளும் இல்லாத நிலைமை நேர்ந்தது. அடியவர் பெருமான் நொந்து நொந்து நைந்தார்.

### சூதாட்டத் திறம்

நாயனார் சூதாட்டத்தில் வல்லவர். சூதாட்டத்தின் வாயிலாக வாவது பொருளீட்டித் தமது தொண்டாற்ற அவர் கருதினர். திருவேற்காட்டில் தம்முடன் சூதாடுவோரை நாயனார் கண்டாரில்லை.

*ஆகவே, அவர், பல திருப்பதிகளுக்குச் செல்வாரானார். ஆங்காங்கே அவர் சூதாடுவார்; கிடைக்கும் பொருளைக் கொண்டு அடியவருக்கு அமுதூட்டுவார்.*

### மூர்க்கரென்னும் பெயருக்குக் காரணம்

*நாயனார் கும்பகோணத்தை அடைந்தார்; அங்கும் சூதாட்டத்தால் பொருள் பெற்றுத் தமது தொண்டாற்றினார். அவர், முதல் ஆட்டத்தில் தோற்பார்; பின் ஆட்டங்களிலெல்லாம் வெற்றி பெறுவார்; ஆட்டத்தில் மாறுபடுவோரை உடைவாளால் குத்துவார்; அதனால் மூர்க்கர் என்னும் அருமைத் திருநாமமும் உடையவரானார்.*

### கடைப் பந்தி

*சூதில் கிடைக்கும் பொருள்களை மூர்க்கர் தங்கருமத்துக் கெனச் சிறிதும் பயன்படுத்தமாட்டார்; அவற்றைச் சமையல் செய்வோரிடங் கொடுப்பார். அச் சமயற்காரர் அப்பொருள் கொண்டு அமுதாக்குவார். அடியவரெல்லாரும் உண்ட பின்னர், நாயனார் கடைப்பந்தியில் அமர்ந்து உண்பார். இவ்வாறு சிலநாள் திருத்தொண்டு செய்து, மூர்க்க நாயனார் சிவபெருமான் திருவடியைச் சேர்ந்தார்.*

# சோமாசிமாறர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*சூதப் பொழிலம்பர் அந்தணன் சோமாசி மாறனென்பான்*
*வேதப் பொருளஞ் செழுத்தும் விளம்பியல் லால்மொழியான்*
*நீதிப் பரன்மன்னு நித்த நியமன் பரவையென்னும்*
*மாதுக்குக் காந்தன் வன்தொண்டன் தனக்கு மகிழ்துணையே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*அம்பர்நகர் அந்தணர்சோ மாசி மாறர்*
*அன்பர்களாம் யாவர்க்கும் அமுத ளிப்பார்*
*உம்பர்நிகழ் வகையாகம் பலவுஞ் செய்யும்*
*உண்மையினார் ஐந்தெழுத்தும் ஓவா நாவார்*
*நம்பர்திகழ் திருவாரூர் நயந்து போற்றும்*
*நாவலர்கோன் அடிபரவும் நன்மை யாலே*
*இம்பர்தொழ உம்பர்பணிந் தேத்த மேலை*
*ஏழுலகு முடனாளும் இயல்பி னாரே.*

**சோமாசிமாற நாயனார்** சோழநாட்டில் உள்ள திருவம்பரில் பிறந்தவர். அவர் வேதியர்; சிவனடியார். அவர் அடியவருக்கு அமுதூட்டுவார்; யாகஞ் செய்வார்; ஐந்தெழுத் தோதுவார்; அடியவர் எவராயினும் அவரைச் சிவமெனக் கொண்டு வழிபாடு செய்வார். அந்நாயனார் திருவாரூரை அடைந்து, வன்தொண்டப் பெருமானுக்கு இடையறாப் பேரன்பு செலுத்திப் புலன்களை வென்று சிவலேகத்தை அடைந்தார்.

# சாக்கியர்

## திருத்தொண்டத் தொகை

*வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே*
*மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்*
*சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்*
*செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்*
*கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்*
*கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்*
*ஆர்கொண்ட வேற்கூற்றான் களந்தைக்கோன் அடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.*

## திருத்தொண்டர் திருவந்தாதி

*தகடன ஆடையன் சாக்கியன் மாக்கற் றடவரையின்*
*மகடனந் தாக்கக் குழைந்ததிண் தோளர்வண் கம்பர்செம்பொன்*
*திகழ்தரு மேனியிற் செங்க லெறிந்து சிவபுரத்துப்*
*புகழ்தரப் புக்கவன் ஊர்ச்சங்க மங்கை புவனியிலே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*சங்கமங்கை வரும்வேளாண் தலைவர் காஞ்சிச்*
*சாக்கியரோ டியைந்தவர்தந் தவறுஞ் சைவத்*
*துங்கமலி பொருளும்உணர்ந் தந்த வேடந்*
*துறவாதே சிவலிங்கந் தொழுவோர் கண்டோர்*
*அங்கல்மலர் திருமேனி அழுந்தச் சாத்தி*
*அமருநாள் மறந்தொருநாள் அருந்தா தோடிச்*
*செங்கலெறிந் திடும்அளவில் மகிழ்ந்த நாதன்*
*திருவருளால் அமருலகஞ் சேர்ந்து ளாரே.*

***சாக்கிய நாயனார்,*** *திருச்சங்கமங்கையிலே, வேளாளர் மரபிலே தோன்றியவர். அவர் உயிர்களிடத்தில் இரக்கமுடையவர். 'பிறப் பிறப்புத் துன்பத்தினின்றும் விடுதலையடையும் வழி யாது?' என்ற விசாரத்தில் அவர் பெரிதும் தலைப்பட்டனர்.*

## ஆராய்ச்சியால் சிவநெறி

அவ்விசாரத்தின் பொருட்டு நாயனார் திருக்காஞ்சியை அடைந்தார்; பல மார்க்கங்களை ஆராய்ந்தார்; பௌத்த சமயத்தில் நுழைந்தார். அந்நெறி நின்று ஒழுகிவரும் நாளிலும் அவர் வேறு சமய உண்மைகளையும் ஆராய்ந்தவண்ணமா யிருந்தனர். அவ்வாராய்ச்சிக ளால், அவர்க்கு உற்ற தெளிவும், திருவருளும் அவர்க்குச் **சிவநெறியே செந்நெறி** என்பதை விளங்கச் செய்தன. அதனால் அவர், சிவநெறியில் நிற்பாரானார்.

## பௌத்த வேடமும் சிவ சிந்தனையும்

நாயனார் பௌத்த கோலத்தை நீக்கினாரில்லை. 'எந்நிலையில் நின்றால் என்ன! எக்கோலங் கொண்டால் என்ன! சங்கரன் திருவடியை மறவாதிருத்தலே பொருள்' என்ற பரந்த உணர்வு அவர்பால் தோன்றிற்று. அதனால் பௌத்த வேடந் தாங்கியே அவர் சிவனடியைச் சிந்தை செய்து வந்தனர்.

## கல்லெறிதல்

நாயனார், 'சிவலிங்கத்தைக் கண்டு வழிபட்ட பின்னரே உண்ணுதல் வேண்டும்' என்று ஓர் உறுதி கொண்டார்; கொண்ட படியே நடந்து வந்தார்; ஒருநாள், ஒரு வெளியிலே உள்ள சிவ லிங்கத்தைக் கண்டார்; கண்டதும் ஆனந்த வாரிதியில் தோய்ந்தார்; செயலற்றவரானார். இந்நிலையில் அவருக்கு வழிபாட்டு எண்ணம் தோன்றியது. தோன்றவே, அவர், அருகே கிடந்த ஒரு செங்கல்லை எடுத்தனர்; அதைச் சிவலிங்கத்தின் மீது எறிந்தனர். இளங்குழவிகள் எது செய்யினும், அது, பெற்றோர்க்கு இன்பூட்டுவது இயல்பன்றோ? அதேபோல, நாயனார் செயலும் சிவபெருமானுக்கு இன்பூட்டிற்று.

## கன்மலரால் அர்ச்சனை

அடுத்த நாள், நாயனார் தமது நியதியைச் செய்யச் சென்றார். நேற்றைய செயல் அவர் தம் மனத்தில் உற்றது. அவர் கல்லெறிந்த குறிப்பை ஓர்ந்தனர்; 'எனக்கு அவ்வெண்ணம் சிவபெருமான் திருவருளாலேயே பிறந்தது. ஆகவே, கல்லெறிதலையே தொண்டாகக் கொள்வது திருவருள்வழி நிற்பதாகும்' என்று எண்ணினர்; எண்ணியவாறே, நாடோறுங் கல்லெறிந்து ஆண்டவனை வழிபட்டு வந்தனர்.

## மறதியால் உண்ணப் புகல்

ஒருநாள் சிவபெருமான் திருவருளால் தமது நியதித் தொண்டைச் செய்ய மறந்து நாயனார் உண்ணப் புகுந்தார். அவ்வேளையில் தொண்டு நினைவு அவருக்குத் தோன்றிற்று. தோன்றவே, நாயனார், 'அந்தோ! இன்று தொண்டை மறந்தேனே!' என்று எழுந்தார்; விரைந்து

நடந்தார்; சிவலிங்கப் பெருமானை அடைந்தார்; திருமுன்னே நின்றார்; ஒரு கல்லை எடுத்துச் சிவலிங்கப் பெருமான்மீது எறிந்தார். சிவபெருமான், நாயனார் அன்புக்கு எளியராய், உமாதேவியாருடன் மழவிடையின்மேல் இவர்ந்து, அவரைச் சிவலோகத்துக்கு அழைத்துச் சென்றார்.

# சிறப்புலியார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*புவனியில் பூதியுஞ் சாதன மும்பொலி வார்ந்துவந்த*
*தவநிய மர்க்குச் சிறப்புச்செய் தத்துவ காரணனாம்*
*அவனியிற் கீர்த்தித் தென்னாக்கூர் அதிபன் அருமறையோன்*
*சிவனிய மந்தலை நின்றதொல் சீர்நஞ் சிறப்புலியே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*திருவாக்கூர் அருமறையோர் உலகம் ஏத்துஞ்*
*சிறப்புலியார் மறப்புலியார் உரிமேற் செங்கண்*
*அரவார்த்தார் வரும்ஏற்றார்க் கன்ப ரானார்க்*
*கமுதளிப்பார் ஒளிவெண் ணீறணிந்த மார்பர்*
*பெருவாக்கால் மறைபரவி யாகம் போற்றும்*
*பெற்றியினார் ஐந்தெழுத்தும் பிறழா தோதிக்*
*கருவாக்கா இறைவன்தா ளிணைகள் சேர்ந்த*
*கருத்தினார் எனையாவுந் திருத்தி னாரே.*

***சிறப்புலி நாயனார்,*** சோழமண்டலத்திலே, திருவாக்கூரிலே, வேதியர் குலத்திலே தோன்றியவர். அடியவர்க்கு அமுதூட்டுவதும், பொருள் உதவுவதும் அவர்தம் திருத்தொண்டு. ஐந்தெழுத்து ஓதுவதும், யாகஞ் செய்வதும் அவர்தம் வழக்கம். இவ்வாறு சிவபணி செய்து, சிறப்புலி நாயனார் ஆண்டவன் திருவடி சேர்ந்தார்.

# சிறுத்தொண்டர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

***புலியின் அதளுடைப் புண்ணியற் கின்னமு தாத்தனதோர்***
***ஒலியின் சதங்கைக் குதலைப் புதல்வன் உடல்துணித்துக்***
***கலியின் வலிகெடுத் தோங்கும் புகழ்சிறுத் தொண்டன் கண்டீர்***
***மலியும் பொழிலொண் செங்காட்டங் குடியவர் மன்னவனே.***

## திருத்தொண்டர் புராண சாரம்

***பல்குமருத் துவர்அதிபர் செங்காட்டங் குடிவாழ்***
***படைத்தலைவர் அமுதளிக்கும் பரஞ்சோதி யார்மெய்ச்***
***செல்வமிகு சிறுத்தொண்டர் காழி நாடன்***
***திருவருள்சேர்ந் தவர்வளருஞ் சீராளன் தன்னை***
***நல்குதிரு வெண்காட்டு நங்கைசமைத் திடப்பின்***
***நன்மதிச்சந் தனத்தாதி தலைக்கறியிட் டுதவப்***
***புல்கவரும் வயிரவர்தாம் மகிழ்ந்துமக வருளப்***
***போற்றியவர் சிவனருளே பொருந்தி னாரே.***

*திருச்செங்காட்டங்குடி சோழநாட்டில் உள்ளது. அப் பதியில் பல குலங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று மாமாத்திரர் குலம். அதன்கண் தோன்றியவர்* **பரஞ்சோதியார்**. *அவர், ஆயுள்வேதக் கலைகளிலும் வடமொழிக் கலைகளிலும் புலமை வாய்ந்தவர்; படைத்தொழில், யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றிலும் பயிற்சிபெற்றவர்; சிவபத்தி சிவனடியார் பத்தியிற் சிறந்தவர்.*

### அமைச்சுத் திறன்

*பரஞ்சோதியார், சோழ மன்னனிடத்தில் அமைச்சராய் அமர்ந்து, கடனாற்றி வந்தார். அவர், வேற்றரசரை வெல்வதிலும், அவர்தம் நாடுகளைப் பற்றுவதிலும் பேர்பெற்று விளங்கினர். ஒருமுறை வடபுலத்திலே உள்ள வாதாவி என்னும் நகரத்தில் போர் மூண்டது. அப்போரில் பரஞ்சோதியார் தலைப்பட்டு வெற்றி பெற்றார். அவ்வெற்றியின் பயனாக மணி, நிதி முதலியவற்றைக் குவையல் குவையலாகவும், யானை, குதிரை முதலியவற்றைக் கூட்டங் கூட்டமாகவும் பரஞ்சோதியார் திரட்டி வந்தார். அவை களைக் கண்ட மன்னன், பரஞ்சோதியார் திறத்தை வியந்து வியந்து*

பேசினான். அப்பொழுது அங்கு இருந்த மற்ற அமைச்சர், மன்னனைப் பார்த்து, 'இவர் சிவனடியார். இவருக்கு எதிராவார் ஒருவரும் இல்லை' என்று மொழிந்தனர். அது கேட்ட மன்னன் நடுக்குற்றான்; 'அந்தோ! கெட்டேன்; இதுவரை இவரைச் சிவனடியார் என்று உணர்ந்தேனில்லை; போர் முகத்துக்கு அனுப்பினேன்; பாவியானேன்' என்று வருந்தினான்; பரஞ்சோதியார் காலில் விழுந்தான்; விழுந்து, 'அடியவரே! என்பிழை பொறுத் தருளல் வேண்டும்' என்று வேண்டினான். பரஞ்சோதியார், 'என் கடமையை யான் செய்தேன். அதனால் என்ன தீங்கு?' என்று சொன்னார். மன்னன் அவருக்கு நிதிக்குவையல்களையும், விருத்தி களையும் கொடுத்து, 'உமது மெய்ந்நிலைமையை யான் அறியாதவாறு நடந்து வந்தீர். இனி, என் கருத்துக்கு இசைந்து நடக்குமாறு வேண்டுகிறேன். இனி, இப்பணி செய்தல் வேண்டா. திருத்தொண்டு செய்துகொண்டிரும்' என்று வணங்கி விடை கொடுத்தான். பரஞ்சோதியார் விடைபெற்றுத் தம் திருப்பதி சேர்ந்தார்.

### சிறுத்தொண்டராதல்

பரஞ்சோதியார், திருச்செங்காட்டங்குடியில் உள்ள கணபதீச் சுரப் பெருமானை வழிபடுவார்; தமக்கு இல்லக் கிழத்தியராக வாய்த்த **திருவெண்காட்டு நங்கையார்** என்ற பெருமாட்டி யாருடன் கலந்து நல்லறம் ஓம்புவார்; சிவனடியார்க்கு அமுதூட்டிய பின்னர்த் தாம் உண்பார். அவர், அடியவரிடத்தில் மிகச் சிறியராய் நடப்பர். அதனால் அவருக்குச் **சிறுத்தொண்டர்** என்னுந் திருநாமம் வழங்கலாயிற்று.

### சீராளதேவர் பிறப்பு

சிறுத்தொண்டர் இவ்வாறு ஒழுகிவருநாளில், அவர்தம் மனைவியார் கருவுற்றார். அவருக்கு ஒரு புதல்வர் பிறந்தனர். அப்புதல்வருக்குச் **சீராளதேவர்** என்னும் பெயர் சூட்டப்பட்டது. சீராளதேவர் பிறை என வளர்ந்து வந்தனர். அவர் தக்க பருவத்தில் பள்ளிக்கனுப்பப்பட்டனர்.

### ஞானசம்பந்தரது அருள்பெறல்

திருச்செங்காட்டங்குடிக்குத் திருஞானசம்பந்தப் பெருமான் எழுந்தருளினார். அவரது வருகையைக் கேள்வியுற்ற சிறுத் தொண்டர் அவரை எதிர்கொண்டு அழைத்துவந்தனர்; அன்பில் மூழ்கிப் பலவித உபசாரம் செய்தனர். திருஞானசம்பந்தப் பெருமான், சிறுத்தொண்டரைத் தமது திருப்பதிகத்தில் வைத்துச் சிறப்பித் தருளினார்.

### சிவபெருமான் வயிரவராய்ப் போந்து ஆத்தியின் கீழிருத்தல்

*சிறுத்தொண்டரின் திருத்தொண்டு, திருக்கயிலையையும் ஈர்த்தது. தொண்டர் அன்பை நுகரச் சிவபெருமான் திருவுளங் கொண்டார்; கொண்டு, ஒரு வயிரவத் திருக்கோலந் தாங்கித் திருக்கயிலையினின்றும் புறப்பட்டார்; திருச்செங்காட்டங்குடி சேர்ந்தார்; பசியால் பீடிக்கப்பட்டார் போல் நடந்தார்; 'சிறுத் தொண்டர் வீடு எங்கே எங்கே' என்று விசாரித்துவந்தார்; சிறுத்தொண்டரது வீட்டை அணுகி, வாயிலிலே நின்றார்; 'சிறுத் தொண்டர் வீட்டில் உளரா?' என்று கேட்டார். தாதியராகிய* ***சந்தன நங்கையார்***, *'மாதவர் வந்துள்ளார்' என்று விரைந்துவந்து, வயிரவர் திருவடியிலே வீழ்ந்து வணங்கினார்; வணங்கி, 'நாயனார் அடியவரைத் தேடிச் சென்றிருக்கிறார். அடிகள் உள்ளே எழுந் தருளலாம்' என்று சொன்னார். அதற்கு வயிரவர், 'பெண்கள் உள்ள இடத்தில் நாம் தனித்துப் புகுவதில்லை' என்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வுரை, திருவெண்காட்டு நங்கையார்க்குக் கேட்டது. 'அடியவர்போய் விடுவரோ' என்று எண்ணி அம்மையார் ஓடி வந்தார்; வந்து, 'அடிகளே! நாயனார், அடி யவர்க்கு நாடோறும் அமுது செய்விப்பது வழக்கம். இன்று ஓர் அடியவரும் வரவில்லை. அதனால் அவர், அடியவரைத் தேடிப் போயுள்ளார்; இப்பொழுது வருவார். புதியவராக அடிகள் எழுந்தருளி இருக்கிறீர். அடிகள் திருவேடத்தைப் பார்த்தால், நாயனார் மகிழ்வெய்துவார். அடிகள் உள்ளே எழுந்தருள்க' என்று வேண்டினர். வயிரவர், அவ்வேண்டு தலுக்கு இசையாது, 'நாம் இருப்பது வடதேசம்; சிறுத் தொண்டரைக் காணவே வந்தோம்; அவர் இல்லாத வேளையில் இங்கே தங்கமாட்டோம்; கணபதீச்சுரத்தில் திரு ஆத்தியின்கீழ் இருப்போம். சிறுத்தொண்டர் வந்ததும் இதைத் தெரிவியுங்கள்' என்று கூறிக் கணபதீச்சுரத்தை அணைந்தனர்; திரு ஆத்தியின்கீழ் வீற்றிருந்தனர்.*

### வயிரவர் வந்தமை கேட்டு மகிழ்தல்

*சிறுத்தொண்டர் அடியவரைத் தேடித் தேடி அலைந்தனர்; ஒருவரையுங் காணாது வீடு சேர்ந்தனர்; நிலைமையை மனைவி யார்க்குக் கூறி வருந்தினர். அம்மையார், நாயனாரைப் பார்த்து, 'இப்பொழுது இங்கே ஒரு வயிரவர் வந்தனர்' என்று சொன்னார். அச்சொற் கேட்டதும், நாயனார், 'உய்ந்தேன்; உய்ந்தேன்' என்று கூத்தாடினார்; 'அவர் எங்கே?' என்று கேட்டார். அம்மையார், 'அவர் வடதேசத்தவராம். அவரை இங்கே இருக்க வேண்டினேன். அவர் இசையாது சென்றனர். அவர் கணபதீச்சுரத்துள்ள திரு ஆத்தியின்கீழ் அமர்ந்திருக்கின்றனர்' என்று கூறினார்.*

### பசு உணவு கேட்டல்

உடனே சிறுத்தொண்டர் மனோ வேகமாக ஓடினார். வயிரவரைக் கண்டனர்; பணிந்து நின்றனர். வயிரவர், நாயனாரைப் பார்த்து, 'பெரிய சிறுத்தொண்டர் நீரோ?' என்று கேட்டனர். நாயனார், 'சிவனடியார் எளியேனை அப்படிச் சொல்வது வழக்கம்' என்று வயிரவரை மீண்டும் பணிந்தார்; பணிந்து, 'அடிகளே! ஏழைக் குடிலுக்கு எழுந்தருளல் வேண்டும்; அமுது செய்தல் வேண்டும்' என்று முறையிட்டார். வயிரவர், தொண்டரைப் பார்த்து, 'உம்மைக் காண வந்தோம்; நாம் வடதேசத்தினோம்; எமக்கு அமுதளித்தல் உம்மால் இயலாது' என்று கூறினார். அதற்குச் சிறுத்தொண்டர் ,'அடிகள் ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? அடிகளின் உணவு முறையைத் தெரிவியுங்கள். அவ்வாறே செய்விப்பேன். அருமை ஒன்றும் இல்லை' என்று சொற்றனர். அது கேட்ட வயிரவர், 'நாம் ஆறு மாதத்துக்கு ஒருமுறை உணவு கொள்ளுதல் இயல்பினோம். அந்நாள் இந்நாளாகும். இன்று, பசுவைக் கொன்று சமைத்து உண்பது நமது வழக்கம். இஃது உமக்கு அருமை யன்றோ?' என்றனர். அதற்குச் சிறுத்தொண்டர், 'சால நன்று! எனக்கு முந்நிரையும் உண்டு. ஒன்றுங் குறைவில்லை. அடிகளுக்குத் திருவமுதாகும் பசு இன்ன தென்று தெரிதல் வேண்டும். தெரிந்தால், யான் போய் அமுதாக்கு வித்து விரைவில் திரும்புவேன்' என்று சொல்லி வணக்கஞ் செய்தார்.

### பசுவின் இயலுரைத்தல்

வயிரவர், 'தொண்டரே! நாம் உண்ணும் பசு நரப் பசுவாகும். அஃது ஐந்து வயதுடையதாய், உறுப்பில் பழுதில்லாததாய் இருத்தல் வேண்டும். இன்னும் அதன் இயல்பைக் கூறுவோம். கூறினால், அஃது உமக்குப் புண்ணில் வேல் எறிந்தாற்போலத் தோன்றுமே! என் செய்வது?' என்றனர். சிறுத்தொண்டர், 'நன்றாகக் கூறலாம்' என்று செப்பினர். வயிரவர், 'அச்சிறுவன், ஒரு குடிக்கு ஒருவனாய் இருத்தல் வேண்டும். அவனைத் தாய் உவந்து பிடிக்கத் தாதையும் உவந்தே அரிதல் வேண்டும். இவ்வாறு அரிந்து சமையல்செய்தால் நாம் உண்போம்' என்றுரைத்தனர். சிறுத்தொண்டர், 'இஃதும் எனக்கு அரியதன்று. அடிகள் திருவமுது செய்ய இசைவது போதும்' என்று கூறினர். வயிரவர் இசைந்தனர்.

### பிள்ளையை உன்னல்

சிறுத்தொண்டர் பேரானந்தத்துடன் வீடு நோக்கி விரைந்து நடந்தனர். அவர்தம் வருகையை வெண்காட்டு நங்கையார் ஆவலுடன் எதிர் நோக்கிக்கொண்டிருந்தார். நாயனார் முகமலர்ச்சி யோடு வருதலை நங்கையார் கண்டார்; கண்டு, அகமகிழ்ந்தார். அம்மையார் நாயனாரைத் தொழுது, வயிரவர் செய்கையைக் கேட்டார். நாயனார், வயிரவர் விருப்பத்தைத் தெரிவித்தார். அது

கேட்ட அம்மையார், 'ஒரு குடிக்கு ஒருவனாக உள்ள சிறுவனை எப்படிப் பெறுவது?' என்று வணங்கி நின்றார். நாயனார், அம்மையாரைப் பார்த்து, 'நிரம்பப் பொருள் கொடுத்தால் சிறுவனைப் பெறுதல் கூடும். பொருளுக்குப் பிள்ளையைத் தருவோர் இருப்பர். ஆனால், அச்சிறுவனை உவப்புடன் அரியத் துணியும் பெற்றோர் கிடைப்பரோ! கிடைத்தல் அரிது. இனிக் காலந் தாழ்த்தல் ஆகாது. நமது அருமைப் புதல்வனை அழைப்போம்' என்று துணிந்து கூறினார். அம்மையார், 'நங்குலமணியைப் பள்ளியினின்றும் அழைத்து வாரும்' என்றார்.

### பள்ளியினின்றும் பிள்ளையை அழைத்து வரல்

உடனே சிறுத்தொண்டர் பள்ளி நோக்கினர். சீராள தேவர் ஓடிவந்து தந்தையைத் தழுவிக்கொண்டனர். சிறுத்தொண்டர் பிள்ளையைத் தூக்கித் தோள்மேல் வைத்து வீட்டுக்கு வந்தனர். அம்மையார் எதிர் சென்று பிள்ளையை வாங்கினார்; வாங்கிப் பிள்ளையின் தலைமயிரைத் திருத்தினார்; முகந் துடைத்தார்; தமது ஆருயிரைத் திருமஞ்சனமாட்டினார்; அலங்கரித்தார்; கணவனார் கையிற் கொடுத்தார்.

### செயற்கருஞ் செய்கை

சிறுத்தொண்டர் புத்திரனை அன்போடு வாங்கினர்; அடுக்களைக்குச் செல்லாமல் வேறோர் இடத்துக்குச் சென்றனர். அம்மையார் பாத்திரங்களைக் கழுவி எடுத்துக்கொண்டு உடன் போனார். சிவபத்தியிலேயே ஈடுபட்டு நின்ற நாயனார், பிள்ளையின் தலையைப் பிடித்தார். அம்மையார், பிள்ளையின் காலை மடியிலே இடுக்கினார்; இரண்டு கைகளையும் தமது இரண்டு கைகளால் பற்றினார். சீராளதேவர், 'பெற்றோர் மகிழ்கிறார்' என்ற கருதி நகைசெய்தனர். சிறுத்தொண்டரும் அம்மையாரும் ,'நம்புதல்வன் நமக்குப் பெரும் பேறு அளித்தான்' என்று மகிழ்வெய்தினர். அம் மகிழ்வுடன் சிறுத்தொண்டர் செயற்கருஞ் செய்கை செய்தனர்.

### சமையல்

தலை இறைச்சி அமுதுக்கு உதவாதென்று அதை விலக்குமாறு அம்மையார் தோழியாரிடங் கூறினார். மற்ற உறுப்புக்கள் எல்லாம் சமைக்கப்பட்டன. வேறு கறிவகைகளுஞ் செய்யப்பட்டன. சோறும் ஆக்கப்பட்டது. சமையல் வேலை முடிந்ததை அம்மையார் நாயனார்க்குத் தெரிவித்தார்.

### வயிரவரை அழைத்து வரல்

சிறுத்தொண்டர் களிகூர்ந்து, திருஆத்தியை அடைந்தனர்; வயிரவரைத் தொழுதனர்; தொழுது, 'அடிகள் விரும்பியவாறு சமையல் செய்யப்பட்டது. கருணை கூர்ந்து எழுந்தருள்க' என்று

வேண்டி நின்றனர். வயிரவர் புறப்பட்டார். நாயனாரும் உடன் போந்தார். இருவரும் வீடு சேர்ந்தனர்.

### அமுது படைத்தல்

நாயனாரும் அம்மையாரும் வயிரவர்க்கு முறைப்படி வழிபாடு செய்தனர்; செய்து, 'அமுது படைக்கும் வகை எப்படி?' என்று அவரைக் கேட்டனர். வயிரவர், 'சோற்றுடன் கறிகளையும் ஒக்கப் படைக்க' என்றுரைத்தனர். வெண்காட்டு நங்கையார், பரிகலந் திருத்திச் சோறு கறிகளை முறைப்படி படைத்தார். வயிரவர் அவைகளைத் திருநோக்கஞ் செய்து, 'பசுவின் உறுப்புக்கள் எல்லாவற்றையும் சமைத்தீரா?' என்று கேட்டனர். அம்மையார், 'தலை இறைச்சி திருவமுதுக்கு ஆகாதென்று அதைக் கழித்தோம். பிற சமைக்கப்பட்டுள்ளன' என்று பணிந்தார். வயிரவர் 'தலையும் வேண்டும்' என்னறனர். நாயனாரும் நாயகியாரும் திகைத்து நின்றனர். அப்பொழுது தாதியாராகிய சந்தனநங்கையார், 'வயிரவர் திருவமுது செய்யுபோது, தலை இறைச்சியின் மீது அவர்தம் எண்ணம் செல்லினும் செல்லும் என்று நினைந்து அதையுஞ் சமையல் செய்து வைத்திருக்கிறேன்' என்று சொல்லி, அதைக் கொண்டுவந்தார். திருவெண்காட்டு நங்கையார் அகம் மலர்ந்தது. நங்கையார் அத்தலை இறைச்சியையும் வாங்கி அன்புடன் படைத்தார்.

### உடனுண்ண அடியவரைத் தேடல்

பிறகு வயிரவர், சிறுத்தொண்டரைப் பார்த்தார்; பார்த்து, 'நாம் தனியே உண்பதில்லை. சிவனடியாருடன் உண்பது வழக்கம். சிவனடியாரை அழைத்து வாரும்' என்று கட்டளையிட்டனர். நாயனார்க்குச் சொல்லொணா வருத்தந் தோன்றியிற்று. 'அந்தோ! இவர் திருவமுது செய்ய இடையூறு நேர்ந்ததே' என்று நாயனார் ஏங்கினார்; வெளியே போனார்; சிவனடியாரைத் தேடினார்; ஒருவரையுங் கண்டாரில்லை; சோர்வுடன் வீட்டுக்குத் திரும்பினார்; நிலைமையை வயிரவர்க்குத் தெரிவித்து,'திருநீறு அணிந்தவர்க்கே யான் சோறிடுவது வழக்கம்' என்று சொல்லி அவரை வணங்கினார்.

### பிள்ளையைக் கேட்டல்

வயிரவர், நாயனாரை நோக்கி, 'உம்மைப் போலத் திருநீறு இட்டவரும் உளரோ? ஆகவே, நீர் எம்முடன் அமர்ந்து அமுது செய்க' என்று அருளினார். அதற்குமேல் வயிரவர் நங்கையாரை நோக்கி, 'நமக்குப் படைத்த சோறு கறிகளிலிருந்து ஒரு பகுதி எடுத்து இருவருக்கும் படைக்க' என்று பணித்தனர். உடனே நங்கையார் அப்படியே செய்தார். சிறுத்தொண்டர், 'நாம் உண்டால் வயிரவரும் உண்பர்' என்று எண்ணி, முதலில் உண்ணப் புகுந்தனர். வயிரவர், சிறுத்தொண்டரைத் தடுத்தனர்; தடுத்து, 'நாம் அன்னம் உண்டு

ஆறுமாத காலமாயிற்று. நீர் நாள்தோறும் உண்பவர். நாம் உண்ணும்வரை நீர் பொறுத்தலாகாதா? நம்முடன் உணவு கொள் வதற்குப் புத்திரன் இல்லையோ? இருப்பின் அவனையும் அழையும்' என்றனர். நாயனார், 'எனக்குப் புதல்வன் உண்டு; ஆனால் அவன் இப்போது இங்கு உதவான்' என்று சொன்னார். வயிரவர், அவன் வந்தாலன்றி நாம் உண்ணோம். அவனைத் தேடி அழைத்து வாரும்' என்றனர்.

## சீராளனை அழைத்தல்

நாயனாரும் நாயகியாரும் என் செய்வார்! திருவருளை நினைந்து வெளியே போந்தார்; 'மைந்தா! மணியே! சீராளா! வாராய்! வயிரவர் உடனுண்ண அழைக்கிறார்; வாராய்! வாராய்' என்று ஓலமிட்டு அழைத்தார். ஆண்டவனருளால் சீராளர் பள்ளியி னின்றும் ஓடிவருபவரைப் போல வந்தார். அம்மையார் அருமைப் புதல்வரை அணைத்து எடுத்தார்; எடுத்து நாயனாரிடங் கொடுத்தார். நாயனார், 'அடியவர் அமுது செய்யப் பெற்றோம்; பெற்றோம்' என்று ஆனந்தங் கொண்டார்; பிள்ளையுடன் வீட்டிற்குள் விரைந்து நுழைந்தார். அதற்கு முன்னரே வயிரவர் மறைந்தருளினார். சிறுத்தொண்டர் திகைக்கிறார்; விழுகிறார்; எழுகிறார்; மயங்குகிறார்; 'வயிரவர் எங்கே எங்கே' என்கிறார். இறைச்சியும் அமுதும் கலத்தில் காணோம். நாயனார் நடுக்குற்று வெளியே வந்தார்.

## அருள் புரிதல்

அப்போது, சிவபெருமான் உமாதேவியாருடனும் முருகப் பெருமானுடனுடம் மழவிடைமேல் காட்சியளித்தார். சிறுத் தொண்டரும், நங்கையாரும், புதல்வரும், தாதியரும் ஆண்டவனைக் கண்டு தொழுது ஆனந்தமயமானார். சங்கரனும், சங்கரியும், சண்முகனும் அந்நால்வருக்கும் அருள் சுரந்து, தங்களைப் பிரியாத பெருவாழ்வு நல்கி, உடன் அழைத்துச் சென்றனர்.

# கழறிற்றறிவார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*மன்னர் பிரானெதிர் வண்ணா னடலுவர் ஊறிநீறார்*
*தன்னர் பிரான்தமர் போல வருதலுந் தான்வணங்க*
*என்ன பிரான்அடி வண்ணான் எனஅடிச் சேரனென்னும்*
*தென்னர் பிரான்கழ நிற்றறி வானெனுஞ் சேரலனே.*

*சேரற்குத் தென்னா வலர்பெரு மாற்குச் சிவனளித்த*
*பாரக் கடகரி முன்புதன் பந்தி இவுளிவைத்த*
*வீரற்கு வென்றிக் கருப்புவில் வீரனை வெற்றிகொண்ட*
*சூரற் கெனதுள்ளம் நன்றுசெய் தாயின்று தொண்டுபட்டே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*காவலர்ம கோதையார் கொடுங்கோ ளூர்கோக்*
*கழறியவை அறிந்தகோச் சிலம்போசைக் கருத்தார்*
*நாவலர்கோன் நண்பர்அடிச் சேரன் என்றே*
*நவின்றுவரும் வண்ணானை நயந்த கோநற்*
*பாவலர்கோப் பாணபத் திரனால் வாய்ந்த*
*பரமர்திரு முகம்வாங்கிப் பணிகோ வெற்பின்*
*மேவியகோ ஆனைக்குக் குதிரை வைத்த*
*வீரர்கோ எனையாளுஞ் சேரர் கோவே.*

மலைநாட்டிலே, கொடுங்கோளூரிலே, சேரர்மரபிலே பிறந்தவர் **பெருமாக்கோதையார்**. 'உலக இயல்பும் அரச இயல்பும் உறுதியுள்ளன அல்ல' என்னும் எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. அதனால், அவர், சிவபக்தராய்த் திரு வஞ்சைக்களத்தப்பனை நாள்தோறும் வழிபட்டு வந்தனர்.

### பெருமாக் கோதையாரை அரசராக்க நினைத்தல்

அதுபோது சேரநாட்டைப் புரந்து வந்த செங்கோற் பொறையன் என்னும் மன்னன், தவமேற்கொண்டு வனம் புகுந்தனன். அமைச்சர் ஒருங்கு சேர்ந்து ஆலோசித்தனர். அவர் நினைவில் பெருமாக்கோதையர் தோன்றினார். பெருமாக்கோதையார் சேரர்குல முதல்வர் என்பதும், அரசிற்கு உரியவர் என்பதும் அமைச்சர்க்கு விளங்கின.

### கழறிற்றறிவாராதல்

*அமைச்சர், பெருமாக்கோதையார்பால் அணைந்தனர்; அவரைப் பணிந்தனர்; 'இம்மலைநாட்டின் செங்கோலை அடிகள் தாங்கி அருளல் வேண்டும்' என்று முறையிட்டனர். பெருமாக் கோதையார், 'இவர் தம் விருப்பத்துக்கு இணங்கினால், திருத் தொண்டுக்குப் பழுது நேருமன்றோ? திருத்தொண்டுக்குப் பழுது நேராதவாறு அரசு புரிதல் கூடுமோ? இதற்குத் திருவருள் துணை வேண்டும். எதற்குந் திருவருள் நோக்கை அறிதல் நலம்' என்று சிவசந்நிதி அடைந்தார்; விண்ணப்பஞ் செய்தார். திருத்தொண்டை வழாது அரசியற்றும் ஆற்றலும்,* ***யாரும் யாவும் கழறுவதை விளங்கிக் கொள்ளும் உணர்வும்,*** *அழியா விறலும், பெருங் கொடையும், படை வாகனம் முதலியனவும் திருவருளால் பெருமாக் கோதையார்க்குக் கிடைத்தன. மாக்கோதையார், ஆண்டவனை வாழ்த்தி வணங்கி வெளியே வந்தார்; அமைச்சர் வேண்டுகோளுக்கு இணங்கினார். யாரும் யாவும் கழறுவதை உணரும் இயல்பைப் பெற்றமையால், பெருமாக்கோதையார்க்குக்* ***கழறிற்றறிவார்*** *என்னும் பெயர் வழங்கலாயிற்று.*

### வண்ணானை வணங்கல்

*கழறிற்றறிவார் நன்னாளிலே திருமுடி சூட்டப்பெற்றார்; பெற்றதும், திருக்கோயிலுக்குச் சென்று ஆண்டவனைத் தொழுதார்; பின்னர் யானை மீது இவர்ந்து ஊர்வலம் வந்தார். அவ்வேளையில், வண்ணான் ஒருவன் எதிர்ப்பட்டான். அவன் தோளிலே உவர்ப் பொதி இருந்தது. வழியில் பெய்த மழையினால் உவர் கரைந்தது. அதனால் அவன் உடலில் வெண்மை பூத்திருந்தது. கழறிற்றறிவார், அவ்வண்ணானைச் 'சிவனடியார்' என மனத்துட் கொண்டார்; யானையை விட்டு இறங்கினார்; விரைந்தோடினார்; அவனைக் கும்பிட்டார். வண்ணான் அகங் கலங்கி, 'சிறியேன் அடி வண்ணான்' என்று சொன்னான். அதற்குச் சேரர்பிரான், 'அடியேன் அடிச் சேரன், திருநீற்றின் திருவேடத்தை நினைப்பித்தீர். வருந்தற்க' என்று விடை கொடுத்தனுப்பினார். அக்காட்சி, அமைச்சர்க்கும் மற்றவர்க்கும் வியப்பூட்டிற்று. அவர், மன்னரின் அடியவர் பத்தியைப் பாராட்டிப் போற்றினர். கழறிற்றறிவார் மீண்டும் யானை மீதேறி நகர்வலம் வந்தார்; அரண்மனை அடைந்தார்; அரியாசனத்தில் அமர்ந்தார்.*

### சிலம்பொலி கேட்பித்தல்

*சேரர்பெருமான் சிவநேயமும், திருநீற்றுச் செல்வமும் விளங்க, நீதி அரசியற்றி வந்தார்; 'தேடும் பொருளும் செல்வமும் பிறவும் தில்லைக் கூத்தன் திருவடிகளே' என்று கொண்டு, அக்கூத்தனைப் பூசித்து வரலானார். ஒவ்வொரு நாளும் பூசை முடிவிலே, தில்லைக் கூத்தன் தனது திருச்சிலம்பொலியை நாயனாருக்குக் கேட்பிக்கச்*

செய்வது வழக்கம். சேரர்பெருமான், சிவபூசையில் ஈடுபட்டும், சிவனடியார்க்கும் வறியவர்க்கும் வரையாது கொடுத்தும், சிவ வேள்விகள் பல செய்தும் வாழ்ந்து வந்தார்.

### ஆண்டவன் பாணபத்திரரை அனுப்பல்

மதுரையம்பதியிலே **பாணபத்திரர்** என்ற சிவனடியார் ஒருவர் இருந்தார். ஆண்டவனை இசையால் வழிபடுவது அவர்தம் திருத் தொண்டு. அவருக்குப் பொருள் உதவச் சிவபெருமான் திருஉளங் கொண்டார்; கொண்டு, பாணபத்திரர் கனவிலே தோன்றி, 'சேரன் நம்மாட்டு அன்புடையவன். அவன், உனக்குப் பொருள் உதவுவான். அதன் பொருட்டு நாம் திருமுகங் கொடுக்கிறோம். போய்வா' என்று திருவாய் மலர்ந்து, **'மதிமலி புரிசை'** என்னுந் திருப்பாசுரத்தை வரைந்து கொடுத்தருளினார்.

### பொருள் பொதிசெய்ய ஏவல்

பாணபத்திரர் ஆண்டவன் ஆணை தாங்கி, மலைநாட்டுக்குச் சென்றனர்; கொடுங்கோளூரிலுள்ள அரண்மனை அடைந்தனர்; தமது வருகையைச் சேரமான் பெருமாளுக்குத் தெரிவித்தனர். வேந்தர் ஓடிவந்து, பாணபத்திரரை வணங்கினர். பத்திரர், சேரரைத்தொழுது திருமுகத்தைக் கொடுத்தனர். மன்னர் பெருமான், திருமுகத்தை வாங்கிப் பார்த்தார்; அதைத் தலைமீது வைத்துக்கொண்டார்; தம்மை மறந்தார்; ஆனந்தக் கூத்தாடினார்; பாணரது பாதங்களிலே வீழ்ந்து வீழ்ந்து வணங்கினார்; திருமுகத்தைப் பலமுறை பார்த்துப் பார்த்து மகிழ்வெய்தினார்; மந்திரிமாரை அழைத்தார்; 'நமது பல வகைப்பட்ட பொருள்களையும் பொதிசெய்க; அவைகளை ஆட்களின்மீது சுமத்தி வருக' என்று கட்டளையிட்டார். அவர் அப்படியே செய்தனர்.

### பாணர் பொருட்செல்வம் மட்டும் எடுத்துச் செல்லல்

சேரமான் பெருமாள், பாணபத்திரருக்குப் பொதிகளைக் காட்டி, 'இவைகளைக் கொள்க. இன்னும் சேனை அரசு முதலியவற்றையும் கொள்க' என்று வேண்டினார். பாணபத்திரர், சேரர் பெருமானை நோக்கி, 'யான் விரும்புவதை மட்டும் பெற்றுக் கொள்ளல்வேண்டும். இதுவே சிவபெருமான் ஆணை. ஆகவே, அரசு முதலியவற்றை அடிகளே கொள்க' என்று சொன்னார். மன்னர் பெருமான், ஆண்டவன் ஆணையை மறுத்தற்கு அஞ்சினார்; பாணபத்திரர் சொல்வழி நின்றார். பாணபத்திரர், பொருள் - யானை - முதலியவற்றை ஏற்றுக்கொண்டனர். பின்னர், அவர், யானை மீதேறிப் புறப்பட்டனர். சேரர் பெருமான் அவரைத் தொடர்ந்து சென்றார். நகர்ப்புறம் எய்தியதும், மன்னரிடம் பாணனார் விடைபெற்று மதுரை நோக்கினார்.

### சிலம்பொலி கேளாமை

*வழக்கம்போல ஒருநாள் சேரமான் பெருமாள் பூசை செய்தார். அன்று அவருக்குத் திருச்சிலம்பொலி கேட்கவில்லை. அதனால் சேரர் பெருமானுக்கு வருத்தம் உண்டாயிற்று. 'யான் ஏதோ பிழை செய்துவிட்டேன். இவ்வுடல் எற்றுக்கு?' என்று உடைவாளை உருவினர்; மார்பிலே நாட்டினர். நாட்டினதும், திருச்சிலம்பொலி கேட்டது. உடனே அன்பர் உடைவாளை நீக்கினார்; தில்லைக் கூத்தனை வழுத்தினார்; வழுத்தி, 'ஐயனே! இத்திருவருளை முன்னம் புரியாதது என்னை?' என்று கேட்டனர். இச்சமயத்தில் வன் தொண்டப் பெருமானை நினைப்பிக்கத் தில்லைப் பெருமான் திருஉளங்கொண்டார்; கொண்டு, 'சேரனே! இன்று வன்தொண்டன் நம்மைச் சிற்றம்பலத்திலே கண்டு வழிபட்டான்; தமிழ் பாடினான். அத்தமிழ் நம்மைத் தன்வயப்படுத்திற்று. அதனால் சிலம்பொலி தகையப்பட்டது' என்று அசரீரியாக அருளிச் செய்தார்.*

### தில்லைக்கேகல்

*அது கேட்ட சேரர் பெருமான், அடியவர்க்கு ஆண்டவன் அருள் செய்யுந் திறத்தை வியந்தார்; சிற்றம்பலத்தையும் வன்தொண் டரையும் காணல் வேண்டும் என்று உறுதிகொண்டார்; உடனே புறப்பட்டார்; தில்லையை அடைந்தார்; சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடும் அப்பனைக் கண்டார்; அகங்குழைந்து குழைந்து உருகினார்; அன்பில் மூழ்கிப்* **பொன்வண்ணத்தந்தாதி** *பாடினார். சிற்சபேசன் திருச்சிலம்பொலி கேட்டது. சேரர் பெருமான் இன்பக் கடலில் அழுந்தினார். அவர் சிலநாள் அங்கே தங்கி இருந்தார்.*

### வன்தொண்டரைக் காணல்

*கழறிற்றறிவார் வன்தொண்டரைக் காண விரும்பினார்; தில்லையை விடுத்தார்; சீர்காழி முதலிய பல தலங்களை வணங்கிக் கொண்டே திருவாரூரை அணுகினார். மன்னர் வருகையைக் கேள்வி யுற்ற நம்பியாரூரர் அவரை எதிர் கொண்டனர். இவர் அவரை வணங்கினர். அவர் இவரை வணங்கினர். இருவரும் அன்பில் மூழ்கி ஒருவராயினர். இவ்வொருமையால் வன்தொண்டருக்குச்* **'சேரமான் தோழர்'** *என்னும் ஒரு நாமமும் வழங்கலாயிற்று.*

*பின்னர் இருவருஞ் சேர்ந்து திருக்கோயிலுக்குச் சென்றனர்; ஆண்டவனை வழிபட்டனர். சேரமான் பெருமாள்* **மும்மணிக் கோவை** *அருளிச் செய்தார். அங்கிருந்து இருவரும் பரவையார் திருமாளிகை நோக்கினர். பரவையார் அன்புடன் அடியவரை வரவேற்றனர். சேரமான் பெருமாள், வன்தொண்டருடன் சிலநாள் தங்கி இருந்தார்.*

### மூவேந்தர் சந்திப்பு

'மதுரை முதலிய திருப்பதிகளைக் கண்டு தொழுதல் வேண்டும்' என்னும் விருப்பம் வன்தொண்டருக்கு எழுந்தது. அவருடன் போந்து அத்திருப்பதிகளை வணங்குதற்குச் சேரமான் பெருமாளும், விரும்பினார். இருவரும் புறப்பட்டனர்; திருநாகைக் காரோணந் தொழுது, திருமறைக்காடு சேர்ந்தனர். திருமறைக் காட்டில் சேரமான் பெருமாள் திருவந்தாதி பாடினார். இருவரும் அங்கிருந்து மதுரையணைந்தனர். அங்கே சோழ மன்னனும் போந்திருந்தான். சேர சோழ பாண்டியர் மூவரும், நம்பியாரூரரும் ஒருவரோடொருவர் அளவளாவி, ஆலவாய்ப் பெருமானை வழி பட்டுக் கொண்டிருந்தனர்.

### இருவருஞ் சேரநாடு சேர்தல்

சிலநாள் கழிந்தபின்னை, சேரமான் பெருமானும் நம்பியா ரூரரும் மதுரையை விடுத்துத் திருவாரூரை அடைந்தனர். சேரமான் பெருமாள், வன்தொண்டரைத் தம் ஊருக்கு எழுந்தருளு மாறு பன்முறை வேண்டினார். அவர்தம் வேண்டுதலுக்கு இணங்கி, வன்தொண்டப் பெருமான் அவருடன் புறப்பட்டார். இருவரும் கொடுங்கோளூர் சேர்ந்து, அஞ்சைக்களத்தப்பனை வழிபட்டு வந்தனர்.

### வன்தொண்டர் திருவாரூரை நோக்கல்

வன்தொண்டப் பெருமானுக்குத் திருவாரூர்ப் பெருமான் நினைவு தோன்றிற்று. தோன்றவே, அவர் திருவாரூருக்குப் பயணமானார். அதுகண்ட சேரர் பெருமான், வன்தொண்டரைப் பணிந்து, 'பெருமானே! உம்மை யான் எங்ஙனம் பிரிந்து வாழ்வேன்?' என்றார். அதற்கு, வன்தொண்டப் பெருமான், 'நீர் சிறிதும் வருந்தற்க; பகை அரசை வென்று இவ்வூரை ஆண்டு வருக' என்று கூறியருளினார். சேரமான் பெருமாள், 'அடிகளின் திருவடிகளே அடியேன் அரசாட்சி' என்று அடிகளைத் தொழுதார். வன் தொண்டப் பெருமான் 'யான் திருவாரூர்ப் பெருமானை மறந்திரேன். நீர் இங்கு இருக்க' என்று சொல்லி வணங்கினார். அதற்கு மேல் மறுப்புரை கூறக் கழறிற்றறிவார் அஞ்சினார். அரசர் பெருமான், அமைச்சரை அழைத்து, 'நமது அரண்மனையில் உள்ள பண்டாரம் முழுவதையும் ஒருங்கே திட்டுக; அவற்றைப் பொதி பொதியாகக் கட்டுக; வன்தொண்டருக்கு முன்னர் அவற்றைச் சுமந்து செல்லு மாறு ஆட்களை ஏவுக' என்று பணித்தார். அப்பணியை அமைச்சர் உடனே செய்து முடிந்தனர். வன்தொண்டர், தோழரை அன்போடு தழுவி விடை கொடுத்துத் திருவாரூரை நோக்கினர். சேரமான் பெருமாள், வன்தொண்டரை மறவாத சிந்தையினராய், ஆட்சி புரிந்து வந்தார்.

**சேரர் குதிரை ஏறிச் செல்லல்**

*சிலகாலங் கழித்து, வன்தொண்டப் பெருமான் மீண்டும் கொடுங்கோளூரை அடைந்தார். அவர், அஞ்சைக்களத்தப்பனை வழிபட்டுக்கொண்டிருந்த வேளையில், ஆண்டவன் அருளால் ஒரு வெள்ளையானை வந்தது. அவர் அதன்மீது ஏறித் திருக்கயிலைக்கு எழுந்தருளினார். சேரமான் பெருமாள், அதை உணர்ந்து, குதிரை யின்மேல் ஏறித் தொடர்ந்தார். (மற்ற விவரம் சுந்தரர் வரலாற்றிற் காண்க.)*

# கணநாதர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*தொண்டரை யாக்கி அவரவர்க் கேற்ற தொழில்கள் செய்வித்*
*தண்டர்தங் கோனக் கணத்துக்கு நாயகம் பெற்றவன்காண்*
*கொண்டல்கொண் டேறியே மின்னுக்குக் கோல*

*மடல்கடொறும்*
*கண்டல்வெண் சோறளிக் குங்கடற் காழிக் கணநாதனே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*கந்தமலி வயற்காழி மறையோ ரேத்துங்*
*கணநாதர் திருத்தோணிக் கடவு ளார்க்கு*
*நந்தவனம் பலஅமைத்து மலருங் கொய்து*
*நற்றாமஞ் சொற்றாமம் நயந்து சாத்தி*
*வந்தவரைத் தொண்டாக்கிப் பணிகள் பூட்டி*
*வாதுசெய்த வாரணத்தை மகிழ்ந்து வாழ்த்திப்*
*புந்திமகிழ்ந் தரனருளால் கயிலை மேவிப்*
*பொருவில்கணத் தவர்காவல் பொருந்தி னாரே.*

**கணநாத நாயனார்** சோழ நாட்டிலே, சீர்காழியிலே தோன்றிய வேதியர். அவர், இல்லறத்தில் நின்று, திருத்தோணிப் பெருமானார்க்குத் திருத்தொண்டு செய்தவர். அவர் திருநந்தவனப் பணி செய்வோர். மலர் கொய்வோர், திருமாலை கட்டுவோர், திருமஞ்சன மெடுப்போர், திருவலகிடுவோர், திருமுறை எழுதுவோர், ஓதுவோர் முதலிய திருத்தொண்டர்களுக்குக் குறைகள் நேரு மாயின், அவைகளை நீக்குவார்; இத் திருத்தொண்டுகளில் மக்களை ஈடுபடுத்தி அவர்களைத் திருத்தொண்டர்களாக்குவார். இத்துணைத் திருத்தொண்டுகளுடன், நாயனார், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளைப் பேரன்போடு முப்போதும் வழிபட்டு வந்தார். அதனால், அவர் திருக்கயிலையடைந்து சிவகணங்களுக்குத் தலைவ ரானார்.

# கூற்றுவர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*நாதன் திருவடி யேமுடி யாகக் கவித்துநல்ல*
*போதங் கருத்திற் பொறித்தமை யாலது கைகொடுப்ப*
*ஓதந் தழுவிய ஞாலமெல் லாம்ஒரு கோலின்வைத்தான்*
*கோதை நெடுவேற் களப்பாள னாகிய கூற்றுவனே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*குன்றாத புகழாளர் களந்தை வேந்தர்*
*கூற்றுவனார் மாற்றலர்மண் கொண்டு சூடப்*
*பொன்தாழு முடிவேண்டப் புலியூர் வாழும்*
*பூசுரர்கள் கொடாதகலப் புனிதன் ஈந்த*
*மன்றாடுந் திருவடியே முடியாச் சூடி*
*மாநிலங்காத் திறைவனுறை மாடக் கோயில்*
*சென்றாசை யுடன்வணங்கிப் பணிகள் செய்து*
*திருவருளால் அமருலகஞ் சேர்ந்து ளாரே.*

**கூற்றுவ நாயனார்** களந்தைப் பதியின் தலைவர்; குறுநில மன்னர். அவர், அடியவர் பத்தியிற் சிறந்தவர். ஐந்தெழுத்தோதுவது அவர்தம் வழக்கம்.

### அந்தணர் முடிசூட்ட மறுத்தல்

நாயனார் வேற்றரசர் பலருடன் போர்புரிந்து பல நாடுகளைப் பற்றினார். அவர், சதுரங்க சேனை முதலிய அரசர்க்குரிய செல்வ மெல்லாம் பெற்றிருந்தனர். திருமுடி ஒன்று மட்டும் பெறாதிருந் தனர்; அக்குறையை நீக்குதற் பொருட்டுத் தில்லைவாழ் அந்தண ரிடம் முறையிட்டனர். அவர், 'சோழ மன்னர்க்கன்றி மற்றவர்க்கு நாங்கள் முடி சூட்டுவதில்லை' என்று மறுத்தனர். மறுத்த அந்தணர், திருமுடியைக் காக்கும் பொருட்டு, ஒரு குடியை மட்டும் அங்கே விடுத்துச் சேரநாட்டுக்குச் சென்றனர்.

### ஆண்டவன் திருவடியே முடியாதல்

கூற்றுவ நாயனார் வருந்தி வருந்தி, 'தில்லைக் கூத்தன் திருவடியே எனக்கு முடியாதல் வேண்டும்' என்று துயின்றார்.

தில்லைப் பெருமான், நாயனார் கனவிலே தோன்றித் திருவடியை முடியாக அவர்க்குச் சூட்டியருளினார். நாயனார் அத்திருவடியை முடியாகத் தாங்கி, உலகைப் புரந்து வந்தார். அவர், பல திருப்பதி களுக்குச் சென்று, வழிபாடு செய்து, சிவபிரான் திருவடி நீழலை யடைந்தனர்.

# பொய்யடிமையில்லாத புலவர்

## திருத்தொண்டத் தொகை

*பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்*
*பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க் கடியேன்*
*மெய்யடியான் நரசிங்க முனையரையர்க் கடியேன்*
*விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன்*
*கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்*
*கழற்சத்தி விரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்*
*ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.*

## திருத்தொண்டர் திருவந்தாதி

*தரணியிற் பொய்மை இலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்*
*பரணர்நக் கீரர் முதல்நாற்பத் தொன்பது பல்புலவோர்*
*அருள்நமக் கீயுந் திருவால வாய்அரன் சேவடிக்கே*
*பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலர்வர்களே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*பொய்யறியாக் கபிலரொடு பரண ராதிப்*
*புலவோர்பொற் பார்கலைகள் பொருந்த ஓதிச்*
*செய்யுளிடை வளர்ஆசு மதுர நல்ல*
*சித்திரம்வித் தாரமெனத் தெரிக்குஞ் செம்மை*
*மெய்யுடைய தொடைகளெல்லாம் மன்றுள் ஆடல்*
*மேவியகோன் இருதாளில் விரவச் சாத்திக்*
*கையுடைஅஞ் சலியினராய் அருளால் மேலைக்*
*கருதரிய அமருலகங் கைக்கொண் டாரே.*

**பொய்யடிமை யில்லாத புலவர்**, ‘செய்யுளின் சொற்றெளிவும், பல நூலாராய்ச்சியும், அவைகளால் பெறும் மெய்யுணர்ச்சியின் பயனும் சிவனடிக்கு அன்பு செய்தலேயாகும்’ என்னும் உண்மையை உணர்ந்தார்; அவ்வழி நின்றொழுகி ஆண்டவன் திருவடி சேர்ந்தவர்.

# புகழ்ச்சோழர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*புலமன் னியமன்னைச் சிங்கள நாடு பொடிபடுத்த*
*குலமன் னியபுகழ்க் கோகன நாதன் குலமுதலோன்*
*நலமன் னியபுகழ்ச் சோழன தென்பர் நகுசுடர்வாள்*
*வலமன் னியஎறி பத்தனுக் கீந்ததொர் வண்புகழே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*பொழில்மருவுங் கருவூர்வாழ் புகழார் சோழர்*
*போதகம்போல் என்னுயிரும் போக்கும் என்றே*
*அழல்அவிர்வாள் கொடுத்தபிரான் அதிக மான்மேல்*
*அடர்ந்தபெரும் படைஏவ அவர்கொண் டேய்ந்த*
*தழல்விழிகொள் தலைகாண்பார் கண்ட தோர்புன்*
*சடைத்தலையை முடித்தலையால் தாழ்ந்து வாங்கிக்*
*கழல்பரவி அதுசிரத்தின் ஏந்தி வாய்ந்த*
*கனல்மூழ்கி இறைவனடி கைக்கொண் டாரே.*

**புகழ்ச்சோழ நாயனார்** சோழநாட்டை ஆண்ட மன்னருள் ஒருவர்; உறையூரிலே தங்கி ஆட்சி புரிந்தவர்; சைவந்தழைக்க முயன்றவர். அவர், திருக்கோயில்களில் பூசனை வழாது நடத்து விப்பார்; திருத்தொண்டரின் குறிப்பறிந்து அவரவர் விரும்புமாறு உதவுவார். இம்முறையில் அவரால் திருநீற்றுநெறி ஓம்பப்பட்டு வந்தது.

### கருவூர்க்கேகல்

கொங்குநாட் டரசரிட மிருந்தும் குடகநாட் டரசரிட மிருந்தும் திறை வாங்குதற் பொருட்டுப் புகழ்ச்சோழ நாயனார் கருவூருக் கேகினார்; அத்திருப்பதியில் எழுந்தருளியுள்ள ஆனிலைப் பெரு மானை வழிபட்டுத் திருமாளிகை சேர்ந்து, அரியாசனத்தில் வீற்றிருந் தார். கொங்கரும், குடகரும் திறை செலுத்தினர். புகழ்ச்சோழர், அவர்கட்கு ஆசிகூறி அரசுரிமைத் தொழில் அருளினர்.

### திறை கேட்டல்

மேலும் சோழர்பெருமான், அமைச்சரை நோக்கி, 'நமது ஆணைக்குக் கீழ்ப்படாத அரசர் எவரேனும் உளரோ? அறிந்து

சொல்க' என்று கேட்டார். அமைச்சர் அதை ஆராயத் தலைப் பட்டனர்.

### எறிபத்த ரன்புணர்தல்

அந்நாளில் **சிவகாமியாண்டார்** என்னும் ஓர் அடியவர் ஆனிலைப் பெருமானுக்கு வழக்கம்பேலத் திருப்பள்ளித் தாமம் கொண்டுபோனார். அதனைப் பட்டத்து யானை பற்றி ஈர்த்துச் சிதறச் செய்தது. எறிபத்த நாயனார் அவ்யானையை வெட்டிக் கொன்றார். அதையுணர்ந்த புகழ்ச்சோழ நாயனார், எறிபத்த நாயனார் எதிரே சென்று, தமது வாளை அவரிடங்கொடுத்து, 'என்னையுங் கொன்றருள்க' என்று வணங்கினார். இவ்வன்புச் செயலால் புகழ்ச்சோழ நாயனார் கருவூரிலிருந்த போது திருத் தொண்டிலே மேம்பட்டவரானார்.

அமைச்சர், மன்னரிடம் போந்து, 'உங்கள் ஆட்சிக்குக் கீழ்ப் படியாத அரசன் ஒருவனே உளன். அவன் அதிகன் என்பவன். அவன் அருகேயுள்ள மலையரணத்தில் இருப்பவன்' என்றனர். உடனே புகழ்ச்சோழ நாயனார் அமைச்சரைப் பார்த்து, 'அவ்வரணை அதஞ்செய்து வாரும்' என்று கட்டளை யிட்டார். அமைச்சர், அப்படியே செய்தனர். அதிகன் அருஞ்சுரத்தில் ஓடி ஒளித்துக் கொண்டான். புகழ்ச் சோழரின் சேனை வீரர் அதிகனுடைய சேனை வீரரின் தலைகளையும், செல்வங்களையும், பிறவற்றையும் எடுத்துக் கொண்டு வந்தனர்.

### சடைத்தலை கண்டு வருந்தல்

ஒரு வீரரின் சடைத்தலை புகழ்ச்சோழ நாயனாருக்குப் புலனாயிற்று. ஆகவே, நாயனார், அலறுகிறார்; கதறுகிறார்; 'சைவந் தழைக்க அரசியற்றுவோன் யானோ? நன்று! நன்று!!' என்பார்; 'சோற்றுக் கடன் முடிக்கப் போர் புரிந்த அடியவரையோ என் சேனை கொன்றது!' என்பார்; 'இப்பழிக்கு என் செய்வேன்? என் உயிர் நீங்கவில்லையே' என்பார்.

### தீயிற் குதித்துத் திருவடி சேரல்

இவ்வாறு நாயனார் புலம்பி, அமைச்சரை நோக்கி, 'இவ் வுலகை ஆளுமாறும், சிவத்தொண்டைத் தவறாது நடத்துமாறும் என் புதல்வனுக்கு முடி சூட்டுக' என்று கூறினார். அமைச்சர் மனங் கலங்கி நின்றனர். நாயனார், அவரைத் தேற்றி, நெருப்பை வளர்ப்பித்தார்; நீற்றுக்கோலப் பொலிவுடன், திருச்சடைத் தலையை ஒரு மாணிக்கத் தட்டிலே ஏந்தினார்; அதைத் தமது திருமுடியிலே தாங்கினார்; நெருப்பை வலம் வந்தார்; ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டே நெருப்பில் இறங்கினார்; ஆண்டவன் திருவடி நீழலையடைந்தார்.

# நரசிங்கமுனையரையர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*புகழும் படிஎம் பரமே தவர்க்குநல் பொன்னிடுவோன்*
*இகழும் படியோர் தவன்மட மார்புனை கோலமெங்கும்*
*நிகழும் படிகண் டவனுக் கிரட்டிப்பொன் னிட்டவன்நீள்*
*திகழும் முடிநர சிங்க முனையர சன்திறமே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*நாடுபுகழ் முனைப்பாடி நாடு மேய*
*நரசிங்க முனையர்புவி நயந்து மன்றுள்*
*ஆடுமவர் ஆதிரைநாள் அடியார்க் கம்பொன்*
*அமுதளிப்பார் ஒளிவெண்ணீ றணிந்து தூர்த்த*
*வேடமுடை யவர்க்கிரட்டிச் செம்பொன் ஈந்து*
*விடுத்தழகார் ஆலயங்கள் விளங்கச் செய்து*
*தோடலர்தா ருடையபிரான் அருளை ஆளத்*
*தோன்றினார் ஏனையருளின் ஊன்றி னாரே.*

நரசிங்க **முனையரைய நாயனார்** என்பவர், திருமுனைப் பாடி நாட்டை ஆண்ட மன்னருள் ஒருவர். அவர், பகையரசரை வென்று, நன்னெறி வளர்த்து வந்தனர். திருநீறே அவர்க்கு உரிய செல்வம். சிவனடியே அவர்தம் சார்பு. திருக்கோயிற் பூசைகள் அவரால் குறைவற நடத்தப்பட்டு வந்தன.

### திருவாதிரையில் அமுது செய்வித்தல்

திருவாதிரைதோறும் அடியவருக்கு அமுது செய்வித்து, ஒவ்வொருவர்க்கும் நூறு பொன் கொடுப்பது நாயனாரது நியதிகளுள் ஒன்று. ஒரு திருவாதிரையிலே வழக்கம்போல அடியவர் வந்தனர். அவருடன் ஒரு தூர்த்தரும் போந்தனர். அவர் திருநீறணிந் திருந்தனர். அவரைக் கண்ட மற்ற அடியவர் ஒதுங்கினர்.

### தூர்த்தரை வணங்குதல்

நரசிங்கமுனையர் அத்தூர்த்தரிடஞ் சென்று அவரை வணங்கினர்; 'திருநீறணிந்தவர் தூர்த்தராயினும் ஆக. அவரை இகழலாகாது' என்பதை உலகம் உணர்ந்து உய்யும் பொருட்டு, அவருக்கு இரட்டிப்பாக இருநூறு பொன் அளித்தனர்; அவரைத் தொழுது முகமன் கூறி விடை கொடுத்தனுப்பினர். இவ்வாறு திருத்தொண்டு செய்து நாயனார் சிவனடி சேர்ந்தார்.

# அதிபத்தர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*திறமமர் மீன்படுக் கும்பொழு தாங்கொரு மீன்சிவற்கென்*
*றுறவமர் மாகடற் கேவிடு வோனொரு நாட்கனக*
*நிறமமர் மீன்பட நின்மலற் கென்றுவிட் டோன்கமலம்*
*புறமமர் நாகை அதிபத்த னாகிய பொய்யிலியே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*அலையாருங் கடல்நாகை நகருள் வாழும்*
*அதிபத்தர் பரதவர்கள் அதிபர் வேலை*
*வலைவாரி வருமீனில் தலைமீன் ஈசன்*
*வார்கழற்கே என்றுவிடும் மரபார் பன்னாள்*
*தலையான தொருமீனே சார நாளுந்*
*தந்தொழிலால் விடுத்துமிடி சாரச் செம்பொன்*
*நிலையாரும் மணிநயந்த மீனொன் றெய்த*
*நீத்தருளால் இறைவனடி நேர்ந்து ளாரே.*

சோழ நாட்டிலே, நாகப்பட்டினத்திலே, நுளைப்பாடியிலே, வலைஞர் குலத்திலே பிறந்தவர் **அதிபத்த நாயனார்** என்பவர். அவர், பரதவர்க்குத் தலைவர்; சிவபத்தியில் சிறந்தவர். வலைப்படும் மீன்களில் ஒரு தலைமீனைச் சிவபெருமானுக்கென்று கடலிலே விடுவது அவரது வழக்கம். வலையில் ஒரே மீன்படினும், அதனைச் சிவபெருமானுக் கென்றே அவர் கடலில் விடுவார்.

### வறுமை மேலிடல்

சிவபெருமான் திருவருளால் நாடோறும் ஒவ்வொரு மீனே கிடைப்பதாயிற்று. வழக்கம்போல அதிபத்தர் அதனைக் கடலிலே விட்டு வந்தனர். அவரது செல்வஞ் சுருங்கிற்று. சுற்றங்கள் உணவின்றி வருந்தின. உணவின்மையால் நாயனார் திருமேனியும் மெலிந்தது. அதுகுறித்து அவர் வருந்துவதில்லை. சிவபத்தியில் மட்டும் அவர்க்குத் தளர்ச்சி தோன்றவேயில்லை.

## பொன்மீனையுங் கடலில் விடல்

ஒருநாள் வலையில் பொன் மீன் ஒன்றே அகப்பட்டது. அதை வலைஞர், அதிபத்தர் முன்னிலையில் கொண்டுவந்தனர். அவர், அதைக் கண்டு, 'இஃதென்ன பொன் மீன்! உறுப்புக்களிலும் நவமணிகள் அமைந்திருக்கின்றன. இது சிவபெருமானுக்கு ஆக' என்று அதனையும் கடலிலே விடுத்தனர்.

அப்பொழுது சிவபெருமான் நாயனாருக்குக் காட்சியளித்தார். நாயனார் அகங்குழைந்து சிவபெருமானைத் தொழுதார். சிவ பெருமான் அவருக்குச் சிவலோக வாழ்வு தந்தருளினார்.

# கலிக்கம்பர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*பொய்யைக் கடிந்துநம் புண்ணியர்க் காட்பட்டுத் தன்னடியான்*
*சைவத் திருவுரு வாய்வரத் தானவன் தாள்கழுவ*
*வையத் தவர்முன்பு வெள்கிநீர் வாரா விடமனைவி*
*கையைத் தடிந்தவன் பெண்ணா கடத்துக் கலிக்கம்பனே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*கடவுளருட் கண்ணார்கள் பயிலுந் தொல்லைக்*
*கடந்தைநகர் வணிகர்கலிக் கம்பர் அன்பர்க்*
*கடிமையுற அமுதளிப்பார் அடியான் நீக்கி*
*அருளுருவாய் அன்பருடன் அணைய ஏத்தி*
*இடையிலவர் அடியிணையும் விளக்கா நிற்ப*
*இகழ்மனைவி கரகமலி இரண்டு கையும்*
*படியில்விழ எறிந்தவள்செய் பணியுந் தாமே*
*பரிந்துபுரிந் தரனருளே பற்றி னாரே.*

**கலிக்கம்ப நாயனார்** திருப்பெண்ணாகடத்திலே, வணிகர் குலத்திலே பிறந்தவர். அவர், திருத்தூங்கானை மாடத்துள் வீற்றிருந் தருளுஞ் சிவக்கொழுந்தை வழிபடுபவர்; சிவனடியார்க்கு அமுது செய்விப்பவர்.

**சமரச நோக்கு**

ஒருநாள், நாயனார், வழக்கப்படி அடியவரை அமுது செய்விக்க அழைத்து வந்தார். நாயகியார் கரகநீர் வார்க்க, நாயனார் அடியவ ருடைய திருவடிகளை விளக்கி வந்தார். அவ்வடியவருள் ஒருவர், நாயனாரிடம் பணிசெய்தவர். அவர், முனிவால் பணிவிடுத்துச் சென்றவர். கலிக்கம்பர், அவ்வடியவர் திருவடிகளை விளக்கப் புகுந்தனர். அப்பொழுது அம்மையார், 'இவர் நம்மிடத்தில் முன்னே பணிசெய்து போனவர் போலும்!' என்று எண்ணினார். அதனால், கரகநீர் வார்க்கச் சிறிது நேரந் தாழ்த்தது. அதை யுணர்ந்த நாயனார்,

'இவருடைய முன் நிலையைக் குறித்து இவள் வெள்குகிறாள்' என்று கருதி, வாளாயுதத்தை எடுத்தார்; கரகத்தை வாங்கிக் கீழே வைத்தார்; அம்மையார் திருக்கரத்தைத் துணித்தார்; பின்னர்த் தாமே கரக நீர் விடுத்து அடியவர் திருவடியை விளக்கினார்; அவரையும், மற்றவரையும் அமுது செய்வித்தார். இம் முறையில் கலிக்கம்ப நாயனார் திருத்தொண்டு செய்து வாழ்ந்து சிவனடி சேர்ந்தனர்.

# கலியர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*கம்பக் கரிக்கும் சிலந்திக்கும் நல்கிய கண்ணுதலோன்*
*உம்பர்க்கு நாதற் கொளிவிளக் கேற்றற் குடலிலனாய்க்*
*கும்பத் தயிலம்விற் றுஞ்செக் குழன்றுங்கொள் கூலியினால்*
*நம்பற் கெரித்த கலியொற்றி மாநகர்ச் சக்கிரியே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*தடமதில்சூ ழொற்றியூ ரதனில் வாழுஞ்*
*சக்கரப்பா டியர்குலமெய்த் தவமா யுள்ளார்*
*படர்புகழார் கலியனார் நலியுங் கூற்றைப்*
*பாய்ந்தவர்க்கு விளக்கெரிக்கும் பரிவால் மற்றோர்*
*உடலிலராய்ச் செக்குழல்வார்க் கதுவும் நேரா*
*துயர்மனைவி யைக்கொள்வார் உளரும் இன்றி*
*மிடறுதிரம் அகல்நிறைய அரிய நாதன்*
*வியன்கைகொடு பிடிப்பஅருள் மேவி னாரே.*

தொண்டை நாட்டிலே உள்ள சிறந்த திருப்பதிகளுள் திருவொற்றியூரும் ஒன்று. அவ்வூரில் பல தெருக்கள் உண்டு. அவைகளில் ஒன்று சக்கரப் பாடித்தெரு. அத்தெருவிலே, செக்கார் குலத்திலே பிறந்தவர் **கலிய நாயனார்**. திருக்கோயிலின் உள்ளும் புறமும் அல்லும் பகலும் திருவிளக்கேற்றுவது அவர் தம் திருத் தொண்டு.

### செல்வஞ் சுருங்கல்

கலிய நாயனாருடைய அன்பின் திறத்தை உலகத்துக்கு வெளிப்படுத்தச் சிவபெருமான் திருவுளங்கொண்டார். அதனால் நாயனாரது செல்வநிலை சுருங்கலாயிற்று. சுருங்கியும், நாயனார் தொண்டில் உறைந்தே நின்றார். அவர், தம் மரபினர் பால் கூலிக்கு எண்ணெய் வாங்கி விற்றுத் திருவிளக்கிட்டு வந்தனர். மரபினர் எண்ணெய் கொடுத்தலை நிறுத்தி விட்டனர். நாயனார் தளர்ச்சி யடைந்தாரில்லை.

### தொழிலுங் கிடையாமை

*கலியர் செக்காட்டும் இடத்துக்குப் போவார்; அங்கே எள்ளிடுவார்; எண்ணெய் எடுப்பார்; எருது ஓட்டுவார்; இத்தொழில் களைச் செய்து கூலி பெற்றுத் திருவிளக்குக்கேற்றுவார். தொழி லாளர் கூட்டம் நாளுக்கு நாள் பெருகலாயிற்று. அதனால் நாய னார்க்குத் தொழில் கிடைத்தலே அருமையாகி விட்டது.*

### மனைவியினுந் தொண்டைச் சிறப்பாகக் கோடல்

*நாயனார், தமக்கு உரிய பொருள்களையெல்லாம் விற்று விற்றுத் தொண்டாற்றி வந்தார். பொருளெல்லாம் பொன்றின. அவர்க்கு ஒன்றுந் தோன்றவில்லை. அவர், தம் மனைவியாரை விற்கத் துணிவுகொண்டார்; நகரெங்கும் விலைகூறினார்; வாங்குவாரில்லை; மணந்தளர்ந்து திருக்கோயிலை அடைந்தார்; திருவிளக்குத் தொண்டில் தலைப்பட்டார்; 'தொண்டுக்கு இடையூறு நேரின், யான் இறப்பேன்' என்று உறுதி கொண்டார்; அவ்வுறுதியுடன் அகல் களுக்குத் திரியிட்டார்; அவைகளைப் பரப்பினார்; எண்ணெய்க்கு என் செய்வார்! தமது உதிரத்தை அகல்களில் நிரப்பக் கருவிகொண்டு கழுத்தை அரியலானார்.*

*அவ்வேளையில் கலியநாயனாரது அன்பாக விளங்குஞ் சிவபெருமான், அவருடைய கையைப் பிடித்தார்; மழவிடைமேல் காட்சி வழங்கினார். நாயனாரின் ஊறுநீங்கிற்று. நாயனார், சிவபெருமானைக் கும்பிட்டு நின்றார். சிவபெருமான், அவருக்குச் சிவபதம் அளித்தார்.*

# சத்தியார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

***கிரிவில் லவர்தம் அடியரைத் தன்முன்பு கீழ்மைசொன்ன***
***திருவில் லவரைஅந் நாவரி வோன்திருந் தாரைவெல்லும்***
***வரிவில் லவன்வயற் செங்கழு நீரின் மருவுதென்றல்***
***தெருவில் விரைகம ழுந்தென் வரிஞ்சைத் திகழ்சக்தியே.***

## திருத்தொண்டர் புராண சாரம்

***விரிதருகா விரிநாட்டு வரிஞ்சை யூர்வாழ்***
***வேளாளர் சத்தியார் விமலர் பாதத்***
***துரியவர்கள் அடிபரவும் ஒருமை யார்நாள்***
***ஓவாமே ஐந்தெழுத்தும் உரைக்கு நீரார்***
***இருளின்மிட றுடையபிரான் அடியார் தம்மை***
***இகழ்வார்நாத் தண்டாயத் திடுக்கி வாங்கி***
***அரியுமது திருத்தொழிலா உடையார் மன்றுள்***
***ஆடியசே வடிநீழல் அடைந்து ளாரே.***

*சோழ நாட்டிலே, வரிஞ்சையூரிலே, வேளாளர் குலத்திலே தோன்றியவர் **சத்தி நாயனார்**. அவர், சிவனடியாரை இகழ் வோருடைய நாவினைச் தண்டாயத்தினால் வலிப்பார்; கத்தியினால் அறுப்பார். இச்சத்தி வாய்ந்தமையால், அவர் **சத்தி நாயனார்** என்னப்பட்டார். அவர் இச்செயலையே பெருந்தொண்டாகக் கொண்டு வாழ்ந்து சிவபெருமான் திருவடிநீழலை யடைந்தார்.*

# ஐயடிகள் காடவர்கோன்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*சத்தித் தடக்கைக் குமரன்நற் றாதைதன் தானமெல்லாம்*
*முத்திப் பதம்ஒரோர் வெண்பா மொழிந்து முடியரசாம்*
*அத்திக்கு மும்மைநன் றாலரற் காவையம் ஏற்றலென்னும்*
*பத்திக் கடல்ஐ யடிகளா கின்றநம் பல்லவனே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*வையநிகழ் பல்லவர்தங் குலத்து வந்த*
*மாமணிமா நிலமுழுதும் மகிழ்ந்து காக்கும்*
*ஐயடிகள் காடவர்கோன் அருளால் நூல்கள்*
*அறிந்தரசு புரிந்திடுதல் அமையு மென்றே*
*பொய்யனைய உடல்வாழ்வு கழியுமாறு*
*பொருந்தியிடும் புகழ்வெண்பாப் புலியூர் மேவும்*
*செய்யதிரு வடிமுதலாப் பதிகள் தோறுஞ்*
*செப்பினார் இருவினைகள் தப்பி னாரே.*

**ஐயரடிகள் காடவர்கோன் நாயனார்** , காஞ்சிபுரத்திலே, பல்லவர் குலத்திலே தோன்றியவர்; 'எல்லா உயிர்களும் இன்பம் நுகர்தல் வேண்டும்' என்னும் பெருங் கொள்கையுடையவர். அக்கொள்கையின் பொருட்டு அவர் பல நாடுகளைத் தம் வயப் படுத்தினார்.

### ஒவ்வொரு பதிக்கு ஒவ்வொரு வெண்பா

ஐயரடிகளின் ஆட்சியில் சைவந் தழைத்து; கலைகள் பெருகின. நாளடைவில் அடிகளுக்கு அரசாட்சியில் வெறுப் புண்டாயிற்று. அதனால் அவர், தம் புதல்வனுக்கு முடிசூட்டிச் சிதம்பரம் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று ஆண்டவனை, வழிபட விரும்பினார் ; விருப்பியவாறே செய்து, பல திருப்பதி களுக்குச் சென்றனர். அடிகள், ஒவ்வொரு திருப்பதிக்கு ஒவ்வொரு வெண்பா பாடினர்; இவ்வாறு சிவபணி செய்து சிவலோகஞ் சேர்ந்தனர்.

# கணம்புல்லர்

## திருத்தொண்டத்தொகை

*கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த*
*கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கும் அடியேன்*
*நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற*
*நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்*
*துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதி*
*தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்*
*அறைக்கொண்ட வேல்நம்பி முனையிடுவார்க் கடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.*

## திருத்தொண்டர் திருவந்தாதி

*நன்னக ராய இருக்குவே ளூர்தனில் நல்குரவாய்ப்*
*பொன்னக ராயநற் றில்லை புகுந்து புலீச்சரத்து*
*மன்னவ ராய அரற்குநற் புல்லால் விளக்கெரித்தான்*
*கன்னவில் தோளெந்தை தந்தை பிரானெங் கணம்புல்லனே*

## திருத்தொண்டர் புராண சாரம்

*இலகுவட வெள்ளாற்றுத் தென்பால் வாழும்*
*இருக்குவே ளூர்அதிபர் எழிலார் சென்னிக்*
*கலைநிலவார் அடிபரவுங் கணம்புல்லர் தில்லைக்*
*கருதுபுலீச் சரத்தரற்குக் காதல் தீபம்*
*நிலைதரத்தாம் இடமிடியால் ஒருநாள் புல்லால்*
*நீடுவிளக் கிடஅதுவும் நேரா தாகத்*
*தலைமயிரின் எரிகொளுவும் அளவில் நாதன்*
*தாவாத வாழ்வருளுந் தன்மை யாரே.*

வடவெள்ளாற்றுக்குத் தென்கரையிலே இருக்குவேளூர் என்றொரு பதியுண்டு. அப்பதியிலே ஒரு பெரியார் இருந்தார். அவர் செல்வர். 'செல்வத்தினாலாகிய பயன், திருக்கோயிலில் திருவிளக் கெரித்தல் என்னும் உறுதி அவருக்குத் தோன்றிற்று.

### வறுமையிலும் தொண்டு

*அவ்வுறுதிப்படி, நாயனார் திருத்தொண்டைச் செய்து வந்தார். அவருக்குத் திருவருளால் வறுமை நேர்ந்தது. அதனால் அவர், தில்லையம்பதியை அடைந்தார்; தில்லைக் கூத்தனை வழிபட்டுத் தமது வீட்டுப் பொருள்களை விற்று விற்றுத் திருத்தொண்டை வழாது நிகழ்த்தலானார். பொருளெல்லாம் ஒழிந்தன.*

### கணம்புல்லராதல்

*நாயனார் இரத்தலை விரும்பவில்லை. அவர் கணம்புற்களை அறுப்பர்; விற்பர்; கிடைக்கும் பொருளைக் கொண்டு திருத் தொண்டு செய்வார். அதனால் அவர்க்குக் கணம்புல்லர் என்னும் பெயருண்டாயிற்று.*

### திருமுடியை எரித்தல்

*ஒருநாள், ஆண்டவன் அருளால் புற்கள் விலைப்படவில்லை. கணம்புல்லர் சோர்வடையாது அப்புற்களைத் திரித்து விளக் கெரித்தார். புற்கள் போதவில்லை. நாயனார் என் செய்தார்? அவர், தமது திருமுடியை அன்போடு மடுத்து எரித்தார். அக்காட்சி கண்ட சிவபெருமான், அவருக்குத் திருவருள் செய்தார். கணம்புல்ல நாயனார் சிவலோகஞ் சேர்ந்தார்.*

# காரியார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*புல்லன வாகா வகையுல கத்துப் புணர்ந்தனவும்*
*சொல்லின வுந்நய மாக்கிச் சுடர்பொற் குவடுதனி*
*வில்லனை வாழ்த்தி விளங்குங் கயிலைபுக் கானென்பரால்*
*கல்லின மாமதில் சூழ்கட வூரினில் காரியையே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*திருக்கடவூர் வரும்உரவோர் காரி யாராம்*
*திகழ்தொண்டர் வண்தமிழ்நூல் திருந்த ஓதி*
*விருப்பொடுதம் பெயராற்பா விளம்பி மும்மை*
*வேந்தரையும் முறைமுறையே மேவி அங்கண்*
*உரைத்தஉரை நயமாக்கி அவர்பால் ஏய்ந்த*
*ஒண்பொருளால் ஆலயங்கள் ஓங்கச் செய்து*
*தரைக்கணருந் தவர்க்கேவல் தகமுன் போற்றுந்*
*தன்மையால் அருள்சேர்ந்த நன்மை யாரே.*

***காரி நாயனார்*** *திருக்கடவூரிலே பிறந்தவர்; தமிழ் மொழியிலே பெரும்புலமை வாய்ந்தவர்; திருக்கயிலையை மறவாதவர். கோவை பாடுவது அவர்தம் வழக்கம். அதன்கண் சொல் விளங்கும்; பொருள் நிறைந்திருக்கும்.*

### கோவைபாடித் தொண்டு செய்தல்

*காரியார், சேர சோழ பாண்டியர்களிடம் செல்வார்; தம் பாக்கட்குப் பொருள் விரிப்பார். அவர்கள் மகிழ்வெய்திப் பொருள் கொடுப்பார்கள். அப்பொருளைக் கொண்டு காரியார் திருக் கோயில்கள் கட்டுவிப்பார்; சிவனடியார்க்கு உதவுவார். இவ்வாறு, காரி நாயனார் தொண்டு செய்து, உலக மெல்லாந் தம் புகழை நிறுத்தித் திருக்கயிலை சேர்ந்தார்.*

# நின்றசீர்நெடுமாறர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*கார்த்தண் முகிற்கைக் கடற்கா ழியர்பெரு மாற்கெதிராய்*
*ஆர்த்த அமணர் அழிந்தது கண்டுமற் றாங்கவரைக்*
*கூர்த்த கழுவின் நுதிவைத்த பஞ்சவன் என்றுரைக்கும்*
*வார்த்தை அதுபண்டு நெல்வேலி யில்வென்ற மாறனுக்கே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*கன்னல்மலி நெல்வேலிக் கவினார் மாறர்*
*கவுரியர்கோன் அமணருறு கலக்க மெல்லாம்*
*பொன்னெயில்சூழ் சிரபுரக்கோன் அணைய மாற்றி*
*புனிதமிகு நீறணிந்து போற்றி செய்து*
*மன்னுபுகழ் மங்கையருக் கரசி யாராம்*
*மலர்மாது மணிமார்பின் மகிழ்ந்து மாற்றார்*
*வெந்நிடுதல் கண்டரசு புரிந்து காழி*
*வேந்தரருள் சேர்ந்தபெரு விறலி னாரே.*

**நின்றசீர் நெடுமாறர்** பாண்டி மன்னருள் ஒருவர். அவர், மங்கையர்க்கரசியாரை மனைவியாகப் பெற்றவர்; சமணசமயஞ் சார்ந்தவர்; பின்னர்த் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவருளால் திருநீற்று நெறியில் நின்றவர்; வடபுல மன்னரைத் திருநெல் வேலியிலே தோல்வியுறச் செய்தவர். அவர் சைவந்தழைக்க நீதி அரசியற்றிச் சிவனடி சேர்ந்தவர்.

# வாயிலார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*மாறா அருளரன் தன்னை மனஆ லயத்திருத்தி*
*ஆறா அறிவாம் ஒளிவிளக் கேற்றி அகமலராம்*
*வீறா மலரளித் தன்பெனும் மெய்யமிர் தங்கொடுத்தான்*
*வேறார் மயிலையுள் வாயிலான் என்று விளம்புவரே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*ஞாயிலார் மதிற்றொண்டை நாட்டு மேன்மை*
*நண்ணுமயி லாபுரியின் வேளாண் தொன்மை*
*வாயிலார் மலைவில்லான் அடியே போற்றி*
*மறவாமை தலைநின்ற மனமே செம்பொற்*
*கோயிலா உயர்ஞானம் விளக்கா நீராக்*
*குலவியஆ னந்தம்அன்பே அமுதாக் கொண்டு*
*தாயிலான் இருசரணம் நிகழ ஏத்தும்*
*தன்மையார் அருள்சேர்ந்த நன்மை யாரே.*

***வாயிலார் நாயனார்*** தொண்டை நாட்டிலுள்ள திரு மயிலையில், வேளாள மரபில் தோன்றியவர். அவர், தமது உள்ளத்தைச் சிவத்துக்குரிய கோயிலாக்கியவர். அக்கோயிலில் அறிவு விளக்கேற்றி, ஆனந்த நீராட்டி, அன்பாகிய அமுதை நிவேதிப்பது அவர்தந் திருத்தொண்டு. இவ்வாறு ஞான பூசை செய்து வாயிலார் சிவமானார்.

# முனையடுவார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*என்று விளம்புவர் நீடூ ரதிபன் முனையடுவோன்*
*என்றும் அமருள் அழிந்தவர்க் காக்கூலி ஏற்றெறிந்து*
*வென்ற பெருஞ்செல்வ மெல்லாங் கனகநல் மேருவென்னும்*
*குன்று வளைத்த சிலையான் தமர்க்குக் கொடுத்தனனே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*பொன்னிவளந் தருநாட்டுப் புகழு நீடூர்ப்*
*பொருவில்திரு மலிவேளாண் தொன்மை மிக்கார்*
*முன்னியவர் முனையடுவார் இகலார் போரின்*
*முரணழிவார் தமக்காக மொழிந்த கூலி*
*மன்னுநிதி கொண்டுசயங் கொடுத்து வந்த*
*வளர்பொருளால் இறைவனடி வழுவாஅன்பர்க்*
*கன்னமவர் நசையின்மிக மிசைய நல்கும்*
*அன்பர்துன்ப மவையாவும் அகன்று ளாரே.*

சோழநாட்டிலே, திருநீடூரிலே, வேளாளர் குலத்திலே தோன்றிய சிவனடியார் ஒருவர் வாழ்ந்தார். அவர், போர் முனையில் நின்று மாற்றாரைச் சாய்ப்பதில் வல்லவர். அதனால் அவருக்கு **முனையடுவார்** என்ற பெயர் வழங்கலாயிற்று.

பகைவரால் தோல்வி யுறுவோர் முனையடுவாரிடம் வருவர்; வந்து அவர்தந் துணையை நாடுவர். நாயனார், அவர்பொருட்டுப் போர் புரிந்து வெற்றி பெறுவார்; அவ்வெற்றியால் கிடைக்கும் பொருளைக் கொண்டு சிவனடியார்க்கு அமுதூட்டுவார்; அவர் விரும்புமாறு உதவுவார். முனையடுவார் பன்னெடுநாள் இத்தகைத் தொண்டு செய்து சிவனடி சேர்ந்தார்.

# கழற்சிங்கர்

## திருத்தொண்டத் தொகை

*கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்*
*காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்*
*மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்குந் தஞ்சை*
*மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும்*
*அடியேன்*
*புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடிப்*
*பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும்*
*அடியேன்*
*அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.*

## திருத்தொண்டர் திருவந்தாதி

*மாதவத் தோர்தங்கள் வைப்பினுக் காரூர் மணிக்குவைத்த*
*போதினைத் தான்மோந்த தேவிதன் மூக்கை அரியப்பொற்கை*
*காதிவைத் தன்றோ அரிவதென் றங்கவள் கைதடிந்தான்*
*நாதமொய்த் தார்வண்டு கிண்டுபைங் கோதைக் கழற்சிங்கனே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*காடவர்தங் குலமுவந்த கழலார் சிங்கர்*
*காதல்மிகு தேவியுடன் காவ லாரூர்*
*ஆடவல பெருமானைப் பணிவார் அங்கோர்*
*அகன்றமலர் தனைமோந்த அரிவை மூக்கைச்*
*சேடுடைய செருத்துணையார் அரியக் கேட்டுத்*
*திறலரசர் மலரெடுத்த செங்கை என்றே*
*சூடகமுன் கைதடிந்து ஞாலங் காத்த*
*தூய்மையார் அருள்சேர்ந்த வாய்மை யாரே.*

***கழற்சிங்க நாயனார்*** *பல்லவர் குலத்திலே தோன்றியவர்; சிவபத்தர். அவர், வடபுல மன்னரை வென்று எங்குஞ் சைவந் தழைக்கச் செங்கோலோச்சினர். பல திருப்பதிகளுக்குப்போய் ஆண்டவனை வழிபடுவது அவர்தம் வழக்கம்.*

## அம்மையார் பூ வெடுத்து மோந்தமை

*ஒருநாள் கழற்சிங்கர், தமது மனைவியாருடன் திருவாரூரை அடைந்து தியாகேசப் பெருமானைத் தொழுதனர். அவ்வேளையில், அம்மையார் திருக்கோயிலை வலம் வந்தார்; அங்கே உள்ள பெருமை களைத் தனித் தனிக் கண்டு மகிழ்வெய்தினார். பூமண்டபத்தின் பக்கத்திலே புதுப் பூ ஒன்று விழுந்து கிடந்தது. அம்மையார் அப்பூவை எடுத்து மோந்தார்.*

## செருத்துணையார் செயல்

*அங்கே தொண்டு செய்துகொண்டிருந்த செருத்துணை நாயனார் அதைப் பார்த்தார். அவர், 'அம்மையார் மண்டபத்தி லுள்ள பூவை எடுத்து மோந்தார்' எனக் கருதி, விரைந்து ஓடிக் கருவிகொண்டு அம்மையார் மூக்கை அறுத்தார். அரசியார் மூக்கினின்றும் உதிரம் ஒழுகிற்று; கூந்தல் சோர்ந்தது. மயிலனையார் பூமியிலே விழுந்து புலம்பினார்.*

## தேவியார் கையைத் துணித்தல்

*கழற்சிங்க நாயனார் அங்கே வந்தார்; 'இச் செயலை அஞ்சாது செய்தவர் யாவர்?' என்று கேட்டார். செருத்துணை நாயனார் போந்து, நிகழ்ந்ததைக் கூறினார். கழற்சிங்க நாயனார் உடைவாளை உருவினார்; தேவியார் கையைத் துணித்தார். அச்செயற்கருஞ் செய்கைக் கண்ட அமரர் பூ மழை பொழிந்தனர். கழற்சிங்கர் பன்னெடுநாள் சிவத்தொண்டு செய்து சிவபிரான் திருவடி சேர்ந்தனர்.*

# இடங்கழியார்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு*
*கொங்கிற் கனகம் அணிந்தஆ தித்தன் குலமுதலோன்*
*திங்கட் சடையார் தமரதென் செல்வம் எனப்பறைபோக்*
*கெங்கட் கிறைவன் இருக்கு வேளூர்மன் னிடங்கழியே.*

### திருத்தொண்டர் புராண சாரம்

*கோநாட்டுக் கொடும்பாளூர் இருக்கும் வேளிர்*
*குலத்தலைவர் இடங்கழியார் கொங்கிற் செம்பொன்*
*ஆனேற்றார் மன்றின்முக டம்பொன் மேய்ந்த*
*ஆதித்தன் மரபோர்நெல் கவர்ந்தோ ரன்பர்*
*போநாப்பண் இருளின்கட் காவ லாளர்*
*புரவலர்முன் கொணரஅவர் புகலக் கேட்டு*
*மானேற்றார் அடியாரே கொள்க என்று*
*வழங்கிஅர சாண்டருளின் மன்னி னாரே.*

கோனாட்டிலே, கொடும்பாளூரிலே, வேளிர் குலத்திலே, ஆதித்தன் குடியிலே தோன்றிய ஒரு பெரியவர் இருந்தார். அவர் மன்னர். அவரே **இடங்கழி நாயனார்** என்பவர். அவர்தம் ஆட்சியில் சைவம் ஓங்கி வளர்ந்தது; திருக்கோயில்களில் பூசை முதலியன ஒழுங்காக நடைபெற்று வந்தன.

### மன்னர் வீட்டில் திருடல்

அந்நாளில் ஒரு சிவனடியார் இருந்தார். அவர் அடியவர்க்கு மாகேசுரபூசை செய்விப்பதை நியதியாகக் கொண்டவர். ஒருநாள் பொருள் முடையால் அவர்தம் நியதிக்கு முட்டு உண்டாகும் நிலை நேர்ந்தது. அவர் என் செய்தார்? அன்றிரவு, அவர், இடங்கழியார் அரண்மனையில் புகுந்தனர்; கூட்டிலுள்ள நெல்லை எடுத்தனர். அப்பொழுது காவலாளர் அவரைப் பிடித்தனர்; மன்னரிடங் கொண்டு வந்தனர்.

### கொள்ளை கண்டு மகிழல்

*மன்னர், கள்வரை நோக்கி, 'ஏன் நெல்லைத் திருடினீர்?' என்று கேட்டனர். அதற்கு அடியவர், 'சிவனடியார்க்கு மாகேசுர பூசை செய்விப்பது எனது வழக்கம். பொருளின்மையால் அது முட்டுப்பட்டது. அதனால் இவ்வாறு செய்யலானேன்' என்று கூறினார். அச்சொல்லைக் கேட்டதும் இடங்கழி நாயனார்க்கு இரக்கம் பெருகிவிட்டது. நாயனார் 'இவ்வடியவ ரல்லவோ பண்டாரம்!' என்று அடியவரை விடுதலை செய்தார். நெற்கூடு களையும் மற்றப் பொருட்சாலைகளையும் திறந்து விட்டார்; சிவனடியார் அவற்றைக் கொள்ளையிடுமாறு பறையறை வித்தார்; அக்கொள்ளைக் காட்சி கண்டு மகிழ்வெய்தினார். இடங்கழி நாயனார் பன்னெடுநாள் நீதி அரசியற்றிச் சிவனடி சேர்ந்தார்.*

# செருத்துணையார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*கழிநீள் கடல்நஞ் சயின்றார்க் கிருந்த கடிமலரை*
*மொழிநீள் புகழ்க்கழற் சிங்கன்றன் தேவிமுன் மோத்தலுமே*
*எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந் தான்என் றியம்புவரால்*
*செழுநீர் மருகனன் னாட்டமர் தஞ்சைச் செருத்துணையே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*இரைத்தணையார் புனற்பொன்னி மருகல் நன்னாட்*
*டெழிலாருந் தஞ்சைநகர் உழவ ரேத்தும்*
*செருத்துணையார் திருவாரூர் சேர்ந்து வாழ்வார்*
*செல்வமிகும் பல்லவர்கோன் தேவி வீழ்ந்த*
*மருத்துணையார் மலரெடுத்து மோப்பக் கண்டு*
*வளமலிபூங் கத்தியால் அவள்மூக் கீர்ந்த*
*கருத்துணையார் விறற்றிருத்தொண் டினையே செய்து*
*கருதலரும் அமருலகம் கைக்கொண் டாரே.*

**செருத்துணை நாயனார்** சோழ நாட்டிலே, தஞ்சாவூரிலே, வேளாளர் மரபிலே பிறந்தவர்; சிவபக்தி சிவனடியார் பத்தியிற் சிறந்தவர். அவர் திருவாரூரை அடைந்து திருத்தொண்டு செய்து வந்தனர். அங்கே வழிபாட்டுக்கு வந்த கழற்சிங்க நாயனாருடைய மனைவியார், பூமண்டபத்தின் பக்கத்திலே கிடந்த ஒரு பூவை எடுத்து மோந்தார். அதைச் செருத்துணையார் பார்த்தார்; விரைந்து ஓடினார்; கத்தி எடுத்தார்; அம்மையார் கூந்தலைப் பிடித்தார்; ஈர்த்தார்; கீழே தள்ளினார்; தள்ளி, அம்மையாரின் மூக்கை அறுத்தார். செருத்துணை நாயனார், பலநாள் தொண்டு செய்து, சிவபெருமான் திருவடி நீழலை யடைந்தார்.

# புகழ்த்துணையார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*செருவிலி புத்தூர்ப் புகழ்த்துணை வையஞ் சிறுவிலைத்தா*
*உருவலி கெட்டுண வின்றி உமைகோனை மஞ்சனஞ்செய்*
*தருவதோர் போதுகை சோர்ந்து கலசம் விழத்தரியா*
*தருவரை வில்லி அருளின் நிதியது பெற்றனனே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*புண்ணியர்கள் புகழ்அழகார் திருப்புத் தூர்வாழ்*
*புகழ்த்துணையார் அகத்தடிமைப் புனிதர் சின்னாள்*
*மண்ணிகழ மழைபொழியா வற்கா லத்தால்*
*வருந்துடலம் நடுங்கிடவு மணிநீ ரேந்தி*
*அண்ணல்முடி பொழிகலசம் முடிமேல் வீழ*
*அயர்ந்தொருநாள் புலம்பஅரன் அருளா லீந்த*
*நண்ணலரும் ஒருகாசுப் படியால் வாழ்ந்து*
*நலமலிசீர் அமருலகம் நண்ணி னாரே.*

**புகழ்த்துணை நாயனார்** செருவிலிபுத்தூரிலே, ஆதி சைவ மரபிலே பிறந்தவர். அவர் சிவபெருமானை முறைப்படி அர்ச்சித்து வந்தனர். வருநாளில், பஞ்சம் நேர்ந்தது. நாயனார் பஞ்சத்தைக் கருதாது தமது தொண்டைக் குறைவற நிகழ்த்திக்கொண் டிருந்தார். நாளுக்குநாள் அவர் பசியால் மெலிவுறலானார்.

### அருளால் காசு பெறல்

மெலிவுடன் புகழ்த்துணையார் ஒருநாள் திருமஞ்சன மாட்டும்போது, திருக்குடம் தேவதேவன் திருமுடிமீது விழுந்தது. அதுகண்ட நாயனார் சிவசந்நிதியில் விழுந்தார்; அயர்ந்தார். திருவருளால் அவருக்கு உறக்கம் வந்தது. சிவபெருமான் அவர்தங் கனவிலே தோன்றி, 'பஞ்சம் ஒழியும் வரை, நாள்தோறும் ஒரு காசு இங்கே வைப்போம். அதைப் பெற்றுக்கொள்' என்று அருளிச் செய்தார். நாயனார் விழித்து எழுந்தார். ஒரு காசு, பீடத்தின் கீழே இருப்பதைக் கண்டார்; மகிழ்வெய்தினார்; அக்காசு பெற்று வாழ்ந்து வந்தார். பஞ்சம் ஒழிந்தது. நாயனார் தமது திருத்தொண்டை வழாது செய்து சிவபதம் சேர்ந்தார்.

# கோட்புலியார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*பெற்றம் உயர்த்தோன் விரையாக் கலிபிழைத் தோர்தமது*
*சுற்ற மறுக்குந் தொழிற்றிரு நாட்டியத் தான்குடிக்கோன்*
*குற்ற மறுக்குநங் கோட்புலி நாவற் குரிசிலருள்*
*பெற்ற அருட்கட லென்றுல கேத்தும் பெருந்தகையே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*குலவுபுகழ் நாட்டியத்தான் குடிவே ளாளர்*
*கோட்புலியார் குவித்துயர்த்த செந்நெற் கூடு*
*நிலவணிவார்க் கமைத்தாணை நிறுத்தி ஒன்னார்*
*நேர்மலைவார் திருவாணை நினையா தேநெல்*
*சிலமிடியால் அழித்தபடி அறிந்து வாளால்*
*சேர்ந்தபெருங் கிளைஞருடல் சிதற வீசி*
*இலகுமொரு குழவியையும் எறிந்து நாதன்*
*எண்ணரிய கருணைநிழல் எய்தி னாரே.*

சோழ நாட்டிலே, நாட்டியத்தான் குடியிலே, வேளாண் மரபிலே தோன்றியவர் ஒருவர் இருந்தார். அவர் சிவனடியார். அவர்தம் பெயர் **கோட்புலி நாயனார்** என்பது.

### நெல் சேமித்தல்

கோட்புலியார், சோழ மன்னனிடத்தில் சேனாதிபதியாய்க் கடனாற்றியவர்; மாற்றரசரை வெல்வதில் பேர்பெற்றவர்; தந் தொழிலால் பெரும் பொருளைக்கொண்டு திருக்கோயில் திரு வமுதுக்கென நெற்களை வாங்குவார்; அவைகளைக் கூடுகளில் சேமித்து வைப்பார். அவர் இச்செயலைத் தமக்குரிய தொண்டாகக் கொண்டு வாழ்ந்தனர்.

### சுற்றத்தார்க்கு எச்சரிக்கை செய்தல்

அரசன் ஆணைப்படி, கோட்புலியார் போருக்குப் போதல் நேர்ந்தது. அப்பொழுது நாயனார், தாம் மீண்டுந் திரும்பும் வரை, திருக்கோயில் திருவமுதுக்கு வேண்டப்படும் நெற்களைச் சேமித்து, அவைகளைக் கூடுகளில் நிரம்பினார்; சுற்றத்தவரைத் தனித்தனியே

அழைத்தார்; 'இந்நெற்கள் திருக்கோயில் திருவமுதுக்கெனச் சேமிக்கப்பட்டவை. இவைகளை எக்காரணம்பற்றியும் உங்களுக் கென்று எடுத்துச் செலவழித்தல் கூடாது. இறை ஆணை' என்று கூறிப் போர்மேற்சென்றார்.

### சுற்றத்தார் நெல்லைப் பயன்படுத்தல்

கோட்புலியார் சென்ற சில நாளுக்குள் பஞ்சம் நேர்ந்தது. சுற்றத்தவர் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு வருந்தினர். அவர் உயிர் துறக்கும் நிலை நெருங்கிவிட்டது. அதனால் அவர், 'கோட்புலியார் சேமித்துள்ள நெற்களை எடுத்துப் பயன்படுத்திக் கொள்வோம்' என்று துணிவுகொண்டனர்; கொண்டபடியே நெல்லை எடுத்துப் பயன்படுத்தினர்.

### சுற்றத்தார் செயலைக் கேள்வியுறல்

கோட்புலியார், பகைவரை முறியடித்து, மன்னனிடம் நிதி பெற்றுத் திரும்பினார்; வழியில் சுற்றத்தவர் செயலைக் கேள்வி யுற்றார்; உண்மை உணர்ந்தார்; 'அடாத செயல் புரிந்தவரை வெட்டி வீழ்த்துவேன்' என்று உள்ளே கனன்று வந்தார்.

### வாளுக்கு இறையாக்கல்

சுற்றத்தவர் நாயனாரை எதிர் கொண்டனர். நாயனார் அவர்க்கு இனியமொழி கூறி வீடு சேர்த்தார்; 'சுற்றத்தவர்க்கு பரிசில் வழங்கல் வேண்டும்' என்று சொல்லி அவரை அழைப்பித்தார்; **கோட்புலி** என்னும் தம் பெயருடைய சேவகன் ஒருவனை வாயில் காக்குமாறு செய்தார்; 'அடாது செயல் புரிந்த இவரைக் கொல்லாது விடுவதோ' என்று உருத்து எழுந்தார்; எழுந்து, தந்தை, தாய், உடன் பிறந்தார், தாரம் , துரோகத்துக்கு உட்பட்ட மற்றவர் ஆகிய எல்லாரையும் வெட்டி வீழ்த்தினார். ஓர் ஆண்குழந்தை மட்டும் எஞ்சி நின்றது. நாயனார் அதன்மீது பாய்ந்தபொழுது, வாயில் காப்போன், அவரைப் பார்த்து, 'பெருமானே! இக்குழந்தை என்ன செய்தது? இது சிவ சோற்றை உண்ணவில்லையே! ஒரு குடிக்கு ஒரே பிள்ளை. அருள் செய்யும்' என்று வேண்டினான். அதற்குக் கோட்புலியார், 'இக்குழவி சிவ சோற்றை உண்ணவில்லை; ஆனால் அதை உண்டவளுடைய முலைப்பாலை உண்டது' என்று கூறி, அக்குழந்தையையும் வாளுக்கு இறையாக்கினார்.

அந்நிலையில், சிவபெருமான் தோன்றினார்; தோன்றி 'கோட்புலி! உன் கைவாளால் வெட்டுண்ட உன் சுற்றத்தவ ரெல்லாரும் பாசம் நீங்கப்பெற்றார்; மேற்பதவி எய்தினார். நீ இப்படியே நம்முடன் வருவாயாக' என்று அருள்செய்து எழுந்தருளினார்.

# பத்தராய்ப் பணிவார்

## திருத்தொண்டர் தொகை

*பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்*
*பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்*
*சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்*
*திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்*
*முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்*
*முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்*
*அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.*

## திருத்தொண்டர் திருவந்தாதி

*அரசினை ஆரூர் அமரர் பிரானை அடிபணிந்திட்*
*டுரைசெய்த வாய்தடு மாறி உரோம புளகம்வந்து*
*கரசர ணாதி அவயவங் கம்பித்துக் கண்ணருவி*
*சொரிதரும் அங்கத்தி னோர்பத்தர் என்று தொகுத்தவரே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*தொண்டரடித் தொழல்பூசைத் தொழில்மகிழ்தல் அழகார்*
*துளங்கியஅர்ச் சனைபுரிதல் தொகுதிநிய மங்கள்*
*கொண்டபணி திருவடிக்கே கொடுத்தல் ஈசன்*
*குணமருவும் அருங்கதையைக் குலவிக் கேட்டு*
*மண்டிவிழி துளும்பல்மயிர் சிலும்பல் உன்னல்*
*மருவுதிருப் பணிகாட்டி வருப வாங்கி*
*உண்டிகொளா தொழிதலென இவைஓ ரெட்டும்*
*உடையரவர் பத்தரென உரைத்து ளாரே.*

***பத்தராய்ப் பணிவார்,*** அடியவரைக் கண்டால் ஆனந்த பரவச ராவார்; பசுவைத் தொடர்ந்து செல்லுங் கன்றைப் போல் அவரைத் தொடர்ந்து செல்வார்; பணிவார்; அவரிடம் இனிய மொழி பேசுவார்; சிவபூசை செய்வோரைப் பார்த்ததும் இன்புறுவார்; சிவபெருமானையும் அடியவரையும் காதலுடன் வழிபடுவார்; தாம் செய்யும் அறங்களைச் சிவார்ப்பணஞ் செய்வார்; சிவசரிதங்களையே

கேட்பார்; ஈசனை நினைந்து நினைந்து உருகுவார்; வாய் குழறுவார்; கண்ணீர் உகுப்பார். அவர் தம் உடல் விதிர்க்கும்; மயிர் சிலிர்க்கும். நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், எப்பொழுதும் எக்காரணம்பற்றியும் அவர் ஆண்டவனை மறவார். அவர் குன்றாத உணர்வுடையார்; வயிற்றின் பொருட்டுச் சிவவேடம் தரியார்.

# பரமனையே பாடுவார்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*தொகுத்த வடமொழி தென்மொழி யாதொன்று தோன்றியதே*
*மிகுத்த இயலிசை வல்ல வகையில்விண் தோயுநெற்றி*
*வகுத்த மதிற்றில்லை அம்பலத் தான்மலர்ப் பாதங்கள்மேல்*
*உகுத்த மனத்தொடும் பாடவல் லோரென்பர் உத்தமரே.*

### திருத்தொண்டர் புராண சாரம்

*அருந்தமிழால் வடகலையால் அருளால் ஒன்றால்*
*அறிவுநெறி மருவுமருங் கவிகள் யாவும்*
*திருந்தியவா னவர்பணிய மன்று ளாடுந்*
*தேவர்பிரான் கழலிணையே சேர ஓதி*
*விருந்திடுநா வுடையபயன் மேவி னோர்தாம்*
*மேலானோ மெனமகிழ்ந்து விழிநீர் சோரப்*
*பரிந்தருளால் பரமனையே பாட வல்ல*
*பான்மையார் எமையாளும் மேன்மை யாரே.*

**பரமனையே பாடுவார்**, தென்மொழி வடமொழி முதலிய மொழிகளைப் பயின்று, ‘அப்பயிற்சியாலாகிய பயன், சிவபெருமானைப் பாடுதல்’ என்று கொண்டு மெய்யுணர்வுடன் உள்ளுருகிப் பாடுவோராவர்.

# சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*உத்தமத் தானத் தறம்பொருள் இன்ப மொடிஎறிந்து*
*வித்தகத் தானத் தொருவழிக் கொண்டு விளங்கச்சென்னி*
*மத்தம்வைத் தான்திருப் பாத கமல மலரடிக்கீழ்ச்*
*சித்தம்வைத் தாரென்பர் வீடுபே றெய்திய செல்வர்களே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*பாரணவும் புலனந்தக் கரண மொன்றும்*
*படராமே நடுநாடி பயிலு நாதம்*
*காரணபங் கயன்முதலாம் ஐவர் வாழ்வுங்*
*கழியுநெறி வழிபடவுங் கருதி மேலைப்*
*பூரணமெய்ப் பரஞ்சோதிப் பொலிவு நோக்கிப்*
*புணர்ந்தணைந்த சிவாநுபவ போகம் மேவும்*
*சீரணவு மவரன்றோ எம்மை யாளும்*
*சித்தத்தைத் சிவன்பாலே வைத்து ளாரே.*

*பதங்களை எல்லாங் கடந்து விளங்கும் நாதாந்தத் தாரணை யால், சிவத்தை அடைந்த திருஉள்ளத்தவர்,* ***சித்தத்தைச் சிவன்பால் வைத்தவராவர்.***

# திருவாரூர்ப் பிறந்தார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*செல்வந் திகழ்திரு வாரூர் மதில்வட்டத் துட்பிறந்தார்
செல்வன் திருக்கணத் துள்ளவ ரேயத னாற்றிகழச்
செல்வம் பெருகுதென் னாரூர்ப் பிறந்தவர் சேவடியே
செல்வ நெறியுறு வார்க்கணித் தாய செழுநெறியே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*பொங்கியமா தவமுடையார் வருணம் நான்கில்
பொருந்தினர்கள் அல்லாத புகழி னுள்ளார்
சங்கையிலா அருந்தவம்முன் புரிந்தார் இங்குச்
சார்விலார் இறைவனருள் சார்த லாலே
கங்கைவாழ் சடைமுடியான் அருளை நீங்காக்
கணநாதர் எனவாழுங் கருத்தர் கன்னிச்
செங்கண்வரால் வளர்வாலி திகழும் ஆரூர்ச்
சிறந்துளார் எமையாளப் பிறந்து ளாரே.*

***திருவாரூரில் பிறந்தவர்*** *சிவகணங்கள். ஆதலால், அவர் தம் பெருமையை என்னென்று சொல்வது!*

# முப்போதுந் திருமேனி தீண்டுவார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*நெறிவார் சடையரைத் தீண்டி முப்போதுநீ டாகமத்தின்*
*அறிவால் வணங்கிஅர்ச் சிப்பவர் நம்மையும் ஆண்டமரர்க்*
*கிறையாய்முக் கண்ணும்எண் தோளுந் தரித்தீறில்*

*செல்வத்தொடும்*
*உறைவார் சிவபெரு மாற்குறை வாய உலகினிலே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*செப்பலருந் தவமுடைய செம்மை யாளர்*
*சிறுகாலே மலர்வாவி திகழ மூழ்கி*
*ஒப்பில்திரு நீறணிந்து நியதி ஆற்றி*
*ஓவாமே ஐந்தெழுத்தும் உணர்ந்து ரைத்துத்*
*தப்பில்சிவா கமவிதியால் இன்பால் அன்பாந்*
*தன்மையால் நன்மையாந் தகையார் என்றும்*
*முப்பொழுதுந் திருமேனி தீண்ட வல்ல*
*முறைமையார் பிறவிதெறுந் திறமை யாரே.*

முப்போதும் **திருமேனி தீண்டுவார்** என்பவர் சிவவேதியர்.

# முழுநீறு பூசிய முனிவர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

***உலகு கலங்கினும் ஊழி திரியினும் உள்ளொருகால்***
***விலகுத லில்லா விதியது பெற்றநல் வித்தகர்காண்***
***அலகில் பெருங்குணத் தாரூ ரமர்ந்த அரனடிக்கீழ்***
***இலகுவெண் ணீறுதம் மேனிக் கணியும் இறைவர்களே.***

## திருத்தொண்டர் புராண சாரம்

***கற்பம்அனு கற்பம்உப கற்பம் என்றிக்***
***கடன் அணைந்த திருநீறுங் கனற்கண் நீறும்***
***பொற்புடைய அரன்ஆசான் அங்கி ஆறு***
***பொல்லாத பூமிஎதிர் புனைத லாகா***
***அற்புதமாந் திரிபுண்ட மதியின் பாதி***
***அகிலாங்கந் தீபமிகும் அழகார் வட்டம்***
***முற்பொலிய உடலணியும் முறையா ரன்றோ***
***முழுநீறு பூசவல்ல முனிவர் தாமே.***

***முழுநீறு பூசிய முனிவர்,*** *திருநீற்றைச் சிவமாகக் கொண்டு அதனைப் பூசுவோர்; பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்; வாய்மையாளர்; மும்மலத்தை நீறு படுத்தியவர்.*

# அப்பாலும் அடிச்சார்ந்தார்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*வருக்க மடைத்துநன் னாவலூர் மன்னவன் வண்தமிழால்*
*பெருக்கு மதுரத் தொகையிற் பிறைசூடி பெய்கழற்கே*
*ஒருக்கு மனத்தொடப் பாலடிச் சார்ந்தவ ரென்றுலகில்*
*தெரிக்கு மவர்சிவன் பல்கணத் தோர்நஞ் செழுந்தவரே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*தாராரும் மூவேந்தர் பயிலுந் தொல்லைத்*
*தமிழ்நாட்டப் புறத்திறைவன் சரணஞ் சார்ந்த*
*சீராருந் தொண்டர்களும் அண்ட ரேத்துந்*
*திருத்தொண்டத் தொகைஅருளால் செப்புங் காலத்*
*தேராருந் தொடையிலுறா திப்பால் அப்பால்*
*எந்தைபிரான் அடியடைந்த இயல்பி னோரும்*
*ஆராத காதலுடை யவர்க ளன்றோ*
*அப்பாலும் அடிச்சார்ந்த அடியார் தாமே.*

***அப்பாலும், அடிச்சார்ந்தார்,*** *சேர சோழ பாண்டிய நாடுகளுக்கு அப்பாலுள்ள நாடுகளில் தோன்றிய அடியவரும், திருத்தொண்டத் தொகையில் போந்துள்ள அடியவர் காலத்துக்கு முன்னும் பின்னும் இருந்த அடியவரும் ஆவர்.*

# பூசலார்

## திருத்தொண்டத் தொகை

*மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்*
*வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்*
*தென்னவனாய் உலகாண்ட செங்கணனார்க் கடியேன்*
*திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்*
*என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்*
*இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்*
*அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்*
*ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே.*

## திருத்தொண்டர் திருவந்தாதி

*பதுமநற் போதன்ன பாதத் தரற்கொரு கோயிலையான்*
*கதுமெனச் செய்குவ தென்றுகொ லாமென்று கண்துயிலா*
*ததுமனத் தேஎல்லி தோறும் நினைந்தருள் பெற்றதென்பர்*
*புதுமணத் தென்ற லுலாநின்ற வூர்தனிற் பூசலையே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*பொருவருந்தண் டகநாட்டு நின்ற வூர்வாழ்*
*பூசுரர்கோப் பூசலார் புந்தி யாலே*
*இருநிதியந் தேடிஆ லயமு மாக்கி*
*எழுந்தருளப் பண்ணுவதா எண்ணுங் காலை*
*அரனதனைக் காடவர்கோற் கருள மன்னன்*
*அந்நகரம் அணைந்தவ்வா றறிந்து தாழ*
*விரவுமனக் கோயிலுற இருத்தி அங்கண்*
*வேண்டுவகொண் டிறைஞ்சிஅருள் மேவி னாரே.*

**பூசலார் நாயனார்** தொண்டை நாட்டிலே, திருநின்ற ஊரிலே, மறையவர் குலத்திலே பிறந்தவர்; வேதம் முதலிய கலைகளில் வல்லவர்; சிவபக்தி சிவனடியார் பத்தியிற் சிறந்தவர்; சிவனடியார் விரும்புவதை எப்படியாவது முயன்று செய்பவர்.

### மானதக் கோயில்

*பூசலார், திருக்கோயில் ஒன்று கட்ட விரும்பினார்; அதற்குப் பொருள்தேட முயன்றார். பொருள் சிறிதுங் கிடைக்கவில்லை. அவர், தளர்வெய்தி, நினைவினால் கோயில் கட்ட உறுதிகொண்டனர்; மனத்தினால் அடிகோலினர்; கோயில் உறுப்புக்களை யெல்லாம் அமைத்தனர் ; மதில் முதலியன வகுத்தனர்; கிணறு குளம் முதலியன எடுத்தனர்; இவ்வாறு மானதக் கோயில் கட்டிப் பிரதிட்டை நாளை நிச்சயஞ் செய்தனர்.*

### அகக்கோயிற் சிறப்பு

*அச்சமயத்தில் காடவ மன்னர், காஞ்சியிலே ஒரு திருக்கோயில் கட்டி முடித்தனர். பிரதிட்டைக்கென ஒரு நன்னாள் குறிக்கப் பட்டது. அந்நாளுக்கு முன்னாள், சிவபிரான் மன்னர் கனவிலே தோன்றி, 'திருநின்ற ஊரிலே* ***பூசல்*** *என்பவன் ஒருவன் இருக்கிறான். அவன் நீண்ட நாள் நினைந்து நினைந்து ஒரு கோயில் கட்டி யுள்ளான். நாளை நாம் அதில் எழுந்தருள்வோம். ஆதலால், உமது ஆலயப் பிரதிட்டையைப் பின்னொரு நாளில் வைத்துக் கொள்' என்று திருவாய் மலர்ந்தருளினார். உடனே மன்னர் விழித்தெழுந் தார்; பூசலாரைக் காண விரும்பினார்; புறப்பட்டார்; திருநின்ற ஊரை அடைந்தார்; அங்கிருந்தவரைப் பார்த்து, 'பூசலார் கட்டிய திருக்கோயில் எங்கே இருக்கிறது?' என்று விசாரித்தார்; 'பூசலார் இங்கு ஒரு கோயிலையுங் கட்டவில்லை' என்ற பதிலே பெற்றார். அதற்குமேல், மன்னர் அவ்வூர் அந்தணரை அழைப்பித்தார்; 'பூசலார் யாவர்?' என்று அவரைக் கேட்டார். அவ்வந்தணர், 'பூசலார் இவ்வூரவர்' என்று சொல்லி, அவரை அழைக்க ஓடினர். மன்னர் அவரைத் தடுத்து, அவர் துணை கொண்டு, தாமே பூசலா ரிடஞ் சென்றார்; பூசலாரைக் கண்டு தொழுதார்; தொழுது, 'அடிகள் கட்டிய திருக்கோயில் எங்கே இருக்கிறது? அத் திருக்கோயிலின் பிரதிட்டைநாள் இன்று என்பதைச் சிவபிரானால் அறியப் பெற்றேன். அடிகளை வணங்க வந்தேன்' என்று சொன்னார்.*

### மானதக் கோயில் விளக்கம்

*மன்னர் உரை கேட்டதும், பூசலார் மருண்டார்; 'சிறியேனை ஒரு பொருளாகக் கருதியோ சிவபெருமான் அருள் செய்தார்! யான் திருக்கோயில் கட்ட முயன்றேன். பொருளே கிடைக்கவில்லை. அதனால், யான் மானதத்கோயில் கட்டினேன்' என்று சொல்லிக் கட்டிய முறையையும் விளக்கினார். மன்னர் நாயனாரைத் தொழுது விடை பெற்றுச் சென்றனர்.*

*பூசலார், தமது மானதக் கோயிலில் சிவபெருமானைப் பிரதிட்டை செய்தார்; சிலகாலம் வழிபாட்டில் ஈடுபட்டுச் சிவபிரான் திருவடி நீழலைச் சேர்ந்தார்.*

# மங்கையர்க்கரசியார்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*பூச லயிற்றென்ன னார்க்கன லாகப் பொறாமையினால்*
*வாச மலர்க்குழல் பாண்டிமா தேவியா மானிகண்டீர்*
*தேசம் விளங்கத் தமிழா கரர்க்கறி வித்தவரால்*
*நாசம் விளைத்தா ளருகந்த ருக்குத்தென் னாட்டகத்தே.*

### திருத்தொண்டர் புராண சாரம்

*மங்கையர்க்குத் தனிஅரசி வளவர்குலக் கொழுந்து*
*மன்னவர்சூழ் தென்னவர்க்கு மாதேவி யார்மண்*
*சங்கைகெட அமண்சமயஞ் சாட வல்ல*
*சைவசிகா மணிஞானத் தமிழிற் கோத்த*
*பொங்குதிரு வருளுடைய போத வல்லி*
*பொருவில்நெடு மாறனார் புயமேல் வாழும்*
*செங்கலச முலையாள் தன் அருளால் இன்பஞ்*
*சேர்ந்தவரைப் புகழ்ந்தடியேன் வாழ்ந்த வாறே.*

***மங்கையர்க் கரசியார்*** *சோழ மன்னரின் புதல்வியார்; நின்றசீர் நெடுமாற நாயனாரின் மனைவியார். அவர், திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளைக்கொண்டு பாண்டி நாட்டுக்கு உற்ற துன்பத்தைப் போக்கியவர்; அச்சுவாமிகளால் அவர் தம் திருப்பதிகத்தில் சிறப்பிக்கப் பெற்றவர்; திருநீற்று நெறி வளர்த்தவர். அப்பெரு மாட்டியார், தம் நாயனாருக்குச் சைவ வழித்துணையாய் நின்று, அவருடன் சிவலோகம் எய்தினார்.*

# நேசர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*நாட்டமிட் டன்றரி வந்திப்ப வெல்படை நல்கினர்தந்*
*தாட்டரிக் கப்பெற் றவனென்பர் சைவத் தவரரையில்*
*கூட்டும கப்படக் கோவணம் நெய்து கொடுத்துநன்மை*
*ஈட்டுமக் காம்பீலிச் சாலிய நேசனை இம்மையிலே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*சாலியர்கோக் காம்பீலித் தலைவர் மேன்மை*
*தாவாத புகழ்நேசர் தஞ்சொல் என்றும்*
*கோலியஐந் தெழுத்தோதிச் சிந்தை யுன்னிக்*
*கொண்டபொருள் அன்பர்கொளக் கொடுத்து வாழ்வார்*
*சீலமிகுந் திருத்தொண்டர்க் குடையுங் கீளுந்*
*திருந்தியவெண் கோவணமுஞ் சேர ஈந்து*
*பாலனைய ஒளிநீற்றான் பாத மேத்திப்*
*பரலோகம் முழுதாண்ட பான்மை யாரே.*

*நேச நாயனார் காம்பீலி நகரத்திலே, சாலியர் குலத்திலே பிறந்தவர். அவர், தம் மனத்தால் சிவனடியைச் சிந்திப்பார்; வாக்கால் அஞ்செழுத் தோதுவார்; கையால் கீள், கோவணம், ஆடை முதலியன நெய்து சிவனடியார்க்கு உதவுவார். இத்துணைத் திருத்தொண்டு களை நேச நாயனார் சிறப்புறச்செய்து சிவனடி சேர்ந்தார்.*

# கோச்செங்கட் சோழர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறிகருதாத்*
*தெய்வக் குடிச்சோழன் முன்பு சிலந்தியாய்ப் பந்தர்செய்து*
*சைவத் துருவெய்தி வந்து தரணிநீ டாலயங்கள்*
*செய்வித் தவன்திருக் கோச்செங்க ணானெனுஞ் செம்பியனே.*

*செம்பொன் அணிந்துசிற் றம்பலத் தைச்சிவ லோகமெய்தி*
*நம்பன் கழற்கீழ் இருந்தோன் குலமுதல் என்பர்நல்ல*
*வம்பு மலர்த்தில்லை ஈசனைச் சூழ மறைவளர்த்தான்*
*நிம்ப நறுந்தொங்கற் கோச்செங்க ணானெனு நித்தனையே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*வெண்ணாவல் இறைக்கொளிநூல் பந்தர் செய்த*
*வியன்சிலம்பி அதுஅழித்த வெள்ளா னைக்கை*
*உள்நாடிக் கடித்தஉடல் ஒழியச் சோழன்*
*உயர்குலத்துச் சுபதேவன் கமலத் தோங்கும்*
*பெண்ணாகி யவள்வயிற்றில் வைகிச் செங்கட்*
*பெருமானாய்ப் பெருங்கோயில் பலவுங் கட்டிக்*
*கண்ணார்வித் துயர்தில்லை மறையவர்க்கும் உறையுள்*
*கனகமய மாக்கிஅருள் கைக்கொண் டாரே.*

சோழ நாட்டிலே, காவிரிக்கரையிலே ஒரு தீர்த்தம் உண்டு. அதன் பெயர் சந்திர தீர்த்தம் என்பது. அதன் மருங்கே ஓரழகிய வனமிருந்தது. அவ்வனத்தில் ஒரு வெண்ணாவல் மரத்தடியில் ஒரு சிவலிங்கம் வெளிப்பட்டது. அஃதொரு வெள்ளானைக்குப் புலப்பட்டது.

### யானையின் பூசை

வெள்ளானை துதிக்கையால் நீரை முகக்கும்; சிவலிங்கத்தை அபிடேகம் செய்யும்; சிவலிங்கத்துக்கு மலர் சாத்தும். இவ்வாறு நாடோறும் அவ்யானை சிவலிங்கப் பெருமானை வழிபட்டுவந்தது. அதனால் அத்திருப்பதிக்குத் **திருவானைக்கா** என்னுந் திருநாமம் உண்டாயிற்று.

### சிலந்தியின் நேயம்

அங்கே ஞான உணர்வுடைய ஒரு சிலந்தியும் இருந்தது. சிவலிங்கத்தின்மீது சருகு உதிர்வதை அச்சிலந்தி கண்டது. அதைத் தடுக்கும்பொருட்டு அச்சிலந்தி தனது வாய் நூலால் மேற்கட்டி அமைத்தது.

### யானைக்கும் சிலந்திக்கும் அருளல்

பூசைக்கு வரும் வெள்ளையானை, மேற் கட்டியைக் கண்டதும்; 'அநுசிதம்' என்று அதனை அழித்தது. சிலந்தி அதைப் பார்த்து, 'துதிக்கை சுழன்றமையால் விதானம் அழிந்தது போலும்' என்று கருதிற்று; மீண்டும் விதானம் அமைத்தது. அடுத்த நாளும் யானை விதானத்தை அழித்தது. சிலந்திக்கு சினம் மூண்டது. அஃது உருத்து எழுந்தது; யானையின் துதிக்கையுள் புகுந்தது; கடித்தது. யானை விழுந்தது; தும்பிக்கையை நிலத்திலே மோதி மோதி இறந்தது. சிலந்தியும் மாண்டது. சிவபெருமான், யானைக்குச் சிவகதி வழங்கினார்; சோழகுலத்தில் பிறக்குமாறு சிலந்திக்கு அருள் செய்தார்.

### சிலந்தி சோழனாதல்

சுபதேவர் என்னும் ஒரு சோழமன்னர் இருந்தார். அவர்தம் மனைவியார் கமலவதியார். இருவரும் தில்லை சேர்ந்து ஆண்டவனை வழிபட்டுக் கொண்டிருந்தனர். கமலவதியார்க்கு மகப் பேறு இல்லாமலிருந்தது. அப்பேறு குறித்து, அம்மையார் தில்லைக் கூத்தனைப் போற்றுவது வழக்கம். தில்லைக்கூத்தன் திருவருளால் அம்மையார் கருவுற்றனர். அக்கருவில் திருவானைக்காச் சிலந்தியின் ஆருயிர் சேர்ந்தது.

### செங்கண் தோற்றம்

கமலவதியார் கருஉயிர்க்கும் நேரம் வந்தது. 'பிள்ளை இப்பொழுது பிறத்தல் கூடாது; இன்னும் ஒரு நாழிகை கழித்துப் பிறக்குமாயின், அது மூன்று லோகத்தையும் ஆள்வதாகும்' என்று காலக் கணிதர் சொன்னார். அவ்வுரை கேட்ட கமலவதியார், 'அப்படியானால் என்னைத் தலைகீழாகக் கட்டுங்கள்' என்று கூறினார். அவ்வாறே செய்யப்பட்டது. ஒரு நாழிகை கழிந்தது. பிள்ளை பிறந்தது. காலந்தாழ்த்துப் பிறந்தமையால், குழந்தை சிவந்த கண்களை உடைத்தாயிருந்தது. அதைக்கண்ட அன்னையார், **'என்கோ செங்கண்ணனோ'** என்று சொல்லிக்கொண்டே இறந்தார்.

சுபதேவர் பிள்ளையை வளர்த்தார்; தக்க வயதில் பிள்ளைக்கு முடி சூட்டினார். பின்னே, அவர் தவநெறி நின்று சிவனடி சேர்ந்தார்.

### கோயில் பல கட்டல்

கோச்செங்கட் சோழருக்கு முன்னை உணர்வு முகிழ்த் திருந்தது. அவர் திருக்கோயில்கள் கட்டுவதில் கண்ணுங்கருத்தும் உடையவரா யிருந்தார்; தாம் முன்னே திருவருள் பெற்ற திருவானைக்காவினை நாடிச் சென்றார்; அங்கே திருக்கோயில் அமைத்தார்; அமைச்சரைக்கொண்டு சோழநாட்டிலே பல திருக் கோயில் கட்டுவித்தார். அவைகளுக்குக் கட்டளைகளும் முறைப்படி அமைக்கப்பட்டன.

கோச்செங்கட் சோழ நாயனார் தில்லை சேர்ந்தார்; தில்லைக் கூத்தனை வழிபட்டார்; தில்லைவாழ் அந்தணர்க்கு மாளிகைகள் கட்டிக் கொடுத்தார். இவ்வழியில் திருத்தொண்டுகள் பல செய்து, நாயனார் சிவபெருமான் திருவடி சேர்ந்தார்.

# திருநீலகண்ட யாழ்ப்பாணர்

### திருத்தொண்டர் திருவந்தாதி

*தனையொப் பரும்எருக் கத்தம் புலியூர்த் தகும்புகழோன்*
*நினையொப் பருந்திரு நீலகண்ட டப்பெரும் பாணனைநீள்*
*சினையொப் பலர்பொழிற் சண்பையர் கோன்செந்*
*தமிழொடிசை*
*புனையப் பரனருள் பெற்றவ னென்பரிப் பூதலத்தே.*

### திருத்தொண்டர் புராண சாரம்

*பிறங்கெருக்கத் தம்புலியூர் வாழும் பேரியாழ்*
*பேணுதிரு நீலகண்டப் பாண னார்சீர்*
*நிறந்தருசெம் பொற்பலகை ஆல வாயின்*
*நிமலன்பால் பெற்றாரூர் நேர்ந்துசிவன் வாயில்*
*திறந்தருளும் வடதிசையே சேர்ந்து போற்றித்*
*திருஞான சம்பந்தர் திருத்தாள் வாழ்த்தி*
*அறந்திகழுந் திருப்பதிகம் யாழி லேற்றி*
*ஆசில்திருப் பெருமணஞ்சேர்ந் தருள்பெற் றாரே.*

திருஎருக்கத்தம்புலியூரிலே, **திருநீலகண்ட யாழ்ப்பாணர்** என்பவர் ஒருவர் இருந்தார். சிவபெருமான் திருப்புகழை யாழில் இட்டு வாசிப்பது அவர்தந் திருத்தொண்டு.

#### பாணர்க்குப் பரமன் அருளல்

யாழ்ப்பாணர் சோழநாட்டுத் திருப்பதிகளைத் தொழுது பாண்டி நாடு போந்தனர். அவர் ஆலவாய் அப்பன் திருவாயிலிலே நின்று யாழ் வாசித்தனர். ஆலவாய்ப் பெருமான் அன்றிரவு அடியவர் கனவிலே தோன்றி, 'திருநீலகண்ட யாழ்ப்பாணரைக் கோயிலுக்குள் அழைத்துச் செல்க' என்று கட்டளை யிட்டார். பொழுது புலர்ந்தது. அடியவர், ஆண்டவன் ஆணைப்படி செய்தனர்.

#### பலகையிடத் திருவருள் ஆணை

திருநீலகண்டர், 'இஃது இறைவன் ஆணை' என்று வியந்தனர்; திருமுன்பு நின்றனர்; தமது தொண்டைச் செய்தனர். அவ் வேளையில், 'தரையில் சீதம் தாக்கினால், யாழின் வீக்கு அழியும்;

தரையில் பலகை இடுக' என்னும் ஒலி வானில் எழுந்தது. உடனே அன்பர்கள் பொற்பலகை இட்டார்கள். பாணர் பெருமான் அப் பலகைமீது நின்று யாழ் முழக்கினர்.

## வழி வகுத்தல்

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் திருவாலவாயை விடுத்தார்; பல திருப்பதிகளை வணங்கிக்கொண்டே திருவாரூரை அடைந்தார்; திருக்கோயில் வாயிலிலே நின்று யாழ் வாசித்தார். ஆண்டவ னருளால் வடதிசையில் ஒரு திருவாயில் வகுக்கப்பட்டது. யாழ்ப் பெரும்பாணர் அத்திருவாயிலின் வழியாக நுழைந்து, ஆண்டவனைக் கண்டு தொழுதனர். அவர், நெடுநாள் திருவாரூ ரிலேயே தங்கினர்.

## ஞானசம்பந்தரது அருள் பெறல்

பின்னே யாழ்ப்பாணர், திருவாரூரை விடுத்துப் பல திருப்பதி களைத் தொழுது சீர்காழி சேர்ந்தார். அங்கே திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் யாழ்ப்பாணருக்குப் பல விதச் சிறப்புகள் செய்தார். யாழ்ப்பாணரும் ஞானசம்பந்தரிடம் உயிர் ஒன்றிய உறவுகொண்டார்; ஞானசம்பந்தர் அருளிய பாடல்களை யாழில் அமைத்து வாசித்து வந்தார். இத் திருத்தொண்டை திருநீலகண்டப் பெருமான் நெடுநாள் செய்து, திருநல்லூர்ப் பெருமணத்திலே ஞானசம்பந்தருடன் சிற்சோதியிற் கலந்தார்.

# சடையர்

## திருத்தொண்டர் திருவந்தாதி

*தலம்விளங் குந்திரு நாவலூர் தன்னில் சடையனென்னும்*
*குலம்விளங் கும்புக ழோனை உரைப்பர் குவலயத்தில்*
*நலம்விளங் கும்படி நாம்விளங் கும்படி நற்றவத்தின்*
*பலம்விளங் கும்படி ஆரூ ரனைமுன் பயந்தமையே.*

## திருத்தொண்டர் புராண சாரம்

*சங்கையிலா அரன்மறையோர் நாவ லூர்வாழ்*
*தவரதிபர் தம்பிரான் தோழ ராய*
*எங்கள்பிரான் தவநெறிக்கோர் இலக்கு வாய்த்த*
*இசைஞானி யார்தனயர் எண்ணார் சிங்க*
*மங்கையர்கள் தொழும்பரவை மணவாள நம்பி*
*வந்துதிக்க மாதவங்கள் வருத்திச் செய்தார்*
*வெங்கண்அரா விளங்கும்இளம் பிறைசேர் சென்னி*
*விடையினார் அருள்சேர்ந்த சடைய னாரே.*

***சடைய நாயனார்***, *சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் புதல்வராகப் பெற்ற பெருமை வாய்ந்தவர்.*

# இசைஞானியார்

திருத்தொண்டர் திருவந்தாதி

*பயந்தாள் கறுவுடைச் செங்கண்வெள் ளைப்பொள்ளல்*
*நீள்பனைக்கைக்*
*கயந்தான் உகைத்தநற் காளையை என்றுங்*
*கபாலங்கைக்கொண்*
*டயந்தான் புகுமர னாரூரப் புனித அரன்திருத்தாள்*
*நயந்தாள் தனதுள்ளத் தென்றும் உரைப்பது ஞானியையே.*

திருத்தொண்டர் புராண சாரம்

*நாவல் திருப்பதிக்கோர் செல்வச் சைவ*
*நாயகமாஞ் சடையனார் நயந்த இன்பப்*
*பூவைக் குலமடந்தை பொற்பார் கொம்பு*
*புனிதமிகு நீறணிந்து போற்றி செய்தே*
*ஆவில் திகழ்தலைவன் வலிய ஆண்ட*
*ஆரூரர் அவதரிக்க அருந்தவங்கள் புரிந்தார்*
*யாவர்க்கும் எட்டாத இசைந்த இன்ப*
*இசைஞானி எனஞானம் எளிதா மன்றே.*

***இசைஞானியார்,*** *சடைய நாயனாருடைய மனைவியார். அவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஈன்றருளியவர். அவர்தம் பெருமையை எம்மொழியால் கூறுதல் கூடும்!*

## வாழ்த்து

*வைய நீடுக மாமழை மன்னுக*
*மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக*
*சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக*
*தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.*

❖❖❖❖